ஸ்ரீ:

# உகத்தின் சுகம்

மந்த்ர ரத்னம் என்னும் த்வயத்தின்
விவரணமான பாடல்களும்
விளக்கமும்

Version 8

அடியேன் ஸ்ரீராமானுஜ தாஸன்

ஸார்வபௌமம் அய்யம்பேட்டை
ஸ்ரீநிவாஸ ராஜகோபாலன்
(A.S. Rajagopalan)

prapatti dot com

# பொருளடக்கம்

| # | தலைப்பு | பக்கம் |
|---|---|---|
| A. | ஆசாரியர்கள் தனியன் | 7 |
| B. | அடியேன் செய்யும் விண்ணப்பமே | 11 |
| C. | உகத்தின் சுகம் பாடல் | 15 |
| 0. | ரஹஸ்யங்கள் முன்னுரை | 19 |
| 1. | தோற்றம் | 31 |
| 2. | காரணம் | 55 |
| 3. | சிறப்பு | 79 |
| 4. | பொருள் | 93 |
| 5. | ஸ்ரீ | 109 |
| 6. | மத் | 161 |
| 7. | நாராயண | 205 |
| 8. | சரணௌ | 255 |
| 9. | ஶரணம் | 289 |

prapatti dot com

10. ப்ரபத் 311

11. யே 345

12. ஶ்ரீமதே நாராயண 397

13. ஆய 435

14. நம: 469

15. ப்ரபத்தி முறை 487

16. தமிழாக்கம் 511

17. பலன் 519

Appendix

A. ஶ்ரீமத் ரஹஸ்யத்ரயஸார தத்துவங்கள் 541

prapatti dot com

# தனியன்

யோநித்ய மச்யுத பத3ாம்புஜ யுக்ம ருக்ம-
வ்யாமோஹதஸ் ததி தராணி த்ருணாய மேநே ।
அஸ்மத்3 கு3ரோர் ப4க3வதோ(ஶஸ்ய தயைகஸிந்தே4ா:
ராமாநுஜஸ்ய சரணௌ ஶரணம் ப்ரபத்3யே ।।

ஸ்ரீமாந் வேங்கட நாத2ார்ய கவிதார்கிககேஸரீ !
வேத3ாந்தாசார்யவர்யோ மே ஸந்நித4த்தாம் ஸத3ா ஹ்ருதி3 !!

ப்ரபத்யே நிரவத்யாநாம் நிஷத்யாம் குண ஸம்பதாம்
ஶரணம் பவபீதாநம் ஶடகோப முநீஶ்வரம்.

ஜ்ஞாநா நந்த3 மயம் தே3வம் நிர்மல ஸ்ப2டிகா க்ருதிம் ।
ஆத4ாரம் ஸர்வ வித்3யாநாம் ஹயக்3ரீவம் உபாஸ்மஹே ।।

கு3ருப்4ய: தத்3 கு3ருப்4யஶ்ச நமோவாகம் அதீ4 மஹே ।
வருணீமஹே ச தத்ர ஆத்3யௌ த3ம்பதீ ஜகதாம் பதீ ।।

prapatti dot com

சீரொன்று தூப்புல் திருவேங்கடமுடையான்
பார் ஒன்றச் சொன்ன பழமொழியுள்
ஓர் ஒன்று தான் அமையாதோ தாரணியில்
வாழ்வார்க்கு வான் ஏறப் போமளவும் வாழ்வு

என்னுயிர் தந்து அளித்தவரைச் சரணம் புக்கி
யான் அடைவே அவர் குருக்கள் நிறை வணங்கிப்
பின் அருளால் பெரும்பூதூர் வந்த வள்ளல்
பெரிய நம்பி ஆளவந்தார் மணக்கால் நம்பி
நன்னெறியை அவர்க்கு உரைத்த உய்யக் கொண்டார்
நாத முனி சடகோபன் சேனை நாதன்
இன் அமுதத் திருமகள் என்று இவரை முன்னிட்டு
எம்பெருமான் திருவடிகள் அடைகின்றேனே

நின் அருளாம் கதியின்றி மற்று ஒன்று இலேன்
நெடுங்காலம் பிழை செய்து நிலை கழிந்தேன்
உன் அருளுக்கு இனிதான நிலை உகந்தேன்
உன் சரணே சரண் என்னும் துணிவு பூண்டேன்
மன் இருளாய் நின்ற நிலை எனக்குத் தீர்த்து
வானவர் தம் வாழ்ச்சி தர வரித்தேன் உன்னை
இன் அருளால் இனி எனக்கு ஓர் பரம் ஏற்றாமல்
என் திருமால் அடைக்கலம் கொள் என்னை நீயே

prapatti.com

ஸ்ரீ:

யஸ்யாப$_4$வத் ப$_4$க்$_3$தி ஜநார்த்திஹந்து:
பித்ருத்வமந்யேஷ்வ அவிசார்ய தூர்ணம் ।
ஸ்தம்பே$_4$ அவதாரஸ்தமநந்யலப்$_4$யம்
லக்ஷ்மீந்ருஸிம்ஹம் ஶரணம் ப்ரபத்$_3$யே ॥

அஹோபி$_3$லே க$_3$ாருட$_3$ஶைலமத்$_4$யே
க்ருபாவஶாத் கல்பிதஸந்நித$_4$ாநம் ।
லக்ஷ்ம்யா ஸமாலிங்கி$_3$த வாமப$_4$ாக$_3$ம்
லக்ஷ்மீந்ருஸிம்ஹம் ஶரணம் ப்ரபத்$_3$யே ॥

ஸ்ரீமதே ஸ்ரீலக்ஷ்மீந்ருஸிம்ஹ பரப்ரஹ்மணே நம:

ஸ்ரீரங்கநாத ஶடகோப யதீந்த்ர த்ருஷ்டம்
லக்ஷ்மிந்ருஸிம்ம ஶடஜித் கருணைக பாத்ரம்
ஸ்ரீரங்க வீர ரகுராட் ஶடகோப ஹ்ருத்யம்
வேதாந்த தேசிக யதீந்த்ர மஹம் ப்ரபத்யே

ஸ்ரீமதே ஸ்ரீவண் ஶட கோப
ஸ்ரீவேதாந்த தேசிக யதீந்த்ர மஹா தேசிகாய நம:

ஸ்ரீமத்$_3$ ரங்க ஶடாரி ஸம்ய விவராத் லப்$_3$தாக$_3$மாந்த த்வயம்
ஸ்ரீமத்$_3$ வீர ரகூத்$_3$வ ஹாத்$_3$ய ஶடஜித் பாதாரவிந்த$_3$ா ஶ்ரயம் ।
ஸ்ரீமத்$_3$ வேத$_3$வதம்ஸ தே$_3$ஶிகயதே: காருண்ய வீக்ஷா ஸ்பத$_3$ம்
ஸேவே ரங்க$_3$துரீண ஶாஸந வஶம் நாராயணம் யோகி$_3$நம். ॥

ஸ்ரீமதே ஸ்ரீலக்ஷ்மீந்ருஸிம்ம திவ்ய பாதுகா ஸேவக
ஸ்ரீவண் ஶடகோப ஸ்ரீநாராயண யதீந்த்ர மஹா தேசிகாய நம:

prapatti dot com

prapatti dot com

## அடியேன் செய்யும் விண்ணப்பமே

**வேதாந்த தேசிகன் எனும் * வியன்மிகு ஆசாரியன் தன் *
பாதாரவிந்த மலரைப் பத்தியுடன் * பற்றி அடைந்தேன் ப்ரபத்தி *
காதாற கேட்கும் மறைப்பொருள் * கமழும் அவர் வாய்மொழியில் *
ஏதாவது ஒன்றில் ஒன்றி * எளிதில் எய்வாய் நீயும் முக்தி.**

**அறம், பெருள், இன்பம், வீடு** (தர்ம, அர்த்த, காம, மோஷம்) என்ற நான்கிலும், வீடு எனப்படும் பரமபதம், ஸ்ரீவைகுண்ட்டமே பரம ப்ராப்யம் என அசாரியர்கள் காட்டியுள்ளனர். அந்த பேரின்ப பெரும் வீட்டை அடைய **கர்ம, ஞான, பக்தி, ப்ரபத்தி** ஆகிய நான்கு யோகங்களைச் உபாயமாகச் சொன்னாலும், கடைசி இரண்டும் மட்டும்தான் மோக்ஷத்திற்கு வழி வகுக்கிறது.

மோக்ஷத்தை அடைந்து பிராட்டி ஸஹிதனான எம்பெருமானுக்கு அநந்தமான ஆனந்த கைங்கர்யம் (pristine bliss) செய்வதே ஜீவனின் லக்ஷ்யம் (ultimate objective), அதன் ஸ்வரூபம் (innate nature). இப்படிப்பட்ட உயர்ந்த ப்ரம்மாநுபவத்தை வேண்டுபவன் முமுக்ஷு. அவன் முதலில் அறிய வேண்டிய ரஹஸ்யங்கள் மூன்று என்று ஆசாரியர்கள் உபதேசிப்பர்.

மூன்று ரஹஸ்யங்கள் முறையே **திருவஷ்டாக்ஷரம், த்வயம், சரம ஶ்லோகம்.** இம்மூன்றிலும் நடுவில் உள்ள த்வயத்திற்கு மிகவும் ஏற்றம். திருவின் ஸம்பந்தத்தை தெள்ளத் தெளிவாக காண்பிப்பதாலும், எம்பெருமானின் திருவடிகளை ஸ்பஷ்டமாக அறிவிப்பத்தாலும் (reveals explictly) இதன் பெருமையை சொல்லி முடியாது.

தவிர மந்திரங்களில் ரத்னம் என்று புகழ் பெற்று, பெண், பிறர் என்ற பேதமின்றி, எல்லோராலும், எல்லா காலங்களிலும், எல்லா இடங்களிலும் எல்லா விதமான நிலைகளிலும் பகவானிடம் அடைக்கலம் அடைய, உயர்ந்த தத்துவம் மிகுந்த ரஹஸ்யம் இது.

ஸர்வ ஸ்வதந்திரனாய், ஸர்வ வல்லமை உடைய எம்பெருமானை, அல்பமான ஜீவன் வசீகரிக்க தகுந்த ஒரே ஸாதனம் **ப்ரபத்தி.** பக்தி யோகம் மோஷத்தை கொடுத்தாலும் அது ஸாத்யமாவது சிலருக்கே. ப்ரபத்தி யோகம் ஒன்றே எல்லோராலும், எக்காலத்திலும், எந்த நிலையிலும் அனுஷ்டிக்க உகந்தது. கால விளம்பம் இல்லாமல் விரைவில் பலனைத் தரக் கூடியது.

பகவத் ராமநுஜர், நிலை நாட்டிய **விசிஷ்டாத்வைதம்** போற்றுவதும் ப்ரபத்தி என்னும் சரணாகதி நெறியே. அந்த ப்ரபத்தியை, ஒரு ஸதாசாரியனை அடைந்து, அவர் திருவடி பற்றி, அதன் மூலம் அனுஷ்டிக்க உயர்ந்த மந்திரம் த்வயம்.

நம்முடைய ஆசாரியர்கள் த்வயத்திலேயே மண்டியிருப்பர் என்பர் பெரியோர். **"த்3வயம் அர்த2ாநுஸந்த4ாநேந ஸஹ ஸதை3வம் வக்தா"** என்ற பகவத் ராமானுஜரின் வாக்கின்படி இந்த மஹா மந்திரத்தின் பொருளை தமிழில் யாவரும் அறிந்து மனம் நெகிழ்ந்து அனுஷ்டிக்க வேண்டும் என்ற கருத்தில் எளிய முறையில் அடியேனுக்கு எட்டிய சிற்றறிவுடன் எழுதப்பட்டுள்ளது. இதில் உள்ள குறை, குற்றங்களை மன்னித்து அருள் புரியுமாறு வேண்டுகிறேன்.

முன்னோர்கள் காட்டிக் கொடுத்த பகவத், பாகவத, ஆசாரிய கைங்கர்யமே புருஷார்த்தத்தின் எல்லை என்பதை உணர்ந்து எல்லோரும் "கூடியிருந்து குளிர்ந்து" இவைகளை அனுபவித்து உய்வு பெறுவோமாக!

ஆழ்வார் திருவடிகளே சரணம்
எம்பெருமானர் திருவடிகளே சரணம்
சீரொன்று தூப்புல் திருவேங்கடமுடையான் திருவடிகளே சரணம்

ஸ்ரீமதே ஸ்ரீவண் சடகோப ஸ்ரீவேதாந்த தேசிக
யதீந்த்ர மஹா தேசிகாய நம:
ஸ்ரீமதே ஸ்ரீலக்ஷ்மீ ந்ருஸிம்ம திவ்ய பாதுகா ஸேவக
ஸ்ரீவண் சடகோப ஸ்ரீநாராயண யதீந்த்ர மஹா தேசிகாய நம:

prapatti dot com

# ஆசார்ய பரம்பரை - பாடல்கள்

## ஸ்ரீமந் நாராயணன்

திரு நாரணன் தானே முன் நின்று * திருவருள் காட்டி*
ஒரு சாதனமின்றி * இணையடிதாம் துணையென தேற்றி*
திருமகளோடு தீவினை நீக்கித் * தருவான் பெருவான்பேறு*
அறிவாயே என உரையும் * ஆசிரியர் வழிமுறையும் ஆக்கி.

## ஸ்ரீலக்ஷ்மீ

அருளாலே அவன் மார்பில் அகலாது உறையும்*
உன் தகவாலே நிறையும் நல்தந்திரத் துணிவும் *
மருளாலே மண்ணில் மயங்கும் உயிரும் * நீங்காப்
பொருளாலே விண்ணில் பணி செய்து விளங்கும்.

## விஷ்வக்ஸேனர்

பிரம்பு எடுத்து வானில் குண்டலை மகனே *
வரம்பு கொள்ளும் ஸேனையின் அதிபதியே *
தடை நீக்கி அருளும் சூத்திரவதியின் பதியே *
உன் கருணைக்கு பாத்திரமாவதும் எம்கதியே.

## ஸ்வாமி நம்மாழ்வார்

உந்தியில் அயனைப் படைத்ததும் * உரலில் உவந்து கட்டுண்டதும் *
அந்தியில் அரியாய் அழித்ததும்* கற்பவர் காகுத்தனையே காண்பதும் /
மந்தி மலிந்த மாமலை * மாதவன் மலரடி மருவுதலும் * உறவாட
சந்தியாய் சேர்த்ததும் * தமிழ்மறைஇசைச்சுவை தந்த மாறனடிகளே.

prapatti.com

## நாதமுனிகள்

போகத்தை எண்ணும் மாந்தர்க்கு * நல் யோகத்தை காட்டி *
சோகத்தை தவிர்ப்பாய் * நீயவன் பாகமேயென * வேகத்தில்
நாகத்தில் பள்ளி கொண்டானை அடைய * அடைந்தேன்
ராகத்தில் தாளத்தில் வழங்கிய * நாதமுனியை காலத்திலே/

ஒரு பத்து கேட்டு உகந்து உள்ளம் கசிந்து *
பல பத்தை நாடிய உம் யோகத்தில் இசைந்து *
ஒருமித்து அருளிய ஆயிரம் நான்கும் * நமக்கேயென
தருவித்த வள்ளலே தரித்தேன் உன் திண்கழலே.

## ஆளவந்தார்

அயனை ஆக்கிய ஆயனை * அரவணையில் துயிலும் ஈசனை *
உகந்து அவன்பால் பணியினை * உள்ளம் உரை செய்தவனை /
மற்றில் இசையா சோர்வினைக் * கண்டுதாமே கழியும் கடுவினை *
அறிந்த ஆளவந்தார் அடியிணை * அடைந்தோமே நம் யாமுனனை.

நான்கும் ரத்தினமும் பத்திரமாய் தந்து பாங்காய் * திருவைத்
தாங்கும் இதயத்தில் எமக்கோர் இடத்தை அளித்தவனே /
பொங்கும் கருணையில் தங்கும் அவர் திருவருள் என *
சங்கும் சக்கரமும் உடையானுக்கு ஆள் செய்வித்த வித்தகனே.

## பகவத் ராமானுஜர்

அடையவனை அவாக்கொண்டு *உள் உயிரும் உலகும் உடலாய்
உடையவனை * சடையனை அயனையும் படைத்த இடையனை /
மடைதிறந்து மாதவனருளால் மருள்நீக்கி மறைப்பொருள் விடையினை*
கொடையென குவித்த ராமானுஜா! அடைந்தேன் உன்னடி யான்பெற்றபேறே.

prapatti.com

## ஸ்வாமி தேசிகன்

அறத்தை அவனியில் உரைத்து * அகலாபரத்தை அன்புடன் வரித்து*
உன்தரத்தை அருளால் குரைத்து * தூமறைப் பொருளை நிறைத்து /
மறத்தை மனத்தில் வெறுத்து * மாளாப் பிறவித்துயரை நினைத்து *
துறத்தை துறந்த துய்யோன் அடியிணை * அடைந்தோமே இனித்து.

## ஆதிவண் சடகோப மாமுனிகள்

காட்சி தரும் கமலைநாதன் வானவர்க்கு மட்டும் இன்றி *
மீட்சி செய்து மாறன் மறையோடு * நம் சிங்கப்பிரான்
சாட்சி சடகோப மாமுனி சரண்கொண்டார் சார்வுடன் *
தாழ்ச்சியிலாது தவமிலாது தவறாது தழைக்கும் வாழ்ச்சியே

## 45ம் பட்டம் அஹோபிலமட அழகியசிங்கர்

அல்லி மலரும் அந்தியிலே ஆதவன் கண்டே தாமரை *
எல்லிப் பகல் எண்ணாது எவர்க்கும் ஏற்ற தூமறை *
வில்லிவலம் நாரயண முனி நவிலும் அதன் பேருரை *
சொல்லி மகிழ்வோம் நாம் அவர் வண்மை வான்வரை.

prapatti dot com

# உகத்தின் சுகம் – பாடல்கள்

(த்வயம் திவ்யம்)

## 1 - தோற்றம்

ஓதுமிரண்டை இணைத்துத் * தன்
பாதம் இரண்டால் அணைத்து *
போதுமென மீட்டிக் கடலில் *
வாழுமென அருளினான் தம்சேவைக்கே.

## 2 - காரணம்

ஆறும் பேறும் வேறின்றி * அவ்
வடியவர் அனைவரும் தமரின்றி *
விண்ணும் மண்ணும் பணிசெய்ய *
பன்னும் இவ்விரண்டும் திண்ணமே.

## 3 - சிறப்பு

திருவும் அடிகளும் திறம்பட *
எட்டும் தட்டும் விட நவின்றிட *
அரங்கன் ஏவ தரத்துடன் இயம்ப *
வள்ளல் வழியில் விண்ணப்பம் இன்றே.

## 4 - பொருள்

சேர்க்குந் திருமகள் சேர்த்தியின் மன்னுதல் *
காக்கும் குணங்கள் கருணை அடிகள் *
அடையும் புகல் அதிலே பற்றுதல் *
இயலா நிலையில் எமக்கீன்ற பேறு *
ஏற்கும் எல்லைகள் அறுக்கும் களைகள் *
முன்னோர் பத்தும் மறையவர் நிதிகள்.

prapatti.com

## 5 - ஶ்ரீ

திருமகள் கேட்டு அவனைக் கேட்பித்து *
தன் அடியாரடையத் தான் அடைந்து *
குறைநீக்கி நிறையாக்கித் துறையென *
பறை நோக்க நம்மிறையின் மறையே.

## 6 - மத்

தன்னிச்சையில் தரித்து ஏவித் தான் முதல்வனாய் *
உயர்ந்து உறங்கி உலாவி உறைந்து உகப்பாய் *
நம்மிழுக்கால் மன்னியுறையும் மாமலராள் * திரு
உரத்தில் அவனைத் தினையளவும் அகலாள்.

## 7 - நாராயண

ஆதியாய் உடலில் உயிராய் மாசிலா சோதியாய் *
பதியாய் இறையாய் கதியாய் அகலா உறவாய் *
அனைத்துக் காரணமாய், காரியமாய் நாம் ஏத்தும்
ஆரணத்தில் * திருநாரணன் நற்குணங்கள் பூரணமே

## 8 - சரணௌ

ஒன்றாய் நாலாய் பத்தாய் நின்றாய் *
உள்ளாய் என்னுள் யானும் உனதாய் *
எந்தாய் எங்கும் என்றும் மன்னியே *
தந்தாய் இணையடிகளெம் இதயத்திலே.

## 9 - ஶரணம்

உன்னித்து மற்றொரு தெய்வம் தொழும் *
தொல்வினை தீர்க்கும் என் இறையே *
மன்னித்து அருளும் சீமாதவன் மலரடிகள்
மருவ * மற்றொன்று இன்றி நிறைவே.

prapatti.com

## 10 - ப்ரபத்

உறுமதியில் உத்தமனையே உகந்தாரும் *
மறுகதியின்றி மாவீரனைத் தொழுதாரும் *
அரியென சக்கரத்தானைச் சார்ந்தாரும் *
நெறியென ஒன்றே இன்றே பற்றினரே.

## 11 - யே

முயலாத மூன்றில் இனம் மயங்க *
இயலாத நிலையுள் மனம் ததும்ப *
முத்திக்கு வழி சரண் ஒன்றெயென *
தித்திக்கும் முகுந்தன் திண் கழலே.

## 12 - ஸ்ரீமதே நாராயண

ஒட்டாது மாசில் உயிராய் தரிக்கும் *
தட்டாது கோதில கோவிந்தன் அளிக்கும் *
தகவாது கழிந்த காலமும் தகர்க்கும் * இனி
பிரியாது கேசவன் பணியில் கிடக்கும்

## 13 - ஆய

ஆவேனென அறிந்தாரும் * மாளா
அடிமை என புகுந்தாரும் * ஆவி
அரிமுகனுக்கே தந்து இருந்தாரும் *
தேடி அடைவது உகத்தின் சுகமே.

## 14 - நம:

ஒழிந்தது யான் எனது எனக்கே *
மகிழ்ந்தது மனம் அதுவும் உமக்கே.

prapatti.com

## 15 - ப்ரபத்தி முறை

நல்வழி ஏற்று அல்வழி துறந்து *
துணிவில் நிலைத்து காவலில் வரித்து *
அழியா உறவில் புகலின்றி தாளில் *
தஞ்சம் இறைஞ்சும் எந்தன் நெஞ்சமே

## 16 - தமிழாக்கம்

திருமகள் தனியா நாரணன்
இணையடிகள் சரணென பற்றவே *
திருமால் சேவை தமக்கின்றியென
நல்வாழ்ச்சி நவிலப் பெற்றனரே.

## 17 - பலன்

பணிந்தே என் உள்ளம் உரை உடலால் *
மறைந்தே மறக்கும் பற்பிறவி மறங்கள் *
தணிந்தே ஆவியகல மாயனை அத்துன்பம் *
விரைந்தே காட்டும் வைகுந்தன் வீட்டின்பம்.

prapatti.com

# 0 - ரஹஸ்யங்கள்
(Introduction to the three secrets)

## 0-1 தயை - கருணை

ஸ்ரீயப் பதியான ஸர்வேச்வரன் ஸ்ரீமந் நாரயணன் எல்லா ஜீவராசிகளெல்லாம் உஜ்ஜீவிக்க வேண்டும் என்பதற்காக பல அறிய கருத்துக்களை அருளுகிறான். ஞானத்தில் சுருங்கி, நிலையற்ற உலக இன்பங்களில் மயங்கி நம்மைப் போல் மந்த மதி உடையவர்களைத் திருத்தி நல்ல நிலையை அடைவிக்க வேண்டும் என்பதற்காகவே.

**குன்றனைய குற்றம் செயினும் * குணம் கொள்ளும் *
இன்று முதலா என் நெஞ்சே ***
பொய்கையாழ்வார், முதல் திருவந்தாதி 41

என்று ஆழ்வார் அருளியபடி, பகவான் நாம் செய்த, செய்து கொண்டிருக்கின்ற கோடிக்கணக்கான பாபங்களை பொருட்படுத்தாது (doesn't care), தன்னுடைய கருணை (தயை), பரிவு (வாத்ஸல்யம்) போன்ற உயர்ந்த திருக்கல்யாண குணங்களால் நாம் எல்லோரையும் நல்ல நிலையை அடைய வழி செய்கிறான்.

**தொலையாத பேரின்பம் தர மேல் ஏற்றி *
அழியாத அருளாழிப் பெருமான் செய்யும் *
அந்தமிலா உதவி எலாம் அளப்பார் ஆரே**
ஸ்வாமி தேசிகன், அமிருத ஸ்வாதினி 30

என்று அழிவில்லாத மோக்ஷ ஆனந்தத்தை அளிப்பதற்காக நம்மை மேலே ஸ்ரீவைகுண்டத்திற்கு ஏத்துகிறவன் இந்த அழியாத கருணக்கடலான அருளாளப் பெருமான். அவன் செய்யும் எல்லையில்லாத உபகாரங்களை அளவிட்டவர் யார்? ஒருத்தனுமில்லை என்றார் ஸ்வாமி தேசிகன்.

prapatti.com

அந்த பெருமாள் செய்யும் உபகாரம் “அத்வாரகம்”, “ஸத்வாரகம்” என்று இரண்டு வகை.

**அத்வாரகம்** என்பது பகவான், தானே தன் சோதிவாய் மலர்ந்து சொன்னது (direct). அவற்றில் பாஞ்சராத்ர சாஸ்திரம், பகவத் கீதை என்பவை மிகவும் முக்கியமானவை.

**ஸத்வாரகம்** என்பது தேவர்கள், ரிஷிகள், ஆழ்வார்கள், ஆசாரியர்கள், பாகவதர்கள் மூலமாய் சொன்னவை (indirect). ஸ்மிருதிகள், புராணங்கள், இதிகாசங்கள், திவ்ய பிரபந்தம், ஸ்தோத்திரங்கள், ஆசாரியர்கள் அறிவுரைகள் என்று இவை பல.

## 0-2 ஸெளஸீல்யம் - நீர்மை

**கலைகளும் வேதமும் நீதிநூலும் ***
**கற்பமும் சொற்பொருள் தானும் * மற்றை**
**நிலைகளும் வானவர்க்கும் பிறர்க்கும் ***
**நீர்மையினால் அருள் செய்து.**
**திருமங்கையாழ்வார், பெரிய திருமொழி 2-8-5**

என்று திருமங்கை ஆழ்வார் பகவானின் நீர்மையை, அதாவது **ஸெளஸீல்யத்தைப்** பற்றி புகழ்கிறார்.

எத்தனை விதமான கலைகள், சாஸ்திரங்கள், நீதி நூல்கள் என்று அடுக்கிக் கொண்டே போகலாம். இவை எல்லாம் பகவான் எதற்கு உண்டாக்கினான்? மக்கள் நல்ல கதி அடைய வேண்டும் என்ற தனக்கே உரித்ததான **ஸெளஸீல்ய** திருக்கல்யாண குணத்தினால்தான் என்றார். அது மட்டுமில்லாது தானே அவதாரங்கள் எடுத்து இன்னும் பல குணங்களைக் காட்டினான்.

prapatti dot com

## 0-3 ஸௌலப்யம் - எளிமை

ஸௌலப்யம் என்றால் எளிதில் அகப்படுதல், எளிமை என்று பொருள். அதாவது, சுலப என்றால் எளிதில் என்று பொருள். லபித்தல் என்றால் கிடைத்தல். பகவான் பெருமைகளே உடையவன். மனம், வாக்கு, செயல் போன்றவைகளுக்கு அப்பாற்பட்டவன்.

எத்தனை உயர்ந்த ஸ்தானத்தில் இருந்தாலும் அதைப் பாராது, ஜீவன் எவ்வளவு அல்பமாக இருந்தாலும், ஜீவன் விரும்பாது இருந்தாலும், தானே வலிய வந்து தன்னைக் கொடுக்கும் தன்னையைக் குறிக்கிறது இந்த திருக் கல்யாண குணம்.

> **ஹூவே தருவர மனகே ஹூல்லு தருவனம்மா**
> புரந்தரதாஸர் கீர்த்தனை

என்று கன்னடத்தில் பாடினார் புரந்தரதாஸர். யார் எனக்கு பூ எடுத்து அர்ச்சனை செய்கிறார்களோ அவர்கள் வீட்டிலுள்ள பசுகளுக்கு நான் புல்லைக் கொண்டு போய் போடுகிறேன் என்றான் கிருஷ்ணன். அந்த அளவிற்கு ஸௌலப்யம், எளிமை உள்ளவன் பகவான்.

> **நடந்த கால்கள் நொந்தவோ * நடுங்க ஞாலம் ஏனமாய் ***
> **இடந்தமெய் குலுங்கவோ? * விலங்கு மால் வரைச்சுரம் ***
> **கடந்த கால் பரந்த * காவிரிக் கரைக் குடந்தையுள் ***
> **கிடந்தவாறு எழுந்திருந்து பேசு * வாழிகேசனே!**
> திருமழிசைப்பிரான், திருச்சந்த விருத்தம் 61

என்று திருச்சந்த விருத்தத்தில் திருமழிசைப்பிரான், திருக்குடந்தை ஆராவமுதனைப் பற்றி பாடுகிறார்.

இந்த ஒரே ஸ்தலத்தில்தான் பகவானுக்கு ஆராவமுத ஆழ்வான் என்றும், ஆழ்வாராகிய இவருக்கு திருமழிசைப்பிரான் என்றும் பெயர். பகவானை "எழுந்திரு" என கட்டளையிட்டார். பகவானும் ஆழ்வார் சொல் கேட்டு எழுந்திருக்க முயன்றார்.

உடனே, “போதும் போதும், என் வார்த்தைக்காக உன் திருக் கோலத்தை மாற்ற வேண்டாம். படுத்துக்கொள்” என்றார். பாதி எழுந்திருந்த பகவான் அப்படியே ஸ்தம்பித்தான். அதனால் **உத்தானஸாயியாய்** நின்ற திருக்கோலம், ஸயனித்த திருக்கோலம் இரண்டும் இல்லாமல் நடுநிலையில் பகவான் ஸேவை ஸாதிக்கிறார்.

இது மட்டுமில்லை. சொன்ன வண்ணம் செய்த பெருமாள் என்ன செய்தார்?

> **கணிகண்ணன் போகின்றான் * காமரு பூங்கச்சி**
> **மணிவண்ணா நீ கிடக்க வேண்டா! * துணிவுடைய**
> **செந்நாப் புலவனும் போகின்றேன் * நீயும் உன்றன்**
> **பைந்நாகப் பாய்சுருட்டிக் கொள்**

என்றார் திருமழிசையாழ்வார் பகவானைப் பார்த்து, கணிகண்ணன் என்னுடைய சீடன். அவனை அரசன் நாட்டிலிருந்தே துரத்தி விட்டான். அதனால் கணிகண்ணன் போகிறான். நானும் போகிறேன். நீயும் என்னுடன் உன் அரவணையைச் சுருட்டிக் கொண்டு கிளம்பு என்றார். பகவானும் அப்படியே செய்ததால் **சொன்ன வண்ணம் செய்த பெருமாள் (யதோக்தகாரி)** என்று பெயர். பிறகு பைந்நகாப்பாயை விரித்து கொள் என்றபோது அப்படியே செய்தார்.

பகவானுடைய இப்படிப்பட்ட ஸௌலப்ய குணம்தான் நம் எல்லோரையும் காந்த சக்தி மாதிரி அவனிடம் அழைத்து செல்கிறது.

## 0-4 விடுதலை

நம்மைப்போல் இருக்கும் ஜீவாத்மாக்கள் **“புனரபி ஜனனம், புனரபி மரணம்”** என்று ஸம்ஸார சுழலில் மாட்டிக் கொண்டு தவிக்கிறார்கள். சுகமும், துக்கமும் மாறி மாறி, இரவு பகல் போல் நம்மை வாட்டுகிறது. இதிலிருந்து என்றைக்கு விடுதலை? என வருந்துகிறார்கள்.

என்றைக்கு ஒரு குறையும், ஒரு துன்பமும் இல்லாமல் எப்பொழுதும் குறைவே இல்லாத ஸந்தோஷத்துடன் நாம் இருப்போம் என்று எல்லோரும் கேட்கிறார்கள்.

உலகத்தில் அனுபவிக்கும் மகிழ்ச்சி எல்லாம் கொஞ்ச நேரம்தான் (temporary). அதற்கு பிறகு மறுபடியும் கஷ்டம். (There is an end for everything). இவை எல்லாம் அல்ப, அஸ்திர பலன்கள். இந்திரன் பதவியானாலும் சரி, சதுர்முக ப்ரம்மா பதவியானாலும் சரி, அது ஒரு நாள் முடியத்தான் போகிறது. அவை எல்லாம் ஒரு குறிப்பிட்ட காலம் வரைதான். என்றைக்கு நிலையான (eternal happiness) சந்தோஷத்தை நான் பார்க்க போகிறேன் என்று ஜீவாத்மாக்கள் விரும்புகிறார்கள்.

இவற்றிற்கு எல்லாம் காரணம் ஸம்ஸாரம்தான். ஸம்ஸாரம் என்பது தேன் கலந்த விஷம். சுவையாக தோன்றினாலும் அது வெளிப்பூச்சுதான். மேலே உள்ள இனிப்பு கரைந்தவுடன், விஷம் தன் வேலையைக் காட்டும்.

இந்த **ஸம்ஸாரத்திற்கு காரணம் நம்முடைய கர்மா,** வினைப்பயன் தான். அநாதி காலமாய் தொடர்ந்து வந்து கொண்டிருக்கும் இந்த புண்ய, பாபங்களினால்தான் நமக்கு பிறவி எற்படுகிறது. அந்த பிறவி புழு, பூச்சியோ இல்லை ப்ரம்ம பதவியோ ஆனாலும், மறுபடியும் இந்த ஸம்ஸாரத்திலே தள்ளும்.

**சரணா மறை பயந்த * தாமரையானோடு *
மரணாய மன் உயிர்கட்கு எல்லாம் * - அரணாய
போராழி கொண்ட * பிரான் அன்றி மற்று அறியாது *
ஓராழி சூழ்ந்த உலகு.**
பொய்கையாழ்வார், முதல் திருவந்தாதி 60

என்று பொய்கையாழ்வார், பிரம்மா எல்லோருக்கும் நன்மை பயக்கும் வேதத்தை வெளிப்படுத்தினான். அவன் முதல் அனைத்து ஜீவராசிகள் வரை எல்லோருக்கும் சாவு என்பது உண்டு. ஆனால் அவர்களுக்குள் இருக்கும் ஆத்மாவை ரக்ஷிக்கும் தன்மை சக்கரத்தை ஏந்திய எம்பெருமான் ஒருவனுக்கே என்றார்.

இந்த புண்ய, பாபங்களை முழுவதும் நசித்து, பிறப்பு இறப்பு சுழலினின்று வெளியேறி அந்தமில்லா பேரின்பம் என்று இன்பத்திற்கு முடிவே இல்லாத மோக்ஷ ஸாம்ராஜ்யத்தை அடைந்து பரிபூர்ண ப்ரம்மாநுபவத்தைப் பெற விரும்புகிறார்கள். ஆனால் அதை அடைவதற்கான வழி என்ன? என்று தெரியாமல் திகைக்கிறார்கள்.

## 0-5 ஆசார்ய ஸம்பந்தம்

எம்பெருமானே முதல் ஆசாரியன். அவனுக்கு தாய், தந்தை, ஆசாரியன் கிடையாது.

> குருப்ய: தத் குருப்யஶ்ச நமோவாகம் அதீமஹே ।
> வ்ருணீமஹே ச தத்ர ஆத்யௌ தம்பதீ ஜகதாம்பதீ ।।
>
> ஸ்வாமி தேசிகன், ந்யாஸ திலகம் 2

- **குருப்ய: தத் குருப்யஶ்ச** - மோஷ உபபாயத்தை உபதேசித்த நம் அசாரியர்களுக்கும், அவர்கள் ஆசாரியர்களூக்கும்
- **நமோவாகம் அதீமஹே** - நம: என்ற சொல்லை அடிக்கடி கூறுகிறோம்
- **தத்ர ஆத்யௌ** - அந்த ஆசாரிய பரம்பரையில் முதலாவதாக,
- **ஜகதாம் பதீ** - உலகங்களுக்கு எல்லாம் தலைவர்களாய் உள்ள
- **தம்பதீ** - லக்ஷ்மீ, நாராயணன் ஆகிய இருவரையும்
- **வ்ருணீமஹே ச** - உபாயமாகவும், உபேயமாகவும் வரிக்கிறோம்," என்றார்.

> பீதக ஆடைப் பிரானார் * பிரம குருவாகி வந்து
> போதில் கமல வல் நெஞ்சம் * புகுந்தும்
>
> பெரியாழ்வார், பெரியாழ்வார் திருமொழி 5-2-8

பெரியாழ்வாரும் இதையே எம்பெருமானே முதல், ப்ரதம குரு, பிரம்மத்தை போதிக்கும் ஆசார்யன் என்பதை வலியுறித்தினார். பகவான் தன் நிலையில்

நின்று நம்மை திருத்தாமல், ஒரு ஆசார்ய அவதாரம் செய்து காட்டியதாலே, ஆசார்ய ப்ரபாவம், பகவானைவிட விஞ்சியாதாய் உள்ளது.

அந்த எம்பெருமான், தன் காரணமிலா கருணையாலே **(நிர்ஹேதுக க்ருபை),** சேதனர்களின் பூர்வ ஜன்மங்களின் செய்த எதிர்பாரத புண்யம் காரணமாக **(யாத்ருச்சிக ஸுஹ்ருதம்),** கருவிலே திருவருளை **(ஜ்யமாந கடாக்ஷம்)** அனுக்ரஹீத்து, ஒரு நல்ல ஆசாரியனை அடைவிக்கிறான்.

**அந்தமிலாப் பேரின்பம் அருந்த ஏற்கும் ***
**அடியோமை அறிவுடனே என்றும் காத்து ***
**முந்தை வினை நிரைவழியில் ஒழுகாத எம்மை ***
**முன் நிலையாம் தேசிகர் தம் முன்னே சேர்த்து ***
ஸ்வாமி தேசிகன், அமிருத ஸ்வாதினி 28

- **அந்தமிலாப் பேரின்பம் அருந்த ஏற்கும் -** அளவில்லாத ப்ரம்மானந்தம் என்னும் மோக்ஷானந்தத்தை அனுபவிப்பதற்கு தகுதி உடையவர்களான,
- **அடியோமை அறிவுடனே என்றும் காத்து** - தர்ம பூத ஞானம் உடைய ஜீவனாகிய எங்களை எல்லாம் ரக்ஷித்து,
- **முந்தை வினை நிரைவழியில் ஒழுகாத எம்மை -** அநாதி காலமாய் தொடர்ந்து வரும் ஸம்ஸார கடலில் மூழ்காத வண்ணம்,
- **முன் நிலையாம் தேசிகர் தம் முன்னே சேர்த்து -** முதல் இடம் வகிக்கும் ஆசாரியர்களிடம் கொண்டு சேர்த்தான் எம்பெருமான் என்று பகவான் செய்யும் மஹோபகாரங்களை சொன்னார் தேசிகன்.

அதாவது பகவானுக்கு நாம் அனைவரும் குழந்தைகள். அவனுடைய செல்வத்திற்கு நாம் வாரிசு. அதை அனுபவிக்க நமக்கு உரிமை என்றும் உண்டு. தகப்பன் சொத்து மகனுக்குத்தானே. ஆனால் தகுதி இல்லாதலால் அதைப் பெற முடியவில்லை. அதனால்தான் நம்மாழ்வாரும் **“வைகுந்தம் புகுவதும் மண்ணவர் விதியே”** என்றார்.

நாம் என்றோ தற்செயலாக, நமக்கே தெரியாமல், சந்தர்ப்ப வசமாய், ஒன்று செய்ய போய் ஏதோ நடந்தது போலே (accidentally, incidentally, supplementally, without our own intent or knowledge) ஒரு நல்ல காரியம்



prapatti.com

செய்ததை பகவான் ஞாபகம் வைத்துக் கொண்டு, இவனுக்கு எப்போது திருப்பி செய்வோம் என காத்து கிடக்கிறான்.

அந்த சேதனன் கர்பத்தில் இருக்கும்போதே அருள் செய்து, காலம் வரும்போது ஒரு ஆசாரியனிடம் கொண்டு போய் சேர்க்கிறான். சேதனர்கள், அந்த ஆசாரியர்களை வேண்டுகிறார்கள் "மோக்ஷத்திற்குவ் வழி என்ன? அதை எனக்கு உபதேசிக்க வேண்டும்" என்று.

எத்தனை புண்யம் செய்திருந்தாலும், எத்தனை ஞானம், பக்தி இருந்தாலும், அனுஷ்டானத்தில் எத்தனை உயர்ந்து இருந்தாலும், ஆசார்ய ஸம்பந்ததினால்தான் பகவான் மோக்ஷம் அளிக்கிறான். இதைப் பல இடங்களில் முன்னோர்கள் வலியுறுத்திள்ளனர். புண்டரீகன், க்ஷத்திரபந்து போன்றவர்கள் விஷயங்களில் இது ப்ரஸித்தம்.

**பாபிஷ்ட்ட: க்ஷத்ரபந்துஶ்ச புண்டரீகஶ்ச புண்யக்ருத் ।**
**ஆசார்யவத்தயா முக்தௌ தஸ்மாத் ஆசார்யைவாந் பவேத் ।।**

**என்று ஆசார்யவத்தையே ஸர்வருக்கும் மோக்ஷ காரணம் என்று அறுதியிட்டார்கள். முமுக்ஷுவுக்கு ஆசார்ய வம்சம் பகவான் அளவுஞ் செல்ல அனுஸந்திக்க வேண்டும் என்று ஓதப்பட்டது.**
ஸ்வாமி தேசிகன், ஸ்ரீமத் ரஹஸ்த்ரய ஸாரம், குருபரம்பராஸாரம்

புண்டரீகன் எவ்வளவோ புண்யம் செய்திருந்தான். புண்யத்தினால் மட்டும் மோக்ஷம் கிடைக்காது. சரி, க்ஷத்திர பந்து எத்தனை பாபங்கள் செய்திருந்தான. ஆசார்ய ஸம்பந்தம் அவற்றை எல்லாம் நசித்து பகவனுடைய திருவருளுக்கு இலக்கு ஆக்கும் என்பதை தெள்ளத் தெளிவாக காட்டுகிறது. ஆக மோக்ஷத்தில் விருப்பம் உள்ளவன் பகவான் வரை தன் ஆசார்ய பரம்பரையை வரிக்க வேண்டும்.

**சிறு பயனில் படியாத தகவோர் எம்மைச்**
**சேர்க்க * அடைக்கலம் கொண்ட திருமால் தானே ***
**மறுபிறவி அறுத்து அழியா வானில் வைக்கும் ***
**மனமே! நீ மகிழாதே இருப்பது என் கொல்.**
ஸ்வாமி தேசிகன், அமிருத ரஞ்சனி 19

ஆசாரியர்கள் அல்பமான விஷயங்களில் ஈடுபட மாட்டர்கள். பிறர் துக்கத்தை சகிக்க மாட்டார்கள். அதனால் பிறவி துக்கத்தைப் போக்க விரும்பும் ஆசார்யர்கள், எங்களை எம்பெருமானின் திருவடிகளில் ஸமர்பிக்க, ஸ்ரீமந் நாராயணனும் அதை ஏற்றுக் கொண்டு ஸம்ஸார பந்தங்களை விலக்கி அழிவில்லாதா மோக்ஷத்தை அளிப்பான் என்றார்.

## 0-6 ரஹஸ்யங்கள்

ஆசாரியர்கள் அனைவரும் ஒரே முகமாக, மோஷத்திற்கு உபாயமான ரகசியங்கள் மூன்று என்று உபதேசிக்கின்றனர். இவை ரஹஸ்ய த்ரயம் எனப்படும்.

1. **திருமந்திரம்** (அஷ்டாக்ஷரம், மூல மந்திரம்)
2. **த்வயம்** (மந்த்ர ரத்னம், ஶரணாகதி மந்திரம்)
3. **சரம ஶ்லோகம்** (பகவத் கீதா ஸலோகம் 18-66)

திருமந்த்ரம் மூன்று பதங்களுடையது - **ஓம், நமோ, நாரயணாய:**

த்வயம் ஆறு பதங்களுடையது - **ஸ்ரீமந்நாரயண சரணௌ, ஶரணம், ப்ரபத்யே, ஸ்ரீமதேநாரயண, ஆய, நம:**

கீதா சரம ஶ்லோகம் பன்னிரண்டு பதங்களுடையது - **ஸர்வதர்மாந், பரித்தஜ்ய, மாம், ஏகம், ஶரணம், வ்ரஜ, அஹம், த்வா, ஸர்வ பாபேப்யோ, மோக்ஷயிஷ்யாமி, மா, ஶுச:**

முன்னோர்கள் பல இடங்களில் இந்த ரஹஸ்யங்களைச் சுட்டிக் காட்டி அவற்றிற்கு வேதம், திவ்ய பிரப்ந்தம் முதலிய ப்ரமாணங்களுக்கு ஒத்த முறையில் பல அர்த்தங்களை விளக்கியிருக்கிறார்கள். ஆழ்வார்கள் பல பல இடங்களில் இவற்றின் பொருள்களை ஸாதித்திருக்கிறார்கள் ஆளவந்தார்

தம்முடைய ஸ்தோத்ர ரத்னத்திலும் எம்பெருமானார் கத்யத்திலும் சுருக்கமாக அருளி உள்ளனர். பின் வந்த ஆசாரியர்கள் ஏராளமாய் விவரித்துள்ளார்கள்.

## 0-7 ஸ்வாமி தேசிகன் அருளியவை

ஸ்வாமி தேசிகன் ஸ்ரீமத் ரஹஸ்யத்ரயஸாரம் என்று, இதற்கு என்று தனியாகவே ஒரு கிரந்தத்தை அருளியிருக்கிறார். வடமொழி, தமிழ் மொழி கலந்து மணிப்ரவாள நடையில், முப்பத்திரண்டு அதிகாரங்களில் இந்த மூன்று ரஹஸ்யங்களின் அர்த்தங்களை, வெகு விரிவாய், அற்புதமாய் ஸாதித்திருக்கிறார். ஆசாரியரிடம் நெருங்கி இருந்து அவரது திருவடிகளில் காலக்ஷேபம் பண்ணி அவசியம் அறிய வேண்டியது.

நம்முடைய பூர்வாசாரியர்கள் க்ரந்த சதுஷ்டயம் என்கிற நான்கு கிரந்தங்களின் பெருமையையும், மோக்ஷத்தை அடைய விரும்பும் சேதனன் அவறை அறிய வேண்டிய அவசியத்தையும் வலியுறுத்தினர். அந்த நான்கு க்ரந்தங்களுக்குள் ஒன்று ஸ்ரீமத் ரஹஸ்யத்ரய ஸாரம், மற்ற மூன்றும் ஸ்ரீகீதா பாஷ்யம், ஸ்ரீபாஷ்யம், பகவத் விஷயம் என்பன.

ஸ்வாமி தேசிகன் தமிழிலும் பல பிரபந்தங்களில் இந்த ஆழ்ந்த கருத்துக்களை "கையில் கனி போலக் கண்டு" என்கிற முறையில் அருளியிருக்கிறார். தமிழில் அதிகார சங்கிரகம் என்று, ஸ்ரீமத் ரஹஸ்யத்ரய ஸாரத்தின் உட்பொருட்களை சுருக்கி எல்லோரும் அறியும்படி ஸாதித்திருக்கிறார்.

அமிருதரஞ்சினி, அமிருதஸ்வாதினி என்ற சில்லரை ரகசியங்களிலும் தமிழில் அருளியிருக்கிறார் தவிர, திருமந்திர சுருக்கு, துவயச் சுருக்கு, சரமச் சுருக்கு என்று இம்மூன்று ரஹஸ்யங்களின் பொருளை செந்தமிழில் அருளியிருக்கிறார்.

தவிர, அங்காங்கே, ரஹஸ்யார்த்தங்களை பாசுரமாகவோ, ஶ்லோகமாகவோ பல இடங்களில் ஸ்வாமி தேசிகன் ஸாதித்து இருக்க்கிறார்.

**மூன்றில் ஒரு மூன்றும் * மூவிரண்டும் முந்நான்கும் *
தோன்றத் தொலையும் துயர்.**
ஸ்வாமி தேசிகன், அமிருத ரஞ்சனி 4

என்று ஸ்வாமி தேசிகன் ஸாதித்தார். ரஹஸ்யங்கள் மூன்று. அவற்றில் திருமந்திரம் மூன்று பதமானது. த்வயம் ஆறு பதங்களுடையது. சரம ஸ்லோகம் பன்னிரண்டு பதங்களை உடையது. சேதனனின் மனத்தில் இந்த மூன்றும் தோன்றினால் துக்கங்கள் விலகும் என்றார்.

**ஓதுமறை நான்குதனில் * ஓங்கும் ஒரு மூன்றினுள்ளே *
நீதிநெறி வழுவா நிற்கின்றோம் * - போது அமரும்
பேர் ஆயிரமும் * திருவும் பிரியாத *
நாராயணன் அருளால் நாம்**
ஸ்வாமி தேசிகன், அமிருத ரஞ்சனி 31

என்று ஸ்வாமி தேசிகன் இந்த மூன்று ரஹஸ்யங்களைப் பற்றியும் அருளினார். "அத்யனம் செய்யப்படும் வேதங்கள் நான்கிலும் புகழப்படும் மூன்று ரகசியங்களையும் அறிந்து குற்றமற்ற வாழ்க்கை நடத்துகிறோம்," என்றார்.

## 0-8 மற்ற ஆசாரியர்கள் அருளியவை

பிள்ளைலோகாசரியரும், அஷ்டாதஸ ரஹஸ்யங்கள் என்று பதினெட்டு ரஹஸ்யங்களை அருளியிருக்கிறார். முமூக்ஷுப்படி, தத்வத்ரயம், அர்த்த பஞ்சகம், ஸ்ரீவசந பூஷணம், ப்ரமேயசேகரம், பரந்த படி, யாத்ருச்சிக படி என்று பல.

**முமுக்ஷுவுக்கு அறிய வேண்டும் ரஹஸ்யம் மூன்று**
பிள்ளைலோகாசாரியார் முமுக்ஷுப்படி 1

என்று முமுக்ஷுப்படியில் ஸாதித்தார். மோக்ஷத்தில் இச்சையுடையவனுக்கு முமுக்ஷு என்று பெயர். அவன் தெரிந்து கொள்ள வேண்டிய ரஹஸ்யங்கள் மூன்று என்பதை முதலிலேயே காட்டினார்.

இந்த மூன்று ரஹஸ்யங்களில் முக்கியமாக நடுவில் அமைந்துள்ள த்வயத்தின் பெருமையும், அதன் அர்த்தங்களையும் இங்கே அனுபவிக்கலாம் என்று ஆசாரியர்களுடைய திருவருளுடன் ஆரம்பிக்கொறோம்.

prapatti dot com

# 1. தோற்றம்

**ஓதுமிரண்டை இணைத்து * தன்**
**பாதமிரண்டால் அணைத்து ***
**போதுமென மீட்டிக் கடலில் ***
**வாழுமெனருளினான் தம்சேவைக்கே.**

| | |
|---|---|
| **ஓதும்** | = அத்யனம் செய்யும் வேதத்தில் |
| **இரண்டை** | = (சொல்லப்பட்ட) இரண்டு வரிகளை |
| **இணைத்து** | = ஒன்று சேர்த்து த்வய மந்திரமாக உபதேசித்து |
| **தன் பாதம் இரண்டால்** | = தன்னுடைய இரண்டு திருவடிகளால் |
| **அணைத்து** | = நல்ல வழியைக் காட்டி |
| **போதும்** | = (உனக்கு) இந்த பிறவித்துன்பம் போதும் |
| **என கடலில் மீட்டி** | = என்று ஸம்ஸார கடலிருந்து விடுவித்து (rescued) |
| **வாழும்** | = என்னுடைய பரமபத்தில் என்றும் இருப்பாய் |
| **என அருளினான்** | = என்று அனுக்ரஹீத்தான், எம்பெருமான் |
| **தம் ஸேவைக்கே** | = தனக்கும், பிராட்டிக்கும் கைங்கர்யம் செய்வதற்கே |

## 1-1 முன்னுரை

முதல் பாசுரம் ஆரம்ப எழுத்து **ஒ**. கடைசி பாசுரத்தின் கடைசி எழுத்து **ம்.** இதை சேர்த்து ப்ரணவமாய் படிக்கும்போது **உகத்தின் சுகம்** என்ற இந்த த்வயத்தின் விவரணமான பாடல்கள், த்வய மந்திரத்தின் பொருள்கள் எல்லாம் அந்த ப்ரணவத்தில் சொல்லப்படிருப்பதே என்பதைக் காட்டுகிறது.

**ஓதும்** என்ற பதத்துடன் ஆரம்பிக்கிறது முதல் பாசுரம். முடிப்பது **தம் ஸேவைக்கே** என்ற பதத்துடன். பாசுரத்தின ஸாரார்த்தத்தை இந்த இரண்டு பதங்களைச் சேர்த்து பொருள் கூறுவதில் அறிந்து கொள்ளலாம். ஒதக்கூடிய ஸமிஸ்கிருத, திராவிட வேதங்கள் அறுதியிடுவது ஒன்றே ஒன்றுதான். பகவானுக்கு செய்யும் கைங்கர்யமே சேதனனுக்கு கிடைக்கும் உயர்ந்த பேறு.

prapatti.com

## 1-2 த்வயமும் ப்ரணவமும்

**த்வய மந்திரம் ப்ரணவத்தை நேரிடையாக சொல்லாதிருப்பினும், அதன் பொருளை மறைமுகமாக காட்டுகிறது**. ப்ரணவத்தை பிரித்து அதற்கு நடுவே லக்ஷ்மீ மந்திரத்தை நுழைத்து எல்லோரும் அனுஸந்திக்கும்படி காட்டியது.

அகாரமாகிய எம்பெருமானுக்கு, அவனுக்கே, கைங்கர்யம் செய்வதற்காக இருக்கும் மகாரமாகிய ஜீவன் என்ற ப்ரணவத்தின் அர்த்தத்தை இங்கே ப்ரணவத்தை வெளிப்படையாக சொல்லாமல் சொல்லியது.

> **ஓதி நாமம் குளித்து உச்சி தன்னால் * ஒளிமாமலர் *
> பாதம் நாளும் பணிவோம் * நமக்கே நலம் ஆதலின் ***
> திருமங்கையாழ்வார், பெரிய திருமொழி 9-3-9

என்று வேதங்களை ஓதி, நீராடி, தலை வணங்கி, எம்பெருமானின் ஒளி மிகுந்த இரண்டு திருவடிகளுக்கும் கைங்கர்யம், தினமும் செய்வோம். அதுதான் நமக்கு க்ஷேமம் என்று ஆத்மாவின் ஸ்வரூபத்தையும், சுகத்தையும் கைங்கர்யத்தில்தான் புதைந்து கிடக்கிறது என்பதைக் காட்டினார், திருமங்கையாழ்வார்.

## 1-3 ஓதும்

> **ஓதுவார் ஓத்தெல்லாம் * எவ்வுலகத்து எவ்வெவையும் *
> சாதுவாய் நின் புகழின் * தகை அல்லால் பிறிதில்லை ***
> நம்மாழ்வார், திருவாய்மொழி 3-1-6

நம்மாழ்வார் சொல்கிறார். “அப்பா உன் ஸ்ருஷ்டியில் எத்தனை உலகங்கள். அவற்றில் எத்தனை வேத விற்பன்னர்கள். நம்முடைய பூலோகம் போல் அவர்களுக்கும் ராமாயணம், பாகவதம் இருக்கின்றன. அவை எல்லாம், எம்பெருமானே! சாதுவான உன் புகழையே பறை சாற்றுகின்றன” என்றார்.

இங்கே நம்மாழ்வார், எம்பெருமானை சாது என்ற பதத்தால் அற்புதமாக விவரிக்கிறார். முதலாவதாக, அவன்தான் ஸத். அவனைத் தவிர மற்றவை அஸத் என்று அவற்றை விலக்கி எம்பெருமானே உயர்ந்த பேறு என்பதை நிஷ்கரிக்கிறார். வேதங்களின் ஸாரம் எம்பெருமான் ஒருவனே ஸத்.

சாது என்றால் **வேதங்கள் பொல்லாத்தனம் இல்லாமல்**, உள்ளதை உள்ளபடியே காட்டுவது. அதனால்தான் அவை உயர்ந்த ப்ரமாணங்கள். சாதுவாய் என்பதை குணங்கள் என்று கொண்டால், ஸர்வ விதமான திருக்கல்யாண குணங்கள் நிறைந்தும், தீய குணங்கள் அற்றவன், எம்பெருமான்தான் பரதத்வம் என்பதை காட்டிக் கொடுக்கின்றன. சாதுவாய் என்பதை இனிமையாய் என்றால், ப்ரமாணங்கள் எம்பெருமானை வீவரிக்கும் அழகு இனிமை. கேட்கும் ஒலி இனிமை. விளக்கும் பொருளோ அதைவிட இனிமை.

ஆக த்வயம் எப்படி வேதத்திலிருந்து வந்ததோ, அதுபோலே இங்கேயும் ஓதும் என்று வேதத்தை ப்ரமாணமாக கொண்ட நம்முடைய விசிஷ்டாத்வைத மதம் போற்றும் த்வய மந்திரத்தின் விவரணத்தையும் ஓதும் என்று பாசுர ஆரம்பத்தில் சொன்னோம்.

## 1-4 த்வயம் என்றால் என்ன?

> **ஸ்ரீமந்நாரயண சரணௌ ஶரணம் ப்ரபத்₃யே**
> **ஸ்ரீமதே நாரயணாய நம:**

சேதனர்கள் உஜ்ஜீவிக்க ஶரணாகதி மந்திரம் என்பது த்வயம். இது ரஹஸ்யத்ரயங்களில் நடுவில் உள்ள வேத மந்திரமாகும்.

த்வயம் என்றால் **இரட்டை** என்று அர்த்தம். இதில் இரண்டு பகுதிகள் இரண்டு வரிகளாக உள்ளன. முதல் வரி **உபாயத்தையும்**, பின் வரி **பலனையும்** காட்டுவதால் இந்த பெயர்.

> **இம்மந்த்ரம் ஸ்வாதிகாரத்தையும், ஸ்வஸ்வரூபத்தையும் தெளிந்தவனுக்கு ஸர்வாதிகார அநுரூபமான உபாயம் என்ன,**

**ஸ்வரூப அநுரூபமான புருஷார்த்தம் என்ன, தேச காலாதி பரிச்சேத ரஹிதமான இவ்வர்த்த த்வயத்தை காட்டுகையாலே த்வயம் என்று பெயர் பெற்றது.**

**ஸ்வாமி தேசிகன், ஸார ஸாரம்**

என்று தேசிகன் இந்த மந்திரம் எதற்கும் தகுதியில்லாத சேதனன், தன் நிலை உணர்ந்து, தனக்கேற்ற உபாயம் இது என்று ப்ரபத்தியை அறிந்து கொண்டு, அத்தால் கிடைக்கும் தன் ஸ்வரூபத்திற்கு ஒத்ததான பலனில் விருப்பம் கொண்டு இடம், காலம், வர்ணம் போன்ற வரையறை இல்லாது உச்சரிக்கும் மந்திரம் என்பதை வெளிப்படுத்துவதால் த்வயம் என்று பெயர் என்றார்.

**த்வயம் உபாய பரிக்ரஹத்தையும், உபேய ப்ராத்தநத்தையும் ப்ரதிபாதிக்கிறது. இரண்டு அர்த்தங்களையும் ப்ரதிபாக்கையாலே இரண்டு வாக்யம் ஆயிற்று. இரண்டு வாக்யம் ஆகையாலே த்வயம் என்ற திருநாமம் ஆயிற்று**

**பிள்ளைலோகாசாரியர், யாதிருச்சிகப்படி**

என்று பிள்ளைலோகாசாரியார் ஸாதித்தார்.

சிலர் முதல் வரி **அடைக்கலமாக வரித்தலையும்**, இரண்டாம் வரி **ஆத்ம ஸமர்ப்பணத்தையும்** சொல்லுகிறது. அதாவது **அங்க, அங்கிகளை** முறையே என்பர். இந்த அர்த்தத்தை **ஸ்வாமி தேசிகன் உகக்கவில்லை.** அதனால் ஸம்பிரதாய ஸித்தம் அன்று.

சரி, முதல் வரி உபாயம் என்றால் எது உபாயம்? மோக்ஷத்தை அடைய ஏதாவது ஒரு உபாயம் வேண்டும். **கர்ம, ஞான, பக்தி** என்று சாஸ்திரங்கள் விதித்தன. ஆனால் சேதனன் தனக்கு அவை எல்லாம் செய்ய தகுதி, கைம்முதல், சாமர்த்யம், பொறுமை இவை இல்லாதலால் வருந்துவது - இதை **ஆகிஞ்சன்யம்** என்பர். அதாவது எதற்கும் ப்ரயோஜனமில்லை என்கிறார்களே அது போலே. இது ப்ரபத்தி செய்ய முதல் தகுதி.

அந்த உபாயம் என பலனைத் தரும்? சேதனன் அல்ப அஸ்திர பலன்களை எல்லாம் வெறுத்து நிலையான, அநந்த ஆனந்தத்தை விரும்புகிறான். அதுதான் மோக்ஷம் என்னும் உயர்ந்த புருஷார்த்தம். அது தன்னுடைய

ஸ்வரூபத்தை உணர்ந்து, எம்பெருமானுக்கு கைங்கர்யம் செய்வதே தன் நிலை என்று எம்பெருமானிடம் அந்த பலனை வேண்டுகிறான். அந்த பலன் ஒன்றே வேண்டும், அதை அந்த எம்பெருமான் ஒருவனே அருள முடியும். இது **அநந்யகதிவத்தைக்** காட்டுகிறது. இது ப்ரபத்திக்கு இரண்டாம் தகுதி.

இந்த **உபாயம், பலன் இரண்டையும் காட்டுவதால் த்வயம் என்று பெயர்.**

## 1-5 த்வயம் எப்படி வந்தது?

மந்த்ர ரத்னம் என்கிற இந்த த்வயம் கடவல்லி உபநிஷத்தில் உள்ளது. முன்னொருகால் மஹாலக்ஷ்மி, லீலா விபுதியாகிற இந்த பூவுலகில் **"அத்தை தின்னு அங்கே கிடக்கும்"** சேதனர்களை கண்டு மனமுருகி, அவர்கள் உஜ்ஜீவிக்க வேண்டுவதற்காக ஏதாவது உபதேசிக்க வேணும் என ஸ்ரீமந் நாராயணனிடம் வேண்டுகிறாள்.

பகவானும் அவள் வேண்டுகோளுக்கு இணங்கி, கடவல்லியில் இரண்டு இடங்களில் பிரிந்து கிடந்த வாக்கியங்களை ஒன்றாக சேர்த்து த்வய மந்த்ரமாக ஸ்ரீவைகுண்டத்தில் உபதேசிக்கிறார்.

> **இன் அமுதில் பிறந்தாள் * இதம் கேட்க உரைத்த பிரான் ***
> **பொன் அருளால் மறை மௌலியில் * பூண்ட இரண்டு இசைத்து ***
> **தன் உரை மிக்க தனம் இது எனத் * தந்த வேதகத்தில் ***
> ஸ்வாமி தேசிகன், துவயச் சுருக்கு 1

- **இன் அமுதில் பிறந்தாள் இதம் கேட்க** - சுவை மிக்க, தித்திக்கும் அமுதத்தில் அவதரித்த பிராட்டி, ஸம்ஸாரிகளுக்கு நல்ல ஹிதத்தை, உபதேசிக்குமாறு எம்பெருமானை வேண்ட
- **பொன் அருளால்** - பரமத்மாவான எம்பெருமானும் தன் கருணாயால்
- **மறை மௌலியில் பூண்ட இரண்டு இசைத்து** - வேதத்தின் முடியான உபநிஷத்திலிருந்து இரண்டு வரிகளை இணைத்து (த்வய மந்திரம்)

- **தன் உரை மிக்க தனம் இது உரைத்த பிரான்** - என்னுடைய வார்த்தைகளில்மிக உயர்ந்த செல்வம் இதுதான் என உபதேசித்தான்," என்று தேசிகன் ஸாதித்தார்.

> **கடஶ்ருத்யாதிகளில் திருவஷ்டாக்ஷரத்தைச் சொல்லுகிற ப்ரகரணத்திலே த்வயத்தில் பூர்வோத்தர கண்டங்களைப்** (முற்பகுதி, பிற்பகுதி) **பிரிய ஓதிச் சேர, ஒரு கால் உச்சரிக்க விதித்தது.**
>
> **ஸ்வாமி தேசிகன், ஸார ஸாரம்**

என்று ஸ்வாமி தேசிகன் ஸார ஸாரத்தில் த்வயாதிகார ஆரம்பத்தில் ஸாதித்தார்.

பாஞ்சராத்ர சாஸ்திரங்களிலும், ப்ரஶ்ந ஸம்ஹிதைளிலும், பாத்ம புராணத்திலும் இந்த த்வய மந்திரத்தை எடுத்து 25 எழுத்துக்களையும் ஒவ்வொரு அக்ஷரமாக காண்பித்துள்ளன.

ஆக இது **வேதத்தை அடிப்படையாக கொண்ட தாந்திரீக மந்திரம்.**

## 1-6 த்வயம் ஏன் உயர்ந்தது?

ஶ்வேதாஶ்வர உபநிஷத் போன்றவை ப்ரபத்தியைப் பற்றி பல இடங்களில் பேசுகின்றன. ஶரணாகதியைப் பற்றி வேத வாக்கியங்கள் பல இருக்க இந்த த்வயத்தை மட்டும் ஏன் உயர்ந்ததாய் போற்றுகிறோம் என்று கேள்வி வரும்.

த்வய மந்திரமானது

- **தத்வம்** - பகவான் ஒருவனே ரக்ஷகன், **ஶரண்யன்**
- **ஹிதம்** - அவனை அடைவதற்கு உபாயம் **ஶரணாகதி**
- **புருஷார்த்தம்** - ஸ்ரீமந் நாராயணனுக்கு கைங்கர்யம் செய்வதே **பலன்**

என்ற **தத்வ, ஹித, புருஷார்த்த** கருத்துக்களை சுருக்கமாய் (briefly), ஆணித்தரமாய் (emphasizes), வெளிப்படையாய் (explicitly), இரண்டு வரிகளில் (precisely), மந்திர விசேஷமாக அறிவிப்பதால் த்வயத்தையே பூர்வாசாரியர்கள் உகந்து அதிலேயே மண்டிக் கிடந்தனர்.

> **ஶ்வேதாஶ்வராதிகளிலே சொல்லுகிற ப்ரபத்தி மந்திரங்களிற் காட்டிலும் இது ஶரண்ய ஶரணாகதி தத்பலங்களை விஶதமாகக்** (தெளிவாக) **காட்டுகையாலே இதை ஆசாரியர்கள் ஆதரித்தார்கள்**
>
> **ஸ்வாமி தேசிகன், ஸார ஸாரம்**

என்று ஸ்வாமி தேசிகன் ஸார ஸாரத்தில் ஸாதித்தார்.

> **யேந கேநாபி ப்ரகாரேண த்₃வய வக்தா த்வம்**
> **கேவலம் மதீயயைவ த₃யயா**
>
> **ராமாநுஜர், கத்யம்**

என்று எம்பெருமானார் கத்யத்தில் அருளினார். நம்பெருமாள் எம்பெருமானாருக்கு சொன்ன வார்த்தைகளை அப்படியே கத்யத்தில் ஸாதித்துள்ளார். பகவான், ரங்கநாதன் சொல்கிறான்." **ஏதோ ஒரு வகையில் த்வயத்தை உச்சரிக்கும் நீ"** என்று குறிப்பிட்டு த்வயத்தை சொன்னார்.

அதாவது அர்த்தங்களை தெளிவாக, நிறைவாக, முறையாக அறிய வேண்டும் என்பதில்லை. ஏதோ ஒரு சுமாரான, பொதுப்படையான பொருள் (approximate, general meaning) கொண்டாலும் போதும். அதுவே உனக்கு ஆசையைத் தூண்டி, பின்னொரு நாள் அந்த உபாயத்தை அனுஷ்டிக்க வைத்து, மோக்ஷ பலனைத் தரும் என்று பொருள்.

த்வயம் மந்திரத்திற்கு மட்டும் இவ்வளவு பெருமையா? ஏன் மீதி எத்தனையோ மந்திரங்கள் இல்லையா? அவைகளுக்கு என்ன குறை வந்து விட்டது? என்று தர்க்கம், வாதம் (argue) செய்யக் கூடாது. சாஸ்திரம் சொல்வதை அப்படியே முழுவதுமாய் நம்பி, விச்வாசத்துடன் இருக்க வேண்டும்.

prapatti dot com

தேவ ரஹஸ்யங்களிலும், மந்திர ரஹஸ்யங்களிலும் காரணம் ஆராய்வது தவறு என்றார் வியாஸ பகவான் மஹா பாரதத்தில்.

இப்படி உயர்ந்த த்வயத்தை **"பூர்வாசாரியர்களின் வாக்யம்"** என்பார்கள். அதாவது ஆசாரியர்கள் உகந்து அதையே உச்சாரம் செய்து கொண்டிருப்பது. ஆசாரியர்கள் சேதனன் உஜ்ஜீவிக்க இம்மந்திரத்தால் மோக்ஷ பலனை கோருவது, எம்பெருமானே முதல் ஆசாரியனாக இருந்து பிராட்டிக்கு உபதேசித்தது என்று பல பொருள் கொள்வர்.

## 1-7 ஓதும் இரண்டை இணைத்து

ஓதும் இரண்டு என்பது த்வயத்தை குறிக்கிறது. வேதத்தில் உள்ள இரண்டு வாக்கியங்கள் என்று கொள்ளலாம். இல்லை உபாயம், பலன் என்கிற இரண்டையும் குறிக்கிறது என்றும் கொள்ளலாம். இந்த இரண்டாவது அர்த்தத்தையே ஸ்வாமி தேசிகன் உகந்தார்.

**ஆம்னாதம் கடவல்லிஷு பிரபத்தேர் வாசகம் த்வயம்**
**நடாதூர் அம்மாள், பிரபன்ன பாரிஜாதம் 11**

என்று பிரபன்ன பாரிஜாதத்தில் ஸ்வாமி நடாதூர் அம்மாள் அருளியிருக்கிறார். அதாவது, **"கடவல்லி என்றதோர் வேதபாகத்தில் ப்ரபத்தி மந்த்ரமாக த்வயம் என்ற மந்த்ரம் ஓதப்பெற்றுள்ளது"** என்றார்.

பிரபன்னன் என்றால் ப்ரபத்தி செய்தவன். பாரிஜாதம் என்பது பலனை விளைவிப்பது என்று பொருள். பாரிஜாத மரம் எப்படி கல்ப விருக்ஷம் போல் வேண்டியவர்க்கு எல்லாம் அளிப்பதோ அதைப்போல் இந்த நூலும் ப்ரபத்தி செய்தவனுக்கு எல்லா பலன்களையும் தரும் என்ற பொருளில்.

இவருக்கு வாத்ஸ்ய வரதாச்சாரியார் என்ற திருநாமம். கச்சி வரதனுக்கு பாலைக் காய்ச்சி ஸமர்பிக்கும்போது பாலைத் தொட்டு தொட்டு பார்த்து தகுந்த சூட்டில் பகவானுக்கு ஸமர்பிப்பது வழக்கம். அதை கண்ணுற்ற

பகவான் “இவ்வளவு பரிவுடன் ஸமர்ப்பிக்க, நீர் எமக்கு என்ன அம்மாவோ”? என்று வினவினார். பகவான் அம்மா என்று இவரை அழைத்ததால் அந்த பெயரே நிலைத்து விட்டது. நம் ஸம்ப்ரதாயத்தில் எம்பெருமானாருக்கு பிறகு எழுந்தருளியிருந்த ஆசாரியர்களில் தலை சிறந்த ஒருவர்.

ஸ்வாமி தேசிகனுக்கு மாமாவும், குருவும் ஆகிய கிடாம்பி ராமானுஜாச்சாரியார் என்னும் அப்புள்ளாருக்கு குருவானவர். நடாதூர் அம்மாள் பேரரான கடிகாஸதம் அம்மாள் ஆதிவண் சடகோப ஸ்வாமிக்கு ஆசாரியர் என்பதை நினைவில் கொள்ள வேண்டும்.

ஸ்வாமி தேசிகன் ஸ்ரீஸ்தோத்ர ரத்ன பாஷ்யத்திலும் மற்ற இடங்களிலும் பிரபன்ன பாரிஜாதத்தை ப்ரமாணமாகக் கொண்டு விளக்கியுள்ளார். எப்படி ஆளவந்தாரின் ஸித்தித்ரயம், ஆகம ப்ரமாணம் இரண்டும், ஸ்வாமி ராமனுஜருக்கு ஸ்ரீ பாஷ்யம் எழுத ஒரு முன்னோடியாக (precedence) இருந்ததோ அதைப்போல் ஸ்வாமி தேசிகனுக்கு ரஹஸ்யார்த்தங்களை விளக்கும் ஸ்ரீமத் ரஹஸ்யத்ரய ஸாரத்திற்கு உறு துணையாய் இருந்தது என்று சொல்லாம்.

## 1-8 த்வயம் வேதங்களின் ஸாரம்

**வேத3ா மே பரமம் சக்ஷு: வேத3ா மே பரமம் த4நம் ।**
**வேத3ா மே பரமம் த4ாம வேத3ா மே ப்3ரஹ்ம சோத்தமம் ।।**
வியாஸ பகவான், மஹாபாரதம் ஶாந்தி பர்வம் 357-31

என்று மஹாபாரதத்தில் கூறப்பட்டுள்ளது. உயர்ந்த வேதங்களே எனக்கு கண்; அந்த வேதங்களே எனக்கு சிறந்த தனம்; வேதங்களே எனக்கு மேலான தேஜஸ்; அந்த வேதங்களே உயர்ந்த பிரம்மம் என்று.

அப்படிப்பட்ட வேதத்தின் ஸாரமாக இந்த த்வயம் அமைகிறது என்பது முன்னோர் மொழிந்த முறையான கருத்து.

**மாதவன் என்றென்று * ஓத வல்லீரேல் ***
**தீது ஒன்றும் அடையா * ஏதம் சாராவே**

நம்மாழ்வார், திருவாய்மொழி 10-5-7

என்று நம்மாழ்வார், "மந்த்ர ரத்னமான த்வயத்தை ஓதுவீர்களாயின் அது நீங்கள் ஜன்ம ஜன்மங்களாக சேர்த்து வைத்திருக்கிற வினைப்பலன்களை விலக்கும். அது மட்டுமல்ல, மேலும் பாவங்களைச் செய்ய விடாமல் தடுக்கும். மாதவனாகிற லக்ஷ்மீநாதனை, ஶ்ரிய: பதியை அடைவீர்கள்," என்றார்.

## 1-9 தன் பாதம் இரண்டால் அணைத்து

பகவானின் பல ஸௌந்தர்ய அவயங்களிலும் திருவடிகள்தாம் மிகவும் உயர்ந்தது என்று ஆசாரியர்கள் அருளியுள்ளனர். அதைத்தான் நாம் ஶரணம் என்று பற்றுகிறோம். அதைத்தான் பரம போக்யம் என்று அனுபவிக்கிறோம்.

**எம்மா வீட்டுத் திறமும் செப்பம் * நின்**
**செம்மா பாத பற்புத் தலை சேர்த்து * ஒல்லைக்**
**கைம்மா துன்பம் கடிந்த பிரானே! ***
**அம்மா! அடியேன் வேண்டுவது ஈதே**

நம்மாழ்வார், திருவாய்மொழி 2-9-1

என்று நம்மாழ்வார், "கஜேந்திரன் என்ற யானையின் துன்பத்தை போக்கிய எம்பிரானே! எத்தனை உயர்ந்த புருஷார்த்தமாகிய நலம் அந்தமிலதோர் நாடு, பரமபதம், மோக்ஷ ஸாம்ராஜ்யம், ஸ்ரீவைகுண்ட்டம் என்றெல்லாம் அழைக்கப்படும் அந்த பரம போக்யத்தை நீ எனக்கு அளித்தாலும் அது வேண்டாம்."

"என் தலையில் உம் திருவடிகளை வைத்து வாழ வைக்க வேண்டும். அந்த திருவடிகள் நித்யமாய் இருக்க வேண்டும். அந்த இன்பம் இப்பொழுதே வேண்டும். அடியேன் வேண்டுவது இப்பேறு ஒன்றே," என்றார்.



prapatti.com

அதாவது பரம புருஷார்த்தம் என்பது **உனக்கேயாய் இருக்கும் இருப்பே யான் வேண்டுவது** என்றிருப்பது. கஜேந்திரன் மூலம் அந்த த்வரை, அதாவது வேகத்தைக் காட்டியது. அது போல எனக்கும் அருள வேண்டும் என்றார்.

ஸ்வாமி ஆளவந்தாரும் தன்னுடைய ஸ்தோத்ர ரத்னத்தில் இதையே ப்ராத்திக்கிறார்.

> **கத3ா புநஶ் ஶங்க2 ரத2ாங்க3 கல்பக**
> **த்4வஜாரவிந்த3ாங்குஶ வஜ்ரலாஞ்ச2நம் ।**
> **த்ரிவிக்ரம! த்வச் சரணாம்பு3ஜத்3வயம்**
> **மதீ3ய மூர்த்த4ாநமலங்கரிஷ்யதி ।।**
>
> ஆளவந்தார், ஸ்தோத்ர ரத்நம் 31

“த்ரிவிக்ரமாவதாரம் செய்த பகவானே! சங்கு, சக்கரம், கல்பக விருக்ஷம், கொடி, தாமரை, அங்குசம், வஜ்ராயுதம் இவைகளை அடையாளமாகக் கொண்ட உம் திருவடித்தாமரைகள் என்று என் தலையை அலங்கரிக்கப் போகிறது?” என்று புலம்பினார், ஆளவந்தார்.

> **உற்றேன் உகந்து பணி செய்து * உன பாதம்**
> **பெற்றேன்* ஈதே இன்னம் வேண்டுவது எந்தாய் ***
>
> நம்மாழ்வார், திருவாய்மொழி 10-8-10

என்று எம்பெருமானுடைய திருப்பாதங்களை அடைவதுதான் உயர்ந்த புருஷார்த்தம் என்பதைக் காட்டினார், நம்மாழ்வார்.

> **திருப்பொலிந்த சேவடி * என் சென்னியின்மேல் பொறித்தாய் ***
>
> பெரியாழ்வார் திருமொழி 5-4-7

பெரியாழ்வாரும், “பகவானே நீ உன் திருப்பாதங்களை என் தலையில் இட்டு அருள் செய்தாய்,” என்றார்.

> **மந்திரமும் மந்திரத்தின் வழியும் காட்டி ***
> **வழிப்படுத்தி வான் ஏற்றி அடிமை கொள்ளத் ***
> **தந்தை என நின்ற தனித்திருமால் தாளில்**

**தலை வைத்தோம் சடகோபன் அருளினாலே**
**ஸ்வாமி தேசிகன், அமிருத ஸ்வாதினி 28**

என்று அந்த எம்பெருமானின் திருவடிகளைக் காட்டிக் கொடுத்த நம்மாழ்வார் அருளிச் செயல் மூலமாய் பகவானை அடைந்தோம் என்றார் ஸ்வாமி தேசிகன்.

கோவிலில் நமக்கு ஶடாரி சாதிப்பதும் பகவானின் பாதுகைகளை நம் தலையில் ஏந்தி நிற்பதே ஆகும். அந்த பாதுகைகள்தாம், பகவானுக்கும் நமக்கும் உள்ள ஸம்பந்தத்தை வலியுறுத்துகிறது.

**யோகீ3ந்த்ராணாம் த்வத3ங்கே3ஷ்வதி4கஸுமது4ரம்**
**முக்திப4ாஜ3ாம் நிவாஸோ**
**ப4க்தாநாம் காமவர்ஷத்3யுதருகிஸலயம்**
**நாத2தே பாத3மூலம் |**
**நித்யம் சித்தஸ்தி3தம் மே பவநபுரபதே**
**கிருஷ்ணா காருண்யஸிந்தே3ா**
**ஹ்ருத்வா நிஶ்ஶேஷதாபாந் ப்ரதி3ஶது பரமாநந்த3**
**ஸந்தே3ாஹ லச்ஷமீம் ||**

ஶ்ரீ நாரயண பட்டத்ரி, ஶ்ரீநாரயணீயம் 100-10

என்று ஶ்ரீ நாரயணீயத்தில் ஶ்ரீ நாரயண பட்டத்ரி கடைசியாக சொல்லுகிறார்.

"ஹே குருவாயூரப்பா, ஶ்ரீகிருஷ்ணா, உன்னுடைய திவ்யமான திருமேனியில் திருவடிகளே மிகவும் உயர்ந்தவை. மோக்ஷத்தை அடைந்தவர்களுக்கு இருப்பிடம் அவைதான். பக்தர்களுக்கு கற்பக மரம் போல் விரும்பியதை எல்லாம் வாரி வழங்குபவை. அந்த திருவடிகள் எப்பொழுதும் என் மனத்தில் இருந்து எல்லா செல்வங்களையும் அளிக்க வேண்டும்" என்று வேண்டினார்.

## 1-10 போதும் என கடலில் (இருந்து) மீட்டி

ஸம்ஸாரத்தை கடப்பதற்கு பகவானைத் தவிர வேறு வழியில்லை. அவனே சிறந்த கதி.

prapatti.dot.com

ஸம்ஸார ஸாக3 ரம் கே4ாரம் அநந்த க்லேஶ ப4ாஜநம் |
த்வாமேவ ஶரணம் ப்ராப்ய நிஸ்தரந்தி மநீஷிண: ||
ஜிதந்தே ஸ்தோத்திரம் 1-4

“ஸம்ஸாரம் என்ற கடல், மிகக் கொடியது. கணக்கற்ற துன்பங்களுக்கு இருப்பிடம். உன்னையே அடைக்கலம் கொண்டு இதைத் தாண்டுகிறார்கள். யார் அவர்கள் என்றால் மனஸ்ஸை ஜயித்திருப்பவர்கள்,” என்றது.

அணைவது அரவணை மேல் * பூம்பாவை ஆகம்
புணர்வது * இருவர் அவர் முதலும் தானே *
இணைவனாம் * எப்பொருட்கும் வீடுமுதலாம் *
புணைவன் * பிறவிக்கடல் நீந்துவார்க்கே
ஸ்வாமி நம்மாழ்வார். திருவாய்மொழி 2-8-1

தாமரை மலரில் தங்கும் பிராட்டியுடன் கலந்த நாராயணன், ஆதிஸேஷன் மேல் அணைத்து காட்சி தருகிறான். அந்த காட்சியே வீடு என்னும் உயர்ந்த இன்பம்.

இருவர் அவர் முதலும்தானே என்பது அந்த நாராயணனும் பிராட்டி ஆகிய மிதுனமே முதல் என்றார். இருவருக்கும் அவர் முதலும்தானே என்று அவனே சிவன், பிரம்மா என்ற இருவருக்கும் முதல்வன் என்றும் விவரிப்பர்.

எல்லா பொருள்களுக்கும் தக்கபடி அவதாரம் செய்யும் அவனே ஸம்ஸாரம் என்கிற ஸமுத்திரத்தை கடந்து மோக்ஷத்தை அடைய சாதனமகிற தெப்பக் கட்டை. அதை கெட்டியாகப் பிடித்துக்கொள். பகவான், பிராட்டி என்கிற மிதுனம்தான் உனக்கு அடைக்கலம் என்கிறார் ஸ்வாமி நம்மாழ்வார்.

குலசேகராழ்வாரோ,

ப4வஜலதி4க3தாநாம் த்3வந்த்3வ வாதா ஹதாநாம்
ஸுத துஹித்ரு களத்ர த்ராண ப4ாரார்திதாநாம் |
விஷம விஷயதோயே மஜ்ஜதாம் அப்லவாநாம்

**ப$_4$வது ஶரண மேகோ விஷ்ணுபோதோ நராணாம் ||**

குலசேகராழ்வார், முகுந்த மாலை 13

என்று ஸம்ஸாரம் என்னும் கடலில் உள்ளவர்களும், இரட்டை காற்றால் அடிக்கப்பட்டவரும் (அதாவது மகிழ்ச்சி - வருத்தம், குளுமை - வெப்பம்), பிள்ளை, பெண், மனைவி இவர்களைக் காக்க வேண்டிய சுமையால் வருத்தம் உடையவர்களும், கொடியதாகிற விஷய சுகங்களாகிய ஜலத்தில் மூழ்கி கிடப்பவர்களும், கரை அடைய ஓடம் இல்லாத மனிதர்களுக்கும் மஹாவிஷ்ணு எனும் ஓடம் ஒரே ஒரு புகலிடமாக ஆகட்டும் என்று எம்பெருமானே சிறந்த உபாயம் என்றார்.

**பறவையேறு பரமபுருடா! * நீ என்னைக் கைக்கொண்டபின் ***
**பிறவியென்னும் கடலும் வற்றிப் * பெரும்பதம் ஆகின்றதால் ***
**இறவு செய்யும் பாவக்காடு * தீக்கொளி இ வேகின்றதால் ***
**அறிவையென்னும் அமுத ஆறு * தலைப் பற்றி வாய்க் கொண்டதே**

பெரியாழ்வார். பெரிய திருமொழி 5-4-2

என்று "பறவைகளுக்கு அரசன் கருடன். அவன் பெயர் பெரிய திருவடி. அவன்மேல் ஏறுகின்ற பரம புருஷனே! நீ எனக்கு அருளியபின் பிறவி என்னும் இந்த பெரிய ஸமுத்திரமும் வற்றி விட்டது. அதனால் உயர்ந்த இடமும் எனக்கு கிடைத்தது" என்றார், பெரியாழ்வார்.

என்னுடைய பாவங்கள் ஸஞ்சிதம், ப்ராரப்தம் போன்றவை காட்டுத்தீ போல் பற்றி எரிகின்றன. உன் நினைவைத் தந்து உன்னை அனுபவிக்கும் இன்பம் என்னும் அம்ருத நதியானது அந்த தீயை எல்லாம் மூடி வெந்து சாம்பலாக்கி பொசுக்கி அழித்து விடுகிறது என்றார்.

**என்பு உருகி இனம் வேல் நெடும் கண்கள் ***
**இமை பொருந்தா பல நாளும் ***
**துன்பக் கடல் புக்கு வைகுந்தன் என்பதோர் ***
**தோணி பெறாது உழல்கின்றேன் ***

ஆண்டாள், நாச்சியார் திருமொழி 5-4

prapatti.com

பெரியாழ்வாருடைய திருமகளான ஆண்டாள், “ஸம்ஸாரக் கடலில் ஆழ்ந்து துக்கப்படுகிறேன் நான். அதைக் கடக்க வைகுந்தநாதனாகிய அந்த எம்பெருமான் என்னும் ஓர் தோணி, அதாவது படகு கிடைக்கவில்லை. அது பெறாதலால் மேலும் மேலும் இதன் ஆழத்தில் அழுந்தி வேதனைப் படுகிறேன் என்றாள்.

அடியவர்களை ரக்ஷிப்பதற்கே கொடி கட்டிக் கொண்டிருக்கிறவனாய், மோஷத்திற்கு உபாயமான அந்த வைகுந்தவன் வரும்படி கூவுவாய் என்று குயிலை நோக்கி உரைப்பதாக ஆழ்ந்த கருத்தைச் சொன்னாள்.

**பிறவிப் பெருங்கடல் நீந்துவர் நீந்தாதார்**
**இறைவன் அடி சேராதார்”**

**பிறப்பென்னும் பேதமை நீங்கச் சிறப்பென்னும்**
**செம்பொருள் காண்பது அறிவு**
திருவள்ளுவர், திருக்குறள்

என்று திருவள்ளுவரும் பகவானின் திருவடிகளை அடையாதவர்கள் பிறவி என்னும் கடலை நீந்த முடியாமல் அதிலே அமிழ்ந்து போவர் என்றார்.

தமிழில் ஒரு பழமொழி. **“அடி உதவுவது போல் அண்ணன் தம்பி உதவ மாட்டர்கள்”** என்று. எல்லோரும் அடி என்றால் உதை, குத்து என்கிற முறையில் கையால், குச்சியால் அடிப்பது எனப் பொருள் கொள்வர். உண்மையில் அடி என்றால் பகவானின் திருவடிகள். அந்த திருவடிகளே உண்மையான உறவு மற்ற அண்ணன் தம்பி என்பவர்கள் அல்ல என்பதை இந்த வசனம் காண்பிக்கிறது.

## 1-11 எந்த இறைவன்?

“இறைவன் அடிகளை அடை” என்றார்கள். அது எந்த இறைவனது அடி? என்ற பெரிய கேள்வி.

**ஆரோக்$_3$யம் ப$_4$ாஸ்கராதி$_3$ச்சே$_2$த்**
**த$_4$நமிச்சே$_2$த் ஹு‍தாஶநாத் ।**
**ஈஸ்வராத் ஜ்ஞாநமந்விச்சே$_2$த்**
**மோக்ஷமிச்சே$_2$ஜ்ஜநார்த்த$_3$நாத் ।।**
மாத்ஸ்ய புராணம் 67-41

“ஆரோக்யத்தை சூரியனிடமிருந்தும், ஐச்வர்யத்தை அக்னியிடமிருந்தும், அறிவை ஈஸ்வரனிடமிருந்தும், மோக்ஷத்தை ஜநார்த்தனிடமிருந்து பிராத்திப்பர்,” என்றது புராணம். “அநந்த ஆனந்தமாகிற மோக்ஷம் வேண்டுமானால் அந்த நாராயணனைத்தான் அடைய வேண்டும்,” என்றது மாத்ஸ்ய புராணம்.

**ஸம்ஸாரார்ணவ மக்$_2$நாநாம் விஷயாக்ராந்த சேதஸாம் ।**
**விஷ்ணுபோதம் விநா நாந்யத் கிஞ்சித$_3$ஸ்தி பராயணம் ।।**
விஷ்ணு தர்மம் 1-59

என்று விஷ்ணு தர்மம் சொல்கிறது, ஸம்ஸாரக் கடலில் மூழ்கி விஷயங்களில் ஈடுபட்டு தவிக்கும் மனமுடையவர்களுக்கு விஷ்ணு என்கிற படகு தவிர கரை சேர்க்கும் உபாயம் ஒன்றும் இல்லை என்று.

மஹாபாரதம், ஸ்ரீமத் பாகவதம், ப்ரம்ம சூத்திரம் எல்லாம் எழுதிய பாதராயணர் என்னும் வியாஸ பகவான் சொல்கிறார்.

**ஆலோட்$_3$ய ஸர்வஶாஸ்த்ராணி விசார்ய ச புந: புந: ।**
**இத$_3$மேகம் ஸு‍நிஷ்பந்நம் த்$_4$யேயோ நாராயணோ ஹரி: ।।**
ஸ்ரீவிஷ்ணு ஸஹஸ்ரநாம ஸ்ரீ த்$_3$வாத$_3$ஶநாமபஞ்ஜரஸ்தோத்ரத்தம் 10

ஸ்ரீவிஷ்ணு ஸஹஸ்ரநாம ஸ்ரீ த்$_3$வாத$_3$ஶநாமபஞ்ஜரஸ்தோத்ரத்தில் “எல்லா சாஸ்திரங்களையும் ஆராய்ந்து மறுபடியும் மறுபடியும் விசாரித்தாலும், நாரயணனே எப்போதும் தியானிக்கத் தகுந்தவன் என்ற அர்த்தமே கிடைக்கும்” என்றார் வியாஸர்.

**ஸத்யம் ஸத்யம் புநஸ்த்ய முத்$_3$த்$_4$ருத்ய பு$_4$ஜமுச்யதே ।**
**வேத$_3$ாச்ச$_2$ாஸ்த்ரம் பரம் நாஸ்தி ந தை$_3$வம் கேஶவாத்பரம் ।।**

ஸ்ரீவிஷ்ணு ஸஹஸ்ரநாம ஸ்ரீ த்₃வாத₃ஶநாமபஞ்ஜரஸ்தோத்ரத்தம் 8

என்று வியாஸ பகவான் மறுபடியும் **“வேதத்தைத் தவிர உயர்ந்த சாஸ்த்ரம் ஒன்றுமில்லை. கேசவனைத் தவிர உயர்ந்த தெய்வமில்லை, இது ஸத்யம், ஸத்யம், ஸத்யம்”** என்று மூன்று தடவை கையை தூக்கி ஸபதம் செய்கிறார். யார் சொல்வது? “வியாஸாய விஷ்ணு ரூபாய வியாஸ ரூபாய விஷ்ணவே” என்னும் ஸ்லோகத்தின்படி வியாஸர்தான் விஷ்ணு, விஷ்ணுதான் வியாஸர் என்னும் அந்த கிருஷ்ணத்வபாயனர்.

**ஆகாஸாத் பதிதம் தோயம் யதா கச்சதி ஸாகரம்**
**ஸர்வ தேவ நமஸ்காரம் கேசவம் ப்ரதி கச்சதி**
ஆதி சங்கரர்

என்றார் ஆதி ஸங்கரர். ஆகாயத்தில் இருந்து விழும் மழைத்துளிகள் எல்லாம் எப்படி கடலையே போய் அடைகின்றனவோ, அதைப்போல் எந்த தெய்வத்தை வழிபட்டாலும் அது கடைசியில் கேசவனைத்தான் போய்ச் சேரும் என்று.

**மற்றுமோர் தெய்வம் உண்டே * மதியிலா மானிடங்காள்***
**உற்றபோது அன்றி நீங்கள் * ஒருவன் என்று உணர மாட்டீர் ***
**அற்றம் மேல் ஒன்று அறியீர் * அவனல்லால் தெய்வமில்லை ***
**கற்றினம் மேய்த்த எந்தை * கழலிணை பணிமினீரே**
தொண்டரடிபொடியாழ்வார், திருமாலை 9

என்று திருமாலையில், தொண்டரடிப்பொடியாழ்வார் “வேதாந்த ஜ்ஞாநமில்லாத மனிதர்களே!, நான் சொல்லும் இந்த பரம் பொருள், ஸ்ரீமந் நாராயணனைத் தவிர வேறு ஒரு தெய்வமும் உண்டா?” என்று வினவுகிறார்.

“உங்கள் அறிவிற்கு எட்டாத மேலான மறைந்த பொருள் ஒன்றை நீங்கள் அறியாமல் இருக்கிறீர்கள். கன்றுகளை மேய்த்த கண்ணன்தான் நான் சொன்ன அந்த தெய்வம். அவனுடைய இரண்டு பாதங்களையும் அடையுங்கள்” என்று உபதேசித்தார்.

**யே த்வந்யதே₃வதா ப₄க்தா யஜந்தே ஶ்ரத்₃த₄யாந்Zவிதா: ।**
**தேZபி மாமேவ கௌந்தேய! யஜந்த்யவிதி₄ பூர்வகம்**
பகவத் கீதை 9-23

கிருஷ்ணன் பகவத் கீதையில் சொல்கிறான். “மற்ற தெய்வங்களை பக்தியுடனும், ஊக்கத்துனும் பூஜித்தாலும் சரி, அவர்களும் என்னையே பூஜிக்கிறார்கள். ஆனால் **“யஜந்தி அவிதி பூர்வகம்”** என்று முறை தவறி அஞ்ஞானத்துடன் வழிபடுகிறார்கள்” என்றான்

“எல்லோர் உள்ளும் அந்தராத்மாவாய் இருக்கும் அந்த எம்பெருமானை நேரிடையாக ஆராதிக்காது மற்ற அவயங்களான தெய்வங்களை ஏன் ஆராதிக்கிறீர்கள்” என்பது இதன் கருத்து.

**நும் இன்கவிகொண்டு * நும் நும் இட்டா தெய்வம் ஏத்தினால் ***
**செம்மின் சுடர்முடி * என் திருமாலுக்குச் சேருமே**
**நம்மாழ்வார், திருவாய்மொழி 3-9-6**

நம்மாழ்வார் சொல்கிறார், “நீங்கள் எவ்வளவு ரஸமான, இனிமையான கவிதைகள் வேண்டுமானாலும் பாடுங்கள்! உங்களுக்கு பிடித்த தெய்வம் என்று எந்த மூலையில் உள்ளதையும் கொண்டாடுங்கள்! ஆனால் ஒன்று மட்டும் சொல்கிறேன். உங்கள் பாட்டு, அதன் பொருள், அத்தால் பலன், பாடுகிற நீ, சொல்லும் நான், எல்லாவற்றிற்கும் அந்தராத்மாவாக உள்ள என்னுடைய ஸ்ரீமந் நாராயணனுக்குத்தான் அவை போய்ச் சேரும். லக்ஷ்மியை திருமார்பில் கொண்டு பிரகாசிக்கும் அவனுக்குத்தான் எல்லா புகழும் தகும்” என்றார்.

## 1-12 கடலில் வாழும்

போதும் என ஸம்ஸாரத்திலிருந்து மீட்டி, **“கடலில் வாழும்”,** அதாவது ஆனந்தக் கடலில் எப்போதும் திளைத்து இருப்பீர் என்றும் அர்த்தம் சொல்லலாம்.

ஒரு கடலை விட்டோம். அது ஸம்ஸாரக் கடல். துக்கமயமானது. இன்னொரு கடலை அடைந்தோம். அது அளவில்லாத, முடிவில்லாத, குறைவில்லாத ஆனந்தமானது. பரிபூர்ண ப்ரம்மாநுபவம் என்கிற பரம ப்ராப்தியை தருகிறது.

ஸம்ஸாரக் கடலின் ஆரம்பம் யாருக்கும் தெரியாது. சேதனனின் கர்மா அநாதியானது. அதுபோல வைகுண்டம் என்னும் அமுதக் கடலின் எல்லை, அந்தம், முடிவு தெரியாது. முடிவு கிடையாது. ப்ரகிருதியில் உள்ள காலம் என்னும் தத்துவம், மோஷத்திலும் உண்டு. ஆனால் அதற்கு ஆதிக்கம் கிடையாது. Time stands still என்கிறாற்போல், **“ஹா வுஹா வுஹா வு”** என்று ஸாம கானத்துடன் முடிவில்லா பேரின்பக் கடலில் மூழ்கி மகிழ்வர்.

## 1-13 தம் சேவைக்கே வாழும்

மோஷத்தில் ஆசை எதற்கு? இங்கே பூலோகத்தில் மாம்பழம் கிடைக்க மாட்டேன் என்கிறது. பலாச் சுளை சுவையானது இல்லை. இருக்கிற இடமோ கொதிக்கிறது. நல்ல தென்றல் காற்று வேண்டும். குழந்தைகள் சொன்னதை கேட்க வேண்டும். இதற்கு எல்லாமா மோக்ஷம் போகிறோம்.

மோஷம் அடைவது எம்பெருமானுக்கும், பிராட்டிக்கும் இடைவிடாத கைங்கர்யம் செய்வதற்கே.

**நித்யகைங்கர்ய ப்ராப்த்யபேக்ஷயா**
**நித்யகிங்கரோ ப4வ**
**நித்யகிங்கரோ ப4வாநி**

பகவத் ராமாநுஜர், ஶரணாகதி கத்யம்

என்று ஸ்வாமி ராமனுஜரும் தம்முடைய கத்யத்தில் பல இடங்களில் கைங்கர்ய ப்ராப்தியைத்தான் வேண்டுகிறார்.

**கரீஶ! வர்தேயே ஸதா த்வதந்திகே ||**

கூரத்தாழ்வாம் , வ்ரதராஜ ஸ்தவம் 98

என்று கூரத்தாழ்வாரும் வரதராஜஸ்தவத்தில் உன்னை எப்பொழுதும் நினைத்துக் கொண்டு உன் பக்கத்திலேயே இருக்க வேண்டும் என்கிறார்

**ஒழிவில் காலம் எல்லாம் * உடனாய் மன்னி ***
**வழுவிலா * அடிமை செய்யவேண்டும் நாம் ***
நம்மாழ்வார், திருவாய்மொழி 3-3-1

என்றார் திருவாய்மொழியில் ஸ்வாமி நம்மாழ்வாரும்.

**மறம் சுவர் மதிள் எடுத்து * மறுமைக்கே வெறுமை பூண்டு**
**புறம் சுவர் ஓட்டை மாடம் * புரளும்போது அறிய மாட்டீர்**
**அறம் சுவராகி நின்ற * அரங்கனார்க்கு ஆட்செய்யாதே**
**புறம் சுவர் கோலஞ் செய்து * புள் கவ்வ கிடக்கின்றனரே**
தொண்டரடிப்பொடி ஆழ்வார், திருமாலை 6

“அரங்கனுக்கு பணியாமல் ஏன் அழியும் உடலுக்கு கொழுப்பு அளித்து வளர்க்கிறீர்கள்?” என்றார். அற்பமான, அழியும் உடலை நினைக்காமல், நித்யமாய் விளங்கும் எம்பெருமானுக்கு அழியாத உம்முடைய ஆத்மாவை ஸமர்ப்பியுங்கள் என்று மறைமுகமாக சொன்னார், தொண்டரடிப்பொடியாழ்வார், திருமாலையில்.

**தேஹாத்மான அபிமானிகளுக்கும்,**
**அத்ம ஸ்வரூபம் கைவந்த ரிஷிகளுக்கும்,**
**பர்வத பரமாணுவோட்டை வாசி போரும்**
பெரியவாச்சான் பிள்ளை, திருப்பாவைக்கு வியாக்கியனம்

என்ரு தேஹத்தையே ஆத்மா என்று எண்ணுகிற மனிதர்களே என்றார் பெரியவாச்சான் பிள்ளை.

ஸ்வாமி தேசிகன் ஸ்ரீமத் ரஹஸ்யத்ரய ஸாரத்தில், மூன்றாம் அதிகாரமாக பிரதான பிரதி தந்த்ரத்தில் ஸரீர ஆத்ம பாவத்தை பற்றி விவரமாக ஸாதித்திருக்கிறார். கிருஷ்ணன் பகவத் கீதையில் பதிமூன்றாம் அத்தியாயத்தில் இந்த ஸ்ரீர ஆத்ம பாவத்தைப் பரக்க உபதேசிக்கிறான்.

prapatti.com

**எனக்கே ஆட் செய் * எக்காலத்தும் என்று * என்**
**மனத்தே வந்து * இடைவீடின்றி மன்னி***
**தனக்கேயாக * எனைக் கொள்ளும் ஈதே ***
**எனக்கே கண்ணனை * யான் கொள் சிறப்பே**
நம்மாழ்வார், திருவாய்மொழி 2-9-4

என்று நம்மாழ்வார் "பகவானே! நீ எனக்கே அடிமை செய் என்று சொல்லி, என் மனத்திலே நிரந்தரமாக இருந்து அருளி என் உயிர் வாழும்படி செய்ய வேண்டும். நீர் என்னை உனக்கேயாய் ஆக்கி கொள்ள வேண்டும். அதைத்தான் நான் கிருஷ்ணனிடம் வேண்டிப் பெறும் பரம புருஷார்த்தம் என்றார்.

இந்த ஜீவாத்மாவின் ஸ்வரூபமே எம்பெருமானுக்கு பணி செய்து கிடப்பதே.

**பழுதின்றிப் பாற்கடல் வண்ணனுக்கே**
**பணிசெய்து வாழப் பெறாவிடில் நான்**
ஆண்டாள், நாச்சியார் திருமொழி 1-1-9

என்று ஆண்டாளும் **குற்றமிலா கைங்கர்யமே வாழ்ச்சி** என்றும் பெருமானிடம் அதை வேண்டினாள். அது கிடைக்காது போனால், உயிர் இருந்தால் என்ன? இல்லாவிட்டால் என்ன?

## 1-14 சாரீரக சாஸ்திரம்

எம்பெருமானார் தம்முடைய, உயர்ந்த ஸ்ரீபாஷ்யத்தில், பிரம்ம சூத்ர வியாக்யனத்தில் விசிஷ்டாத்வைத ஸித்தாந்தத்தின் உயிர்நாடியான சரீர-சரீரீ, தேஹம்-ஆத்மா, உயிர்-உடல் பாவத்தை நன்கு விளக்குகிறார். **வண்டி, மாடு, மாட்டுக்காரன்** - இந்த மூன்றின் தொடர்பும் (relationship) விசிஷ்டாத்வைதத்தைக் சுருக்கிக் காட்டும். இது **அசேதனம், சேதனன், எம்பெருமானை** காட்டுகிறது என்பர், ஆசாரியர்கள்.

prapatti.com

அத்வைதம், த்வைதம், விசிஷ்டாத்வைதம் என்கிற மூன்று மதங்களும் ஒன்று, இரண்டு, மூன்று என்கிறாற்போல

ஆங்கிலத்தில்
I am the God என்றது அத்வைதம்
I am of God என்றது த்வைதம்
I am for God என்றது விசிஷ்டாத்வைதம்

உடல் ஆத்மாவுக்கு வீடே தவிர உடலும் ஆத்மாவும் ஒன்றல்ல என்பதை தொண்டரடிப்பொடியாழ்வார் வலியுறுத்துகிறார். அந்த வீடும் எப்படிப்பட்டது? ஒட்டை உடைசல் இருக்கும் மாடங்கள் மாதிரி (broken houses) என்றார்.

**தரணியின் மன்னி அயனார் * தனித்தவம் காத்த பிரான் *
கருணை என்னும் கடலாடித் * திரு அணை கண்டதற் பின் *
திரள் நரகு எண்ணிய * சித்திரகுப்தன் தெரித்து வைத்த *
சுருணையில் ஏறிய சூழ்வினை முற்றும் துறந்தனமே**
**ஸ்வாமி தேசிகன், மெய்விரதான்மியம் 14**

எப்படி பகவானின் கருணை உள்ளம் நம்மை காக்கிறது என்பதை மெய்விரதான்மியத்தில் ஸ்வாமி தேசிகன் சொல்கிறார்

பிரம்மாவின் யக்ஞத்தை கலைக்க ஸரஸ்வதியே வேகவதி நதியாக மாறி ஆவேசத்துடன் வந்தாள் அதை அணையாகத் தடுத்த பகவான் நம்முடைய பெருமாள் **யதோத்தகாரி** என்னும் **சொன்ன வண்ணம் செய்த பெருமாள்**.

தெரிந்தோ, தெரியாமலோ, அந்த கோவில் சென்று பகவானை ஸேவித்து வெளியே வந்தான் ஒருவன். அவன் தலையில் அவனுடைய புண்ய பாப கணக்கு புத்தகத்தை (**ஸூருணை** - account ledger). சுக்கு நூறாக கிழித்து எறிந்தான் சித்திரகுப்தன் இனி இதற்கு அவசியமே இல்லை என்று.

இப்படி அந்த பகவானை ஒரு தடவை ஸேவித்தால் கூட போதும், நம்முடைய ஜந்மஜந்மாந்தர பாபங்கள் எல்லாம் விலகும் என்கிறார்கள்.

## 1-15 பாசுரத்தின உட்கருத்து

இந்த பாசுரத்தின் உட்கருத்தைப் **(ஸ்வாபதேசத்தை)** பார்க்கும்போது இது ஆசாரியனைக் குறிக்கிறது என்பதைக் காணலாம்.

**"ஓதும் இரண்டு"** என்பது ஸம்ஸ்கிருத, திராவிட வேதங்கள். **"பாதம் இரண்டு"** அந்த வேதங்களின் நுட்பமான பொருள்களை எல்லாம் அறிந்த ஆசாரியன் திருவடிகளைக் குறிக்கிறது.

அந்த ஆசாரியனை அடைந்தவனை அவர் **"போதும் என மீட்டி"** பிறப்பு இறப்பு சுழலிருந்து வெளியேற்றுகிறார். "**வாழும்**", மகிழ்ச்சியுடன் நீ பூலோகத்திலும் மோக்ஷ ஸாம்ராஜ்யத்திலும் வாழ்வாயாக என்று அருளுகிறார்.

நீதி என்ன என்றால் (What is the moral of the story?) **ஆசாரியன் ஸம்பந்தம் இருந்தால்தான் மோக்ஷ ப்ராப்தி,** இதை பல இடங்களிலும் நம் ஸம்ப்ரதாயம் ஆணித்தரமாக வலியுறுத்துகிறது.

## 1-16 த்வயத்திற்கு யார் ஆதிகாரி?

த்வயம் யார் சொல்லலாம் என்று கேள்வி? த்வயம் வேதத்தில் சொல்லப்படுள்ளது என்று முன்பே சொன்னோம். இங்கு ஒரு கேள்வி பிறக்கும். எல்லோரும் இந்த த்வயத்தை சொல்லலாமா? வேதங்களை அத்யனம் செய்வதற்கு சில வர்ண, கால நியதிகள் உண்டே! என்று கேட்கலாம்.

த்வயம் வேதத்தில் சொல்லப்படிருந்தாலும் இதை எல்லோரும் சொல்லலாம், அதன் வழியே பின் பற்றலாம். வேதங்கள் பல இடங்களில் பொதுவான தர்மத்தை சொல்லியிருக்கிறது. **"ஸத்யம் வத, தர்மம் சர"** "உண்மையே பேசு, நல்ல வழியில் செல்" என்றெல்லாம். எப்படி இவை எல்லோருக்கும்

பொருந்துகிறதோ (applicable to all) அதுபோல்தான் த்வயமும் என்று ஆசாரியர்கள் ஸாத்தித்தனர்.

> ஶ்ரீ ப்ரஶ்ந ஸம்ஹிதையிலும் வ்யாபக மந்திரங்களோடு (அஷ்டாக்ஷரம், ஷடக்ஷரம், த்வாதசாக்ஷரம்) சேர்ந்த ஶரணாகதி மந்திரங்களை உபதேசிக்கிற இடத்திலே திருவஷ்டாக்ஷர மந்திரத்தோடே சேர இம் மந்திரத்தையும் வர்ணோத்தாரம் பண்ணி (ஒவ்வொரு எழுத்தாக பொருள் சொல்வது) உபதேசித்தது.
>
> இப்படியால் இது ஶ்ருத்யபிமதமான (வேதத்திற்கு உகந்த) தாந்த்ரிக (ஸம்ஹிதையில் விளங்கும்) மந்திரம்.
>
> இதில் சொல்லுகிற ப்ரபதநம் (ப்ரபத்தி) ஶ்ரௌதமே (வேதத்தில் விதிக்கப் பட்டதே) ஆகிலும் ஸத்ய வசநாதிகள் போலே ஸர்வாதிகாரம் (எல்லோருக்கும் உரியது)"
>
> ஸ்வாமி தேசிகன், ஸார ஸாரம்

என்று ஸ்வாமி தேசிகன் ஸார ஸாரத்தில் ஸாதித்தார். இது வேத மூல தாந்திரிக மந்திரம். இதில் சொல்லும் ப்ரபத்தியில், எல்லோருக்கும் அதிகாரம் என்றார்.

prapatti.com

# 2 காரணம்

**ஆறும் பேறும் வேறின்றி * அவ்**
**வடியவர் அனைவரும் தமரின்றி ***
**விண்ணும் மண்ணும் பணிசெய்ய ***
**பன்னும் இவ்விரண்டும் திண்ணமே.**

**ஆறும் பேறும்** = உபாயமும், பலனும்
**வேறின்றி** = வெவ்வேறு என்று இல்லாது
**அவ்வடியவர்** = அந்த எம்பெருமானின் அடியவர்கள்
**அனைவரும்** = எல்லோரும்
**தமர் இன்றி** = தாம் மட்டுமே அடியவர்கள் என்று இலாது
**விண்ணும், மண்ணும்** = நித்ய விபூதியும், லீலாவிபூதியும்
**பணி செய்ய** = கைங்கர்யம் செய்ய
**பன்னும்** = அனுஸந்திக்கும் (உயர்ந்த மந்திரம்)
**இவ்விரண்டும்** = இந்த இரண்டு வாக்யங்களான த்வயம் (தான்) என்பது
**திண்ணம்** = நிச்சயம்

## 2-1 முன்னுரை

இரண்டாம் பாசுரம் ஆரம்பிப்பது ஆறும். முடிவது திண்ணமே. த்வயம் ஏன் உயர்ந்தது என்றால் அது ஶரணாகதியை தெளிவாக காட்டுகிறது. ஆறும் என்று உபாயத்தை (means) சொல்கிறது. திண்ணமே என்று நிச்சயம் (definite) பலனைத் தரும் என்பதை வலியுறுத்துகிறது.

ப்ரபத்தியே உயர்ந்த உபாயம் என்பதை த்வயம் விசதமாகக் காட்டுகிறது. அதனால்தான் அது மந்திர ரத்னம். ஶரணாகதி மந்திரம், லக்ஷ்மீ மந்திரம். எல்லோராலும் அனுஸந்திக்க சுலபமானது. பலனோ நிச்சயமானது.

prapatti.com

## 2-2 த்வயத்தின் இரண்டு வரிகள்

**திருமந்திரத்திலே பிறந்து, த்வயத்திலே வளர்ந்து த்வய நிஷ்டராவீர் என்கிற பூர்வர்கள் பாசுரத்தின்படியே ப்ரதம ரஹஸ்யத்தில்** (திருமந்திரத்தில்) **ஸ்வ-ஸ்வரூப** (சேதனனான தன்னுடைய இயல்பு) **பர-ஸ்வரூபாதிகளை** (எம்பெருமானுடைய இயல்பு) **அறிந்தவனுக்குப் ப்ரதத்துவமான ஶரண்யனையும் பரம ஹிதமான ஶரணாகதியையும் பரம புருஷார்த்தமான தத்- கைங்கர்யத்தையும் விசதமாக்கிக்** (தெளிவாக்கிக்) **கொண்டு ப்ரபத்தி அனுஷ்டான ப்ராகாரத்தைப் ப்ரதாநமாக பிராகாசிப்பிக்கிறது த்வயம்.**

**பூர்வ உத்தர வாக்யங்களாலே** (முன், பின் பகுதி) **உபாய-உபேயங்களைத்** (ப்ரபத்தியையும், மோக்ஷத்தில் அநுபவிக்கும் நித்ய கைங்கர்யத்தையும்) **தெளிவிப்பிக்கையால் இதற்கு த்வயம் என்ற பேர் ஆயிற்று.**

ஸ்வாமி தேசிகன் ரஹஸ்யத்ரய சுளகம்

“ஆசாரியனால் திருமந்திரம் உபதேசிக்கப் சேதனன், தன் ஸ்வரூபம், எம்பெருமான் ஸ்வரூபம் இவற்றைப் பற்றிய ஞானம் உண்டாகி விவேகம் பெறுவதால், அவனுக்கு புதிய பிறவி உண்டாகிறது.

திருமந்திரத்தின் அர்த்தங்களை விவரணமாக்குகிறது த்வயம். **எம்பெருமானே ரக்ஷகன், கைங்கர்யமே உயர்ந்த புருஷார்த்தம், ப்ரபத்தியே சிறந்த உபாயம்** என்பதை தெளிவாக காட்டுகிறது. ஶரணாகதியால் பெறும் வளர்ச்சியே த்வயத்தில் வளருவது.

ப்ரபத்திக்குபின், ஸதா த்வயத்தையே அநுஸந்தானம் செய்து கொண்டு வேறு உபாயமோ, பலனோ நினையாது, த்வயம் காட்டிய ஶரணாகதியிலும், பகவத் பாகவத ஆசார்ய கைங்கர்ய பலனிலும் மிகுந்த ஆசையுடன் இருப்பது த்வய நிஷ்டராவது.

இந்த த்வயம் இரண்டு பகுதிகளை உடையது. முதலில் ஶரணாகதி எனும் உபாயத்தையும், பின் கைங்கர்யமாகிற பலனையும் விளக்குவதால் த்வயம் (இரட்டை) என்ற பெயர் பெற்றது" என்றார் தேசிகன்.

**இதில் முற்கூற்றால் பெரிய பிராட்டியாரை முன்னிட்டு ஈச்வரன் திருவடிகளை உபாயமாகப் பற்றுகிறது;**
**பிற்கூற்றால் அச்சேர்த்தியில் அடிமை இரக்கிறது**
பிள்ளைலோகாசாரியார், முமுக்ஷுப்படி 122

என்று பிள்ளைலோகாசாரியர் த்வயத்தின் இரண்டு வாக்யங்களின் அர்த்தங்களை சுருங்கச் சொன்னார்.

## 2-3 த்வயத்தில் உபாயமும் பலனும்

**ஆறும் பேறும் வேறு இன்றி**

வழியும், பலனும் ஒன்றே (means and ends are the same) என்கிற ரீதியில் இரண்டு வாக்கியங்களும் அமைந்திருக்கின்றன.

**ஆறு என்பது வழி, உபாயம், ஸாதனம், ப்ராபகம்** என்று சொல்லலாம். உபாயம் என்று சொல்லக்கூடியவை எல்லாம் பகவானுடைய திருவடிகளைத்தான் காண்பிக்கின்றன.

**பேறு என்பது பலன், புருஷார்த்தம், ஸாத்யம், உபேயம், ப்ராப்யம், மோக்ஷம்** என்பது. பேறு என்பது இங்கு துன்பமே கலவாத, எப்போதும் நிறைந்திருக்கும், அநந்தமான ஆனந்தம் தரும் மோக்ஷ ஸாம்ராஜ்யத்தை சொல்லுவது.

மற்ற பலன்கள் எல்லாம் அழியக்கூடியவை. துன்பத்தையே தரக் கூடியவை. எம்பெருமானார் ஸ்ரீபாஷ்யத்தில் மற்ற பலன்களை **"அல்பாந்தர அஸ்திரபலாத்"**

என்று மட்டமானவை, நிலையற்றவை என்று கூறி விலக்குகி ப்ரம்மத்தை விசாரிக்க வேண்டும் என்று விளக்குகிறார்.

## 2-4 ஆசார்யன் திருவடிகளே உயர்ந்தவை

ஆசாரியர்கள் பகவானைக் காட்டி கொடுக்கின்றனர். அதனால் அவர்கள் பகவானை விட உயர்ந்தவர்களாகின்றனர் என்பர் முன்னோர். ஆக ஆசாரியனே மேலான தெய்வம், ஸாதனம், உயர்ந்த மந்திரம், விரும்பும் பொருள், எல்லாம்.

அந்த ஆசாரியர்களின் திருவடிகளே பரம புருஷார்த்தம் என கிடப்பதே அறிவில்லாத சேதனன் செய்யக் கூடிய அல்பமான காரியம்.

> **பேறு ஒன்று மற்று இல்லை நின் சரணன்றி *அப்பேறு அளித்தற்கு**
> **ஆறு ஒன்றுமில்லை மற்றச் சரணன்றி ***
> திருவரங்கத்தமுதனார் ஸ்ரீராமனுஜ நூற்றந்ததி 45

என்று திருவரங்கத்தமுதனார் இராமநுச நூற்றந்தாதியில் ஸாதித்தார்.

“எம்பெருமானாரே, புருஷார்த்தம் என்பது உமது திருவடிகளைத் தவிர மற்ற ஒன்றும் இல்லை.  அந்த புருஷார்த்தத்தை தருவதற்கு உபாயமும் அந்த திருவகள்தாம், அது தவிர மற்று ஒன்றுமில்லை,” என்கிறார்.

இப்படி திருவடியே உபாயமமும், உபேயமும்; ஆறும், பேறும்; வழியும், பலனும்; ஸாதனமும், ஸாத்யமும்; ப்ராபகமும், ப்ராப்யமும் (means and ends), நெறியும், குறியும் ஆகும்

> **அநுகல்ப பூ$_4$த முரபி$_4$த் பத$_3$ம் ஸதாம்**
> **அஜஹத் த்ரிவர்க$_3$ம் அபவர்க$_3$ வைப$_4$வம் ।**
> **சல சித்த வ்ருத்தி விநிவர்தந ஔஷத$_4$ம்**
> **ஶரணம் யதீந்த்$_3$ர சரணம் வ்ருணீமஹே ।।**
> ஸ்வாமி தேசிகன், ஸ்ரீயதிராஜஸப்ததி 20

என்று எம்பெருமான் திருவடிகளைவிட எம்பெருமானார் திருவடிகளே உபாயமாகவும், மிக்க போக்யமான உபேயமாகவும் இருக்கும் என்கிறார்.

**(ஸதாம்)** அறிஞர்களுக்கு, **(முரபி₄த் பத₃ம்)** பகவான் திருவடிகள், **(அநுகல்ப பூ₄த)** முக்கியத்துவத்தை இழந்து இரண்டாம் விருப்பமாகியது (secondaray only).

ஏன் என்றால் **(யதி இந்த்₃ர சரணம்)** யதிராஜனரான எம்பெருமானார் திருவடிகள், **(அஜஹத் த்ரிவர்க₃ம்)** அறம், பொருள், இன்பம் ஆகிய மூன்றையும் கைவிடாமல், **(அபவர்க₃ வைப₄வம்)** மோக்ஷ ஆநந்தத்தை தரக்கூடியதாய் **(சல சித்த வ்ருத்தி)** அலை பாயும் மனநிலையை **(விநிவர்தந ஔஷத₄ம்)** போக்கக்கூடிய மருந்து. அதனால் அந்த திருவடிகளை (**ஶரணம் வ்ருணீமஹே**) ஶரணம் என்று அடைகிறோம்," என்றார்.

அதாவது, மோக்ஷம் என்று ஒரு தனிப் பலனைக் கூட விரும்பி செய்யாமல், எம்பெருமானார் திருவடிகளை அனுபவிப்பதே அந்த மோக்ஷம் போல் இருக்கும்.

## 2-5 ஆசார்யன் திருவடிகள் பற்றுகைக்கு சுலபமானவை

> **ஈச்வரனைப் பற்றுகை - கையைப் பிடித்துக் காரியம் கொள்ளும் உபாதி; ஆசார்யனைப் பற்றுகை காலைப் பிடித்து காரியும் கொள்ளும் உபாதி.**
>
> பிள்ளைலோகாசாரியார், ஸ்ரீவசன பூஷணம் 430

ஆசாரியனை அடைக்கலமாய் அடைவது எம்பெருமான் திருவடிகளைப் பிடித்துக் காரியத்தை ஸாதித்துக் கொண்டாற்போலே. ஆனால் எம்பெருமான் திருவடிகளை நேராக பற்றுவது அவன் கையை பிடித்து காரியம் கொள்வது போலே. காலை பிடிப்பதால் கருணை சுரந்து காரியம் சுலபமாய் நிறைவேறும்.

ஆசாரியன் பகவானிடம் ஆத்மாவை கொண்டு சேர்க்கிறான். ஜீவனுக்கு பகவானைக் காட்டி பரம புருஷார்த்தத்தை அடைய வைக்கிறான். இரண்டு பேருக்கும் பேருபகாரம் செய்பவன் ஆசார்யன் ஒருவனே. (Acharyas are the sole liaison agents).

**தாமரையை அலர்த்தக் கடவ ஆதித்யன்தானே நீரைப் பிரிந்தால் அத்தை உலர்த்துமாபோலே, ஸ்வரூப விகாஸத்தைப் பண்ணும் ஈச்வரன்தானே ஆசார்ய ஸம்பந்தம் குலைந்தால் அத்தை வாட்டப் பண்ணும்.**

பிள்ளைலோகாசாரியார், ஸ்ரீவசன பூஷணம் 442

பகவான் என்பது சூரியன் போலே. ஜீவன் என்பது தாமரை மலர் போலே. சூரியன் எதிரே இருந்தாலும், அந்த தாமரை, ஆசார்யன் என்ற நீரில் கிடந்தால்தான் மலரும். அந்த நீர் இல்லாவிடில் கருகிப்போகும்.

**ஆசார்ய ஸம்பந்தம் குலையாதே கிடந்தால் ஜ்ஞாந பக்தி வைராக்யங்கள் உண்டாக்கி கொள்ளலாம்; ஆசார்ய ஸம்பந்தம் குலைந்தால் அவை உண்டானாலும் ப்ரயோஜநமில்லை.**

பிள்ளைலோகாசாரியார், ஸ்ரீவசன பூஷணம் 440

ஆசார்ய ஸம்பந்தம் இல்லாவிடில் ஞானம், வைராக்யம், பகவான் எல்லாம் இருந்தும் ப்ரயோஜனமில்லை.

**ஈச்வர ஸம்பந்தம் பந்த மோக்ஷங்கள் இரண்டிற்கும் பொதுவாய் இருக்கும்; ஆசார்ய ஸம்பந்தம் மோக்ஷத்திற்கே ஹேதுவாய் இருக்கும். பகவத் லாபம் ஆசார்யனாலே. ஆசார்ய லாபம் பகவானாலே.**

பிள்ளைலோகாசாரியார், ஸ்ரீவசன பூஷணம் 436-438

என்று பிள்ளைலோகாசாரியார் ஸாதித்தார். பகவான் கர்ம வினைகளுக்கு ஏற்ப ஸம்ஸாரத்தையோ, மோக்ஷத்தையோ கொடுப்பான். ஆனால் ஆசாரியர்களோ மோக்ஷம் ஒன்றிற்கே வழியாய் உள்ளனர். பகவானே நமக்கு ஆசாரியனை அடைய வழி செய்தாலும், அந்த ஆசாரியன்தான் பகவானையே காட்டி கொடுக்கிறான்.

prapatti.com

அதனால்தான் ஸ்ரீராமஜயம் எழுதுவதைவிட ஸ்ரீமதே ராமானுஜாய நம: என்று எழுதுவது, சொல்வது, நினைப்பது மிகவும் சிறந்தது என்பது நம் ஆசாரியர்களின் வாக்கு. மனம் சஞ்சலத்தில் தவிக்கும்போது, ஆசாரியனுடைய திருவடிகளைவிட தஞ்சம் வேறு ஒன்றுமில்லை என்று முன்னோர்கள் வழி காட்டியுள்ளார்கள்.

## 2-6 ஆசார்யன் திருவடிகளே உபாயம், உபேயம்

**தத்துவங்கள் எல்லாம் * தகவால் அறிவித்து *
முத்தி வழி தந்தார் மொய்கழலே * அத் திவத்தில் *
ஆரமுதம் ஆறாம் * இரு நிலத்தில் என்று உரைத்தார் *
தார முதல் ஓதுவித்தார் தாம்**

**ஸ்வாமி தேசிகன், அமிருத ரஞ்சனி 9**

ஆசாரியர்கள், ப்ரணத்தை முதலாக கொண்ட ரஹஸ்யங்களைக் கொண்டு தத்வங்களின் ஸ்வரூபம், ஸ்வாபாவம் இவற்றைக் காட்டினர். புருஷார்த்தத்திற்கு ஹிதம் என்னும்படி, மோக்ஷோபாயமான ப்ரபத்தியை கருணையால் அருளினர். அந்த ஆசாரியன் திருவடிகளே பரமபதத்தில் பலனும், அகண்ட இந்த பூலோகத்தில் உபாயமும் என்று ஆசாரியன் திருவடிகளே உபாய உபேயம், இதுதான் நம்முடைய ஆசாரியர்களின் உபதேசங்களின் ஸாரம் என்று ஸ்வாமி தேசிகன் ஸாதித்தார்.

## 2-7 திருவடிகள் பெற திருவடிகளே வழி

இவ்விதம் ஆசாரிய முகமாக, எம்பெருமானை அடையும்போது, எம்பெருமானே வழியாகவும், பலனாகவும் ஆகிறான்.

**திருமால் அடியிணையே * திண் சரணாகக் கொண்டு *
திருமால் அடியிணையே சேர்வார் *- ஒரு மால்**

prapatti.dot.com

**அருளால் அருளாத * வானோர்கள் வாழ்ச்சி *
அருளால் நமக்கு அளித்தார் ஆய்ந்து.**
ஸ்வாமி தேசிகன், அமிருதரஞ்சனி 37

என்று ஶ்ரிய: பதியான லக்ஷ்மீ நாராயணனின் இரண்டு திருவடிகளையும் உபாயம் என்று உறுதியாக பற்றியவர்கள் அந்த ஸ்ரீமந் நாராயணனின் திருவடிகளையே பலனாக அடைவார்கள்.

அந்த ஒப்பற்ற எம்பெருமான் இது காலம் வரைக்கும் தம் கருணையால் அளிக்காத நித்யஸூரிகளின் போகத்தை, தம்முடைய பொங்கும் கருணையாலே நன்கு ஆராய்ந்து நமக்கு அனுக்கிரஹீத்தார், இன்று. இங்கே முதல் இரண்டு வரிகளும் சுருக்கமாக த்வயத்தையே சொல்கின்றன.

**பெற்றனை நீயே மற்றுள எல்லாம்
பெறுவது நின்னை உறுவது கொள்வார்**
ஸ்வாமி தேசிகன், மும்மணிக்கோவை 10

என்று பகவானே! நீயே எல்லாப் பொருள்களையும் (சேதன, அசேதனங்களை) படைத்தாய். உன்னையே உபாயமாக உறுதியுடன் பற்றுபவர்கள் உன்னையே பெறுவார்கள் என்று சுருங்க காண்பித்தார், ஸ்வாமி தேசிகன் மும்முணிக் கோவையில்.

**புல்லைக்காட்டி அழைத்துப் புல்லையிடுவாரைப்போலே**
பிள்ளைலோகாசாரியர், ஸ்ரீவசன பூஷணத்தில் (141)

என்று ஸ்ரீவசன பூஷணத்தில் பிள்ளைலோகசாரியரும் உபாயமும் உபேயமும் ஒன்றே என்று ஸாதித்தார்.

பசு மாட்டை ஒருவன் புல்லைக் காட்டி “வா வா” என்று அழைக்கிறான். அந்த மாடும் புல்லையே பார்த்துக் கொண்டே வருகிறது. அதற்கு வழிகாட்டி புல். தொழுவத்திற்கு வந்தவுடன், அந்த புல்லையே உணவாக இடுகிறான், மீதி ஒன்றையும் அல்ல. அந்த இடத்தில் புல் மாட்டிற்கு பலன்.

இங்கே யானையை மற்றொரு உதாரணமாக காட்டலாம். யானை மேல் ஒருவன் உட்கார்ந்து சவாரி செய்ய வேண்டும். அது அவனுக்கு பலன். அதற்கு யானை வேண்டும். சரி, எப்படி அந்த யானையின் மேல் ஏறி உட்காருவதற்கு வழி என்ன? என்றால் அதற்கும் அந்த யானைதான் காரணம்.

யானை தன் முன்கால்களை மடக்கி, அவன் ஏறுவதற்கு உபாயமாய் குனிந்து கொடுக்கிறது. அப்பொழுது அந்த யான உபாயமாகிறது. ஏறி உட்கார்ந்தவுடன் சவாரி செய்யும்போது பலனாகிறது. இரண்டிற்கும் அந்த யானைதான்.

**திருவடியை நாரணனைக் * கேசவனைப் பரஞ்சுடரை *
திருவடி சேர்வது கருதிச் * செழுங்குருகூர்ச் சடகோபன் *
திருவடி மேல் உரைத்த தமிழ் * ஆயிரத்துள் இப்பத்தும் *
திருவடியே அடைவிக்கும் * திருவடி சேர்ந்து ஒன்றுமினே**
நம்மாழ்வார், திருவாய்மொழி 4-9-11

என்று நம்மாழ்வார் “இந்த பத்து திருவாய்மொழிகளை கற்றவர்கள் எம்பெருமானின் திருப்பாதங்களை பணிவர். அந்த எம்பெருமானின் திருவடிகளைப் பற்றினால் என்ன கிடைக்கும்? என்றால் அந்த திருவடிகளே கிடைக்கும்” என்றார்.

பகவானின் திருவடி பற்றினால் அந்த திருவடியே கிடைக்கும். திருவடியே உபாயம். அதுவே பலன். எம்பெருமான் திருவடிகளில் ஒன்றுவது என்பது, பாதே ரேகை போலே பிரிக்க முடியாதபடி சேர்ந்து இருத்தல் என்பர் ஆசாரியர்கள்.

## 2-8 இன்னொரு வழியோ பலனோ நினையாது

ஆறும் பேறும் வேறு இன்றி என்பதை வேறு ஆறும் பேறும் இல்லாமல் என்று பொருள் கொள்ளும்போது, இதைத் தவிர வேறு வழியோ, பலனோ நினைக்காமல் என்றும் கொள்ளலாம்.

prapatti.com

**ஆறு பயன் வேறில்லா அடியவர்கள் அனைவர்க்கும்**
**ஸ்வாமி தேசிகன் அடைக்கலப்பத்து 11**

அடைக்கலப்பத்தில் ஸ்வாமி தேசிகன் அருளும்போது வேறு எதுவும் இல்லா ஆறு, பயன் எனக் கொள்ள வேண்டும். அதாவது, எம்பெருமானைத் தவிர வேறு உபாயமும், பலனும் இல்லாத அடியவர்கள் அனைவருக்கும் என்றார்.

**ஸ்வாதீ4ந அசேஷ ஸத்தா ஸ்தி2தி யதந ப2லம்**
**வித்3தி4 லக்ஷ்மீசமேகம்**
**ப்ராப்யம் ந அந்யம் ப்ரதீயா ந ச சரணதயா**
**கஞ்சித்3 அந்யம் வ்ருணீயா: ।**
**ஸ்வாமி தேசிகன் ந்யாஸ விம்சதி 4**

“தனக்கு வசப்பட்ட, ஸகல விதமான சேதன, அசேதன வஸ்துக்களின் ஸ்வரூபம், தொடர்ந்து நிற்றல், அவற்றின் முயற்சி, பலன் இவற்றை எல்லாம் நடத்துகிறவன் ஸ்ரீமந் நாராயணன் என்பதை அறிவாய். அடைய வேண்டிய பலனாக வேறு ஒருவனையும் கருதாமல் இரு. உபாயமாக வேறு ஒருவனையும் வரிக்காதே,” என்றார். அந்த பிராட்டிக்கு நாயகனான நாராயணனைத் தவிர வேறு உபாயமில்லை. அந்த எம்பெருமானைத் தவிர மற்றோரு பலன் இல்லை என்பதை ஆணித்தரமாக அறிவித்தார்.

பகவானே! உன்னைத்தவிர வேறு ஒரு புருஷார்த்தத்தை யாசிக்க மாட்டேன். அதுவும் உன்னையே உபாயமாகக் கொண்டு பெறுவேனேத் தவிர இன்னொருவரைப் பற்றி பெற மாட்டேன். இதுதான் கருத்து (moral).

மற்ற ஸாதனங்கள் செய்வதற்கு அரிது, முழுமையாக செய்ய முடியாமை, அதற்கு நடுவில் பல தடைகள், அதை நீக்கி முடித்தாலும் எம்பெருமானின் ப்ரஸாதத்தை எதிர் நோக்கி இருப்பவையாய் இருப்பதால் அவற்றை எல்லாம் விலக்கி “மாம் ஏவ யே ப்ரபத்யந்தே” என்று கண்ணன் கூற்றின்படி, உன் திருவடிகளையே தஞ்சம் என அடைந்தேன்.

முழுமையாகத் தன்னை பகவானிடம் ஒப்படைத்தலே சரணாகதி (Total, unconditional surrender). இதில் வேறு நெறி அறியாமையும், வேறு தெய்வம் அறியாமையுமே. வேறு பலன் வேண்டாமையுமே ப்ரபத்திக்கு முதல் தகுதி.

(The primary qualification is void of other means, void of other Gods and void of other rewards).

**துயரமும் (Despair), துடிப்புமே (Restlessness), ஏக்கமுமே (Yearning) ப்ரபத்திக்கு அடிப்படை.**

## 2-9 அடியவர் அனைவரும்

அடியவர் அனைவரும் என்று எல்லோரையும் சொல்கிறது. மனிதர்கள், விலங்குகள், தேவர்கள், நித்ய ஸூரிகள் எல்லோருமே. அனைவரும் "தாம்" என்று இன்றி. **(நம:).**

**கண் ஆவான் என்றும் * மண்ணோர் விண்ணோர்க்கு *
தண்ணார் வேங்கட * விண்ணோர் வெற்பனே**
நம்மாழ்வார், திருவாய்மொழி 1-8-3

இந்த பிராகிருத லோகத்தில் இருப்பவர்கள் பக்தர்கள். மோக்ஷ ஸாம்ராஜ்யத்தில் எப்பொழுதும் பகவானுக்கும் பிராட்டிக்கும் கூடி இருந்து கைங்கர்யம் செய்து மகிழ்பவர் முக்தர், நித்யர். இவர்களிடையே வித்யாஸம் பாராட்டாமல், ஒரே மாதிரியாய் கண் போல இருப்பவன். அவர்கள் அனைவரும் கைங்கர்யம் செய்வதற்கே தன்னை கொடுத்தவன்.

## 2-10 தமர் இன்றி

இந்த பாசுரத்தில் தாம் என்று சொல்லாமல் தமர் என்று சொன்னது ஒரு விசேஷம். தான், தனது என்ற அகங்கார மமகாரங்கள் கழிய வேண்டும் என்பது மிக முக்யம்.

பக்தர்கள், பாகவதர்கள் ப்ரபன்னர்கள் இவர்களிடையேயும் இந்த அகங்கார மமகாரங்கள் ஒரு சமயம் தலை எடுக்கும்.

“நான்தான் பகவானுக்கு அடியவன். நான் உயர்ந்த அடியவன். நான் சாமரம் வீசுவேன். நீ வாசலில் காக்க வேண்டும். எனக்கு உயர்ந்த கைங்கர்யம். உனக்கு கொஞ்சம் மட்டமான கைங்கர்யம்” என்ற எண்ணமே, சிந்தனையே வராதாம் மோக்ஷத்தில். ஏன் என்றால் ஸத்வ குணம் நிரம்பிய இடமாயிற்றே. தமோ ரஜோ குணங்களுக்குக் இடமே கிடையாது அங்கே.

ஆனால் பூலோகத்தில் அப்படி இல்லை. ப்ரகிருதி ஸம்பந்தமானதால் முக்குண மாயை என்று ஸத்வ, ரஜோ, தமோ குணங்கள் மாறி, மாறி ஆதிக்கம் செலுத்துவதால், இந்த நினைவும் வரக் கூடும். **“தமர் இன்றி”** என்று சொன்னது அந்த நினைவு வராமல் என்று பொருள்.

அதனால்தான் குலசேகராழ்வார்

> **த்வத்$_3$ ப்$_4$ருத்யப்$_4$ருத்ய பரிசாரக ப்$_4$ருத்யப்$_4$ருத்ய ।**
> **ப்$_4$ருத்யஸ்ய ப்ருத்ய$_4$ இதி மாம் ஸ்மர லோக நாத$_2$ ।।**
> குலசேகராழ்வார், முகுந்த மாலை 27

என்று தன்னை அடியவருக்கு அடியன் என்று ஏழு தலை முறை சென்னார்.

## 2-11 அனைவரும் பணி செய்ய

> **மந்தி பாய் * வட வேங்கட மாமலை * வானவர்கள், -**
> **சந்தி செய்ய நின்றான் * அரங்கத்து அரவின் அணையான், ***
> **அந்தி போல் நிறத்தாடையும்*அதன்மேல் அயனைப் படைத்ததோர் எழில் ***
> **உந்தி மேலதன்றோ * அடியேன் உள்ளத்து இன்னுயிரே**
> திருப்பாணாழ்வார், அமலனாதிப்பிரான் 3

என்று அமலனாதிபிரானில் நம் பாணநாதன் திருவரங்கனைப்படும்போது, எம்பெருமான் திருவேங்கடமுடையானாய் மேலே விண்ணில் இல்லாமலும்,

கீழே பூமியில் இல்லாமலும் நடுவே திருமலையில் நின்றது எதற்கு? இறுமாந்திருந்த வானவர்களை கீழே இறக்கவும், நொந்து கிடந்த மண்ணவர்களை கை கொடுத்து மேலே ஏற்றவும் என்பர் நம் முன்னோர்கள்.

**ஈசன் வானவர்க்கு * என்பன் என்றால் * அது**
**தேசமோ * திரு வேங்கடத் தானுக்கு ***
நம்மாழ்வார், திருவாய்மொழி 3-3-4

என்று நம்மாழ்வாரும் திருவாய்மொழியில், பகவான் பரமபதத்தை விட்டு திருமலையில் வந்து நின்றது பூலோகத்து ஜீவராசிகள் எல்லாம் வணங்கி வழிபட என்றார்.

**இங்கும் அங்கும் * திருமால் அன்றி இன்மை கண்டு ***
**அங்ஙனே வண்குருகூர்ச் * சடகோபன் ***
**இங்ஙனே சொன்ன * ஓராயிரத்து இப்பத்தும் ***
**எங்ஙனே சொல்லினும் * இன்பம் பயக்குமே.**
நம்மாழ்வார், திருவாய்மொழி 7-9-11

என்று திருவாய்மொழியில் "இந்த உலகத்தில் ஆஸ்ரயிக்கும் காலத்தில் பகவானை வணங்குவதோ, மோக்ஷ ஸாம்ராஜ்யத்தில் நித்ய கைங்கர்யத்தில் மகிழ்வதோ, த்வய மந்தரத்தின் பொருளான ஸ்ரீமந் நாரயணனைவிட யாருமில்லை. இந்த திருவாய்மொழியை எப்படி படித்தாலும், ஓதினாலும் பகவானை அனுபவிக்கும் இன்பம் உண்டாகும்," என்றார்.

**எங்கும் சுத்தி ரங்கனை ஸேவி"** என்பர், ஸ்ரீரங்கத்தைப் பற்றி. எந்த இடத்திற்கு போனாலும் அங்கே இருப்பவன் ரங்கநாதேனே என்ற பொருளில். அதுபோல் ப்ரக்ருதி லோகத்திலோ, பரமபதத்திலோ அந்த திருமாலாகிற எம்பெருமானனைத் தவிர எதுவுமே இல்லை என்கிறார், இங்கே.

பற்றுவதற்கு உகந்தவன் (**ஆஶ்ரயணியன்**), பலனாய் இருப்பவன் (**போக்யன்**) - உபகாரகன், உபேயன் - இரண்டும் இவன் ஒருவனே. இந்த தத்துவம் எல்லோருக்கும் பொதுதான். ஆனால் மற்றவர்கள் மறந்து விடுகின்றனர். சடகோபன் மறக்காமல் அனுஷ்டித்து சொன்னார்.

## 2-12 பன்னும்

பன்னும் என்பது சொல்வது, உச்சாரணம் என்ற பொருள்.

> **சொல்லும் தனையும் தொழுமின், விழும் உடம்பு ***
> **செல்லும் தனையும் திருமாலை * - நல்லிதழ்**
> **தாமத்தால் வேள்வியால் தந்திரத்தால் மந்திரத்தால் ***
> **நாமத்தால் ஏத்துதிரேல் நன்று**
>
> பொய்கையாழ்வார், முதல் திருவந்தாதி 70

என்று பொய்கையாழ்வார் எம்பெருமானை ஒரு தடவை அஸ்ரயித்து விடுங்கள். பூமாலை ஸமர்பிக்கலாம், யஜ்ஞ யாகங்கள் செய்யலாம். மந்திரங்க்ள் உச்சரிக்கலாம். மந்திரமில்லாமல் வெறும் க்ரியைகளாய் செய்யலாம். ஒன்றும் முடியாவிட்டால், பகவான் நாமாக்களையாவது வாயால் சொல்லலாம்.

பகவந் நாம ஸங்கீரணத்திற்கு தேஸ, கால, யோக்யதா நியதிகள் கிடையாதே. இந்த த்வயம் பகவான் திருநாமத்தைப் போலே அவ்வளவு சுலபமானது. அதை இந்த அல்ப, அஸ்திரமான சரீரம் விழும்வரை சொல்லவும் என்றார் பொய்கையாழ்வார்.

ஸ்மரணம், சிந்தனம் என்பவை ஒரு பொருளை நினைத்தல். இது நீடித்து இருந்தால் அதை த்யானம் என்கிறோம். அநுஸந்தானம் என்பது முன்னோர் மொழிந்தவற்றை முறையுடன், அர்த்தத்துடன் படிப்பது. பின் பற்றுவது.

ரிஷிகள், ஆழ்வார்கள், ஆசாரியர்கள் அருளியவற்றை அநுஸந்தானம் செய்யும்போது சிந்தனம், த்யானம் எல்லாம் ஏற்பட்டு விடுகிறது. அதனால் ஸ்ரீவைஷ்ணவர்களுக்கு அநுஸந்தானம் அவசியம்.

அதனால் த்வயத்தை நன்கு தெரிந்து, பொருளை அறிந்து, க்ரமத்துடன் அனுஷ்டித்து, நடைமுறையில் பின்பற்றி, கவலையின்றி, சந்தேகமின்ரி,

சாஸ்திர விதிமுறைப்படி, பகவத் பாக்வத ஆசார்ய கைங்கர்யங்களுடன், சந்தோஷத்துடன் இருப்பதை “பன்னும்” என்பது காண்பிக்கிறது.

## 2-13 இவ்விரண்டும்

அதாவது த்வயத்தில் அநுஸந்திக்கும் இந்த இரண்டு வாக்கியங்களும் திண்ணம். நிச்சயம், திடம், உறுதி என்று. எது நிச்சயம்?

ரஹஸ்ய த்ரயத்தில், அஷ்டாக்ஷர மந்திரமும், சரம ஸ்லோகமும் இருள் தருமா ஞாலமாகிய இந்த பூலோகத்தில் உபதேசிக்கப்பட்டது.

அஷ்டாக்ஷர மந்த்ரம் பகவான் ஸ்ரீமந் நாராயணன் பதரிகாசிரம க்ஷேத்ரத்தில் தானே நரனாக அவதரித்து தனக்கு தானே உபதேசம் செய்தது. சரம ஸ்லோகமோ தர்ம க்ஷேத்ர யுத்த களத்தில் பகவான் ஸ்ரீகிருஷ்ணன் தேரில் சாரதியாக அமர்ந்து பார்த்தனுக்கு உபதேசித்தது.

ஆனால் த்வய மந்த்ரமோ ஸ்ரீமந் நாராயணன் லக்ஷ்மிக்கு ஸ்ரீவைகுண்டத்தில் உபதேசித்தது. அதனால் இதில் சொல்லப்படுகிற உபாயம், பலன் இரண்டும் நிச்சயம்

**“விண்ணும் மண்ணும் இவ்விரண்டிற்கும் பணிசெய்ய ”.**

என்று மாற்றி சொல்லுங்கால், இவ்விரண்டிற்கும் பணி செய்ய என்பது, மிதுனமாகிய எம்பெருமான், பிராட்டி இருவருமே உபேயம் என்று காட்டுகிறது. த்வயத்தின் பின்பகுதியில் ஸ்ரீமதே நாராணாய என்பதக் காட்டும்.

## 2-14 திண்ணமே



prapatti dot com

எது நிச்சயம் என்றால், எம்பெருமானை சரண் அடைந்தவர், பிராட்டி புருஷகாரத்துடன் சரண் அடைந்தவர், ஆசாரிய முகமாக இந்த அடைக்கலம் செய்தவர், த்வய அநுஸந்தானத்துடன் செய்தவர்களுக்கு பலன் நிச்சயம்.

இந்த ப்ராப்தியை ஒரு வேளை, பகவானே மனம் மாறி மோக்ஷம் கொடுக்க வேண்டாம் என்றாலும் மாற்ற முடியாது. (Lord's promise on granting moksham is binding and irrevocable. Even He can't change it later).

**திண்ணம் நாம் அறியச் சொன்னோம் * செறிபுழில் அனந்தபுரத்து ***
**அண்ணலார் கமலபாதம் * அணுகுவார் அமரர் ஆவார்**
நம்மாழ்வார், திருவாய்மொழி 10-2-5

என்று திருவனந்தபுரத்து பத்மநாபஸ்வாமியின் தாமரை மலர் போன்ற திருப்பாதங்களையே ஶரணாக புகுந்தவர் நித்யஸூரிகள் ஆக ஆவார்கள், இது உறுதி," என்றார் நம்மாழ்வார்.

ஸ்வாமி நம்மாழ்வாரும் வெறும் மாலை சரண் அடையவில்லை. திருவுடன் கூடிய திருமால், பிராட்டியுடன் கூடிய எம்பெருமானையே சரண் புகுகிறார்.

**ஒண்டொடியாள் திருமகளும் * நீயுமே நிலாநிற்ப ***
**கண்ட சதிர் கண்டு ஒழிந்தேன்* அடைந்தேன் உன் திருவடியே**
நம்மாழ்வார், திருவாய்மொழி 4-9-10

என்று "வளையல் அணிந்த பிராட்டியும் நீயும் சேர்ந்து எனக்கு அருள் செய்து, அன்பு செய்து, அபிமானித்து, அடிமை செய்ய வழி காட்டிய விதத்தை கண்டு கொண்டேன்," என்றார். இந்த சேர்த்தியில்தான் நமக்கு உபாயமும் உபேயமும்.

"நீங்கள் இருவரும் ஶேஷி, ஸ்வாமி. நாங்கள் ஶேஷ பூதர்கள். இந்த உண்மை, தத்துவத்தை நான் சந்தேகமின்றி வணங்குகிறேன். அதை எப்போதும் பார்த்து கொண்டே நித்யர்கள் உமக்கு பணி செய்கின்றனர். அதையே நானும் விரும்புகிறேன்," என்றார்.

**வைகுண்டே₂து பரே லோகே ஶ்ரியா ஸார்த₄ம் ஜக₃த்பதி |**
**ஆஸ்தே விஷ்ணு: அசிந்தயாத்மா ப₄க்தைர் ப₄ாக₃வதைஸ் ஸஹ: ||**
ஶைவம்.

**"(வைகுண்டே₂து பரே லோகே)** ஸ்ரீவைகுண்டம் எனும் மேலே உயர்ந்த லோகத்தில், **(ஶ்ரியா ஸார்த₄ம் ஜக₃த்பதி)** லக்ஷ்மீ ஸஹிதமாய் உலகத்தின் நாயகனாய், **(அசிந்தயாத்மா ஆஸ்தே விஷ்ணு:)** நினைத்துப் பார்க்கமுடியாத ஸ்வரூபத்தை உடையவரான விஷ்ணு, **(ப₄க்தைர் ப₄ாக₃வதைஸ் ஸஹ:)** பக்தர்கள், பாகவதர்களுடன் எழுந்தருளி இருக்கிறான்" என்றது, ஶைவம்.

## 2-15 த்வயம் அனுஸந்திக்கும் முறை

இந்த த்வயத்தை எங்கே, எப்படி, எதற்கு சொல்ல வேண்டும்? என்று அடுத்த கேள்வி

**பிரபத்திக்கு தேச நியமமும், கால நியமமும், பிராகார நியமமும், அதிகாரி நியமமும், பல நியமமும் இல்லை. விஷய நியமமே உள்ளது**
பிள்ளை லோகாசாரியர், ஸ்ரீவசன பூஷணம் 23-24

என்று ஸ்ரீவசன பூஷணத்தில் பிள்ளைலோகாசாரியார் அருளினார்.

- இடம் தூய்மையாக இருக்க வேண்டும் என்பதில்லை.
- குறித்த காலத்திலேதான் செய்ய வேண்டும் என்பதில்லை.
- ஸ்நானம் போன்ற விதிகளும் செய்ய வேண்டியதில்லை
- சில ஜாதியினர் மட்டுமே சொல்ல வேண்டும் என்பதில்லை.
- பூலோகத்தில் வேண்டிய பலன், பிறகு மோக்ஷத்தில் பலன் என்று பல கோரிக்கைகள் கிடையாது.

**இத்தால் - ஆச்ரயிக்கைக்கு ருசியே வேண்டுவது**
**காலம் பார்க்க வேண்டா என்கிறது.**
பிள்ளை லோகாசாரியர், முமுக்ஷுப்படி

என்று முமுக்ஷுப்படியில் பிள்ளைலோகசாரியரும் ஸாதிக்கிறார் - ப்ரபத்தி செய்ய ஆசையே போதும். நாள், நக்ஷத்திரம், திதி என்பது அவசியமில்லை என்று. இதற்கு திரௌபதி, கஜேந்த்ரன் இருவரும் மிகச் சிறந்த உதாரணங்கள்.

திரௌபதி, **"ஹா கிருஷ்ணா துவராகாவாஸிந்"?** என்று கதறியபோது, என்ன ஆசாரத்தில் இருந்தாள்? கஜேந்த்ரன், "ஆதி மூலமே" என்று அலறியபோது, எந்த இடத்தில், எந்த நேரத்தில், எந்த நிலையில் இருக்கிறோம் என்று ஒரு க்ஷணமாவது யோசித்ததா?.

**திரௌபதி ஸ்நாதையாயன்றே ப்ரபத்தி பண்ணிற்று;**
**அர்ச்சுனன் நீசர் நடுவே இவ்வர்த்தம் கேட்டது**
பிள்ளை லோகாசாரியர், ஸ்ரீவசன பூஷணம்

என்று ஸ்ரீவசந பூஷணத்தில் பிள்ளைலோகாசாரியர் ஸாதித்தார்.

## 2-16 த்வயத்தின் பலன்

**பொன்னுலகு ஆளீரோ? * புவனி முழுதாளீரோ? ***
நம்மாழ்வார், திருவாய்மொழி 6-8-1

என்றார் நம்மாழ்வார். பொன்னுலகு என்று சொல்லப்படும் பரமபதத்தையும், பூவுலகு அடங்கியுள்ள எல்லா பரகிருதி மண்டலமும் எம்பெருமான் தன் அடியவர்க்கு அளிக்கிறான்.

ப்ரபத்தி என்னும் சரணாகதியை எதற்கு வேண்டுமானாலும் செய்யலாம். அதாவது எந்த பலனையும் கோறி வேண்டலாம். இதைத் தினமும் கண்கூடாகக் காண்கிறோம்.

**பல நியமமின்றிக்கே ஒழிந்த படியென்? என்னில்;**
**தர்மபுதிராதிகளுக்குப் பலம் - ராஜ்யம்;**

**த்ரௌபதிக்குப் பலம் - வஸ்திரம்;**
**காகத்துக்கும் காளியனுக்கும் பலம் - ப்ராணன்**
**கஜேந்த்ராழ்வானுக்குப் பலம் - கைங்கர்யம்**
**விபிஷணாழ்வானுக்குப் பலம் - ராமப்ராப்தி**
**பெருமாளுக்குப் பலம் - ஸமுத்ரத்ரணம்**
**இளைய பெருமாளுக்குப் பலம் - ராமாநுவ்ருத்தி**
பிள்ளை லோகாசாரியர், ஸ்ரீவசன பூஷணம் 33

என்று ஸ்ரீவசந பூஷணத்தில் பிள்ளைலோகாசாரியர் ஸாதித்தார்.

**நாடும் நகரமும் நன்குடன் காண ***
**நலனிடை ஊர்தி பண்ணி ***
**வீடும் பெருத்தித் தன் மூவுலகுக்கும் ***
**தரும் ஒரு நாயகமே**
நம்மாழ்வார், திருவாய்மொழி 3-10-11

என்று நம்மாழ்வார் எம்பெருமான் அருளுவதைச் சொன்னார். இந்த பூலோகத்தில் எல்லா செல்வங்களும் தந்து வைஷ்ணஸ்ரீயுடன் சிறந்து விளங்கும்படி செய்வார். மேலும் பரம ப்ராப்தியான மோக்ஷத்தையும் அருள்வார். மூன்று விதமான ஆத்மாக்களுக்கும் (பத்தர், முக்தர், நித்யர்) தன்னுடைய ஸ்தானத்தையே அளிப்பவன் என்றார்.

**காகம் இராக்கதன் மன்னர் காதலி கத்திரபந்து ***
**நாகம் அரன் அயன் முதலா நாக நகரார் தமக்கும் ***
**போகம் உயர் வீடு பெற பொன்னருள் செய்தமை கண்டு ***
**நாகமலை நாயகனார் நல் அடிப்போது அடிந்தேனே**
ஸ்வாமி தேசிகன், அடைக்கலப்பத்து 4

**அயன் முதலா** - பிரம்மா முதல்,
**காகம்** - காகாசுரன்,
**இராக்கதன்** - விபீஷணன்,
**மன்னர் காதலி** - பஞ்ச பாண்டவர் மனைவி த்ரௌபதி,
**கத்திர பந்து** - க்ஷத்திர பந்து,
**நாகம்** - காளியன்,
**அரன்** - ருத்திரன்,

நாகநகரார் - தேவர்கள் வரை

பகவான் என்ன தருகிறான் என்றால் போகம், இந்த உலகத்தில் நீ கேட்கும் ஸம்ஸார சுகங்கள் எல்லாம். அது மட்டும் இல்லை, உயர் வீடு எனும் மோக்ஷ ப்ராப்தியை தந்து அருள்கிறான்.

யாருக்கு தருகிறான் என்றால் நாகமலை நாயகனார் என்னும் ஹஸ்திகிரி நாதனான தேவராஜனிடம், அவன் திருவடித் தாமரைகளில் இப்போதே சரண் அடைகிறேன் என்று அடைபவர்களுக்கு.

அதனால் ப்ரபத்தி செய்ய விரும்புவனுக்கு அந்த ப்ரபத்தி செய்ய வேண்டும் என்கிற ஆத்மார்த்தமாய் உள்ள நினைவும், பகவான் நிச்சயம் முடித்து தருவான் என்கிற நம்பிக்கையும்தான் முதலில் அவசியம். பல ஶரணகதர்களை உதாரணமாய் காட்டி, அவர்கள் பெற்ற பேற்றைச் சொல்லி நமக்கு அந்த ஶரணாகதியில் உறுதி ஏற்படுத்துகிறார்.

ஆனால் இங்கு நாம் செய்யும் ப்ரபத்தி என்பது மோக்ஷத்தை விரும்பி செய்யக்கூடியது. எம்பெருமானுக்கும், பிராட்டிக்கும் நித்ய கைங்கர்யம் செய்து மகிழ்வதே உயர்ந்த புருஷார்த்தம் என்று அதை கொடுத்து அருள்வாய் என வேண்டுவது. மீதி அல்பமான பல கோரிக்கைகளுக்காக அல்ல.

## 2-17 த்வயம் உபதேசம் பெறும் முறை

முதலில் ஆசாரியனை அடைந்து அவரை பணிந்து இந்த மந்திரத்தை உபதேசமாகப் பெற வேண்டும். ஆசாரியனை தெய்வமாக போற்றி, அவரை எல்லோரிடத்தும் புகழ்ந்து அவர் பெருமைகளை பறை சாற்ற வேண்டும்.

த்வயத்தை ஆசாரியனிடமிருந்து உபதேசம் பெறுவதற்கு அதிகாரம் பெரியதாக ஒன்றும் இல்லை. நல்ல நாள், புண்ய க்ஷேத்திரம், நல்ல வேளை, அக்னி ஹோமம், ஜபம் ஒன்றும் அவசியமில்லை ஆசாரியரிடம் ஶரணாகதி

பண்ணவேண்டும். அவரைக்கொண்டு, பிராட்டியை புருஷகாரமாய் வரித்து, நம் ஆத்மாவை பகவானிடம் ஸமர்ப்பிக்க வேண்டும்.

த்வயம் எங்கும் எப்பொழுதும் எந்த நிலையிலும் எந்த குலத்தாரும், யாராலும் அனுஸந்திக்க கூடியது. இதற்கு காலம், ஆசாரம், தகுதி போன்ற வரம்பு (restriction) கிடையாது.

காலத்தையும், உலகத்தையும் தாண்டி, யுக தர்மங்களுக்கு அப்பாற்பட்டதால் **த்வயம் திண்ணம்** என்று சொல்லும்படி ஆகிறது.

## 2-18 த்வய வாக்யங்களின் வரிசைக் க்ரமம்

முதல் வரி உபாயத்தையும், பின் வரி பலனையும் சொல்கிறது என்றோம். ஆழ்வார்கள் பாசுரங்களில் இதன் அர்த்தத்தை விளக்கும்போது பகவான் திருவடிகளை அடைந்து மோக்ஷம் பெறுவதாய், அதே க்ரமத்தில் ஸாதித்துள்ளனர்.

ஆனால், ஒரு பலனை முதலில் சொல்லி பின் அதற்கு உண்டான வழியை சொல்வது உலக வழக்காயிற்றே! என்றால் அது புரிய வைப்பதற்கு, ஆசையை உண்டாக்குவதற்கு. "நீ நிறைய சம்பாதிக்கணும் என்றால், நல்லா படிக்கணும்," "Florida போகணும்னா I-95 யில் போகணும்," "பெருமாள் ஸேவை வேணும்னா, 8 மணிக்குள் கிளம்பணும்,"என்று பொதுவாய் சொல்வது மரபு (in principle).

செய்முறையில் (in practice), வழியில் சென்றால்தான் பலன் கிடைக்கும். வழி முன்னே, பலன் பின்னே. "அவரிடம் போய் recommendation letter முதலில் வாங்கு. அப்புறம் admission தானாகவே வரும்."

அதை ஒட்டியே ஆழ்வார்களும், எம்பெருமானார் கத்யத்திலும் ஸாதித்தனர்.

**முகில் வண்ணன் அடியை அடைந்து அருள் சூடி**
**உய்ந்தவன் * மொய்ப்புனல் பொருநல் ***
**… …**
**முகில் வண்ணன் வானத்து இமையவர் சூழ**
**இருப்பர் * பேரின்ப வெள்ளத்தே.**
நம்மாழ்வார், திருவாய்மொழி 7-2-11

என்று நம்மாழ்வார் முதலில் உபாயமாய் எம்பெருமான் திருவடிகளை அடைந்து பின் பலனாய் மோக்ஷ இன்ப வெள்ளத்தை அடையும் த்வய வரிசையைக் காட்டினார்.

ஸ்வாமி தேசிகனும் முன் சொன்ன காகம் இராக்கதன் என்ற பாசுரத்தில், முதலில் பலனைச் சொல்லியே, பின் அதை பெறுவதற்கு எம்பெருமானின் திருவடிகளை அடை என்றார்.

## 2-19 முடிவுரை

வேதங்களிலும், பல ஸ்மிருதிகளிலும் இந்த "ஶரணாகதி செய்பவன் கிடைத்தற்கு அரிது" என்கிறதே என்று கேள்வி எழும். ப்ரபத்தி என்ற உபாயம், க்ஷண கால காரியம். ஆனாலும் அதனை சரிவர கடைபிடிப்பது மிகவும் கடினமானது.

ப்ரபத்தியின் அங்கங்களைப் பற்றி மேலே வரும் பாசுரங்களில் விளக்கப் போகிறோம். அவற்றில் **மஹா விசுவாசம் என்பது மிக முக்கியமானது.** பகவான் நிச்சயம் நம்மைக் காத்தருள்வான் என்ற பெரு நம்பிக்கை. நாம் செய்யும் ப்ரபத்தியில் பகவான் மகிழ்ந்து நம்மை காத்து நித்யமான கைங்கர்ய ப்ராப்தியை அருள்வான் என்கிற திடமான எண்ணம், அசைக்க முடியாத நம்பிக்கை (unshakeable faith) வேண்டும்.

prapatti dot com

மோக்ஷம் என்கிற பலன் ப்ரபன்னனுக்கு நிச்சயம் என்ற மன உறுதி, ப்ரபத்திக்கு பின் மீதி நாட்களை எப்படித் கழிக்கப் போகிறோம் என்ற பயம், பீதி, சுமை, கவலை இல்லாமை என்பதை கடைபிடிப்பது கடினமானது.

தவிர, **ப்ரபத்தி செய்ய ஒருவனுக்கு மோஷத்தில் இச்சை உண்டாக வேண்டும்.** முமுக்ஷு என்றால் முக்தியில் இச்சை உடையவன். அதில் ஆசை இல்லாதவன் ப்ரபத்தி செய்ய முடியாது. செய்யத் தோன்றாது. ஓர் பலனை உத்தேசித்துத்தானே எல்லா காரியங்களையும் செய்கிறோம். "பைத்தியக்காரன் கூட பலனில்லாமல் ஒன்றும் செய்ய மாட்டான்" என்பது வசனம்.

"நாம் இங்கே இருக்கும் இடமே சுகமாய் இருக்கிறதே. இன்னும் கொஞ்ச நாட்கள் எல்லாம் அனுபவிப்போம். இதை விட்டு கண்ணுக்குத் தெரியாத அந்த மோக்ஷத்தின் மேல் யார்க்கு ஆசை" என்றுதான் பலரும் நினைக்கக்கூடும்.

இந்த கருத்துக்களை எல்லாம் எண்ணியே, **வேதமே ப்ரபத்தி செய்பவன் அரிது என்றது.**

prapatti dot com

# 3. சிறப்பு

**திருவும் அடிகளும் திறம்பட ***
**எட்டும் தட்டும் விட நவின்றிட ***
**அரங்கன் ஏவ தரத்துடன் இயம்ப ***
**வள்ளல் வழியில் விண்ணப்பம் இன்றே.**

**திருவும்** = மஹாலக்ஷ்மீயும்
**அடிகளும்** - எம்பெருமானின் திருவடிகளும்
**எட்டும்** = அக்ஷ்டாக்ஷரம் எனும் திருமந்திரமும்
**தட்டும்** = தேர் தட்டில் நின்று கண்ணம் உபதேசித்த சரம ஸ்லோகமும்
**விட** = சொல்லாமலேயே விட்டு விட
**திறம்பட** = (த்வயமோ) நேர்த்தியாக, (elegantly)
**நவின்றிட** = கூறிட
**அரங்கன்** = எம்பெருமான் ஸ்ரீரங்கநாதன்
**ஏவ** = ஆணையிட (commanded)
**வள்ளல்** = எம்பெருமானார் ராமனுஜர்
**தரத்துடன்** = பெருமையுடன் (in an exemplified manner)
**இயம்ப** = (அதை நமக்கு) சொல்ல (expressed)
**வழியில்** = அவர் வழியில் வந்த ஆசார்ய பரம்பரையில்
**விண்ணப்பம்** = ப்ரபத்தியாகிற வேண்டுதலை (appeal) செய்து முடிப்பீர்கள்,
**இன்றே** = இன்றே !

## 3-1 முன்னுரை

மூன்றாம் பாசுரம் ஆரம்பம் **திருவும்**, கடைசி பதம் **இன்றே.** எம்பெருமான் **"அபார காருண்ய வாத்ஸல்ய ஜலதே"** என்கிறபடி கருணைக் கடல். போதாக் குறைக்கு, எங்கேயாவது ஒருக்கால், நம்மேல் கோவம் வந்து நம்மை மறுப்பானோ என்று நமக்காக பிராட்டி அவனைவிட்டு ஒரு க்ஷணமும் அகலாமல் இருக்கிறாள்.

திருவும் என்று அந்த திருவுடன் சேர்ந்த எம்பெருமானை ப்ரபத்தியால் அடை. அதுவும் இன்றே அடை. என்று பிராட்டி உறவின் உயர்வைச் சொல்கிறது.

முதல் இரண்டு, கடைசி இரண்டு பதங்களை எடுத்துக் கொண்டால், **திருவும் அடிகளும், விண்ணப்பம் இன்றே.** பிராட்டி ஸஹிதனான எம்பெருமானின் திருவடிகளில் ப்ரபத்தியை இன்றே விண்ணப்பம் செய் என்று சுருக்கமாக காண்பிக்கிறது.

## 3-2 த்வயத்தின் சிறப்பு

ரஹஸ்யங்கள் த்ரயம் என்று மூன்று ஆனாலும், இந்த த்வயத்திற்கு மற்ற இரண்டைவிட பெருமை அதிகம். அதனால்தான் இதை **மந்த்ர ரத்னம் என்றும், ஶரணாகதி மந்த்ரம் என்றும், லக்ஷ்மீ மந்திரம் என்றும், ப்ரபத்தியின் ஸாதனம்** என்றும் எல்லோரும் எக்காலத்திலும் அனுஸந்திக்கும் உயர்ந்த வேத மந்திரம் என்றும் ஆசாரியர்கள் சிறப்பித்து சொல்கிறார்கள்.

தவிர அனுஸந்திப்பவன் சுலபமாக புரிந்து கொள்ளும்படி வார்த்தைகளை தன்னுள் அடக்கி குறைந்த பதங்களுடன் இருப்பதால் இதற்கு பெருமை.

யார், யாரிடம், என்ன, எதற்கு, எப்படி செய்கிறான், அத்தால் வரும் பலன் என்ன என்பதை தெள்ளத் தெளிவாக காண்பிக்கிறது. ஆங்கிலத்தில் **Who, what, when, why, where and how** என்கிறாற்போல.

## 3-3 எட்டும் தட்டும் விட

எட்டு என்பது இங்கு எட்டு எழுத்துக்களை கொண்ட திருமந்திரமாகிய திருவஷ்டாக்ஷரத்தை சொல்லுகிறது. தட்டு என்பது தேர் தட்டில் கிருஷ்ணன் அருச்சுனனுக்கு ஸாரதியாய் பகவத் கீதையை உபதேசித்தது. வேதத்தின்

ஸாரமான திருமந்திரத்தைவிட, பகவத்கீதையின் ஸாரமான சரம ஸ்லோகத்தைவிட, இந்த த்வயம் சிறந்தது என சொல்லலாம்.

ஏன் என்றால் அந்த இரண்டும், **அஷ்டாக்ஷரமும். சரம் ஸ்லோகமும் திருவையும் எம்பெருமான் திருவடிகளையும் சொல்லாமலேயே விட்டன.** ஆனால் த்வயமோ விடவில்லை. ஸ்பஷ்டமாக சொன்னது என்றும் கொள்ளலாம்.

> **ப்ரதமரஹஸ்யமான திருமந்த்ரம் ப்ராப்ய ஸ்வருபத்தை ப்ரதிபாதிக்கிறது; சரமஶ்லோகம் ப்ராபக ஸ்வருபத்தை பரதிபாதிக்கிறது; இவை இரண்டிலும் ருசி உடையவனான அதிகாரி அவற்றை விஶதமாக அநுஸந்திக்கிறபடியைச் சொல்கிறது த்வயம். இம்மூன்றையும் தஞ்சமாக நினைத்துப் போராநிற்கச் செய்தேயும், ஸர்வாதிகாரம் ஆகையாலும் ஆசார்யருசி பரிக்ருஹீதம் ஆகையாலும், இத்தையே தஞ்சமாக நினைத்துப் போருவார்கள்.**
> பிள்ளைலோகாசாரியார், ச்ரியப்பதிப்படி

## 3-4 திருவின்றி அருளில்லை

நாலாயிர திவ்ய பிரபந்தம் தோன்றியது திருக்கோவிலூரில், அங்கு முதல் மூன்று ஆழ்வார்கள் நள்ளிரவில், இடைகழியில் மழைக்காக ஒதுங்கினர். ஒருவர் படுக்கலாம், இருவர் அமரலாம், மூவர் உட்காரலாம் என்றபடி அவ்விடம் மிகச் சிறியதாக இருந்தது. மூவரும் அங்கு அடைந்த பிறகு நான்காவதாக, இன்னொருவன் கண்ணிற்கு புலப்படாமல் நெருக்க, ஆழ்வார்கள் பிரபந்தம் பாடத் தொடங்கினர்.

> **வையம் தகளியா * வார்கடலே நெய் ஆக *
> வெய்ய கதிரோன் விளக்காக * செய்ய
> சுடர் ஆழியான் அடிக்கே * சூட்டினேன் சொல் மாலை *
> இடர் ஆழி நீங்குகவே என்று.**
> பொய்கையாழ்வார், முதல் திருவந்தாதி 1

எம்பெருமானின் திருவாயுதமான பாஞ்ச ஜன்யம் என்னும் சங்கின் (conch) அம்சமாய் அவதரித்தவர் பொய்கையாழ்வார். பகவானை அறிந்து கொள்ள

ஞானவிளக்கு அவசியம் என்றார். உலகத்தை பாத்திரமாகவும் (basin), கடலை நெய்யாகவும் (ghee), சூரியனை விளக்காகவும் (lamp) கொண்டு அறிவில்லாத அசேதனங்களை முன்னிட்டு பகவானை அறிய முற்படுகிறார்.

**அன்பே தகளியா * ஆர்வமே நெய் ஆக *
இன்பு உருகு சிந்தை இடு திரியா * நன்பு உருகி
ஞானச் சுடர் விளக்கு ஏற்றினேன் * நாரணற்கு *
ஞானத் தமிழ் புரிந்த நான்.**

பூதத்தாழ்வார், இரண்டாம் திருவந்தாதி 1

எம்பெருமானின் கௌமோதகீ என்னும் கதையின் (mace) அம்சமாய் அவதரித்தவர் பூதத்தாழ்வார். ஞானம் முற்றி அத்தால் விளையும் பக்தியை காட்டினார் இந்த ஆழ்வார். பகவானிடத்தில் உள்ள அன்பே பாத்திரம்; அன்பின் எல்லையான பொறுக்க முடியாத துடிப்பே நெய்; அனுபவிக்கும் இன்பமே திரி; ஞானமயமான ஆத்மா உருகி எம்பெருமானிடம் பக்தி என்னும் விளக்கை ஏர்றினார். ஞானமான சேதனங்களை முன்னிட்டு பகவானை அறிய யத்தனிக்கிறார்.

**திருக் கண்டேன் * பொன் மேனி கண்டேன் * திகழும்
அருக்கன் அணி நிறமும் கண்டேன் * செருக் கிளரும்
பொன் ஆழி கண்டேன் * புரிசங்கம் கைக் கண்டேன் *
என் ஆழி வண்ணன்பால் இன்று.**

பேயாழ்வார், மூன்றாம் திருவந்தாதி 1

என்று மூன்றாம் திருவந்தாதியில் நாந்தகம் என்னும் வாளின் (sword) அம்சமாய் அவதரித்த பேயாழ்வார், ஞான, பக்தியால் எம்பெருமானை அறிந்து, அறிந்ததோடு அல்லாமல் பகவானையே ஸாக்ஷாத்காரமாய், தன் கண் கொண்டு ஸேவிக்கிறார். பிராட்டியை. ஈச்வர தத்துவத்தை முன்னிட்டு பகவானை அறிகிறார்.

பிராட்டியை முன்னிட்டே எம்பெருமானை அறிந்து கொண்டனர். திருவின் அருள் இன்றி திருமாலை உணர முடியாது என்பதை நமக்கு புகட்டினர்.

## 3-5 மற்றவை திருவை விட்டன

திருமந்த்ரமும், சரமஸ்லோகமும் இரண்டு முக்கியமான விஷயங்களைப் பற்றி வெளிப்படையாக (explictly) சொல்லவே இல்லை என்ற குறையை (shortcoming) கீழே சொன்னோம்.

முதல் குறை - இந்த இரண்டிலும் **ஶ்ரீ சப்தம் வெளிப்படையாக சொல்லவில்லை** என்பது. புருஷகாரபூதையாய் நம்மை பகவானிடத்தில் சேர்ப்பித்து "கடக க்ருத்யம்" பண்ணும் பிராட்டி ஸம்பந்ததை பற்றி ஒரு சப்தம் கூட இல்லை.

திருமந்திரம் ப்ரணவத்தில் ஆரம்பித்து, நாராயண பதத்தை சொல்லி அகங்கார மமகாரங்களை அழிக்கும் மம: என்று முடித்தது.

சரம ஸ்லோகமோ **"மாம் ஏகம் ஶரணம்"** என்னை ஒருவனையே ஶரணாக பற்று என்றது. **"மாம் ஶ்ரீயஞ்ச ஶரணம்"** என்னுடன் சேர்ந்த ஶ்ரீயை பற்று என்று சொல்லியிருக்கலாம். இல்லை "ஶ்ரீஸம் மாம் ஶரணம்", ஶ்ரீயுடன் சேர்ந்த என்னை பற்று என்று சொல்லியிருக்கலாம், ஆனால் இந்த இரண்டையும் சொல்லவில்லை.

திருமந்திரத்தில் ப்ரணவமாகிற ஓம், மூன்று எழுத்துக்களை உடையது. அகார, உகார, மகாரம். அதில் அகாரம் என்பது விஷ்ணுவைக் காட்டும் என்று வேதமே சொல்கிறது. அந்த விஷ்ணு என்பவன் திருவை விட்டுப் பிரியாதவன் என்பதை மனத்தில் கொள்ள வேண்டும்.

> **ரக்ஷிக்கும்போது பிராட்டி ஸந்நிதி வேண்டுகையாலே,**
> **இதிலே ஶ்ரீஸம்பந்தமும் அநுஸந்தேயம்**
> பிள்ளைலோகாசாரியார், முமுக்ஷுப்படி 40

என்று முமுக்ஷுப்படியில் பிள்ளைலோகசாரியர் அகாரார்த்தத்தை ஸாதிக்கும்போது அருளினார். அகாரம் வெளிப்படையாக பிராட்டியை சொல்லாது போயினும், பிராட்டியின் ஸம்பந்தம் என்ற பொருள் உள்ளே புதைந்து இருக்கிறது என்றார்.

prapatti.com

## 3-6 மற்றவை திருவடிகளையும் விட்டன

ஏற்கனவே சொன்னோம், திருமாலின் எல்லா அவயங்களில், திருவடியே நமக்கு பிரதானமானது, உகந்தது, சுலபமானது. இரண்டாவது குறையாக, திருமந்த்ரத்திலும், சரம ஸ்லோகத்திலும், பகவானின் அந்த திருவடிகளைப் பற்றிய பேச்சே இல்லை.

**எண்பெருக்கு அந்நலத்து * ஒண்பொருள் ஈறில *
வண்புகழ் நாரணன் * திண் கழல் சேரே**
நம்மாழ்வார், திருவாய்மொழி 1-2-10

என்று திருவாய்மொழியில் ஸ்வாமி நம்மாழ்வார் ஸாதித்தார். "பகவான் நாராயணனுடைய குணங்களோ, ஞானமோ, அவனுடைய உடமைகளோ கணக்கற்றது. அப்படி உயர்ந்த அந்த திருமாலின் திருப்பாதங்களை கெட்டியாக பற்றிக் கொள்ளுங்கள்" என்றார். அளவற்ற குணங்கள் என்பதால் நிர்க்குணப் ப்ரம்மம் என்பது மறுக்கப்பட்டது.

## 3-7 த்வயமோ திறம்பட நவின்றன

**திருவும் அடிகளும் திறம்பட நவின்றன**

மந்திர ரத்தினமான த்வயத்திற்கு கீழே சொன்ன, திரு, திருவடிகளை சொல்லாமலே விட்ட இரண்டு குறைகளும் இல்லவே இல்லை. ஸ்ரீ ஶப்தம் ஸ்பஷ்டமாக இருக்கிறது. முதல் வரியும் இரண்டாவது வரியும் ஸ்ரீ என்ற சப்தத்திலேயே ஆரம்பிக்கிறது.

முதல் வரி ஆரம்பமே **"ஸ்ரீமந் நாராயண"**. இரண்டாவது வரி ஆரம்பம் **"ஸ்ரீமதே நாராயண"**. இதனால் த்வயத்தை **லக்ஷ்மி மந்த்ரம்** என்று சொல்கிறார்கள். **ப்ரபத்தி அல்லது ஶரணாகதி மந்த்ரம்** என்றும் சொல்லுவார்கள்.

பகவானுடைய திருவடிகளை வெகு அழகாக **"சரணௌ"** என்ற பதத்தால் சொல்லப்பட்டது. பகவானின் இரண்டு பாதங்களையும் என்கிறபடி.

இதனால்தான் நம்முடைய **ஆசாரியர்கள் இந்த த்வயத்திலேயே எப்பொழுதும் மண்டிக் கிடப்பார்கள்** (ஊன்றி இருப்பார்கள்).

## 3-8 அரங்கன் ஏவ

பகவத் ராமனுஜருடைய வைபவம் மிகச் சிறந்தது. பின் வந்த ஆசாரியர்கள் சுவையாக ஏடுபடுத்தியுள்ளார்கள். எம்பெருமானார், பல திவ்ய தேசங்களுக்கு சென்று அர்ச்சாரூபிகளை மங்களா ஸாசனம் செய்து வந்திருந்தார்.

> **ஸ்ரீரங்க₃ம் கரி ஶைலம் அஞ்சநகி₃ரிம் தார்ச்ஷ்யாத்₃ரி ஸிம்ஹாசலௌ**
> **ஸ்ரீகூர்மம் புருஷோத்தமம் ச ப₃த₃ரீ நாராயணம் நைமிஶம்**
> **ஸ்ரீமத்₃ த்₃வாரவதீ ப்ரயாக₃ மது₂ரா அயோத்₃யா க₃யா: புஷ்கரம்**
> **ஸாளக்₃ராமகி₃ரிம் நிஷேவ்ய ரமதே ராமநுஜோயSம் முநி:**
> ஸ்ரீ பராசர பட்டர், ஸ்ரீ ரங்கநாத ஸ்தோத்திரத்தம் 7

ஸ்ரீரங்கநாத ஸ்தோத்திரத்தில், ஸ்ரீ பராசர பட்டர் பகவத் ராமனுஜர் உகந்த க்ஷேத்ரங்கள் இவை என்று அருளினார்.

அவற்றை எல்லாம் முடித்துக் கொண்டும் எம்பெருமானார், பூலோக வைகுண்டமான ஸ்ரீரங்கம் எழுந்தருளி ஸ்ரீரங்கநாதனை பிராட்டியுடன் ஸேவித்துக் கொண்டிருந்தார். பகவான் அவருக்கு சொன்ன வார்த்தைகளை தம்முடைய ஸ்ரீஶரணாக₃திக₃த்₃யத்தில் அருளியுள்ளார்.

> **த்₃வயம் அர்த₂ாநுஸந்த₄ாநேந ஸஹ ஸதை₃வம் வக்தா**
> **யாவச்ச₂ரீரபாதம் அத்ரைவ ஸ்ரீ ரங்கே ஸுக₂மாஸ்வ!**
> ராமாநுஜர், ஸ்ரீஶரணாக₃தி க₃த்₃யம்

“நீர் த்வயத்தை அர்த்தத்துடன், இப்பொழுது மாதிரி என்றும், எப்பொழுதும் அனுஸந்தப்பீராக இந்த ஸ்ரீ ரங்கத்திலேயே உம்முடைய கடைசி காலம் வரை இருக்கவும்” என்று பகவான் ஸாதித்தார். இங்கு “ஏவ” சப்தம் பகவானின் ஆணை, கட்டளையைக் (order, command) காட்டுகிறது.

## 3-9 வள்ளல்

வள்ளல் என்ற சொல் எம்பெருமானார் ஒருவருக்கே மிகவும் பொருந்தும்.

**என்னுயிர் தந்தளித்தவரை சரணம் புக்கி ***
**யானடைவே அவர் குருக்கள் நிறை வணங்கி***
**பின்னருளால் பெரும்பூதூர் வந்த வள்ளல் ***
ஸ்வாமி தேசிகன், அதிகார சங்கிரகம் 3

என்று அதிகார ஸங்க்ரஹத்தில் ஸ்வாமி தேசிகன் நம் குலத்திற்கே பரமாசாரியராக இருக்கும் ராமானுஜரை வள்ளல், உதாரர் என்றே அழைக்கிறார்.

**கொள்ளல் குறைவற்று இலங்கி * கொழுந்து விட்டு ஓங்கிய உன்**
**வள்ளல் தனத்தினால் * வல்வினையே மனம் நீ புகுந்தாய் ***
திருவரங்கத்தமுதனார், இராமநுச நூற்றந்தாதி 27

எம்பெருமானார் யார் யாருக்கு எது வேண்டுமோ அதை, அவரவர் விரும்பும் அளவிற்கு அளிப்பவர் (whoever, whatever the amount they aspire). இது எப்படி இருக்கிறது என்றால் நீர் மிகுந்த மேகம் கருணையால் பொழிவது போல் வாரி வழங்குவது.

கொடுத்த பின், இவரிடம் ஏதாவது குறைந்ததா? என்றால் இல்லை. இவருடைய ஔதார்யம் (generosity) மேலும் மேலும் ஒளி மிகுந்து சுடர் விட்டு விளக்குபோல், புதுப்பொலிவுடன் வளருகிறது. அப்படிப்பட்ட உயர்ந்த வள்ளல் தன்மை எனும் திருக்கல்யாண குணத்தினால் எம்பெருமானார், கீழ்த்தரமான என்னுடைய மனத்தில் வந்து புகுந்தார்,” என்றார் அமுதனார்.

prapatti dot com

மற்ற ஆசாரியர்கள் எல்லோரையும் **அநுவிருத்தி ப்ரஸன்னாசாரியர்** என்பர். அதாவது, சிஷ்யர்களின் அறிவு, பக்குவம், காலம் (disciple's knowledge, maturity level and proper time) என்பதை நன்கு அறிந்து பின் அவர்களுக்கு அந்த ஆசாரியர்கள் உபதேசம் செய்வார்கள். ஆசாரியன் கருணையில் இப்படி தாரதம்யம் இருக்கும்.

எம்பெருமானாரை **க்ருபா மாத்ர ப்ரஸன்னாசாரியர்** என்பர். கேவலம், தம்முடைய கருணை என்ற ஒன்றினாலேயே எல்லா சேதனர்களும் உஜ்ஜீவிக்க வேண்டும் ஆசையுடன் அவர்களின் ஞானத்தை சோதிக்காமல், பக்குவத்தை எதிர்பாரமல், தாம் தவம் கிடந்து பெற்ற மந்திரார்த்தங்களை ஆசையுடைய முமுக்ஷுக்கள் எல்லோருக்கும் அருளிச் செய்தார்.

**உதா$_3$ரா: ஸர்வ ஏவைதே ஜ்ஞாநீ த்வாத்மைவ மே மதம் |**
**ஆஸ்தி$_2$த: ஸ ஹி யுக்தாத்மா மாம் ஏவ அநுத்தமாம் க$_3$திம் ||**
**பகவத்கீதை 7-18**

என்று பகவான் கிருஷ்ணனும் இப்படி **உதாரராய், ஞானியாய் இருப்பவர்களே எனக்கு ஆத்மா**, இது என்னுடைய ஸித்தாந்தம் என்றான்.

இங்கே ஒரு கேள்வி எழும். கொடுப்பவனை உதாரன் என்று சொல்லலாம். ஆனால் வாங்கி கொள்பவனை எப்படி உதாரன் என்று சொல்வது? வாங்கி கொள்கிறவன் எதைக் கொடுக்கிறான்?

வாங்கிக் கொள்பவன், கொடுப்பவனுக்கு உதாரன் என்ற பட்டம் பெற காரணம் ஆகிறான். இங்கே கிருஷ்ணனும் என்னை "ஸர்வ பல ப்ரதா", (The one who can bestow anything and everything) எல்லா செல்வங்களையும் அளிக்கும் வல்லமை உடையவனே! என்ற பெயர், புகழ் பெறுவதற்கு இவர்கள் காரணம் ஆகின்றனர். அதனால், உண்மையில் இவர்களே, வாங்கிக் கொள்பவர்களே உதாரர் என்றான்.

**ஸ்ரீவைஷ்ணவ தத்துவமே ஒரு ஸ்ரீவைஷ்ணவர் மற்றொரு ஸ்ரீவைஷ்ணருக்கு அடியேன், தாஸன் என்று சொல்லிக் கொள்வதைக் காட்டுகிறது.**

## 3-10 வழியில்

வழி என்பது இங்கே முறை (procedure) என்று குறிக்கும். அதாவது ப்ரபத்தி நெறி, ப்ரபத்தி யோகம் என்பதை முன்னோர்கள் மொழிந்த முறையிலே நாமும் அனுஸந்திப்போம்.

வழி என்பது பரம்பரை, வழிவழியாய் வந்தது (lineage, dynasty) என்பதையும் சொல்லும். இந்த ஶரணாகதி என்பது ப்ரதம ஆசாரியனான எம்பெருமானிடம் தொடங்கி ஸத் ஸம்பிரதாயமாக அனுஷ்டிக்கப்பட்டுள்ளது.

வழியில் என்பது நம் குல ஆசாரியரான பாஷ்யகாரர் ஶரணாகதி பண்ணிய முறையிலே. (same procedure or tradition) ஆத்ம ஸமர்ப்பணம் செய்பவர்கள் பகவத் ராமானுஜர் அருளிச்செய்த ஸ்ரீஶரணாக₃திக₃த்₃யத்தால் பிரபத்தி செய்யுங்கால் அனுஸந்திப்பதை நினைவு கூற வேண்டும்).

ஶரணாகதிக்கு அவசியமான நியமங்கள் (requirements, eligiblitiy criterion) என்பவை மிகவும் குறைவு. ஆனால் **யாரிடம் ப்ரபத்தி செய்து கொள்வது என்பது முக்யம்.** வள்ளல் வழியில் என்பதை, ராமனுஜ ஸித்தாந்தத்தில் பரம்பரையாக வந்த ஆசாரியர்களிடம் என்றும் கொள்ளலாம். அந்த ஆசாரியர்களிடம் பிராத்திப்பது.

**தம் பரம் என்று இரங்கித் * தளரா மனம் தந்த அருளால் *
உம்பர் தொழும் திருமால் * உகந்து ஏற்கும் உபாயம் ஒன்றால் *
நம் பிறவித் துயர் மாற்றிய * ஞானப் பெரும் தகவோர் *
சம்பிரதாயம் ஒன்றிச் * சதிர்க்கும் நெறி சார்ந்தனமே**
ஸ்வாமி தேசிகன், அமிருத ரஞ்சனி 1

என்று "இது தன்னுடைய பொறுப்பு என்று, கலங்காத மனத்தை (steadfast mind) கொடுத்து அருளினான், நித்ய ஸூரிகள் வணங்கி வழிபடும் எம்பெருமான். அவன் மகிழ்ந்து ஏற்றுக் கொள்ளும் ஒரே உபாயம் ப்ரபத்தி. அந்த ப்ரபத்தியால் நம் ஸம்ஸார துக்கத்தை போக்கிய கருணையும், மேன்மையும் நிரம்பிய ஆசாரியர்களுடைய ஸம்பிரதாயத்தில் சேர்ந்து, சிறிய உபாயத்தால் பெரிய பலனைப் பெறும் பேற்றைப் பெற்றோம்," என்றார்.

இப்படி உயர்ந்த ஆசாரிய பரம்பரை நமக்கு மோக்ஷத்தை அடைவிக்க இன்றிமையானது (inevitable).

## 3-11 தரத்துடன் இயம்ப

**ஓராண் வழியாய் * உபதேசித்தார் முன்னோர் ***
**ஏரார் எதிராசர் இன்னருளால் * பார் உலகில்**
**ஆசை உடையோருக்கெல்லாம் * ஆரியர்காள்! கூறும் என்று ***
**பேசி வரம்பு அறுத்தார் பின்**

மணவாள மாமுனிகள், உபதேச ரத்ன மாலை 37

என்று உபதேச ரத்னமாலையில் மணவாள மாமுனிகள் அருளுகிறார்.

எம்பெருமானாருக்கு முன் இருந்த ஆசாரியர்கள் மிகவும் சோதித்து, கஷ்டப்படுத்தி சிஷ்யர்களின் தகுதி முற்றியபின்தான் (only to extremely eligible candidates) ரஹஸ்யார்த்தங்களை அருளினார்கள்.

அதுவும் ஒரு காலக்ஷேபத்தில் ஒரு ஆசாரியன் ஒரு சிஷ்யன் (one to one) என்ற முறையில் ஏகாந்தமாக (intimately and leisurely) ரஹஸ்யங்களை உபதேசித்து வந்தார்கள். அந்த நியதியை (rule) எம்பெருமானார் தகர்த்து எறிந்தார் (broken the claws). தம் சிஷ்யர்களிடம், "யார் யாருக்கு எல்லாம் மோஷத்தை அடைய வேண்டும் என்கிற ஆசை உள்ளதோ அவர்களுக்கு எல்லாம் உபதேசிக்கவும்" என்று கூறினார். பகவானை அடைய முதலில்

ஆசை வேண்டும் என்பதை அறுதியிட்டார் (The only qualification to reach the Lord is the strong yearning).

**ப₄க₃வந் நாரயணா அபி₄மத அநுரூப**
**ஸ்வரூப ரூப கு₃ண விப₄ ஐஶ்வர்ய**

\- ராமாநுஜர், ஸ்ரீஶரணாக₃திக₃த்₃யம்

என்று ஶரணாகதி கத்யத்தில் எம்பெருமானார் அனுஸந்திக்கும்போது, பிராட்டியை புருஷகாரமாக முன்னிட்டே ஆரம்பிக்கிறார். பகவானிடத்தில் ஆசை இருந்தாலும், வழி முறையை பற்ற வேண்டும் என்பதை பிராட்டி புருஷகாரத்தைக் கொண்டு காண்பிக்கிறார் (Strong desire does not exclude from the proper procedure).

## 3-12 விண்ணப்பம் (request)

**வாரணிந்த முலைமடவாய்!**
**வைதேவீ! விண்ணப்பம்............**
**மானமரும் என் நோக்கி!**
**வைதேவீ! விண்ணப்பம்................,**
**மைத்தகுமா மலர்க்குழலாய்!**
**வைதேவீ! விண்ணப்பம்............,**

என்று பெரியாழ்வார் திருமொழியில் எப்படி ஆஞ்சநேயர், தாயாரிடம் வேண்டுகிறாரோ அதே முறையில் பிராட்டியிடம் வேண்டுகிறோம்.

**பொய்ந் நின்ற ஞானமும் பொல்லா ஒழுக்கும் அழுக்கு உடம்பும் ***
**இந்நின்ற நீர்மை இனியாம் உறாமை * உயிர் அளிப்பான்**
**எந்நின்ற யோனியுமாய்ப் பிறந்தாய் இமையோர் தலைவா !**
**மெய்ந்நின்று கேட்டருளாய் * அடியேன் செய்யும் விண்ணப்பமே**

நம்மாழ்வார், திருவிருத்தம் 1

என்று திருவிருத்ததில் நம்மாழ்வார் பிராத்திக்கும் முறையிலே பகவானிடம் விண்ணப்பம் செய்கிறோம்.

**அருள் தரும் ஆரண தேசிகனே! * எங்கள் தூப்புல் தேவே ***
**வரு கவிதார்கிக சிங்கமே! * வாதியர் வாழ்வு அறுத்தாய் ***
**இருகையும் கூப்பி உரைக்கும் * இவ்விண்ணப்பம் ஒன்று கேளாய் ***
**உருவ எனக்கு அருளாய் * எண்ணும் உள்ளம் உன் தொண்டரையே.**
நயினாசாரியார், பிள்ளையந்தாதி 18

“கவிகளில் சிம்மமும், ப்ரதிவாதிகளுடைய தத்துவங்களை தகர்த்தெறியும் ஸ்வாமி தேசிகனே, எம்முடைய இரண்டு கைகளையும் சேர்த்து அஞ்சலி முத்திரையுடன் உம்மை வேண்டுகிறோம்”, என்று விண்ணப்பத்தை சொன்னார்.

எதை வேண்டுகிறார் இங்கே? உம் அடியவர்ளை எங்கள் மனத்தில் நிறுத்தி, பாகவத கைங்கர்யத்தில் ஈடுபடுத்த வேண்டும் என்று. முன்பே சொன்ன வைஷ்ணவ லக்ஷணம், அடியார்க்கு அடியேன் என்கிற ஆனந்தத்தின் எல்லை நிலையை வலியுறுத்தினார்.

## 3-13 பேயாழ்வார் காட்டும் த்வயம்

பிராட்டியைக் கொண்டு பர தத்துவத்தை அறிந்த ஆழ்வார்களுல் முதல்வர் பேயாழ்வார். திருமழிசையாழ்வாருக்கு ஆசாரியராக இருந்து ஆழ்வார்களில் முதல் ஆசாரியன் என்ற புகழ் பெற்றவர்.

ஆரம்ப பாசுரத்திலேயே, முதலில் பெரிய பிராட்டியாரைக் கண்டேன் என்றார். குடத்திற்கு குடம் ஆகும் தன்மை (க$_4$டத்துக்கு க$_4$டத்வம்) போலே ப்ரபிரம்மத்திற்கு ஸ்வரூப நிரூபக தர்மங்களாய் இருப்பவள் இவள். தத்வத்ரயங்கள் அனைத்தும் ஸத்தும், பெருமையும் தன்னைப் பற்றி பெற வேண்டும் என்ற கருணையோடு இருப்பவள்.

இப்படி பிராட்டி ஸம்பந்தத்தையும், ஆசாரிய ஸம்பந்தத்தையும் காட்டிய பேயாழ்வார், தமக்கே உள்ள பாணியில் இரண்டாம் பாசுரத்தில் த்வயத்தை விளக்குகிறார்.

**இன்றே கழல் கண்டேன் *ஏழ்பிறப்பும் யான் அறுத்தேன் *
பொன்தோய் வரை மார்வில் பூந்துழாய் * - அன்று
திருக் கண்டு கொண்ட திருமாலே! * உன்னை
மருக் கண்டு கொண்டே என் மனம்**
பேயாழ்வார், மூன்றாம் திருவந்தாதி 2

என்று பகவானே அன்று பாற்கடலைக் கடைந்த போது மஹாலக்ஷ்மீயானவள் உம்மை அறிந்து கொண்டு உன்னுடைய மாலைகள் அணிந்த திருமார்பில் வந்து அமர்ந்தாள். நீதான் திருமால் என்பதைக் காட்டிக் கொடுத்தாள். இது தத்துவத்தைக் காட்டியது.

அந்த திருமாலே, உம்மை நான் அறிந்து கொண்டு விட்டேன். அதாவது நீர்தான் ஶ்ரிய:பதி, மோக்ஷப்ரதா (மோக்ஷ பலனை அளிப்பவன்) என்று. உம்முடைய திருவடிகளை இன்று நான் பிடித்துக் கொண்டேன். எம்பெருமானின் திருவடிகளே உபாயம் என்ற ஹிதத்தை காட்டியது.

அதனால் ஸம்ஸாரத்தை அறுத்துத் தள்ளினேன். ஸேவை ஸாதித்த உன்னை நன்கு பொருந்தக் கண்டு கொண்டேன். இது புருஷார்த்தத்தைக் காட்டியது. பேயாழ்வார் அதி ஸாமர்த்தியமாக த்வயத்தை விவரிக்கிறார் இரண்டு என்ற பாசுர கணக்கில்.

திருவும், திருவடிகளும் இங்கே ஸ்பஷ்டம். இன்றே என்பதில் உள்ள ஏகாரம் ப்ரபத்தியின் நிகழ் காலத்தை காட்டுகிறது. நினைத்த உடனே தாமதிக்காமல் செய்ய வேண்டிய காரியம் என்பதைக் குறித்தது. ஏழ்பிறப்பு அறுத்தேன் என்பது ஜன்ம ஜன்மாக வரும் இந்த சக்கரத்திலிருந்து விடுதலையை சொல்லுகிறது. மருக் கண்டு கொண்டு என்று ஜீவாத்மாவின் ஸ்வருபமே எம்பெருமானுக்கு செய்யும் பணிவிடை என்பதை அறிந்து, மனம் பொருந்தி, அனுபவிக்கும் ஆனந்த கடலே பரம் ப்ராப்யம் என்பதைக் காட்டியது.

## 3-14 ஈச்வரன் தரும் ஞானம் அவசியமா?

ஸத் ஸம்பிரதாய ஆசார்ய பரம்பரை பற்றுவது மிகவும் அவசியம். ஏற்கனேவே சொன்னோம். **“ஈஸ்வராத் ஜ்ஞாநமந்விச்சே$_2$த்”** என்று ஞானத்திற்கு சிவனை வேண்டு என்று. இங்கே அதை விளக்குவோம்.

**சடையன் திறல் அவர்கள், பெரு ஞானக் கடல் அதனை ***
**இடை அமிழாது கடக்கினும். ஈதளவு என்று அறியார் ***
**விடையுடன் ஏழ் அன்று அடர்த்தவன், மெய்யருள் பெற்ற நல்லோர் ***
**அடைய அறிந்து உரைக்க * அடியோமும் அறிந்தனமே**
**ஸ்வாமி தேசிகன் அமிருத ஸ்வாதினி 34**

உலகத்தில் சிவனிடமிருந்து ஞானத்தை பெறலாம் என்று சாதாரண மனிதருக்கு சொல்கிறது சாஸ்திரம். அந்த சிவனைப்பற்றி பெரும் ஞானக் கடலைத் இடையே உள்ளே அமிழ்ந்து போகாது தாண்டியவர்களாயினும், இதுதான் அந்த கடலின் அளவு என்று ஸாரார்த்தத்தை அறிய மாட்டார்கள்.

இதை அறிந்தவர் யார் என்றால் அன்றைக்கு ஏழு காளைகளையும் ஒரே சமயத்தில் தன் பலத்தால் அடக்கிய கண்ணபிரானின் அருள் பெற்ற சிறந்த ஆசாரியர்களின் உபதேசத்தை கேட்டு, அறிந்து பெருமை பெற்றவர்களே என்றார்.

## 3-15 முடிவுரை

ஸத்ஸம்பிராதாயம் என்று அழைக்கப்படும் நம் குலம், மிக பரிசுத்தமானது. எம்பெருமான் தொடங்கி, இன்று உள்ள ஆசாரியர்கள் வரை, வழி வழியாய், சாஸ்திர விதிப்படி, எம்பெருமான் உகந்த முறையிலே அனுஷ்டிக்கப்படுள்ளது.

**கடல் அமுதத்தைக் கடைந்து சேர்த்த * திருமால்**
**அடி காட்டிய * நம் தேசிகர் தம் * நிலை பற்றிச் சேர்ந்தோமே**

prapatti.com

ஸ்வாமி தேசிகன், அமிருத ரஞ்சனி 2

“அன்று கடலைக் கடைந்து அமிர்தத்தை அளித்த எம்பிரானுடைய திருவடிகளைக் காட்டிக் கொடுத்த நம் ஆசாரியர்களின் அனுஷ்டானம் மிகச் சிறந்தது. அதை நாமும் பற்றி மகிழ்ந்தோம்,” என்றார்.

**தன்னடிக்கீழ் உலகு ஏழையும் வைத்த, தனித்திருமால் ***
**பொன்னடிக்கு ஏற்கின்ற புண்ணியர் கேண்மின், புகல் அறிவார் ***
**முன்னடி பார்த்து முயலுதலால், அவர் சாயை எனப் ***
**பின்னடி பார்த்து நடந்து, பெரும் பதம் ஏறுவமே**

ஸ்வாமி தேசிகன், பரமத பங்கம் 51

“எம்பெருமான் தன் திருவடிகளுக்கு கீழ் ஸகல லோகங்களையும் ஆட்சி செய்கின்றான். அந்த திருவடிகளை அனுபவிக்க அனைவருக்கும் உரிமை உண்டு.”

“நல்லது ஒன்று சொல்கிறேன், புண்யஸாலிகளே கேளுங்கள். உபாயங்களின் ஸ்வரூபத்தை அறிந்த நம் ஆசாரியர்கள் அவர்களுடைய ஆசாரியர்களின் அடிச்சுவட்டை கவனித்து அதையே அனுஷ்டிக்க முற்படுவதால், நாமும் அவர்பின் நிழல் போல கவனித்து அனுஷ்டித்து மோக்ஷ பராப்தி பெருவோம்,” என்றார்.

**ஸ்ரீபாஷ்யகாரருடைய சிஷ்ய ஸம்பிரதாயங்களில் ஒன்றிலும்**
**அர்த்தவிரோதமில்லை. வாக்ய யோஜநாபேதமே உள்ளது.**

ஸ்வாமி தேசிகன், ஸம்பிரதாய பரிசுத்தி

என்று ஸ்வாமி தேசிகன் ஸாதித்தார். அதாவது தத்வ ஸித்தாந்ததில் வேறுபாடு கிடையாது. ஆனால் வாக்யங்களின் பதங்களைக் கூட்டிப் பொருள் கொள்வதில்தான் வேற்றுமை என்றார்.

prapatti.com

# 4 பொருள்

**சேர்க்குந் திருமகள் சேர்த்தியில் மன்னுதல்**
**காக்கும் குணங்கள் கருணை அடிகள்**
**அடையும் புகல் அதுலே பற்றுதல்**
**இயலா நிலை எமக்கின்ற பேறு**
**ஏற்கும் எல்லைகள் அறுக்கும் களைகள்**
**முன்னோர் பத்தும் மறையவர் நிதிகள்.**

| | |
|---|---|
| **சேர்க்கும் திருமகள்** | = பகவானிடம் சேர்ப்பிக்கும் பெரிய பிராட்டியார் |
| **சேர்த்தியில் மன்னுதல்** | = அவனுடன் சேர்ந்தே இருக்கும் ஸ்திரமான தன்மை |
| **காக்கும் குணங்கள்** | = ரக்ஷிக்கும் திருக்கல்யாண குணங்கள் |
| **கருணை அடிகள்** | = சேதனர்களுக்கு பற்ற சுலபமான திருவடிகள் |
| **அடையும் புகல்** | = அவைகளையே உபாயம் |
| **அதுலே பற்றுதல்** | = என்று ப்ரபத்தி செய்வது |
| **இயலா நிலை** | = மற்ற உபாயங்களோ, பலன்களையோ நாடாது |
| **எமக்கின்ற பேறு** | = நித்யமான பகவத் கைங்கர்யம் |
| **ஏற்கும் எல்லைகள்** | = அந்த அநுபவத்தின் எல்லையை பிராத்தித்து |
| **அறுக்கும் களைகள்** | = அகங்கார மமகாரங்களை விலக்கி (பெறுவாய் என) |
| **முன்னோர் பத்தும்** | = ஆசாரியர்கள் உரைத்த பத்து அர்த்தங்களையும் |
| **மறையவர் நிதிகள்** | = வேதாத்யனம் செய்தவர்கள் அளித்த சொத்து |

## 4-1 முன்னுரை

நான்காம் பாசுரத்தின் முதல் பதம் **சேர்க்கும்**. கடைசி பதம் **நிதிகள்.** இந்த த்வயம் என்னும் மந்திரத்தின் விவரணமான பாடல்களின் அர்த்தங்கள் முன்னோர்கள் அருளி நமக்காக சேகரித்து வைத்திருக்கும் நிதிகள். அவற்றின் பலன் என்ன என்றால் ஒன்றே ஒன்று. நம்மை அந்த எம்பெருமானிடம் கொண்டு போய் சேர்ப்பிப்பது.



prapatti.com

நம்முடைய பூர்வாசாரியர்களில் எம்பெருமானார், அவருக்கு முன்னே இருந்தவர்கள் போன்றோர் இந்த ரஹஸ்ய த்ரயங்களை பல இடங்களில் காலக்ஷேபம் பண்ணியுள்ளனர். ஆனால் ஒரு க்ரந்தமாகவோ, பாசுரங்களாகவோ எழுதி வைக்கவில்லை.

எம்பெருமானாரின் ப்ரதம சிஷ்யரான கூரத்தாழ்வான் ஒரு கிரந்தம் எழுதியாதாக சொல்லுகிறார்கள். அது இப்போது இல்லை. அதன்பின், பராசர பட்டர், முதல் முதலாக **அஷ்ட ஸ்லோகி** என்று ரஹஸ்ய த்ரயங்களின் ஸாரத்தை சுருக்கமாக அருளினார். பிறகு பிள்ளைலோகாசாரியார், ஸ்வாமி தேசிகன் இவர்கள் பல இடங்களில் இவற்றை விவரித்துள்ளனர்.

நம்மை போன்ற ஸம்ஸாரிகளுக்கு இந்த பூவுலகில். ஆழ்வார்களின் திருவாக்கிற்கு உகந்ததாய், வேதங்களின் பொருளை விரித்து கூறும் நம் ஆசாரியர்களின் திருவாக்கே உயர்ந்த புதையல்.

## 4-2 பராசர பட்டர் அருளிய அர்த்தங்கள்

**நேத்ருத்வம் நித்யயோக$_3$ம் ஸமுசித-**
**கு$_3$ணஜாதம் தநுக்$_2$யாபநம் ச**
**உபாயம் கர்த்தவ்யப$_4$ாக$_3$ம் த்வத$_2$ மிது$_2$நபரம்**
**ப்ராப்ய மேவம் ப்ரஸித்$_3$த$_4$ம் ।**
**ஸ்வாமித்வம் ப்ரார்த்த$_2$நாம் ச ப்ரப$_3$லதர-**
**விரோதி$_4$ப்ரஹாணம் த$_3$சைதாந்**
**மந்தாரம் த்ராயதே சேத்யதி$_4$க$_3$த நிக$_3$ம:**
**ஷட்பதே$_3$ாSயம் த்$_3$விகண்ட$_3$: ।।**

பராசர பட்டர், அஷ்ட ஸ்லோகி 5

என்று அஷ்டஸ்லோகியில் த்வயத்தின் பொருளை சுருக்கமாக பராஸர பட்டர் அருளி இருக்கிறார். ஸ்லோகத்திலேயே **"தசைதாந்"** என்று பத்து அர்த்தங்கள் என்று ஸாதித்திருக்கிறார். **"ஷட்பதோயம் த்விகண்ட:"** என்பது ஆறு பதங்கள், இரண்டு வாக்கியங்கள்.

1. நேத்ருத்வம் (புருஷகாரத்வம் )= ஸ்ரீ
2. நித்யயோகம் = மத்
3. ஸமுசிதகுணஜாதம் = நாராயண
4. தநுக்யாபநம் = சரணௌ
5. உபாயம் = ஶரணம்
6. கர்த்தவ்யபாகம் = ப்ரபத்யே
7. ப்ராப்யம் த்வத மிதுநபரம் = ஸ்ரீ மதே
8. ஸ்வாமித்வம் = நாராயண
9. ப்ரார்த்தநாம் = ஆய
10. விரோதிப்ரஹாணம் = நம:

| | |
|---|---|
| இதி | இப்படி |
| த்3விகண்ட3: | இரண்டு வரிகளில் |
| ஷட்பதோ3Sயம் | ஆறு பதங்களாய் |
| த3ஶைதாந் | பத்து (அர்த்தங்களாய்) |
| அதி4க3த நிக3ம | வேதத்தில் புகழ்ப்பட்டுள்ள |
| மந்தாரம் | மந்திரமானது |
| த்ராயதே | (த்யானிப்பவனை) காக்கும் |
| ஏவம் ப்ரஸித்3த4ம் | என்பதே இப்படி புகழ் வாய்ந்தது. |

1. Function of recommendation authority
2. Eternally together, separated not even by a second
3. Essential group of qualities / attributes
4. Revealing His form, the roopa
5. Appropriate means
6. Jeevas entrusting their soul to the Lord
7. The ultimate objective of serving the Lord and His consort
8. Status of being master to everything
9. Request to render the service
10. Warding off the obstacles to the final objective

prapatti.com

## 4-3 ஸ்வாமி தேசிகன் அருளிய அர்த்தங்கள்

ஸ்வாமி தேசிகன் துவயச்சுருக்கு என்கிற தமிழ் பிரபந்தத்தில் த்வயத்தின் பத்து அர்த்தங்களையும் பத்து பாசுரங்களால் விளக்கியிருக்கிறார். அதில் கடைசி பாசுரத்தில் இந்த பத்து அர்த்தங்களையும் அழகாக, சுருக்கமாக அமைத்து நமக்கு தருகிறார்.

**சேர்க்குந் திருமகள் * சேர்த்தியின் மன்னுதல் * சீர்பெரியோற்கு**
**ஏற்கும் குணங்கள் * இலக்காம் வடிவில் இணையடிகள் ***
**பார்க்குஞ் சரண் அதில் பற்றுதல் * நம்நிலை நாம் பெறும்பேறு ***
**ஏற்கின்ற எல்லைகள் * எல்லாம் களையற எண்ணினமே.**
ஸ்வாமி தேசிகன், த்வயச் சுருக்கு 12

1. **சேர்க்குந் திருமகள்** - ஸ்ரீ - எம்பெருமானிடம் நம்மை புருஷகாரம் செய்து சேர்ப்பிக்கும் பிராட்டி
2. **சேர்த்தியின் மன்னுதல்** - மத் - எம்பெருமானை ஒருக்காலும் பிரியாத தன்மை
3. **சீர்பெரியோற்கு ஏற்கும் குணங்கள்** - நாராயண - உயர்த்தியால் பெரியவன் எனும் எம்பெருமானின் திருக் கல்யாண குணங்கள்
4. **இலக்காம் வடிவில் இணையடிகள்** - சரணௌ - அடியவர்களின் நோக்கிற்கு சிறந்ததான சரீரத்தின் பகுதியான திருவடிகள்
5. **பார்க்குஞ் சரண்** - சரணம் - அடைக்கலம் கொள்பவன் ஸித்தோபாயமாகக் கொள்ளும் திருமால்
6. **அதில் பற்றுதல்** - ப்ரபத் - அந்த எம்பெருமானை பற்றுவதற்கான ஸாத்ய உபாயமான பரந்யாஸமும்
7. **நம்நிலை** - யே - அகிஞ்சன, அநந்ய கதியற்றவான நம் நிலை
8. **நாம் பெறும்பேறு** - ஸ்ரீ மதே நாராயண - நாம் அடையும் முக்யமான பலனாகிய ஸ்ரீமந் நாரயணன்
9. **ஏற்கின்ற எல்லைகள் எல்லாம்** - ஆய - ப்ரபன்னன் கொள்கின்ற பகவத் பாகவத கைங்கர்யங்கள்
10. **களையற** - நம: - அகங்கார மமகாரங்கள் ஒழியப் பெற்று

**எண்ணினமே** - ஆகிய பத்து அர்த்தங்களையும் த்வயத்தில் அனுஸந்தித்தோம்

## 4-4 ஸ்வாமி தேசிகன் அருளிய முறையில் இங்கே அர்த்தங்கள்

ஸ்வாமி தேசிகன் உகந்த முறையில் இங்கு நம்முடைய பாசுரத்திற்கு பத்து பொருள்களை காண்கிறோம்

1. ஸ்ரீ - **சேர்க்குந் திருமகள்** - புருஷகாரகம்
2. மத் - **சேர்த்தியில் மன்னுதல்** - பகவானுடன் பிரியாமை
3. நாராயண - **காக்கும் குணங்கள்**- ரக்ஷகனுக்குவேண்டிய குணங்கள்
4. சரணௌ - **கருணை அடிகள்** - திவ்ய மங்கள விக்ரஹமுடைய
5. ஶரணம் - **அடையும் புகல்** - ஶரணாகதி உபாயம்
6. ப்ரபத் - **அதுலே பற்றுதல்** - மஹாவிசுவாசம்
7. யே- **இயலா நிலை** - வேறு உபாயமற்று
8. ஸ்ரீமதே நாராயண - **எமக்கின்ற பேறு** - அடையும் பகவானும், தாயாரும்
9. ஆய - **ஏற்கும் எல்லைகள்** - பகவத் பாகவத கைங்கர்யம்
10. நம: - **அறுக்கும் களைகள்** - அஹங்காரம், மமகாரம் நீங்கல்

## 4-5 ஸ்வாமி தேசிகன் பல இடங்களில் அருளியவை

**ஓதும் இரண்டை இசைத்து *அருளால் உதவும் திருமால் ***
**பாதம் இரண்டும் சரண் எனப் பற்றி * நம் பங்கயத்தாள் ***
**நாதனை நண்ணி * நலந்திகழ் நாட்டில் அடிமை எல்லாம்**
**கோது இல் உணர்த்தியுடன் * கொள்ளுமாறு குறித்தனமே**
ஸ்வாமி தேசிகன், அதிகார சங்கிரகம் 35

என்று ஸ்வாமி தேசிகன், த்வயத்தின் திரண்ட பொருளை அருளினார்.

எம்பெருமான், ஸ்ரீமந் நாராயணன், சேதனர்களுக்கு அருள் புரிவதற்காகவே, கடவில்லி என்னும் உபனிஷத்தில் தனித்துக் கிடந்த இரண்டு வாக்யங்களை ஒன்று சேர்த்து அருளினான் என்று த்வயம் உதித்ததை கூறினார்.

நம்முடைய பிராட்டியுடன் என்றும் கூடிய அந்த பகவானை நன்கு நெருங்கி, அவனையே உபாயமாக வரித்து, கரையில்லாத ஆனந்தம் நிரம்பி இருக்கும் மோஷ ஸாம்ராஜ்யத்திற்கு சென்று, அவர்களுக்கு எல்லாவிதமான கைங்கர்யங்களையும், தான், தனது என்ற அக்ங்கார மமகாரங்கள் இல்லாமல் செய்து மகிழ்வான்.

"கொள்ளுமாறு குறித்தனமே" என்று இப்படிப்பட்ட அர்த்தங்களை த்வயத்தில் அனுஸந்தித்தோம் என்று விளக்குகிறார்.

**அகல இலாத் திருமகள் அன்பர் வந்தார்**
**அடி இரண்டும் ஆறாகத் தந்தார் வந்தார்**
**புகலிலில்லா புகலாகும் புனிதர் வந்தார்**
**பொன்னுலகில் திருவுடனே திகழ்வார் வந்தார்**
**அகிலம் எலாம் ஆனந்தம் ஆனார் வந்தார்**
**அடியிணைக்கீழ் வைத்து அடிமை கொள்வார் வந்தார்**
**பகல் நடுவே இரவு அழைக்க வல்லார் வந்தார்**
**பகல் ஒன்றாய் இரவு அழித்தார் வந்தார் தாமே.**

ஸ்வாமி தேசிகன், திருச்சின்ன மாலை 7

என்று திருச்சின்னமாலை என்னும் பிரபந்தத்திலே ஸ்வாமி தேசிகன், த்வயத்தின் அர்த்தத்தை விவரிக்கிறார். பதத்திற்கு பதமாய் வெகு சுலப முறையில் ஸ்வாமி ஸாதித்துள்ளார்.

**அகலகிலா திருமகள்** = ஸ்ரீ மத்
**புகலாகும் புனிதர்** = நாரயணா
**அடி இரண்டும்** = சரணௌ
**ஆறாக** = ஶரணம்
**புகலாகும்** = ப்ரபத்
**புகல் இல்லா** = யே
**பொன்னுலகில் திருவுடனே திகழ்வார்**

**அகிலம் எல்லாம் ஆனந்தம் ஆனார்**
**அடியிணைக்கீழ் வைத்து அடிமை கொள்வார்** = ஸ்ரீ மதே நாரயணாய
**இரவு அழித்தார்** = நம: (விரோதிகளை அழிப்பது)

ஸ்வாமி தேசிகன் நுணுக்கமாக பல அர்த்தங்களை இங்கு ஸாதித்துள்ளார்.

பகல் நடுவே இரவு அழைக்க வல்லார் வந்தார் என்பது மகாபாரத யுத்தத்தில், வரும் சம்பவம். அருச்சுனன் மகன் அபிமன்யுவை ஜயத்ரதன் அநியாயமாக கொன்றான். அருச்சுனன் பதின்நான்காம் நாள் யுத்தத்தில் அன்று மாலைக்குள் ஜயத்ரதனை கொன்று பழி வாங்குவதாக சபதம் செய்தான். அப்படி செய்து முடிக்காவிடில் தான் தீயில் புகுவதாக வாக்களித்தான் அருச்சுனன் ஜயத்ரதனை கொல்வதற்கு சகாயமாக பகல் நடுவிலே ராத்திரியை கொண்டு வந்தான் கிருஷ்ணன்.

பகல் ஒன்றாய் இரவு அழித்தார் என்பது பகல் என்பது முக்தி. இரவு என்பது ஸம்ஸாரம். **"ஞானாந் மோக்ஷம், அஞ்ஞானாந் ஸம்ஸாரக:"** என்கிறபடி. ராத்ரியாகிய ஸம்ஸாரத்தை அழித்து மோக்ஷமாகிய பகலைக் கொடுத்தவன் கிருஷ்ணன்.

ஸ்வாமி தேசிகன், தனக்கே உள்ள பாணியில், (style) காட்டுகிறார். நம்மாழ்வார் ப்ரபத்தி செய்த முறையிலே ஸாதிக்கிறார். **எத்திறம் எத்திறம்** என்று நம்மாழ்வார் மோகித்து கிடந்த கண்ணனையே இங்கு சூசகமாக (subtle) காண்பிக்கிறார்.

முதல் வரியில் இரவை கொண்டு வந்தார் என்றார். இரண்டாம் வரியில் இரவை அழித்தார் வந்தார் என்றார். பகவானுடைய ஸங்கல்பத்தால் தான் **ஸ்ருஷ்டி ஸ்திதி, ஸம்ஹாரங்கள்** எல்லாம் நடக்கிறது என்பதை காண்பிக்கிறார் இங்கே.

## 4-6 கூரத்தாழ்வான் அருளிய த்வயத்தின் ஸாரம்



prapatti.com

எது நிதி என்பதை எம்பெருமானாரின் ப்ரதம சிஷ்யரான கூரத்தாழ்வான் காட்டிக் கொடுக்கிறார்.

**ஸ்ரீநிதி4ம் நிதி4ம் அபார மர்தி2நாம்**
**அர்தி2தார்த2 பரிதாந தீ3க்ஷிதம் ।**
**ஸர்வபூ4த ஸுஹ்ருத3ம் த3யாநிதி4ம்**
**தே3வராஜமதி4ராஜமாஶ்ரயே ॥**

கூரத்தாழ்வான் வரதராஜஸ்தவம் 2

என்று வரதராஜ ஸ்தவத்தில் கூரத்தாழ்வான் ஸாதிக்கிறார்.

**ஸ்ரீநிதி4ம் அர்தி2நாம் நிதி4ம் அபாரம்** - ஸ்ரீ என்பவள் நிதி. அந்த பெருந்தேவி பிராட்டிக்கு நிதியான அவன், திருவுக்கும் திருவானவன், தன்னை யாசித்து வருபவருக்கு கரை காண முடியாத சுரங்கம் (gold mine), புதையல் (treasure) போன்றவன்.

**அர்தி2த அர்த2 பரிதாந தீ3க்ஷிதம்** - சேதனர்கள் விரும்பிய எல்லாவிதமான புருஷார்த்தங்களை நன்கு அருளுதில் விரதம் கொண்டவர். யார் எதைக் கேட்டாலும், எப்போது கேட்டாலும், எவ்வளவு கேட்டாலும் (whatever, whenever and how much quantity they request) வாரி வழங்கும் வரதன். அந்த பகவானுடைய தயைதான் நிதி.

**ஸர்வபூ4த ஸுஹ்ருத3ம் த3யாநிதி4ம் - தேவ, திர்யங்க், மனுஷ்ய ஸ்தாவர** என்னும் எல்லா ஜீவராசிகளுக்கும் நல்லதையே எண்ணுபவர். கருணையே நிதியாக உடையவன்.

**அதி4ராஜம் தே3வராஜம் ஆஶ்ரயே** - "எல்லாவற்றிற்கும் தலைவனாயும், அமரர்கள் அனைவருக்கும் அதிபதியான அந்த தேவாதிராஜனை நான் ஶரணம் அடைகிறேன்," என்று அருளினார்.

## 4-7 ஸ்வாமி தேசிகன் ஸார ஸாரத்தில் அருளியது



prapatti.com

ஸ்வாமி தேசிகன் ஸார ஸாரத்தின் முடிவில் ஸாதிக்கும் த்வயத்தின் பத்து அர்த்தங்கள்

1. இப்படி **ஸஹதர்மசாரிணீ ஸம்பந்தமும்** (**ஸ்ரீ** - பிராட்டியுடன் சேர்ந்திருத்தல்)

2. இதனுடைய **நித்யத்தையும்** (**மத்** - பிராட்டி நித்யமாய் பிரியாது இருத்தல்)

3. **ரக்ஷணோபயுக்த குணாதிகளும்** (**நாராயண** - காப்பதற்கு வேண்டிய திருக்கல்யாண குணங்கள்)

4. **ஸுபாஸ்ரய விக்ரஹமும்** (**சரணௌ** - தியானிப்பதற்கு ஏற்ற பகவானின் திருமேனி)

5. இவற்றாலே விசிஷ்டனுடைய **உபாய பர்வமும்,** (**ஶரணம்** - உபாமாயிருத்தல்)

6. இவனுடைய **வசீகரணமும்**, இது ஸக்ருத் கர்த்தவ்யமானபடியும் (**ப்ரபத்** - அனைவரையும் வசீகரிக்கும் ப்ரபத்தியும் ஒரே முறை செய்யும் உயர்வும்)

7. இதின் **அதிகாரி விஷேமும்** (**யே** - ப்ரபத்தி செய்பவன் தகுதி)

8. ஸர்வ ஸேஷி ஸப்தீகனாய்க் கொண்டு **கைங்கர்ய ப்ரதி ஸம்பந்தியானபடியும்,** ஸர்வ விசிஷ்டனுடைய **நிரதிசய போக்யத்தையும்** (**ஸ்ரீமதே நாராயண** - பிராட்டியுடன் கூடிய அந்த கைங்கர்யத்தை ஏற்றுக் கொள்கிற எம்பெருமான் மிகவும் இனிமையானவன்)

9. அவன் திறத்தில் ஸ்வ ரூபமான **ஸ்வச்சந்த கைங்கர்யமும்** (**ஆய** - அவனுக்கே விருப்பப்படி வேண்டிய பணிகளைச் செய்தல்)

10. இது **அஹங்காராதி ரூபமான களயற்று நிற்கிற நிலையும்**
(நம: - அகங்கார மமகார களைகளை அடியோடு அறுத்தல்)

இப்படி பரிசுத்தமான கைங்கர்யத்தினுடைய ப்ராத்தனையும் (என்ற பொருள்களுடன் தூய தொண்டை ப்ராத்தித்தல்) அடைவே ப்ரகாசிக்கின்றன.

என்று ஸ்வாமி தேசிகன் ஸார ஸாரத்தில் ஸாதித்தார்.

## 4-8 பிள்ளைலோகாசாரியார் ஸார ஸங்க்ரஹத்தில் அருளியது

த்$_3$வயமென்று திருநாமத்தையுடைத்தயிருந்துள்ள வாக்யத்$_3$வயம் பத்து அர்த்த$_2$ங்களை ப்ரதிபாதி$_3$க்கிறது. அதாகிறது -

1. **ஸ்ரீய: ப்பதித்வமும்**
2. **நாராயணத்வமும்**
3. **ஸர்வலோக ஶரண்யமான சரணாரவிந்த$_3$யுக$_3$ளும்**
4. **அதனுடைய ப்ராபகத்வமும்**
5. **தத்$_3$கே$_3$ாசரமாய் சேதநக$_3$தமாயிருந்துள்ள ப்ராத்$_2$நாக$_3$ர்ப்ப$_4$ விஸ்ரம்பமும்**
6. **லச்ஷமீ தத்$_3$வல்லபர்களுடைய நிகி$_2$லாத்ம நித்ய கைங்கர்ய ப்ரத$_4$ாநர்த்த$_2$மான நித்ய ஸம்ப$_3$ந்தமும்**
7. **கைங்கர்ய ப்ரதிஸம்ப$_3$ந்தி$_4$யான ஈஶ்வரனுடைய நிரதஶய பே$_4$ாக்$_3$யத்தையும்**
8. **ஸர்வ ஸ்வாமித்வமும்**
9. **நித்ய கைங்கர்யமும்**
10. **கைங்கர்ய ப்ரதிப$_3$ந்த$_4$க நிஶ்ஶேஷ நிப$_3$ர்ஹணுமாகிற அர்த்த$_2$ விஶேஷங்கள்;**

என்று ஸார ஸங்க்$_3$ரஹத்தில் பிள்ளைலோகாசாரியர் ஸாதித்துள்ளார்.

## 4-9 ஸ்வாமி தேசிகன் ரஹஸ்ய மாத்ருகையில் அருளியது

ஸ்வாமி தேசிகன் ரஹஸ்ய மாத்ருகையில்

“இப்படி திருமந்திரத்தில் ஸர்வ வேதங்களுக்கும் விதையான முதல் பதத்திலே (ப்ரணவத்திலே) முளைத்து (ஸ்வரூப ஞானம் பெற்று), இரண்டாம் பதத்தாலே (நம:) வளர்ந்து (பரபத்தி ஞானத்தை கங்கார மமகாரங்கள் இன்றி பெற்று), மூன்றாம் பதத்திலே (நாராயண) பலபர்யந்தமான ஸம்யக்ஜ்ஞாநத்தையுடையவனுக்கு (சிறந்த அறிவை) அநுஷ்ட்டேயமான (செய்ய வேண்டிய) ஸாங்க பரஸமர்ப்பணத்தை விசதமாக ப்ரகாஶிப்பிக்கிற த்வயத்தில்

ப்ரதமாக்ஷரமான ஶ்ரீஶப்தத்திலே விஷ்ணு பத்நியாய்ப் புருஷகாரபூதையான “வேரி (நறுமணம்) மாறாத பூமேல் இருப்பாள் வினை தீர்க்கும்” ப்ரகாரங்களும்,

அதின் மதுப்பிலே (பிரியாமையிலே) அலர்மேல் மங்கை அசரண்ய சரண்யனானவன் மார்பிலே “அகலகில்லேன் இறையும்” என்று உறையும்படியும்

நாராயண ஶப்தத்திலே “நிகரில் புகழாய்” இத்யாதிகளில் அருளிச்செய்த சரண்ய ஸ்வபாவமும்

சரண ஶப்தத்திலே உபாய உபேயதசைகளை ஊடுருவி நிற்கிற (பூர்ணமாய் கொண்ட) திவ்ய மங்கள விக்ரஹயோகமும்,

ஶரணம் என்கிற ஶப்தத்திலே, “நின் சரண் அல்லால் சரண் இல்லை,” என்று “கழல்கள் அவையே சரணாகக்” கொள்ளுகிறபடியால்,

ப்ரபத்யே என்கிற பதத்திலே கத்யர்த்தமான தாதுவில் ப்ரமாண அநுஸாரத்தாலே அத்யவஸாயாதி பூர்வமாக “அடிக்கீழ் அமர்ந்து” அடைக்கலம் புகுகிறபடியும்

**இப்பதத்தின் உத்தமனிலே** “களைகண் (உபாயம்) மற்றிலேன்” **என்னும்படி தானும், தமரும், பிறரும், தனக்குத் தஞ்சமின்றிக்கே “புகல் ஒன்றில்லா அடியேன்” என்று நிற்கிற நிலையும்,**

**ஸ்ரீமதே என்கிற பதத்திலே** “பூவளரும் திருமகளால் பொன்னுலகில் (பரமபதத்தில்) அருள்” **பெறும் அவனுக்கு** “கோலத்திருமாமகளோடு உன்னை” **என்னும்படி நின்ற ப்ராப்ய** (அடையப்படும்) **தம்பதிகளுடைய பிரிவற்ற சேர்த்தியும்,**

**நாராயணாய என்கிற பதத்திலே** “வழிவிலா (குற்றம் அற்ற) அடிமை”**க்கு வகுத்த** (உரிமையான) **ஶேஷினுடைய நிரதிஶய** (நிகரில்லாத இனிமையும்) **போக்யத்வமும்,**

**நம: என்ற ஸர்வ விரோதி நிவ்ருத்தி தசையில் வரும் கைங்கர்யம் களை அற்று** (குற்றமற்று) **இருக்கும்படியும்**

**ப்ரதாநமாக அநுஸந்தேயம்,” என்று ஸாதித்தார்.**

## 4-10 பிள்ளைலோகாசாரியார் தனித்வய ரஹஸ்யத்தில் அருளியது

ஆக

1. **புருஷகாரம்** சொல்லி
2. அதினுடைய **நித்யத்வம்** சொல்லி
3. அப்புருஷகாரம் மிகை என்னும்படியான **வாத்ஸல்யாதி குணயோகம்** சொல்லி
4. **விக்ரஹ வைலக்ஷண்யம்** சொல்லி
5. இஷ்ட ப்ராப்திக்கும் அநிஷ்ட நிவாரணத்துக்கும் **நிரபேக்ஷமான உபாயம்** சொல்லி
6. **தத்ஸ்வீகாரம்** சொல்லி
7. **ஸ்வாமித்வ பூர்த்தி** சொல்லி
8. **கைங்கர்ய ப்ரார்த்தனை** சொல்லி

9. **கைங்கர்ய விரோதி போனபடி** சொல்லித்

தலை கட்டுகிறது.

## 4-11 த்வயத்தின் திரண்ட பொருள்

ஸ்வாமி தேசிகன் ஸ்ரீ ரஹஸ்ய பதவீயில் த்வயத்தின் திரண்ட பொருளை சுருக்கமாக காண்பிக்கிறார்.

> **ஸ்ரீமானான நாராயணன் திருவடிகளில் களையற்ற நித்ய கைங்கர்யம் பெறுகைக்கு ஸ்ரீமானான நாராயணன் திருவடிகள் இரண்டையும் ஶரணமாகப் பற்றுகிறேன் என்பது திரண்ட பொருள்.**
>
> **ஸ்வாமி தேசிகன் ஸ்ரீ ரஹஸ்ய பதவீ**

## 4-12 முடிவுரை

இப்படி இந்த பாசுரத்தில், த்வயத்தின் பத்து அர்த்தங்களையும் **"முன்னோர் பத்தும் மறையவர் நிதிகள்"** என்று சுருங்கச் சொன்னோம். முன்னோர் பத்தும் என்பது நம்முடைய பூர்வாசாரியர்கள் அருளிச் செய்த பத்து வகையான அர்த்தங்கள். பராஸர பட்டர், ஸ்வாமி தேசிகன், கூரத்தாழ்வான் ஸாதித்த முறையிலேயே என்ற ரீதியில்.

**மறையவர் (கண்ட/காத்த) நிதிகள்** என்பது வேதாந்தங்களை கரை கண்ட வேத விற்பன்னர்கள் நமக்காக பாதுகாத்து அளித்த சொத்து, ஐஸ்வர்யம், புதையல் (wealth) என்பதைக் காட்டுகிறது.

> **இன்னமுதில் பிறந்தாள் * இதம் கேட்க உரைத்த பிரான் ***
> **பொன்னருளான் மறை மௌலியில் * பூண்ட இரண்டையும் இசைத்து ***
> **தன்னுரை மிக்க தனம் இது எனத் * தந்த வேதகத்தின் ***

**துன்னு பொருள்கள் பத்தும் * தொலையா நிதி ஆகின்றவே**
**ஸ்வாமி தேசிகன், துவயச் சுருக்கு 1**

என்று சுவை மிகுந்த அமுதத்தில் பிறந்த பிராட்டி, சேதனர்களுக்காக உபாயத்தை விருப்பத்துடன் வேண்டிக் கேட்க, ஸர்வ உபகாரனான எம்பெருமான் தன் கருணையாலே உபதேசித்தான்.

"எதை என்றால், வேதங்கள் தங்கள் தலையில் சூடிக் கொண்டிருக்கும் உபனிஷத்தில் உள்ள இரண்டு வரிகளை ஒன்று சேர்த்து, இதுதான் த்வயம், இந்த த்வயம் என்னுடைய பல ஸ்ரீசூக்திகளிலும் உயர்ந்த செல்வம்," என்று உபதேசித்தான்.

"அந்த த்வயத்தில் பொதிந்துள்ள **பத்து கருத்துக்களும்**, மிக சிரமத்துடன், பாதுகாக்க வேண்டிய **புதையல், க்ஷேம நிதி, பொக்கிஷம்** (treasure, fortune) போன்றது," என்றார்.

மேற் பாசுரங்களில் த்வயத்தின் பத்து அர்த்த$_2$ங்களையும், ப்ரபத்தி முறையும் அதன் பலனையும் அனுபவிப்போம்

prapatti.com

# 5 ஸ்ரீ சப்தம்

**திருமகள் கேட்டவனை கேட்பித்து**
**தன்னடியார் அடைய தானடைந்து**
**குறை நீக்கி நிறையாக்கி துறையென**
**பறை நோக்க நம்மிறையின் மறையே.**

**திருமகள்** = ஸ்ரீமஹாலக்ஷ்மியானவள்
**கேட்டு** = சேதனர்களின் முறையீட்டைக் கேட்டு
**அவனை** = எம்பெருமானை
**கேட்பித்து** = கேட்க செய்து
**தன்னடியார் அடைய** = அடியவர்கள் தன்னையடைய சுலபமாக்கிக் கொண்டு
**தான் அடைந்து** = தான் சேதனனுக்காக எம்பெருமானை அடைந்து
**குறை நீக்கி** = சேதனனின் குற்றங்களை விலக்கி
**நிறை ஆக்கி** = ஞானத்தை பூர்த்தி செய்து (என ஆறு அர்த்தங்களுடன்)
**பறை நோக்க** = பகவத் கைங்கர்யத்தை எதிர்பார்த்து இருக்க
**துறை என** = (பிராட்டி மூலமாய் செய்யும் ப்ரபத்தி) இதுதான் சிறந்த உபாயம் என்று
**நம் இறையின்** = நம்முடைய பகவான், ரக்ஷகனான ஈசுவரன் அருளிய
**மறை** = வேத சாஸ்திரமான பாஞ்சராத்ரத்தில் உள்ளது.

## 5-1 முன்னுரை

ஐந்தாம் பாசுரம் ஆரம்பிப்பது **திருமகள்.** முடிப்பது **மறையே.** அதாவது எல்லா ப்ரமாணங்களும் ஒரே முகமாய் நிரூபிப்பது **நாராயணன்தான் பரம்பொருள்.** அந்த நாராயணன், சாதாரண நாராயணன் அன்றி லக்ஷ்மியுடன் கூடியவன் என்கிறது. **ஸகல வேதங்களினால் அறியப்படுவது ஶ்ரிய: பதித்வமே.**

மஹாலக்ஷ்மி, பெரிய பிராட்டி, ஸ்ரீ என்கிறவள் நமக்கு புருஷகாரமாகவும் (Recommend), உபாயமாகவும் (Route), உபேயமாகவும் (Rewards) ஆகாரத்ரய

prapatti dot com

ஸம்பந்நையாக இருக்கிறாள். எம்பெருமானின் ஸ்வரூப, ரூப, குண விபூதிகள் போன்றது இவளுடையதும்.

## 5-2 ஸ்ரீ சப்தம்

முதல் நான்கு பாசுரங்களில் த்வயத்தின் முன்னுரையாக சில விஷயங்களை பார்த்தோம் (Intorductory materials). த்வயத்தின் பெருமையை சொன்னோம் முக்கியமாக, **திருவும் அடிகளும் திறம்பட** என்று ஸ்ரீ ஸப்தத்தினாலும், பகவானின் திருவடிகளை ஸ்பஷ்டமாக (explicit) ஆக சொல்வதாலும் இந்த த்வய மஹாமந்த்ரம் உயர்ந்தது என அறிந்தோம்.

எற்கனவே த்வயத்திற்கு பத்து அர்த்தங்கள் என்று பார்த்தோம். இனி ஐந்தாம் பாசுரத்திலிருந்து பதிநான்காம் பாசுரம் வரை த்வயத்தின் பத்து பதங்களுக்கும் அர்த்தத்தை காணலாம். முக்கியமாக ஸ்வாமி தேசிகன் ஸார ஸாரத்தில் ஸாதித்த முறையில் அனுபவிக்கலாம்.

ஸ்வாமி தேசிகன் அருளிய சில்லரை ரஹஸ்யங்கள் என்று செய்யப்பட்ட முப்பத்து நான்கு ரஹஸ்யங்க்ளில் ஸார ஸாரம் என்பது ஒன்று. தவிர அபய ப்ரதாந ஸாரத்தையும், விரோதி பரிகாரத்தையும் சேர்த்து இங்கே பொருள் கூறப்படுகிறது. சில இடங்களில் பரிபாஷை நிறைந்துள்ள ஸ்ரீமத் ரஹஸ்யத்ரய ஸாரத்தையும் காட்ட வேண்டியுள்ளது.

ஸ்வாமி தேசிகன் சில்லரை ரஹஸ்யங்களில் ஸ்ருதிகள், அதாவது வேதங்களின் மூலத்தை நேரிடையாக சொல்லாமல் அதனுடைய கருத்தை மட்டும் கையாண்டிருக்கிறார் (Used the meaning and not the direct quote) அதனால் எல்லோராலும் இதை அனுபவிக்கமுடியும் (No restrictions).

இந்த பாசுரத்தில் ஸ்ரீ சப்தத்தின் பொருளை பார்க்கப் போகிறோம். இது த்வயத்தின் பூர்வ கண்டத்தில், முதல் வாக்கியத்தில் (first sentence) முதலில் வரும் பதம்.

## 5-3 ஸ்ரீயின் புருஷகாரகம்

**ஸ்ரீ என்பது பெரிய பிராட்டியாருக்குத் திருநாமம்**
பிள்ளைலோகாசாரியார் முமுக்ஷுப்படி 123

என்று முமுக்ஷுப்படியில் பிள்ளைலோகாசாரியார் அருளியுள்ளார். அவளுக்கு பிராட்டி, லக்ஷ்மீ, திருமகள், மலர்மகள், கடல் மகள் ஸ்ரீதேவி என்றெல்லாம் பேர்.

உடலால் ஒருவனுக்கு பேறு என்றது சாஸ்திரங்கள். திருமந்திரமோ ஆத்மாவினால் பேறு என்றது. சரம ஸ்லோகமோ ஈச்வரனால் பேறு, த்வய மந்திரமோ பிராட்டியால் பேறு என்றது.

**புருஷகாரகம் என்பது தகவுரை, பரிந்துரை** (recommendation) என்பார்கள். அதாவது சேர்ப்பிக்கும் தன்மையை சொல்லுகிறது. தத்துவங்களை நன்கு அறிந்த சேதனன், பகவான் எண்ணற்ற கல்யாண குணங்களை உடையவன், அவன் ஸ்வதந்திரன், ஸர்வ ரக்ஷகன், என்றெல்லாம் அறிகிறான். பகவானே இப்படி குணங்களில் மிகுந்து இருக்க, இவனை அடைய இன்னொருவர் அவசியமா? என்று தோன்றும்.

பகவானிடத்து தனித்து, அவனுக்கு மட்டுமே உள்ள ஒரு குணம் **ஸ்வாதந்திரியம்** (unrestricted absolute autonomy). அதாவது அவன் ஸ்வதந்திரன். மீதி எல்லாப் பொருள்களும், பிராட்டி உட்பட அனைவரும் அவனைச் சார்ந்து பரதந்திரர்களாய் (dependent) இருக்கிறார்கள்.

பிராட்டிக்கே உள்ள தனித்த குணம் **பகவானிடத்து புருஷகாரபூதையாய்** இருப்பது. இவள் விண்ணப்பதை நீட்டுகிறாள் சேதனனுக்கு பரிந்து. அவன் அதில் கையெழுத்து இடுகிறான். இந்த முறை ஏன் இப்படி? இது அவர்கள் இருவரும் வகுத்துக் கொண்ட **நியதி** (accord). ஏன் இப்படி என்று யார் அவரிடம் கேட்பது?

**புருஷகார பலத்தாலே ஸ்வாதந்திரியம் தலை சாய்ந்தால்**

**தலை எடுக்கும் குணங்களைச் சொல்லுகிறது நாராயண பதம்**
**பிள்ளை லோகாசாரியார், முமுக்ஷுப்படி 136**

பிராட்டி செய்யும் சிபாரிசாலே எம்பெருமானின் ஸ்வதந்திரம் என்ற குணம் இருந்த இடம் தெரியாமல் மறைந்து போகும்," என்றார்.

சரி, பிராட்டி புருஷகாரகம் செய்கிறாள் என்றால், அதைச் செய்ய அவளுக்கு **தனிப்பட்ட தகுதி** (unique ability) என்ன? என்பதைக் காணலாம். முதலில் ஸ்ரீ என்ற சப்தத்தின் பொருளை ஆராயலாம்.

## 5-4 வேத ப்ரமாணங்களில் ஸ்ரீ சப்தம்

வேதங்கள், ஸ்மிருதிகள், இதிகாசங்கள், புராணங்கள் எல்லாம் பல இடங்களில் இந்த ஸ்ரீயின் பெருமையை கோஷிக்கின்றன.

**யதாஸ் ஸத்வம் ததோ லக்ஷ்மிஹி**
பராசர மஹரிஷி , ஸ்ரீவிஷ்ணு புராணம் 1-9-29

என்று விஷ்ணு புராணம் சொல்கிறது, "எந்த இடத்தில் மங்களம் இருக்கிறதோ அந்த இடத்தில் லக்ஷ்மி இருக்கிறாள்" என்று. அப்படி லக்ஷ்மீ இருக்கும் இடம் எல்லாம் ஐச்வர்யமும், ஸர்வ விதமான க்ஷேமங்களும் கூடி இருக்கின்றன.

கோவிலில் மஹா லக்ஷ்மி தாயாரை ஸேவித்தால் கையில் என்ன இருக்கிறது என்று பார்க்க வேண்டும். தாமரை மொட்டு ஒன்று இருக்கும். மீதி எந்த தேவதைகளை வேண்டுமானாலும் பார்க்கலாம் - கையில் சூலம், கத்தி, வேல் எல்லாம் பலவித ஆயுதங்கள். கல்யாணம், மங்களாம், சுபம் என்று சொல்லும்படியாய், கருணை வடிவே ஆனவள் மஹாலக்ஷ்மீ.

**அஸ்யேஶானா ஜகதோ விஷ்ணுபத்நீ**
**நீளா ஸூக்தம்**

என்றது நீளா சுக்தம், இந்த பிரபஞ்சம் முழுவதுக்கும் ஸ்வாமினியாகவும் விஷ்ணுவிற்கு பத்னியாகவும் இருப்பவளே என்றது.

ஹ்ரீஶ்ச தே லக்ஷ்மீஶ்ச பத்ந்யௌ ।
புருஷ ஸூக்தம்

என்று புருஷஸூக்தம் பூமியும், லக்ஷ்மியும் உனக்கு பத்நி அல்லாவா? என்றது.

க₃ந்த₄ த்₃வாராம் து₃ராத₄ர்ஷாம் நித்ய புஷ்டாம் கரீஷிணீம் ।
ஈஸ்வரீம் ஸர்வ பூ₄தாநாம் தாமி ஹோபஹ்வயே ஶ்ரியம் ।।
ஸ்ரீஸூக்தம்

என்று ஸ்ரீஸூக்தத்தில் கீர்த்தியை தருபவளும், துஷ்டர்களால் அடைய முடியாதவளும், எப்பொழுதும் நிறைவு உடையவளும், எல்லா பூதங்களுக்கும் ஈச்வரியுமான ஸ்ரீதேவியை இங்கு அழைக்கிறேன்

ஸ்ரீவத்ஸவக்ஷா: ஸ்ரீவாஸ: ஸ்ரீபதி: ஸ்ரீமதாம் வர:
ஸ்ரீத: ஸ்ரீஶ: ஸ்ரீநிவாஸ: ஸ்ரீநிதி: ஸ்ரீவிபாவந:
ஸ்ரீதர: ஸ்ரீகர: ச்ரேய: ஸ்ரீமாந் லோகத்ரயாச் ரய:
வியாஸ பகவான், ஸ்ரீவிஷ்ணு ஸஹஸ்ரநாமம்

என்று ஸ்ரீ விஷ்ணு ஸஹஸ்ரநாமத்தில் எவ்வளவு ஸ்ரீ வருகிறது? ஒரு ஸ்ரீயா, எத்தனை ஸ்ரீ வேண்டும்?

பரமாத்மா பரோ யோऽஸௌ நாராயண ஸமாஹ்வய: ।
தஸ்ய அநபாயிநீ ஶக்திர் தே₃வீ தத்₃ த₄ர்ம தர்மிணீ ।।
பாஞ்சராத்ரம்

என்று பாஞ்சராத்ர சாஸ்த்திரத்தில் வரும் ஸ்லோகம் இது. “லக்ஷ்மீயே! நீ எல்லோருக்கும் மேலான உயர்ந்த பரமத்மாவான நாரயணனை விட்டு பிரியாத சக்தி. அவனுடைய குணங்களையே உன்னுடைய குணங்கள்” என்று ஸ்தோத்ரம் செய்கிறது.



prapatti.com

இந்த பாஞ்சராத்ரம் என்பது பகவானே தன் திருவாக்கால் சொன்னது. பகவானுக்கு இருக்கும் கல்யாண குணங்கள் அவ்வளவும் தாயாருக்கும் உண்டு என்று பகவான் நாராயணனே சொன்னது

**ராஜ ராஜ அகி₂லஸ்யாஸ்ய விஶ்வஸ்ய பரமேஶ்வர:**
**காந்தஸ்ய தஸ்ய தேவஸ்ய விஷ்ணோஸ் ஸத்குணஶாலிந:**
**தயிதாஶஹம் ஸதா₃ தே₃வீ ஜ்ஞாநந்த₃மயீ ஸதா₃**
**அந வத்யாஶந வத்₃யாங்கீ₃ நித்யம் தத்₃ த₄ர்ம தர்மிணீ**
லக்ஷ்மீதந்த்ரம் 17-30, 31

என்று லக்ஷ்மி தந்த்ரம் சொல்லுகிறது எம்பெருமான் ராஜாதிராஜன், பரதத்தவம், உலகத்தின் ஈச்வரன். அந்த விஷ்ணு ஸகலவிதமான திருக்கல்யாண குணங்களை உடையவன். அவனுக்கு மஹிஷியாய், அவனை ஒரு க்ஷணமும் அகலாது (eternally inseparable), அளவற்ற ஞானத்துடன், குறையற்ற குணங்களையும், சரீரத்தையும் உடையவளாய் எப்பொழுதும் அவன் தர்மங்களை தன் தர்மமாக உடையவள் லக்ஷ்மீ என்கிறது.

## 5-5 ஆழ்வார்கள் போற்றும் ஸ்ரீ

ஆழ்வார்கள் பிராட்டிக்கென்றே தனி பிரபந்தம் அருளாவிட்டாலும், தம்முடைய திவ்ய பிரபந்தங்களில் பல இடங்களில் தாயாரின் பெருமையை சொல்லி இருக்கிறார்கள்

**திருமாலை அல்லது * தெய்வம் என்று ஏத்தேன் ***
**வரும் ஆறுயென் நம்மேல் வினை ?**
பொய்கையாழ்வார், முதல் திருவந்தாதி 64

என்று ஆழ்வாரில் முதல்வரான பொய்கையாழ்வாரும் "ஶ்ரிய:பதியைத் தவிர வேறு ஒரு தத்துவத்தை தெய்வம் என்று துதிக்க மாட்டேன்" என்று பிராட்டி ஸம்பந்தத்துடன் சொல்கிறார்.

prapatti dot com

“அந்த எம்பெருமானின் அருளுக்கு பாத்திரமான எனக்கு பாபங்கள் எப்படி வரும்? பாபம் என்பது என்ன? எம்பெருமானின் நிக்ரஹரூபம், அவனுக்கு உகாவதது தானே,” என்கிறார்.

ஆழ்வார்கள் போற்றும் திருவின் பெருமையை மேலே உள்ள பாசுரங்களில் விவரமாக காணலாம்.

நம்முடைய பூர்வாசாரியர்கள் எல்லோரும் இந்த ஸ்ரீயின் புகழைப் பல இடங்களில் புகழ்ந்து சொல்லி இருக்கிறார்கள். தாயாருக்கு என்றே தனித்து பல ஸ்லோகங்கள், ஸ்தோத்ரங்கள் என ஸாதித்துள்ளனர்.

- **ஸ்ரீஸூக்தம்** - என்று வேதத்தில் பிராட்டிக்கே என்று அவள் பெருமையை சொல்லியிருக்கிறது
- **ஸ்ரீஸ்துதி** - விஷ்ணுபுராணத்தில் இந்த்ரன் மஹாலக்ஷ்மியை ஸ்தோத்ரம் செய்வது
- **சதுஸ்லோகி** - ஆளவந்தார் அருளியது (4 ஸ்லோகங்கள்)
- **ஸ்ரீ ശരணாகதிகத்யம்** - பகவத் ராமனுஜர் அருளியது
- **ஸ்ரீ ஸ்தவம்** - கூரத்தழ்வான் அருளியது (11 ஸ்லோகங்கள்)
- **ஸ்ரீகுண ரத்ந கோஸம்** - பராஸர பட்டர் அருளியது (61 ஸ்லோகங்கள்)
- **ஸ்ரீ ஸ்துதி** - ஸ்வாமி தேசிகன் அருளியது (25 ஸ்லோகங்கள்)
- **ஸ்ரீ லச்ஷமி ஸஹஸ்ரம்** - அரசாணிபாலை வேங்கடாத்வரி அருளியது

## 5-6 ஆசாரியர்கள் போற்றும் ஸ்ரீ

ஸ்வாமி தேசிகன், **ஸ்ரீஸ்துதி** என்று பிராட்டியை பற்றி ஒரு ஸ்தோத்ரம் செய்துள்ளார். இங்கே **ஸ்ரீ** என்பது ஒரு உபசாரத்திற்கு (to respect, honorary) சொல்லவில்லை. அது **ஸ்ரீ** என்னும் மஹாலஷ்மியைப் பற்றியது என்பதைக் காட்ட. ஸ்ரீஸ்துதி என்றால் **ஶ்ரிய: ஸ்துதி** அதாவது மஹாலக்ஷ்மியை நோக்கி ஸ்துதி.

அது போலவே **ஶ்ரீஸ்தவம், ஶ்ரீகுணரத்ந கோஸம்,** இந்திரன் ஸ்தோத்ரம் செய்த ஶ்ரீஸ்துதி என்பது எல்லாம். ஶ்ரீ என்பது அடைமொழி (adjective) அன்று. பெரிய பிராட்டியைப் பற்றியது.

ஸ்வாமி தேசிகன், **ஶ்ரீஸ்துதி** ஆரம்ப ஸ்லோகத்திலேயே,

**மாநாதீத ப்ரதி2த விப4வாம் மங்க3ளம் மங்க3ளாநாம்**
**வக்ஷ: பீடீ2ம் மது4 விஜயிநோ பூ4ஷயந்தீம் ஸ்வகாந்த்யா ।**
**ப்ரத்யக்ஷாநுஶ்ரவிக மஹிம ப்ரார்தி2நீநாம் ப்ரஜாநாம்**
**ஶ்ரேயோ மூர்திம் ஶ்ரியம் அஶரணஸ்த்வாம் ஶரண்யாம் ப்ரபத்3யே ।।**
**ஸ்வாமி தேசிகன், ஶ்ரீஸ்துதி 1**

என்று "பெரிய பிராட்டியே, உன் பெருமைக்கு எல்லையும் உண்டோ?" (Is there any boundary for the extent of your fame?) என்று வினவுகிறார். மாந அதீத - எல்லை அற்றவளாய் என்று, ஆரம்பமே லக்ஷ்மீக்கே உரிய **மா** என்ற சப்தத்தால்.

"தாயே எல்லை கடந்த புகழ் பெற்றவை உனது பெருமைகள். மங்களம் என்னும் பொருள்களுக்கு எல்லாம் மங்களத்தை அளிப்பவள் நீ. மது கைடபர் என்ற அரக்கர்களை அழித்த எம்பெருமானின் திருமார்பு என்னும் சிம்மாசனத்தில் அமர்ந்திருக்கிறாய்."

"உன் திவ்யமான ஒளியினால் அலங்கரிக்கிறாய் இப்பிறவி, மறு பிறவி எல்லாவற்றிலும் மக்கள் வேண்டும் செல்வங்களை எல்லாம் அளிப்பவளே, ஶ்ரீ என்ற திருநாமமுடையவளாய், நன்மையே வடிவு கொண்டவளாய் உள்ள உன்னை, வேறு கதியற்ற நான் சரணமடைகிறேன்," என்று வேண்டினார்.

**ப4க3வதீம் * ஶ்ரியம் * தே3வீம் ***
**நித்யாந பாயிநீம் * நிரவத்3யாம் ***
**தே3வதே3வ தி3வ்ய மஹிஷீம் ***
**அகி2ல ஜக3ந்மாதரம் * அஸ்மந் மாதரம்**
**எம்பெருமானார், ஶ்ரீஶரணாக3திக3த்3யம்**

எம்பெருமானார், ஸ்ரீஶரணாக3திக3த்3யத்தில், "பகவதியான ஸ்ரீயே, தேவியே, என்றும் ஆபத்தை போக்குபவளே, தனக்கின்றி இருப்பவளே, தேவ தேவர்களுக்கு எல்லாம் ராஜாதி ராஜனாய் இருக்கும் எம்பெருமானின் பட்ட மஹிஷியே, எல்லா உலகங்களுக்கும் தாயே, என்னுடைய தாயே," என்கிறார்.

**"பகவான்"** என்று எப்படி அவனுக்கு பெயரோ அதைப்போலவே **"பகவதி"** என்று இவளுக்கும் பெயர் (அங்கு male geneder இங்கு female gender அதனால் பகவதி).

கூரத்தாழ்வார் பகவத் ராமானுஜருடைய ப்ரதம சிஷ்யர், அவர் ஸ்ரீபாஷ்யத்தை எழுதவதற்கு முக்கியமாக இருந்தவர். எம்பெருமானாரின் பவித்ரம் என்று சொல்லப் படுபவர்

> **ஸ்வஸ்தீ ஸ்ரீர்தி3ஶதாத ஶேஷஜக3தாம்**
> **ஸர்கோ3ப ஸர்க3ஸ்த்தி2தீ:**
> கூரத்தாழ்வான், ஸ்ரீஸ்தவம் 1

ஸ்ரீஸ்தவத்தை, ஆரம்பிக்கும்போதே அவர் **"மங்களமான ஸ்ரீயே"** என்று தொடங்குகிறார். மங்களம் என்பதை ஸ்ரீக்கும் முன்பாக வைத்தார். இப்பொழுதெல்லாம் பெயர் வைப்பது போல - பத்மஸ்ரீ, ஜயஸ்ரீ, அனுஸ்ரீ - இந்த ஸ்ரீக்கு முன் வைப்பதற்கு அவர்தான் மூல காரணம்.

## 5-7 ஸ்ரீயின் ஸர்வ வியாபகத்வம்

எம்பெருமான் எப்படி எல்லா பொருள்களிலும் வியாபித்து இருக்கிறானோ, அதைப் போலவே பிராட்டியும் வியாபித்துள்ளாள்.

> **நித்யைவைஷா ஜக3ந்மாதா விஷ்ணோ: ஸ்ரீரநபாயிநீ ।**
> **யதா2 ஸர்வக3தோ விஷ்ணுஸ் ததை2வேயம் த்3விஜோத்தம ।।**
> பராசர மஹரிஷி ஸ்ரீவிஷ்ணு புராணம் 1-8-17

prapatti.com

ஸ்ரீவிஷ்ணு புராணத்தில் பராஸர பகவான் பிராட்டியை வர்ணிக்கிறார். “பிராட்டி எம்பெருமானை விட்டு ஒரு க்ஷணமும் பிரியாது **“இறையும் அகலகில்லேன்”** என்று இருப்பவள், உலகத்திற்கு எல்லாம் தாய். விஷ்ணுவிற்கு செல்வம். பகவானைப்போல் இவளும் ஸர்வ வ்யாபினியாய் எங்கும் பரந்து இருக்கிறாள்,” என்றார்.

**த்வம் மாதா ஸர்வலோகாநாம் தே$_3$வ தே$_3$வோ ஹரி: பிதா ।**
**த்வயைதத்$_3$ விஷ்ணுநா சாம்ப$_3$ ஜக$_3$த்$_3$ வ்யாப்தம் சராசரம் ।।**
**பராசர மஹரிஷி ஸ்ரீவிஷ்ணு புராணம் 1-9-126**

ஸ்ரீவிஷ்ணு புராணத்தில் பராஸர பகவான் பிராட்டியை மேலும் வர்ணிக்கிறார். “எல்லா உலகங்களுக்கும் நீ தாயார். தேவதேவன், ஹரி என்று அழைக்கப்படும் உன் கணவன் தந்தை. நீயும், அந்த விஷ்ணுவும் இந்த உலகில் உள்ள அசைகின்ற, அசையாத பொருள்கள் அனத்தும் உங்களால் வியாபிக்கப்பட்டு உள்ளது,” என்றார்.

ஆளவந்தார் என்கிற யாமுனாசாரியார், பிராட்டியின் ஸர்வ வியாபித்வத்தை, தன்னுடைய ஸ்ரீசதுஶ்ஶ்லோகியில் காண்பிக்கிறார். பிராட்டிக்கென்றே தனியாக ஸ்தோத்திரம் ஸாதித்த முதல் ஆசாரியார்

**காந்தஸ்த்தே புருஷோத்தம: ப$_3$ணிபதி: ஶய்யாஸநம் வாஹநம்**
**வேதா$_3$த்மா விஹகேஶ்வரோ யவநிகா மாயா ஜக$_3$ந்மோஹிநீ**
**ப்$_3$ரஹ்மேஶாதி$_3$ ஸுரவ்ரஜ: ஸத$_3$யிதஸ்த்$_3$வத்தா$_3$ஸ தாஸீக$_3$ண:**
**ஸ்ரீரித்யேவ ச நாம தே ப$_4$க$_3$வதி ப்$_3$ரூம கத$_2$ம் த்வாம் வயம்**
**ஆளவந்தார் ஸ்ரீசதுஶ்ஶ்லோகி 1**

என்று பிராட்டியைப் பற்றி அருளியுள்ளார். ஆரம்பத்திலேயே, “ஸ்ரீ என்றே உனக்கு என்று பெயர் இருக்கிறது என்றார்.

நீ பகவதி ஆகிறாய். எப்படி நாராயணன் பகவான் என்று திகழ்கிறானோ, அதைப்போல நீயும் பகவதி என்ற சப்தத்தால், மேன்மையுடையவள், திருக்கல்யாண குணங்கள் நிறைந்தவள். இத்தனை பெருமைகளுடைய உன்னை அறிவில்லாத நான் எப்படி புகழ்வேன்?,” என்று கேட்கிறார்.

## 5-8 ஸ்ரீ என்பது ப்ரணவத்தைப் போலே

இப்படி பெருமையுடைய **ஸ்ரீ** சப்தத்தை ப்ரணவத்திற்கு ஒப்பாக, நம் ஆசாரியர்கள் சொல்கிறார்கள் எப்படி அஷ்டாக்ஷர மந்தரத்தில் **ப்ரணவம் (ஓம்)** என்று அரம்பிக்கிறதோ அதைப் போல (equivalent) இங்கு ஸ்ரீ சொல்லப்படுகிறது.

திருமந்த்ரம், சரமஸ்லோகம் என்கிற இரண்டைவிட இந்த த்வயம் எப்படி உயர்ந்தது என்றால் எல்லோராலும், எல்லா காலத்திலும் அனுஸந்திக்கலாம் என்பதை ஏற்கனேவே பார்த்தோம். (no limitation or any stringent requirments).

மேலே சொல்லப்போகும் பாசுரங்களில் இந்த கருத்தைத்தான் இன்னும் ஆணித்தரமாக சொல்லப்போகிறோம் (emphasize).

இந்த உலகத்தில், எதிலும் ஸ்ரீ சப்தத்தை சேர்த்து கொண்டால் ஒரு மேன்மை, சிறப்பு ஏற்படும். அதனால்தான் **ஸ்ரீமத் ராமாயணம், ஸ்ரீமத் பாகவதம், ஸ்ரீமான்** என்று கொண்டாடுகிறார்கள் (All aupicious things get the adjective of Sri).

கூரத்தாழ்வான் திருக்குமாரர் பராஸர பட்டர், ஸ்ரீரங்கம் ரங்கநாதனுக்கு ஸ்வீகார புத்ரர் என்று பெயர் அவர் ஸாதித்த ஸ்லோகம்.

> **தவ ஸ்பர்ஶாத்₃ ஈஶம் ஸ்ப்ருஶதி கமலே! மங்க₃ள பதம்**
> **தவ இத₃ம் ந உபாதே₄: உப நிபதிதம் ஸ்ரீரஸி யத: ।**
> பராசர பட்டர், ஸ்ரீகுண ரத்ந கோஸம் 29

என்று ஸ்ரீகுணரத்ந கோசத்தில், பராஸர பட்டர் தாயாரைப் பார்த்து கேட்கிறார், "தாமரை மலரில் அமர்ந்திருக்கும் ஸ்ரீரங்கநாயகியே, உன் கணவனான ரங்கநாதனுக்கு ஸ்ரீ என்ற அடைமொழி (adjective) அமைவது உம்முடைய உறவால் அல்லவோ?" என்றார்.

ஆனால் உமக்கு அந்த ஸ்ரீ அடைமொழியாக இருப்பதற்கு எந்தவிதமான காரணமும் இல்லை. ஏன் என்றால் நீயே மங்களகரமாக உள்ளாய். ஒரு பூவிற்கு வாசனை என்பது பெருமை. ஆனால் அந்த வாசனைக்கு வேறு ஏதாவது ஒன்றால் பெருமையா? என்றால் கிடையாது. வாசனை என்பது நறுமணம், அது இயற்கை. அதுபோல மங்கள் என்பது உமக்கு இயற்கை. உம்மோடி சேர்ந்ததால் பகவானுக்கு அந்த கல்யாண குணம் என்றார்.

ஸ்வாமி தேசிகனும் வரதராஜ பஞ்ஜாஶத்தில், **"கநக வலயா முத்3ராம் கண்ட2 தே3ஶே த3த்4ாந:"** என்று "எம்பெருமானை அறிந்து கொள்வது, அவனுடைய கழுத்தில் உள்ள தழும்பினால். அது பிராட்டி அவனை இறுகத் தழுவியதால் ஏற்பட்ட தங்க வளையல் முத்திரை" என்றார்.

## 5-9 அவனுக்கு பெருமை அவளாலே

தமிழில் ஸ்ரீ என்பதை திரு என்கிறார்கள் திருவரங்கம், திருக்கண்கள், திருமேனி, திருமண் காப்பு, திருக்கண்ணமுது, திருமடைப்பள்ளி, திருவிழா என்பது போல.

**தே3வி த்வந் மஹிமா வதி4ர் ந ஹரிணா**
**நாபி த்வயா ஜ்ஞாயதே**
**யத்3யப்யேவ மதா2பி நைவ யுவயோ:**
**ஸர்வஜ்ஞதா ஹீயதே**
**யந்நாஸ்த்யேவ தத3ஜ்ஞதா மநுகு3ணாம்**
**ஸர்வஜ்ஞதாயா விது3:**
**வ்யோமாம்போ4ஜ மிதந்த3யாகில விதந்3ந்**
**ப்4ராந்தோயமித்யுச்யதே**

கூரத்தாழ்வான், ஸ்ரீஸ்தவம் 8

என்று கூரத்தாழ்வான் ஸ்ரீஸ்தவத்தில் ஸாதிக்கிறார். தாயே உன் பெருமையின் எல்லை உன் பர்த்தாவான ஹரி அறிய மாட்டான். ஏன் உனக்கேகூட உன்

பெருமையின் எல்லை தெரியாது. அதனால் உங்களுடைய எல்லாம் அறிந்த வன்மைக்கு (ஸர்வஜ்ஞத்வத்திற்கு) பாதகம் ஏதுமில்லை. என்றார்.

இப்படிப்பட்ட பெருமையுடைய பிராட்டியின் ஸம்பந்தத்தாலேத்தான் பகவானுக்கே பெருமை. (இது ந ஹி நிந்த்யா ந்யாயம். ஒன்றை குறைத்து மற்றதை உயர்த்தி சொல்வது ஒரு ரஸனைக்கே. தவறாக புரிந்து கொள்ளக் கூடாது.)

குணைர் விலாஸை ரூபைஶ்ச
ஸ்வாத்மநா வாஶஶத்மநீஶ்வரம்
நியச்சந்தீம் அகண்டாண்டம்
நியந்த்ரீஞ்ச ஸ்தும: ஶ்ரீயம்

பாஞ்சராத்ரம்

பாஞ்சராத்ரம் சொல்லுகிறது தாயார் தன் குணத்தால், காரியத்தால், ரூபத்தால். ஸ்வரூபத்தால் எம்பெருமானை தன்னுள் அடக்கி கொண்டவள். எல்லா அண்டங்களையும் நியமிப்பவள். அந்த தேவியை நாம் துதிக்கிறோம் என்கிறது.

ஸ்ரீகுணரத்நகோஶத்தில் பராஸர பட்டர் ரொம்ப அழகாக ஸாதித்துள்ளார், ராமனுக்கு பெருமை எதனால் என்று.

மாதர்லக்ஷ்மி யதைவ மைதிலஜந ஸ்தேநாத்வநா தே வயம்
தவத் தாஸ்யை கரஸாபி மாநஸூபகைர் பாவை ரிஹாமுத்ர ச ।
ஜாமாதா தயிதஸ் தவேதி பவதீ ஸம்பந்த த்ருஷ்ட்யா ஹரிம்
பஶ்யேம ப்ரதியாம யாம ச பரீசாராந் ப்ரஹ்ருஷ்யேம ச ।।

பராசர பட்டர், ஸ்ரீகுணரத்நகோஶம் 51

“தாயே! மஹாலக்ஷ்மியே, மிதிலா நகரத்தில் எல்லோருக்கும் ராமன் பேரில் கொள்ளை ஆசை. ஏன் ஆசை தெரியுமா? ஸீதையின் கணவன் என்று, ஜனகருக்கு மாப்பிள்ளை என்பதால். ராமனுக்கு பெருமை ஜனகனின் மாப்பிள்ளை, மருமகன் என்பதனால்தான்” என்றார் பட்டர்.

“ராமன் தசரதன் மகன், கௌஸல்யை மகன், கோஸல நாட்டின் அதிபதி என்றெல்லாம் சொல்லிக் கொள்ளலாம். ஆனால் ஸீதையின் கணவன்

என்பதாலேத்தான் அவனுக்கு உயர்த்தி, என்றார் பட்டர். ஸ்வாமி தேசிகன் ஸ்ரீமத் ரஹஸ்யத்ரய ஸாரத்தில் இந்த ஸ்லோகத்தை எடுத்து காட்டுகிறார்.
"அந்த மிதிலா நகரத்து மக்கள் போல் நாங்கள் உள்ளோம். எங்கள் வீட்டுப் பெண்ணான உன் கணவன் ரங்கநாதனிடத்து எம்முடைய மாப்பிள்ளை என்று நிருங்கி நிற்போம். அது மட்டும் இல்லை, மோக்ஷத்திலும் அந்த மாப்பிள்ளையே சொந்தம் கொண்டாடி, எல்லாவிதமான கைங்கர்யங்களும் செய்து மகிழ்வோம்."

## 5-10 தந்தைக்கு பெருமை பெண்ணாலே

நாத முனிகள் பெரியாழ்வாருக்கு ஸாதித்த தனியனில் சொல்கிறார். மற்ற எல்லோருக்கும் இல்லாத பெருமை பெரியாழ்வாருக்கு மட்டும்தான். அது என்ன தெரியுமா?, ஸ்ரீரங்கநாதனுக்கு நேர் மாமனார் ஆகிறார். அதனால்தான் அவர் ஆழ்வார்களில் சிறந்து விஷ்ணுசித்தர், பெரிய ஆழ்வாராக ஆனார் என்றார்.

**குருமுகம் அநதீத்ய ப்ராஹ வேதாந் அசேஷாந்**
**நரபதி பரிக்லுப்தம் ஶுல்கம் ஆதாது காம:**
**ஶ்வஶுரம் அமரவந்த்யம் ரங்கந்தாஸ்ய ஸாக்ஷாத்**
**த்விஜகுலதிலகம் தம் விஷ்ணுசித்தம் நமாமி**
பெரியாழ்வார் தனியன்

பகவானுக்கு பெண் கொடுத்து மாமனார் ஸ்தானத்தில் நின்றதால் அவருக்கு அவ்வளவு உயர்வு. ஆண்டாள் திருக்கல்யாணம் ஸ்ரீரங்கநாதனுடன் நடந்து முடிந்தது. விவாகம் ஆனவுடன் பெரியவர்களை ஸேவிப்பார்கள். பகவானுக்கோ அப்பா, அம்மா கிடையாது. அவர் யாரைப் போய் ஸேவிப்பார்? அதனால் மாமனாரை முதலில் ஸேவிக்கிறார். எல்லாம் வல்ல இறைவனான பகவானே இவரை ஸேவித்ததால் இவருக்கு பெருமை.

ஸ்வாமி தேசிகன் ஸ்ரீமத் ரஹஸ்யத்ரய ஸாரத்தில், த்வயாதிகாரத்தில், லௌகிக முறையில் (worldly example) காண்பிக்கிறார். குற்றவாளிகளைத்

தண்டிக்கும் பொறுப்பு ராஜாவினுடையது. அவன், எல்லா குற்றவாளிகளையும் சரி சமமாக தண்டிப்பதில்லை. சிலரை, இவர்கள் ராணியின் அந்தப்புரத்தைச் சேர்ந்தவர்கள் என்று பெரிய அபராதம் செய்தவர்களையும் சுலபமாக மன்னித்து விடுவானாம். ஏன் என்றால், தன் மனைவிக்கு வேண்டியவர்கள் என்று. அதுபோல பகவானும், பிராட்டி குழுவைச் சேர்ந்தவர்கள் என்று பிரபன்னர்களை மன்னித்து விடுவான்.

## 5-11 பரத்வ நிர்ணயம் திருவினாலே - வேத வாக்கு

**ஶ்ரத்₃த₄யா தே₃வோ தே₃வத்வம் அஸ்நுதே**

என்கிறது வேதம். தேவனாகிற பகவான் ஶ்ரத்தா. ஶப்தவாச்யை ஆன பிராட்டியாலே தேவனாக இருக்கும் தன்மையை அடைகிறான். ஶ்ரத்தை என்பது மஹாலக்ஷ்மி. அவளோடு கூடியவன்தான் தெய்வம். அவளால்தான் தெய்வத் தன்மை பெருகிறான் அதாவது அவளன்றி அவனுக்கு தெய்வத் தன்மை கிடையாது என்பது போல்.

ஶ்ரீயப்பதி என்பதனால்தான், ஶ்ரீ போட்டுக் கொள்ளும் யோக்யதை வருகிறதாம் எம்பெருமானுக்கே.

## 5-12 பரத்வ நிர்ணயம் திருவினாலே: இதிகாச வாக்கு

**ராமோ விக்ரஹவாந் தர்ம:**

வால்மீகி, ராமாயணம்

என்றது ராமாயணம். ராமன், தர்மமே வடிவெடுத்தவன். அவன் உடம்பெல்லாம் தர்மம். தோல், சதை, எலும்பு, முடி, அவயங்கள் ஒன்றொன்றும் தர்மத்தையே சொல்லும். ராமன் அப்படி என்றால் அவனுக்கு பத்னியாய், ஸஹ தர்ம சாரிணியாய் இருக்கும் ஸீதாப் பிராட்டியும் அப்படியே.

ராமாயணத்தில் எவ்வளவோ பேருக்கு ராமன் ஸேவை ஸாதித்து இருக்கிறார். எத்தனை ஜனங்கள், ரிஷிகள், வானரங்கள் என்று பலபேருக்கு. ஆனால் பெண்களுக்கு, ஸேவை ஸாதித்த மாதிரி யாருக்கும் தரவில்லை.

அதிலும் தாரை, சபரி, மண்டோதரி இந்த மூன்று பேர்தான். இவர்கள்தான் பகவானாக ஸாக்ஷாத் ஸ்ரீமந் நாராயணனாக ஸேவித்தார்கள். மீதி எல்லோரும் ராமனாக பார்த்தார்களே தவிர பரதத்வமாக உணரவில்லை.

ராமாயணத்தில், மண்டோதரி, ராமனை காணும்போது அவனை ராமனாக நினைக்கவில்லை. நாராயணனாகவே கண்டாள். அதுவும் சாதாரண நாராயணனாய் அல்ல; ஸ்ரீமந் நாராயணனாய். மஹாலக்ஷ்மியை விட்டு பிரியாதவர் என்பதால் அவன்தான் பர ப்ரம்மம் என்பதை ஸ்ரீயப் பதித்வத்திலிருந்து தெரிந்து கொண்டாள்.

**தமஸ பரமோ தா$_4$தா ஸங்க$_2$ சக்ர க$_2$தாத$_4$ர:**
**ஸ்ரீவத்ஸவக்ஷா: நித்ய ஸ்ரீ அஜய்யஸ் ஸாஸ்வதோ த்$_4$ருவ:**
**வால்மீகி, ராமாயணம் யுத் 114-25**

என்று ராமாயணத்தில் மண்டோதரி சொல்லும் ஸ்லோகம். ராமபிரானை, ராமனாக பார்க்கவில்லை. ஸ்ரீமந் நாராயணனாகவே கண்டு ஸ்தோத்ரம் செய்கிறாள்.

"தமஸ் என்கிற குணத்தை தாண்டியவன் பகவான். ப்ரகிருதி என்னும் மூலப்பொருளுக்கு அப்பாற்பட்டவன். கையில் சங்கு சக்ரங்களை ஏந்தியவன். தன் திரு மார்பில் ஸ்ரீவத்ஸம் என்ற மறுவைக் கொண்டவன். எப்பொழுதும் ஸ்ரீதேவியுடன் இணைபிரியாது இருப்பவன். ஒருவராலும் ஜயிக்க முடியாதவன். நித்யமானன். நிலையானவன். இப்படிப்பட்ட நாராயணனே, உன்னை நான் வணங்குகிறேன்" என்றாள்.

**த்வம ப்ரமேயஸ்ச து$_3$ராஸ த$_3$ஸ்ச**
**ஜிதேந்த்$_3$ரியஸ்ச உத்தம த$_4$ார்மிகஸ்ச ।**
**அக்ஷய்ய கீர்த்திஸ்ச விசக்ஷணஸ்ச**

prapatti.com

**ஸ்திதிக்ஷமாவாந் க்ஷதஜோப மாக்ஷ ||**
வால்மீகி, ராமாயணம் கிஷ் 24-31

என்றாள் தாரை, வாலி வதத்திற்கு பின். "நீர் அளவிட முடியாதவர். கிட்ட முடியாதவர். இந்திரியங்களை வென்றவர். அழியாத புகழ் உடையவர். அதிக ஸாமர்த்தியம் உடையவர். பொறுமையில் பூமி போன்றவர். ரத்தம் போன்ற சிவந்த கண்களை உடையவர்."

## 5-13 பரத்வ நிர்ணயம் திருவினாலே - ஆழ்வார்கள் வாக்கு

பகவானை பரத்வ நிர்ணயம் செய்வதே இந்த ஸ்ரீயினால்தான்

**திரு நின்ற பக்கம் * திறவிது என்று ஓரார் *
கரு நின்ற கல்லார்க்கு உரைப்பர் *
திருவிருந்த மார்பின் * சிரீதரன் தன் வண்டுலவு தண் துழாய் *
தார் தன்னைச் சூடித் தரித்து**
திருமழிசையாழ்வார், நான்முகன் திருவந்தாதி 62

என்று நான்முகன் திருவந்தாதியில் திருமழிசையாழ்வார் சொல்கிறார் மஹாலக்ஷ்மி எந்த எம்பெருமானின் திருமார்பில் பொருந்தி இருக்கிறாளோ அவனே பரத்வம் என்று ஆராய்ந்து நிச்சயம் செய்யாதவர்களுக்கு என்ன கிடைக்கும்? கர்ப்பத்தில் மறுபடியும் மறுபடியும் பிறந்து துன்படும் மற்றவரை தெய்வம் என்று உபாசிப்பர். அத்தால் தாமும் கர்பத்தில் வீழ்வார்கள். பரத்வம் என்பவன் **ஸ்ரீதரன், ஸ்ரீநிவாஸன், ஸ்ரீய:பதி** என்று அந்த திருவினால் பெருமை அடைகிறவன் அவன் ஒருவன்தானே!

பிராட்டியின் ஸம்பந்தத்தால்தான் இத்தனை பெருமையும் எம்பெருமானுக்கு. இதை அறியாதவர்கள் வேறு ஒன்றை பரம் என்று அறிவில்லாதவர்களுக்கு போதிப்பர். அப்படி சொல்பவர்களும், அவர்கள் கொண்டாடும் தெய்வமும் கர்ப்பத்தினால் பிறந்தவர்கள் (Blind is leading the blind என்கிற மாதிரி)

**கல்லாதவர் * இலங்கை கட்டழித்த ***
**காகுத்தன் அல்லால் * ஒரு தெய்வம் யான் இலேன் ***
**பொல்லாத தேவரை * தேவர் அல்லாரை ***
**திருவில்லாத் தேவரைத் * தேறேன்மின் தேவு**
**திருமழிசையாழ்வார், நான்முகன் திருவந்தாதி 53**

என்று நான்முகன் திருவந்தாதியில் திருமழிசை ஆழ்வார் ஸாதிக்கிறார். "இலங்கையில் இருக்கிற ராக்ஷசர்கள் அறிவு கெட்டவர்கள். அவர்களுடைய அரணை அழித்தவன் ராம பிரான். அந்த ராமனைத்தவிர வேறு ஒருவரையும் நான் தெய்வமாக கொள்ள மாட்டேன் இவர்கள் காணக்கூடாத தேவதைகள். ஐயோ இவர்களை தேவ சப்தம் கூட கொண்டு அழைக்கக் கூடாது.

ஐயோ! இவர்களைப்போய் தெய்வம் என்றேனே! இவர்கள் **(பொல்லாத தேவரை)** தெய்வத் தன்மை இல்லாதவர்கள் ஏன் என்றால் **(திரு இல்லாத)** பிராட்டியின் ஸம்பந்தம் இல்லாவதவர்கள். இவர்களை தேவர்களாய் **(தேறேல்மின்)** நினைக்காதீர்கள்" என்றார்.

ஶரணாகத ரக்ஷணமாகிற ஒரு பெரும் யாகத்தில் தீக்ஷை கொண்டிருக்கும் அப்பிரான் அல்லாது இன்னொரு பொருளை அஸ்ரயிக்கவும் கூடுமோ? மற்றொருவரை நான் தெய்வம் என்று மதியேன், வணங்கேன்" என்றார்.

கல்வி என்பது மோக்ஷதிற்கு உபயோகம் ஆவது மட்டுமே. **ஸா வித்யா யா விமுக்தயே** என்றார் பாராசர ரிஷி, விஷ்ணு புராணத்தில்.

## 5-14 பரத்வ நிர்ணயம் திருவினாலே - ஆளவந்தார் வாக்கு

இப்படி பகவானுக்கே பரத்வ நிர்ணயம் செய்யும் ஸ்ரீ, திருவின் பெருமை என்ன? என்று நம்முடைய அசாரியர்கள் எல்லோரும் வியந்து அனுபவிக்கிறார்கள்

**க: ஸ்ரீ: ஶ்ரிய: பரமஸத்த்வ ஸமாஶ்ரய: க:**

prapatti.com

**கः புண்ட₃ரீகநயந: புருஷோத்தம: க: ।**
**கஸ்யாயுதாயுத ஶதைக கலாம்ஶ காம்ஶே**
**விஶ்வம் விசித்ர சித₃சித் ப்ரவி பா₃க வ்ருத்தம் ।।**
ஆளவந்தார், ஸ்தோத்ர ரத்நம் 12

என்று ஸ்தோத்ர ரத்னத்தில், ஆளவந்தார் **க: ஞ்ரீ: ஶ்ரிய:** என்றார். திருவுக்கும் திருவாகியவன் யார்? சுத்த ஸத்வத்தை உடையவன் யார்? உத்தம புருஷன் யார்? தாமரைக் கண்கள் உடையவன் யார்? என்று கேட்டு பரத்துவத்தை நிருபிக்கிறார் திருவின் ஸம்பந்தத்தால்.

## 5-15 பரத்வ நிர்ணயம் திருவினாலே - பராசர பட்டர் வாக்கு

கூரத்தாழ்வான் திருக்குமாரரான பராஸர பட்டர் சொல்கிறார் -

**யத்₃ப்₄ருப₄ங்க₃ா: ப்ரமாணம்**
**ஸ்தி₂ர சர ரசநா தாரதம்யே முராரே:**
**வேத₃ாந்தா: தத்த்வசிந்தாம்**
**முரபி₄த்₃ உரஸி யத்பாத₃ சிஹ்நை: தரந்தி ।**
பராசர பட்டர், ஸ்ரீ குணரத்ந கோஶம் 4

என்று ஸ்ரீகுணரத்ந கோஶத்தில். "பகவான் பல பொருள்களை ஸ்ருஷ்டி செய்கிறான். அசையாதன, அசைவன (ஜங்கம ஸ்தாவரங்கள்). அவற்றை படைக்கும்போது எப்படிப்பட்ட நிலை (state), தரத்தில் (quality) படைப்பது என்பதை பிராட்டியின் முகத்தை, இல்லை அந்த முகத்தில் உள்ள திருக்கண்களிலிருந்து, இல்லை அந்த கண்களுக்கு மேல் உள்ள புருவங்களின் அசைவில் கண்டு கொண்டு செய்கிறான்," என்றார்.

அந்த பிராட்டி யார் என்றால், "வேதங்களின் உச்சியான உபநிஷத்துக்கள் முராரியின் திருமார்பில் எவளுடைய திருவடிச்சுவட்டைக் கண்டு இவன்தான் பரத்துவம் என்று நிச்சயிக்கின்றவோ என்னும்படியான அந்த பிராட்டி" என்றார்.

பகவான் ஸ்ரீரங்கநாதன் ஒரு உயிரைப் படைக்கும்முன் இவளுடைய திருமுகத்தைப் பார்க்கிறான். பார்வையிலேயே ஒரு கேள்வி? இந்த ஜீவனை எப்படி படைப்பது என்று எனக்கு புரியவில்லை. இந்த குழப்பத்தை, நீயே தெளிவு படுத்து என்பது போலே. அவளும் பதிலுக்கு தன் புருவ அசைப்பில் பதில் அளிக்கிறாள். இவனை நல்லா ஞானியாக படை. இவனை செல்வனாக படை” என்றெல்லாம்.

பகவான் அவனை நீ ஏன் இப்படி சொல்கிறாய் என்று கேட்கிறானா? இல்லை. அவளிடம் உள்ள அன்பிற்கு வசப்பட்டு அவள் இட்ட வழக்காய் உள்ளான். எப்படி வேதம் இல்லாமல் பிரமன் படைக்க முடியாதோ அதுபோல ல இவள் புருவ அசைப்பு இல்லாமல் பகவான் ஸ்ரீமந் நாராயணனால் ஒன்றும் செய்ய முடியாது. முராரி என்ற பதம், முரன் ஏனும் அசுரனை அழித்தவன் என்று இங்கே சொன்னது, அழிக்கும் சக்தி உடைய அந்த வல்லவன், ஆக்கும்போது இவளிடம் எளிமையாக உள்ளான் என்பதைக் காட்டவே.

**அபாங்கா$_3$: பூ$_4$யாம்ஸோ யது$_3$ பரி பரம் ப்$_3$ரஹ்ம தத்$_3$ அபூ$_4$த்**
**அமீ யத்ர த்வித்ரா: ஸச ஶதமகாதிஸ்த த$_3$த$_4$ராத்**

பராசர பட்டர், ஸ்ரீ குணரத்ந கோஶம் 30

என்று ஸ்ரீகுணரத்ந கோஶஸத்தில் இந்த கருத்தையே மறுபடியும் பராசர பட்டர் சொல்கிறார். “பிராட்டியின் எல்லையற்ற கடாக்ஷம் எந்த பொருளின் மேல் பட்டதோ, அந்த பொருளே பரப்ரம்மமாயிற்று. அந்த கடாக்ஷங்கள் எவரின் மேல் குறைவாக விழுந்ததோ அவை தாழ்ந்த பொருளாக தேவ, இந்திரன்களாக ஆனது” என்றார்.

**ஸ்வரூபம் ஸ்வாதந்த்ர்யம் ப$_4$க$_3$வத: இத$_3$ம் சந்த்$_3$ர வத$_3$நே!**
**த்வத் ஆஶ்லேஷ உதகர்ஷாத் ப$_4$வதி க$_2$லு நிஷ்கர்ஷ ஸமயே |**
**த்வத் ஆஸீர்மாத:! ஸ்ரீ! கமிது: இதமித்த$_2$ம் த்வ விப$_4$வ:**
**தத$_3$ந்தர்ப$_4$ாவாத் த்வாம் ந ப்ருத$_2$க$_3$பி$_4$த$_4$த்தே ஶ்ருதி ரபி: ||**

பராசர பட்டர், ஸ்ரீகுணரத்ந கோஶம் 28

என்று ஸ்ரீகுணரத்நகோஶத்தில் “சந்திரன் போன்ற திருமுகத்தை உடையவளே! தாயே, ஸ்ரீரங்க நாயகியே, நன்கு ஆராய்ந்து பார்க்கும்போது, உன் கணவனான ஸ்ரீரங்கநாதனின் ஸ்வரூபம், ஸ்வாதந்திரியம் என்ற

திருக்கல்யாண குணங்கள் எல்லாம் உன்னுடைய அணைப்பினால் அல்லவோ உண்டாயிற்று” என்றார்.

இங்கே **பரதத்துவ நிர்ணய காலத்தில் பகவானை பரபிரம்மம் என்று உறுதிப் படுத்துவது இவளால் அல்லவோ** என்பது தெளிவாயிற்று. ஸ்ரீவைஷ்ணவ ஸித்தாந்தத்தின் உயர்ந்த தத்துவம், பிராட்டியைக் கொண்டே பகவானை அறிய வேண்டும் என்பது.

வேதங்கள், இப்படி பகவானின் ஸ்வரூபம், திருக்கல்யாண குணங்களாய் உன்னைக் கண்டன. அதனால்தான் உன்னைத் தனியே என்று ஓதவில்லை.

## 5-16 பரத்வ நிர்ணயம் திருவினாலே - தேசிகன் வாக்கு

**யத் ஸங்கல்பாத்$_3$ ப$_4$வதி கமலே யத்ர தே$_3$ஹிந்யமீஷாம்**
**ஜந்ம ஸ்தே$_2$ம ப்ரளய ரசநா ஜங்க$_3$மாஜங்க$_3$மாநாம்**
**தத் கல்யாணம் கிமபி யமிநாம் ஏக லக்ஷ்யம் ஸமாதெ$_4$ள**
**பூர்ணம் தேஜ: ஸ்பு$_2$ரதி ப$_4$வதீ பாத$_3$ லாக்ஷா ரஸாங்கம்**
**ஸ்வாமி தேசிகன், ஸ்ரீ ஸ்துதி 4**

என்று ஸ்ரீஸ்துதியில் ஸ்வாமி தேசிகனும், பிராட்டியே எம்பெருமான் பரப்ரம்மம் என்பதை காண்பிப்பதாக ஸாதிக்கிறார்

**(தேஜ: கிம் அபி)** பகவான் என்கிற தேஜஸ் அற்புதமாய் உள்ளது.
**(பூர்ணம் ஏக லக்ஷ்யம்)** [அது] முற்றுமாய் ஒரே நோக்கத்துடன்
**(யமிநாம் ஸமாதெ$_4$ள)** யோகிகளின் தியானத்தில் உள்ளது
**(யத்ர தே$_3$ஹி)** [அது] எல்லாவற்றையும் தனக்கு உடலாய் கொண்டு
**(அமீஷாம் ஜங்க$_3$ம அஜங்க$_3$மாநாம்)** இந்த ஜங்கமம், ஸ்தாவரம் அகியவற்றின்
**(ஜந்ம ஸ்தே$_2$ம ப்ரளய ரசநா)** பிறப்பு, நிலை நீடித்தல், அழிவு ஆன செயல்கள்
**(யத் ஸங்கல்பாத்$_3$ ப$_4$வதி)** தன் விருப்பத்தால் நடத்துகிறது.
**(தத் கல்யாணம்)** அந்த மங்களமான [எம்பெருமானை]
**(ப$_4$வதீ பாத$_3$)** உன் திருவடிகளில் உள்ள

(லாக்ஷா ரஸ) சிவந்த நிற குழம்பை
(அங்க) அடையாளமாகக் கொண்டு [அறிகிறோம்]

“பிராட்டியே, உன் கணவன் சேதன அசேதனங்களை தன் உடலாய் கொண்டு அதில் ஆத்மாவாய் நிற்பவன். ஸ்தாவர, ஜங்கம பொருள்களின் படைத்தல், காத்தல், அழித்தல் என்ற செயல்கள் எல்லாம் அவனுடைய ஸங்கல்பத்தால் விளைபவை. யோகிகள் ஒரே நோக்காய் தம் மனத்தில் அவனையே தியானம் செய்கின்றனர்.”

“அற்புதமான தேஜஸுடன் இருக்கும் அந்த எம்பெருமானின் திருமார்பில் ஸ்ரீயே, நீ ஒரு கணமும் பிரியாது இருக்கிறாய். உன் திருவடியில் பூசிய சிவந்த குழம்பு (மருதானி) அவன் மார்பில் பட்டு அழகாய் ஜொலிக்கிறது. இந்த அடையாளங்களைக் கொண்டுத்தான் அவனை பரம் பொருளாக வேதாந்தங்களும் பேசுகிறது” என்றார். (Lord Narayana is identified as the final ultimate Lord only through You, Lakshmi).

**இன்னமுதத் திருமகள் என்று இவரை முன்னிட்டு**
**எம்பெருமான் திருவடிகள் அடைகின்றேனே**
அதிகார ஸங்கிரகம் 3

என்று ஸ்வாமி தேசிகனும் பிராட்டியை முன்னிட்டுத்தான் பகவானை அறிகின்றோம் என்றார்.

**ப்ரப$_4$ாவாந் ஸீதயா தே$_3$வ்யா பரம வ்யோம ப$_4$ாஸ்கர: ||**

ஒளி மிகுந்த ஸீதையினால் இன்னும் ப்ரகாசமான எம்பெருமான் என்றார் ஸ்ரீமாஹவீர வைபவத்தில்.

## 5-17 பரத்வ நிர்ணயம் பிள்ளைலோகாசாரியார் வாக்கு

prapatti.com

பிராட்டி இல்லாமல் பகவானை பரதத்துவம் என நிரூபிக்க முடியாது என்று பிள்ளைலோகாசாரியாரும் முமுக்ஷுப்படியில் ப்ரணவத்தின் அகாரார்த்தை விளக்கும்போது ஸாதித்துள்ளார்.

**ஆக பிரித்து நிலையில்லை**
**ப்ரபையையும் ப்ரபாவானையும் புஷ்பத்தையும் மணத்தையும் போலே**
முமுக்ஷுப்படி 45,46

ஆக, பிராட்டி பகவான் இருவரும் ஒருவரை ஒருவர் பிரிந்து இருக்கும் நிலை எனப்தே கிடையாது. எப்படி ஒளியும் சூரியனும் பிரியாதோ, எப்படி பூவும் மணமும் பிரியாதோ அது போல என்றார்.

## 5-18 தமிழில் ஸ்ரீ பதம்

ஒளி பிராட்டிக்கு பல திருநாமங்கள் இருப்பினும் இந்த ஸ்ரீ என்கிற திருநாமத்திற்குத்தான் மிகவும் பெருமை. இப்படி உயர்ந்த ஸ்ரீ என்கிற திருநாமத்தை ஸ்வாமி நம்மாழ்வாராலும் விட முடியவில்லை, திருவாய்மொழியை தமிழில் ஸாதித்தாலும்.

**மாலரி கேசவன் நாரணன் * சீ மாதவன்,**
**கோவிந்தன் வைகுந்தன் * என்றென்று**
**ஓலமிட என்னைப் பண்ணி, விட்டிட்டொன்றும்**
**உருவும் சுவடும் காட்டான்**
**நம்மாழ்வார், திருவாய்மொழி 8-2-7**

என்று சீ மாதவன் (ஸ்ரீ மாதவன்) என்றார். மாதவன் என்கிற பெயரே ஆழ்வாருக்கு உகந்ததாம். பிராட்டியை பெறுவதற்காக பெரும் தவம் செய்தவன் எம்பெருமான்.

**ஸ்ரீயப் பதித்வம் என்பதை மாதவத் தன்மை**யாக காட்டுகிறார்.

## 5-19 ஸ்ரீ சப்தத்தின் பொருள்

ஸ்ரீ என்ற சப்தத்திற்கு ஆறு வித்பத்தி என்பர் முன்னோர். ஸம்ஸ்கிருதத்தில் பதம் தேடுகிற விதத்திற்கு வித்பத்தி என்று பெயர். இந்த பதம் வந்த முறையை தேடிப் பார்த்தால், பல அர்த்தங்கள் கிடைக்கும். அவற்றில் இங்கே ஆறு, முக்யமாய் சொல்லப்படுகிறது.

**ஶ்ருணாதி நிகிலாந் தோஷாந்**
**ஶ்ரீணாதி ச குணைர் ஜகத் ।**
**ஶ்ரீயதே ச அகிலைர் நித்யம்**
**ஶ்ரயதே ச பரம் பதம் ।।**
**ஶ்ரயந்தீம் ஶ்ரீயமாணாம் ச**
**ஶ்ருணந்தீம் ஶ்ருண்வதீம் அபி ।।**
**இத்யாதி வசனங்களாலே ஸ்ரீ சப்தார்த்தம் பல வித்பத்திகளை உடைத்ததாய் இருக்கும்**
**ஸ்வாமி தேசிகன் ஸாரஸாரம்**

என்று ஸ்வாமி தேசிகன் ஸாரஸாரத்தில் ஸாதிக்கும்போது ஸ்ரீ என்னும் பதம் பல பொருள்களைக் கொண்டது என்றார். இந்த ஸ்லோகத்தின் முதல் இரண்டு வரிகள் பாஞ்சராத்ரத்திலும் கடைசி வரி அஹிர்புத்ந்ய ஸம்ஹிதையிலும் சொல்லப்பட்டுள்ளது.

இந்த ஆறு அர்த்தங்களும் சுருக்கமாக கீழே சொல்லப்பட்டுள்ளது.

1. **ஶ்ரீயதே இதி ஸ்ரீ:**
   - **ஶ்ரீயதே ச அகி₃லைர் நித்யம்**
   - எல்லோராலும் அடையப் படுவள்.
   - நல்ல கதி வேண்டும் சேதனர்கள் இவளை முதலில் ஆஶ்ரயிக்கின்றனர்.
   - **தன்னடியார் அடைய**



prapatti dot com

2. ஶ்ரயதே இதி ஶ்ரீ:
   - ஶ்ரயதே ச பரம் பத₃ம்
   - இவள் பகவானை ஆஶ்ரயித்திருக்கிறாள்.
   - அபராதமே புரிந்து வந்த சேதனர்கள்பால் எம்பெருமான் கொண்ட கோவத்தை தணித்து அவர்களை காக்க வேண்டி பிராத்திக்கிறாள்
   - ஶ்ரயந்தீம் ஶ்ரீயமாணாம் ச
   - ஆஶ்ரயிப்பவளாலும் ஆஶ்ரயிக்கப் படுபவளாலும் இருக்கிறாள்.
   - தான் அடைந்து

3. ஶ்ருணோதி இதி ஶ்ரீ:
   - சேதனர்களின் குறைகளை காது கொடுத்து கேட்கிறாள்
   - ஶ்ருணந்தீம் ஶ்ருண்வதீம் அபி
   - கேட்பவளாயும், பகவானை கேட்கும்படியும் செய்கிறாள்.
   - கேட்டு

4. ஶ்ராவயதி இதி ஶ்ரீ:
   - சேதனர்களின் குறைகளை பகவானிடம் சொல்லி அவனை கேட்கும்படி செய்கிறாள்
   - ஶ்ருணந்தீம் ஶ்ருண்வதீம் அபி
   - கேட்பவளாகவும், கேட்கும்படியும் செய்கிறவள்
   - கேட்பித்து

5. ஶ்ருணாதி இதி ஶ்ரீ:
   - அடியவரின் குற்றங்களைத் தீர்க்கின்றாள்.
   - ஶ்ருணாதி நிகி₂லாந் தே₃ாஷாந்
   - சேதனர்களுக்கு இதுவரை ப்ரபத்தி எனும் உபாயத்தையும், மோக்ஷமாகிய பலனையும் தடுத்த பாபங்கள் எல்லாம் ஒழிக்கிறாள்
   - குறை நீக்கி

6. ஶ்ரீணாதி இதி ஶ்ரீ:
   - தன்னை அடைந்தவருக்கு பக்தி, அறிவை தந்து பக்குவ நிலையை ஏற்படுத்துகிறாள்.

- ஶ்ரீணாதி ச கு$_3$ணைர் ஜக$_3$த்
- குணங்களினால் லோகத்தை வ்யாபித்து இருக்கிறாள்.
- நிறை ஆக்கி
-

## 5-20 பிராட்டி செய்யும் கடக க்ருத்யம்

பிராட்டி கடநம் செய்யும் காரியத்தை மூன்று விதமாக சொல்லலாம்

**1. பகவான் <--- பிராட்டி <----- சேதனன்**

- சேதனர்களுடைய ஈனக் குரலுடன் சொல்லும் முறையீடுகளைக் கேட்கிறாள்
- அதை பகவானிடம் சொல்லி புருஷகாரகம் செய்கிறாள் - கடக க்ருத்யம் (Synchronize)

**2. பகவான் <---> பிராட்டி**

- பகவான் சொல்வதைக் கேட்கிறாள்
- சரியான சமயத்தில் அதை பகவானிடமே நினைவு படுத்துகிறாள் (Remind)

**3. பகவான் ---> பிராட்டி -----> சேதனன்**

- பகவானிடம் கேட்கிறாள்
- அதை அபராதிகளான் சேதனர்களுக்கு நன்மையாக உபதேசிக்கிறாள் (Instruct)

இந்த மூன்றிலும் சுவாரஸ்யம் என்ன என்றால், மூன்று காரியங்களிலும் பகவானும் இருக்கிறான். பிராட்டியும் இருக்கிறாள்.

பிராட்டி பாரதந்த்ரியத்தை ஒற்றியே இருக்கிறாள். தானாகவே சுதந்திரமாக செய்வதில்லை. அதை விளக்குவது கடினம். இங்கே விளக்கத்தில் (explanation) இல் கொஞ்சம் கஷ்டம் (complication).

## 5-21 புருஷகாரகம்

**புருஷகாரம் என்பது புருஷனாகிய எம்பெருமானிடம் ஜீவனுக்காக பரிந்து பேசுதல்**
ஸ்வாமி தேசிகன், விரோதி பரிகாரம்

என்று விரோதி பரிகாரத்தில் ஸ்வாமி தேசிகன் புருஷகாரகத்தை பற்றி ஸாதிக்கிறார்.

**ஸாபேக்ஷனான புருஷனுக்கு அபேக்ஷிதம் தலை கட்டிக் கொடுக்க வல்ல சேதனன் அபிகம்யனாகைக்கு உபாயமாக வரிக்கப்பட்ட சேதனாந்தரத்தை புருஷகாரம் என்று வ்யஹரிப்பர்கள்**
ஸ்வாமி தேசிகன், ஸ்ரீமத் ரஹஸ்யத்ரயஸாரம், த்வயாதிகாரம்

ஸாபேக்ஷனான புருஷன் என்பது ஜீவன். அவன் விரும்புவது ஸம்ஸாரத்திலிருந்து விடுதலை. அதை செய்து தர, தகுதி உடைய சேதனன் பகவான் ஒருவனே. அந்த பகவானை உபாயமாய் அணுகுவதற்கு தகுந்த சேதனாக ஆகிறவள் பிராட்டி. அந்த பிராட்டியே புருஷகாரம் ஆகிறாள்.

**புருஷகாரத்வமாவது - ஸ்வதந்த்ரனான ஈச்வரனைத் தன் இனிமையாலே மயக்கி, ஜீவனுடைய தோஷங்களை மறக்கச் செய்து, "உனக்கு மோக்ஷம் அளித்தேன்" என்னும் ஸங்கல்பத்தை ஈச்வரன் செய்யும்படியாக பண்ணுகை**
பெரியவாச்சான் பிள்ளை வியாக்யானம்

மேல் எழுந்தவாரியாக பார்த்தால் (on the outset) இது புருஷன் செய்யும் தொழில் என்று தோன்றும். ராஜ குலம்" என்பது அரச பரம்பரை சொல்லும். ராணி குலம் என்று சொல்வதில்லை. கவிகளின் மரபு அப்படித்தான். (Chairman, என்று சொல்கிற மாதிரி)

prapatti.com

## 5-22 பிராட்டியே புருஷகாரபூதை - ப்ரமாண வாக்கு

**அஹம் மத் ப்ராப்த் யுபாயோ வை ஸாசஷாஸ் லச்ஷமீபதி: ஸ்வயம்**
**லச்ஷமீ: புருஷகாரேண வல்லப$_4$ா ப்ராப்தி யோகி$_3$நீ |**
**எதஸ்யாஶ்ச விஶேஷோஶயம் நிக$_2$மாந்தேஷு ஶப்$_3$த்$_3$யதே"**
பாஞ்சராத்ர சாஸ்திரம்

என்று பாஞ்சரத்ர சாஸ்திரத்தில், பகவான் சொல்கிறார், "என்னை அடைவதே உயர்ந்த புருஷார்த்தம். அந்த ப்ராப்திக்கு லக்ஷ்மீபதியான நானே உபாயம் ஆகிறேன். எனக்கு பிரியமானவளான லக்ஷ்மீ, புருஷகாரமாக இருந்து இதற்கு துணை செய்கிறாள். புருஷகாரத்வமான இந்த பெருமை வேதாந்தத்தில், பரக்க சொல்லப்பட்டு இருக்கிறது."

**மத் ப்ராப்திம் ப்ரதி ஜந்தூநாம் ஸம்ஸாரே பததாமத$_4$: |**
**லச்ஷமீ: புருஷகாரத்வே நிர்தி$_3$ஷ்டா பரமர்ஷிபி$_4$: |**
**மமாபி ச மதம் ஹ்யேதேந் நாந்யத$_2$ா லசஷணம் ப$_4$வேத் ||**
பாஞ்சராத்ர சாஸ்திரம்

என்று பாஞ்சரத்ர சாஸ்திரத்தில், பகவான் சொல்கிறார், "உயிரினங்கள் பிறவிக்கடலில் கீழே விழுந்து தத்தளிக்கின்றனர். அவர்களுக்கு உஜ்ஜீவனம் என்பது என்னை அடையும் பேறே. அதற்கு லக்ஷ்மீ தேவியானவள் புருஷகாரமாய் நியமிக்கப்பட்டு இருக்கிறாள், மஹரிஷிகளாலே. அதுவே எனக்கும் உகந்தது. அதைத் தவிர, வேறு ஓர் உபாயம் என்கிற ஆகாரத்வம் இல்லை."

**வாச: பரம் ப்ராத்த$_2$யிதா ப்ரபத்$_3$யேந் நியத: ஶ்ரீயம் |**
ஶௌநக ஸம்ஹிதை

என்றது ஶௌநக ஸம்ஹிதை. "பிராட்டியுடன் கூடிய எம்பெருமான் நம் வாக்கிற்கு அப்பாற் பட்டவன். அவனை அடைய விரும்புவன் கிரமமாக முதலில் பிராட்டியை (புருஷகாரமாக) ஶரணம் அடையக் கடவன்," என்றது.

இப்படி பிராட்டி செய்யும் புருஷகாரத்தை மீதி யாராலும் செய்ய முடியாது.

prapatti.com

## 5-23 பிராட்டியே புருஷகாரபூதை - தேசிகன் வாக்கு

**பர்யாகுலம் மஹதி து$_3$:க$_2$ பயோநிதௌ$_4$ மாம்**
**பஶ்யந் க்ரீஶ யதி$_3$ ஜோஷம் அவஸ்த்தி$_2$தஸ் த்வம்**
**ஸ்பா$_2$ரே க்ஷணேபி மிஷதி த்வயி நிர் நிமேஷம்**
**பாரே கரிஷ்யதி த$_3$யா தவ து$_3$ர்நிவாரா**

ஸ்வாமி தேசிகன் வரதராஜ பஞ்சாஸத் 6

ஸ்வாமி தேசிகன், வரதராஜ பஞ்சாஸத்தில் தாயாரின் புருஷகாரத்தைப் பற்றி சொல்லுகிறார்.

"திணறுகின்றேன் நான் துன்பம் என்ற பெரிய கடலில் விழுந்து. அதை மௌனமாக, கண் கொட்டாது பார்த்துக் கொண்டே இருக்கலாம், பகவானே நீ. (silently observing) ஆனால் கருணை வடிவேயான அந்த பிராட்டியை யாராலும் தடுக்க முடியாது (She is unstoppable). அவள் என்னை ஸம்ஸார கடலிருந்து காப்பாற்றி கரையான உன்னிடம் நிச்சயம் சேர்க்கப் போகிறாள்," என்றார்.

**த்வதே$_3$க தந்த்ரம் கமலா ஸஹாய**
**ஸ்வேநைவ மாம் ரக்ஷிதும் அர்ஹஸி த்வம் ।**
**த்வயி ப்ரவ்ருத்தே மம கிம் ப்ரயாஸை:**
**த்வயி அப்ரவ்ருத்தே மம கிம் ப்ரயாஸை: ।।**

ஸ்வாமி தேசிகன் அஷ்டபுஜாஷ்டகம் 6

என்று அஷ்டபுஜாஷ்டகத்தில் ஸ்வாமி தேசிகன் ஸாதிக்கிறார். "பிராட்டியை துணை கொண்டு என்றும் பிரியாது இருக்கும் பகவானே, நீயாகவே முன்வந்து என்னைக் காத்து அருளுவதற்கு உனக்கு உரிமை இருக்கிறது. எனக்கு பரிந்து பேச பிராட்டியும் உன்னைப் பிரியாது உபாயமாக நிற்கிறாள். அவளுடன் கூடிய நீயே எனக்கு உபாயம்," என்றார்.

"உன் திருவடிகளில் ப்ரபத்தி செய்த என்னை நீ ரக்ஷிக்க வேண்டும் என்று காத்திருக்கும்போது, மீதி அல்பமனான தேவதைகளிடம் போய் வேண்டுகின்ற முயற்சி எதற்கு? நீ காக்க முற்பட்டாலும் சரி, இல்லை கைவிட்டாலும் சரி,

prapatti dot com

நான் என் முயற்சியால் என்ன செய்ய முடியும்? ஆகவே உன் திருவடிகளை அடைந்த சேதனர்களை காக்கும் பொறுப்பு உம்முடையதே" என்றார்.

## 5-24 பிராட்டியே புருஷகாரபூதை - பிள்ளைலோகாசாரியார் வாக்கு

**நீரிலே நெருப்பு கிளருமாப்போலே, குளிர்ந்த திருவுள்ளத்திலே அபராதத்தால் சீற்றம் பிறந்தால், பொறுப்பது இவளுக்காக.**

பிள்ளைலோகாசாரியார், முமுக்ஷுப்படி 127

என்று பிள்ளைலோகாசாரியார் ஸாதித்தார்.

எம்பெருமான் இயற்கையிலே தானாகவே ஒரு கருணைக் கடல். மன்னித்து அருளும் மஹாத்மா. அப்படிப்பட்ட சமுத்திரத்தின் எல்லையையும் மீறி, அவனே பொறுக்க முடியாதபடி உள்ள பாபங்களை சேதனன் செய்து கொண்டே இருக்கிறான். அத்தால் எம்பெருமானுடைய குளிர்ந்த மனஸ்ஸில் கூட ஒரு சிறு கோவம் உண்டாகலாம்.

அப்படி நேர்ந்தால், அக்கோவத்தை சேதனன் மேல் காட்டாது, அதை தணித்து, சேதனனை காக்க வேண்டியே பிராட்டி அவன் அருகில் உள்ளாள், என்றார்.

பிராட்டி சரணாகதி பண்ணியவர்களுக்கு தானே அபயம் அளிக்கிறாள் ராமாயணத்தில் திரிசடைக்கு. ஆனால் தானாகவே ஸம்ஹாரம் செய்வதில்லை. ராவணனை பண்ணியிருக்கலாம். ஆனால் செய்யவில்லை.

## 5-25 ஸ்ரீ சப்தம் - ஸ்வாமி தேசிகன் விளக்கம்

ஸ்ரீ சப்தத்திற்கு, ஸ்வாமி தேசிகனும் மூன்று இடங்களில் அற்புதமாக விளங்கங்களை ஸாதித்திருக்கிறார்.

**அரு உரு ஆனவை தன்னை அடைந்திட * தான் அடைந்து ***
**வெருவுரை கேட்டு அவை கேட்பித்து * அகற்றும் வினை விலக்கி ***
**இருதலை அன்புதனால் * எமை இன்னடி சேர்த்தருளும் ***
**திருவுடனே திகழ்வார் * செறிந்தார் எங்கள் சிந்தையுள்ளே**
**ஸ்வாமி தேசிகன், துவயச் சுருக்கு 2**

1. **அரு என்பது அசேதனம். உரு என்பது சேதனம். இவை எல்லாம் பிராட்டியை அடைகின்றன.**
2. **அவள் எம்பெருமானை அடைகிறாள்.**
3. **ஜீவன்கள் நடுங்கி கூறும் முறையீடுகளை கேட்கிறாள்.**
4. **திருப்பி, பகவானை அவர்றை கேட்கும்படி செய்கிறாள்.**
5. **ஜீவன்களுக்கு எம்பெருமானை அடைய முடியாதபடி குவிந்து உள்ள பாபங்களைப் விலக்குகிறாள்.**
6. **தந்தையான பகவானிடத்தும், குழந்தையான சேதனனிடத்தும், இருவரிடமும் உள்ள அன்பினால் எம்மை எல்லாம் பகவானுடைய இனிய திருவடிகளில் சேர்க்கிறாள்.**

அந்த பிராட்டியுடன் என்றும் இணைந்திருக்கும் பகவான் எங்கள் நெஞ்சத்தில் என்றும் உள்ளான்," என்றார்.

**வேண்டுரை கேட்டு மீண்டவை கேட்பித்து**
**ஈண்டிய வினைகள் மாண்டிட முயன்று**
**தன்னடி சேர்ந்த தமர் உனை அணுக**
**நின்னுடன் சேர்ந்து நிற்கும் நின் திருவே**
**ஸ்வாமி தேசிகன், மும்மணிக்கோவை 1**

1. அடியவர்கள் கூறும் குறைகளை கேட்டு
2. மறுபடியும் அவற்றை எம்பெருமானைக் கொண்டு கேட்கச் செய்து
3. சேர்த்து வைத்திருக்கும் கர்மாக்களை அனைத்தையும் ஒழிக்க முயன்று
4. தன்னை அடைந்த அடியவர்களை
5. உன்னை அடையும்படி செய்து
6. உன்னோடு சேர்ந்து இருக்கும் திரு ஆனவளே" என்றார்.

prapatti.com

**வினைவிடுத்து வியன்குணத்தால் எம்மை ஆக்கி ***
**வெருவுரை கேட்டு அவை கேட்க விளம்பி நாளும் ***
**தனை அனைத்தும் அடைந்திடத் தான் அடைந்து நின்ற ***
**தன் திருமாதுடன் இறையும் தனியா நாதன் ***
**ஸ்வாமி தேசிகன், அமிருத ஸ்வாதினி 8**

1. தன்னை அடியும் அடியவரின் கர்மாக்களை போக்கி
2. ஆச்சரியமான கருணை போன்ற குணங்களால் சேதனர்களை பக்குவப்படுத்தி
3. பாபமே வடிவான எங்களது பயந்த வார்த்தைகளை கேட்டு
4. அந்த கூக்குகுரலை எல்லாம் எம்பெருமானைக் கேட்கும்படி விண்ணபித்து
5. எப்போதும் தன்னை அடியவர்கள் அடைக்கலம் அடைந்திட
6. அவர்களுக்கு நல்ல கதி உண்டாக வேண்டி தான் எம்பெருமானை அடைந்து,

தனக்கு மட்டுமே உரியவளான திருவுடன் ஒரு கணமும் பிரியாத எம்பெருமான்," என்றார்.

## 5-26 திருமகள் கேட்டு

### வெருவுரை கேட்டு, வேண்டுரை கேட்டு

**ஶ்ருணோதி** - சேதனர்கள் பிராட்டியிடம் பயத்துடன் எம்மை பகவானிடம் சேர்ப்பிக்க வேண்டும். நாங்கள் எவ்வளவோ குற்றங்கள் புரிந்து விட்டோம். எங்களை மன்னிக்கவும் என்று சொல்லுகிறார்கள். மஹாலஷ்மியானவள், சேதனர்களின் குறைகளை செவி கொடுத்து கேட்கிறாள்.

மற்றவர்கள் "என்ன நீ எதையோ சொல்லி அழுகிறாய்? அதை கேட்கத்தான் நான் இங்கு இருக்கிறனா, என்ன? போய் வேறு யாரிடமாவது போய் அழு.

நான்தான் உனக்கு அகப்பட்டேனா என்ன?," என்பார்கள் அது போல் இல்லாமல், புன்சிரிப்புடன் நம் குறைகளை காது கொடுத்து கேட்கிறாள்.

## 5-27 அவனை கேட்பித்து

**அவை கேட்பித்து, மீண்டவை கேட்பித்து, அவைக் கேட்க விளம்பி**

**ஶ்ராவயதி** - அடியவர்களின் ஈனக் குரலைக் கேட்ட தாயார், பகவானிடம் போய் இதைச் சொல்லுகிறாள். ஒரு காதில் வாங்கி மற்றொரு காதால் விட்டுவிடாமல், தன் பர்த்தாவிடம் சொல்கிறாள்

எத்தனையோ மனுஷாளைப் பார்க்கிறோம். ஆமாம் ஆமாம் என்று தலை ஆட்டுவதோடு சரி. அந்த பக்கம் நகர்ந்தால் போதும். எல்லாவற்றையும் மறந்து விடுவார்கள் ஒரு பேச்சுக்கு தலையை ஆட்டி வைப்போமே என்று இல்லை, பிராட்டி. உண்மையாகவே கேட்டு நாம் நல்ல கதி அடைய, அதற்கு வழி உண்டாக்குகிறாள்.

பகவான் நாராயணனை சேதனர்களுடைய பிராத்தனையை கேட்கும்படி செய்கிறாள்.

**உன்தன்னோடு உறவேல் நமக்கு இங்கு ஒழிக்க ஒழியாது**
**திருப்பாவை 28**

என்பது போலே சேதனன் செய்த பாபங்களைக் கண்டு கதவு மூடினால் அவர்களுக்கு கதி என்ன? அது முறையல்ல. உம்மிடம் என்னைக் காக்க வேண்டும் என்று வருபவனை நீங்கள் காக்காவிடில் ஆபத்பாந்தவன், அநாத ரக்ஷகன்," என்ற உம்முடைய பெருமை குறையும் அன்றோ!

குற்றம் செய்தவனை தண்டிப்பது என்னும் விதியை உம்மை ஶரணாகதி அடையாதவனிடத்து காட்டுங்கள். தன் தவறை உணர்ந்து, மன்னிப்பு கேட்டு, உங்கள் திருவடியை பற்றும் இவன் நம் குழந்தை. மன்னித்து அருளுவது உம்

கடமை என்று பிராட்டி எடுத்துக் கூறி பகவானை நம் விண்ணப்பத்தை கேட்கும்படி செய்கிறாள்.

**அம்பரமே தண்ணீரே சோறே அறஞ் செய்யும்**
**எம்பெருமான் நந்த கோபாலா எழுந்திராய்**
**கொம்பனார்க்கெல்லாம் கொழுந்தே குலவிளக்கே**
**எம்பெருமாட்டி யசோதாய் அறிவுராய்**
**அம்பறு மூடறுத்து ஓங்கி உலகளந்த**
**உம்பர்கோமனே உறங்காது எழுந்திராய்**
**செம்பொற்கழலடி செல்வா பலதேவா**
**உம்பியும் நீயும் உறங்கேலோ ரெம்பாவாய்**
**ஆண்டாள், திருப்பாவை 17**

ஆண்டாள் ரொம்ப அழகாக, திருப்பாவையில் ஸாதிக்கிறாள் முதலில் **நந்தகோபன்**, பிறகு **யசோதை,** பின் **கிருஷ்ணன்** என்று இவர்களை எழுப்புகிறாள்.

ஒருபக்கம் **பர்த்தா,** மற்றொரு பக்கம் **பிரஜை** (குழந்தை). நடுவில் தாயார் படுத்திருக்கிறாள். வேதம் அனைத்துக்கும் வித்தாகும் கோதைத்தமிழ் ஐயைந்தும் ஐந்தும் என்கிறபடி வேதத்தின் ஸாரத்தை ஆண்டாள் காட்டுகிறாள்

**பர்த்தாவினுடைய படுக்கையும்**
**ப்ரஜையினுடைய தொட்டிலையும்**
**விடாதே இருக்கும் மாதாவைப் போலே**
**பிள்ளைலோகாசாரியர், முமுக்ஷுப்படி 42**

என்றார் முமுக்ஷுப்படியில், பிள்ளைலோகாசாரியர்.

ஸ்ரீமத் ராமாயணத்தில், காட்டில் போகும்போது முதலில் **ராமன்**, பிறகு **ஸுதை,** பின் **லக்ஷ்மண**ன் சென்றார்கள். அது **அகார, உகார, மகார** வரிசையை

காட்டுகிறது. ஒரு பக்கம் புருஷன், மறொரு பக்கம் மக்கள் என பிராட்டி உள்ளாள்.

## 5-28 தன் அடியார் அடைய

**தன்னை அடைந்திட, தன்னடி சேர்ந்த, நாளும் தனை அனைத்தும் அடைந்திட**

**ஶ்ரீயதே** என்றால் அடையப்படுகிறாள் என்று பொருள். பிராட்டி எல்லா சேதனர்களாலும் அடையப் படுகிறாள் தங்களை உஜ்ஜிக்கவேண்டும் என்று விரும்பும் பக்தர்களால் அடையப்படுகிறாள்

**வாச: பரம் ப்ரார்த்த₂யிதா ப்ரபத்₃யேந் நியத: ஶ்ரீயம் ।**
**ஶௌநக ஸம்ஹிதை**

என்று ஶௌநக ஸம்ஹிதை சொல்கிறது. பகவானை சொல்லால் விளக்கமுடியாது. அவனை வேண்டுபவன் முதலில் லக்ஷ்மியை ஶரணமாக (புருஷகாரமாக) அடைய வேண்டும். என்றது.

**யாம் ஆலம்ப்ய**

ஸாத் ஸம்ஹிதை சொல்கிறது எந்த லக்ஷ்மியை ஆஸ்ரயித்து ஸுகமாக இந்த ஸம்ஸார ஸாகரத்தை தாண்டுகிறார்களோ

**ஸர்வகாமப்ரத₃ாம் ரம்யாம் ஸம்ஸாரார்ணவ தாரிணீம் !**
**க்ஷிப்ர ப்ரஸாதி₃நீம் தே₃வீம் ஶரண்யாம் சிந்தயேத்₃ இதி ।।**
**பாஞ்சராத்ரம்**

லக்ஷ்மி எல்லா ஆசைகளையும் நிறைவேற்றுபவள்; அழகியவள்; பிறவிக்கடலை கடக்க வைப்பவள்; விரைந்து அருளும் இவளையே அடைக்கலம் அடைவது என்று நினைக்கக் கடவன்.

**லக்ஷ்ம்யா ஸஹ ஹ்ருஷிகேஶோ தே₃வ்யா காருண்யரூபயா ।**
**ரக்ஷகஸ் ஸர்வஸித்₃த₄ாந்தே வேத₃ாந்தேஷு ச கீ₃யதே ।।**

லச்ஷமீ தந்த்ரம் 28-14

என்றது லக்ஷ்மீதந்த்ரம். கருணையே வடிவெடுத்தவளாம் லக்ஷ்மி அவளுடன் சேர்ந்த எம்பெருமானே ரக்ஷகன் ஆகிறான் என்று எல்லா ஸித்தாந்தமும், வேதாந்தங்களும் சொல்கிறது.

தாயின் வழியாகத்தான் தந்தையை அடைகிறோம். காகாசுரனும் சீதையின் காலில்தான் முதலில் விழுந்தான் "நப்பின்னை நங்காய் திருவே துயிலெழாய்" என்று நப்பின்னை பிராட்டியைத்தான் ஆண்டாளும் முதலில் சொல்லி பின்னேதான் "உன் மணாளனை இப்போதே," என்றாள்

ஈஷத் த்வத் கருணா நிரீக்ஷண ஸுதா
ஸந்துக்ஷணாத் ரக்ஷ்யதே
ஆளவந்தார், சதுஸ்லோகி 3

என்றார் ஆளவந்தார் சதுஸ்லோகியில். மிகவும் கொஞ்சம் அளவு உம்முடைய கடாக்ஷம் பெறாதலால் மூன்று லோகமும் நாசமடைந்தது. அதைப் பெற்றதும் மீண்டும் விருத்தி அடைந்தது என்றார்.

தாம் தேவ தேவ மஹிஷீம் ஶ்ரியமாஶ்ரயாம:
கூரத்தாவான் ஸ்ரீஸ்தவம் 11

"தேவ தேவர்களுக்கு எல்லாம் அரசியாய் எம்பெருமானின் பட்ட மஹிஷியாய் உள்ள உன்னை ஶரணமாக பற்றுகிறேன்," என்றார் கூரத்தாழ்வார்.

உல்லாஸ பல்லவித பாலித ஸப்தலோகீ
நிர்வாஹ கோரகித நேமகடாக்ஷலீலாம் |
ஸ்ரீரங்கஹர்யம்தல மங்களதீபரேகாம்
ஸ்ரீரங்கராஜமஹிஷீம் ஸ்ரீயமாஶ்ரயம: ||
பராசர பட்டர் ஸ்ரீகுண ரத்ந கோஶம் 2

என்று ஸ்ரீகுணரத்நகோசத்தில் பராஸர பட்டர் ஸ்ரீரங்கநாயகியை சரண் புகுகிறார் முதலில். சந்தோஷமாய் தளிர்விடுவதும், ரக்ஷிக்கும் ஏழு உலகங்களின் நிர்வாஹத்தினால் மொட்டு போன்ற அர்த்தமுள்ள கடாக்ஷலீலைகளை உடையளாகிய ஸ்ரீரங்கம் கோவிலுக்கு ஒரு மங்கள தீபம் போல் விளங்கும் ஸ்ரீரங்கநாதனுடைய திவ்யபத்னியான ஸ்ரீரங்கநாயகியே! உன்னை தியானிக்கிறோம் என்றார்.

**நாளும் நின்றடு நம் பழமை அங்கொடு வினையுடனே**
**மாளும் * ஓர் குறைவில்லை மனனக மலமறக் கழுவி ***
**நாளும் நம் திருவுடை அடிகள்தம் நலங்கழல் வணங்கி ***
**மாளும் ஓரிடத்திலும் வணக்கொடு மாள்வது வலமே**
நம்மாழ்வார் ,திருவாய்மொழி 1-3-8

என்றார் நம்மாழ்வார். தினமும் இடைவிடாது செய்யும் நம் பாபங்களை ஒழிக்க வேணும். மனத்தில் அற்ப பலனையோ, இதர தெய்வங்களையோ நினைக்காமல், நம் திருவை உடையவனின் அடிகளைப் பற்றினால், எல்லா பாபங்களும் நசிக்கும் என்றார்.

## 5-29 தான் அடைந்து

**தான் அடைந்து, நின்னுடன் சேர்ந்து நிற்கும் திரு, தான் அடைந்து நின்ற**

**ஶ்ரயதே** என்றால் தான் அடைகிறாள் என்று பொருள். அவள் பக்தர்களுக்காக பெருமாளை ஆஶ்ரயித்திருக்கிறாள். அதாவது அடைகிறாள்.

பகவான் சேதனர்களின் பாபங்களைக் கண்டு கோபம் கொள்கிறான். அப்போது அவனைப் பிராட்டி ஆஶ்ரயித்து அவன் கோபத்தை தணிக்கிறாள். அவனிடம் இயற்கையாக உள்ள கருணையால் சேதனர்களை வாழ்விக்கிறாள். பிராட்டி தனக்கு சேதனிடம் உள்ள வாத்ஸல்ய ப்ரித்யத்வத்தால் புருஷகாரமாய் நிற்கிறாள்

“ஶ்ரி” என்பதற்கு **ஸேவித்தல்** என்று மற்றொரு பொருள். இவள் எல்லோராலும் ஸேவிக்கப்படுகிறாள். இவள் எம்பெருமானை ஸேவிக்கிறாள்.

அதாவது, எல்லோருக்கும் இவள் ஸேஷியாகவும், இவள் எம்பெருமானுக்கு மட்டும் ஸேஷமாய் நிற்பவள் என்ற கருத்து.

**பத்₃மப்ரியே பத்₃மிநி பத்₃மஹஸ்தே**
**பத்₃மாலயே பத்₃மத₃ளாயதாக்ஷி ।**
**விஶ்வப்ரியே விஷ்ணுமநோநுகூலே**
**தவத் பாத₃ பத்₃மம் மயி ஸந்நித₄த்ஸ்வ ।**
**ஶ்ரீஸூக்தம்**

என்று ஶ்ரீஸூக்தம் சொல்கிறது. “தாமரையில் ஆசை உடையவள். தாமரையை கையில் ஏந்தி இருப்பவள். தாமரை மேல் அமர்ந்து இருப்பவள். தாமரை இதழை போன்ற திருக்கண்களை உடையவள் ஸர்வ வஸ்துக்களிலும் அன்பு உடையவளே! மஹாவிஷ்ணுவின் திருவுள்ளத்திற்கு உகப்பாக இருப்பவள். தாமரை போன்ற உன்னுடைய திருப்பாதத்தை எனது முடிமேல் சூட்டுவீர்,” என்றது.

பகவானுக்கு கைங்கர்யம் செய்வதே நமக்கு உயர்ந்த போக்யம் என்று ஆசாரியர்கள் காட்டிக் கொடுது இருக்கிறார்கள். இப்படி கைங்கர்யம் செய்வதில் பிராட்டியைப் போல் யாருமில்லை.

**ஶ்ரவணம் கீர்த்தனம் விஷ்ணு: ஸ்மரணம் பாத ஸேவகம்**
**அர்ச்சனம் வந்தனம் தாஸ்யம் ஸக்யம் ஆத்ம நிவேதநம்**
**வியாஸ பகவான் ஶ்ரீமத் பாகவதம்**

என்று பாகவதத்தில் வரும் ஸ்லோகம் குழந்தை ப்ரஹ்லாதன் ராக்ஷஸர்களுக்கு நடுவே பகவத் பக்தியைப் பற்றி சொல்கிறான். ஒன்பது வித பக்தி என்று காட்டுகிறான்.

1. **ஶ்ரவணம்** என்றால் கேட்டல். பரிக்ஷித் மஹாராஜா மாதிரி கேட்டவன் யாருமில்லை. பத்தே நாட்களில் பிராண வியோகம் என்று தெரிந்தவுடன் நல்ல கதி அடைய வேண்டும் என்பதற்காக பாகவதம் கேட்டான். மீதி

எல்லோரையும் போல் இல்லாமல், பத்து நாட்களுக்குள் உலகத்தில் உள்ள சிற்றின்பத்தை அனுபவித்து விட்டு போக வேண்டுமே என்று இல்லாமல் ரொம்ப உற்சாகத்துடன் (enthusiastic) ஆடாமல், அசங்காமல் கேட்கிறான்.

2. **கீர்த்தனம்** என்பது பகந் நாமவை சொல்வது. சுகப் பிரம்மம் மாதிரி பகவானைப் பற்றி சொல்பவர் யாருமில்லை இவர் வேத வியாஸரின் பிள்ளை. அப்படியே பகவானை நேரில் ஸாக்ஷாத்காரம் செய்து கொண்டு சொல்கிறார். மரம் செடி, கொடி, மலை, ஜலம் எல்லாவற்றிலும் பகவானப் பார்க்கிறார் **"ஜோதீம்ஷி விஷ்ணு: ஜலாநி விஷ்ணு:, வனானி விஷ்ணு:"** என்று விஷ்ணு புராணம் சொல்கிற மாதிரி கண்ணில் கண்ட பொருள்களை யெல்லாம் கண்ணனாகவே பார்க்கிறார்.

3. **ஸ்மரணம்** என்பது இடைவிடாது பகவானை ஸ்மரிப்பது. அதாவது த்யானம் செய்வது. ப்ரஹ்லாதன் மதிரி யாரும் தியானித்தது இல்லை. மலையிலிருந்து உருட்டினாலும், ஸமுத்திரத்தில் போட்டு அழுத்தினாலும், விஷத்தை வாயில் வைத்து அமுக்கினாலும் அந்த நாராயாணனை இடைவிடாமல் தியானிக்கிறான். எண்ணெய் விடும்போது ஒரு பிசிறு இல்லாமல் தொடர்ச்சியாக விழுமோ அது போலே.

4. **பாத ஸேவகம்** என்பது பகவானின் பாதங்களை தொட்டு கைங்கர்யம் செய்வது. அதை மஹா லக்ஷ்மியைப் போல் செய்பவள் யாருமில்லை. தன் விரல்களின் நகங்களுடைய காந்தியாலே (magentic treatment) பகவானின் திருப்பாதங்களை வருடுகிறாள்.

5. **அர்ச்சனம்** என்றால் பூக்களை எடுத்து பகவானுக்கு அர்ச்சிப்பது, துருவன் வம்ஸத்தில் வந்த ப்ருது சக்ரவர்த்தியைப் போல் அர்ச்சித்தது யாருமில்லை. அதனால்தான் இந்த பூலோகத்திற்கே ப்ருதிவி என்று பெயர்.

6. **வந்தனம்** என்பது ஸேவித்தல். கிருஷ்ணனை அக்ரூரர் மாதிரி விழுந்து, விழுந்து ஸேவித்தவர் யாருமில்லை.

7. **தாஸ்யம்** என்பது தாஸனாக கை கட்டி வாய் பொத்தி பணிந்து நிற்பது. அதில் ஆஞ்சனேயர் மாதிரி யாருமில்லை.

**தாஸோஹம் கோஸலேந்த்ரஸ்ய ராமஸ்யாக்லிஷ்டகர்மண: |**
**ஹநுமாந் ஶத்ரு ஸைந்யாநாம் நிஹந்தா மாருதத்மஜ: ||**
வாமீகி ஸ்ரீமத் ராமாயணம் (ஸுந் 42-35)

ராமாயணத்தில் ஸீதையிடம் ஹனுமார் தன்னை அறிமுகப்படுத்திக் கொள்கிறார். “அடியவன் நான். யாருக்கு என்று கேட்டால் கோசல நாட்டு மன்னனும், மகத்தான காரியங்களை அதி சுலபமாகச் செய்யும் ராமனுக்கு. விரோதிகளை அழிக்கிறவனும், வாயுபுத்திரனுமான அனுமான் என்னும் பெயரையுடைய நான் அந்த ராமனுக்கு அடியவன் நான்” என்றார்.

8. ஸக்யம் என்பது தோழனாக நிற்பதில் (Friendship) கண்ணனுக்கு அருச்சுனன் மாதிரி தோழன் யாருமில்லை.

9. ஆத்ம நிவேதநம் என்பது தன்னுடைய ஆத்மாவையே அர்ப்பணித்தல் என்று பொருள். மஹாபலி சக்ரவர்த்தி மாதிரி இதைச் செய்தது யாரும் இல்லை வாமனனான வந்து த்ரிவிக்ரமனாக வளர்ந்த போது, மூன்றாவது அடிக்கு தன் ஆத்மாவையே அர்பணித்தவன்.

இந்த ஒன்பது வித பக்தியை ராமாயணத்தின் கதாபாத்திரங்களில் சொல்வதும் உண்டு.

**ஶ்ரவணம்** - கேட்டலுக்கு அனுமன்;
**கீர்த்தனம்** - பறை சாற்ற வால்மீகி;
**ஸ்மரணம்** - நினைப்பதற்கு ஸீதை;
**பாத ஸேவகம்** - திருவடி தொண்டிற்கு பரதன்;
**அர்ச்சனம்** - போற்றுதலுக்கு சபரி;
**வந்தனம்** - விழுந்து வணங்க விபீஷணன்;
**தாஸ்யம்** - இட்ட ஏவலுக்கு லக்ஷ்மணன்;
**ஸக்யம்** - தோழமைக்கு சுக்ரீவன்;
**ஆத்ம நிவேதநம்** - அர்ப்பணத்திற்கு ஜடாயு

**ஒரு குறளாய் இரு நிலம் மூவடி மண் வேண்டி**

**உலகனைத்தும் ஈரடியால் ஒடுக்கி**
**ஒன்றும் தருகவெனா மாவலியைச் சிறையில் வைத்த**
**தாடாளன் தாள் அணைவீர்**
திருமங்கையாழ்வார், பெரிய திருமொழி 3-4-1

என்று பெரிய திருமொழியில் சீர்காழியை காழிச்சீராக விண்ணகரம் என்று திருமங்கையாழ்வார் பாடும்போது இரண்டு காலால் ப்ரபஞ்சத்தை எல்லாம் அளந்து, மூன்றாவது அடி கேட்டபோது, தன்னையே தந்தான் மாவலி. அவனைத் தன் பாதத்தால் அணைத்து.

அதனால்தான் ஆரம்ப பாசுரத்தில் “**தன் பாதம் இரண்டால் அணைத்து**” என்று சொன்னோம்

## 5-30 குறை நீக்கி

**அகற்றும் வினை விலக்கி, தீண்டிய வினைகள் மாண்டிட முயன்று, வினை விடுத்து**

**ஶ்ருணாதி** - எம்பெருமானை சேதனனின் முறையீடுகளைக் கேட்க செய்தபின், சேதனனை பரிபக்குவமாக்குகிறாள்.

“அநாதி காலமாய் பாபங்களே செய்து வந்தள்ள உனக்கு இன்று புத்தி வந்துள்ளது. எம்பெருமான் பேரில் ருசி உண்டாகி உள்ளது. உன் பாபங்கள் எல்லாம் நசித்து போக, எல்லா திருக்கல்யாண குணங்களை உடைய அந்த எம்பெருமானிடம் ஶரணாகதி செய்,” என்று அறிவுரை கூறுகிறாள்.

“உன் அல்ப மனம் மாறி, உன் நிலை தெரிந்து, இனிமேல் திருந்தி நடப்பதாக உறுதி கொண்டால்தான் பகவானுக்கு உன் மேல் உள்ள கோபம் தணியும். ஶரணாகதிதான் உயர்ந்த உபாயம். ஸர்வ ஸ்வதந்த்ரனான எம்பெருமான், கருணைக் கடல். உன் ஶரணாகதியால், மனம் இரங்கி உன்னை காப்பத்துவான்’, என்று நல்ல வழி சொல்லி சேதனனைத் திருத்துகிறாள்.

விதி₃தஸ் ஸ ஹி த₄ர்மஜ்ஞ: ஶரணாக₃த வத்ஸல: ।
தே ந மைத்ரீ ப₄வது தே யதி₃ ஜீவிதுமிச்ச₂ஸி ।।
ராமாயணம் ஸுந் 21-20

ஸீதை ராவணனை நோக்கிக் கூறுகிறாள். "ஸ்ரீராமபிரான் தர்மத்தை அறிந்தவர். ஶரணம் என்று எவன் அடைந்தாலும், அவனிடம் மிகுந்த வாத்ஸல்யம் உடையவர். ஹே ராவணா! உனக்கு உயிர் வேண்டுமானால் அவரிடம் நட்பு கொள்வாய்" என்றாள்.

ப்ரதிகூலனான ராவணனிடமும் கூட பிராட்டிக்கு அவ்வளவு கருணை. நல்ல வார்த்தைகள் கூறி, அவனை திருத்த முயலுகிறாள்.

ஶ்ருணாதி நிகி₂லாந் தோஷாந் என்ற வாக்கியம் உபாயத்திற்கு தகுதியுடையவர்க்கு, அது வரையில் உபாயத்திற்கு தடையாக இருந்த கர்மங்களைப் போக்குகிறாள். மோக்ஷத்திற்கு தடையாக உள்ள தீய வினைகளை நீக்குகிறாள்

காரிமாறன் சடகோபன் சொல்லாயிரத்து இப்பத்தால்
வேரி மாறாத பூமேலிருப்பாள் வினைதீர்க்குமே"
நம்மாழ்வார், திருவாய்மொழி 4-5-11

என்று திருவாய்மொழியில் நம்மாழ்வாரும், வாசனை மாறாத தாமரையில் இருக்கும் பிராட்டி பலனைக் கொடுப்பாள்; நம்முடைய வினைகளைத் தீர்ப்பாள். பகவத் அனுபவ விரோதியான ஸகல ப்ரதிபந்தங்களையும் தீர்ப்பாள் என்றார்.

பெருமாளுக்குமுன் வந்து "நானே அளிக்கிறேன்" என்று தருகிறாள் என்றார்.

## 5-31 நிறை ஆக்கி

**இன்னடி சேர்த்து அருளும், ஈண்டிய வினைகள் மாண்டிட, வியன் குணத்தால் எம்மை ஆக்கி**

**ஶ்ரீணாதி ச கு₃ணைர் ஜக₃த்** என்ற வாக்கியம் சேதனர்களுடைய நல்ல குணங்களை பக்குவமாக்கி கைங்கர்யத்திற்கு யோக்யர்களாக ஆக்குகிறாள் என்பது. நல்ல அறிவு, பக்தி இவற்றைத் தருகிறாள்.

**பண்டை நாளாலே நின் திருவருளும்**
**பங்கயத்தாள் திருவருளும் கொண்டு**
**நின்கோயில் சீய்த்து பல்படிகால்**
**குடிகுடி வழி வந்தாட் செய்யும்**
**தொண்டரோர்க்கு அருளிச் சோதிவாய் திறந்து**
**உன் தாமரைக் கண்களால் நோக்காய்**
நம்மாழ்வார், திருவாய்மொழி 9-2-1

என்று திருவாய்மொழியில், திருப்புளிங்குடி பெருமானை நம்மாழ்வார் பாடும்போது பிராட்டியின் திருவருளும் என்று ஸ்பஷ்டமாக சொல்லி வேண்டி நின்றார்.

இங்கு **சீய்த்து** என்பது பெருக்கி, துடைத்து, சுத்தம் செய்வது. "**சுத்தம் செய்வது, பகவானுக்கும், அடியவருக்கும் உகந்தது**" என்பது திருக்கண்ண மங்கையாண்டான் வார்த்தை.

**பூவளரும் திருமகளால் அருள்பெற்றுப் பொன்னுலகில் பொலிவர்**
திருமங்கையாழ்வார், பெரிய திருமொழி (11-6-10)

திருமங்கையாழ்வாரும், பிராட்டியின் திருவருள் பெற்று மோக்ஷ ஸாம்ராஜ்யத்தில் சிறந்து விளங்குவர் என்றார்பெரிய திருமொழியில்.

**தரும அரும் பயனாய * திருமகளார் தனிக் கேள்வன் ***
**பெருமையுடைய பிரானார் * இருமை வினை கடிவாரே**
நம்மாழ்வார், திருவாய்மொழி 1-6-9



prapatti dot com

“நமக்கு பகவான் மோக்ஷத்தை அளிக்கிறான் என்றால் அவன் தனித்து செய்வதில்லை. பிராட்டி ஸகிதமான நாராயணனே அந்த ப்ராப்தத்தை அருளுகிறான்.”

அந்த பிராட்டியானவள் ஸகல விதமான தர்மங்களின் பலனின் வடிவம் என்று சொல்லும்படி அவனுடனே சேர்ந்து ஒரு மிதுனமாய் உள்ளாள்.

அவள் கணவனாய் அவளுடன் சேர்ந்து இருப்பதால்தான் எம்பெருமான், புண்யம், பாபம் என்ற இரண்டு வினைகளையும் போக்குவதில் புகழ் பெறுகிறான்.” என்று பிராட்டியின் சேர்க்கையின் மகத்துவத்தை ஸாதித்தார்.

**நின் அருள் எனும் சீர் ஓர் அரிவையானது என**
**ஸ்வாமி தேசிகன், மும்மணிக்கோவை**

ஸ்வாமி தேசிகன், எம்பெருமானுடைய அருள் என்பதே ஓர் பெண் வடிவம் கொண்டு பிராட்டியாய் உள்ளது என்றார்.

**இத்யாதாதிகளிற்படியே தன் குணங்களாலே கைங்கர்ய பர்யந்த ஜ்ஞாநாதி குணப்ரதாநத்தை பண்ணிக்கொண்டு ஜகத்தை பரிபக்குவமாக்கும் என்றபடி**
**ஸ்வாமி தேசிகன், ஸார ஸாரம்**

என்று ஸ்வாமி தேசிகன் ஸாரஸாரத்தில் உலகில் உள்ள ஸகல ஜீவராசிகளையும் பக்குவப் படுத்துகிறாள் என்றார்.

**ஆத்மவித்$_3$யா ச தே$_3$வி த்வம் விமுக்தி பல$_2$த$_3$ாயிநீ**
**விஷ்ணு புராணம் 1-9-20**

என்று “தேவியே! நீ எனக்கு ஆத்ம ஞானத்தை அளிக்கிறாய். அத்துடன் மோக்ஷ பலனை அருள்வதையே நீ இயற்கையாக கொண்டுள்ளாய்,” என்றது.

## 5-32 துறை என

இதுவே உபாயம் என்று பகவத் கைங்கர்யமாகிற பலனை எதிர் நோக்கி நிற்பதைக் காண்பிக்கிறது. காவிரி போன்ற நதிகளின் ப்ரவாகம் ப்ரபலமாக இருக்கிறது. உள்ளே இறங்கி தீர்த்தமாட பயமாக இருகிறது. அம்மா மண்டபம் போன்ற துறை என்று இருந்தால் நதியில் இறங்கி குளிப்பதற்கு வசதியாய் இருகிறது.

**விகா3ஹே தீர்த்த2 ப3ஹுளம் ஶிதளாம் கு3ரு ஸந்ததிம்**
**ஶ்ரீநிவாஸ த3யாம்போ4தி4 பரீவாஹ பரம்பராம்**
**ஸ்வாமி தேசிகன், தயா ஸதகம் 2**

என்று ஸ்வாமி தேசிகன் தயா ஸதகத்தில் ஸாதிக்கிறார் இந்த தயாஸதகம் எனும் ஸ்தோத்ரத்தை தொடங்கும்போது ஆசாரியர்களை ஸேவிக்கிறார். ஒரு விக்னமும் இல்லாமல் நல்லபடியாக முடிக்க வேண்டும் என்று.

ஏரியில் தண்ணீர் நிரம்பிவிட்டால், மேலே வழிந்து ஒடும் நீருக்கு போக்கு வேண்டும் (Divert the excess flow) திருவேங்கடமுடையான தயை பெரிய கடல் போன்றது. அது பொங்கி வழிந்து ஆசார்ய பரம்பரை என்று நீர் பெருக்கு எடுத்து ஒடுகிறது நம் முன்னே உள்ள ஆசார்யர்கள்தாம் அதில் இறங்குவதற்கு வழி செய்யும் துறை. அந்த துறைகளில் ஆழ்ந்து மூழ்குகின்றேன் என்கிறார்.

## 5-33 பறை நோக்க

கைங்கர்யத்தை எதிர் பார்த்து அதற்கு தகுதி உடையவர்களாய் செய்து கொள்ளுதல்.

எல்லா ஆசாரியர்களும் பார்த்தார்கள், இந்த ஆண்டாள் மற்ற ஆழ்வார்கள் சொல்லாத ஒன்று சொல்லியிருக்க வேண்டும் என்று. எல்லா பாசுரங்களயும் புரட்டி புரட்டி பார்த்தார்கள். கடைசியில், ஆண்டாள் உபயோகித்த பதம் ஒன்று. மற்ற ஆழ்வார்கள் யாரும் உபயோகிக்கவில்லை. அதுதான் "பறை"

ஆண்டாள் நான்கு இடங்களில் நமக்கு இதை திருப்பாவையில் காண்பிக்கிறாள்

1. நாராயணனே நமக்கே பறை தருவான் (1 பாசுரம் - மார்கழி திங்கள்)
2. இறைவாய் நீ தாராய் பறையேலோ ரெம்பாவாய் (28 - கறவைகள்)
3. இற்றைப் பறை கொள்வான் இன்றுகாண் (29 - சிற்றஞ் சிறுகாலே,)
4. அங்கப்பறை கொண்டவாற்றை அணிபுதுவை (30 - வங்க கடல்.)

வேதமனைத்துக்கும் வித்தாகும் கோதையானவள் நான்கு வேதங்களின் ஸாரங்களை நான்கு இடங்களிலே பறை என்ற பதத்தால் காண்பிக்கிறாள் நாலு வித புருஷார்த்தங்களையும் தரக்கூடியது என.

## 5-34 நம் இறையின் மறையே.

நம் இறையின் மறை என்பது பாஞ்சராத்ர சாஸ்த்திரத்தை குறிக்கும். நம்முடைய பகவானான நாராயணன் தான் சோதி வாய் திறந்து அருளிச் செய்த பாஞ்ச ராத்ர சாஸ்த்ரம் என்பதை இங்கே சொல்லியது.

**ஸாபராதர்களான** (குற்றவாளிகளான) **ஸம்ஸாரிகள் திறத்தில் தண்டதரனான** (தண்டனை வழங்கும்) **ஈச்வரனுடைய ஸஹஜ காருண்யமும்** (இயற்கையான கருணையும்), **ஒழிக்க ஒழியாத உறவும் உஜ்ஜிவகாம்படி அவனுடைய சீற்றத்தை ஆற்றுகைக்காக அத்தலையில் மஹிஷீத்வ ப்ரயுக்த வால்லப்ய அதிஸயத்தாலும்** (மனைவி என்பதால் ஏற்பட்ட தனி உரிமையால்) **இத்தலையில் மாத்ருத்வ ப்ரயுக்த வாத்ஸல்ய அதிஸயத்தாலும்** (தாய் என்பதால் ஏற்பட்ட குற்றம் காணாத அன்பின் எல்லையால்) **மறுக்கா ஒண்ணாத புருஷகாரமாய்** (பரிவுரை செய்பவளாய்) **ஶரண்ய விசேஷணமுமாய் நின்று ஸர்வராலும் ஸ்வ உஜ்ஜீவநத்துக்காக** (நல்வாழ்ச்சிக்காக) **ஆஶ்ரயிக்கப்படும்.**

**இவர்களை உஜ்ஜீவிப்பிகைக்கு ஆக ஈச்வரனை ஆஶ்ரயித்து இருக்கும்.**

**ஆஶ்ரயணோந்முகருடைய** (அடைக்கலம் அடைந்தவரின்) **ஆர்த்த நாதத்தைக்** (அவலக் குரலைக்) **கேட்டு, ஸர்வேஶ்வரனைக் கேட்பித்து, அவர்களுடைய ஆர்த்தியை** (துன்பத்தை) **ஶமிக்கும்**

**இக்ரமத்திலே ரக்ஷிக்கையும் ஸ்வந்த்ர வ்யவஸ்தா ஸித்தம்** (ஸ்வதந்திரனான எம்பெருமான் தானே எற்படுத்திக் கொண்ட கட்டுப்பாட்டினால் ஏற்ப்பட்டது)

ஸ்வாமி தேசிகன், ஸார ஸாரம்

என்று ஸ்வாமி தேசிகன் ஸாரஸாரத்தில் ஸாதிக்கிறார் இது புரிவது கொஞ்சம் கஷ்டம். நிறைய பரிபாஷை. (leagal contract மாதிரி. correct ஆன terms use பண்ணினால்தான் complete ஆக இருக்கும்).

பிள்ளைலோகாசார் அஷ்டாதஸ ரஹஸ்யங்கள் என்று 18 ரஹஸ்யங்கள் எழுதியுள்ளார் என்று முன்பே சொன்னோம் அதில் முமுக்ஷுப்படி, தத்வத்ரயம், ஸ்ரீ வசன பூஷணம் என்ற மூன்றிற்கும் மணவாள மாமுனிகள் வியாக்கியானம் செய்துள்ளார்.

**அதி ஸங்கரஹமாகவும், அதி விஸதாரமாகவும்,**
**ஸம்ஸ்கிருத சொற்கள் ஏராளமாக நுழைத்து இருப்பது**
**என்ற திரிவித தோஷமில்லாது**

என்று விசதவாக்சிகாமணி மணவாள மாமுனிகள் அஷ்டாதஸ ரஹஸ்யங்களிலேயும் முமுக்ஷுப்படி மிகவும் உயர்ந்தது என்று ஸாதிக்கிறார்.

**எல்லாவற்றிற்கும் பின்பிறே**
**இப்பிரபந்தம் இட்டருளியது**

என்றும் முமுக்ஷுப்படியை பற்றி பிள்ளைலோகாசாரியர் கடைசியாக அருளியது என்றும் மாமுனிகள் ஸாதிக்கிறார்.



prapatti.com

அதில், ஸ்ரீ ஶப்தார்த்தத்தை விளக்கும்போது மேலே சொன்ன ஆறு வித்பத்திகளயும் மனத்தில் வைத்து கொள்ளவது கஷ்டம் என்று இரண்டு மட்டுமே போதும் என்றார் பிள்ளைலோகாசாரியர்.

**"ஶ்ரீயதே, ஶ்ரயதே"**
**இதுக்கு அர்த்தம் - எல்லார்க்கும் இவளைப் பற்றி ஸ்வரூப லாபமாய் இவள் தனக்கும் அவனைப் பற்றி ஸ்வரூப லாபமாயிருக்கும் என்று**

**இவள் தாயாய் இவர்கள் க்லேஶம் பொறுக்காமாட்டாதே, அவனுக்கு பத்னியாய் இனிய விஷயமாக இருக்கையாகையாலே, கண்ணழிவற்ற புருஷ காரம்**
**- பிள்ளைலோகாசாரியர், முமுக்ஷுப்படி 124-126**

என்று முமுக்ஷுப்படியில் அருளினார். அர்த்தம் ரொம்ப சுலபமாகப் புரியக் கூடியது.

**ஶ்ரீஞ் ஸேவாயாம்** என்ற தாதுவாலே ஶ்ரீயதே இதி ஶ்ரீ, ஶ்ரயதே இதி ஶ்ரீ என்ற வித்பத்திகள்.
**"ஶ்ரீயதே, என்பதால் எல்லாராலும் ஸேவிக்கப்பட நின்றாள்.**
**ஶ்ரயதே இதி ஶ்ரீ என்பதால் ஈஶ்வரனை இவள் ஸேவித்து நின்றாள்.**

## 5-35 புருஷகார ப்ரபத்தி

ஆக இந்த ஶ்ரீ ஶப்தத்தின் மூலம் பிராட்டியை முதலில் புருஷகாரமாய் வரித்தோம். எம்பெருமானாரும் இந்த முறையிலேயே கத்யத்தை அருளினார்.

**சந்த்₃ராம் ஶரணமஹம் ப்ரப₃த்யே**
**ப்ரப₄ாஸாம் ஜ்வலந்தீம் ஶரணமஹம் ப்ரப₃த்யே**
**யஶஸாம் ஶரணமஹம் ப்ரப₃த்யே**
**ஶ்ரியம் ஶரணமஹம் ப்ரப₃த்யே**
**லோகே தே₃வஜுஷ்டாம் ஶரணமஹம் ப்ரப₃த்யே**
**உத₃ாராம் ஶரணமஹம் ப்ரப₃த்யே**

**பத்மநேமீம் ஶரணமஹம் ப்ரப₃த்யே**
**ஶ்ரீஸூக்தம்**

என்று வேதம் உரைத்தது. எல்லோரும் போய் அடையும்படி மென்மையாய், குளிர்ந்து இருப்பவளை ஶரணம் அடைகிறேன். பஞ்சாக்நி வித்தையின் கூற்றின்படி என்னை பெற்ற அத்தாயை ஶரணம் அடைகிறேன். பெரும் புகழ் உடைய உன்னை ஶரணம் அடைகிறேன். பகவானுடன் என்றும் நித்ய வாஸம் செய்பவளை ஶரண் அடைகிறேன். அவனைவிட வள்ளலாய் இருக்கும் உன்னை ஶரண் அடைகிறேன். ஸ்ருஷ்டி காலத்திலிருந்து எனக்கு அருள் புரியும் உன்னை ஶரண் அடைகிறேன்.

## 5-36 த்வயத்திற்கு பெருமை ஸ்ரீயினால்

ஸ்வாமி தேசிகன் மிகச் சுருக்கமாக, எல்லாப் பொருள்களும் பொதிந்தபடி அமைத்துள்ளார், கீழே உள்ள ஸ்லாகத்திலே.

**ப்ரத்யூஷதாம் ப₄ஜதி ஸம்ஸ்ருதி காளராத்ரே:**
**பத்₃மா ஸஹாய ஶரணாக₃தி மந்த்ர ஏஷ: ||**
ஸ்வாமி தேசிகன், ஸ்ரீமத் ரஹஸ்யத்ரய ஸாரம், த்வயாதிகாரம்

விடியற்காலைப் பொழுதாய் அடைகிறது இந்த ஸம்ஸாரம் என்ற காளராத்ரிக்கு. - எது என்றால் பெரிய பிராட்டியுடன் கூடிய நாராயணனிடம் செய்யும் ப்ரபத்திக்கு உரிய த்வயம் எனும் இம்மந்திரம்," என்று ஸ்வாமி தேசிகன், ஸ்ரீயுடன் கூடிய எம்பெருமானிடம் அடைக்கலம் அடைவதை ஸாதித்தார்.

பிராட்டி மூலமாக ஶரணாகதி செய்வதால் நமக்கு கவலை இல்லை. பகவானே **"ஏந கேநாபி ப்ரகாரேண த்வய வக்தா கேவலம்**" என்றார் எம்பெருமானார் கத்யம் வழியாக. ஏதோ ஒரு வழியில் (முழுவது அறியாமல், சரியாக உச்சரிக்காமல், மஹா விஶ்வாசம் ஏற்படாது இருப்பினும்) பலனை நான் தருகிறேன் என்கிற முறையில். அது ஸாத்யம் ஆவது பிராட்டி மூலமாகத்தான்.

வேதமும் **"மாத்ரு தேவோ பவ:'** என்றது எல்லோருக்கும் முன்பாக.

## 5-37 முடிவுரை

**பூர்வ கண்டத்தில் ஸ்ரீ ஶப்தம் ப்ரஜைகள் பக்கல் வாத்ஸல்ய அதிஶயத்தாலும்** (குற்றத்தை நோக்காத அன்பின் மிகுதியாலும்), **பதியின் பக்கல்** (கணவனான எம்பெருமானிடத்து) **வால்லப்ய அதிஶயத்தாலும்** (influence - சலுகையாலும்) **புருஷகாரமாய்க் கொண்டு** (பரிந்து பேசுதலை) **ஶரண்ய ஸஹதர்மசாரிணியான பிராட்டியைச் சொல்கிறது.**

1. **எல்லோராலும் ஆஶ்ரயிக்கப்படும் என்றும்,**
2. **ஸர்வேஶ்வரனை ஆஶ்ரயித்திருக்கும் என்றும்,**
3. **ஆஶ்ரிதர் விண்ணப்பம் செய்யும் பாசுரங்களைக் கேட்டு,**
4. **ஸர்வேஶ்வரனை கேட்பிக்கும் என்றும்,**
5. **இவர்களுடைய தோஷங்களை எல்லாம் போக்கும் என்றும்**
6. **தன்னருளாலே இவர்களுக்கு ஜ்ஞாநாதி குணபாகத்தை உண்டாக்கும் என்றும் ஸ்ரீ ஶப்தார்த்தத்தை ஶாஸ்திரம் சொல்லிற்று.**

**ஸ்வாமி தேசிகன், ரஹஸ்யத்ரய சுளகம்**

ஆக இந்த ஐந்தாம் பாசுரத்தில், ஸ்ரீ ஶப்தத்தின் பொருளை அனுபவித்தோம்.

சுருக்கமாக, பிராட்டி சேதனர்களின் நன்மை பொருட்டு பல காரியங்களைச் செய்கிறாள் கேட்டு, கேட்பித்து, அடையப்பட்டு, தான் அடைந்து, குறை நீக்கி, எங்கும் நிறை செய்து பகவானிடம் சேதனனை சேர்ப்பித்து கடக க்ருத்யம் பண்ணி அவர்களுக்கு நல்ல நிலையை அளிக்கிறாள்

**ஶ்ரியை ஜாதஃ ஶ்ரிய ஆநிர்யாய**
**ஶ்ரியம் வயோ ஜநித்ருப்யோ த3த4ாது ।**
**ஶ்ரியம் வஸாநா அம்ருதத்வ மாயந்**
**ப4வந்தி ஸத்3யஸ் ஸமித4ா மிதத்3யூந் ।**

prapatti.com

ஶ்ரிய ஏவைநம் தச்ச்$_2$ரியாமாத$_3$த$_4$ாதி ।

ஸ்ரீஸூக்தம்

என்று ஸ்ரீஸூக்தம் முடிக்கிறது. பகவத் கைங்கர்யம் என்னும் உயர்ந்த செல்வத்தை அனுபவிப்பதற்கே நான் பிறந்துள்ளேன். மறைக்கும் அசேதன அம்சங்கள் எல்லாம் என்னை விட்டு நீங்க வேண்டும் நான் தகுந்த உபாயங்களை செய்வதலால் நித்யமான செல்வமும், ஆயுளும் அவளே எனக்கு கிட்டுமாறு செய்வாள் லக்ஷ்மியின் சிந்தனை கொண்டு வாழ்பவர்கள் பிறப்பு இறப்பு அறுத்து மோக்ஷத்தை அடைவார்கள் என்றது.

பரமபத நாதன் அருகில் சென்றதும் அந்த ப்ரம்மத்தின் ஸம்பந்தத்தால் பசி, தாகம், சோகம், பாபம், மூப்பு, பிணி, மரணம் இவைகள் இல்லாத தன்மை அடைகிறார்கள் விரும்பியதை பெறும் ஆற்றலையும், நினத்தபடி நடப்பதில் யாராலும் தடுக்கமுடியாத தன்மையையும் அடைவார்கள் அந்த ப்ரஹ்மம் இந்த லக்ஷ்மி உபாஸகனுக்கு மேலும் மேலும் கைங்கர்யம் என்னும் பெரிய செல்வத்தை அளிக்கிறது என்றது.

அடுத்ததாக இருக்கும் “மத்” என்கிற பதத்திற்கு பொருள் தேடும்போது அடுத்த பாசுரத்திலும், இந்த பிராட்டியின் பெருமையையும் பகவானை விட்டு பிரியாமல், “அகலகில்லேன்” என்று இருக்கும் பிராட்டியின் பெருமையை தொடர்ந்து பார்க்கப் போகிறோம்

prapatti.com

prapatti dot com

# 6 மத்

**தன்னிச்சையில் தரித்து ஏவித் தான்முதல்வனாய்**
**உயர்ந்து உறங்கி உலாவி உறைந்து உகப்பாய்**
**நம் இழுக்கால் மன்னி உறையும் மாமலராள்**
**திருவுரத்தில் அவனைத் தினையளவும் அகலாள்.**

**தன் இச்சையில்** = எம்பெருமான் தன்னுடைய ஸங்கல்பத்தினால் மட்டுமே
**தரித்து** = (எல்லா பொருட்களையும்) தாங்கி (Supports)
**ஏவி** = ஆணையிட்டு (Controls)
**தான் முதல்வனாய்** = தானே ஸர்வ ஸ்வாமியாய் (Owns)
**உயர்ந்து** = பரம போக்யமான பரமபதத்தில் அமர்ந்து
**உறங்கி** = பாற்கடலில் கிடந்து
**உலாவி** = ராம, கிருஷ்ண விபவாவதாரங்களாய் நடந்து
**உறைந்து** = எல்லா சேதனர்களிலும் மறைந்து
**உகப்பாய்** = எல்லோரும் விரும்பும் அர்ச்ச்யா மேனியாய் இருப்பவன்.

**நம் இழுக்கால்** = சேதனர்களாகிய நாம் செய்த பாவக் குவியல்களால்
**மாமலராள்** = செந்தாமரை மேல் வசிக்கும் பிராட்டி
**அவன் திரு உரத்தில்** = எம்பெருமானுடைய திரு மார்பை அடைந்து
**மன்னி உறையும்** = அதிலே பொருந்தி வசித்து (reside), (அதை விட்டு)
**தினையளவும்** = ஒரு க்ஷணமும் (not even a nanosecond)
**அகலாள்** = விலக மாட்டாள்

## 6-1 பாசுரத்தின் சுருக்கமான பொருள்

ஆறாம் பாசுரத்தின் முதல் பதம் **தன்னிச்சையில்**. கடைசி பதம் **அகலாள்**. இரண்டையும் சேர்த்து பார்க்கும்போது பிராட்டியின் நித்ய ஸம்பந்தத்தை சொல்லுகிறது. **மத்** என்ற பதம் ஒன்றை விட்டு ஒன்று பிரியாதன மிதுனம், **திரு** முன்பும், **நாராயணா** பதம் பின்னும் சேர்த்து, இது பிரிக்க முடியாத பர தத்வம் என்பதை உறுதிப்படுத்துகிறது.

## 6-2 ஸ்வாமி தேசிகனின் சுருக்கமான விளக்கம்

> **மதுப்பு** (ஸ்ரீக்கு அடுத்தான மத் எனும் விகுதி) **நித்ய யோகத்தை** (எப்போதும் சேர்ந்திருக்கும் தன்மையை) **காட்டுகிறது. இது ஸாபராதர்க்கும்** (குற்றம் புரிந்தவர்களுக்கும்) **நினைத்த போதே நிஶ்ஶங்கமாக** (சந்தேகம் இன்றி) **ஸர்வேஶ்வரனைப் பற்றுகைக்கு உறுப்பாம்.** "உன் திருமார்வத்து மாலை நங்கை," "அகலகில்லேன்" **இத்யாதிகளை இங்கே அநுஸந்திப்பது**
>
> ஸ்வாமி தேசிகன், ஸ்ரீ ரஹஸ்யத்ரய சுளகம்

**மதுப்** என்னும் விகுதி **ஸ்ரீ** என்னும் சொல்லுக்கு மேல் சேர்ந்து, பிராட்டியின் அகலாமையை காட்டுகிறது. இத்தால் குற்றமே புரிந்த சேதனர்களும் நினைத்த மாத்திரத்திலே சிறிதும் கவலை, வெட்கம், பயம், சந்தேகம் இன்றி எம்பெருமானை அடைக்கலமாய் அடைய துணை புரிகிறது.

வியாக்யானத்தில் "உப்பு சப்பு இல்லாமல் சாதாரணமாய் இருக்கும் பொரியில் வெல்லப்பாகு கலந்து அதை இனிப்பாக செய்வது போல, எம்பெருமானை இனிமையாக்குபவள் இவள்" என்பர். வெறும் நாராயணன் அல்ல, வெல்லாம் சேர்த்த நாராயணன்.

## 6-3 பிராட்டியின் நித்ய ஸம்பந்தம்

இந்த பாசுரம், பகவானுக்கும், பிராட்டிக்கும் உள்ள நித்ய ஸம்பந்தத்தை சொல்லுகிறது

> **நித்யைவைஷா ஜக$_3$ந்மாதா விஷ்ணோ: ஸ்ரீரநபாயிநீ ।**
> **யத$_2$ா ஸர்வக$_3$தோ விஷ்ணுஸ் ததை$_2$வேயம் த்$_3$விஜோத்தம ।।**
>
> பராஶர மஹரிஷி ஸ்ரீவிஷ்ணு புராணம் 1-18-17



prapatti.com

என்று ஸ்ரீவிஷ்ணு புராணத்தில் பராஶர பகவான் மஹாலக்ஷ்மியை **"அகலகில்லேன் இறையும்"** என்று நித்யமாக வாஸம் செய்பவளே, ஜகந்மாதா, விஷ்ணுவுக்கு செல்வமாக இருப்பவளே," என்று போற்றுகிறார். பகவானைப்போல் இவளும் எல்லாவற்றிலும் வியாபித்து இருக்கிறாள் என்றார்.

பிராட்டி **"தன்னிச்சையில் அகலாள்"**, பிராட்டியானவள் தானாகவே வந்து எம்பெருமானின் திருமார்பில் அமர்ந்தாள். அங்கிருந்து அவள் அகல மாட்டாள் என்பதே ஸாரார்த்தம். எதற்காக அவள் பகவானை விட்டு ஒரு க்ஷணமும் அகலுவதில்லை? என்றால்

> **ஈஶ்வர ஸ்வாதந்த்ர்யத்தையும்,**
> **சேதநனுடைய அபராதத்தையுங் கண்டு**
> **அகல மாட்டாள்**
>
> பிள்ளைலோகாசாரியார், முமுக்ஷுப்படி 132

என்று முமுக்ஷுப்படியில் பிள்ளைலோகாசரியரும் ஸாதித்தார்.

சேதனர்கள் பண்ணும் குற்றம் கணக்கில் அடங்காது. பகவானிடம் எண்ணற்ற கல்யாண குணங்கள் ப்ரகாசிக்கின்றன. அவற்றுள் தயை, வாத்ஸல்யம் போன்றவை மிகச் சிறந்து இருந்தாலும், பகவானோ சுதந்த்ரன். யாருக்கும் கட்டுப்பட்டவன், அடங்கியவன் அல்ல. ஸ்வாத்ந்ர்யம் என்கிற குணம் அவன் ஒருவனுக்கு மட்டுமே.

என்றைக்கு இந்த சேதனர்களை விரட்டி அடிப்பானோ என்று **மாத்ருத்வ ப்ரியத்வ வாத்ஸல்யத்தினால்,** தாயாருக்கே உள்ள தனிப்பட்ட **அன்பு, கருணை, பரிவினால்** எம்பெருமானை விட்டு அகல மாட்டாள்.

பகவானுக்கும், பிராட்டிக்கும் இந்த பிரிக்க முடியாத உறவில் எத்தனை ஒற்றுமை என்பதை ராமாயணத்தில் காணலாம்.

> **அநந்யா ராக$_4$வேணாஹம் ப$_4$ாஸ்கரேண ப்ரப$_4$ா யத$_2$ா**
>
> ராமாயணம் ஸுந் 21-16

என்று ஸீதை "சூரியனை விட்டு பிரியாத ஒளி போல் நான் ராகவனை விட்டு பிரியாதவள்," என்றாள்.

**அநந்யா ஹி மயா ஸீதா ப₄ாஸ்கரேண ப்ரப₄ா யத₂ா**
ராமாயணம் யுத் 121-15

ராமனோ "சூரியனை விட்டு பிரியாத ஒளி போல் நான் ஸீதையை விட்டு பிரியாதவன்", என்றான். இப்படி இருவரும் ஒருவருக்கொருவர் பிரிக்க முடியாத தத்துவம் என்று இந்த மிதுனத்தை காட்டுகின்றனர்.

இந்த பாசுரம் கொஞ்சம் கஷ்டமானது. நிறைய அடிப்படைகள் fudamental principles அடங்கி இருக்கிறது. Appedix A வில் இவை சுருக்கமாக சொல்லப்பட்டுள்ளன.

## 6-4 முதல்வா!

கடைசி பதத்திலிருந்து ஒவ்வொரு பதமாக சேர்க்க வேண்டும் அர்த்தம் காணும் போது.

**முதல்வனாய்**
**தான் முதல்வனாய்**
**ஏவித் தான் முதல்வனாய்**
**தரித்து ஏவித் தான் முதல்வனாய்**
**இச்சையில் தரித்து ஏவித் தான் முதல்வனாய்**
**தன் இச்சையில் தரித்து ஏவித் தான் முதல்வனாய்**

**முதல்வா!** என்ற சப்தம். முதலில் யார் முதல்வன்? என்பது ஒரு கேள்வி. இதற்கு அர்த்தத்தை வேதாந்தங்களிலே தேடுகிறோம். ஸம்ஸ்க்ருத வேதங்களையும், திராவிட வேதமான திவ்ய பிரபந்தத்தையும் பார்க்கிறோம். தவிர ஸ்மிருதிகள், இதிகாஸங்கள், புராணங்கள் இவற்றையும் பிரமாணமாக எடுக்கிறோம் (reference ஆக)



prapatti dot com

**செங்கண் நெடுங் கருமுகிலை இராமன் தன்னைத் *
தில்லை நகர்த் திருசித்திர கூடம் தன்னுள் *
எங்கள் தனி முதல்வனை எம் பெருமான் தன்னை *
என்றுகொலோ கண்குளிரக் காணும் நாளே!**
குலசேகராழ்வார், பெருமாள் திருமொழி 10-1

என்று குலசேகராழ்வார் பெருமாள் திருமொழியில் ராம அவதாரத்தை நினைத்து மகிழ்ந்து திருசித்திரகூடத்தில் (சிதம்பரம்) ஸயனித்திருக்கும் கோவிந்தராஜ பெருமாளை, ராமனாக பாடுகிறார். அவனை முதல்வா! என்று அழைக்கிறார்.

**மூவராகிய மூர்த்தியை * முதல் மூவர்க்கும் முதல்வன் தன்னை ***
நம்மாழ்வார், திருவாய்மொழி 3-6-2

என்று நம்மாழ்வார், பிரமன், சிவன், இந்திரன் ஆகிய மூவர்க்கும் மூர்த்தியான எம்பெருமான் ஸ்ரீமந் நாராயணன் என்றார்.

**தேவர் முனிவர்க்கு என்றும் * காண்டற்கரியன் *
மூவர் முதல்வன் * ஒரு மூவுலகாளி ***
நம்மாழ்வார், திருவாய்மொழி 9-8-9

என்று நம்மாழ்வார் மேலும், பகவான் தேவர்கள், முனிவர்கள் இவர்கள் எல்லாம் கண்டு அறிவதற்கு அரிதாய் இருப்பவன். அவனே பிரமன், சிவன், இந்திரன் என மூவருக்கும் தலைவனாகி, மூவுலகிற்கும் அதிபதியான முதல்வன் என்றார்.

## 6-5 ஒன்றே பர தேவதை

### ஒன்றே குலம் ஒருவனே தேவன்

என்று எல்லோரும் சொல்லிக் கொண்டாலும் உண்மையில் அந்த ஒரே தேவன் யார் என்பதை பற்றிய விவாதத்திற்கு முடிவே இல்லை. நம்முடைய ஸம்பிரதாயத்தில் ஸ்ருதி, ஸ்மிருதி, இதிகாச புராணங்கள், ஆழ்வார்கள்,



prapatti.com

ஆசாரியர்கள் வாக்கிலிருந்து எவன் பரமாத்மா எவன் பரபிரம்மம், எவன் ஜகத் காரணகன் என்பதை நிருபித்துக் காட்டி உள்ளனர்.

**முதலாம் திருவுருவம் மூன்று என்பர் * ஒன்றே**
**முதலாகும் * மூன்றுக்கும் என்பர் * - முதல்வா!**
**நிகரிலகு கார் உருவா! * நின்னகத்தது அன்றே ***
**புகர் இலகு தாமரையின் பூ**

நம்மாழ்வார், பெரிய திருவந்தாதி 72

என்று நம்மாழ்வார் ஸாதிக்கிறார். த்ரீமூர்த்தி ஸாம்யவாதிகள் இவ்வுலகத்திற்கு காரணமாய் இருப்பவர் மும்மூர்த்திகள் எனும் பிரமன், விஷ்ணு, சிவன் என்பர். இவர்களைவிட மேம்பட்டவன் ஒருவன் பிரம்மம் என்னப்வன் என்று சொல்பவரும் உண்டு. ஆனால் "மேகத்தை ஒத்த நிறத்தை உடைய செந்தாமரைக் கண்ணா! பிரகாசிக்கும் பிரமனுக்கு உற்பத்தி ஸ்தானம் என்று சொல்வது உன்னுடைய திருநாபி கமலம் அன்றோ!" என்றார்.

**ஆத்மைக்யம் தே$_3$வதைக்யம் த்ரிகஸமதி$_4$க$_3$தா**
**துல்யதைக்யம் த்ரயாணாம்**
**அந்யத்ர: ஐஶ்வர்யம் இத்யாதி அநிபுணா ப$_2$ணிதீ:**
**ஆத்$_3$ரியந்தே ந ஸந்த: ।**
**த்ரய்யந்தை: ஏககண்டை$_2$: தத்$_3$ அநுகு$_3$ண மநு-**
**வ்யாஸ முக்$_2$ய உக்திபி$_4$: ச**
**ஸ்ரீமாந் நாராயணோ ந: பதி: அகி$_2$ல தநு:**
**முக்தி$_3$த: முக்த$_3$போக்$_3$ய: ।।**

ஸ்வாமி தேசிகன், ஸ்ரீமத் ரஹஸ்யத்ரய ஸாரம்

என்று ஸ்வாமி தேசிகன், "ஆத்மாக்கள் எல்லாம் ஒன்றே, தேவதைகள் எல்லாம் ஒன்று, த்ரி மூர்த்திகளுக்கு ஞான, சக்தி எல்லாம் சமம், அவர்கள் ஆத்ம ஸ்வரூபம் ஒன்று, அவர்களைவிட மேலான இன்னொருவன் ஈச்வரன்," போன்றவை எல்லாம் சாஸ்திர ஞானமில்லாத பேச்சு. உண்மை. பொய் இவற்றை பிரித்து அறியும் விவேகிளான பெரியோர்கள் இதை ஏற்பதில்லை."

"உபனிஷத்துக்கள் எல்லாம் ஒரே விதமாய் கோஷிக்கின்றன. அவற்றிற்கு ஒத்தவை வ்யாஸர், மனுக்களின் ஸ்ரீ சூக்திகள். அவை எதை முடிவாய்

prapatti.com

சொல்லுகின்றன? - பிராட்டியை பிரியாத நாராயணனே உலகம் அனத்தையும் சரீரமாக கொண்டவன். நமக்கு மோக்ஷத்தை அளிப்பவன். முக்தர்களால் அனுபவிக்கப்படுபவன். அவனே என்றும் நமக்கு ஸ்வாமி, எஜமானன், என்று நிச்சயிக்கப் பட்டது.

**ஓர் உருவம் பொன்னுருவம் ஒன்று செந்தீ ***
**ஒன்றுமா கடல் உருவம் ஒத்து நின்ற ***
**மூவுருவம் கண்டபோது ஒன்றாம் சோதி ***
**முகில் உருவம் எம்மடிகள் உருவம் தானே**

திருமங்கையாழ்வார், திருநெடுந்தாண்டகம் 2

என்று திருமங்கையாழ்வாரும் ஸ்பஷ்டமாக கடல் வண்ணன் கண்ணனே முழு முதற் கடவுள் என்றார்.

**அவர் அவர் தாம் தாம் * அறிந்தவாறு ஏத்தி ***
**இவர் இவர் எம்பெருமான் என்று * சுவர்மிசைச் -**
**சார்த்தியும் * வைத்தும் தொழுவர் * உலகளந்த**
**மூர்த்தி உருவே முதல்**

பொய்கையாழ்வார், முதல் திருவந்தாதி 14

என்று பொய்கையாழ்வார் சொல்கிறார். “உலகத்தில் உள்ள மக்கள் முக்குண மாயையால் கட்டுப்பட்டு, ஏதோ ஏதோ கண்ட தேவதைகளை உயர்ந்த தெய்வம் என நினைத்து. சுவரில் படம் வரைந்து, தங்களுக்கு தகுந்தவாறு வழி படுகின்றனர். ஆனால் எல்லா வஸ்துக்களின் தலைமேல் தன் பாதம் வைத்து இந்த மூன்று லோகத்தையும் அளந்த திருவிக்கிரமன்தான் உண்மையான முதல்வன் என்று தெரியவில்லையா? அந்த திருமேனி ஒன்றுதான் நமக்கு போக்யம்,” என்றார்.

இப்படி, வேதத்திலும், திவ்ய பிரபந்தத்திலும் பல இடங்களில் முதல்வன், பரம், ப்ரம்மம், ஆதி, முழு முதற்கடவுள் என்று எல்லாம் அழைக்கிறது. அவை எல்லாம் ஸ்ரீமந் நாராயணனையே சொல்லுகிறது. அவனே முழு முதற் கடவுள் என்று நம்முடைய ஆசாரியர்கள் விளக்கம் சொல்லுகிறார்கள்.

## 6-6 தன் இச்சையில் தரித்து ஏவித்தான் முதல்வனாய்

இப்போது நம்முடைய பாசுரத்திற்கு வரலாம். முதல் வாக்யம் இப்போழுது சுலபமாக புரியும்

**தன் இச்சையில்** - பகவானுக்கு சொந்தம் இப்பிரபஞ்சமும் அதில் உள்ள எல்லா ஜீவராசிகளும் (ஸ்தாவர ஜஞ்கமம்). தன்னுடைய ஸங்கல்பத்தில், சுதந்தரனாய்.

**தரித்து** - (Supports) சித், அசீத்துக்களில் ஊடுருவி அவற்றை தனக்கு சரீரமாக கொண்டு, தாங்கி.

**ஏவி** - (Contols) அனைத்தும் அவன் உகப்புக்கே. அவன் கட்டளைக்கு அடி பணிந்து.

**தான் முதல்வனாய்** (Owns) தானே பரபிரம்மமாக நின்று. தனக்கு ஒப்பார், மிக்கார் ஒன்றும் இல்லாதவனாய்.

பொருள்களை முதலில் உண்டாக்கியவன், ஆரம்பித்தவன் அவைகளுக்கு சொந்தக்காரன் இல்லையா? உலக வழக்கில் இதைத்தானே பார்க்கிறோம். சந்திரனுக்கு ராக்கெட்டில் போனான் முதலில். உடனே தன்னுடய கொடி (flag) மாட்டி, இது எனக்கு சொந்தம் என்கிறான்)

**ஸமஸ்த கல்யாண கு$_3$ணாத்மகோ ஶஸெள**
**ஸ்வஶக்தி லேஶோத்$_3$ த்$_4$ருத பூ$_4$த ஸர்க்க$_3$: |**
**இச்ச$_2$ா க்$_3$ருஹீதாபி$_4$ மதோரு தே$_3$ஹ ஸ்**
**ஸம்ஸாதி$_4$தா ஶ ஶேஷ ஜக$_3$த்$_3$தி$_4$ தோ ஶஸெள ||**

பராஸர மஹறிஷி, ஸ்ரீவிஷ்ணு புராணம் 6-5-84

“எல்லா விதமான கல்யாண குணங்களை இயற்கையாகவே உள்ள இந்த பகவான், தன் ஆற்றலில் ஒரு சிறு பகுதியாலேயே பூதங்களை தரிக்கிறான்;

prapatti dot com

தன் இச்சையினாலேயே தனக்கு இஷ்டமான பல சரீரங்களை அடைகிறான். இவை எல்லாம் உலக நன்மைக்காக செய்யப்படுபவை," என்றார்.

## 6-7 பகவானின் ஐந்து நிலைகள்

**பர, வ்யூக, விபவ, அந்தர்யாமி, அர்ச்யாவதாரத்தை** இங்கு குறிப்பிட்டது. உகாரமாகிய மஹாலக்ஷ்மி அவனுடைய எல்லா நிலைகளிலும் அவனைவிட்டு பிரியாமல் நித்ய வாஸமாக இருக்கிறாள்.

ஸ்வாமி தேசிகன் ப்ரணவத்திற்கு அர்த்தம் ஸாதிக்கையில், **அகார, உகார, மகார** விவரணத்தில், **உகாரத்திற்கு பிராட்டி** என்று ஒரு பொருள் என்று ஸாதித்தார். அதனால்தான் பகவானின் ஐந்து நிலைகளும் இங்கு **'உ'**வில் ஆரம்பித்தது.

> **வீண் மீதிருப்பாய்! மலைமேல் நிற்பாய்! * கடல் சேர்ப்பாய்**
> **மண் மீது உழல்வாய்! * இவற்றுள் எங்கும் மறைந்து உறைவாய் ***
> நம்மாழ்வார், திருவாய்மொழி 6-9-5

நம்மாழ்வாரும் பகவான் ஐந்து நிலைகளில் இருக்கிறான் என்றார்.

1. **விண்** - பரம பதம்
2. **கடல்** - வியூஹம்
3. **மண்** - விபவம்
4. **மலை** - அர்ச்சை
5. **மறைந்து** - அந்தர்யாமித்வம்.

பிராட்டியைப் பற்றி வெளிப்படையாக (explicit) சொல்லவில்லை நம்மாழ்வார், திருவாய்மொழியில்.

ஸ்வாமி தேசிகனும், மும்மணிக்கோவையில்,

> **விண்ணுள் அமர்ந்த வியன் உரு அதனால் ***



prapatti.com

எண்ணிய ஈரிரண்டு உருக்களும் அடைதி /
பன்னிரு நாமம் பலபல உருவாய் *
இன்னுரு எங்கும் எய்தி நீநிற்றி *
மீனோடு ஆமை கேழல் கோளரியாய் ×
வான் ஆர் குறளாய் மழுப்படை முனியாய்ப் ×
பின்னும் இராமர் இருவராய்ப் பாரில் ×
துன்னிய பரம் தீர் துவரை மன்னனுமாய்க் /
கலி தவிர்த்து அருளும் கற்கியாய் மற்றும் *
மலிவதற்கு எண்ணும் வல்வினை மாற்ற *
நானா உருவம் கொண்டு நல்லடியோர் *
வான் ஆர் இன்பம் இங்குற வருதி *
ஓர் உயிர் உலகுக்கு என்னு நீ திருவோடு *
ஏர் உயிர் எல்லாம் ஏந்தி இன்புறுதி /
யாவரும் அறியாது எங்கு நீ கரந்து *

ஸ்வாமி தேசிகன், மும்மணிக்கோவை

என்று

விண்ணுள் அமர்ந்து - பரம்
ஈரிரண்டு உருக்கள் - வியூஹம்
மீனோடு... கற்கியாய் - விபவம்
எங்கும் நீ கரந்து - அந்தர்யாமி
நானா உருவம் கொண்டு - அர்ச்சை

ஸ்வாமி தேசிகன் பகவானின் ஐந்து நிலைகளையும் காட்டினார்.

## 6-8 பகவானைப் பிரியாத பிராட்டி

பகவான் தானே சொல்லுகிறான் பாஞ்சராத்ர சாஸ்திரத்தில்.

வ்யூஹேஷு சைவ ஸர்வேஷு விப$_4$வேஷு ச ஸர்வஶ:
தத$_3$ா வ்யூஹ விபத்யேஷா மம சைவாநபாயிநீ

பாஞ்சராத்ரம்



prapatti dot com

என்று “எல்லா வ்யூஹங்களிலும், எல்லா விபவங்களிலும் என்னை விட்டு பிரியாதவளாய், இப்பிராட்டியும் அவதாரம் எடுக்கிறாள்” என்று பகவான் தன் திருவாக்காலேயே சொல்கிறான்.

**புநஶ்ச பத்3மா ஸம்பூ4தா ஆதி3த்யோঽபூ4த் யதா3 ஹரி: ।**
**யதா3 து ப4ார்க்க3வோ ராமஸ் தத3ாஸீத் த4ரணி த்வியம் ॥**
**ராக4வத்வே ப4வத் ஸீதா ருக்மிணீ க்ருஷ்ண ஜந்மநி ।**
**அந்யேஷு சாவதாரேஷு விஷ்ணோரேஷா நபாயிநீ ॥**
**தே3வத்வே தே3வதே3ஹேயம் மனுஷ்யத்வே ச மாநுஷீ ।**
**விஷ்ணோர் தே3ஹாநுரூபாம் வை கரோத்யேஷாத் மநஸ் தநும் ॥**

பராசர மஹரிஷி ஸ்ரீவிஷ்ணு புராணம் 1-9-143,144,145

என்று ஸ்ரீவிஷ்ணு புராணத்தில் பராசர மஹரிஷி இதையே, சொல்கிறார்.

“பகவான் ஆதித்யனாய் அவதரித்தபோது பிராட்டி பத்மையாக அவதரித்தாள். அவன் பரசுராமனாய் வந்தபோது தரணியாக தானும் வந்தாள். அவன் ராமனாய் தோன்றிய போது தானும் ஸீதையானாள். அவன் கிருஷ்ணனாக பிறந்தபோது தானும் ருக்மிணியானாள்.”

“அந்த விஷ்ணுவின் தேஹத்திற்கு தகுந்தாற்போல் தானும் தன் தேஹத்தை அமைத்து கொள்கிறாள். அவன் தேவனாக பிறக்கும்போது தானும் தேவ ரூபத்திலும் மனுஷ்யனாக பிறக்கும்போது தானும் மனுஷியாகவே பிறக்கிறாள்,” என்றார்.

**நின்படிக்கெல்லாம் தன்படியேற்க**
**அன்புடன் நின்னோடு அவதரித்து அருளி**

ஸ்வாமி தேசிகன் மும்மணிக்கோவை 2

என்று ஸ்வாமி தேசிகனும் மஹாலஷ்மியும் பகவானுடன் தன்னை மாற்றிக் கொண்டு தானும் அவதாரம் செய்கிறாள் என்கிறார்.

**த4த்தே ஶோபா4ம் ஹரி மரகதே தாவகீ மூர்த்திராத்3யா**
**தந்வீ துங்க3 ஸ்தந ப4ர நதா தப்த ஜாம்பூ3ந தா3பா4**

**யஸ்யாம் க$_3$ச்ச$_2$ந் யுத$_3$ய விலையைர் நித்யமாநந்த$_3$ ஸிந்தௌ$_4$**
**இச்சா$_2$ வேகோ$_3$ ல்லஸித லஹரீ விப்$_4$ரமம் வ்யக்தயஸ்தே**
ஸ்வாமி தேசிகன், ஸ்ரீஸ்துதி 11

**(தப்த ஜாம்பூ$_3$நத$_3$ ஆபா$_4$)** உருக்கிய பொன் நிறமான
**(நதா தந்வீ)** வளைந்து மெல்லியதாய் உள்ள
**(தாவகீ ஆத்$_3$யா மூர்த்தி)** உன்னுடைய முதலான திருமேனி
**(ஹரி மரகதே)** மரகதம் போன்ற பகவானின் திருமேனியில்
**(ஶோபா$_4$ம் நித்யம் த$_4$த்தே)** அழகை எப்போதும் தருகிறது
**(ஆநந்த$_3$ ஸிந்தௌ$_4$ )** ஆனந்தக் கடலாய் உள்ள
**(யஸ்யாம் தே வ்யக்த)** எந்த திருமேனியில் உன்னுடைய அவதாரங்கள்
**(உத$_3$ய விலையைர்)** தோற்றத்தாலும், மறைவாலும்
**(இச்சா$_2$ வேகே$_3$ உல்லஸித லஹரீ)** ஸங்கல்ப வேகத்தால் எழும் அலைகளின்
**(விப்$_4$ரமம் க$_3$ச்ச$_2$ந்தி)** லீலையை அடைகின்றனவோ என்றார்.

“பிராட்டிக்கும் பரரூபம் என்கிற திருமேனி பகவானைப்போல் உள்ளது, நீயும் அவதாரம் செய்கிறாய், ஆனந்த கடலாய், ஸங்கல்பத்தின் வேகத்தால். ஆனந்த கடல் என்பது உன் திருமேனி. அதில் வீசும் காற்று உன் ஸங்கல்பம். அதில் தேன்றும் அலைகளே உன் அவதாரங்கள்,” என்றார்.

நம்முடைய ஸம்ப்ரதாயத்தில் பகவானையும், தாயாரையும் சேர்த்து அனுபவிப்பதுதான் உயர்ந்தது, ஆனந்தமானது என்பது பூர்வாசாரியர்கள் சொல்லிக் கொடுத்தது.

ராவணன், ஸீதையை மட்டும் பிரித்து அனுபவிக்க பார்த்தான், அவன் குலத்தோடு அழிந்தான். ஸீர்ப்பணகை, ராமனை மட்டும் பிரித்து தனியே அனுபவிக்க முயன்றாள். அவள் காது மூக்கு அறுபட்டு அவமானப்பட்டாள் விபீஷணனோ இருவரையும் சேர்த்து வைத்தான். அவன் அவர்களால் போற்றப்பட்டு அரச பதவி அடைந்து மன்னன் ஆனான்.

## 6-9 உயர்ந்து

**உயர்ந்து** என்பதால் பரமபத நாதனை சிறப்பித்து சொன்னது.

> **வைகுண்டே2து பரே லோகே ஶ்ரீயா ஸார்த்த4ம் ஜக3த்பதி: ।**
> **ஆஸ்தே விஷ்ணுரசிந்த்யாத்மா ப4க்தைர் ப4ாக3வதைஸ்ஸஹ ।।**
> ஶைவ புராணம்

என்று புராணம் சொல்கிறது, “பகவானான விஷ்ணுவின் ஸ்வரூபத்தை நினைக்கக் கூட முடியாதாம், ஸ்ரீவைகுண்டமான உயர்ந்த லோகத்தில். அங்கே பகவான், ஸ்ரீதேவியுடன், பக்தர்கள், பாகவதர்களுடன் எழுந்தருளியிருக்கிறார்,” என்றது.

> **துயரமே தரு இன்ப வினைகளாய் * அவை அல்லனாய் ***
> **உயரே நின்றது ஓர் சோதியாய் * உலகேழும் உண்டு உமிழ்ந்தான்**
> நம்மாழ்வார், திருவாய்மொழி 3-6-8

என்று இதையே வேதம் தமிழ் செய்த மாறன், திருவாய்மொழியில் “ஆகாயத்திற்கு மேலும் உயரே உள்ள வைகுண்ட்டம் என்கிற உயர்ந்த ஸ்தானத்தில் ஒப்பற்ற பரஞ்ஜோதியாய் இருப்பவனே,” என்றார்.

> **தி4க3ஸுசிமவிநீதம் நிர்த3யம் மாமலஜ்ஜம்**
> **பரமபுருஷயோஹம் யோகி3வர்யாக்ர க3ண்யை: ।**
> **விதி4ஶிவ ஸநகாத்3யைர்த்4யாது மத்யந்ததூ3ரம்**
> **தவ பரிஜநப4ாவம் காமயே காமவ்ருத்த: ।।**
> ஆளவந்தார், ஸ்தோத்ர ரத்நம் 47

என்று ஸ்வாமி ஆளவந்தார் ஸ்தோத்ர ரத்னத்தில் பரம புருஷனான பரவாசுதேவனை எல்லோரையும் விட உயர்ந்த ஸ்தானத்தில் இருப்பதாக போற்றி மகிழ்கிறார்.

> **உயர்வற உயர்நலம் உடையவன் எவனவன்**
> **மயர்வற மதிநலம் அருளினன் எவன் அவன்**
> நம்மாழ்வார், திருவாய்மொழி 1-1-1

என்று ஸ்வாமி நம்மாழ்வாரும் ஸாம வேத ஸாரமான திருவாய்மொழி ஆரம்பிக்கும்போதே `உயர்ந்து' என்பதனை சிறப்பித்து சொன்னார்.

**ந தத் ஸமஶ்ச அப்₄யதி₄கஶ்ச த்₃ருஶ்யதே**

ஶ்வேதாஸ்வர உபனிஷத்

என்று ஶ்வேதாஸ்வரம் என்ற ஶ்ருதி அந்த புருஷனுக்கு நிகராகவோ அல்லது மிகையாகவோ ஒருவரும் இல்லை என்கிறது

**பதிம் விஶ்வஸ்ய ஆத்மேஶ்வரம்**

தைத்ரீய உபனிஷத்

என்றது தைத்ரீய உபனிஷத். உலகத்திற்கு பதியாகவும், தனக்குத் தானே ஈஶ்வரனாயும் உள்ளவன் அந்த புருஷன் என்றது

**ந த்வத்ஸமோஸ்தி அப்யதிக: குதோந்ய:**

பகவத் கீதை

**ஒத்தார் மிக்காரை இலையாய மாமாயா**
**ஒத்தாய் எப்பொருட்கும் உயிராய்**

நம்மாழ்வார், திருவாய்மொழி 1-3-2

**என்றும் ஒன்றாகி ஒத்தாரும் மிக்கார்களும் * தன் தனக்கு**
**இன்றி நின்றானை எல்லா உலகும் உடையான் தன்னை ***

நம்மாழ்வார், திருவாய்மொழி 4-5-7

இதையே நம்மாழ்வார் பின் பதிகத்தில் ஸ்பஷ்டமாக அவனனைவிட உயர்ந்தவனோ அல்லது சமமானவனோ ஒருவனும் இல்லை (greter than or equal to) என்கிறார்.

## 6-10 உறங்கி



prapatti dot com

உறங்கி என்று திருப்பாற்கடலில் கண் வளரும் (தூங்கும்) க்ஷிராப்தி நாதனை சொன்னது. ஆழ்வார்களுக்கு இந்த ஸயனத் திருக்கோலத்தில் தனி ப்ரீதி, நின்ற திருக்கோலம், அமர்ந்த திருக்கோலத்தையும் விட

**பாற்கடலுள் பையத்துயின்றிய பரமனடி பாடி**
ஆண்டாள், திருப்பாவை 2

என்று ஆண்டாள் திருப்பாவையில் ஸாதித்தாள். ஏன் பைய துயில் என்றால் கூப்பீடு கேட்குமிடம் பாற்கடல். தேவர்கள் குறைகளை சொல்லும் இடம். எப்படி பரமபதம் பாட்டு கேட்கும் இடமோ அது போல் இது.

**பாலாலிலையில் துயில் கொண்ட**
**பரமன் வலைப் பட்டிருந்தேனை**
**வேலால் துன்னம் பெய்தாற்போல்**
**வேண்டிற்றெல்லாம் பேசாதே**
ஆண்டாள், நாச்சியார் திருமொழி 13-2

என்று நாச்சியார் திருமொழியிலும் அஞ்சுகுடிக்கு ஒர் விளக்காம் ஆண்டாள் அருளியது.

**பை அரவின் அணைப் பாற்கடலுள்**
**பள்ளிகொள்கின்ற பரம மூர்த்தி**
**உய்ய உலகு படைக்க வேண்டி உந்தியினில்**
**தோற்றினாய் நான்முகனை**
பெரியாழ்வார், பெரியாழ்வார் திருமொழி 4-10-5

என்று பெரியாழ்வார், பெரியாழ்வார் திருமொழியில் மேலே விரித்த படங்களையுடைய ஆதி சேஷனில் ஸயனித்துள்ளான். வியூகத்தில் இருந்துதான் எல்லா அவதாரங்களும் தோன்றின என்கிறபடி ஸாதித்தார்.

**உறங்குவான் போல் * யோகு செய்த பெருமானை ***
**சிறந்த பொழில் சூழ் * குருகூர்ச் சடகோபன் சொல் ***
நம்மாழ்வார், திருவாய்மொழி 5-4-11

என்று பகவான் தூங்குவது போல் பாவனை பண்ணிக் கொண்டு யோகத்தில் ஸயனத்திருக்கிறான் என்றார்.

## 6-11 உலாவி

**உலாவி** என்பதால் விபவாதாரத்தை விளக்கியது. நல்லறத்தை காப்பதற்கும், அல்லறத்தை போக்குவதற்கும். நல்லவர்களைக் காக்கவும் அசுரர்களை அழிப்பதற்கும், தேவனாகவும், மனிதனாகவும், விலங்காகவும், எடுக்கும் அவதாரங்கள் விபவம்

**அஜாயமாநோ ப3ஹுதா4 விஜாயதே ||**
**தஸ்ய தீ4ரா: பரிஜாநந்தி யோநிம் |**
புருஷ ஸூக்தம் உத்தராநுவாகம்

என்று புருஷஸூக்தம் சொல்கிறது. பரம புருஷனான பகவான் பிறப்பு இல்லாதவன். அனாலும் பலபடியாக பிறக்கிறான் (The one who has no birth is born many times). அவற்றை எல்லாம் அறிவாளிகள் அறிகிறார்கள்.

**அதிமாநுஷ ஸீலவ்ருத்த வேஷை:.**
**அதிவிருத்தாமர விக்ரம ப்ரதாபை:**
**அதிலங்கி4த ஸ்ரவலோகஸாம்யாம்**
**வரயே வைஷ்ணவ வை4பவாவதாரம்"**
கூரத்தாழ்வான், அதிமானுஷஸ்தவம் 1

என்று கூரத்தாழ்வாரும் அதிமானுஷஸ்தவத்தில் ராம கிருஷ்ண அவதாரங்களை ஸ்தோத்திரம் பண்ணியபடி.

இந்த அவதாரங்களை பகவான், தானே ஸங்கல்பித்து கொண்டு எடுக்கிறான் தன் இச்சையில். நம்மைபோல் கர்ம வஸத்தால் அல்ல

**ஏஷ நாராயண: ஸ்ரீமாந் க்ஷிரார்ணவநிகேதந:**
**நாக3பர்யங்கமுத்ஸ்ருஜ்ய ஹ்யாக3தோ மது4ராம் புரிம்**

ஹரி வம்ஸம் 113-62

என்றது ஹரிவம்ஸம். அந்த பாற்கடலில் ஸயனித்த எம்பெருமான் ஸ்ரீமந் நாராயணனே இங்கு துவாரகை மன்னனாக, கிருஷ்ணனாக அவதாரம் செய்திருக்கிறான் என்றது.

**"பிறவாமை தந்திட தானே பிறக்கும் பெருமைகளும்"** என்றார் ஸ்வாமி தேசிகன் கீதார்த்த ஸங்கிரஹத்தில். சேதனர்களின் பிறவிகளை ஒழிக்கத் தானே வந்து பிறந்தான். **"உடைமைக்கு ஒரு முழுக்கு, உடையவனுக்கு ஒன்பது முழுக்கு"** என்கிறாற்போலே, அடிக்கடி வந்து பிறந்தான்.

பகவானின் அவதாரங்கள் என்பது அவனுடைய ஸங்கல்பத்தால் தோன்றியது. என் பிறப்புகள் எல்லாம் தெய்வீகமானவை என்றான் கண்ணன், கீதையில். அவனுக்கு கர்மவசம் கிடையாது அவன் காரணத்வத்தை, அவன் நிலையை புத்திமான்கள்தான் அறிந்து கொள்ள முடியும். கிருஷ்ணனே பகவத் கீதையில் அவதார ரஹஸ்யங்களைப் பற்றி சொல்கிறான்.

**ஜந்ம கர்ம ச மே தி₃வ்யம் ஏவம் யோ வேத்தி தத்வத: |**
**த்யக்த்வா தேஹம் புநர்ஜந்ம நைதி மாமேதி ஸோர்ஜுந:**
பகவத் கீதை 4-9

**Protect the good** - ஸாது ரக்ஷணம்
**Resurrect the Vedas** - தர்ம ஸ்தாபனம்
**Immortal** - அப்ராக்ருதமானது
**Not fake** - அவதாரங்கள் உண்மை. போலி இல்லை
**Complete with all qualities** - அவதாரத்திலும் பூர்ண கல்யாண குணங்கள்
**Ego** - ஸங்கல்பத்தினால் உண்டானவை, கர்மாவினால் அல்ல.
(சுலபமாக PRINCE என்று ஞாபகம் வைத்துக் கொள்ள)

## 6-12 உறைந்து

**உறைந்து** என்பது அந்தர்யாமி நிலை.

**அங்கு₃ஷ்ட₂மாத்ர: புருஷ:**
கட 2-4

என்று வேதம் சொல்லியது. அந்த திவ்ய மங்கள விக்ரஹம், அந்தர்யாமியாய், ஒரு கட்டை விரல் அளவு கொண்டது.

**அடியேன் உள்ளான் * உடல் உள்ளான்**
நம்மாழ்வார், திருவாய்மொழி

என்று நம்மாழ்வார் பகவான் ஆத்மாவில் இருக்கிறான், சரீரத்தில் இருக்கிறான் என்று அந்தர்யாமியாய் எல்லா ஜீவன், உடல், பொருள்களிலும் இருப்பதைச் சொல்கிறார்.

**அந்தர் ப₃ஹிஶ்ச தத் ஸர்வம் வ்யாப்ய நாராயண: ஸ்தி₂த:**
நாராயண ஸூக்தம்

என்று நாராயணஸூக்தம் பகவானை அனைத்திலும், உள்ளும், புறமுமாக வியாபித்து (pervades in and out). நீக்கமின்றி நிலைத்து நிறைத்து நிற்கின்றான் நாராயணன்

**கறந்த பாலுள் நெய்யேபோல் இவற்றுள் எங்கும் கண்டுகொள்**
**இவற்றில் எல்லாம் மறைந்து உறைவாய்**
நம்மாழ்வார், திருவாய்மொழி

**உடல்மிசை உயிரெனக் * கரந்து எங்கும் பரந்துளன் ***
நம்மாழ்வார், திருவாய்மொழி 1-1-7

**தான் ஒட்டி வந்து * என் தனி நெஞ்சை வஞ்சித்து ***
**ஊன் ஒட்டி நின்று * என் உயிரில் கலந்து ***
நம்மாழ்வார், திருவாய்மொழி 1-7-7

என்று திருவாய்மொழியில் இந்த வேதாந்தங்களை எல்லாம் "வேதம் தமிழ் செய்த மாறன்", அப்படியே தமிழாக்கி தந்திருக்கிறார்.

**அந்த ப்ரவிஷ்ட: ஶாஸ்தா ஜநாநாம் ஸர்வாத்மா**
யஜூர் வேதம்

என்றது யஜூர் வேதம். பகவான் ஸரவ அந்தர்யாமி. எதற்கும் புலப்படாதவன். அவன் எல்லா ஜனங்கள் உள் நுழைந்து நியமிக்கிறான்.

**ய ஆத்மநி திஷ்ட₂ந் ஆத்மநோ அந்தரோ யமாத்மா ந வேத₃ யஸ்ய ஆத்மா ஶரீரம் ய ஆத்மாநம் அந்தரோ யமயதி ஏஷ த ஆத்மா அந்தர்யாம்ய ம்ருத:**

**யஸ்ய ப்ருதிவீ ஶரீரம்**
ப்ருஹதாரண்ய உபனிஷத் 5-7

என்றது ப்ரஹதாரண்ய உபநிஷத், அந்தர்யாமி ப்ராம்மணத்தில். "எவன் ஆத்மாவில் நிற்கிறான்? எவன் ஆத்மாவில் உள்ளிருந்தும் விளங்குகிறான்? எவனை ஆத்மா அறியவில்லை?, எவனுக்கு ஆத்மா உடலோ?, எவன் ஆத்மாவின் உள் நுழைந்து நியமிக்கிறான்? அந்த பரமாத்மாவே அமுதம் போலே உனக்கு அந்த்ர்யாமியாய் உள்ளான்.

பகவான் அந்தர்யாமியாக எல்லாவற்றிலும் வியாபித்து நியமிக்கிறான் என்று.

சாதாரணமாக நாம் பேசும்போது இதை அறிந்த மாதிரி பேசுகிறோம் "என் வீடு இது" என்று சொல்லும்போது, வீட்டை ஜடமாக வைக்கிறோம். "என் உடம்பு வலிக்கிறது" என்று சொல்லும்போது, உடம்பை ஜடமாக வைத்து ஆத்மாவாக இருந்து பேசுவதாக இருக்கிறது. ஆனால் யார் இதை அறிந்து சொல்கிறார்? ஒருவரும் இல்லை.

நம் உடம்பின் உள்ளே இருக்கும் ஆத்மாவையே தெரியாது என்றால் எப்படி ஆத்மாவிற்கு அந்தராத்மாவாக இருக்கும் பகவானை அறியமுடியும்? நம்முடைய ஊனக் கண்களால் அந்த பகவானைக் காண முடியாது. அதனால், கீதாசாரியனும், அருச்சுனனிடம் சொல்கிறான் "அருச்சுனா! நீ இந்த அல்பமான ஊனக் கண்ணால் என்னைப் பார்க்க முடியாது". பகவான் அவனுக்கு திவ்யமான கண்களைக் கொடுத்து தன்னுடைய விஸ்வரூபத்தை காண்பித்தான்.

## 6-13 உகப்பாய்

**உகப்பாய்** என்பது அடியவர்களுக்கு உகந்ததாய் இருப்பாய் என்று அர்ச்யாவதார மூர்த்திகளை குறிப்பிட்டது.

**உகப்பு உருவம் தானே ஒளி உருவம் தானே**
**மகப்பு உருவம் தானே மதிக்கில்**
திருமழிசையாழ்வார், நான்முகன் திருவந்தாதி 29

என்று ஆழ்வார் சிந்தித்தால் (மதிக்கில்) விளங்கும் என்றார். எது என்றால் பகவான் எல்லோரும் விரும்பக்கூடிய திருமேனியைக் (உகப்பு உருவம்) கொண்டுள்ளான். தேஜோமயமானதாய் பிரகாசிக்கும் உருவத்தைக் (ஒளி உருவம்) கொண்டான். மிகவும் ஆச்சரியமான மஹத்தான (மகப்பு) வடிவத்தையும் கொண்டான். இவை எல்லாம் அர்ச்யாவதார மூர்த்திகளைச் சொல்லும்.

அந்த மூர்த்திகள் எல்லாம் அடியவர்கள் இட்ட வழக்காய் அவர்கள் விருப்பப்படியே இருக்கிறான்.

**தமர் உகந்தது எவ்வுருவம் * அவ்வுருவம் தானே ***
**தமர் உகந்தது எப்பேர் அப்பேர் மற்றப்பேர் * - தமர் உகந்து**
**எவ்வண்ணம் சிந்தித்து * இமையாது இருப்பரே ***
**அவ்வண்ணம் ஆழியான் ஆம்**
பொய்கையாழ்வார், முதல் திருவந்தாதி 44

என்று பொய்கையாழ்வார் முதலாம் திருவந்தாதியில் ஸாதித்தார். தன் அடியார்கள் உகந்த உருவம், அவர்கள் விரும்பும் பெயர் அவர்கள் மகிழும் குணங்கள் என்று அவற்றையே தனக்கு கொள்வான். பகவான் ஸ்வரூபமே அடியவர் இட்ட வழக்காய் அவர்களுக்கு பரதந்த்ரமாய் உள்ளது.

இதை எம்பெருமானார் வாழ்க்கை வரலாற்றில் தெளிவாக காணலாம். ஒரு நாள் தெருவில் சில குழந்தைகள் பகவான் படத்தை தரையில்

வரைந்திருந்தனர். எம்பெருமானார் பிகைஷ எடுப்பதற்கு சென்று கொண்டிருக்கும்போது அங்கே உள்ள சில குழந்தைகள் அவரிடம் “உங்கள் பெருமாளைப் பார்த்தீரா இங்கு,” என்று கேட்டதாம். அவரும் அங்கு நோக்க தரையில் பகவானின் படம், திருவுருவத்துடன், சங்கு, சக்கரத்துடன் இருந்தது. அவரும் உடனே சடக்கென்று கீழே விழுந்து ஸேவித்தார். அதுதான் பெருமாள் என்ற அவருடைய மனோபாவமும் பக்தியும்தான்.

**உற்றேன் உகந்து பணிசெய்து உனபாதம் பெற்றேன்**

**உன்னடிக்கீழ் அமர்ந்து புகுந்தேனே**

என்றும் **"கலிலாள வேங்கடநாயகா"** என்று கலியுகத்தில் கண்கண்ட தெய்வமான அர்ச்யாவதரமான திருவேங்கடமுடையானிடம் நம்மாழ்வார் உகந்து ஶரணாகதி பண்ணியபடி.

**பும்ஸாம் த்3ருஷ்டி சித்தாபஹாரிணம்** என்று ஆண்களின் கண்களையும், இதயத்தையும் கவர்ந்து இழுப்பதாயும், **அபி வ்ருஷா: பரிம்லாநா:** என்று அறிவில்லாத மரங்களும் விரும்படியான திருமேனியை உடையவன் ராமன் என்றார் வால்மீகி

## 6-14 உகந்த திவ்ய தேஸங்கள்

**காரார் திருமேனி காணும் அளவும் போய்***
**சீரார் திருவேங்கடமே திருகோவில்**
**ஊரே* மதிள் கச்சி ஊரகமே பேரகமே***
**பேரா மருதிறத்தான் வெள்ளறையே வெஃகாவே***
**பேராலி தண்கால் நறையூர் திருப்புலியூர்***
**ஆராமஞ்சூழ்ந்த அரங்கம்*** (36)

**- கண மங்கை**

**காரார் மணிநிறக் கண்ணனூர் விண்ணகரம்***
**சீரார் கணபுரம் சேறை திருவழுந்தூர்***
**காரார் குடந்தை கடிகை கடன்மல்லை***

**எரார் பொழில்சூழ் இடவெந்தை நீர்மலை***
**சீராரும் மாலிருஞ்சோலை திருமோகூர்*** (37)

**பாரோர் புகழும் வதரி வடமதுரை***
**ஊராய எல்லாம் ஒழியாமே நான் அவனை***
**ஓரானை கொம்பொசித்து ஓரானை கோள்விடுத்த**
**சீரானை* செங்கண் அடியானை தேன்துழாய்த்**
**தாரானை* - தாமரைபோல் கண்ணானை*** (38)

**எண்ணருஞ்சீர் பேராயிரமும் பிதற்றி*** (39)

**- பெருந்தெருவே**
**ஊரார் இகழிலும் ஊராதொழியேன் நான்***
**வாரார் பூம் பெண்ணை மடல்** (40)

திருமங்கையாழ்வார், சிறிய திருமடல்

என்று திருமங்கை ஆழ்வார் அர்ச்சை அவதார மூர்த்திகளை ஒரு பெரிய பட்டியலாகவே (list) தருகிறார், சிறிய திருமடலில்

**பூ$_4$க$_3$த ஜலம்போலே அந்தர்யாமித்வம்;**
**ஆவரண ஜலம் போலே பரத்வம்**
**பாற்கடல் போலே வ்யூஹம்**
**பெருக்காறு போலே விப$_4$வங்கள்**
**அதில் தேங்கின மடுக்கள் போலே அர்ச்சாவதாரம்**

பிள்ளைலோகாசாரியர், ஸ்ரீவசன பூஷணம் 40

என்று பிள்ளைலோகாசாரியரும் ஸ்ரீவசன பூஷணத்தில் ஸாதிக்கிறார்

## 6-15 நம் இழுக்கு

**சூதனாய்க் கள்வனாகித் * தூர்த்தரோடு இசைந்த காலம் ***
**மாதரார் கயல் கண் என்னும் * வலையுள் பட்டு அழுந்து வேளை ***

தொண்டரடிப்பொடியாழ்வார், திருமாலை 16



prapatti.com

என்றார் தொண்டரடிப்பொடி ஆழ்வார். சேதனர்கள் செய்யும் குற்றங்களுக்கு அளவே இல்லை.

**சூது** என்பது ஒருவனுடைய பொருளை அவன் பார்த்துக் கொண்டே இருக்கும்போது தனக்கு சாதகமாக்கி கொள்வது (inner agenda, some devious motive). சகுனி இங்கே ஞாபகம் வரும்.

**களவு** என்பது மற்றவர் பொருளைத் தன் பொருளாக பாவிப்பது, அனுபவிப்பதை என்பர். ஆழ்வார் ஆத்ம அபஹாரத்தை சூசகமாக கண்பிக்கிறார், இங்கே.

மரக்கட்டையை திருடியதற்கும், வைரத்தை திருடியதற்கும் தண்டனை வேறே. தண்டனைக்கு, பொருளின் விலை மதிப்பு அவசியம். இங்கே **புருடன் மணிவரமாக** என்கிறபடி பகவானின் திருமார்பில் கௌஸ்துப மணியாய் இருக்கும் ஜீவனின் ஆத்மாவையே திருடுகிறான். இவன் செய்கிற திருட்டை விட மட்டமானது ஏதாவது உண்டா?

சேதனன் அநாதி காலமாய் பாபங்களையே செய்து, முதலுக்கு வட்டி, வட்டிக்கு வட்டி (interest on interest) என்று பெருகிக் கொண்டே போகிறது. அவனுடைய பாபங்களை எடைதான் (can't weigh in) போட முடியுமா?

**யத்$_3$ ப்$_3$ரஹ்ம கல்ப நியுதா நுப$_4$ வேப்ய நாஶ்யம்**
**தத் கில்பி$_3$ஷம் ஸ்ருஜதி ஐந்துரிஹ க்ஷணார்தே$_4$**
கூரத்தாழ்வான், வைகுண்ட்ட ஸ்தவம் 61

என்று வைகுண்டஸ்தவத்தில், கூரத்தழ்வானும், "எந்த பாபம் பல கோடி ப்ரஹ்ம கல்பங்களில் அனுபவித்தாலும் முடியாதோ அந்த பாபத்தை ஜீவாத்மா அரை க்ஷணத்தில் செய்கிறான்," என்கிறார். இப்படி அல்பமான பிழைப்பு ஜீவனுக்கு.

**அமர்யாத$_3$; க்ஷுத்$_3$ரஶ் சலமதி ரஸூயா ப்ரஸவபூ$_4$:**
**க்ருதக்$_4$னோ து$_3$ர்மானீ ஸ்மர பர வஶோ வஞ்சந பர:**

**ந்ருஸம்ஶஸ: பாபிஷ்ட$_2$: கத$_3$மஹ மிதோ து$_3$:க்க$_2$ ஜலதே$_4$:**
**அபாராத்$_3$ உத்தீர்ணஸ் தவ பரி சரேயம் சரணயோ:**

ஆளவந்தார், ஸ்தோத்ர ரத்நம் 62

என்று ஆளவந்தாரும் ஸ்தோத்ரரத்நத்தில் சேதனனின் துர்புத்தியும் நடத்தையும் தனக்கு உள்ளதாக சொல்லி கொள்கிறார். உண்மையில் ஆசாரிய ஸ்ரேஷ்டர் அவர். நம்மைப்போல் இருப்பவருக்காகத்தான் சொல்கிறார்.

**அமர்யாத$_3$**;= சாஸ்த்திரங்களை மீறியவன்
**க்ஷுத்$_3$ர:** = கீழ்த்தரமான ஆசை உடையவன்
**சலமதி:** = சஞ்சல புத்தி உடையவன் (wavering mind)
**அஸூயா ப்ரஸ வபூ$_4$:** = பொறாமைக்கு பிறப்பிடமாக
**க்ருத$_4$க்ந:** = நல்லவனுக்கும் தீமை செய்வது
**து$_3$ர்மாநீ** = மட்டமான கர்வத்தை உடையவன்
**ஸ்மர பர வஶ:** = காமத்தில் வஸப்பட்டவன்
**வஞ்சந பர:** = எல்லோரையும் ஏமாற்றுபவன்
**ந்ருஸம்ஶ:** = கொடூரமான செயல்கள் செய்பவன்
**பாபிஷ்ட$_2$:** = பாபத்திலேயே ஆழ்ந்திருப்பவன்

என்று நம்முடைய பாபங்களை எல்லாம் வரிசையாக அடுக்கிகிறார்.

ஸ்வாமி தேசிகன் தன்னை "**அபராத சக்ரவர்த்தி**" என்று சொல்லிக் கொள்கிறார் நம்மாழ்வார் "**நீசனேன் நிறை ஒன்றுமிலேன்** (நம்மாழ்வார், திருவாய்மொழி 3-3-4)" என்றார்.

## 6-16 மன்னி உறைந்து

பிராட்டி எதற்கு எம்பெருமானை விட்டு பிரியாது இருக்கிறாள்? தனக்கு ஒரு பலன் என்பதற்காகவா? இல்லை. பகவானுக்கு ஏதோ ஒரு சௌகரியம் என்பதற்கா? இல்லை. அவள் இருப்பது சேதனர்களை நல்வழிப்படுத்துவதற்கே.

**அஜ்ஞாந வாரிதி$_4$ம் அபாய து$_4$ரந்த்ரம் மாம்**
**ஆஜ்ஞா விப$_4$ஞ்ஜநம் அகிஞ்சந ஸார்வபௌ$_4$ளமம்**
**விந்த$_3$ந் ப$_4$வாந் விபு$_3$த$_4$ நாத$_2$ ஸமஸ்த வேதீ$_3$**
**கிம் நாம பாத்ரம் அபரம் மநுதே க்ருபாயா:**
ஸ்வாமி தேசிகன் தேவநாயக பஞ்சாஸத் 49

**(விபு$_3$த$_4$ நாத$_2$)** திருவயிந்தி புரத்தில் ஸேவை சாதிக்கும் தேவநாதனே!, **(மாம் அஜ்ஞாநி)** நான் உண்மையான அறிவு அற்றவன். **(வாரிதி$_4$ம் அபாய து$_4$ரந்த்ரம்)** கடல் போல் பாபங்களை செய்ய முதலில் நிற்பவன் (Ever sinner). **(ஆஜ்ஞா விப$_4$ஞ்ஜநம்)** உன் ஆணையாகிற சாஸ்திரங்களை மீறி நடப்பவன். (Always breaks the rules). **(அகிஞ்ஜனன்)** பக்தி, ப்ரபத்தி போன்ற உபாயங்களில் சக்தியின்மை, அறிவின்மை என்பதில் நிறைந்தவன். (utterly useless)

இத்தனை தகுதிகள் எனக்கு. **(ப$_4$வாந் ஸமஸ்த வேதீ$_3$ ஸார்வபௌ$_4$ளமம்)** நீயோ எல்லாம் அறிந்த முதல்வன். அப்படியிருக்க, நீ **(க்ருபாயா: அபரம் பாத்ரம்)** உன் கருணைக்கு என்னைத் தவிர வேறு ஒருவனைத் **(கிம் நாம் அநுதே)** தகுதியாக ஏன் நினைக்கிறாய்" (requesting amnesty) என்றார்.

**ப்ரஹ்லாத$_3$ கோ$_3$குல க$_3$ஜேந்த்$_3$ர பரிக்ஷிதா$_3$த்யா:**
**த்ராதாஸ் த்வயா நநு விபத்திஷு தாத்ருஶீஷு**
**ஸர்வம் ததே$_3$கம பரம் மம ரக்ஷணம் தே**
**ஸந்தோல்யதாம் த்ரித$_3$ஶ நாயக கிம் க$_3$ரீய:**
**ஸ்வாமி தேசிகன் தேவநாயக பஞ்சாஸத் 50**

**(ப்ரஹ்லாத$_3$ கோ$_3$குல)** ப்ரஹ்லாதன், பசுக்கள் **(க$_3$ஜேந்த்$_3$ர பரிக்ஷித்$_3$ ஆத்யா),** கஜேந்த்ரன் பரிக்ஷித்து போன்றவர்கள் **(தாத்ருஶீஷு விபத்திஷு)** மிகப்பெரிய ஆபத்திலிருந்து **(த்வயா த்ராதா)** உன்னால் ரக்ஷிக்கப்பட்டனர்

**(தத் ஸர்வம் தே ஏகம்)** அவர்கள் எல்லோரும் சேர்ந்து உனக்கு ஒன்று. **(மம ரக்ஷணம் அபரம்)** என்னைக் காப்பது இன்னொன்று. **(கிம் க$_3$ரீய ஸந்தோல்யதாம்)** இவற்றுள் எது பெரியது என்று எடை போட்டுப் பார், **(த்ரித$_3$ஶ நாயக)** தேவ நாயகனே? என்னை காப்பதே உனக்கு பெரிய செயல் என்பதை அறிவாய் என்றார் ஸ்வாமி.

prapatti.com

**குன்றனைய குற்றஞ் செயினும் * குணங்கொள்ளும் *
இன்று முதலாக என்னெஞ்சே * - என்றும்
புறனுரையே ஆயினும் * பொன்னாழிக் கையான் *
திறனுரையே சிந்தித் திரு**
பொய்கையாழ்வார், முதல் திருவந்தாதி 41

முதல் திருவந்தாதியில் பொய்கையாழ்வார் ஸாதிக்கிறார். "என் மனமே! பகவானைப் பற்றி பயப்படாதே. நாம் மலைபோல் குற்றங்கள் செய்திருப்பினும் அவன் அவற்றைத் தள்ளி ஏதாவது ஒரு சிறிய நற்காரியம் செய்திருக்கிறாயா என்று எண்ணுபவன். இது முதல் வெறும் பேச்சு வார்த்தையாக இருந்தாலும் சரி எம்பெருமான் விஷயமான பேச்சையே நினைத்திரு".

## 6-17 தினையளவும் அகலாள்

**திரு உரத்தில் அவனைத் தினை அளவும் அகலாள்**

திரு உரம் என்று பகவானுடைய திரு மார்பை சொல்லியது. ஸ்வாமி நம்மாழ்வார், **"அகல கில்லேன் இறையும் என்று அலர்மேல் மங்கை உறை மார்பா"** என்று பிராட்டி எம்பெருமானை விட்டு ஒரு க்ஷணமும் பிரிய மாட்டாள் என்றார். ஸ்வாமி தேசிகன் "இருதலை அன்பினால்" அந்த பிராட்டி பகவானை விட்டு அகலாமைக்கு காரணம் காட்டினார்.

**அனைத்து உலகும் உடைய * அரவிந்த லோசனனை *
தினைத்தனையும் விடாள் * அவன் சேர் திருக்கோளூருக்கே ***
நம்மாழ்வார், திருவாய்மொழி 6-7-10

என்றர் நம்மாழ்வார். தினை என்றால் மிகச் சிறிய அளவு என்று பொருள். தினைத்தனையும் என்றால் ஒரு சிறிய காலம் கூட (microsecond. nanosecond etc.). அரவிந்த லோசனன் என்பது தாமரைக் கன்ணன். அத்தால் அவனுடைய பரத்வம் சொல்லப்பட்டது. அவனோடு ஒரு க்ஷணமும் பிரியாமல் இருக்கும் பிராட்டி என்றார்.

**இயம் ஸீதா மம ஸுதா ஸஹதர்ம$_{4}$சரீ தவ**
**ப்ரதீச்ச$_{2}$ சைநாம் ப$_{4}$த்$_{3}$ரம் தே பாணிம் க்$_{3}$ருஹ்ணீஷ்வ பாணிநா ||**
வால்மீகி, ராமாயணம், பால 73-26

என்றது ராமாயணமும். "(இயம் ஸீதா மம ஸுதா) இந்த ஸீதை, என்னுடைய பெண்ணானவள், (ஸஹத$_{4}$ர்மசரீ தவ) கூடவே இருந்து எல்லா தர்மங்களிலும் உறுதுணையாக இருப்பாள் உனக்கு, (ராமா)," என்றார் ஜனக சக்கரவர்த்தியும்.

(ச ப்ரதீச்ச$_{2}$ ஏநாம்) மேலும் ஏற்றுக் கொள்வீர், இவளை. (ப$_{4}$த்$_{3}$ரம் தே) உமக்கு மங்களம் உண்டாகட்டும். (பாணிம் க்$_{3}$ருஹ்ணீஷ்வ பாணிநா) இவளுடைய கையை பிடித்துக் கொள்வீர் உம்முடைய கையால்," என வேண்டினார்.

எம்பெருமானின் ஸகல விதமான ஸ்ருஷ்டி, ஸ்திதி, ஸ்திதி, ஸம்ஹாரங்களிலும் தானும் கூடவே இருந்து பகவானுக்கு துணை செய்கிறாள்.

## 6-18 பிராட்டியின் நல் வார்த்தை சேதனனிடம்

பிராட்டி கடகக்ருத்யம் செய்யும் போது பகவானிடம் மட்டும் இல்லை, சேதனர்களிடமும் நல்ல வார்த்தைகளை சொல்லுகிறாள்

**விதி$_{3}$த: ஸஹி த$_{4}$ர்மஜ்ஞ: ஶரணாக$_{3}$த வத்ஸல: |**
**தேந மைத்ரீ ப$_{4}$வது தே யதி ஜீவிதுமிச்ச$_{2}$ஸி**
வால்மீகி, ராமாயணம் ஸுந் 21-20

ராமாயணத்தில் ஸீதை சொல்கிறாள். "அப்பா ராவணா! ராமன் தர்மத்தை அறிந்தவர். அடைக்கலம் என்று அடைந்தவர்களிடம் வாத்ஸல்யம் காட்டுபவர் என்பது பிரஸித்தம். நீ, உயிர் வாழ வேண்டும் என்றால் அவருடன் சிநேகம் கொள்வாய்," என்று ராவணனுக்கு ஹிதத்தை சொன்னாள்.

prapatti.com

**ஸஹ தர்ம சாரிணியான பிராட்டியும் "மித்ர மௌபயிகம் கர்த்தும்" என்று ராவணன் ப்ரதிகூலனாய் இருக்கச் செய்தேயும் மாத்ருத்வ ப்ரயுக்தமான வாத்ஸல்ய அதிஸயத்தாலே "அஸ்து தே" என்னும் ப்ரகாரத்திலே அருளிச் செய்த வாக்யத்தாலே இத்தம்பதிகள் லோக ஹிதத்திலே ஸமாநாபிப்ராயர் என்னுமிடத்தை காட்டினான்.**

ஸ்வாமி தேசிகன், அபயப்ரதாந ஸாரம்

என்று ஸ்வாமி தேசிகன், லோக ஹிதத்தில் இருவரும் ஒரே எண்ணம் உடையவர்கள் என்று ஸாதித்தார்.

**ராஜ ஸம்ஶ்ரய வஶ்யாநாம் குர்வந்தீநாம் பராஜ்ஞயா ।**
**விதே₄யாநாம் ச த₃ாஸீநாம் க: குப்யேத்₃ வாநரோத்தம ।।**

வால்மீகி, ராமாயணம் யுத் 116-38

என்று ஸீதை அனுமனிடம் கூறுகிறாள், ராமாயணம் யுத்த காண்டத்தில். "ராஜாவிற்கு அடங்கி அவன் அடிமையாய் இருப்பவர்களும், அவனுடைய கட்டளையின்படி (எனக்கு துன்பம்) செய்தவர்களும், அவன் வசப்படி இருக்கும் தாஸீகளும், இவர்களிடத்து எவன் கோபம் கொள்வான்?, வாநரர்களில் சிறந்தவனே! சொல்லும்" என்றாள்.

அதாவது அடிமைகளுக்கு சுதந்திரம் இல்லை. அவன்மேல் கோபம் கொள்ளக் கூடாது. அவன் வயிற்றுப் பிழைப்பிற்காக காரியம் செய்கிறான் (don't kill the messenger). மேலும்,

**பாபநாம் வா ஶுப₄ாநாம் வா வத₄ார்ஹாணாம் ப்லவங்க₃ம ।**
**கார்யம் கருணமார்யேண ந கஶ்சித் ந அபராத்₄யதி ।।**

வால்மீகி, ராமாயணம் யுத்த 116-44

ராமாயணம் யுத்த காண்டத்தில், ஸீதை அனுமனிடம் சொல்லுகிறாள் "அப்பா, குரங்கே! அவன் பாபியானலும் சரி, நல்லவனாலும் சரி, இல்லை, உயிர்த் தண்டனை பெற வேண்டியவன் ஆனாலும் சரி. ஸாத்விக குணங்கள் உடையவன் அவனிடத்தில் இரக்கம் காட்ட வேண்டாமா? குற்றம் செய்யாதவன் யார், இந்த உலகத்தில்?" என்றாள்

## 6-19 பிராட்டியின் கருணை மிக உயர்ந்தது

**இப்படி ஸாபராதைகளான (குற்றம் நிறைந்தவர்களான) ராக்ஷஸிகளைப் பற்ற ராமதூதன் சீறினவிடத்து**

**பாபாநாம் வா ...**

**இத்யாதிகளாலே அவன் சீற்றத்தை ஆற்றி, பிராட்டி ராக்ஷஸீகளைத் தான் ஏறிட்டுக் கொண்டு ரக்ஷித்தபடி சொன்னான்.**

**இவ்ருத்தாந்தத்தை அநுஸந்தித்த பட்டர், ராம கோஷ்டிக்கும் ஆகாத நமக்குப் பிராட்டியுடைய க்ஷமை ஒழியத் தஞ்சமில்லை என்னுமிடத்தை**

**மாதர் மைதி₂லி ராக்ஷஸீஸ்த்வயி ததை₃வார்த்₃ராபராதாஸ் த்வயா**
**ரக்ஷந்த்யா பவநாத்மஜால் லகு₄தரா ராமஸ்ய கோ₃ஷ்டீ₂ க்ருதா ।**
**காகம் தம் ச விபீ₄ஷணம் ஶரணம் இத்யுக்தி க்ஷமௌ ரக்ஷத:**
**ஸா நஸ்ஸாந்த்₃ரமஹா க₃ஸஸ்ஸு₂க₂யது க்ஷாந்திஸ்தவா கஸ்மிகீ ।।**

பராஸர பட்டர் ஸ்ரீகுணரத்ந கோஶம் 50

என்று அருளிச் செய்தார்.

ஸ்வாமி தேசிகன், அபயப்ரதாந ஸாரம்

என்று ஸ்வாமி தேசிகன் பராஸர பட்டர் ஸாதித்த ஸ்ரீகுணரத்ந கோஶத்தைக் காட்டினார்.

“ஸீதா தேவியே! உம்மிடம் அபராதங்களையே செய்து கொண்டிருக்கின்ற அரக்கிகளை அனுமனிடமிருந்து காத்து அருளினாய். உம்முடைய இந்த செயலால் ராமனுடைய ஸபையும் தாழ்ந்த நிலை அடைந்தது. ஏன் என்றால் அடைக்கலம் அருள்வீர் என்று சொன்ன பிறகே காகாசுரன், விபீஷணன் இவர்களை ராமன் காத்தான். நீரோ, யத்ருச்சையினால் உண்டாகிற உம் கருணையால் எல்லொரையும் ரக்ஷித்தீர். அந்த கருணை எங்களையும் ரக்ஷிக்கட்டும்,” என்றார்.

prapatti.com

"நான் திருந்தினேன், உம்மை ஶரணம் அடைகிறேன்" என்று வார்த்தை சொன்ன பிறகே பகவான் காக்கிறான். அது தந்தையின் குணம். ஆனால் பிராட்டியோ திங்கு இழைத்துக் கொண்டு இருக்கும்போதே காக்கிறாள். அது தாயாரின் வாத்ஸல்யம்.

## 6-20 பிராட்டியின் வால்லப்யம் (influence)

மேலும், பிராட்டி பகவானிடமே கூறுகிறாள் "குற்றம் செய்யாதவர்கள் யாரும் இல்லையே? நானும் ஸீதையாக அவதரித்தபோது, மானுக்காக மஹானை இழந்தேன். நீங்களும், கிருஷ்ணாக பிறந்தபோது எத்தனை பொய்கள், திருட்டு பண்ணியிருக்கிறீர்கள்! அதனால், தன் குற்றத்தை எண்ணி வருத்தப்படும் இந்த சேதனனின் மேல் உங்கள் கோபத்தை காண்பிக்கலாமா?" என்று கூறுகிறாள்.

**ஸம்ஶ்லேஷ விஶ்லேஷங்களிலும் புருஷகாரத்வம் தோன்றும்.**
**சேர்ந்து, பிரிந்து இருக்கும்போது**
**ஸம்ஶ்லேஷ தசையில் ஈசுவரனைத் திருத்தும்.**
**விஶ்லேஷ தசையில் சேதனனைத் திருத்தும்**
**இருவரையும் திருத்துவது உபதேசத்தாலே**
**உபதேசத்தாலே மீளாத போது**
**சேதனனை அருளாலே திருத்தும்.**
**ஈசுவரனை அழகாலே திருத்தும்**
பிள்ளைலோகாசாரியார், ஸ்ரீவசந பூஷணம் 9,19

என்றார். பிள்ளைலோகாசரியரும் ஸ்ரீ வசன பூஷணத்தில் புருஷகார வைபவத்தில் ஸாதித்தார்.

பிராட்டி பகவானை தன் வசப்படுத்துவதை ரொம்ப அழகான ஸ்லோகமாக ஸாதிக்கிறார்

**பிதேவ த்வத் ப்ரேயாந் ஜநநி பரிபூர்ணாக₃ஸி ஜநே**
**ஹிதஸ் ரோதோ வ்ருத்யா ப₄வதி ச கதா₃சித் கலுஷ தீ₄: |**

**கிமேதந் நிர்தே₃ாஷ: க இஹ ஜக₃தீதி த்வமுசிதை:**
**உபாயைர் விஸ்மார்ய ஸ்வஜநயஸி மாதா தத₃ஸி ந: ||**

பராசர பட்டர், ஸ்ரீகுணரத்நகோஸம் 52

ஸ்ரீகுணரத்நகோஸத்தில், பராஸர பட்டர் ஸாதித்ததை ஸ்வாமி தேசிகன் ஸ்ரீமத் ரஹஸ்ய த்ரய ஸாரத்தில் எடுக்கிறார்.

"அம்மா! பகவான் நாராயணன் உமக்கு அன்பன். எங்களுக்கு தந்தை. சில சமயம் அப்பாவிற்கு கோவம் வருவதுண்டு. அது நல்ல காரியம் செய்யும்போது கூட. அவனுக்கு எங்கள் மேல் கோபம் வரக் கூடும். அதுவும் நல்லதிற்கே. குழந்தைகள் தப்பு செய்யும்போது இப்படி இருப்பது உலக வழக்கு.

நீ என்ன செய்கிறாய்? இடையில் தலையிட்டு, உலகத்தில் தப்பு செய்யாதவர் யார்? அதற்காகவா இவ்வளவு கோபப்படுவது? என்று வாதாடுகிறாய் (arguing) அவன் தண்டனையை மறக்க பல உபாயங்கள் போக மயக்கங்கள் செய்கிறாய் என்றார்.

இந்த இடத்தில் தாயார் நமக்காக பகவானிடம் பரிந்து பேசுவதை ஸாதித்தார்.

## 6-21 ஏற்கனவே எம்பெருமான் கருணாமூர்த்தி !

பகவான், பிராட்டிக்கு சளைத்தவன் இல்லை, கருணை பொழிவதில். அவனுடைய திருநாமமே கருணாமூர்த்தி, காள மேகம், தயாநிதி.

**தன்னடியார் திறத்தகத்துத் ***
**தாமரையாள் ஆகிலும் சிதகு உரைக்கு மேல் ***
**என்னடியார் அது செய்யார் ***
**செய்தாரேல் நன்று செய்தார் என்பர் போலும்**

பெரியாழ்வார், பெரியாழ்வார் திருமொழி 4-9-2

prapatti.com

பெரியாழ்வார் பகவான் நமக்காக பரிந்து பேசுவதாக சொல்கிறார். பிராட்டி கருணையே வடிவெடுத்தவள். அவள், எதோ தப்பித் தவறி, ஒரு வேளை, ஒரு பேச்சுக்கு, சேதனனிடம் குறை கண்டால்கூட பகவான் விட்டுக் கொடுப்பதில்லை. அவன் சொல்கிறான், "என்னுடைய அடியார்கள், தவறே செய்வதில்லை. அப்படி செய்தாலும், அது குறை இல்லை, எனக்கு உகந்ததே ஆகும்" என்று.

பகவானுக்கு கோவமும் வருமா? அதற்கு சான்று (example, proof) உள்ளதா? என்று கேட்கலாம்.

**தாந் அஹம் த்3விஷத: க்ரூராந் ஸம்ஸாரேஷு நராத4மாந் |**
**க்ஷிபாமி அஜஸ்ரம் அஶுப4ாந் ஆஸுரிஷு ஏவ யோநிஷு ||**
பகவத் கீதை 16-19

என்று கீதையில் சொல்லி உள்ளானே! **(த்3விஷத:)** என்னை வெறுப்பவர்களும், **(அஶுப4ாந்)** பாவம் செய்தவர்களும், **(க்ரூராந்)** கொடியவர்களும், **(நராத4மாந்)** மனிதர்களில் கீழ்த்தரமானவர்களும் இவர்களை மீண்டும், மீண்டும் அசுரப் பிறவிகளில் தள்ளுகிறேன் என்றான்.

பகவானே வராஹ புராணத்தில் ***"ந க்ஷமாமி"***, மன்னிக்க முடியாது என்று கூறியுள்ளானே! அப்படி அவனுக்கு கோவம் வந்தால் பிராட்டி உடனே ஒடி வந்து நமக்காக பரிந்து பேசுகிறாள், புருஷகார பூதையாக.

இப்படி பகவானும், பெரிய பிராட்டியும் போட்டி போட்டுக் கொண்டு இந்த ஜீவராசிகளுக்கு கருணயால் அருள் செய்ய ஒடி வருகிறார்கள்

## 6-22 பகவானின் பிராட்டிமார்கள் அனைவரின் புருஷகாரகம்

**ஆர்த்3ராபராதி4நி ஜநே஽ப்யபி4ரக்ஷணார்த2ம்**
**ரங்கே3ஶ்வரஸ்ய ரமயா விநிவேத்3யமாநே |**
**பார்ஶ்வே பரத்ர ப4வதீ யதி3 தத்ர நாஸீத்**

**ப்ராயேண தே₃வி வத₃நம் பரிவர்த்திதம் ஸ்யாத் ||**
ஸ்வாமி தேசிகன் கோதாஸ்துதி 24

என்று ஸ்வாமி தேசிகன் கோதாஸ்துதியில், இந்த கருணையை எல்லோருக்கும் ஒரு படி மேலாகவே ஸாதிக்கிறார்.

**(தே₃வி)** கோதா பிராட்டியே,
**(ஆர்த்₃ர அபராதி₄நி)** பொறுக்கமுடியாத அபராதங்களை
**(அபி ஜநே)** செய்கிறார்கள், சேதனர்கள்.
**(ரமயா ரங்க₃ ஈஶ்வரஸ்ய)** பெரிய பிராட்டியார் ரங்கராஜனிடம்
**(ரக்ஷணார்த₂ம்)** [அவர்களை] காப்பதற்காக
**(விநிவேத்₃யமாநே)** விண்ணப்பம் செய்கிறாள்.

**(தத்ர பரத்ர பார்ஶ்வே)** அங்கே இன்னொரு பக்கத்தில்
**(ப₄வதீ யதி₃ ந ஆஸீத்)** நீ இல்லாவிட்டால்
**(வத₃நம்)** எம்பெருமானுடைய திருமுகம்
**(ப்ராயேண பரிவர்த்திதம் ஸ்யாத்)** பெரும்பாலும் சேதனனை விட்டு விலகி இருக்கும்.

பகவான், ஒரு சமயம் மனம் சலித்து முகத்தை வேறு பக்கம் திரும்பினால், கோதையே! நீ அவளைவிட கருணயாக பரிந்து பேசுகிறாய்" என்றார்.

## 6-23 இருவருமே உபாயம்

**உபாயதிஷ்ட்டாநாம் ச ஏகம் ஶேஷித்வம்**
ஸோமாசியாண்டான், ஷடர்த்த ஸங்க்ஷேபம்

"பிராட்டியும் பகவானும் ஆகிற மிதுனத்தை ஆஶ்ரயமாகக் கொண்ட ஶேஷித்வம் ஒன்றே," என்று ஸாதித்தார் ஸோமாசியாண்டான் என்கிற பகவத் ராமானுஜருடைய சிஷ்யர்.

ஸ்வாமி தேசிகன் இதை த்வயாதிகாரம் ஸ்ரீமத் ரஹஸ்யத்ரய ஸாரத்தில் காட்டுகிறார். பிராட்டி, பகவான் எனும் இருவருமே நம்முடைய ஶரணாகதி என்னும் யாகத்திற்கு உபாயமாகிறார்கள்.

பர்த்து: ஆஶ்ரயேண பூர்வம் ஸ்வயம் புருஷகாரதாம் ।
வால்லப்யேந அநுதிஷ்டந்தீம் வாத்ஸல்யாத் உப ப்3ரும்ஹிணீம் ॥
உபாய ஸமயே பர்த்து: ஜ்ஞாந ஶக்த்யாதி வர்திநீம் ।
முக்தாநாம் பே4ாக வ்ருத்யர்த்தம் ஸௌந்தர்யாதி விவர்த்திநீம் ॥
ஆகாரத்ரய ஸம்பந்நாம் அரவிந்த நிவாஸிநீம் ।
அஶேஷ ஜக3தீஶித்ரீம் வந்தே3 வரத வல்லப4ாம் ॥

நடதூர் அம்மாள் பிரபந்ந பாரிஜாதம் 82

நடாதூர் அம்மாள் பிரபந்ந பாரிஜாதத்தில் அருளுகிறார். இத்தனை பெருமைகளுடன் இவளுக்கு மூன்று ஆகாரங்கள் (3 R) என்றார்.

**புருஷகாரகம் (Recommend)** - சேதனர்கள் எம்பெருமானை அணுகாது குற்றங்களிலேயே கிடக்கின்றனர். அவர்கள் ஆஶ்ரயிப்பதற்கு முன் தானே தன் செல்வாக்காலே அவனிடம் புருஷகாரமாகி பகவானுக்குள்ள வாத்ஸல்யாதிகளை தூண்டிவிடுகையும்.

**உபாயம் (Route)** - உபாய அனுஷ்டானமான ஶரணாகதி காலத்தில் பர்த்தாவுக்கு ஜ்ஞானம், சக்தி முதலியவற்றை விருத்தி செய்கையும்.
**உபேயம் (Reward)** - மோக்ஷத்தில் கைங்கர்யம் செய்யும்போது சேதனருக்கு அன்பை அதிகமாக்குவதற்காக ஸௌந்தர்யம் முதலிய குணங்களை அபிவிருத்தி செய்கையும்.

பகவானுடன் **உபாய உபேயங்களிலும்** (means and ends) சேர்ந்திருப்பது. அதனுடன் தனக்கே அசாதரணமாக உள்ள **மாத்ருத்வ ப்ரியத்தினால் புருஷகாரமாக, பரிந்துரை** (recommendation) சிபாரிசு செய்கிறாள்.

இப்படி மூன்று ஆகாரங்களுடன், தாமரை மலரில் அமர்ந்து, எல்லா உலகங்களையும் ஆள்கிறவள். கேட்கும் வரத்தை எல்லாம் வாரி வழங்கும்

prapatti dot com

வரதனின் அன்புக்கு பாத்திரமான பிராட்டியை ஆராதிக்க முற்படுகிறேன்,” என்றார்.

**தென்னாசாரிய ஸம்பிரதாயத்தில் பிராட்டிக்கு ஈஶ்வரவத்வம், ஜகத் காரணத்வம், விபுத்வம், ஶரண்யத்வம் என்பவை கிடையாது.**

அவளுக்கு உபாயத்தில் நேர் பங்கு இல்லை. அப்படி அவற்றை சொன்னாலும் அது அப்ரதாந்யமான விஷயம் என்கிறா். இந்த சா்ச்சை (arguments, debate) எல்லாம் தவிர்த்து, அவரவா் ஸம்பிரதாயத்தின்படி ஆசாரியரிடமிருந்து கேட்டு, அறிந்து அவரவரவருக்குரிய வழியை பின்பற்றவும்.

## 6-24 திருமகளின் உரிமை

**ஈஷத் த்வத் கருணா நிரீக்ஷண ஸுத$_{3}$ா**
**ஸந்துக்ஷணாத் ரக்ஷயதே**
**நஷ்டம் ப்ராக் ததலாப$_{4}$தஸ்த்ரிபு$_{4}$வநம்**
**ஸம்ரத்யநந்தோத$_{3}$யம் ।**
**ஶ்ரேயோ ந ஹ்யரவிந்த$_{3}$ லோசந**
**மந: காந்தா ப்ரஸாத$_{3}$ாத்$_{3}$ருதே**
**ஸம்ஸ்ருத்யக்ஷர வைஷ்ணவாத்$_{4}$ வஸு நருணாம்**
**ஸம்ப$_{4}$ாவ்யதே கர்ஹிசித் ॥**

ஆளவந்தார், சதுஶ்ஶ்லோகீ 3

“கமலக் கண்ணனின் மனத்துக்கு இனியவளான ஸ்ரீதேவியின் கடாக்ஷம் முன்பு ஒரு கால் இல்லாது போனதால், மூவுலகங்களும் நசித்துக் கிடந்தன. அவை இப்போது பிராட்டியான உம்முடைய கடாக்ஷத்தை சிறிது மீண்டும் பெற்றதால் அளவற்ற பெருமை பெற்று விளங்குகிறது. சேதனா்களுக்கு நான்கு விதமான புருஷார்த்தங்களும் உம் அருளில்லாமல் ஸித்தாக்காது அல்லவோ?,” என்றார்.

இந்த ஆளவந்தார் ஸ்லோகத்திற்கு ஸ்வாமி தேசிகன் சதுஶ்ஶ்லோகீ பாஷ்யத்திலே பிராட்டி ஸாக்ஷாத் உபாயம் என்பதை நிருபித்துள்ளார். ஐச்வா்யம், கைவல்யம், மோக்ஷம் ஆகிய எல்லாவிதமான உயர்ந்த

prapatti dot com

பலன்களும், அதற்கு உபாயமும் பிராட்டியே என்று பல ப்ரமாணங்களை காட்டி விவரித்துள்ளார். அறம், பொருள், இன்பம், வீடு என்கிற நான்கு புருஷார்த்தங்களையும் லக்ஷ்மியும் நேரிடையாய் அளிக்கிறாள் என்பது தேசிகரின் நிரூபணம்.

**மோக்ஷப்ராதானம் என்பது நாராயணன் ஒருவனுக்கே உள்ளதே** என்றால் அது பிராட்டிக்கும் பொதுவானது என்பது ப்ரமாணங்கள், ஆசாரியர்கள் காட்டிய வழி என்பதை காட்டுகிறார்.

> **ஸ்வஸ்தி ஶ்ரீர்தி₃ஶதாத ஶேஷ ஜக₃தாம் ஸர்கோ₃ப ஸர்கஸ்த்தி₂தீ:**
> **ஸ்வர்க₃ம் து₃ர்க₃திமாபவர்கி₃க பதம் ஸர்வஞ் ச குர்வந் ஹரி: ।**
> கூரத்தாழ்வான், ஶ்ரீஸ்தவம் 1

என்றார் கூரத்தாழ்வானும். பகவான் படைத்தல், காத்தல், அழித்தல், சுவர்கம், நரகம், மோக்ஷம் அளித்தல் எல்லாவற்றையும் தான் ஒருவனாகவே அளிப்பதில்லை. பிராட்டியுடன் கூடியே அளிக்கிறான். நிரபேக்ஷமாக செய்வதில்லை.

பலப்ரதாநம் என்று பேற்றை அருளும்போது பிராட்டியின் உதவியை நோக்குகிறான் என்றார்.

> **அல்லி மலர்மகள் போக மயக்குகள் ***
> **ஆகியும் நிற்கும் அம்மான் ***
> **எல்லையில் ஞானத்தன் ஞானம் அஃதே கொண்டு ***
> **எல்லாக் கருமங்களும் செய் ***
> **எல்லையில் மாயனைக் கண்ணனைத் தாள் பற்றி ***
> **யான் ஓர் துக்கம் இலனே**
> நம்மாழ்வார், திருவாய்மொழி 3-10-8

என்று நம்மாழ்வாரும், பிராட்டியுடன் கூடி அவளின் போகத்தில் மயங்கி, ப்ரணய கலகத்தின் வ்யாஜமாக, ஞானத்தின் சிகரமானவன் ஜகத்வ்யாபரத்தை செய்கிறான் என்று பகவானின் எல்லாக் காரியங்களிலும் பிராட்டிக்கு அந்வயம் உண்டு என்று ஸாதித்தார்.

**கிரீடே₃யம் க₂லு நாந்யத₂ாஸ்ய ரஸத₃ா**
**கூரத்தாழ்வான், ஸ்ரீஸ்தவம் 1**

என்று ஆழ்வானும் பகவான் இவளுடைய முக மலர்ச்சிக்காகவே எல்லாக் காரியங்களும் செய்கிறான் என்றார்.

பெண் மயில் மகிழ்ச்சிக்காக, எப்படி ஆண் மயில் தோகை விரித்து ஆடுமோ அதுபோல, பிராட்டியிம் சந்தோஷத்திற்கே, பகவான் ஜகத் ஸ்ருஷ்டி போன்ற காரியங்கள் எல்லாம் செய்கிறான் என்றார் பராசர பட்டர்.

## 6-25 பிராட்டிக்கு பிறகே பகவான்

அதனால்தான் நம் முன்னோர்கள், முதலில் தாயார் ஸன்னதியை ஸேவித்த பிறகுதான் பெருமாள் ஸன்னதிக்கு போவது வழக்கம். முதலில் தாயாரின் அனுமதி, பரிந்துரை (permission, recommendation) வேண்டும்.

அதனால்தான் கலியுகத்திலே கண்கண்ட பெருமாள், ஆழ்வார்கள் அனைவரும் ஶரணாகதி பண்ணிய பகவான், ஸ்ரீநிவாஸன், திருவேங்கடமுடையான் திருக்கரத்தை பார்த்தால் பிரசித்தமாக தெரியும். அங்கு வரத ஹஸ்தம், அபய ஹஸ்தம் இல்லை. **மாம் ஏகம் ஶரணம் வ்ரஜ:** என்று தன் திருவடியை காண்பிப்பத்தாக தெரியும் அத்துடன் , முதலில் கீழே தாயார் ஸன்னதியை ஸேவித்து விட்டு வந்தாயா? என்று நம்மை கேட்கிற மாதிரி உள்ளது என்பர் முன்னோர்.

த்வய மந்திரத்தில் ஸ்பஷ்டமாக சொன்ன ஸ்ரீ பதத்தையும், தன் திருவடிகளையும் திருவேங்கடநாதன் காண்பிப்பதால் என்னவோ ஆழ்வார்கள் அனைவரும் அங்கு ப்ரபத்தி செய்தார்கள். இந்த திருமலை நாதன், அடுத்த பாசுரத்தில், “நாராயணா” பதத்திற்கு விவரணமாக விளங்கப் போவதைக் காணப் போகிறோம்.

## 6-26 மதுப் விகுதியின் பொருள்

**ஓர் உயிராய் நின்ற ஒண் சுடர் இன்ப உருத்தனிலும்**
**பேர் உருவத்திலும் பின் அதில் தோற்றும் உருக்களிலும்**
**ஓர் உருவான உலகிலும் ஏற்கும் உருக்களினால்**
**சேருதல் மன்னு செய்யாள் அன்பர் நம் மனம் சேர்ந்தனரே**
ஸ்வாமி தேசிகன் த்வயச்சுருக்கு 3

ஸ்வாமி தேசிகன் துவயச்சுருக்கில் இந்த ஸ்ரீ ஶப்தத்தின் "மதுப்" விகுதிக்கு அர்த்தம் ஸாதிக்கும்போது பகவானின் ஐந்து நிலைகளையும் சுருங்க ஸாதிக்கிறார்.

**பேர் உருவத்திலும்** - பரம்;
**அதில் தோன்றும் உருக்களிலும்** - வியூஹம்;
**ஏற்கும் உருக்களினால்** - விபவம், அர்ச்சை;
**ஓர் உயிராய் நின்ற** - அந்தர்யாமித்வம்.

"ஸகல விதமான வஸ்துக்களில் உள் மறைந்து ஜ்ஞாநாநந்த ஸ்வரூபனாய் நிற்கும் எம்பெருமானுடைய திவ்ய ஆத்ம ஸ்வரூபத்துடன், பிராட்டியின் திவ்ய ஆத்ம ஸ்வரூபம் சேர்ந்து நிற்கிறது," என்றார்.

பகவான் எல்லா வஸ்துக்களிலும் ஆணுக்கு உரியவாறு கலந்தும், இவள் பெண்ணுக்கு தகுந்தவாறு கலந்தும் ஸகல வஸ்துக்களிலும் வியாபித்து உள்ளனர்.

அதனால் இங்கு நம்முடைய பாசுரத்திலும் பகவானின் பர, வ்யூஹ, விபவ, ஹார்த, அர்ச்சை என்னும் ஐந்து நிலைகளையும் சொன்னது. அந்த ஐந்தும் உ வில் ஆரம்பித்தது உகாரமான பிராட்டியின் நித்ய ஸம்பந்தத்தை காண்பிக்கிறது.

## 6-27 மஹா பாபிக்கும் பிழைப்பு உண்டு



prapatti.com

**திருவடியைப் பொறுப்பிக்கும் அவள் தன்**
**சொல்வழி வரும் அவனைப் பொறுப்பிக்கச் சொல்ல வேண்டாவிறே**
பிள்ளைலோகாசாரியார், முமுக்ஷுப்படி 129

பத்து மாதங்கள் ராக்ஷஸிகள் தன்னை துன்புறுத்திய போதும் அவர்களை சிறிய திருவடியான அனுமனிடமிருந்து காத்தவள் பிராட்டி. ராக்ஷஸீகள் செய்த காரியம் கண்டு வெகுண்ட அனுமன் அவர்களை சித்ரவததை செய்ய முற்பட்டபோது அவனுக்கு நல்ல வார்த்தை கூறி, தனக்கு தீங்கு செய்த அரக்கிகளையும் காத்தாள்.

பிராட்டியின் பொங்கும் கருணை இப்படியிருக்க, ஶரணாகதி என்று பிராட்டி, பகவானின் திருவடிகளில் விழும்போது நம்மை பொறுத்து அருள மாட்டாளா? இதில் சந்தேகம் கூட உண்டா? என்றார்.

## 6-28 தண்டனை என்பதை அறியாதவள்

**ஸஹ த₄ர்மசரீம் ஶௌரேஃ ஸம்மந்த்ரித ஜகத்₃தி₄தாம் ।**
**அநுக்₃ரஹமயீம் வந்தே₃ நித்யம் அஜ்ஞாத நிக்₃ரஹாம் ॥**
ஸ்வாமி தேசிகன், யதிராஜ ஸப்ததி

என்றார் ஸ்வாமி தேசிகன். பிராட்டி எம்பெருமானுடன் என்றும் கூடி தர்மத்தை செய்பவள். இவள் அவனுடன் கலந்தே உலக்கு என்ன நன்மை செய்யலாம் என்று யோசித்து இருக்கிறாள்.

**“தேவ்யா காருண்ய ரூபயா”** என்கிறபடி இவள் கருணையே வடிவு எடுத்தவள். சேதனர்களிடம் கடும் சொல் சொல்வது, அவர்களுக்கு தண்டனை நினைப்பது என்பவற்றை எல்லாம் அறியாதவள்.

**அருளும்போது கணவனின் உத்திரவை பார்ப்பதில்லை. நிக்ரஹம் செய்யும்போது அவன் உத்திரவவை எதிர்பார்க்கிறாள்.** இதை ராக்ஷஸீகள், ராவணன் கதையிலிருந்து அறிந்து கொள்ளலாம். இதனால்தான், எத்தனை

கடுமையான பாபங்கள் செய்திருப்பினும் எவனுக்கும் விடிவு காலம் உண்டு, பிராட்டியை பற்றும்போது.

## 6-29 காலம், நேரம், முகம் நோக்க வேண்டாம்

பிராட்டி என்றும் பகவானைப் பிரியாமல் இருப்பதனால், நாம் இன்று பகவானிடம் போகலாமா? இல்லை அவர் கோபாமாக இருக்கிறார், நாளைக்கு பார்த்து கொள்ளலாமா? என்ற கவலையே கிடையாது. இணைந்திருப்பது அணுகுவதற்கே. (Never to look for any suitable time or place).

**மதுப்பினால் இருவர் சேர்த்தியும் நித்யம் என்கிறது**
**இத்தால் - ஆஶ்ரயிகைக்கு ருசியே வேண்டும் என்பது.**
**காலம் பார்க்க வேண்டாம் என்பது**
பிள்ளைலோகச்சாரியார் முமுக்ஷுப்படி 130,134

என்று பிள்ளைலோகச்சாரியரும் முமுக்ஷுப்படியில் ஸாதித்தார்.

பிராட்டி ஸம்பந்தமில்லாமல் மோக்ஷம் கிடையாது. எத்தனை கல்பங்களில் பாபங்கள் செய்திருந்தாலும், செய்து கொண்டே இருந்தாலும், திருவின் பரிவுரைதான் எம்பெருமானின் கோபத்தை தணித்து, தண்டனையை மறக்கச் செய்கிறது.

**இவள் ஸந்நதியாலே காக,ம் தலை பெற்றது;**
**அது இல்லாமையாலே ராவணன் முடிந்தான்**
பிள்ளைலோகச்சாரியார் முமுக்ஷுப்படி 135

என்று முமுக்ஷுப்படியில் பிள்ளைலோகசாரியர் ஸாதித்தார்.

காகாசுரன் கடுமையான குற்றம் செய்திருப்பினும், பிரம்மாஸ்திரமே அவனை துரத்தினாலும், தாயாரிடம் சரண் புகுந்ததால் மன்னிக்கப்பட்டு உயிர் பிழைத்தான். பிராட்டியின் கருணை ஒன்றே அவனை காத்து உயிர் பிச்சை அளித்தது.

**ஸதம் நிபதிதம் பூ$_4$மௌ ஶரண்யஈ ஶரணாக$_3$தம் |**
**வத$_4$ார்ஹமபி காகுத்ஸ்த$_2$: க்ருபயா பர்யபாலயத் ||**
வால்மீகி, ராமாயணம் ஸுந் கா 38-35

ஆனால், ராவணணோ பிராட்டியிடம் அடைக்கலம் புகாதலால் மரணத்தை சந்தித்தான்.

## 6-30 த்வயத்தில் முதல் இரண்டு பதங்கள்

இந்த இரண்டு பாசுரங்களில் இரண்டு அர்த்தங்கள் தெளிவாக சொல்லப்பட்டது,

**ஸ்ரீ என்கிற பதத்தில், பிராட்டியின் புருஷ காரத்வம்**
**மத் என்கிற பத்தில் "நித்ய யோகே மதுப்பு" என்கிறபடி,**

எல்லா காலங்களிலும், எல்லா இடங்களிலும், எல்லா நிலைகளிலும் (**ஸர்வதேஶ, ஸர்வகால, ஸர்வாவஸ்தைகளிலும்**) அந்த நாராயணனை விட்டுப் பிரியாமல், அவனுடைய ஸ்வரூப, ரூப, குண, விபூதிகளில் கலந்து பிரியாமல் நிற்கிறாள்

**ஸ்ரீய:பதி: நிகி$_2$ல ஹேய ப்ரத்யநீக கல்யாணைகதாந:**
**ஸ்வவேதர ஸமஸ்து வஸ்து விலக்ஷண**
**அநந்த ஞாநாநந்தை$_3$க ஸ்வரூப:**
பகவத் ராமாநுஜர், கீதா பாஷ்யம் அவதாரிகை

என்று எம்பெருமானாரும் பிராட்டி ஸம்பந்தத்தை முன்னிட்ட பிறகே எம்பெருமானின் கல்யாண குணங்களை அனுபவிக்கிறார்.

## 6-31 முடிவுரை

**ஸர்வ ஸ்வாமிநியாய் ஸர்வேச்வரனுக்கு ஶேஷபூதையாய் ஸஹ தர்ம சாரிணியாயான பெரிய பிராட்டியார் இத்தலையில் (சேதனர்கள் விஷயத்தில்) வாத்ஸல்ய அதிசயத்தாலும் (குற்றத்தை காணாத எல்லையற்ற அன்பினால்), அத்தலையில் (எம்பெருமானிடத்து) வால்லப்ய அதிசயத்தாலும் (சலுகையான உரிமையால்) புருஷகாரமாய்க் கொண்டு இஜ்ஜீவர்களுக்குத் தஞ்சமாகிறாள்.**

**இவளை புருஷகாரமாக்க வேண்டுகிறது ஈச்வரன் தண்டதரனாகையாலே** (தண்டிக்கும் அதிகாரி).

**இத்தண்டகாரணம் அநாதியான ஆஜ்ஞாதிலங்கநம்** (சாஸ்திரத்தின் வழி நடவாமை).

ஸ்வாமி தேசிகன், ரஹஸ்ய ரத்நாவளி 4-6

என்று ஸ்வாமி ரஹஸ்ய ரத்நாவளியில் ஸாதித்தார்.

எம்பெருமானுடன் சேர்ந்து இருக்கும் பிராட்டி அவனிடம் உரிமையுடன் விளங்கிகிறாள். சேதனர்களிடம் அன்புடனும் இருப்பதால் அவர்கள் குற்றங்களை மன்னித்து எம்பெருமானிடம் பரிந்துரை செய்கிறாள்.

இப்படி புருஷகாரம் செய்தாலும் எம்பெருமானுக்கு குற்றமே செய்த சேதனர்களிடம் உள்ள அன்பு, மன்னிப்பு உண்மையானதா? என்று சோதித்து பார்க்கிறாள். தாமரையாள் ஆகிலும் சிதகு உரைக்கும் மேல் என்று எம்பெருமானும் இவள் தவறி சொன்னால் கூட என அடியவர்கள் நல்லவர்கள் என்ற வார்த்தை கேட்ட பின்னே மகிழ்ச்சி அடைகிறாள்.

பகவான் எல்லா ஜீவராசிகளையும் சமமாக பாவிப்பவன். இருந்தாலும் அவரவர் வினைப்பயனுக்கு தக்கவாறு பலனை அளிக்கிறான். ஏன் இப்படி என்றால் எம்பெருமான் ஸர்வ சுதந்திரன் (unlimited authority). அவன் அளித்த சாஸ்திரத்தை மீறியவர்கள் மேல் கோவம் உண்டாகிறது அவனுக்கு. அவர்களை ஸம்ஸாரக் கடலில் தள்ளுகிறான்.

**அஜ்ஞானம், கர்மா, வாசனை, ருசி, தேஹ ஸம்பந்தம்** என்ற சக்கரத்திலிருந்து மீளுவதற்கு ஒரே வழி பிராட்டியின் அருள்தான்.

**வெறும் மாலாக இருப்பவனை திருமாலாக (ஶ்ரீமானாக)** ஆக்கும் பிராட்டியின் அருளை இதுவரை அனுபவித்தோம்.

அடுத்த பாசுரத்தில் "நாராயண" பத்திற்கு விவரணத்தை பார்ப்போம்

prapatti dot com

prapatti dot com

# 7 நாராயண

**ஆதியாய் உடலில் உயிராய் மாசிலா சோதியாய் ***
**பதியாய் இறையாய் கதியாய் அகலா உறவாய் ***
**அனைத்துக் காரணமாய், காரியமாய் * நாம் ஏத்தும்**
**ஆரணத்தில் திருநாரணன் நற்குணங்கள் பூரணமே**

**ஆதியாய்** = தானே எல்லாப் பொருட்களுக்கும் முதலாவதாய்
**உடலில் உயிராய்** = பொருட்களில் தானே உட்புகுந்து நின்றும்
**மாசிலா சோதியாய்** = சேதனா சேதனங்களின் குறைகள் ஒட்டாது
**பதியாய்** = அவர்களுக்கு தலைவனாய்
**இறையாய்** = ரக்ஷகனாய்
**கதியாய்** = அடையும் ப்ராப்யமாய்
**அகலா உறவாய்** = என்றும் பிரிக்க முடியாத ஸேஷ-ஸேஷி உறவாய்
**அனைத்துக் காரணமாய்** = எல்லாவற்றிக்கும் தானே காரணமாய்
**காரியமாய்** = எல்லாவற்றையும் உண்டாக்கி
**நாம் ஏத்தும்** = (இப்படி) அடியவர்கள் கொண்டாடும்
**ஆரணத்தில்** = வேதங்களில்
**திருநாரணன்** = ஸ்ரீயப்பதியான நாராயணன்
**நற்குணங்கள்** = திருக்கல்யாண குணங்கள்
**பூரணமே** = முழுமையாக சொல்லப்பட்டுள்ளன.

## 7-1 முன்னுரை

இந்த பாசுரத்தில் **நாராயண** பதத்திற்கு பொருளை பார்க்கப் போகிறோம்.

**ஆதியாய்** என்பது முதல் பதம். இது **ஆதாரத்தை** குறிக்கும் (depedendence) (முதலில் வந்தது பின் வருபவைகளை காரணாமாயும் தாங்கியும் நிற்கிறது.) உலக வழக்கில் தாத்தா, பாட்டி இவர்களால் மீதி இருக்கும் குடும்பம் ஏற்படுகிறது.

**பூரணமே** என்பது கடைசி பதம் இது complete என்று எல்லாவற்றையும் **முற்றும் அடக்கியது** என்கிறது. எல்லாம் அடக்கம் என்பதில் முக்கியமாக - **உபாயம், பலன்** என்ற இரண்டும் அடங்கியுள்ளது.

ஆக **ஆதியாய் பூரணமே** என்பது ஸாரார்த்தம் நாராயண பதம் என்பது **ஆதாரம், உபாயம், பலன்** (3 Rs -- Rely, Route, and Rewards) என்கிற மூன்றையும் சொல்கிறது

## 7-2 ப்ரம்ம சப்தம்

வேதங்களில் பல இடங்களில், பல வித்தைகளில் **பரப் ப்ரம்மம், பரம் தத்வம், பரம் ஜ்யோதி, பரமாத்மா** என்ற சப்தங்களால் சொல்லுகிறது. இவை எந்த தேவதையை குறிக்கிறது என்று சொல்ல முடியாது ப்ரம்மம் என்றால் பெரியது. ப்ரம்மாண்டமாக இருக்கிறது என்கிறோம் ப்ரம்ம + அண்டம் (gigantic). **ஸத் என்றாலும் ப்ரம்மம்**. ஸத்ஸம்ப்ரதாயம் என்று சொல்கிறோம்.

சில சப்தங்கள் பொதுவானது. யாரை சொல்வது என்று தெரியாது "ஐயா, தலைவர், கண்ணே" என்பது போல். இந்த சாமான்ய சப்தங்கள் யாரை குறிக்கிறது என்றால் அது இடத்தையும், சொல்பவரையும் பொறுத்தது (context dependent).

அதுபோல், வேதத்தில், சொல்லப்படுபவன் யார்? என்பதை மீமாம்ஸா நியாயத்தை பார்த்து விசேஷ சப்தத்தால் முடிவு செய்ய வேண்டும். விசேஷ சப்தமான நாராயணன், மேலே சொன்ன எல்லாம் தன்னையே சொல்கிறது என்பதை காண்பிக்கிறது

## 7-3 "நாராயணா" நாம மஹிமை



prapatti dot com

ஸ்ரீவைஷ்ணவ ஸம்பரதாயத்தில் பகவானுக்கு திருநாமங்கள் எத்தனையோ இருக்கிறது ஸ்ரீவிஷ்ணு ஸஹஸ்ரநாமம் என்று சொல்கிறோம். அது விஷ்ணுவின் ஆயிரம் நாமாக்களைச் சொல்லுகிறது. ஸர்வேச்வரனின் அத்தனை திருநாமங்களிலேயும் சிறப்பாக சொல்லப்படுபவை மூன்று

ஓம் நாராயணாய வித்$_3$மஹே வாசுதே$_3$வாய தீ$_4$மஹி
தந்நோ விஷ்ணு ப்ரசோத $_3$யாத்
நாரயணஸூக்தம்

என்று நாரயணஸூக்தம் முடிக்கிறது. இதில் **நாராயண, வாசுதேவ, விஷ்ணு** மூன்றும் சொல்லப்படுகிறது.

**ஓம் விஷ்ணவே நம:** (ஷடக்ஷரம்)
**ஓம் நமோ நாராயணாய** (அஷ்டாக்ஷரம்)
**ஓம் நமோ பகவதே வாசுதேவாய** (த்வாதசாக்ஷரம்)

என்று மூன்று வ்யாபக மந்திரங்கள். இவை பகவானின் வ்யாபகத்துவத்தை (pervasiveness) காட்டுகிறது.

வாசுதேவ என்பது **வசதி இதி வாசுதேவ:** என்பதலாலும், விஷ்ணு என்பது **வ்யாப்நோதி இதி விஷ்ணு:** என்பதிலிருந்தும் அவை, பகவானின் ஒருவித ஸ்வரூபத்தை மட்டுமே சொல்லக் கூடியது என்று அறிகிறோம். ஆனால் **"நாரயணா" பதமோ பகவானின் ஸ்வரூப, ரூப, குண, விபூதிகள்** (இயல்பு, வடிவம், பண்பு, செல்வ நிலை) எல்லாவற்றையும் சொல்லுகிறது.

பசு மாடு பலவித நிறத்தில் இருந்தாலும், கறந்த பால் ஒரே நிறம்தான். அது வெள்ளை நிறம். (Despite of the various colors of the cow, the extracted milk is of only one color - white). அது போல ஞான ஸ்வரூபமான ஆத்மா ஒரே மாதிரி. அது தேவர்கள், மனிதர்கள், பறவை, விலங்கு இவர்களின் தேகங்களில் வேறுபாடு. ஆனால் ஆத்மா எல்லாம் ஒரே வகை. ஜீவாத்ம தத்துவம்.

கறந்த பாலில் நெய் தெரியாது (Butter is not visible when one looks into the milk). பாலை தோய்த்து, தயிராக்கி, அதை கடைந்து வெண்ணெய் எடுத்து, அதை காய்ச்சி நெய் எடுக்க வேண்டும் அதைப்போல் பகவான் எல்லா ஆத்மாவின் உள்ளும் இருக்கிறான். மனஸ் என்கிற மத்தினால் கடைந்து பகவானை காண வேண்டும்

**பிறந்த மாயா! பாரதம் பொருத மாயா! * நீ இன்னே**
**சிறந்த கால், தீ, நீர் வான் * மண் பிறவும் ஆய பெருமானே! ***
**கறந்த பாலுள் நெய்யேபோல் * இவற்றுள் எங்கும் கண்டு கொள் ***
**இறந்து நின்ற பெருமாயா! * உன்னை எங்கே காண்கேனே?**
**நம்மாழ்வார் திருவாய்மொழி 8-5-10**

என்றார் நம்மாழ்வார் திருவாய்மொழியில். வேதம் தமிழ் செய்த மாறன் ஆனதால் வேதாந்த கருத்துக்களை இதில் சொல்லுகிறார் பிரம்மவித் உபநிஷத் என்று உபநிஷத்தில் சொல்லிய உதாரணத்தை இங்கு காட்டுகிறார் ஆழ்வார். மாயா என்பது மாயம் செய்கிறவன் தமிழ் இலக்கியத்தில் மாயன் என்றால் திருமால்

போன பாசுரத்தில் **“மத்”** என்ற பதத்திற்கு அர்த்தம் பார்க்கும் போது, தத்வங்களைப் பற்றி பார்த்தோம். அதில் வேதம் தான் உயர்ந்த ப்ரமாணம் என்று அறிந்தோம். அந்த ஸ்ருதிகள் எல்லாம் நாராயாணன்தான் உயர்ந்த தெய்வம் என்று ஒரே மாதிரியாக கோஷிக்கின்றன.

**நாராயணம் மஹாஜ்ஞேயம், விச்வாத்மாநம் பராயணம் ।**
**நாராயண பரம் ப்₃ரஹ்ம, தத்வம் நாராயண: ப்ர: ।**
**நாராயண பரோ ஜ்யோதி, ஆத்மா நாராயண: பர:**
**நாராயணப் பரோ த்யாதா, த்யாநம் நாராயணப் பர:**
**நாரயணஸூக்தம்**

என்கிறது நாராயணஸூக்தம். இது முக்கியமாக என்ன சொல்லுகிறது என்றால் நாராயணனே சிறப்பாக அறியக்கூடிய கடவுள். எல்லாவற்றிற்கும் ஆத்மா அடைக்கலத்திற்கு உயர்ந்த புகலிடம். பரப்ரஹ்மம், சிறந்த தத்வம், உயர்ந்த ஜோதிஸ். தியானம் செய்யக்கூடிய தெய்வங்களில் சிறந்தவர். அவரே சிறந்த தியானமும் ஆகும்

**நாராயணபரா வேதா$_3$ தே$_3$வா நாராயணாங்கஜா:**
**நாராயணபரா லோகா நாராயணபரா மக$_2$ா:**
வியாஸ பகவான், ஸ்ரீமத் பாகவதம் 2-5-15

ஸ்ரீமத் பாகவத்தில் வேதங்களை எல்லாம் தொகுத்து வியாஸாமாக்கிய கிருஷ்ண த்வாபாயனர் என்னும் வியாஸ பகவானே சொல்லும் வார்த்தை. வேதங்கள் எல்லாம் நாராயணனைத்தான் சொல்லுகிறது. தேவர்கள் நாராயணனின் அங்கத்தில் இருந்து உண்டானவர்கள். உலகங்கள் எல்லாம் நாராயணனையே சார்ந்து இருப்பவை. யாகங்கள் எல்லாம் நாராயணனையே ஆராதிக்கிறது.

**நாரயணாத் பரோ தே$_3$வோ ந பூ$_4$தோ ந ப$_4$விஷ்யதி**
**ஏதத் ரஹஸ்யம் வேதா$_3$நாம் புராணாஞ்ச ஸம்மதம்**
வராஹ புராணம்

வராஹ புராணத்தில் வரும் ஸ்லோகம் இது. நாராயணனுக்கு மேல் ஒரு தெய்வமும் இல்லை. இருந்ததும் இல்லை; இனி வருவதுமில்லை (past & future). இது வேதத்திலும், புராணங்களிலும் ஒருமுகமாக (approved unanimously without any ambiguity) இசைந்த ரஹஸ்யமாகும்

## 7-4 பகவந் நாம ஸ்மரணை

வேதத்தில் நாராயாணனை சொல்லி இருக்கிறது. வேதத்தை சொல்ல யாருக்கு நேரம் இருக்கிறது? ஒரு இடத்தில் உட்கார்ந்து பகவானைப் பற்றி ஸ்மரிக்க நேரம் இல்லை என்கிறார்கள் மக்கள் இப்பொழுது.

**வரி இருள் அழிவழி * வரும் உணர்வோடு ***
**கரிகிரி மருவிய * கரியவன் அடியிணை ***
**பரிவொடு பரவு நல் * அடியவர் பழவுரை ***
**அரியரி அரியரி * அரியரி அரியே**
ஸ்வாமி தேசிகன், வைஷ்ணவ தினசர்யை 1

என்று ஸ்வாமி தேசிகன் வைஷ்ணவ தினசர்யையில் காட்டுகிறார்.

**உத்திஷ்டந் சிந்தயந் ஹரிம்** என்று **ஹரிஹரி** என்று காலை எழுந்திருக்கும்போது **விரஜம் சிந்தயந் கேசவம்** என்று **கேசவாய நம:** என்று வெளியே கிளம்போது, **புஞ்ஜந் சிந்தயந் கோவிந்தம்** என்று **கோவிந்தாய நம:** என்று சாப்பிடும்போது, **ஸ்வபந் சிந்தயந் மாதவம்** என்று **மாதவாய நம:** என்று தூங்கும்போது சொல் என்று ஸ்வாமி தேசிகன் சொல்லி கொடுக்கிறார்.

**"ஹரி"** சப்தத்தை சொல்ல தூங்கி எழுந்திருக்கும்போது சொல்ல வேண்டும். எத்தனை தடவை சொல்ல வேண்டும் என்பதையும் சொல்லுகிறார். ஏழு தடவை என்று. ஆண்டாளும் திருப்பாவையில் **"அரியென்ற பேரரவம்"** என்றாள். தூங்கும் முன் மாதவாய நம: என்று சொல்லி, ஹரி, ஹரி என்று விழித்து கொள்ளும்போது சொன்னால், தூங்கின நேரம் எல்லாம் பகவானைச் சொன்ன மாதிரி கணக்கு.

சரி, அப்படி பகவான் நாமாவைச் சொல்லக்கூட நேரம் இல்லை என்றால், பெரியாழ்வார் திருமொழியில் "காசும் கறையுடை" என்ற பதிகத்தில் சொல்கிறார்

> **மண்ணில் பிறந்து மண்ணாகும் * மானிடப் பேரிட்டு * அங்கு**
> **எண்ணம் ஒன்று எண்ணியிருக்கும் ஏழை மனிசர்காள்! ***
> **கண்ணுக்கினிய * கருமுகில் வண்ணன் நாமமே -**
> **நண்ணுமின் * நாரணன் தம் அன்னை நரகம்புகாள்**
> **பெரியாழ்வார், பெரியாழ்வார் திருமொழி 4-6-7**

"பகவான் நாமாக்களை சொல்லக் கூட நேரம் இல்லை என்றால் போகட்டும். சரி உங்கள் குழந்தைகளுக்காவது பகவான் திருநாமாவை வையுங்கள். **நாராயணா, கோவிந்தா, கேசவா, மாதவா, தாமோதரா** என்று அவர்களை கூப்பிடும்போது பகவான் தன்னையே கூப்பிடுவதாக நினைக்கிறான்," என்றார். அஜாமிளன் கதை மாதிரிதான் இங்கேயும்

## 7-5 ப்ரமாணங்கள் கூறும் "நாராயணா" நாமம்

வேதங்களும், ரிஷிகளும், ஆழ்வார்களும், ஆசாரியர்களும் முழுமையான "நாராயண" நாமாவிலேயே ஊன்றி கிடந்தார்கள்

- ஏகோ ஹ வை நாராயண ஆஸீத்
- மாதா பிதா நாராயண
- நமோ நாராயணாயேதி மந்த்ர:
- நாராயண ஶப்தமாத்ரம்
- வண்புகழ் நாரணன்
- நான் கண்டு கொண்டேன் நாரயணா என்னும் நாமம்
- நாராயணனே நமக்கே பறை தருவான்
- "நாரணன் முழு ஏழ் உலகுக்கும் நாதன்"
- நாராயணா! ஒ மணிவண்ணா! நாகணையாய் வாராய் என் ஆரிடரை நீக்காய்
- நலந்திகழ் நாராணன்
- பகற்கண்டேன் நாரணனைக் கண்டேன்
- நாடு நகரமும் நன்கறிய நமோ நாராயணா என்று
- நாரணன் எம்மான் பார் அணங்கு ஆளன், வாரணம் தொலைத்த காரணம்தானே
- ஞானச் சுடர் விளக்கேற்றினேன் நாரணர்க்கு ஞானத்தமிழ் புரிந்த நான்

என்று இதைப்போல் பல இடங்களில் நாராயணனையே ஸ்மரிக்கிறார்கள்.

## 7-6 நாராயண பதம் பிரிக்கும் முறை

நாராயண பதம் என்பது நார-அயந பதங்கள் சேர்ந்த ஒரே பதமாகும் (single word). இரண்டு விதமாக பொருள் (two different meanings) சொல்லலாம்.

prapatti.com

**நார** என்பது **நர** என்ற சப்தத்திலிருந்து வருகிறது (root word). இதில் **ர** என்பது **ரீ** என்பதிலிருந்து வந்தது (derived). **ரீ என்றால் அழிவு** (ரிங் - க்ஷயே). **ந** என்பது அந்த அழிவை **நிஷேதிக்கிறது** (negation). **நர என்பது அழிவில்லாத பொருள்.** அது ஸ்வரூபத்தில் மாறுதல் இல்லாத ஜீவனைச் சொல்லும்.

**நாரங்கள் ஆவன நித்ய வஸ்துக்களின் திரள்**
பிள்ளலோகாசாரியார் முமுக்ஷுப்படி 96

ஆக நரன் என்றால் ஜீவன், **நாரங்கள் என்பது ஜீவ கூட்டத்தை,** ஜீவர்களின் சமூகத்தை சொல்லும் (society).

**நர** என்னும் பதம், **ஸ்வருபத்தை போல் ஸ்வாபவத்தில் மாறாததை**யும் சொல்லும். அப்போது அது **எம்பெருமானைக்** காட்டும். இந்த நரனிடமிருந்து பிறந்த ஜீவர்கள்தாம் நாரர்கள் என்றும் சொல்லுவர்.

முதலாவதாக **நாராணாம் அயநம்**. இது **தத்புருஷ ஸமாஸம்**. தமிழில் **வேற்றுமையுணர்ச்சி** என்பார்கள் நாரங்களுக்கு அயநமாயிருப்பவன் நரனிடமிருந்து உண்டான நாரமான ஜீவாத்மா கூட்டத்திற்கு அயநமாய் உள்ளவன்.

அயநம் என்பதற்கு மூன்று அர்த்தம்.

1. **உபாயம்** (ஈயதே அநேந)
2. **பலன்** (ஈயதே அஸௌ)
3. **ஆதாரம்.** (ஈயதே அஸ்மிந்)

அதாவது, எம்பெருமான் தன்னிடமிருந்து உண்டான சேதநர்களின் கூட்டத்திற்கு உபாயமாகவும் (Route), அனுபவிக்கப்படும் பலனாகவும் (Rewards), ஆதாரமாகவும் (Rely) ஆகிறான்.

இரண்டாவதாக **நாரா: அயநம் யஸ்ய ஸ:** இது **பஹுவ்ரீஹி ஸமாஸம்**. இதைத் தமிழில் **அன்மொழித்தொகை** என்பர். நாரங்களை அயநமாக கொள்கிறான் என்று பொருள். அயநம் என்றால் இங்கு ப்ரவேசிப்பது என்ற பொருள்.

ஸர்வேஸ்வரன் சேதநா சேதநர்களை ப்ரவேசிக்கப்படும் வஸ்துவாகக் கொண்டவன்.
தவிர அயநம் என்பதற்கு வசிக்கும் இடம் என்ற பொருளும் உண்டு. முதல் ஸமாஸத்தால், **சேதநாசேதநர்களுக்கு இருப்பிடமானவன்** என்றோம். அப்படி என்றால் சேதநா சேதநர்கள் இல்லாத இடத்திலேயும் எங்கும் ஸர்வேஸ்வரன் இருக்கிறான் என்று பஹிர் வ்யாப்தியைக் காட்டுகிறது.

இரண்டாம் ஸமாஸத்தால் **சேதநாசேதநர்களை தனக்கு இருப்பிடமாக் கொண்டவன்.** சேதநாசேதநர்கள் உள்ள இடங்களில் தான் மறைந்து நிற்கிறான் என்பது அந்தர் வ்யாப்தியைக் காண்பிக்கிறது.

**அந்தர்ப$_3$ஹிஶ்ச தத்ஸர்வம் வ்யாப்ய நாரயண: ஸ்தி$_2$த: ।**
**நாராயண ஸூக்தம்**

என்று நாராயண ஸூக்தம் சொல்கிறது.

இங்கு நன்றாக கவனிக்க வேண்டும். நாராயண என்றுதான் சொல்கிறோம். நாரய**ன** என்று சொல்வதில்லை. நாரம் + அயநம் என்பது எந்த தேவதையாகவும் இருக்கலாமே? என்று கேட்கலாம். இந்த திருநாமம் மற்ற தெய்வங்களுக்கு பொருந்தாது.

பாணினி இலக்கணத்தின்படி **“ன”** என்பது பொதுவானாலும் அது குறிப்பாக ஒருவனைச் சொல்லும்போது **“ண”** ஆகிறது என்றார். அதனால் நாரய**ன** என்பதை பொதுப் பெயர் என்றாலும் நாராய**ண** என்பது ஒருவனையே குறிக்கும் பெயர்.

**மனுஸ்மிருதி நாரம் என்றால் நீர்** என்றது. நரன் என்னும் எம்பெருமானால் படைக்கப்பட்டது. படைக்கும்போது அந்த நீர இருப்பிடமாக கொண்டதால் நாராயணன் ஆகிறான்.

நீர்போலே நீர்மை உடையதால் நாராயணன் என்று பலவிதமாக பொருள் சொல்லாம்.

## 7-7 பிரபந்தத்தில் நாராயண பதத்தின் பொருள்

ஆழ்வார்களும் **"நாராயண"** பதத்திற்கு வெகு அழகாய் வேத கருத்தின்படியே வியாக்கியானம் செய்துள்ளனர்.

**இன்று ஆக * நாளையே ஆக ***
**இனிச் சிறிதும் நின்றாக * நின் அருள் என்பாலதே ***
**நன்றாக நான் உன்னை அன்றி * இலேன் கண்டாய் ***
**நாரணனே நீ என்னை அன்றி இலை**
திருமழிசையாழ்வார், நான்முகன் திருவந்தாதி 7

வேதத்தில் சொல்கிற இந்த நாராயண பதத்திற்கு திருமழிசை ஆழ்வார் திராவிட வேதமான பிரபந்தத்தில் விளக்கம் சொல்கிறார், நான்முகன் திருவந்தாதியில்.

"பகவானே உன் அருள் இன்றைக்கே இருக்கலாம். இல்லை நாளைக்கோ இருக்கலாம் இல்லை கொஞ்சம் நேரம் கழித்து இருக்கலாம் ஆனால் அது என்னையே விஷயமாக உடையது. அதற்கு வேறு வழியில்லை. நிச்சயமாக நான், உன்னைத் தவிர வேறு கதியில்லாதவன். நாரயணனே, நீயும் என்னைத் தவிர ரக்ஷிக்ககூடிய வஸ்துவை உடையவன் இல்லை" என்றார்.

**நன்றாக நான் உன்னை அன்றி இலேன் கண்டாய்** என்று சொல்லும்போது **நாராணாம் அயநம்,** அதாவது ஸகல ஜீவராசிகளுக்கும் நீதான் ஆதாரம் என்று ஆகிறது. எம்பெருமான்தான் ஸகலவிதமன வஸ்துக்களையும் தாங்குகிறான்.

**நாரணனே நீ என்னை அன்றி இலை** என்றபோது **நாரா: அயநம் யஸ்ய ஸ:** ஸகல ஜீவராசிகளையும் தன் இடமாக கொண்டவன் என்பதை காட்டுகிறது. எம்பெருமான் எல்லா வஸ்துக்களிலும் உள் புகுந்து நிற்கின்றார் (அநுப்ரவேசம்).

**அறிகிலேன் தன்னுள் அனைத்துலகும் நிற்க ***
**நெறிமையால் தானும் அவற்றுள் நிற்கும் பிரான்**
நம்மாழ்வார், திருவாய்மொழி 9-6-4

prapatti.com

என்று நம்மாழ்வார் எல்லா உலகங்களும் எம்பெருமானின் ஸங்கல்பத்தை பற்றி நிற்கிறது. இப்படி தன் நினவால் காக்கும் எம்பெருமான் அவற்றுள்ள முறை தவறாது அவற்றின் உள் நின்று அந்தர்யாமியாய் தாங்கி அவற்றை இயக்குகிறான் என்றார்.

பகவானின் **ஸர்வவியாபகத்தை,** எல்லா இடங்களிலும் பரந்து இருப்பதை, **தன்னுள் அனைத்துலகும் நிற்க** என்பதால் காட்டினார். எம்பெருமான் **அந்தர்யாமியாய்** எல்லா வஸ்துக்கள் உள்ளேயும் புகுந்து நிற்பதை **தானுள் அவற்றுள் நிற்கும் பிரான்** என்பதால் அறிவித்தார்.

இங்கே **நெறிமை என்பது, முறை தவறாது**. என்ன முறை என்றால் **நீ ஸேஷி - நான் ஸேஷ பூதன், நீ ஆத்மா, நான் சரீரம் என்கிற அநாதியான தத்வம்**. (this principle is ageless) இது நிருபாதிகம். அதாவது ஒருவராலும் மறுக்க முடியாத உண்மை. அது எந்த சந்தர்ப்ப சூழ்நிலையிலும் மாறாது. (constant and true; will not change in any context. Thats is You are the Master and I am the slave) அதனால்தான் பகவானை “நிருபாதிக பந்து” என்கிறார்கள்.

**ஸமோஹம் ஸர்வ பூ$_4$தேஷு ந மே த்$_3$வேஷ்யோஸ்தி ந ப்ரிய:**
**யே ப$_4$ஜந்தி து மாம் ப$_4$க்த்யா மயி தே தேஷு சாப்யஹம்**
வியாஸ பகவான், பகவத் கீதை (9-29)

என்று கீதாசாரியன் பகவத் கீதையில் சொல்கிறான்.

**(ஸர்வ பூ$_4$தேஷு)** எல்லா உயிரினிலும்
**(அஹம் ஸம:)** நான் ஸமமாக நிறைந்துள்ளேன்
**(மே த்$_3$வேஷ்ய: ந)** எனக்கு பிடிக்காதவன் என்று யாருமில்லை.
**(ப்ரிய: ந அஸ்தி)** வேண்டியவன் என்பவனும் இல்லை.
**(து யே ப$_4$க்த்யா)** ஆனால் எவர்கள் அன்பு கொண்டு பக்தியுடன்
**(மாம் ப$_4$ஜந்தி)** என்னையே பூஜை செய்கிறார்களோ
**(தே மயி ச )**அவர்கள் என்னிடமும்
**(அஹம் தேஷு அபி)** நான் அவர்களிடமும் காண முடியும்

## 7-8 நாராயண என்றால் திருக்கல்யாண குணங்கள்

நாராயணா என்றால் எம்பெருமானின் திருக்கல்யாண குணங்களைச் சொல்லும். ருக்மிணி பிராட்டியும் **"ஶ்ருத்வா குணாந புவந சுந்தர ஶ்ருண்வதாம் தே"** என்று கண்ணனின் குணங்க்ளிலும், ரூபத்திலும் மயங்கித்தானே தூது விடுவதாக ஸ்லோகத்தை சொன்னாள்.

ராமானுஜ ஸித்தாந்தத்தில் பகவான் நிர்க்குண ப்ரம்மம் என்ற பேச்சே கிடையாது அவன் இயற்கையாகவே (ஸ்வாபாவிகமாய்) தீய (ஹேய) குணங்கள் இல்லாமல், கணக்கில்லாத உயர்ந்த (கல்யாண) குணங்கள் உடையவனாய் குறைகளோ, மாறுதலோ (தோஷமோ, விகாரமோ) இல்லாத ஸத்யமான ரூபத்துடன், நம்முடைய கண்களால் காண முடியாதபடி இருக்கிறான் ப்ரம்மத்திற்கு நம் போல் ஸத்வ, ரஜோ, தாமஸ வகை குணங்கள் கிடையாது

## 7-9 நாராயண என்றால் திருக்கல்யாண குணங்கள் - ஆளவந்தார்

> **வஶீ வதாந்யோ குணவாந் ருஜீஶ் ஶுசிர்**
> **ம்ருது₃ர் த₃யாளுர் மது₄ரஸ் ஸ்தி₂ரஸ் ஸம: ।**
> **க்ருதீ க்ருதஜ்ஞஸ் த்வமஸி ஸ்வபா₄வதஸ்**
> **ஸமஸ்த கல்யாண குணாம்ருதோத₃தி₄: ।।**
> ஆளவந்தார், ஸ்தோத்ர ரத்னம் 18

என்று ஸ்தோத்ர ரத்னத்தில் ஆளவந்தார் அருளினார்.
(வஶீ) [தன் அடியார்களுக்கு] வசப்பட்டு இருப்பவன்.
(வதாந்யோ) [அவர்களுக்கு] தன்னையே கொடுப்பவன்.
(குணவாந்) ஸௌசீல்ய குணத்தை உடையவன்.
(ருஜு:) உள்ளம் உரை செயலால் ஒருபடிப்பட்டிருப்பவன்
(ஶுசி:) [நிர்ஹேதுக] காரணமிலா அருளும் பாவ சுத்தியை உடையவன்
(ம்ருது) அடியார்களின் பிரிவை பொறுக்க மாட்டான்

(து₃யாளு:) [அடியவரின் துக்கத்தை பொறுக்காத] தயை உடையவன்
(மதுர:) இனிமையானவன்
(ஸ்தி₂ர) [அடியவரை காப்பதில்] அசைக்கமுடியாதவனாய்
(ஸம:) [தன் அடியவர் அனைவரிடத்தும்] ஸமமாய்
(க்ருதீ) [அடியவருடைய] காரியங்களை [தன்னுடையாதாக எண்ணி] செய்து
(க்ருதஜ்ஞ:) அடியவர் செய்த சிறிய அநுகூலத்தையும் பெரிதாக எண்ணி
(த்வம் ஸ்வபா₄வ) நீ இயற்கையாகவே
(ஸமஸ்த கல்யாண குண அம்ருத உத₃தி₄: அஸி) எல்லா கல்யாண குணங்களும் கொண்ட அமுதக் கடலாய் இருக்கிறாய்" என்றெல்லாம் வர்ணிக்கிறார்.

## 7-10 நாராயண என்றால் திருக்கல்யாண குணங்கள் - ராமானுஜர்

**பகவான் உபயலிங்கம்.** பெருமாளுக்கு **இரண்டு லக்ஷணம்** அதாவது அடையாளங்கள் (ID - identification)

1. **ஸமஸ்த கல்யாண குணாகரத்வம்** - மங்கலமான குணங்கள் நிறைந்து இருக்கும் தன்மை
2. **அகில ஹேய ப்ரதயநீகத்வம்** - அமங்கல, ஹேய, தோஷங்கள் இல்லாமை.

அவனுயை கல்யாண குணங்களோ கணக்கற்றவை. ஹேய குணங்கள் ஒன்று கூட இல்லாதலால், விரல் விட்டு எண்ணுவதற்கு இல்லை. பகவான் நிர்க்குண ப்ரம்மம், அவனுக்கு குணங்கள் கிடையாது என்றால் "தீய" என்ற அடைமொழி (adjective) சேர்த்து பகவானுக்கு தீய குணங்கள் கிடையாது என்று விளக்க வேண்டும்.

நாரயணா என்பதில் உள்ள "நார" பதத்திற்கு ஆசாரியர்கள் வியாக்கியானம் செய்யும்போது எம்பெருமானின் திருகல்யாண குணங்களையே சொல்கிறார்கள்

**ஜ்ஞாந ப3ல ஐஶ்வர்ய வீர்ய ஶக்தி தேஜஸ்**
**ஸௌஶீல்ய வாத்ஸல்ய மார்த3வ ஆர்ஜவ**
**ஸௌஹார்த3 ஸாம்ய காருண்ய மாது4ர்ய கா3ம்பீ4ர்ய ஔதா3ர்ய**
**சாதுர்ய ஸ்தை2ர்ய தை4ர்ய ஶௌர்ய பராக்ரம**
**ஸத்யகாம ஸங்கல்ப க்ருதித்வ க்ருதக்ஞதாத்3ய ஸங்க்2யேய**
**கல்யாண கு3ண க3ணௌக4 மஹார்ணவ!**

ராமானுஜர், ஶரணாகதி கத்யம்

என்று ராமானுஜர், ஶரணாகதி கத்யத்தில் பகவானின் குணங்களை வரிசையாக அடுக்கிக் கொண்டே போகிறார்

## 7-11 நாராயண என்றால் திருக்கல்யாண குணங்கள் - தேசிகன்

**நி: ஸீம வைப4வ ஜுஷாம் மிஷதாம் கு3ணாநாம்**
**ஸ்தோதுர் த3யே வ்ருஷ கிரிஶ கு3ணேஶ்வரீம் த்வாம்**
**தைரேவ நூநம் அவசை: அபி4நந்தி3தம் மே**
**ஸத்யாபிதம் தவ ப3லா த3குதோ ப3யத்வம்**

ஸ்வாமி தேசிகன், தயா ஶதகம் 101

ஸ்வாமி தேசிகனும், தயா ஶதகத்தில் ஸாதிக்கிறார். “எல்லையில்லாத பெருமையை அடைந்த குணங்கள், விழித்துக்கும்போதே குணங்களின் தலைவியான கருணையான உன்னை, பிராத்தித்தேன். மீதி இருக்கும் அந்த குணங்கள் இப்பொழுது பரவசமாகி, உன்னை துதித்ததை, தங்களுக்கு செய்தாக பாவிக்கின்றன. வேரில் விட்ட நீர் எப்படி கிளை, இலைக்கு பரவுமோ அதுபோலே,”

“ஸ்ரீநிவாஸன் குணக்கடல். அவனுக்கு குணங்கள் பல உண்டு. அவைகள் - ஜ்ஞானம், பலம், வீர்யம், சக்தி....- என்று. ஆனால் அவற்றின் தலைவி என்பது கருணை என்னும் தயாதேவியே,”என்றார்.

**வ்ருஷ கி3ரி க்3ருஹ மேதி4 கு3ணா;**
**போ3த4 ப3லை ஶ்வர்ய வீர்ய ஶக்தி முகா2: |**

**தோ₃ஷா ப₄வேயு ரேதே**
**யதி நாம த₃யே த்வயா விநா பூ₄தா: ||**
ஸ்வாமி தேசிகன், தயா ஶதகம் 15

என்று ஸ்வாமி தேசிகனும், த₃யா ஶதகத்தில், “பகவானிடம் எண்ணற்ற திருக்கல்யாண குணங்கள் உள்ளன.
**(போ₃த₄ ப₃லை ஶ்வர்ய)** ஞானம், பலம், ஐசுவர்யம்,
**(வீர்ய ஶக்தி முகா₂)** வீர்யம், சக்தி, தேஜஸ் போன்ற ஆறு குணங்களும்
**(வ்ருஷ கி₃ரி க்₃ருஹ மேதி₄)** திருமலையில் வாழும் திருவேங்கடமுடையானே
**(தயே த்வயா)** தயாதேவி உன்னை விட்டு
**(விநா பூ₄தா: யதி நாம)** பிரிந்திருக்குமானால்
**(ஏதே தோ₃ஷா ப₄வேயு:)** இந்த குணங்களும்கூட தோஷமாகிவிடும்,” என்றார்.

## 7-12 நாராயண என்றால் திருக்கல்யாண குணங்கள் - பிள்ளை லோகாசாரியார்

**புருஷகார பலத்தினாலே ஸ்வாதந்த்ர்யம் தலை சாய்ந்தால்**
**தலை எடுக்கும் குணங்களை சொல்லுவது நாரயாண பதம்”**
பிள்ளைலோகாசாரியார், முமுக்ஷுப்படி 136

பிள்ளைலோகாசாரியாரும் முமுக்ஷுப்படியில் ஸாதிக்கிறார். “பகவானிடம் தனித்து அவனுக்கே உள்ள சிறப்பு ஸ்வாதந்த்ரியம். இது மற்றொருவரிடத்திலும் காண முடியாத பெருங்குணம். இத்தால், மீதி குணங்கள் எல்லாம் கட்டுபட்டு இருக்கின்றன பிராட்டியின் புருஷகார சிபாரிசினால் இந்த ஸ்வாதந்த்ரியம் அழுந்தி மற்றயைய குணங்கள் பிரகாசிக்கின்றன,” என்றார்.

**உபதேஶத்தாலும், அழகாலும் கண்ணழிவற வஶீகரித்துக் கொண்டு கார்யம் கொள்ளவல்ல புருஷகார பலத்தாலே ஆஶ்ரயணோந்முகனான சேதனன் அநாதி காலம் பண்ணின அபாராதங்களைப் பார்த்துச் சீறி, “அங்கீகரியேன்” என்று இருக்கும் ஈஶ்வர ஸ்வாதந்த்ர்யம் தலை மடிந்தால், அதன் கீழ்**

**தலை எடுக்கப் பெறாத செறிப்புத் தீர்ந்து தலை எடுக்கும் குணங்களைச் சொல்லுகிறது நாராயண பதம் - என்கை.**
மணவாள மாமுநிகள் வியாக்கியானம், முமுக்ஷுப்படி 136

ஸ்வாதந்த்ரியம் என்பது மாமியார் போலே. மற்றைய குணங்கள் எல்லாம் மருமகள்கள் போலே. மாமியார் இருக்கும் வரை முக்யத்வம், அதிகாரம் (power, command) எல்லாம் அங்கேதான். ஆனால் மாமியார், கொஞ்சம் தல்ளிப்போனால், மாட்டு பெண்கள் ராஜ்யம் என்று விளையாட்டாக சொல்வார்கள்.

## 7-13 நாராயண என்றால் உபாயம்

நாராயண பதம் பொதுவாக எல்லா விதமான திருக்கல்யாண குணங்களைச் சொன்னாலும், த்வயத்தின் முதல் வரியில் உள்ள “நாராயண” பதத்திற்கு பகவானின் உபாயம் ஆகும் தன்மையை குறிக்கிறது என்று விளக்கினார்கள் நம் ஆசாரியர்கள்.

**அகல கில்லேன் இறையும் என்று * அலர்மேல் மங்கை உறைமார்பா *
நிகரில் புகழாய்! உலகம் மூன்று உடையாய்! * என்னை ஆள்வானே *
நிகரில் அமரர் முனிக்கணங்கள் விரும்பும் * திருவேங்கடத்தானே *
புகல் ஒன்றில்லா அடியேன் * உன் அடிக்கீழ் அமர்ந்து புகுந்தேனே.**
நம்மாழ்வார் திருவாய்மொழி 6-10-10

என்று நம்மாழ்வார் திருவாய்மொழியில் ஸாதித்தார். இங்கு, நாராயண பதம், உபாயத்திற்கு அவசியமாக இருக்கும் ஆறு குணங்களை சொல்கிறது **வாத்ஸல்யம், ஸ்வாமித்வம், ஸௌசீல்யம், ஸௌலப்யம், ஜ்ஞானம், சக்தி** என்று அவை.

1. **நிகரில் புகழாய்** - வாத்ஸல்யம்
2. **உலகம் மூன்று உடையாய்** - ஸ்வாமித்வம்
3. **என்னை ஆள்வானே** - ஸௌசீல்யம்
4. **திருவேங்கடத்தானே** - ஸௌலப்யம்



pradeepaji.com

5. **அமரர் விரும்பும்** - ஜ்ஞானம்
6. **முனிக்கணங்கள் விரும்பும்** - சக்தி

## 7-14 வாத்ஸல்யம் என்றால் குற்றங்களை குணமாக கொள்வது

ஆழ்வார் வாத்ஸல்யம் என்று ஸமிஸ்க்ருத பதத்தை அப்படியே சொல்லாமல் அதற்கு பதிலாக **"நிகரில் புகழாய்"** என்ற பதத்தால் அருளினார்.

குற்றங்களை குணமாகக் கொள்ளும் பண்பே வாத்ஸல்யம் என்றும் முன்னோர் அருளியுள்ளார்கள். வத்ஸம் என்றால் கன்றுக்குட்டி. அப்பொழுதுதான் பிறந்த கன்றினை அதன் உடம்பிலுள்ள அழுக்குகளை நினையாமல் நக்கிக்கொடுப்பது தாய்ப்பசு. அந்த தாய்ப்பசுவுக்கு தன் கன்றிடம் உள்ள மனோபாவத்தையே வாத்ஸல்யம் என்கிறார்கள்.

> **அற்றம் உரைக்கில் அடைந்தவர்பால் அம்புயைகோன் ***
> **குற்றம் உணர்ந்து திகழும் கொள்கையனோ?* - எற்றே தன்**
> **கன்றின் உடம்பின் வழுவன்றோ காதலிப்பது ***
> **அன்று அதனை ஈன்று உகந்த ஆ**
>
> அருளாளப்பெருமாள் எம்பெருமானார், ஞான ஸாரம் 25

என்று யஜ்ஞமூர்த்தி என்னும் அருளாளப் பெருமாள் எம்பெருமானார், ஞான ஸாரத்தில் இந்த காட்சியை அப்படியே ஸாதித்தார்.

**(அம்புயைகோன்)** தாமரையாளான பிராட்டியின் கணவனிடத்து
**(அற்றம் உரைக்கில்)** நீதான் அறுதியான தத்துவம், பரமார்த்தமானவன் என்று
**(அடைந்தவர்பால்)** அடைக்கலம் அடைந்தவரிடத்து
**(குற்றம் உணர்ந்து)** அவர்கள் குற்றம் உணர்ந்து,
**(திகழும் கொள்கையனோ?)** இகழும் ஸ்வபாவத்தை உடையவன் அல்ல.
**(கன்றின் உடம்பின் வழுவன்றோ)** கன்றின்உடம்பில் உள்ள அழுக்கை
**(அன்று அதனை ஈன்று உகந்த ஆ)** அதனைப் பெற்றெடுத்த பசு

**(காதலிப்பது)** எப்படி உகந்து புஜிக்குமோ அது போலே போக்யமாக கொள்வான்.

**மாதவோ பக்தவத்ஸல:**
**விஷ்ணு ஸஹஸ்ரநாமம்**

என்று விஷ்ணு ஸஹஸ்ரநாமத்தில் வருகிறது. லக்ஷ்மிக்கு நாயகன்; அதனாலேயே அவன் பக்தர்களிடம் வாத்ஸல்யம் உடையவன் என்று பிராட்டி ஸம்பந்தத்தால் சொல்லியது.

**த$_3$யா ஸிந்தே$_4$ா! ப$_3$ந்தே$_4$ா! நிரவதி$_4$க வாத்ஸல்ய ஜலதே$_4$ ।**
**தவ ஸ்மாரம் ஸ்மாரம் கு$_3$ணக$_3$ணம் இச்ச$_2$ாமி க$_3$தபீ$_4$: ।।**
**ஆள வந்தார், ஸ்தோத்ர ரத்னம் 58**

ஆளவந்தார், ஸ்தோத்ர ரத்னத்தில் எம்பெருமானின் திருக்கல்யாண குணங்களை புகழ்கிறார். “பகவானே நீ கருணைக் கடலானவன். எல்லோருக்கும் எல்லாவிதமான உறவும் நீயே. உன்னுடைய வாத்ஸல்யத்திற்கு எல்லை என்று ஏதேனும் உண்டா? உன்னுடைய குணக்கடலை நினத்து நினைத்து பயமின்றி உன்னை அடையவே ஆசைப்படுகிறேன்” என்றார்.

**ஔத் ஸுக்ய பூர்வம் உபஹ்ருத்ய மஹா பராதா$_4$ந்**
**மாதா: ப்ரஸாத$_3$யிதும் இச்ச$_2$தி மே மநஸ் த்வாம்**
**ஆலிஹ்ய தாந் நிரவஶேஷம் அலப்$_3$த$_4$ த்ருப்தி:**
**தாம்யஸி அஹோ! வ்ருஷ கி$_3$ரீஶ த்$_4$ருதா த$_3$யே த்வம்**
**ஸ்வாமி தேசிகன் தயாஸதகம் 97**

ஸ்வாமி தேசிகன் தயாஸதகத்தில்,
**(மாதா: த$_3$யே)** தயாதேவியே!
**(மே மந: மஹா பராதா$_4$ந்)** என் மனது கடும் பாபங்களை
**(ஔத் ஸுக்ய பூர்வம் த்வாம்)** ஆசையோடு உனக்கு
**(உபஹ்ருத்ய)** காணிக்கையாக [தந்து]
**(ப்ரஸாத$_3$யிதும் இச்ச$_2$தி)** மகிழ்விக்க ஆசைப்படுகிறது.
**(வ்ருஷ கி$_3$ரீஶ த்$_4$ருதா)** திருவேங்கடமுடையானால் தரிக்கப்பட்ட நீ

prapatti.com

**(தாந் நிரவஶேஷம்)** அக்குற்றங்களை எல்லாம் துளிக்கூட மீதி வைக்காமல்
**(ஆலிஹ்ய)** சுவைத்து சாப்பிட்டு
**(அலப்$_3$த$_4$ த்ருப்தி:)** திருப்தி பெறாதவளாய் [குற்றங்கள் போதவில்லை என்று]
**(தாம்யஸி அஹோ!)** வருந்துவதாக தோன்றுகிறது. என்ன ஆச்சரியம்?” என்றார்.

## 7-15 வாத்ஸல்யம் என்றால் குற்றம் காணாமை

குற்றங்களை மறக்கும் அன்புதான் வாத்ஸல்யம் என்றார் ஸ்வாமி தேசிகன்.

ஸ்வாமி தேசிகனின் மனோபாவம் இங்கு சற்று வேறுபட்டது. குற்றங்களை குணமாக கொள்ளும் தன்மை என்று சொன்னால் அந்த பண்பை உடையவனுக்கு குற்றங்கள் எவை என்று தெரியும். அதைப் பொருட்படுத்தாமல் அதை நல்லதாகவே பாவிப்பான். ஆனால் தாய்ப்பசுவிற்கு இது அழுக்கு இது நல்லவை என்பதே கண்களில் தெரியாது. அதுபோல் பகவானுக்கும் சேதனனின் அபராதங்கள் அவனுக்கு புலப்படாது என்று ஸ்வாமி ஸாதிக்கிறார்.

அங்கிலத்தில் extreme case of affection blinds the personality என்பார்கள் அதுபோல்.

> **வண்டு படி துளப மார்பனிடைச் செய்த பிழை ***
> **உண்டு பல என்று உளம் தளரேல் * - தொண்டர் செய்யும்**
> **பல்லாயிரம் பிழைகள் பார்த்து இருந்தும் * காணும் கண்**
> **இல்லாதவன் காண் இறை**
>
> அருளாளப்பெருமாள் எம்பெருமானார், ஞான ஸாரம் 24

என்று ஞானஸாரத்தில் ஸாதித்தார். “தேனை அருந்தும் வண்டுகள் ரீங்காரம் செய்யும் துளஸீயை மாலையாக அணிந்தவன் எம்பெருமான். அவன் விஷயத்தில் செய்த குற்றங்கள் கணக்கில்லாதவை என்று மனமே, சோர்வு அடையாதே!”

“தன்னுடைய அடியவர்கள் செய்யும் ஆயிரக்கணக்கான குற்றங்களை எல்லாம் அறிந்த (ஸர்வஞ்ஞான) எம்பெருமான் பார்த்து கொண்டே இருந்த போதும், அப் பிழைகளை உணரும் ஞான ரூபமான கண்கள் இல்லாதவன் ஸேஷி,” என்றார் அருளாப் பெருமாள் எம்பெருமானார்.

இதைத்தான் **“அவிஞ்ஞாதா”** என்ற பதத்தால் காட்டியது ஸ்ரீவிஷ்ணு ஸஹஸ்ர நாமம். தன் அடியவர் செய்யும் குற்றங்களில் அவிஜ்ஞாதாவாய் இருக்கும் என்று ஆயிற்று.

## 7-16 நாராயணா என்றால் ஸ்வாமித்வம்

**உலகம் மூன்று உடையாய்** என்ற பதத்தால் சொல்லப்பட்டது. **ஸ்வாமித்வம்** என்பது ஸர்வ வஸ்துக்களுக்கும் கர்த்தாவாக இருப்பது. **ஆதியாய்** என்று இங்கு சொல்வது.

> **ஸ்வாமித்வமாகிறது - உடையவனாய் இருக்கும் இருப்பு. சேதனன் தன்னை அழித்துக் கொள்ளுமன்று விட மாட்டாதே இவன் பக்கலில் ப்ரவணனாய், கர்ஷகன் பயிர்த்தலையிலே குடில் வளைத்து நோக்குமாப்போலே இவர்களுடைய ரக்ஷணார்த்தமாக நித்ய ஸந்நிதி பண்ணி, விடாதே கோக்குகைக்கு உறுப்பான பந்த விஶேஷம்.**
>
> பிள்ளைலோகாசாரியார், பரந்தபடி

## 7-17 நாராயணா என்றால் ஸௌஸீல்யம் (Excellence in disposition)

**என்னை ஆள்வானே** என்கிற பதம் பகவானின் ஸௌஸீல்யத்தை காட்டுகிறது. தன் மேன்மையைப் பாராது தாழ்ந்தவர்களுடன் கூடி இருப்பது. மிகவும் பெரியதான பகவான், மிகவும் சிறியவனான ஜீவனிடத்தில் மிகச்சீலத்தோடு வந்து கலந்து பழகுகிறான்

**பத்துடை அடியவர்க்கு எளியவன் * பிறர்களுக்கு அரிய**
**வித்தகன்* மலர்மகள் விரும்பும் * நம் அரும் பெற லடிகள்***
**மத்துறுகடை வெண்ணெய் * களவினில் உரவிடையாப்புண்டு***
**எத்திறம் உரலினோடு * இணைந்திருந்து ஏங்கிய எளிவே.**
**நம்மாழ்வார் திருவாய்மொழி 1-3-1**

என்று நம்மாழ்வார் திருவாய்மொழியில் என்று சாதித்தபடி. அவனைக் கண்டு மகிழ ஆசைப்படும் பக்தர்களுக்கு எளியவன். பரத்வத்தை அனுஸந்தித்தபோது இருந்த தெளிவு மறைந்து எளிமை (ஸௌலப்யம்) பற்றி சொல்லுங்கால் மோஹம் ஆட்கொண்டது. அப்படிப்பட்ட பக்தர்கள் அவனுடைய அருளைத்தான் எதிர்பார்த்து அவனுடைய எளிமையில் மோஹித்து இருப்பார்கள்.

**ஶீலம் ஹி நாம மஹதோ மந்தை: ஸஹ**
**நீரந்த்ரேண ஸம்ஶ்லேஷ ஸ்வ பா$_4$வ த்வம்**
**தஸ்ய ச ப்ரயோஜந அந்தரௌ பயி கத்வா**
**பா$_4$வாத் ஸௌஶீல்யம்**
ஸுதர்ஸன பட்டர், ஶ்ருத ப்ரகாஸிகை

என்று ஶ்ருத ப்ரகாஸிகையில் ஸுதர்ஸன பட்டர் ஶரணாகதி கத்யத்திற்கு வியாக்கியானம் செய்யும்போது ஸௌஶீல்யம் என்ற குணத்தை பற்றி சொல்கிறார். ஶீலம் என்பது பெரியவன் தாழ்ந்தவர்களுடன் ஒன்று சேர்ந்து ஒரே நீராக கலந்து பரிமாறும் நீர்மை. அப்படி பரிமாறும்போது வேறு பலன் கருதாமை ஸௌஶீல்யம்.

**நிஷாத$_3$ ராஜ ஸௌஹ்ருத$_3$ ஸூசித ஸௌஶீல்ய ஸாக$_3$ரா!**
**ஸ்வாமி தேசிகன் ஸ்ரீமஹாவீரவைபவம்**

என்று ஸ்வாமி தேசிகன் ஸ்ரீமஹாவீர வைபவத்தில் ஸாதித்தபடி, வேடர் தலைவனான குஹப் பெருமானிடம் எல்லையற்ற நட்பு கொண்டாய், நீயோ சக்கரவர்த்தி திருமகன். அவனோ ஒரு காட்டில் வசிக்கும் வேடன். உங்கள் இருவருக்கும் எப்படி நட்பு உண்டாயிற்று? உன்னுடைய நீர்மையினால் அன்றோ? என வியக்கிறார். பகவானின் நீர்மை அவனிடம் மட்டுமா?

**நிஷாதா₃நாம் நேதா கபிகுலபதி: காபி ஶப₃ரீ**
**குசேல: குப்ஜா ஸா வ்ரஜ யுவதயோ மால்யக்ருதி₃தி**
**அமீஷாம் நிம் நத்வம் வ்ருஷ கி₃ரிபதே ருந்நதி மபி**
**ப்ரபூ₄தை: ஸ்ரோதோபி₄: ப்ரஸப₄ மநுகம்பே ஸமயஸி**

**ஸ்வாமி தேசிகன் தயாஸதகம் 65**

**(நிஷாதா₃நாம் நேதா)** வேடர்கள் தலைவன் குஹன்
**(கபிகுலபதி)** குரங்குகளுக்கு தலைவன் சுக்ரீவன்
**(காபி ஶப₃ரீ)** யாரோ ஒருத்தி, சபர ஜாதியை சேர்ந்த வேடுவச்சி சபரீ
**(குசேல;)** கிழிந்த ஆடையையே அணிந்த குசேலன்
**(ஸா குப்ஜா)** கம்ஸனுக்கு சந்தனம் அரைத்து தந்த அந்த கூனி
**(வ்ரஜ யுவதய:)** ஆயர் குலத்து பெண்கள்
**(மால்யக்ருதி₃தி)** கிருஷ்ணனுக்கு மாலை கட்டித் தந்த மாலாகாரர்,
**(அமீஷாம் நிம் நத்வம்)** இவர்களுடைய தாழ்ச்சியும்
**(வ்ருஷ கி₃ரிபதே)** திருவேங்கடமுடையானே!
**(உந்நதிம் அபி)** உன்னுடைய மேன்மையும்
**(ப்ரபூ₄தை: ஸ்ரோதோபி₄:)** பெரிய வெள்ளங்களால்
**(ப்ரஸப₄ம் அநுகம்பே ஸமயஸி)** வலிமையாக உன் கருணையால் சமம் ஆக்குகிறாய்

ஸௌஸீல்ய குணம் கடலைப் போன்றது. இவர்களுடன் உன்னுடைய தயா என்ற குணத்தினால், ஸௌசீல்யமாக கலந்து பரிமாறினாய்."

"எப்படி தண்ணிர் வெள்ளம் மேடு பள்ளங்களை சமமாக்குமோ அதைப்போல் தயை என்கிற குணம் உன்னிடத்தில் ஸௌஸீல்யத்தை உண்டாக்குகிறது" என்றார்.

**தரணி ஸூத ஶரணாக₃தி பரதந்த்ரீக்ருத ஸ்வாதந்த்ர்ய!**

**ஸ்வாமி தேசிகன் ஸ்ரீமஹாவீரவைபவம்**

என்று ஸ்ரீமஹாவீரவைபவத்தில் ஸ்வாமி தேசிகன் ஸாதிக்கிறார். " ஹே ராமா! சூரியன் புத்திரனான சுக்ரீவன் செய்த ஶரணாகதியால் உன்னுடைய

ஸ்வதந்த்ரத்தை விட்டு அவன் இட்ட வழக்காய் நின்றாயே, உன் அடியவர்களிடம் அவ்வளவு அன்பா," என்றார்.

**கோலமே! தாமரைக் கண்ணதோர் * அஞ்சன**
**நீலமே * நின்று எனதாவியை * ஈர்கின்ற**
**சீலமே * சென்று செல்லாதன * முன்நிலாம்**
**காலமே * உன்னை என்னாள் கண்டு கொள்வனே?**
நம்மாழ்வார் திருவாய்மொழி 3-8-8

என்று நம்மாழ்வார் திருவாய்மொழியில் "என் உயிரை ஈர்த்து, மயக்கி, வதைக்கும் உன்னுடைய சீல குணமே," என்று போற்றுகிறார்.

**ஏழை ஏதலன் கீழ்மகன் என்னாது இரங்கி ***
**மற்றவற்கு இன்னருள் சுரந்து ***
திருமங்கை ஆழ்வார், பெரிய திருமொழி 5-8-1

என்றார் திருமங்கை ஆழ்வார், பெரிய திருமொழியில் அப்படி போற்றும்படியான ஸௌஸீல்ய குணம் உடையவன் பகவான் என்றார்.

## 7-18 நாராயணா என்றால் ஸௌலப்யம்

திருவேங்கடத்தானே என்ற பதம் ஸௌலப்யத்தை காட்டுகிறது. ஸௌலப்யம் என்பது எளிமை நிலைக்கு எல்லை. முன்பே சொன்னோம் ஸௌலப்யம் என்றால் எளிதில் அகப்படுதல் என்று.

ஸர்வ உத்தமனாக இருக்கும் பகவான், எல்லோருக்கும் கிடைக்கும்படி திவ்ய ரூபங்களை உடையவனாக இருத்தல். பரத்வத்தில் இருக்கும் எம்பெருமான் எண்ணம், சொல், செயல்களுக்கு (thought, word and deed) அப்பாற்பட்டவன். அவனை அடைவது கஷ்டம். அர்ச்சாவதாரத்தில் இருக்கும் பகவானை அடைவது மிகவும் சுலபம். அர்ச்சாவதரா மூர்த்தி நின்று, கிடந்து, இருந்து நம்முடைய மனத்தை கொள்ளை கொள்ளும் எம்பெருமான்.

**பிறந்த வாறும் வளர்ந்த வாறும் * பெரிய பாரதம் கைசெய்து *ஐவர்க்குத் திறங்கள் காட்டியிட்டுச் * செய்து போன மாயங்களும் *
நிறந்தனூடு புக்கு எனதாவியை * நின்றுநின்று உருக்கி உண்கிற * இச் சிறந்த வான்சுடரே! * உன்னை என்றுகொல் சேர்வதுவே**
நம்மாழ்வார், திருவாய்மொழி 5-10-1

என்று திருவாய்மொழியில் பகவான் கிருஷ்ணனாய் அருகிலிருந்து செய்த காரியங்களை காண்பிக்கிறார். இந்த ஸௌலப்யத்தை பகவான் யசோதையிடம் கட்டுப்பட்டது, அடிபட்டது, பஞ்சவர்க்கு தூது போனது, பார்த்தனுக்கு தேர் ஒட்டி ஸாரதியாக நின்றது, கீதோபதேசம் பண்ணியது என்றெல்லாம் ஆழ்வார் விவரிக்கிறார்.

## 7-19 திரு நாரணன் நற்குணங்கள்

பகவானுடைய குணங்கள் எல்லாமே நற்குணங்களே. பகவத் ராமானுஜ ஸித்தாந்தத்திலே ஸகுணப் பிரம்மம்தான். நிர்குணம் என்று சொல்லும்போது, பகவானுக்கு கெட்ட குணங்கள், தீய குணங்கள் கிடையாது என்கிறபடி.

**இங்கு குண வர்க்கம் என்கிறது -
காருண்ய ஸௌலப்ய ஸௌஸீல்ய வாத்ஸல்ய க்ருதஜ்ஞாதிகளும், ஸர்வஜ்ஞத்வ ஸர்வ சக்தித்வ, ஸத்ய ஸங்கல்பத்வ, பரிபூர்ணத்வ, பரம உதாரத்வாதிகளும்**
ஸ்வாமி தேசிகன், ஸார ஸாரம்

என்று ஸாரஸாரத்தில் ஸ்வாமி தேசிகன் நாரயண பதத்திற்கு பத்து குணங்களை ஸாதித்திருக்கிறார்.

பகவானுடைய திருக்கல்யாண குணங்களைப் பார்க்கும்போது இவை இத்தனை இருக்க பிராட்டியின் சிபாரிசு, பரிந்துரை அவசியமில்லை என்று தோன்றும்படி அற்புதமாய் உள்ளவை. இந்த குணங்களை ஒவ்வொன்றாகப் பார்ப்போம்.

## 7-20 காருண்யம் (கருணை, தயை) {Mercy, Feeling others' grief as theirs}

**ஒரு வியாஜத்தை முன்னிட்டு நம்முடைய துக்கங்களைக்
கழிகைக்குத் தானே நினைத்திருக்கையாலே**
ஸ்வாமி தேசிகன், ஸார ஸாரம்

என்றார் ஸ்வாமி தேசிகன் ஸார ஸாரத்தில். பகவான் காத்துக் கொண்டிருக்கிறான் ஏதாவது ஒரு சிறு காரணம் (வ்யாஜம்) இருந்தால். போதும் இந்த சேதனனை மன்னித்து அவனுடைய துன்பங்களை எல்லாம் போக்குவதற்கு.

பரந்யாஸம் என்பது மிகச் சிறிய செயல். அதை செய்யும் சேதனனிடத்து மிக்க கருணை கொண்டு, துன்பங்களை களைந்து அவனை தடுத்து ஆட் கொள்கிறான். கிருஷ்ணன் தயிர் பானையில் கைவிட்டு ஏதாவது இருக்கிறதா? என்று தேடுவதைப்போல் சேதனனிடத்து ப்ரபத்தி என்கிற அல்ப வியாஜத்தை தேடுகிறான்.

**அம்மா ஆழிப்பிரான் * அவன் எவ்விடத்துதான் யான் ஆர்? *
எம்மா பாவியர்க்கும் * விதிவாய்க்கின்று வாய்க்கும் கண்டீர் *
'கைம்மா துன்பொழித்தாய் என்று * கைதலை பூசலிட்டே *
மெய்ம்மாலாய் ஒழிந்தேன் * எம்பிரானும் என் மேலானே**
நம்மாழ்வார், திருவாய்மொழி 5-1-7

என்று திருவாய்மொழியில் நம்மாழ்வார் "எத்தனை பெரிய பாபியானாலும் விதி விடாது. விதியை அவன் தவிர்க்க முடியாது என்பார்கள். ஆனால் அந்த விதியையே மாற்றக் கூடிய எம்பெருமானின் கருணையோ யாருக்கு வேண்டுமாலும் கிடைக்கும். தெரிந்து கொள்ளுங்கள் என் அனுபவத்திலிருந்து" என்கிறார்.

"எத்தனை பாபங்கள் செய்திருந்தாலும் சரி, பகவத் க்ருபை நுழைந்தால் போதும் அவன் அருளிலிருந்து எதுவும் தப்ப முடியாது. மேல் எழுந்தவாரியாக

நடித்த எனக்கே அருள் செய்து விட்டான். என் நடிப்பை உண்மை என நம்பி என்னை கரையேற்றி விட்டான். எல்லாம் அறிந்த அவன் என் போலி பக்திக்கே இரங்கினான் என்றால் அவன் கருணை என்னவென்று சொல்வது?

நீங்களும் அவனிடம் போய் உங்கள் பாபங்களை சொல்லி, அவன் திருவடிகளை அடைக்கலம் அடையுங்கள். பகவான் காத்துக் கொண்டு இருக்கிறான்" என்றார் ஆழ்வார். இங்கு sorry, மன்னித்துவிடு, இனிமேல் செய்ய மாட்டேன் என்று சேதனன் சொல்வது பரந்யாஸத்தை காட்டுகிறது.

## 7-21 ஸௌலப்யம் [Easily Accessible]

**ஸௌலப்யம் என்பது அகலாதபடி அபேக்ஷிதம் தந்து அருளுவது**
ஸ்வாமி தேசிகன், ஸார ஸாரம்

பரபத நாதனாய் எல்லோரையும் விட மேம்பட்டவன், தன் இடத்தை விட்டு, கீழே இறங்கி, பண்டிதன் முதல் பாமரன் வரை அனைவரும் தம் ஊனக் கண்களால் அவனை அனுபவிக்க தன்னையே தந்தவன்.

இது சேதனர்கள் தாம் தாழ்ந்தவர்கள் என்று அறிந்தாலும், பகவான் நிச்சயம் பலனைத் தருவான் என்ற நம்பிக்கைக்கு சாதனம்.

**சேணுயர் வானத்திருக்கும் * தேவபிரான் தன்னை ***
**ஆணை என் தோழீ * உலகுதோறு அலர் தூற்றி ***
நம்மாழ்வார், திருவாய்மொழி 5-3-9

என்று திருவாய்மொழியில் நம்மாழ்வார். "விண்ணிலிருக்கும் அவன், நம் கண்ணீர் துடைப்பானோ" என்று கவலையில்லை. அவனே அருகில் வந்து எல்லாம் செய்கிறான்" என்றபடி

**ஏரார்ந்த கண்ணி யசோதை இளஞ்சிங்கம்**
**நாராயணனே நமக்கே பறை தருவான்**

ஆண்டாள், திருப்பாவை 1

என்று திருப்பாவையில் ஆண்டாளும் யசோதையின் கண்களை புகழ்கிறாள். யசோதையின் கண்களைப் போல் பாக்கியம் செய்தவை உலகத்தில் ஒன்றுமில்லை, ஏன் என்றால், பகவானுடைய ஸௌலப்ய குணத்தால் அருகில் வந்து பல லீலைகளைச் செய்திருக்கிறான். அவை அவ்வளவையும் கண்டு மகிழ்ந்த கண்கள் என்றாள்.

இதை ஏற்கனவே நம்மாழ்வார் ஸாதித்த நான்கு குணங்களில் கண்டோம்.

## 7-22 ஸௌஸீல்யம் [Excellence in Disposition]

தன் உயர்வைக் காணாது தாழ்ந்தவனுடன் சரி சமமாக பழகுதல் ஸௌஸீல்யம்

ஸௌஸீல்யம் அகலாமைக்கு உறுப்பாம்
ஸ்வாமி தேசிகன், ஸார ஸாரம்

மேன்மையில் மிக்கவனிடத்து அவன் மேன்மையைக் கண்டு தாழ்ந்தவர், அணுகாது விலகி போகாமைக்கு சாதனம். அம் மேன்மையுடையோன், கீழே இறங்கி தாழ்ந்தவனுடன் சரி சமமாக பழுகுவதாலே.

அம்மான் ஆழிப்பிரான் * அவன் எவ்விடத்தான்? யான் ஆர்? *
எம்மா பாவியர்க்கும் * விதி வாய்கின்று வாய்க்கும் கண்டீர் *
"கைம்மா துன்பு ஒழித்தாய்" என்று * கைதலை பூசலிட்டே *
மெய்ம்மாலாய் ஒழிந்தேன் எம்பிரானும் என் மேலவனே
நம்மாழ்வார், திருவாய்மொழி 5-1-7

என்று நம்மாழ்வார் திருவாய்மொழியில் ஸாதித்தார்.

சக்கராயுதத்தை கையில் ஏந்தி நித்ய முக்தர்களுக்கு காட்சி தரும் அவன் எல்லாம் வல்லவன். அவன் எங்கே உள்ளவன்? இடத்திலா ? குணத்திலா? பெருமையிலா? செல்வத்திலா? அப்பாலுக்கு அப்பாலாய் அணுக முடியாதபடி

உள்ளவன். நானோ நித்ய ஸம்ஸாரியாய் பாபங்களே செய்து கொண்டு இருப்பவன். மிகத் தாழ்ந்த எனக்கே பகவான் அருள் செய்தான் என்றால் எத்தனை மஹா பாபியானாலும் அவனுக்கு பகவான் கிருபை கிடைக்கும் என்பது நிச்சயம்.

அவன் எவ்விடத்தான் என்று கையை உயரே தூக்கி காண்பித்து யான் ஆர் என்று கீழே காண்பிக்கும் முறை. நாம் கீழே, அவன் மேலே என்று பயப்பட வேண்டாம் என்பதை காட்டுகிறது.

## 7-23 வாத்ஸல்யம்

வாத்ஸல்யம் என்பது நெருங்கியவரின் குற்றங்களை பொருட்படுத்தாமை (ignoring the flaws of the intimate ones)

> **நீசனேன் நிறைவொன்றுமிலேன்" என்று ஸ்வதோஷத்தைக் (self) கண்டு அவன் அநாதரிக்கிறான் (doesn't support) என்று வெருவாமைக்கு உறுப்பாம்**
>
> **ஸ்வாமி தேசிகன், ஸார ஸாரம்**

இதை ஏற்கனவே நம்மாழ்வார் ஸாதித்த நான்கு குணங்களில் கண்டோம்.

## 7-24 க்ருதஜ்ஞத்வம்

> **க்ருதஜ்ஞத்வம் என்பது நன்றி காட்டல் (expressing the gratitude).**

பகவான் மிக்க நன்றி உடையவன். தன் பக்தர்கள் என்றோ, ஏதோ ஒரு காரணத்திற்காகவோ செய்ததை ஞாபகத்தில் கொண்டு ஒன்றுக்கு பத்தாய், நூறாய், கோடியாய் திருப்பிச் செய்பவன்.

**தன் பக்கலிலே அதி லகுவாயிருப்பதோரு வ்யாஜத்தைக் கண்டாலும் இனி அவன் நம்மைக் கைவிடான் என்ற தேற்றத்துக்கு உறுப்பாம்**
ஸ்வாமி தேசிகன், ஸார ஸாரம்

சிறு நற்செயலையும் பரம உபாகாரமாக நினைப்பவன் எம்பெருமான்.

**மாதவன் என்றதே கொண்டு * என்னை இனி இப்பால் பட்டது *
யாதவங்களும் சேர்க் கொடேன் என்று * என்னுள் புகுந்து இருந்து *
தீதவம் கெடுக்கும் அமுதம் * செந்தாமரைக் கண் குன்றம *
கோது அவம் இல் என் கன்னல் கட்டி * எம்மான் என் கோவிந்தனே**
நம்மாழ்வார் ,திருவாய்மொழி 2-7-3

என்று திருவாய்மொழியில் ஸாதிக்கிறார். நான் மாதவன் என்று சொன்னேன். மனமார சொல்லவில்லை. அதன் பொருளோ அதன் சிறப்போ, மற்ற பெயர்களைவிட உயர்வோ அறியாமல் சொன்னேன். சொன்னதே யாத்ரிச்சிகமாக, எதிர்பாரதவிதமாய். அதற்கு பகவான், இனிமேல் என்னிடம் எந்த குற்றமும் சேராதபடி ஸங்கல்பித்து, என்னுள் புகுந்து நின்றான். எனக்கு எந்த தீங்கும் வராதபடி அருள் செய்தான்.

**திருமாலிருஞ்சோலை மலை * என்றேன் என்ன *
திருமால் வந்து * என் நெஞ்சு நிறையப் புகுந்தான் ***
நம்மாழ்வார் ,திருவாய்மொழி 10-8-1

என்று திருவாய்மொழியில் திருமாலிருஞ்சோலை மலை என்றேன். அவ்வளவுதான். மலை என்று ஒரு பெயரால் சொன்னேன். அதற்கு மேலே ஒரு பிரதிபக்தி, ஈடுபாடு ஒன்றும் கிடையாது. வெறும் சொல். அதைக் கேட்டு அவன் மனமுருகினான்.

வேடிக்கையாக சொல்வர். ஒருவன் ஒன்று, இரண்டு, மூன்று என்று வரிசையாக எண்ண ஆரம்பித்தான். பத்து என்று சொன்னவுடன் பகாவான் பத்து என்றால், பற்று, இவன் பக்தன். தன்னைப் பற்றுவதாக சொல்கிறான் என்று ஓடி வருவானாம்.

ஒருவன், மாட்டை விரட்ட தடி எடுத்துக் கொண்டு அதன் பின் ஒடினான் தனக்கே தெரியாமல் மாட்டின் பின் செல்லும்போது கோவில் ஒன்றை ப்ரதிக்ஷணமாய் சென்றான். பகவான் அவன் தன்னை வந்து வணங்கினானே என்று அகமகிழ்வானாம்.

## 7-25 ஸர்வஜ்ஞத்வம் (Omniscience)

எல்லாவற்றையும் ஒரே காலத்தில், எப்பொழுதும், தானே, பிற உதவின்றி, கண் கூடாக காண்பது

**ஆஸ்ரிதருடைய இஷ்ட ப்ராப்தி அநிஷ்ட நிவ்ருத்தி உபாயங்களையும் விரோதிகளையும் அறிகைக்கும் உறுப்பாம்**

**நல்லார் அறிவீர் தீயார் அறிவீர் * நமக்கு இவ்வுலகத்து *
எல்லாம் அறிவீர் ஈதே அறியீர் * இந்தளூரீரே!**
**திருமங்கையாழ்வார், பெரிய ,திருமொழி 4-9-6**

என்று பெரிய திருமொழியில் திருமங்கை மன்னன் ஏக காலத்தில், எல்லாவற்றையும் நேரில் காண்கையைக் காட்டினார்.

பகவான் நன்மை எது, தீமை எது என்று ஒரே காலத்தில் பல இடங்களிலும் கண்டு அறியும் வல்லமை உடையவன். அதனால் சேதனன் அவனை உறுதியுடன் “அவன் பார்த்து செய்வான் நமக்கு” என்று அணுக முடிகிறது.

## 7-26 ஸர்வசக்தித்வம் (Power, Energy)

எதையும், எல்லாவற்றையும் செய்யும் சக்தி உடைமை

**அஸ்ரிதர்களுடைய மநோரதங்களை கடிப்பிக்கைக்கு உறுப்பாம்**

prapatti.com

பகவான் எதையும் எப்பொழுதும் செய்வதற்கு உரிய ஆற்றல் படைத்தவன். அதனால்தான் சேதனன் பயப்படாமல் அவனை நெருங்க முடிகிறது. ஒரே க்ஷணத்தில் அந்த சேதனனைத் தூக்கி பரமபதத்தில் கொண்டுபோய் வைக்கும் திறனுடையவன் என்பதால். பிறரால் செய்ய முடியாத காரியங்களை செய்ய சக்தி இவன் ஒருவனுக்குத்தான்.

**வேட்கை எலாம் விடுத்து * எனை உன் திருவடியே சுமந்து உழல ***
**கூட்டரிய திருவடிக்கள் * கூட்டினை நான் கண்டேனே**
நம்மாழ்வார் ,திருவாய்மொழி 4-9-9

பகவானே உலக ஆசைகளை நீக்கி, உன் திருவடிகளை பற்றி, அதைச் சுமக்கும் பாக்யத்தை தந்து அருளினாய். உம் திருவடிகளை எவராலும் தங்கள் முயற்சியால் அடைய முடியாது. உம் அருள் ஒன்றே அதைக் காட்டிக் கொடுக்கும். உம் அருள் ஒன்றே அதனிடம் சேர்த்துவிக்கும்.

## 7-27 ஸத்யஸங்கல்பத்வம் [Benovalence on His dtermination]

மாறாத, தடையற்ற எண்ணத்தை உடையவன்.

**மோக்ஷயிஷ்யாமி என்று முடிவு செய்கைக்கு உறுப்பாம்**
**தன் ஸங்கல்பத்தை தானே தடை செய்யமுடியாமை**

பகவான் (once decided nothing can change His mind) ஒரு தடவை ஸங்கல்பித்து விட்டான் என்றால் அதை யாராலும், எந்த காலத்தும், ஏன் அவனாலேயே மாற்ற முடியாது.

அதனால்தான் ப்ரபத்தி செய்தவர்கள் மஹாவிசுவாசத்துடன் இருக்கிறார்கள் மோக்ஷம் நிச்சயம் என்று.

**சன்ம சன்மாந்தரம் காத்து * அடியார்களைக் கொண்டு போய் ***

**தன்மை பெறுத்தித் தன் தாளிணைக் கீழ் * கொள்ளும் அப்பனை ***
நம்மாழ்வார் ,திருவாய்மொழி 3-7-7

“என் அப்பனாகிற எம்பெருமான், தன் அடியவரின் பிறவி நோய்களை தீர்க்கிறான். அவர்களை மறு பிறவி எடுக்கா வண்ணம் அருள் செய்து பரமபதம் கொண்டு சென்று தன் அடிக்கீழ் குற்றேவல் செய்யும் பேற்றை அளிக்கிறான்,” என்றார்.

இது அவன் ஸங்கல்பத்தால் அன்றி மற்று ஒன்றால் முடியமோ?

## 7-28 பரிபூர்ணத்வம் {Complete, Fullness}

நினைத்ததை குறையின்றி, நினைத்த மாத்திரத்திலே பெறுகை. பகவான் நினைத்தால் பெற முடியாத பொருள் ஒன்றும் இல்லை.

**செல்வ நாரணன் என்ற * சொல் கேட்டலும் ***
**மல்கும் கண்பனி * நாடுவன் மாயமே ***
**அல்லு நன்பகலும் * இடைவீடின்றி ***
**நல்கி என்னை விடான் * நம்பி நம்பியே**
நம்மாழ்வார் ,திருவாய்மொழி 1-10-8

என்று திருவாய்மொழியில் நம்மாழ்வாரை விட்டு பகவான் சிறிது நகர்ந்தார். ஒரு பெரிய காரியத்தை செய்ததுபோல் “அப்பாடி ஸ்ரீமந்நாராயணா” என்றார். உடனே பகவான் நினைவு வந்து விட்டது. பகவானைத் தேட ஆரம்பித்தார் அவனுடைய பெயர் செய்த மாயம். என்னோடு ஒன்றாகிவிட்டான் நானாவது அவனைவிட்டு விட்டு தேடினேன். அவன் அப்படியில்லை. என்னை விடாது தேடிப் பிடித்து விட்டான் என்றார்.

**இத்யாதிகளிற்படியே பாவ தாரதம்யம்** (மனோ நிலை) **பார்க்கும் அளவேயானாலும் நாம் செய்யும் கிஞ்சித்காரத்தில்** (அல்பமான செயலில்) **கௌரவ லாகவங்களைப் பாராமைக்கு உறுப்பாம்**
ஸ்வாமி தேசிகன், ஸாரஸாரம்

பகவான் சேதனனின் உள்ளத்தை காண்கிறானே தவிர அவன் ஸமர்பிக்கும் பொருள்களின் ஏற்ற-தாழ்வுகள், நிறைவு-குறைவு இவற்றை பார்ப்பதில்லை.

## 7-29 பரம உதாரத்வம் (Feels as if He is receiving while giving)

மஹா கொடையாளி என்னும் குணம். வாரி வழங்கும் வள்ளல் என்னும் தன்மை.

**அல்பமான ஆத்ம அத்மீயங்களைச் சோர ஆநீத நூபுர நியாத்தாலே ஸமர்ப்பித்தவர்களுக்குத் தான்**
எனக்கே தன்னைத் தந்த கற்பகம்
**என்கிறபடியே அநந்தமான ஆத்ம ஆத்மீயங்களை வழக்குகைக்கு உறுப்பாம்.**
ஸ்வாமி தேசிகன், ஸாரஸாரம்

**பற்பநாபன் உயர்வற உயரும் * பெருந்திறலோன்**
**எற்பரன் என்னையாக்கிக் கொண்டு * எனக்கே தன்னைத் தந்த**
**கற்பகம் * என்னமுதம் கார்முகில் போலும் * வேங்கட நல்**
**வெற்பன் * விசும்போர்பிரான் * எந்தை தாமோதரனே**
நம்மாழ்வார் ,திருவாய்மொழி 2-7-11

என்கிறபடியே அநந்தமான ஆத்ம ஆத்மீயங்களை வழங்குகைக்கு உறுப்பாம் என்று திருவாய்மொழியில் தான் செய்தது போதாது என்று கொடுக்க காத்திருத்தல் என்ற குணம்.

பகவான் கொடை வள்ளல். ஒரு சிறிய, அல்பமான காரியத்தை செய்தாலும் அதை பெரிதாக கொண்டாடி பல மடங்காய் திருப்பிச் செய்பவன்.

**வண்மை இல்லை ஓர் வறுமை இன்மையால்**
**திண்மை இல்லை ஓர் செறுநர் இன்மையால்**


prapatti dot com

**உண்மை இல்லை பொய் உரை இலாமையால்**
**வெண்மை இல்லை பல கேள்வி மேவலால்**

கம்பன், ராமாயணம்

என்றான் கம்பன். அயோத்தியில் கொடுப்பவர்களே இல்லையாம். ஏன் என்றால் வாங்கி கொள்ள யாராவது இருந்தால்தானே! மக்களே இப்படி பரம் உதாரர் என்றால் பகவானை கேட்கவும் வேண்டுமா?

## 7-30 மார்த்தவ, ஆர்ஜவங்கள் (softness/compassion, straight forwardness)

**மார்த்த₃வ ஆர்ஜவாதிகளுக்கும் இப்படியே உபயோகம் கண்டு கொள்வது**

ஸ்வாமி தேசிகன், ஸாரஸாரம்

**மார்த்த₃வம் - ஆஶ்ரித விஶ்லேஷம் பொறுக்க மாட்டாத தன்மை**
**ஆர்ஜவம் - ஆஶ்ரித ஸம்ஶ்லேஷத்தில் தன்னுடைய மநோ வாக் காயங்கள் ஏக ரூபமாய் இருக்கை. அதாவது அவர்களுக்கு தன்னை நியமித்து கொடுக்கை**

பெரியவாச்சான் பிள்ளை, கத்ய வியாக்கியானம்

அடியவர்கள் தன்னை விட்டு பிரிவதை பொறுக்காத தன்மை மார்த்த்வம். அடியவர்களுக்கு உள்ளம் உரை செயலால் எப்போதும் தன் வசப்படுத்திஇருக்கும் தன்மை ஆர்ஜவம்.

## 7-31 ஸ்தைர்ய, தைர்யாதிகள் [Steadiness and never giving up on His devotees, Keeping up promises]

**ஸ்தைர்ய, தைர்யாதிகளுக்கும் இப்படியே உபயோகம் கண்டு கொள்வது**

ஸ்வாமி தேசிகன், ஸாரஸாரம்



prapatti dot com

தனக்கு எத்தனை இடர் நேரிடினும் தன் அடியவரை நிச்சயம் காப்பேன் என்றான் ராமன். இந்த உயர்ந்த தன்மை ஸ்தைர்யம். எல்லோரும் விபீஷணனை சந்தேகித்து கடும் சொல் கூறும்போதும் அவனை ரக்ஷிப்பேன் என்றான் ராமன்.

இப்படி அடியவரை ரக்ஷிப்பதில் திட விரதம் பூண்டு, உறுதியான மனத்தை உடையும் குணம் தைர்யம்.

## 7-32 குணங்களின் தொகுப்பு

இப்படிபட்ட பகவானின் குணங்கள் எல்லாமே நமக்குத்தான். தவிர, ப்ரம்மத்தின் **ஸ்வரூப நிரூபக குணங்கள்**, மோக்ஷோபாயமாக இருப்பவை என்பது. மற்ற குணங்கள் எல்லாம் **நிரூபித ஸ்வரூப விசேஷணங்கள்.**

**ஸத்யம்** (Truth, firm), **ஜ்ஞானம்** (wisdom, knowledge), **அநந்தம்** (unlimited by time, space and matter), **ஆநந்தம்** (Bliss, ever joy), **அமலத்வம்** (Flawless, without any blemish), **ஸ்ரீயப்பதிவம்** (Consort of Sri Mahalakshmi all the time) இவற்றைக் கொண்டுதான் ப்ரஹ்மத்தின் ஸ்வரூபத்தை மற்றவைகளைவிட வேறாக தெரிந்து கொள்ளலாம் நிரூபகம் என்றால் ப்ரமாணம், (proof)

> **காரணமாய் இறையாய்க் * கதியாய் அமரும் பதியாய் ***
> **ஆரணம் ஓதும் அனைத்து உறவாய் * அகலா உயிராய்ச் ***
> **சீர் அணியும் சுடராய்ச் * செறிந்து எங்கும் திகழ்ந்து நின்ற ***
> **நாரணனார் நமக்காய் நல்கி * நாம் தொழ நின்றனரே**
> ஸ்வாமி தேசிகன், துவயச் சுருக்கு 4

ஸ்வாமி தேசிகன், துவயச்சுருக்கில் அற்புதமாக விளக்குகிறார். உலகத்திற்கு காரணமாய், ஆள்பவராய், உபாயமாய், பலனாய், ஸர்வ வஸ்துக்களுக்கும் ஆதாரமாய் வேதங்களால் கூறப்படும் ஸகல்விதமான பந்துக்களாகவும்,

விட்டுப்பிரியாத உறவாகவும் திருக்கல்யாண குணங்களுக்கும் அழகு செய்யும் ஜ்ஞான ஸவரூபராய் என்கும் வியாபித்து ப்ரகாசிக்கின்ற ஸ்ரீமந் நாராயணார் நமக்காக க்ருபை செய்து நாம் சரணம் அடையும்படி நிலையாய் நின்றனர்.

## 7-33 ஆதியாய்

இப்படி நாராயண பதத்திற்கு உண்டான திருக்கல்யாண குணங்களை அறிந்த பின் இப்பொழுது நம்முடைய பாடலுக்கு வருவோம். இதில் முதல் பதம் ஆதியாய்.

நாராயணனே பரம் பொருள் என்பதை “ஆதியாய்” என்பது குறிக்கிறது

**பேச நின்ற சிவனுக்கும் பிரமன் தனக்கும் பிறர்க்கும்**
**நாயகனவனே கபால நன் மோக்கத்து கண்டு கொண்மின்**
நம்மாழ்வார் ,திருவாய்மொழி 4-10-4

திருவாய்மொழியில் நம்மாழ்வார் “ஒன்றும் தேவும்” என்ற பதிகத்தில் இந்த கபால மோக்ஷத்தை பார்த்தால் போதும், யார் பர தேவதை என்று விளங்கும் என்றார்.

**தத்ர நாரயண: ஸ்ரீமாந் மயா பிக்ஷாம் ப்ரயாசித:**
மாத்ஸ்ய புராணம்

என்று மாத்ஸ்ய புராணத்தில். சிவபெருமானே பார்வதியிடம் தான் நாராயணனிடம் பிக்ஷைக்கு போனதை சொல்கிறார்,

**ஆதியான வானவர்க்கும் * அண்டமாய அப்புறத்து ***
**ஆதியான வானவர்க்கும் * ஆதியான ஆதிநீ ***
**ஆதியான வான வாணர் * அந்த காலம் நீயுரைத்தி ***
**ஆதியான கால நின்னை * யாவர் காண வல்லீரே?**
திருமழிசைப்பிரான், திருச்சந்த விருத்தம் 8

திருச்சந்த விருத்தத்தில், திருமழிசைப்பிரான் ஆதி என்பதை விளக்குகிறார். உலகத்தின் ஸ்ருஷ்டி, ஸ்திதி, ஸம்ஹாரங்களுக்கு கர்த்தாக்களான தேவதைகளுக்கும் (ஸ்ருஷ்டி - ப்ரஹ்மா, தஸப்ரஜாபதி, ஸப்த ரிஷி, ஆதித்யர்கள்; ஸ்திதி - இந்திரன் பதினான்கு மனுக்கள்; ஸம்ஹாரம் - ருத்ரன், அக்நி, யமன்), அண்டம் என்கிற இந்த லீலாவிபூதிக்கும் அப்பாற்பட்டவன்

எல்லாவற்றிக்கும் முதல் நீயே என்றார். அப்படி ஆதி மூலமே என்று கஜேந்திராழ்வான் கூக்குரலிட்ட மாதிரி.

மைத்ரேயர் சிஷ்யர். எவ்வளவு அண்டங்கள் இருக்கின்றன என்று தன் ஆசாரியரான பராசரரிடம் கேட்டார். அவர் சொல்கிறார், **"அண்டாந்து ஸஹஸ்ராநாம் கோடி கோடி சதாநி ச"** என்று. ஆயிரக்கணக்கான அண்டங்கள் கூட்டம் நூறு, நூறு கணக்கில் உள்ளது எனபது போல்.

## 7-34 உடலில் உயிராய்

உடலில் உயிராய் என்பது பகவான் ஸர்வ பொருள்களுக்கும் அந்தராத்மாவாய் அவற்றுள் நின்று இயக்குகிறான்.

> **உடல்மிசை உயிர் என கரந்து எங்கும் பரந்துளன்**
>
> நம்மாழ்வார், திருவாய்மொழி 1-1-7

என்ற நம்மாழ்வார் வாக்கின்படி உடலுக்குள் உயிர் இருப்பது போல ஸகல வஸ்திக்களிலும் பரவி நிற்கிறான்.

எம்பெருமானாரும் ஸ்ரீரங்க கத்யத்தில், ஆரம்பத்திலேயே

> ஸ்வாதீ$_4$ந த்ரிவித$_4$ சேதநா சேதந
> ஸ்வரூப ஸ்தி$_2$தி ப்ரவ்ருத்தி பே$_4$த$_3$ ம்
>
> பகவத் ராமானுஜர், ஸ்ரீரங்க கத்யம்

என்று அருளினார். தன் அதீனத்தின் கீழ், அதாவது தன் வசப்படி மூன்று விதமான சேதநர்கள் (பத்தர், முக்தர், நித்யர்) [bounded, liberated, and eternal souls], மூன்று விதமான அசேதனங்கள் (ப்ரகிருதி, காலம், சுத்த ஸத்வம்) [primordial matter, time and pristine purity] இவற்றின் இயற்கை நிலை, நிற்கும் தன்மை, மாறுபாடு இவற்றை எல்லாம் எம்பெருமான் செய்கிறான் என்றார்.

## 7-35 மாசிலா சோதியாய்

எம்பெருமான் எல்லாப் பொருள்களையும் தனக்கு சரீரமாகக் கொண்டு தான் அந்தராத்மாவாய் உள் இருந்து இயக்குகிறான் என்றால் உடனே ஒரு சந்தேகம் தோன்றும். இந்த சேதானா சேதனங்களிடம் உள்ள குறைகள், பாவங்கள், கர்மா, அழுக்கு போன்றவை எல்லாம் அவனை ஒட்டுமா? என்றால் கிடையாது.

எப்படி அக்நியில் பட்ட தூசி பொசுங்கி சாம்பல் ஆகுமே தவிர அது அக்நிக்கு தோஷத்தை உண்டாக்காது. அதுபோல்தான் இங்கே பகவானுக்கும்.

> க்லேஶ கர்மாத்$_3$ய ஶேஷ தோ$_3$ஷ அஸம்ஸ்ப்ருஷ்டம்
>
> பகவத் ராமானுஜர், ஸ்ரீரங்க கத்யம்

எம்பெருமானாரும் கத்யத்தில், இந்த க்லேசங்களை உண்டாக்குவதற்கும், அவற்றை மேலும் மேலும் வளர்ப்பதற்கும் காரணமான புண்ய பாவங்களான கர்மாக்கள், அவற்றின் ஸம்பந்தம் இவற்றை அறவே ஒழித்தவன். அவற்றால் பாதிக்கப்படாதவன் எம்பெருமான் என்றார்.

சாதாரணமாக உலக வழக்கில் பார்க்கும்போது சர்க்கரை பொங்கலை கையில் வாங்கி சாப்பிடுகிறோம். முடிந்தவுடன், கையில் உள்ள பிசுக்கு போவதற்கு சோப் போட்டு அலம்புகிறோம். ஆனால் அதே பிசிக்குடன் சாப்பிட்ட நாக்கை சோப் போட்டு அலம்புகிறோமோ? இல்லையே! அதுபோலத்தான் இங்கேயும்.

prapatti.com

## 7-36 பதியாய் இறையாய் கதியாய் அகலா உறவாய்

**பதியாய்** = ஆள்பவராய் (Master)
**இறையாய்** = ரக்ஷகனாய் (Protector)
**கதியாய்** = உபாயம், பலன் இரண்டுமே தானாய் (Means and Ends)
**அகலா உறவாய்** = அழிக்க முடியாத ஸம்பந்தத்தால் (eternal relation.)

## 7-37 காரணம், காரியம் - இவை இரண்டும் எம்பெருமானே

**அனைத்து காரணமாய்** = எல்லாப் பொருள்களுக்கும் ஸூக்ஷமாய் இருப்பவன் அவன். (He is the reason for the existence of everything).

**காரியமாய்** = எல்லா பொருள்களிலும் ஸ்தூலமாய் மாறுபவனும் அவனே. (He is the Performer and He is the performance)

உலகில் உள்ள பொருள்களுக்கு எல்லாம் தானே காரணம், தானே காரியம் என்னும்படி

**மைத்ரேய! ப₄க₃வச் சப்₃த₃ஸ் ஸர்வ காரண காரணே**
பராஸர ரிஷி, ஸ்ரீவிஷ்ணு புராணம்

என்று ஸ்ரீவிஷ்ணு புராணத்தில், பராஸர பகவான் சொல்லுகிறார் மைத்ரேயரே, பகவான் என்னும் சப்தம் ஸ்ர்வ காரணங்களுக்கும் காரணபூதமான ஸர்வேஸ்வரன் விஷயத்தில் சொல்லப்படுகிறது

**ஏஷமே மஹா ஶப்₃தோ₃ மைத்ரேய! ப₄க₃வாநிதி**
**பரப்ரஹ்ம பூ₄தஸ்ய வாஸு₃தே₃வஸ்ய நாந்யக₃:**
பராஸர ரிஷி, ஸ்ரீவிஷ்ணு புராணம்

விஷ்ணு புராணத்தில், பராஸர பகவான் மேலும் சொல்லுகிறார் இம்மாதிரியான பகவான் என்னும் இந்த மஹாசப்தம் ப்ரப்ரஹ்மனான வாசுதேவனுக்கே உரியது. வேறு ஒருவரையும் அது குறிக்காது

தேவரையும் அசுரரையும் * திசைகளையும் படைத்தவனே *
யாவரும் வந்து அடி வணங்க * அரங்க நகர்த் துயின்றவனே *
காவிரி நல் நதி பாயும் * கணபுரத்து என் கருமணியே *
ஏவரிவெஞ் சிலை வலவா * இராகவனே தாலேலோ
குலசேகராழ்வார் பெருமாள் ,திருமொழி 8-10

என்று குலசேகராழ்வார், பெருமாள் திருமொழியில் பகவான்தான் ஜகத் காரணத்வம் என்பதை காட்டுகிறார்.

காரணமாய் உயிராகி அனைத்தும் காக்கும் *
கருணை முகில் கமலையுடன் இலங்குமாறும் *
நாரணனார் வடிவான உயிர்கள் எல்லாம் *
நாம் என்று நல்லடிமைக்கு ஏற்குமாறும் *
தாரணி நீர் முதலான மாயை காலம் *
தனிவான் என்றிவை உருவாம் தன்மைதானும் *
கூரணிசீர் மதியுடைய குருக்கள் காட்டக் *
குறிப்புடன் நாம் கண்டவகை கூறினோமே
ஸ்வாமி தேசிகன், அமிருத ரஞ்சனி 11

ஸ்வாமி தேசிகன் அமிருத ரஞ்சனியில் ஆசார்யர்கள் காட்டிய தத்வங்களை விளக்குகிறார்.

உபாயம் - காரணம் என்று பொருள். உபேயம் கார்யம் என்ற பொருளைத் தரும்

இனி அறிந்தேன் * ஈசற்கும் நான்முகற்கும் தெய்வம் *
இனி அறிந்தேன் * எம்பெருமான் உன்னை *
இனி அறிந்தேன் * காரணன் நீ, கற்றவை நீ, கற்பவை நீ *
நற்கிரிசை நாரணன் நீ நன்கு அறிந்தேன் நான்
திருமழிசையாழ்வார், நான்முகன் திருவந்தாதி 96

என்று “எம்பெருமானே நீயே சதுர்முக ப்ரம்மாவிற்கும், சிவனுக்கும் தெய்வம். இப்போது உன் ஸ்வரூபத்தை தெரிந்து கொண்டேன். நீதான் ஜகத்ஜந்மாதி காரணம். எனக்கு தெரிந்து இதுவரைக்கும் உண்டான பொருள்கள் எல்லாம் நீ. இனிமேல் நான் தெரிந்து கொள்ளப்போகும் வஸ்துக்களும் நீ. அதனால் ஸர்வமும் நீ. காரணமிலா கருணையாலே எல்லோரையும் ரக்ஷிப்பவன் நீ என்பதை திடமாக புரிந்து கொண்டேன்” என்றார்.

## 7-38 காரணம், காரியம் - உபனிஷத்தில்

ஸாந்தோக்ய உபனிஷத்தில், 6ம் ப்ரபாடகம். **ஸத்வித்யா ப்ரதிகரணம்.** அதில் பிரபலமான **“தத்வமஸி”** வாக்யம் வருகிறது. அதற்கு வியாக்யானம் மிகவும் ரஸிக்கத்தக்கது.

உத்தானகர் என்று ரிஷி. அவருக்கு ஸ்வாதகேது என்கிற பிள்ளை. 12 வயது ஆன பிறகும் உபநயனம் ஆகவில்லை. தாத்தா குருகுலத்திற்கு அனுப்பிவைத்தார். 12 வருஷங்கள் கழித்து எல்லா சாஸ்திரதையும் குருவிடம் கற்றுக் கொண்டு வந்தான். அவன் வந்து நின்ற தோரணையைப் (style) பார்த்தவுடன் அப்பாவிற்கு புரிந்தது, இவனுக்கு ஒன்றும் தெரியாது என்று.

**யேகாச் சுருதம் ச்ருதம் பவதி**

அப்பா கேள்வி கேட்கிறார். “எதைப் படித்தால் படிக்காதது எல்லாம் தெரியும்?”

ஸ்வாதகேதுவிற்கு ஒன்றும் புரியவில்லை. பலமுறை படித்தாலே, படித்தது தெரிவதில்லை. அப்படியிருக்க, படிக்காது எப்படித் தெரியும்? அப்பாவிடம் “நீங்களே கூறுங்கள்” என்றான்.

ஒரு வஸ்து உண்டாவதற்கு **உபாதான காரணம், நிமித்த காரணம், ஸஹகாரி** (Material cause, Instrumental Cause, Accessories) என மூன்று. குயவன் பானையை மண்ணால் செய்கிறான். அந்த மண்ணே பானையாக மாறுகிறது **மண் என்பது உபாதான காரணம். குயவன் நிமித்த காரணம்.** அவன்

கொண்டுள்ள **கருவிகள் இவை ஸஹகாரி காரணம்** ஆனால் இங்கு உபாதானமும் நிமித்தமும் இரண்டும் வெவ்வேறான வஸ்துக்கள் மண் வேறு, குயவன் வேறு.

மண் உருண்டை என்பது காரண நிலை. குடம், சட்டி, பாத்திரம் இவை எல்லாம் காரிய நிலை. மண் என்ற பொருளில் மாற்றம் இல்லை. (No change in material but only in shape and structure). மண் என்னும் காரணம் காரியமாக மாறும்போது சட்டி, பானை என்ற பெயரிட்டு அழைக்கின்றோம். பானை என்பது உருவத்தில் மாறுபாடே தவிர பொருளில் மாற்றம் (Different shape and structure but it is the same material) இல்லை.

ராமனை 20 வருஷத்திற்கு முன் குழந்தையாய் பார்த்தது. அவனே இப்பொழுது வளர்ந்து இளைஞனாக இருக்கிறான். அடையாளமே தெரியவில்லையே என்கிறோம். ராமன் அதே ராமன்தான். தோற்றத்தில் மட்டும்தான் மாற்றம்.

**யதா ஸௌம்ய ஏகேன ம்ருத் பிண்டேன**

என்றது உபநிஷத். மண்ணை தெரிந்து கொணடால் அதிலிருந்து உண்டாகும் சட்டி பானை எல்லாம் தெரிந்து கொள்லலாம். தங்க உருண்டையை தெரிந்து கொண்டால் அதிலிருந்து உண்டாகும் சங்கிலி, நகை போன்றவை தெரியும் ஏக விஞ்ஞானத்தால் ஸர்வ விஞ்ஞானம்.

## 7-39 தன்னைத் தானே ஆக்கிக் கொள்ளும் ப்ரம்மம்

காரணத்தை தெரிந்தால் காரிய பொருளை அறியலாம் ஸ்ரீபாஷ்யகாரர் வேதர்த்த ஸங்க்ரஹத்தில் சுருக்கமாகக் கண்பிக்கிறார். குயவன் சட்டி பானை தான் பண்ணியது என்று சொல்லிக் கொள்ளலாம். "நானே அந்த சட்டி பானை," என்று சொல்லமுடியுமா?

ஆனால் இந்த ப்ரம்மம் அப்படி சொல்லிக் கொள்ளலாம். ஏன் என்றால் அது தன்னைத் தானே பண்ணிக் கொள்கிறது என்கிறார்.

**தத்தைக்ஷத ப₃ஹு₃ஸ்யாம் ப்ரஜாயேயேதி**
**சாந்தோக்ய உபனிஷத் 6-2-3**

என்று பிரம்மம் நான் பலவாக ஆகக் கடவேன் என்று தானே ஸங்கல்பித்துக் கொண்டது.

மஹா ப்ரளய காலத்தில் ப்ரபஞ்சம் எல்லாம் நாம ரூபமின்றி (பெயரும் உருவமும் இன்றி) அழிந்து தமஸ் என்னும் ஸூக்ஷ்ம அவஸ்தை அடைந்து பரம புருஷனான நாராயணனிடத்தில் லயித்தது

**வாசாரம்ப₄ணம் விகாரோ நாமதே₄யம்**
**ம்ருத்தி கேத்யேவ ஸத்யம்**
**சாந்தோக்ய உபனிஷத் 6-1-4**

பேச்சு வழக்கில் எல்லாம் ஸித்திப்பதற்காக, முதலில் மண் கட்டி என்னும் காரண வஸ்துவே உரு மாறுதலையும், குடம் என்னும் வேறுபாட்டையும் அடைகிறது.

ஒரு ப்ரஹ்ம கல்ப காலம் ஆனபிறகு, ஸ்ருஷ்டி காலம் வந்தது. காரணபூதனான நாராயணன் தன் ஸங்கல்ப ரூப ஞானத்தால் அண்டங்களை ஸ்ருஷ்டித்து ஏகார்ணவத்தில் (எங்கும் ஜலமாக இருக்கும் நிலையில்) தன் நாபி கமலத்தில் தங்கமயமான தாமரை உண்டாக்கி அதில் ப்ரமனை தோற்றுவித்தான்.

**யோ ப்₃ரஹ்மாணம் வித₃த₄ாதி பூர்வம்**
**யோ வை வேத₃ாம்ஶ்ச ப்ரஹிணோதி தஸ்மை: ।**
**ஶ்வேதாஸ்வர உபனிஷத் 6-19**

அப்போது பிறந்த பிரம்மன் தன் இருக்கும் இடம், காலம், உறவு ஒன்றும் தெரியாமல் புலம்ப பகவான் நேரில் தோன்றினார். பிரம்மன் **“கஸ்த்வம்** (யார் நீ?)” என்று பகவானை வினவினான். பகவானும் கஸ்த்வம் என்றே பதி லளித்தார். அதாவது (நீ க: அதாவது, உன்னுடைய பெயர் க:) என்றார்

பகவான் பின் ஹயக்ரீவ மூர்த்தியாய், ஹம்ஸரூபியாய் காட்சி அளித்தான். பிராட்டி புருஷகாரம் பண்ண, பகவான் குழந்தைக்கு ஓம் என்கிற ப்ரணவத்தை சுருக்கமாக உபதேசித்தான் பின் அஷ்டாக்ஷர மந்த்ரத்தையும் உபதேசித்தான் பகவான் இப்படி முதல் குருவாகி தன் பிள்ளையும் சிஷ்யனுமான ப்ரம்மனுக்கு எல்லாம் அறிவித்து அவனை வைஷ்ணவனாக்கினான். ஆக ப்ரம்மன்தான் முதல் குழந்தை. அவன்தான் முதல் வைஷ்ணவன்.

ப்ரம்மன் பிறகு சிவன், நான்கு ஸநகாதியர், நாரதர் என்பவர்களை தோற்றுவித்தான். பகவான், பிரம்மாவின் வேண்டுகோளுக்கு இணங்கி, ஸ்ரீரங்க விமானத்தில் அர்ச்சயா மூர்த்தியாய் ஆவிர்பவித்து தன்னை ஆராதிக்கும் முறையை பாஞ்ச ராத்ரம் என்ற பரம சாஸ்த்திரம் மூலம் சொன்னான்.

## 7-40 காரணம், காரியம் - திராவிட வேதத்தில்

**கடல் ஞாலம் செய்தேனேனும் யானே என்னும் ***
**கடல் ஞாலம் ஆவேனும் யானே என்னும் ***
நம்மாழ்வார் ,திருவாய்மொழி 5-6-1

நம்மாழ்வார் திருவாய்மொழியில் ஸாதிக்கிறார் பூமி. கடல் பொருள்கள் எல்லாவற்றையும் செய்தவன் நானே என்றார். அதில் ஒன்றும் பிரமாதம் இல்லை. தன்னை கர்த்தா என்று சொல்லிக் கொள்கிறார். குயவன் கூட அந்த பானை சட்டி எல்லாம் செய்தது நான்தான் என்று சொல்கிறான்.

ஆனால் அடுத்ததாய் பகவான் அந்த கடல், பூமி, பொருள்கள் எல்லாம் நானே என்கிறான். "பொருள்களை சிருஷ்டித்தேனே, அந்த பொருள்களே நான்தான்" என்றான். குயவன் "நான்தான் அந்த சட்டி பானை" என்று சொல்ல முடியுமா? குயவன் கதையில் கர்த்தா வேறு, செய்யும் பொருள் வேறு. பகவானிடத்தில் எல்லாம் ஒன்று. எல்லாம் அவனே.

**தத்வமஸி (Thou art that)** வாக்கியம் ஒன்பது தடவை வருகிறது ஸாந்தோக்ய உபனிஷத்தில். திராவிட வேதத்தில் திருமங்கையாழ்வாரும் ஒன்பது தடவை “நான் கண்டுகொண்டேன் நாராயணா என்னும் நாமம்” என்று பெரிய திருமொழியில் சொல்லுகிறார் ஒன்பது முறை.

## 7-41 காரணம், காரியம் - ஸ்வாமி தேசிகன் வாக்கில்

ஸ்வாமி தேசிகன், மேலே சொன்ன வேதத்தின் ஸாரார்த்ததை ஸ்லோகத்தில் ஸாதிக்கிறார்

> **புருஷ ப்ரதா4ந ஶரீரோ**
> **பு4வநாநாம் ப4வஸி அச்யுத உபாதா4நம்**
> **நிஜ ஸங்கல்ப ஸநாத:2**
> **வஹஸி நிமித் தத்வம் அபி அத்3பு4த ஶக்தி:**
> ஸ்வாமி தேசிகன், அச்யுத ஸதகம் 12

ஸ்வாமி தேசிகன் அச்யுதசதகத்தில் “அடியவர்க்கு மெய்யனே. உன்னுடைய சக்தி விசித்ரமானது. வேறு எங்கும் காண முடியாது. ஆச்சர்யத்தை கொடுக்ககூடியது உலகில் காரிய பொருள்களுக்கு இரண்டு காரணங்கள் உண்டு உபாதான காரணம், நிமித்த காரணம் மண் - உபாதான காரணம். குயவன், அவன் கொண்டுள்ள கருவிகள் - நிமித்த காரணம் இரண்டும் வெவ்வேறான வஸ்துக்கள்.

உன் விஷயமோ அதிசயமானது. ஸூக்ஷமமாக சேதநா சேதனங்களை சரீரமாகக் கொண்டு அவற்றுக்கு அந்தர்யாமியாக இருப்பதால் உபாதான காரணமாகிறாய். அவை ஸ்தூலமாய், காரியப் பொருளாக மாறும்போது “நான் பல பொருள்களாக மாறுகின்றேன்” என்று நீ ஸங்கல்பிப்பதால் நிமித்த காரணாமாகிறாய். இது என்ன விந்தை!” என்று ஆச்சரியம் அடைகிறார்.



prapatti dot com

## 7-42 ஆரணத்தில் திருநாரணன் நற்குணங்கள் பூரணமே

ஸம்ஸ்கிருத, திராவிட வேதங்களில் நாராயணனைக் கூறும் இடமெல்லாம் அவனுடைய திருக்கல்யாண குணங்களைச் சொல்லியது.

**"நாரயணா"** சப்தத்தினாலும், **ஸ்ரீ** ஆகிய பிராட்டியினாலும், பகவானுடைய பரதத்வம் நிர்ணயிக்கப்படுகிறது என்று வேதங்கள் கூறுகின்றன **ஸ்ரீயப்பதியாய்** - என்பதில் பிராட்டிக்கு நாயகன் என்றும் நாரயணா - என்பதில் எல்லா கல்யாண குணங்களும் நிரம்பி **எல்லா ஜீவராசிகளுக்கும் சேஷி** என்று ஆயிற்று.

**பூர்ணமித$_3$ம் பூர்ணமமத$_3$ பூர்ணாத் பூர்ணமுத$_3$ச்யதே |:**
**பூர்ணஸ்ய பூர்ணமாத$_3$ாய பூர்ணமேவா வஸிஷ்யதே ||**
**ஸர்வம் பூர்ணம் ஸஹோம் ||**
த்வயோபனிஷத்

என்று த்வயோபனிஷத் பூர்ணம் என்று சொல்லக்கூடியவன் நாராயணன் ஒருவனே அந்த நாராயணனை சொன்னால் அவனுடைய அருளால் எல்லாம் கிடைக்கும் என்கிறது.

**ஆர்தா விஷண்ணா ஶிதி$_2$லாஶ்ச பீ$_4$தா:**
**கே$_4$ாரேஷுச வ்யாதி$_4$ஷு வர்தமாநா: |**
**ஸங்கீர்த்ய நாராயணஶப்$_3$த$_3$மாத்ரம்**
**விமுக்தது$_3$:க$_3$ா: ஸுகி$_2$நோ ப$_4$வந்தி ||**
வியாஸ பகவான், ஸ்ரீவிஷ்ணு ஸஹஸ்ர நாமம்

என்று ஸ்ரீவிஷ்ணு ஸஹஸ்ரநாமம் சொல்கிறது ஸம்ஸாரம், மனஸ்ஸில் துக்கம், பயம், வியாதி இதால் கஷ்டம் படுபவர்கள் நாராயணா என்ற பெயரை சொன்ன மாத்திரத்தில் எல்லா துக்கங்களும் நீக்கி இன்பம் அடைகிறார்கள்.

## 7-43 ப்ரம்மம் என்பது நாராயணனே

prapatti.com

**ப்$_3$ரஹ்ம ஶப்$_3$தே$_3$ந ச ஸ்வபா$_4$வதோ நிரஸ்த நிகி$_2$ல தே$_3$ாஷ:**
**அநவதி$_4$காஶய அஸங்க்$_2$யேய கல்யாண கு$_3$ண க$_3$ண:**
**புருஷோத்தமோபி$_4$ தீ$_4$யதே ।**
**ஸர்வத்ர ப்$_3$ருஹத்வ கு$_3$ணயோகே$_3$ந ஹி ப்$_3$ரஹ்ம ஶப்$_3$த$_3$: ।**
**ப்$_3$ருஹத்வஞ்ச ஸ்வரூபேண கு$_3$ணைஶ்ச யத்ர**
**அநவதி$_4$காஶயம் ஸோஸ்ய முக்$_2$யோர்த்த$_2$: ।**
**ஸ ச ஸர்வேஶ்வர ஏவ ।**
**அதோ ப்$_3$ரஹ்ம ஶப்$_3$தஸ் தத்ரைவ முக்$_2$ய வ்ருத்த: ।।**

எம்பெருமானார், ஸ்ரீபாஷ்யம்

“இயற்கையில் எல்லாத் தோஷங்களும் நீங்கியவன். அளவில்லாத சிறப்பையுடைய எண்ணிறந்த கல்யாண குணங்களை உடைய புருஷோத்தமன் ப்ரம்ம சப்த்தாலே சொல்லப்படுகிறான். எல்லா இடத்திலும் பெருமையான பெரும் குணம் இருப்பதால் அன்றோ ப்ரம்ம சப்தம் கையாளப்பட்டது. எவனுடைய ஸ்வரூப, குணங்களின் பெருமை நிகரின்றி உயர்ந்ததோ அவனே ப்ரம்மம் என்ற சப்தத்திற்கு முக்யமான பொருள் ஆவான். அந்த ப்ரம்மம் ஒருவனே” என்றார்.

இப்படி எம்பெருமானார், ப்ரம்மம் என்பது அளவில்லாத கல்யாண குணங்களை உடையது என்று ஸாதிதார். அதுவே ஆரணத்தில் புகழும் நாரணனின் திருக்குணங்கள்.

## 7-44 நாராயண பதம் பிள்ளைலோகாசாரியார் - விளக்கம்

**புருஷகார பலத்தாலே ஸ்வாதந்த்ரியம் தலை சாய்ந்தால், தலை எடுக்கும் குணங்களைச் சொல்லுவது நாராயண பதம்.**

**அவையாவன வாத்ஸல்யமும், ஸ்வாமித்வமும், ஸௌஸீல்யமும், ஸௌலப்யமும், ஜ்ஞாநஶக்தியும்.**

**குற்றம் கண்டு வெருவாமைக்கு வாத்ஸல்யமும், கார்யம் செய்யும் என்று துணிகைக்கு ஸ்வாமித்வம்; ஸ்வாமித்வம் கண்டு**

prapatti dot com

**அகலாமைக்கு ஸௌஸீல்யம்; கண்டு பற்றுகைக்கு ஸௌலப்யம்; விரோதியைப் போக்கித் தன்னைக் கொடுக்கைக்கு ஜ்ஞாநஶக்திகள்**

**இங்கு சொன்ன ஸௌலப்யத்துக்கு எல்லை நிலம் அர்ச்சாவதாரம். இதுதான் பர வ்யூஹ விபவங்கள் போலன்றிக்கே கண்ணாலே காணலாம்படி இருக்கும்.**

**இவை எல்லாம் நமக்கு நம்பெருமாள் பக்கலிலே காணலாம்**

பிள்ளைலோகாசாரியார், முமுக்ஷுப்படி 136 - 141

என்று முமுக்ஷுப்படியில் பிள்ளைலோகாசாரியர் நாரயண சப்தத்தின் அர்த்தத்தை ஸாதித்தார்.

**இவற்றில் வாத்ஸல்யாதிகள் நாலும் ஆஶ்ரயண ஸௌகர்யாபாதகம். ஜ்ஞாநஶக்திகள் இரண்டும் ஆஶ்ரித கார்யா பாதகம்; ஸௌகர்ய பாதகங்களான குண சதுஷ்கத்திலும் ஸௌலப்யம் ப்ரதாநமாகையாலே,"**

என்று வியாக்யானம் அருளினார் மாமுனிகள்.

## 7-45 நாராயண பதம் ஸ்வாமி தேசிகனின் சுருக்கமான விளக்கம்

**நிகரில் புகழாய்" என்று தொடங்கி அருளிச் செய்த குண விஶேஷங்களையும், ஸம்பந்த விஶேஷங்களையும் காட்டிக் கொண்டு ஸர்வ வித பந்துவான ஶரண்யனை பிரகாஶிப்பிகிறது.**

ஸ்வாமி தேசிகன், ஸ்ரீ ரஹஸ்யத்ரய சுளகம்

என்று தேசிகன் ஸாதித்தார். இவற்றை இங்கே பாசுரத்தில் காணலாம்.

குண விஶேஷங்கள் - **ஆதியாய், மாசிலா சோதியாய்,**

ஸம்பந்த விஶேஷங்கள் - **உடலில் உயிராய், பதியாய்**

ஸர்வ வித பந்து - **அகலா உறவாய், காரணமாய், காரியமாய்**

ஶரண்யன் - **இறையாய், கதியாய்,**

காட்டிக் கொண்டு - **ஆரணத்தில்** **(ப்ரமாணங்கள்)**
பிரகாசிப்பிகிறது - **நற்குணங்கள் பூரணமே**

இப்படி பிராட்டியுடன் என்றும் சேர்ந்தே இருக்கும் எம்பெருமானுக்கும் சேதனனுக்கும் உள்ள உறவு **(ஸம்பந்தம் - சரீர ஆத்ம பாவம்),** எம்பெருமானின் குணங்களின் தொகுதி **(ஸமஸ்த கல்யாண குணாகரத்வம்),** எண்ணம் **(ஸங்கல்பம்)**, பேறு **(பலன்)** இவற்றை எல்லாம் காட்டுவது நாராயண பதம்.

வேறு துணை ஒன்று நாடாது, எல்லாவற்றையும் தான் நினைத்த மாத்திரத்திலே ஸாதிக்கும் சக்தி உடையது அவன் ஸங்கல்பம். சேதனர்களுக்கும் அருளுவதை தனக்கு பலனாக நினைக்கும் உயர்ந்த பேறாக நினைத்து ரக்ஷிக்கிறான்.

## 7-46 முடிவுரை

இப்படி நாராயண பத்தில் உள்ள கருத்துக்களை ஆசாரியர்கள் ஸாதித்த முறையிலே பார்த்தோம். முதலில் **ஸ்ரீ** என்ற பதத்திற்கு அர்த்தமும் அடுத்ததாக **மத்** என்கிற ப்ரத்யகத்தையும் இப்பொழுது **நாராயணா** என்ற பதத்தையும் அனுபவித்தோம்

**ஆதியாய் உடலில் உயிராய் மாசிலா சோதியாய் ***
**பதியாய் இறையாய் கதியாய் அகலா உறவாய் ***
**அனைத்துக் காரணமாய், காரியமாய் * நாம் ஏத்தும்**
**ஆரணத்தில் திருநாரணன் நற்குணங்கள் பூரணமே**

இத்தோடு நாரயாண பதத்திற்கு அர்த்தமான பாசுரம் முடிந்தது.

prapatti dot com

prapatti dot com

# 8 - சரணௌ

**ஒன்றாய் நாலாய் பத்தாய் நின்றாய்**
**உள்ளாய் என்னுள் யானும் உனதாய்**
**வந்தாய் எங்கும் என்றும் மன்னியே**
**தந்தாய் இணையடிகளெம் இதயத்திலே.**

**ஒன்றாய்** = மேன்மையான பர வாசுதேவனாய்
**நாலாய்** = அதிலிருந்து நான்காய் பிரிந்த வ்யூஹ ரூபங்களும்
**பத்தாய்** = அநிருத்த மூர்த்தியிடம் தோன்றிய தஸாவதாரங்களும்
**நின்றாய்** = அர்ச்யா மூர்த்தியாய் நின்ற ரூபங்களும்
**உள்ளாய் என்னுள்** = அந்த்ர்யாமியாய் என்னுள் நிறைந்தவனும்
**யானும் உனதாய்** = என்னை உனக்கு ஶேஷமாக்கி கொண்டவனும்
**எம் இதயத்திலே வந்தாய்** = [ஆன நீ] என் உள்ளத்தில் வந்தாய்
**எங்கும்** = [வந்து] எல்லா இடங்களிலும்
**என்றும்** = எல்லாக் காலங்களிலும்
**மன்னியே** = பொருந்தி
**இணையடிகள்** = உன் திருவடிகளை
**தந்தாய்** = எனக்கு பற்றுகோலாக அளித்தாய்

## 8-1 பாசுரத்தின் ஸாரார்த்தம்

**ஒன்றாய்** - என்பது முதல் பதம். வேறு ஒன்றும் இல்லாமல். இது ஒன்றே என (one and only one). **இதயத்திலே** - நம்முடைய நெஞ்சில். மனோ வாக் காயை என்கிற மூன்றிலும் முக்கியமாக் சொல்லும் மனத்தில்.

**இதயத்திலே ஒன்றாய்** - ஒரே நினைவுடன், சிந்தனையுடன், பகவானின் திருக்கமல பாதங்களை முன்னிட்டு அவனுடைய திவ்ய மங்கள விக்ரஹத்தை மனத்தில் நிறுத்தி என்பதாக (Keeping the mind on a single target)

## 8-2 ஸ்வாமி தேசிகனின் சுருக்கமான விளக்கம்

சரணௌ என்கிற பதம் ருசி (ஆசை) பிறந்த போது தைவ ப்ரகிருதிகளோடு (தெய்வீகமானவர்களோடு) ஆஸுர ப்ரகிருதிகளோடு (அசுர தன்மையானவர்கள்) வாசியறப் (வித்யாஸம் இன்றி) பற்றலாம்படியான பொது நின்ற (எல்லோருக்கும் பொதுவாக) பொன்னங் கழல்களை முன்னிட்டுக் கொண்டு ஶுபாஶ்ரய திவ்ய மங்கள விக்ரஹத்தை (மங்களமான எளிமையான திருமேனியை) காட்டுகிறது

ஸ்வாமி தேசிகன், ஸ்ரீரஹஸ்யத்ரய சுளகம்

சரணௌ என்பது இரண்டு திருவடிகளை. ஆசை பிறந்த போது இந்த திருவடிகளை பற்றலாம். அந்த ஆசை மோக்ஷத்திலோ அல்லது வேறு பலனிலோ இருக்கலாம். எவர் ஆயினும் இதை பற்றலாம். நல்லவன் கெட்டவன் என்ற வேறுபாடு இன்றி எல்லோருக்கும் பொதுவாக இருக்கும், பொன் போன்ற அந்த திருவடிகள்.

திருவடிகள் என்பதால் அத்தோடு நிற்காமல், அவனுடைய மங்களமான, சுத்த ஸத்வமான, தியானிக்க இனிமையான, எல்லாவற்றையும் அருளும் அந்த எம்பெருமானின் திருமேனியை சொல்லிற்று.

## 8-3 திவ்யாத்ம ஸ்வரூபம்

சக்ஷுஶ் ச த்₃ரஷ்டவ்யஞ்ச நாராயண: |
ஶ்ரோத்ரஞ்ச ஶ்ரோதவ்யஞ்ச நாராயண: ||
தி₃ஶஶ்ச ப்ரதி₃ஶஶ்ச நாராயண:

ஸுபால உபனிஷத்

கண்ணும், காண்பனவும் நாராயணனே. காதும் கேட்பனவும் நாராயணனே, திக்குகளும், அதிக்குகளும் நாராயணனே என்றது உபனிஷத். அப்படி

எம்பெருமானின் ஆத்மஸ்வரூபத்தை நினைத்து அதை பற்றுவது என்பது மிகவும் கடினமாது, ரிஷிகளுக்கே.

**கண்ணில் காண்பதெல்லாம் கண்ணனே**
**நிற்பது எல்லாம் நெடுமாலே**

என்று வசனத்தில் சொல்கிறோமே தவிர பகவானை அவ்வாறு வழிபட முடியாது, சாதரண மனிதர்களால்.

**ஜ்யோதிம்ஷூ விஷ்ணு:**
**புவநாநி விஷ்ணு; ஜலாநி விஷ்ணு:**
பராஸர மஹரிஷி, விஷ்ணு புராணம்

கண்ணில் காணும் அக்நி விஷ்ணு. உலகமே விஷ்ணு. தண்ணீர் விஷ்ணு என்றார் பராசரர். அப்படி பகவானை காண்பது ஒரு சிலரே.

எம்பெருமான் தன்னை சுலபாய் வழிபட ஸ்வரூப, ரூப, குண விபூதிகளுடன் விளங்குகிறான். எம்பெருமானின் ஸ்வரூபத்தை திவ்ய ஆத்ம ஸ்வரூபம் என்பார்கள். அதுபோல் அவனுடைய திருமேனியை திவ்ய மங்கள விக்ரஹம் என்பர்.

பகவானுடைய திருமேனி மங்களகரமானது. சேதனன் அனுபவிக்க போக்யமானது. பற்றுவதற்கு சுலபமாய் விளங்குவது. அதனால்தான் அதை **சுபாஶ்ரயம்** என்றார்கள். சுபம் என்றால் பாபங்களைப் போக்கக்கூடியது. ஆஶ்ரயிப்பது என்றால் வழிபட, தியானிக்க உகந்தது.

**நதே ரூபம் ந சாகாரோ நாயுத$_4$ாநி ந சாஸ்பத$_3$ம்**
**தத$_2$ாபி புருஷகரோ ப$_4$க்தாநாம் த்வம் ப்ரகாஶஸே**
ஜிதந்தே ஸ்லோகம்

ரூபம் என்பது திவ்ய ஆத்ம ஸ்வரூபத்தை சொல்கிறது. ஆகார: என்று திவ்ய மங்கள விக்ரஹத்தை சொல்கிறது. இவை எல்லாம் எம்பெருமான் தனக்கே வைத்துக் கொண்டு அனுபவிப்பதற்கு அல்ல. அவனை அண்டிய அடியவர்களுக்கு என்றனர் முன்னோர்.

## 8-4 திருவடிகள் இரண்டு

அந்த பகவானின் திவ்யமான திருமேனியிலும் திருவடிகள் மிகவும் எளிதானவை இங்கு சரணௌ என்கிற பதம் அந்த திருவடிகளைக் குறிக்கிறது.

ஸம்ஸ்கிருதத்திலும், தமிழிலும் ஒருமை, பன்மை மாற்றி உபயோகிக்கலாம் (interchangeable). வார்த்தையில் சொன்னாலும், பொருள் மாற்றி புரிந்து கொள்ள வேண்டும்.

பன்மையில் சொன்னாலும் அது ஒருமையை குறிக்கும், சில சமயத்தில். உதாரணமாக, “உங்கள் பெயர் என்ன? என்று கேட்கும்போது மரியாதையுடன் “உங்கள்” என்று அழைக்கிறார்கள். எதிரே இருக்கிறவர் ஒருவர் மட்டுமே ஆனாலும். **“பூஜாயாம் த்விவசனம்”** என்கிறது ஸம்ஸ்கிருதம். த்விவசனம் என்பது மரியாதையை குறிக்கும் என்கிறபடி

ஒருமையில் சொன்னாலும் அது பன்மையை குறிக்கும், சில சமயத்தில். உதாரணமாக, “ஏண்டா! நீ காது கொடுத்து கேட்டாயா”?, “உன் கண்ணாலா பார்க்கக் கூடாதா”? என்று சொல்லும்போது காது என்று ஒருமையில் சொன்னாலும் இரண்டு காதுகளையும் என்றுதான் அர்த்தம். கண் என்று ஒருமையில் சொன்னாலும், கண்கள் என்பதையே குறிக்கும்.

**சரணௌ** என்னும் பதம் ஸம்ஸ்ருகிதத்தில் த்விவசனம் ஆகும். மற்ற மொழிகளில் இல்லாமல் தனித்திருக்கும் பெருமை **ஏக, த்வி, ப்ஹு** வசனங்கள் என்று **ஒருமை, இருமை, பன்மை** (singular, dual, plural). அதாவது தமிழ், ஆங்கிலத்தில் ஒன்று, பல (singular and plural only) என்று மட்டும்தான். நடுவே இரண்டு என்று தனியாக கிடையாது. அது ஸமிஸ்க்ருதத்திற்கே உள்ள ஒரு தனிச் சிறப்பு.

prapatti.com

இங்கே சரணௌ என்று ஸம்ஸ்கிருத பதம் ஸ்பஷ்டமாக பகவானின் இரண்டு பாதங்களையும் என்று உணர்த்தியது. ஒன்று என்று சொல்லவில்லை. இரண்டிற்கு அதிகமாய் பல என்று சொல்லவில்லை.

## 8-5 திருவடிகளே கதி

அனைத்து பொருள்களும் பகவானின் ஸ்ருஷ்டியில் விளைந்தன. பகவான், “இவன் நல்லவன், இவன் பொல்லாதவன்,” என்று பாராது, தன்னுடைய குழந்தைகள் என நம்மை நேசிக்கிறான்.

குழந்தை எப்படி தாயே கதி என்று கிடக்குமோ, அதுபோல் நாம் எல்லோரும் பகவானே கதி என்று கிடக்கிறோம். இது சிலருக்கு தெரிகிறது. சிலருக்கு தெரிவதில்லை. குழந்தைக்கு தெரியாவிட்டாலும், தாயார் அதை என்றும் நேசித்து, ரக்ஷிப்பாள். அதுபோல்தான் பகவானும்.

சில பெற்றோர்களுக்கு குழந்தை பேறு ரொம்ப வருஷமாக இல்லாமல் இருக்கலாம். எத்தனையோ பூஜை, பக்தி, அசுவத்த மரம் பிரதக்ஷிணம் செய்து சிலர் குழந்தைகளை பெறுகிறார்கள். குழந்தைகள், சில சமயத்தில் தப்பு செய்து விடுகிறது.

அப்படி தவம் கிடந்து பெற்ற குழந்தையானாலும், பெற்ற தாய், சில சமயங்களில் குழந்தையிடம் கோவம் கொண்டு அதை அடித்து தள்ளிவிடவும் கூடும்.

அப்பொழுது அந்த குழந்தை, “அம்மாதான் அடித்துவிட்டாள், அதனால் அப்பாவிடம் போகலாம்” என்று அப்பாவிடம் போகாது. அடித்த அம்மாவினிடமே போய் அழும்

**தருதுயரம் தடாயேல் * உன் சரணல்லால் சரணில்லை *
விரைகுழவு மலர்ப்பொழில் * சூழ் விற்றுவக் கோட்டம்மானே *
அரிசினத்தால் ஈன்ற தாய் * அகற்றிடினும், மற்றவள் தன் ***

**அருள் நினைந்தே அழும் குழவி *அதுவே போன்று இருந்தேனே.**
குலசேகராழ்வார், பெருமாள் திருமொழி 5-1

குலசேகராழ்வார், திருவித்துவக்கோட்டு பதிகத்தில் “தாயைப் பிரிந்த குழந்தையைப் போல் வித்துவக்கோட்டம்மானே, நீ எனக்கு எவ்வளவு துயரம் கொடுத்தாலும், எனக்கு உன்னைத் தவிர அடைக்கலம் ஏது?” என வினவுகிறார்.

அழ்வார், உதாரணத்தில் (example) குழந்தை அம்மாவிடம் சென்று அழுதது என்று ஸாதித்தாரே தவிர, “அம்மாவின் காலை கட்டிக்கொண்டு அழுதது,” என்று சொல்லவில்லை.

**நிராஸகஸ்யாபி ந தாவது₃த்ஸஹே**
**மஹேஶ ஹாதும் தவ பாத₃ பங்கஜம்**
**ருஷா நிரஸ்தோபி ஶிஶு:ஸ்த நந்த₄ யோ::**
**ந ஜாது மாதுஶ் சரணௌ ஜிஹாஸதி”**
**ஆளவந்தார், ஸ்தோத்ர ரத்னம் 26**

**(ஸ்த நந்த₄ய ஶிஶு:)** பாலை குடிக்கும் குழந்தையை
**(ருஷா நிரஸ்த அபி)** (தாயார்) கோபத்தினால் தள்ளினாலும்
**(மாது: சரணௌ)** அம்மாவின் கால்களை
**(ஜாது ந ஜிஹாஸதி)** ஒருபொழுதும் விட ஆசையற்றது அல்லவா!
**(மஹேஶ)** ஹே ஈச்வரனே! (அதுபோல நீ)
**(நிராஸ கஸ்ய அபி)** வேண்டாம் என்று (என்னைத்) தள்ளினாலும்
**(தவ பாத₃ பங்கஜம்)** உன் திருவடித் தாமரைகளை
**(ஹாதும் ந உத்ஸஹே)** விடுவதற்கு முயல மாட்டேன்

என்று ஸ்தோத்ர ரத்னத்தில் ஆளவந்தார், இதே உதாரணத்தை எடுத்துக் காட்டுகிறார். ஆனால் பாதங்களை என்பதை ஸ்பஷ்டமாக தெரிவிக்கிறார் “பகவானே!, நீ என்னை வேண்டாம் என்று விலக்கினாலும், உன்னுடைய திருவடித்தாமரையை விடுவதற்கு துணியமாட்டேன். தயாரிடம் கிடக்கும் குழந்தையானது கோபத்தினால் ஒதுக்கப் பட்டாலும் அந்த அம்மாவினுடைய கால்களை ஒருபொழுதும் விட்டுப் பிரியாதது போல.

கடைசி வரியில் "சரணௌ ஜிஹாஸதி" என்றும் முதல் வரியில் "தவ பாத பங்கஜம்" என்றும் திருவடிகளையே அறுதியிட்டு சொல்கிறார்.

**தே3வாநாம் தா4ந வாநாம் ச ஸாமாந்யம் அதி4 தை4வதம்**
**ஸர்வதா3 சரணத்3வந்த்3வம் வ்ரஜாமி ஸரணம் தவ**
ஜிதந்தே ஸ்தோத்ரம் 1-2

என்று ஜிதந்தே ஸ்தோத்திரம் "பக்தி செய்பவனும், செய்யாதவனும் இருவருக்கும் சமமாக பற்றும்படி பகவான் தன் ஸௌலப்யத்தை இரண்டு திருவடிகள் மூலம் உபாயமாய் காண்பிக்கிறான் என்கிறது.

## 8-6 பற்றுகைக்கு திருவடிகளின் எளிமை

**திவ்யாத்ம ஸ்வரூபம்** (பகவானுடைய ஆத்ம ஸ்வரூபம்) **ஶுபமே ஆகிலும்** (பாபங்களை போக்கும் தன்மையானது) **ஆலம்பிக்க** (மனத்தில் த்யானம் செய்ய) **அரிதாகையாலே, ஶுபாஶ்ரயமாய் பாபத்தை விலக்கி தியானம் செய்ய) நின்ற திவ்ய மங்கள விக்ரஹத்தில் ஶேஷ பூதனை ஶேஷி சேர்த்துக் கொள்ளும் துறையைக் `காட்டுகிறது சரண சப்தம்**
ஸ்வாமி தேசிகன் ஸாரஸாரம்

என்று ஸ்வாமி தேசிகன் ஸார ஸாரத்தில் பகவானுடைய திருவடிகளைப் பற்றி ஸாதிக்கிறார் இங்கு சரண சப்தம் சித்தாலம்பணம் - அதாவது மனத்தில் ஒரு பிடிப்பு வேண்டும். அதற்காக பாதங்களை முன்னிட்டு என்கிறார். சுபம் என்பது பாபங்களை போக்கும் தன்மை

**தமேவ ஶரணம் க3ச்ச2 ஸர்வபா4வேந பா4ரத ।**
**தத் பரஸாதா3த் பராம் ஶாந்திம் ஸ்தா2நம் ப்ராப்ஸ்யஸி ஶாஶ்வதம் ।।**
பகவத் கீதை 18-62

என்று பகவத் கீதையில், கிருஷ்ணன், அருச்சுனனிடம் சொல்கிறான் "எல்லா வகையாலும் (உன்னுடைய ஸகல தேக இந்திரியங்களாலும்), பரத

குலத்தவனே அந்த பகவானையே ஶரணம் பற்று. அந்த பரமாத்மாவின் அருளால் உயர்ந்த அமைதியும் நிலையான பரமபத்தையும் அடைவாய்" என்றான்.

**த்வத்பாத$_3$ கமலாத்$_3$ அந்யந்ந மே ஜந்மாந்தரேஷ்வபி**
**நிமித்தம் குஶலஸ்ய நாஸ்தி யேந க$_3$ச்சா$_2$மி ஸத்$_3$க$_3$திம்**
**ஜிதந்தே ஸ்தோத்ரம் 1-10**

**(யேந ஸத்$_3$க$_3$திம் க$_3$ச்சா$_2$மி)** எதனால் நல்ல கதி அடைவேனோ
**(தஸ்ய குஶலஸ்ய நிமித்தம்)** அதற்கு காரணமான
**(த்வத்பாத$_3$ கமலாத்$_3$ அந்ய)** உம்முடைய திருவடிகளை விட வேறானதும்
**(மே ஜந்மாந்தரேஷ்வபி நாஸ்தி)** அடியேனுக்கு எந்த பிறப்பிலும் இல்லை

ஜிதந்தே ஸ்தோத்திரத்தில் வருகிற ஸ்லோகம் இது. உபாயம், பலன் இரண்டும் எம்பெருமான் திருவடிகளே என்பதை வலியுறுத்துகிறது.

**குலங்களாய ஈரண்டில் * ஒன்றிலும் பிறந்திலேன் ***
**நலங்களாய நற்கலைகள் * நாவிலும் நவின்றிலேன் ***
**புலன்கள் ஐந்தும் வென்றிலேன் * பொறியிலேன் புனித * நின்**
**இலங்கு பாதம் அன்றி * மற்றோர் பற்றிலேன் எம் ஈசனே**
**திருமழிசையாழ்வார், திருச்சந்த விருத்தம் 90**

திருச்சந்த விருத்தத்தில், திருமழிசை ஆழ்வார் "பகவானே, உம்முடைய ஒளிமிக்க பாதங்களைத் தவிர மற்றொன்றை பற்ற மாட்டேன்" என்று சொல்கிறார்

**நாகணை மிசை நம்பிரான் * சரணே சரண் நமக்கு என்று * நாடோறும்**
**ஏக சிந்தையனாய்க் * குருகூர்ச் சடகோபன் மாறன் ***
**நம்மாழ்வார், திருவாய்மொழி 5-10-11**

திருவாய்மொழியில், நம்மாழ்வாரும் இதையே காட்டுகிறார்.

**"பாற்கடலுள் பையத்துயின்ற பரமன் அடி பாடி"**
**"அன்றி உலகம் அளந்தாய் அடி போற்றி"**
ஆண்டாள், திருப்பாவை

ஆண்டாளும் பகவானுடைய திருவடிகளைப் பற்றுதலையே காட்டினாள்.

## 8-7 திருவடிகளின் பெருமை

**அநதிக்ரமணீயம் ஹி சரணக்ரஹணம்**

என்பது ராமாநுஜர் முத்தகம் (ஒரு வசனம்). **"தாண்ட முடியாதது அன்றோ? திருவடிகளைப்பிடித்துக் கொண்டால்"** என்கிறது. ஒருவனால் ஒரு காரியம் ஆக வேண்டுமானால், அவன் கையைப் பிடித்துக் கொண்டு கெஞ்சினால் அவன் அதை உதறிக் கொண்டு போகலாம். ஆனால் அதையே அவன் காலைப் பிடித்துக் கொண்டால் உதற முடியாதே!

**இவ்வண்ணம் நிகழ்ந்த வண்ணம் இனி இந்த உலகுக்கெல்லாம்**
**உவ்வண்ணம் அன்றி மற்றோர் துயர்வண்ணம் உறுவதுண்டோ?**
**மைவண்ணத்து அரக்கி போரின் மழைவண்ணத்து அண்ணலே! உன்**
**கைவண்ணம் அங்கு கண்டேன் கால் வண்ணம் இங்கு கண்டேன்**
கம்பன், இராமாயணம்

இது கம்பனுடைய அழகான பாடல். விசுவாமித்திரர் சொல்வதாக எழுதியிருக்கிறான். "ராமா, சாதாரணமாக எல்லோரும் கையைப் புகழ்வார்கள் ஆனால் காலோ எட்டி உதைக்கும்" என்பார்கள். "இங்கு உன் அபய ஹஸ்தமான உன் கை தாடகையை வதம் செய்தது; உன்னுடைய திருவடியோ, அகலிகைக்கு சாப விமோசனம் கொடுத்தது. அந்த பெருமையை நான் இன்றைக்குத்தான் பார்த்தேன்" என்கிறார் விசுவாமித்திரர்

ராமர் புன்னகையுடன் "நீர் கூட என்னுடைய பிரபாவத்தை தெரிந்து கொண்டிருக்கிறீர். அனால் நீர் ஆரிந்தது கால் மட்டும்தான்" என்று. "அதாவது

பெருமையில் கால் பங்கு (one fourth) தெரிந்து கொண்டீர். மீதி முக்கால் பங்கு இருக்கிறது என்கிற மாதிரி ஒரு விஷயம் கலந்த சிரிப்பு.

**பாதே₃ாஸ்ய விஶ்வா பூ₄தாநி ।**
**த்ரிபாத₃ஸ்யாம்ருதம் தி₃வி ।**

என்கிறது புருஷஸூக்தம். பூலோகம் என்பது நான்கில் ஒரு பங்கு என்று. கால் என்பது இரண்டு பொருள்பட.

கௌசிகனும் பொருள் புரிந்த புன்னகையுடன் பார்த்தார். என்னுடைய கோத்திரத்தில் ஒருத்தன் வரப்போகிறான். அவன் மீதி எல்லாம் சொல்லுவான் என்பது போலே

**பாஷாண நிர்மித தபோத₄ந த₄ர்மதா₃ரம்**
**ப₄ஸ்மந் யுபாஹித நரேந்த்₃ர குமார பா₄வம்**
**ஸம்வாஹிதம் த்ரி த₃ஶ நாத₂ ரமா மஹீப்₄யாம்**
**ஸாமாந்ய தை₃வத முஶந்தி பத₃ம் த்வதீ₃யம்**
ஸ்வாமி தேசிகன் தேவநாயக பஞ்சாஸத் 41

ஸ்வாமி தேசிகன் தேவநாயக பஞ்சாஸத்தில் ரொம்ப அழகாக ராமனையும், கிருஷ்ணன் லீலைகளை சொல்லி அந்த திருவடிகளை பற்றி வர்ணிக்கிறார் **(தபோத₄ந த₄ர்மதா₃ரம்)** கௌதம முனிவருடைய தர்ம பத்னியான அகலிகையை சாப விமோசனமாய் **(பாஷாண நிர்மிதம்)** கல்லிருந்து படைத்தாய். **(ப₄ஸ்மநி உபாஹித)** கரிக்கட்டி சாம்பலிருந்து உண்டாக்கினாய் **(நரேந்த்₃ர குமார பா₄வம்)** ஒரு அழகான இளமை மிக்க ராஜ குமாரனை. அதாவது உத்தரையின் கர்ப்பத்திலிருந்த சிசுவை அசுவத்தாமன் கரிக்கட்டையாக ஆக்கி அழிக்க பார்த்த போது அந்த குழந்தையை ஒரு ராஜ குமாரனாக ஆக்கி, [பரீட்சித்து] பாண்டவ குலத்தையே காத்தாய்.

**(த்ரி த₃ஶ நாத₂ )** தேவநாதனே! **(ரமா மஹீப்₄யாம்)** பெரிய பிராட்டியாலும், பூமிப்பிராட்டியாலும் **(ஸம்வாஹிதம்)** வருடிக் கொடுக்கும் **(த்வதீ₃யம் பத₃ம்)** உனது திருவடியையே **(ஸாமாந்ய தை₃வதம் உசஶந்தி)** பொதுத் தெய்வமாக நினைக்கிறார்கள்" என்றார்.

எனது மனது கல் போன்றது. எம்பிரானே உன் திருவடிகளை அதன் மேல் வைத்து உன் தர்ம பத்னியாய் என்னை ஆக்கிக் கொள் என்றுப் ப்ரபத்தி காரியமாய் வேண்டுவது, சுவாரசியமானது, இங்கே.

**தாழ்ச்சி மற்று எங்கும் தவிர்ந்து * நின் தாளிணைக் கீழ்**
**வாழ்ச்சி * யான் சேரும் * வகை அருளால் வந்தே**
நம்மாழ்வார், திருவாய்மொழி 3-2-4

என்று நம்மாழ்வாரும் நான் உலக விஷயங்களில் ஆசையற்று உன் திருவடிகளைப் பற்றி அதன் கீழ் அநந்தமான ஆனந்தமான கைங்கர்ய வாழ்வு பெற அருள் செய்ய வேண்டும் என பிராத்தித்தார்.

**ஏழை மனமே இனித் தளரேல் * - ஆழிவண்ணன்**
**தன்னடிக்கீழ் வீழ்ந்து சரண் என்று இரந்து ஒருகால் ***
**சொன்னதற்பின் உண்டோ துயர்**
அருளாளப் பெருமாள் நாயனார், ஞான ஸாரம் 23

ப்ரபத்தி ஸக்ருத் கார்யம், அதாவது ஒரே தடவை மட்டுமே செய்ய வேண்டியது. உலகத்தில் வேறு எதை எடுத்தாலும் ஒரு தடவை மட்டுமே என்று இருக்கிறதா? கார், வீடு வாங்கினால் அதற்கு ரிப்பேர் என்று செலவு, கல்யாணம் ஆனால் பண்டிகை என்று வந்து கொண்டே இருக்கிறது. டாக்டரில்டம் போனால் ஒரு மருந்து என்று ஆரம்பித்து தொடர்ந்து கொண்டே இருக்கிறது. ப்ரபத்தி ஒன்று மட்டும்தான் ஒரே தடவை செய்ய வேண்டிய காரியம். பலனோ எல்லை இல்லாதது.

எம்பெருமான் திருவடிகளை ஶரணம் என்று ஒரு தடவை யாசித்து, ஸக்ருத் உச்சராணம், அதாவது ஒரு தடவை சொல்லியபின், அந்த ஶரணாகதனுக்கு ஏதாவது துக்கம் பாதிக்குமோ?" என்றார். ஏழை என்பதால் கார்ப்பண்யமும், இனித் தளரேல் என்பதால் மஹாவிச்வாஸமும் சொல்லப்பபட்டது.

**அருள் தர எண்ணி அயிந்தை வந்தன**
**அடியவர்க்கு மெய்யர் மலர்ப் பதங்களே**
ஸ்வாமி தேசிகன், நவரத்னமாலை

என்றார் ஸ்வாமி தேசிகன். எம்பெருமானின் திருவடிகளே நமக்கு அருள் செய்பவை என்பதை காட்டினார்.

## 8-8 திருவடிகள் என்பதால் மிதுனம் விடாது

ஸ்வாமி தேசிகன் ஸ்ரீமத் ரஹஸ்யத்ரய ஸாரம் மூலத்தில் ஸாதிக்கிறார். ரொம்பவும் முக்கியமான இடம். (Complicated philosophy) கவனித்து புரிந்து கொள்ள வேண்டும். பகவானுடைய திருவடிகள் என்பதால் இங்கே பிராட்டி கிடையாது என்று சொல்வது அபத்தம்.

> "த்வயத்தில் சரணௌ என்று த்விவசநமாக குறித்திருப்பது (உபாய தசையிலும்) பிராட்டியின் ஸம்பந்தத்தை மறுக்க வல்லது", என்ற இவ்வார்த்தை சிற்றறிவினரால் கூறப்பட்டது.
>
> எதனால்? (த்வயத்தில் பூர்வ கண்டத்திலும் அமைந்துள்ள) மத் என்ற சப்தத்திற்கு விரோதம் வருவதால்.
>
> சப்தத்தின் ஸ்வாரஸ்யத்தால் முதலில் அறிந்து கொண்ட பிராட்டியின் இடைவிடாத ஸம்பந்தத்தை (அடுத்து வருகின்ற) விசேஷ்யமான திருவடிகளின் இரட்டைத்தன்மை, தடுப்பதற்கு தகுதியடையது அன்று.
>
> சரணங்களை என்று பன்மையில் கூறப்பட்டு இருக்கவேண்டும் என்றும், எது ஆக்ஷேபிக்கப்பட்டதோ அது நூல்களைக் கற்றறிந்தவர்களால் பரிஹஸித்தற்கு ஏற்றதாகும்.
>
> ஏன்? கணவன் ப்ராதனமாய் இருப்பது பற்றி, (த்விவசனமே) பொருந்துவதால் மனைவியுடன் கூடிய சக்கரவர்த்தியான அரசன் விஷயத்தில் மற்றொருவருடன் கூடியவன் என்று அடாத சொல் எப்படி கிடையாதோ, அவ்வாறே இங்கும், என்று, நன்கு ஆராயமல், பெரிய அடாத செயல், காட்டப்பட்டது.
>
> ஸ்வாமி தேசிகன், ஸ்ரீமத் ரஹஸ்யத்ரய ஸாரம், 28, த்வயாதிகாரம் ஸ்லோகம்

prapatti.com

என்று ஸ்வாமி பகவானும் தாயாரும் ஆகிய மிதுனத்தை பிரிக்க முடியாது என்பதை நிரூபிக்கிறார்.

## 8-9 திருமேனியைச் சேர்ந்த திருவடிகள்

**திருக்கையிலே பிடித்த திவ்யாயுதங்களும்,**
**வைத்து அஞ்சேல் என்ற கையும்**
**கவித்த முடியும், முறுவலும்,**
**ஆஸன பத்மத்திலே அழுந்தின திருவடிகளுமாய்**
**நிற்கிற நிலையே நமக்கு தஞ்சம்**
அழகிய மணவாளப் பெருமாள் நாயனார், ஆசார்ய ஹ்ருதயம் 25

ஆசார்ய ஹ்ருதயத்தில் அழகிய மணவாளப் பெருமாள் நாயனார் அருளிகிறார். பகவானுடைய ஸர்வ அங்க அவயங்களும் முக்கியம் - கால்கள், துடை, உந்தி, தோள்கள், திருமார்பு, திருக்கரங்கள், திருவாய், திருமுக மண்டலம், திருமுடி, க்ரீடம் வரை.

**ஈஶ்வரன் உபாயமாக நிற்க, அவனுடைய திவ்ய மங்கள விக்ரஹத்தில் ஏகதேஶஸமான** (பகுதி மட்டுமே ஆன) **திருவடிகளை உபாயம் என்கை சேருமோ?**

**இப்படி அநுஸந்திக்கில் இது திருஷ்டி விதி** (இல்லாததை இருப்பதாக ஏறிட்டு உபாஸிப்பது) **போலேயும் ஆகாதோ? என்னில் இவ்விடத்தில் ஈச்வரன் உபாயமாம் போது ப்ரபத்தி பண்ணுகிறவனுக்கு இத்தைச் சித்தாலம்பநமாக்க வேண்டுகையாலே** (மனதை படிய வைக்க) **விக்ரஹ விஸிஷ்டனாக வல்லது பற்றப் போகமையாகலும்**

**அநதிக்ரமணீயம் ஹி சரணக்ரஹணம் என்கிறபடியே க்ருபோத்தம் பகவத்வ அதிஶயத்தாலும், ஸ்வாமி பக்கல் தாஸபூதன் பரிமாறும் க்ரமத்திற்கு** (நடந்து கொள்ளும் முறைக்கு) **உசிதமாய் இருக்கையாலும்,**

prapatti dot com

**திருவடிகளை முன்னிட்டுக் கொண்டு ஸுபாஸ்ரய விக்ரஹ விஸிஷ்டனான ஈஸ்வரனுடய உபாய பாவத்தை அனுஸந்திக்கிறான்**
ஸ்வாமி தேசிகன், விரோதி பரிகாரம் 85

என்று ஸ்வாமி தேசிகன் விரோதி பரிஹாரத்தில் ஸாதித்தார் **ஶுபம் என்பது பாபங்களை போக்கும் தன்மை. ஆஸ்ரயம் என்பது மனத்தில் பிடிக்கும்படியாய் இருப்பது.**

திருமேனியில் திருவடிகளை சொன்னதன் கருத்து அவைகள் லகுவாக (easy ஆக) மனத்தில் பிடிக்ககூடியவை. வேலைக்காரானாய் இருப்பவனுக்கு மிகவும் தகுந்தவை மிகவும் கருணையை உண்டாக்ககூடியவை மிகவும் இனிமையானவை

இப்படி பகவானின் திருவடிகளின் பிரபாவத்தை தெரிந்து கொள்கிறோம் இதற்கு மேலே, நம்முடைய பாசுரத்திற்கு வருவோம்

## 8-10 பகவானின் ஐவகை நிலைகள்

**ஒன்றாய் நாலாய் பத்தாய் நின்றாய் உள்ளாய்**

என்று பாசுரத்தில் சொன்ன இந்த ஐந்தும் பகவானின் ஐந்து நிலைகளைச் சொல்கிறது. பரம், வ்யூஹம், விபவம், ஹார்தம், அர்ச்சை என்கிற ஐந்து நிலைகள்.

**பாட்டு கேட்குமிடமும், கூப்பீடு கேட்குமிடமும்,**
**குதித்தவிடமும், வளைத்தவிடமும், ஊட்டுமிடமும்,**
**எல்லாம் வகுத்தவிடமே என்று இருக்கக் கடவன்**
ஸ்ரீவசந பூஷணம் 453

என்று ஆசாரியர்கள் வியாக்கியானத்தில் சொல்லியிருக்கிறார்கள்.

**உயர்ந்து, உறங்கி, உலாவி, உறைந்து உகப்பாய்**

என்று கீழ் பாசுரத்தில் இந்த ஐவகை நிலைகளும், பிராட்டியுடன் கூடி சுபாரஶ்யமாய் இருப்பதை சொல்லப்பட்டது.

பகவானின் ஐந்து விதமான நிலைகளிலும் பிராட்டியுடன் கூடி சுபாஶ்ரயமாய் உள்ளான். இதில் எல்லாத் திருமேனிகளும் பாபத்தை போக்கும். தியானிப்பதற்கு சுலபமாய் இருக்கும்.

எம்பெருமானின் எல்லா நிலைகளும் சுபாஶ்ரயமே. ஆனாலும், ஒரு நிலையை விட அடுத்து கீழே உள்ள நிலை இன்னும் அதிக எளிமையாய் இருக்கும். பரத்தை விட வ்யூஹமும், வ்யூஹத்தைவிட விபவமும் என்று எளிமை பெருகிக் கொண்டே போகிறது.

அர்ச்சயாவதார திருமேனிதான் ஸௌலப்யத்தின் எல்லை நிலை என்றனர் முன்னோர்கள். ஆழ்வார்களும், ஆசாரியர்களும் இந்த அர்ச்சயாவதாரத்தில் மிகுந்து ஈடுபட்டுள்ளனர்.

## 8-11 ஒன்றாய் என்பது பரம்

> **கீழ்ச் சொன்ன ஷாட்குண்யாதி ஸமஸ்த கல்யாண குணங்களோடும், திவ்ய மங்கள விக்ரஹத்தோடும் பரமபதத்திலே நித்யரும், முக்தரும் தன்னை அனுபவிக்க, அவர்களை அநுப4வித்துக் கொண்டு இருக்கும் இருப்பு பராவஸ்தை.**
>
> பெரியவாச்சான் பிள்ளை, தத்வத்ரய ஸங்க்ரஹம்

என்றார் பெரியவாச்சான் பிள்ளை, பகவானின் பரம் என்னும் உயர்ந்த நிலையை சொல்லும்போது.

இங்கே பாசுரத்தில், ஒன்றாய் என்பது பரமபத்தில் இருக்கும் பரவாசுதேவனை சொன்னது

prapatti dot com

**நாக$_{2}$ஸ்ய வ்ருஷ்டே மஹதோ மஹீயான்**
**நாராயண உபனிஷத்**

என்று ஆரம்பிக்கிறது “நாராயண உபனிஷத். **நாக$_{2}$ம்** என்றால் துக்கமே கலவாத, திரிபாத் விபூதி. வைகுண்ட்டம். அக$_{2}$ம் என்றால் துக்கம். ந அக$_{2}$ம் என்றால் துக்கம் இல்லாத **நலம் அந்தமில்லாதோர் நாடு** என்றார், நம்மாழ்வார் திருவாய்மொழியில் நலத்திற்கு அந்தமில்லை. முடிவு இல்லை என்கிறபடி.

**ஏதத் ஸாம கா$_{3}$யந்நாஸ்தே ஹா வுஹா வுஹா வு**
**அஹமந்ந மஹமந்ந மஹமந்நம்**
**அஹமந்நாதோ$_{3}$ ஹமந்நாதோ$_{3}$ ஹமந்நாத$_{3}$ :**
**தைத்ரீய உபனிஷத்**

தைத்ரீய ப்ருகு உபனிஷத் சொல்கிறது முக்தன் பரமாத்மாவை அடைந்து இந்த ஸாமத்தைப் பாடிக் கொண்டு இருக்கறான் - **ஹா வுஹா வுஹா வு.** நான் பரமாத்மாவிற்கு அன்னமாய் இருப்பவன் அன்னமாய் இருப்பவன் அன்னமாய் இருப்பவன்.

நான் பரமாத்மாவிற்கு ஸந்தோஷமாகிற அன்னத்தை புஜிப்பவன், அன்னத்தை புஜிப்பவன், அன்னத்தை புஜிப்பவன்.

**பாட்டு கேட்குமிடம் பரமபதம்** என்றார்கள் ஆசாரியர்கள் எந்த பாட்டு என்றால் - தமிழ் பாட்டு

**பூவளரும் திருமாது புணர்ந்த நம் புண்ணியனார்**
**தாவளமான தனித் திவம் சேர்ந்து தமருடனே**
**நாவளரும் பெரு நான்மறை ஓதிய கீதமெலாம்**
**பாவளருந் தமிழ்ப் பல்லாண்டு இசையுடன் பாடுவமே**
**ஸ்வாமி தேசிகன் பரமபத ஸோபானம் 18**

என்று ஸ்வாமி தேசிகன் பரமபத சோபானத்தில் பகவான் வஸிக்கும் இடமான ஒப்பற்ற பரமபதம் சேர்ந்து நித்யஸூரிகளுடன் தமிழ்ப் பல்லாண்டு இசையுடன் பாடுவமே என்றார்.

prapatti dot com

## 8-12 நாலாய் என்பது வ்யூஹம்

**வ்யூஹாவஸ்தையாவது, லீலா விபூதியை நிர்வஹிக்கைக்காக ஷாட்குண்யங்களிலே இவ்விரண்டு (இரண்டிரண்டு) குணங்களை ப்ரகாசிப்பித்துக் கொண்டு ஸங்கர்ஷண, ப்ரத்யும்நாதி ரூபேண வந்து அவதரிக்கை.**

**இந்த வ்யூஹங்கள்தான் ஜகத் ஸ்ருஷ்ட்யாதிகளுக்கும், திருவதாரங்களுக்கும் அடியாயிருக்கும்**

பெரியவாச்சான் பிள்ளை, தத்வத்ரய ஸங்க்ரஹம் 50-51

என்றார் பெரியவாச்சான் பிள்ளை, வ்யூஹத்தை விவரிக்கும்போது.

பரவாசுதேவனுடைய உயர்ந்த திருக்கல்யாண குணங்கள் மோக்ஷத்தில் வெளிப்படுத்த முடியவில்லை. எல்லா பொருள்களும் ஞானமாய், ஒளிவிட்டு ப்ரகாசிக்கின்றன. பரமபதத்தில் கர்மா இல்லை. அஞ்ஞானம் இல்லை. முக்குண மாயை இல்லை. எல்லாம் ப்ரகாசமாய் உள்ளது.

எம்பெருமான் தன்னுடைய விளையாட்டிற்கென்று ப்ரகிருதி வசப்பட்ட லீலா விபூதியை படைக்கிறான். பாற்கடலில் ஸயனித்தது பிரம்மா, தேவர்கள் என்று படைத்து, காத்து, தன்னுள் ஒடுக்கிக் கொள்கிறான்.

**அசைவறும் அமரர் அடி இணையை வணங்க ***
**அலைகடல் துயின்ற அம்மானை ***

திருமங்கையாழ்வார், பெரிய திருமொழி 4-3-4

பரமபதத்திற்கு ஒரு வழிப்பாதை மட்டுமே (one way traffic). அங்கு சென்றவர்கள், கர்மாவினால் திரும்பி பிரகிருதி மண்டலம் வருவதில்லை. நான்முகனும், தேவர்களும் செல்ல முடியாத இடம். இவர்களின் குறை கேட்கவே பகவான் பாற்கடல் வந்து ஸயனித்துள்ளான்.

prapatti.com

**நாலாய்** என்பது அந்த பரவாசுதேவனே - **வியூக வாசுதேவன், ஸங்கர்ஷ்ணன், ப்ரத்யும்னன், அநிருத்தன்** - என நான்காக பிரிந்தான். அவதாரங்கள் எல்லாமே க்ஷிராப்தியில் இருந்துதான் வந்தது என்கிறார்கள்

வாசுதேவன், ஸங்கர்ஷ்ணன், ப்ரத்யும்னன் என்கிற மூன்று திருமேனிகளும் நம்முடைய மனத்திற்கும், வாக்கிற்கும் அப்பாற்பட்டவர்கள்

**ஸர்வாணிரூபாணி விசித்ய தீ₄ர: ।**
**நாமாநி க்ருத்வா பி₄வத₃ந் யத₃ாஸ்தே ।**
**புருஷ ஸூக்தம்**

என்று புருஷ ஸூக்தம் சொல்கிறது. ஸர்வஜ்ஞனான பரமாத்மா பல ரூபங்களை படைத்து அவற்றிற்கு பெயர்களை கொடுத்து, அவற்றை பிரபலமாக ஆக்குகிறான்.

அநிருத்த மூர்த்திதான் இந்த ஸம்ஸார மண்டலத்தில் உள்ள எல்லா ஸ்தாவர ஜங்கமங்களைப் படைத்து, காத்து, தன்னுள் ஒடுக்கிறார் என்று சொல்லுகிறார்கள்

**எங்கள் மால் இறைவன் ஈசன் * கிடந்ததோர் கிடக்கைக் கண்டும் ***
**எங்கனம் மறந்து வாழ்கேன் * ஏழையேன் ஏழையேனே!**
**தொண்டரடிப்பொடியாழ்வார், திருமாலை 23**

பகவான், நின்ற திருக்கோலத்தை(தேவப்பெருமாள்) மறக்கலாம். சரி, அமர்ந்த திருக்கோலத்தையும் கூட மறந்து போகலாம் (வைகுண்ட்ட நாதன்). ஸயன திருக்கோலத்தை (ரங்கநாதனை) ஒருவனால், மறக்க முடியுமா"? என வினவுகிறார் பகவான் நிற்கும்போதும், அமர்ந்திருக்கும்போதும் ஆடை ஆபரணங்களால் மறைத்து திருமேனி அழகு முழுவது தெரியாது அதே ஸயனித்து இருக்கும்போது, ஒரு நாலு முழம் வேஷ்டியுடன். பகவானின் ஸௌந்தர்ய, லாவண்யங்கள் எல்லாம் தேஜஸுடன் பிரகாசிக்கின்றன.

விஸ்வாமித்திரர், ராம லக்ஷ்மணர்களை அழைத்து கொண்டு காட்டில் போகிறார். காட்டில் அவர்கள் தூங்குகிறார்கள் ஸரயு நதிக்கரையில் ராமனின் திருமேனி அழகி மனதை பறி கொடுத்து அப்படியே நிற்கிறார். இப்படித்தானே

கௌஸ்ல்யா பன்னிரண்டு வருஷங்களாக ராமன் நித்திரையில் இருக்கும் அழகை அனுபவித்து இருப்பாளோ! என மயங்கினார்.

**உண்ண வந்த ரிஷி சோற்றை மறந்தாற் போல**

என்று வியாக்கியானத்தில் முன்னோர்கள் சொல்லி இருக்கிறார்கள். காரியம் ஞாபகம் வந்து பகவானை துயில் எழுப்புகிறார்

**கௌஸல்யா ஸுப்ரஜா ராம பூர்வா ஸந்த்$_4$யா ப்ரவர்ததே ।**
**உத்திஷ்ட$_2$ நரஶார்தூ$_3$ல கர்தவ்யம் தைவமாஹ்நிகம் ॥**

என்றார் கௌசிகனான ப்ரம்ம ரிஷி.

**ஏரார் கோலம் திகழக்கிடந்தாய் கண்டேன் எம்மானே**
நம்மாழ்வார், திருவாய்மொழி 5-8-1

என்று நம்மாழ்வாரும், திருவாய்மொழியில் என்றார்.

## 8-13 பத்தாய் என்பது விபவம்

**விபவமாவது, திவ்ய மங்கள விக்ரஹத்தை தேவ திர்யங்க் மனுஷ்ய ஸ்தாவர ஶரீரங்களோடே ஸஜாதீயமாக்கிக் கொண்டு தன் படிகள் ஒன்றையும் விடாதே அவ்வோ ஜாதிகளிலே வந்து அவதரிக்கை - ஸாக்ஷாத் விபவமாவது.**

**சேதனர் பக்கல் ஸ்வரூபேண ஆவேஶித்து அவதரிக்கை - ஸ்வரூபாவேஶாவதாரம்.;**

**சில சேதநர் பக்கலிலே ஶக்தியினாலே கார்ய காலத்திலே ஆவேஶித்து ரக்ஷிக்கை ஶக்த்யாவேஶாவதாரம்.**
பெரியவாச்சான் பிள்ளை, தத்வத்ரய ஸங்க்ரஹம்

என்றார் பெரியவாச்சான் பிள்ளை விபவத்தை விவரிக்கும்போது.

பகவான் எதற்கு இந்த கர்ம பூமியில் வந்து அவதரிக்கிறான் என்றால்

**பிறவாமை தந்திடத் தானே பிறக்கும் பெருமைகளும்**
**ஸ்வாமி தேசிகன், கீதார்த்தசங்கிரகம் 5**

என்று பிறவித்துயரில் சிக்கி இந்த கர்ம பூமியில் மாறி மாறி பல பிறப்பும் பிறந்து அல்லல் படும் சேதனர்களை உஜ்ஜீவிக்க, உடைமைக்கு ஒரு முழுக்கு, உடையவனுக்கு ஒன்பது முழுக்கு என்கிறாற்போலே, ஸர்வேச்வரன் தானே பல அவதாரங்களைச் செய்கிறான்.

பகவான் அவதாரங்களோ கணக்கற்றவை. பல அவதாரங்கள் செய்தான், செய்து கொண்டே இருக்கிறான். அவை அனைத்தும் நாம் மனத்தில் தரிக்க முடியாது என்பதாலால் பத்து என சுருக்கிச் சொல்லப்பட்டது.

பத்தாய் என்று இங்கே பாசுரத்தில் சொன்னது, விபவாவதாரமாகிய பகவானினுடைய பத்து அவதாரங்களையும் சொன்னது.

உஜ்ஜீவிக்க நாம ஸங்கீர்த்தனம் அவசியம் என்று அறிந்தான் ஒருவன். ஆனால் “எப்படி இவ்வளவு பகவான் நாமாக்களை சொல்வது” என்று பெரிய பிரச்னை, அவனுக்கு. ஒரு பெரியவர் சொன்னார், “விஷ்ணு ஸஹஸ்ர நாமம் சொல்லு. போதும் அதற்கு நேரம் இல்லாவிடில், தஶாவதார ஸ்தோத்ரம் சொல்லு. அதுவும் முடிய விட்டால், அரை ஸ்லோகம் இதையாவது சொல்லு என்று ஸ்வாமி தேசிகன் அருளியிருக்கிறார்,” என்றார்.

**இச்ச$_2$ா மீந, விஹார கச்ச$_2$ப மஹா**
**போத்ரிந் யத்$_3$ருச்ச$_2$ா ஹரே**
**ரக்ஷா வாமந ரோஷ ராம கருணா**
**காகுத்ஸ்த$_2$ ஹேலா ஹலிந் ।**
**க்ரீட$_3$ா வல்லவ கல்க வாஹந த$_3$ஶா**
**ஸ்வாமி தேசிகன், தஶாவதார ஸ்தோத்திரம் 12**

prapatti.com

என்று தசாவதார ஸ்தோத்திரத்தில், ஸ்வாமி தேசிகன் பத்து அவதாரங்களையும் ஒரு அரைப் பாசுரத்தில் ஸாதித்துள்ளார்.

**இச்ச₂ா மீந,** - தன் விருப்பத்தால் மத்ஸ்யாவதாரம் செய்தவன்
**விஹார கச்ச₂ப** - ஆமையாய் மாறி கடலைக் கடைந்தவனே
**மஹா போத்ரிந்** - உலகம் முழுவதும் சூழ வராஹமாய் தோன்றியவனே
**யத்₃ருச்ச₂ா ஹரே** - எதிர்பாராது சடக்கென்று தோன்றிய நரசிங்கமே
**ரக்ஷா வாமந** - காப்பதற்கே என்று அவதரித்த வாமநனே
**ரோஷ ராம** - கோப மூர்த்தியான பரஸுராமனே
**கருணா காகுத்ஸ்த₂** - கருணை வடிவான ராமபிரானே
**ஹேலா ஹலிந்** - கலப்பையைக் கையில் கொண்ட பலராமனே
**கிரீட₃ா வல்லவ,** - அற்புத லீலைகளைச் செய்த கிருஷ்ணனே
**கல்க வாஹந த₃ஶா கல்கிந்** -வெண்குதிரையில் ஏறும் கல்கிப் பெருமானே

தவிர, எல்லோரும் சொல்லக் கூடிய பிரபலமான சின்ன ஸ்லோகம்

**மத்ஸ்ய கூர்ம வராகஸ்ச்ச நாரஸிம்ம வாமனா:**
**ராமோ ராமஸ்ச்ச ராமஸ்ச்ச கிருஷ்ணஸ்ச்ச கல்கி ஜநார்த்தன:**

என்று பகவானுடைய அவதாரங்களோ அவனுடைய நாமாக்களோ கணக்கில் அடங்காதவை. பத்து என்பது நமக்கு மனத்தில் சுலபமாய் நினைத்து தியானிப்பதற்கு.

**நாமங்கள் ஆயிரமுடைய * நம்பெருமான் அடிமேல் ***
**சேமங்கொள் தென்குருகூர் * சடகோபன் தெரிந்து உரைத்த ***
நம்மாழ்வார், திருவாய்மொழி 5-9-11

என்று ஸ்வாமி நம்மாழ்வாரும்

**தொண்டக் குலத்தில் உள்ளீர்! வந்து அடி தொழுது ***
**ஆயிரம் நாமம் சொல்லி ***
**பண்டை குலத்தைத் தவிர்ந்து ***
**பல்லாண்டு பல்லாயிரத்தாண்டு என்மினே**
பெரியாழ்வார், பெரியாழ்வார் திருமொழி 1-1-5

பெரியாழ்வாரும் பகவானுக்கு ஆயிரம் நாமாக்கள் என்று ஸாதித்தனர்.

## 8-14 நின்றாய் என்பது அர்ச்சை

**அர்ச்சாவதாரமாவது, ஆச்ரிதர் உகந்த ஏதேனும் ஒரு த்ரவ்யத்தை அதிஷ்டித்து அதிலே திவ்ய மங்கள விக்ரஹத்திற்கு பண்ணும் ஆதரத்தைப் பன்னிக் கொண்டு ஆச்ரித பராதீனனாய் கோயில்களிலும், க்ருஹங்களிலும் காலாவதியின்றே அவதரிக்கை.**

பெரியவாச்சான் பிள்ளை, தத்வத்ரய ஸங்க்ரஹம்

என்று பெரியவாச்சான் பிள்ளை, அர்ச்சையான மூர்த்திகளை பற்றி கூறினார்.

**"பின்னானார் வணங்கும் சோதி"** என்று வைத்தமாநிதியாக நின்று அருளும், அர்ச்சாவதார மூர்த்திகளை சொன்னது, **நின்றாய்** என்று இங்கே.

**ஆரா அமுதம் அங்கெய்தி * - அதனின்றும்**
**வாராதொழிவது ஒன்றுண்டே * - அது நிற்க,**
**ஏரார் முயல்விட்டுக் காக்கைப்பின் போவதே? ***

திருமங்கையாழ்வார், சிறிய திருமடல் 4

சிறிய திருமடலில் திருமங்கையாழ்வார் கேட்கிறார் "முயலைவிட்டுக் காக்கைப்பின் தொடர்வதா? முயல் மாமிசம் என்றால் மிகவும் உசத்தியாம். கொழுத்து இருக்கும் அதை விட்டு, மெலிந்து நலிந்து இருக்கும் காக்கையின் மாமிசத்தை எவனாவது நினைப்பானோ?" என்கிறார்

**ஸாபி$_4$ப்ராய ஸ்மித விகஸிதம் சாரு பி$_3$ம்பா$_3$ தரோஷ்ட$_2$ம்**
**து$_3$கா$_2$பாய ப்ரணயிநி ஜநே தூ$_3$ர த$_3$த்தாபி$_4$ முக்$_2$யம்**

ஸ்வாமி தேசிகன், பகவத்யான ஸோபானம் 8

என்று பகவத் த்யாந ஸோபானத்தில் ஸ்வாமி தேசிகன் ஸ்ரீரங்கம் ஸ்ரீரங்கநாதனை வர்ணிக்கும்போது, "பகவானுடைய கீழ், மேல் உதடுகள்



prapatti dot com

சிவந்ததாய், கோவைக்கனி போல் உள்ளது. அவனுடைய ஆழ்ந்த கருத்து பொதிந்த புன்னகையுடன், ஓடி வந்த மக்களை துரத்திலிருக்கும்போதே கடாக்ஷிப்பது போல் உள்ளது," என்றார்.

## 8-15 உள்ளாய் என்னுள் என்பது அந்தர்யாமித்வம்

**உபாஸிப்பாருடைய ஹ்ருதயங்களிலே விக்ரஹ ஸஹிதனாய்க் கொண்டு அவர்களுக்கு ஶுபாஶ்ரயமாய் இருப்பது ஒரு ப்ரகாரம் உண்டு**

பெரியவாச்சான் பிள்ளை, தத்வத்ரய ஸங்க்ரஹம்

என்று பெரியவாச்சான் பிள்ளை, அந்தர்யாமித்வத்தைப் பற்றி கூறினார்.

**உள்ளாய் என்னுள்** என்று இங்கே பாசுரத்தில் சொல்வது எல்லா ஜீவனிடத்தும் உள் உறைந்து நிற்கும் அந்தர்யாமித்வத்தை சொன்னது

**உள்ளத்துக் கொண்டு முனிவர்களும் யோகிகளும் ***
**மெள்ள எழுந்து அரி என்ற பேரரவம் ***

ஆண்டாள், திருப்பாவை 6

என்று ஆண்டாள் திருப்பாவையில் அருளிச் செய்த மாதிரி

**மனத்துள்ளான் வேங்கடத்தான் * மாகடலான், * மற்றும்**
**நினைப்பரிய * நீள் அரங்கத்துள்ளான் ***

பூதத்தாழ்வார், இரண்டாம் திருவந்தாதி

என்று பூத்தாழ்வார், இரண்டாம் திருவந்தாதியில் கூறியபடி

**மனத்துள்ளான் * மாகடல் நீருள்ளான், * மலராள்**
**தனத்துள்ளான் * தண் துழாய் மார்பன் ***

பேயாழ்வார், மூன்றாம் திருவந்தாதி 3

என்று பேயாழ்வார் மூன்றாம் திருவந்தாதியில் நம் மனத்தில் அந்தர்யாமியாக இருக்கிறான் என்றார்

**கல்லும் கனைகடலும் * வைகுந்த வானாடும் *
புல்லென்று அழிந்தனகொல் ஏபாவம் * - வெல்ல
நெடியான் நிறங்கரியான் * உள் புகுந்து நீங்கான் *
அடியேனது உள்ளத்து அகம்**
நம்மாழ்வார், பெரிய திருவந்தாதி 68

பெரிய திருவந்தாதியில், நம்மாழ்வார் சொல்கிறார். "பகவான் கல்லையும், **(திருமலையும்)**, கடலையும் **(திருப்பாற்கடலும்)**, வைகுந்த வானாடு **(பரம பதத்தையும்)** அற்பமான புல் போல் உதறித் தள்ளிவிட்டு என்னுடைய மனத்தில் வந்து அமர்ந்து போக மாட்டேன் என்கிறான்" என்றார்.

பகவான் உள்வந்து அமர்ந்ததால் அவனை மறக்கவும் முடியுமோ?

**நின்றது எந்தை ஊரகத்து * இருந்தது எந்தை பாடகத்து *
அன்று வெஃகணைக் கிடந்தது * என்னிலாத முன்னெலாம் *
அன்று நான் பிறந்திலேன் * பிறந்த பின் மறந்திலேன் *
நின்றதும், இருந்ததும், * கிடந்ததும் என் நெஞ்சுளே**
திருமழிசையாழ்வார், திருச்சந்த விருத்தம் 64

திருமழிசையாழ்வார், திருச்சந்த விருத்ததில், "பகவான் என் நெஞ்சில் வந்து புகுந்தான். அன்றுதான் நான் உண்மையில் பிறந்தேன். அதற்கு பிறகு அவனை மறப்பேனா?" என்றார்.

பகவான் வந்து நிற்பது மட்டும் இல்லை. அமர்ந்தான், ஸயனித்தான், அதையே நிரந்தர வாசஸ்தலமாக (permanent residence) கொண்டு விட்டான்.

**நிற்பதும் ஒரு வெற்பகத்து இருப்பும் விண் கிடப்பதும் *
நற்பெரும் திரைக்கடலுள் நான் இலாத முன்னமெலாம்
அற்புதன் அனந்தசயனன் ஆதி பூதன் மாதவன் *
நிற்பதும் இருப்பதும், கிடப்பதும் என் நெஞ்சுளே**
திருமழிசையாழ்வார், திருச்சந்தவிருத்தம் 65

பகவான் உன் உள்ளதுள்ளே உறைந்து இருக்கிறான் என்பதைக் காட்டி, **“அங்கு இங்கு என்று அலையாதே மனமே. அறிந்து கொள் உன் உள்ளே ப்ருந்தாவனமே,”** என்றார் ஒரு கவி.

## 8-16 யானும் உனதாய்

பகவானே நீ என் மனத்தில் வந்தாய். அதை அறிந்து கொண்டேன். அடியேனுடைய உண்மையான ஸ்வரூபத்தை புரிந்து கொண்டேன். நானும் உனதாகவே நின்றேன்

**பொன்னைக் கொண்டு உறகல் மீதே**
**நிறம் எழ உறைத்தாற்போல்**
**உன்னைக் கொண்டு என் நாவகம் பால்**
**மாற்று இன்றி உரைத்துக் கொண்டேன்**
**உன்னைக்கொண்டு என்னுள் வைத்தேன் ***
**என்னையும் உன்னிலிட்டேன் ×**
**என்னப்பா! என் இருடீகேசா! ***
**என்னுயிர் காவலனே!**

பெரியாழ்வார், பெரியாழ்வார் திருமொழி 5-4-5

பெரியாழ்வார் திருமொழியில் உன்னில் நான், என்னில் நீ என்று இருவரும் கலந்து நின்றோம் என்றார்.

**யானே நீ என் உடைமையும் நீயே ***
**வானே ஏத்தும் என் வானவர் ஏறே**

நம்மாழ்வார், திருவாய்மொழி 2-9-9

என்று நம்மாழ்வார், நான் என்பதும் என்னுடையது என்பதும் உண்மையில் நீ அல்லவோ. இவை எல்லாம் உன் உறுப்பே (அங்கம்) என்றார்.

## 8-17 வந்தாய் எங்கும் என்றும் மன்னியே

எங்கும் என்பது எல்லா இடங்களிலேயும், ஸர்வ தேச (Space). என்றும் என்பது எந்த காலத்திலேயும் ஸர்வ கால (Time) என்று குறிக்கும். மன்னியே என்பது எல்லா நிலைகளிலேயும் பொருந்தி, ஸர்வ அவஸ்தைகளிலேயும் (State) என்று பொருள்.

ஆண்டாளின் தகப்பனாருக்கு விஷ்ணுசித்தர் என்று பெயர் பெரியாழ்வார் என்று பிற்காலத்தில் வந்த பெயர் ஏன் விஷ்ணுசித்தர் என்று பெயர்? மற்ற ஆழ்வார்கள் எல்லாம் சிவ சித்தர்களா? என்று கேட்கலாம்.

**பனிக்கடலில் பள்ளிகோளைப் * பழக விட்டு * ஓடி வந்து என்**
**மனக்கடலில் வாழ வல்ல * மாய மணாள நம்பீ ! ***
**தனிக்கடலே! தனிச்சுடரே! * தனி உலகே என்று என்று ***
**உனக்கு இடமாயிருக்க * என்னை உனக்கு உரித்தாக்கினையே**
பெரியாழ்வார் பெரியாழ்வார் திருமொழி 5-4-9

பெரியாழ்வார் திருமொழியில் சென்னியோங்கு தண் திருவேங்கடம் உடையாய் என்ற பதிகத்தில் சொல்லுகிறார். “குளிர்ந்த பாற்கடலில் பள்ளி கொள்ளாமல் மிக உயர்ந்த விண்ணில் வீற்றிருப்பதை விட்டு அல்பமான என்னுடைய மனத்தில் வந்து அமர்ந்தாயே!” என்றார். பகவான் அவனே வந்து அமர்ந்தான்.

ஆழ்வார் தன் மனத்தில் பகவானைக் கொண்டு வைக்கவில்லை. பகவானே, இது மிக உயர்ந்த வாஸ ஸ்தலம் என்று இவர் மனத்தில் புகுந்தார்.

**அரவு அத்து அமளியினோடும் * அழகிய பாற்கடலோடும் ***
**அரவிந்தப் பாவையும் தானும் * அகம்படி வந்து புகுந்து ***
**பரவைத் திரைபலமோதப் * பள்ளி கொள்கின்றபிரானை ***
**பரவுகின்றான் விட்டுசித்தன் * பட்டினம் காவல் பொருட்டே**
பெரியாழ்வார் பெரியாழ்வார் திருமொழி 5-2-10

padmapoo.com

“பகவான் தானும், ஆதிசேஷனும், பிராட்டியும், பாற்கடலும் எல்லாம் சேர்த்து என் மனதில் புகுந்தான்” என்கிறார் பெரியாழ்வார். (kitchen sink ஒன்றுதான் பாக்கி). காதை மூடிக்கொண்டால் நெஞ்சில் அலை சப்தம் கேட்கும் உயிர் பிரிவதற்கு முன் நாள் அந்த ஸப்தம் கேட்பதில்லை என்று வேதங்கள் சொல்கின்றன

**வந்தாய் என் மனத்தே * வந்து நீ புகுந்தபின்னை *
எந்தாய்! போயறியாய் * இதுவே அமையாதோ *
கொந்தார் பைம்பொழில்சூழ் * குடந்தை கிடந்து உகந்த
மைந்தா * உன்னை என்றும் மறவாமைப் பெற்றேனே**
திருமங்கையாழ்வார் பெரிய திருமொழி 8-9-5

“குடந்தையில் கிடந்தவனே, நீ என் மனத்தில் வந்த பின் நான் உன்னை மறக்க முடியுமா”? என்கிறார் திருமங்கையாழ்வார்.

## 8-18 தந்தாய் இணையடிகள் எம் இதயத்திலே

பகவானுடைய திருவடிகள்தான் நமக்கு போக்யம். அந்த திருவடிகள் எவ்வளவு உயர்ந்தது என்று எல்லா ப்ரமாணங்களும் காட்டுகின்றன.

**கார்யாணாம் காரணம் பூர்வம் வசஸாம் வாச்யமுத்தமம்
யோகா₃ நாம் பரமாம் ஸித்₃தி₄ம் பரமம் தே பத₃ம் விது₃:**
ஜிதந்தே ஸ்தோத்திரம்

ஜிதந்தே ஸ்தோத்திரம் பகவானின் திருவடிகளை வர்ணிக்கிறது. “காரியமான எல்லா பொருள்களுக்கும் ஆதி காரணமாகவும், சொற்களுக்கு மேலான சொற்பொருள்களாகவும், யோகங்களுக்கும் மேலான பலனாகவும், உன்னுடைய மேலான திருவடிகளை அறிகிறார்கள்,” என்றது.

**ஊர் இலேன் காணி இல்லை * உறவு மற்று ஒருவரும் இல்லை *
பாரில் நின் பாத மூலம் * பற்றிலேன் பரம மூர்த்தி *
கார் ஒளி வண்ணனே! * என் கண்ணனே கதறுகின்றேன் ***

**ஆருளர்க் களைகண் அம்மா! * அரங்கமா நகர் உளானே.**
தொண்டரடிப்பொடியாழ்வார், திருமாலை 29

திருமாலையில் தொண்டரடிப்பொடி ஆழ்வார் பகவானின் திருவடிகளையே ஸ்மரிக்கிறார். உலகத்தில் பரம புருஷார்த்தம் என்பது "அப்பா ரங்கநாதா! உன் திருவடிகள்தாம். அதையே நான் பற்றினேன்," என்று ஆகிஞ்சன்ய அநந்யகதிவத்தை முன்னிட்டு திருவடிகளை பற்றுகிறார்.

**ஸர்வ காரணனுமாய், ஸர்வ ஶப்த வாச்யனுமாய்,**
**ஸர்வ உபாய ஸாத்யனுமாய் இருந்துள்ள**
**உன்னுடைய ஸர்வாதி4கமாய் நிரதிஶய போக்யமான**
**திருவடிகளை என்னுதல்**

என்று வியாக்யான சக்கரவர்த்தி, பெரியவாச்சான் பிள்ளை ஸாதித்தார்.

## 8-19 இணையடிகள் தந்தாய் எம் இதயத்திலே

இங்கே பாசுரத்தில், தந்தாய் இணை அடிகள் எம் இதயத்திலே என்பது "பகவானே, நீ உன்னுடைய இரண்டு பாதங்களையும் என் நெஞ்சில் தந்து அருளினாய்" என மகிழ்வது.

**ஓலம் இட்டு நான் அழைத்தால் * ஒன்றும் வாராயாகிலும் ***
**கோலமாம் என் சென்னிக்கு * உன் கமலம் அன்ன குரைகழலே**
நம்மாழ்வார், திருவாய்மொழி 4-3-6

நம்மாழ்வார் கூறுகிறார். "நான் வாய் விட்டு எத்தனை கதறினாலும், எத்தனை உன் பேரைச் சொல்லி புகழ்ந்தாலும், நீ ஒரு வேளை எனக்கு உன்னைக் காட்டாமல் போகலாம்."

"நீயே வராவிட்டாலும் சரி, ஆனால் உன்னுடைய திருவடிகள், அடியவர்களை அவ்வளவு சுலபமாய் விட்டு விடுமா? ஆஸ்ரிதர்களிடம் போய்ச் சேர அதற்கு

பெரும் ஆசையாயிற்றே! அந்த திருவடிகள் என் தலை மீது வந்து அலங்காரம் செய்யட்டும்," என்றார்.

## 8-20 நீயே வந்து தந்தாய் இணையடிகளை

**பரந்த சிந்தை ஒன்றி நின்று * நின்ன பாதம் பங்கயம் ***
**நிரந்தரம் நினைப்பதாக நீ நினைக்க வேண்டுமே**
திருமழிசையாழ்வார், திருச்சந்தவிருத்தம் 101

என்று உலக விஷயங்களில் கிடக்கும் என் மனதை உன் பாதங்களில் திருப்பி, அதிலேயே நிலை நிறுத்தி எனக்கு அந்த கைங்கர்யத்தை தந்தருள வேண்டும். அது உன் ஸங்கல்பத்தால் அல்லவா நடக்கும் என்கிறார்.

**ஆறு எனக்கு நின் பாதமே * சரணாகத் தந்தொழிந்தாய் * உனக்கோர்**
**கைம்மாறு நானொன்றிலேன் * எனதாவியும் உனதே ***
நம்மாழ்வார், திருவாய்மொழி 5-7-10

என்று உபாயம், உபேயம் இரண்டும் உன் திருவடிகளே என்றார். ஆறு தந்து ஒழிந்தாய் என்பதனை ஆறு அங்கங்கள் கொண்ட ப்ரபத்தி (ஷடாங்க யோகம்) என்றும் ஆசாரியர்கள் ஸாதிப்பார்.

**உணர்வில் உம்பர் ஒருவனை * அவனது அருளால் உறல் பொருட்டு ***
**என் உணர்வினுள்ளே இருத்தினேன் * அதுவும் அவனது இன்னருளே**
நம்மாழ்வார், திருவாய்மொழி 8-8-3

என்று நம்மாழ்வாரும் திருவாய்மொழியில் பகவானே உன்னை என் மனத்தினுள் நிறுத்த எண்ணினேன். நித்யஸூரிகளின் தலைவனே, அதுவும் உன் அருளாலேதான் ஸாத்யமாயிற்று என்றார்.



prapatti dot com

இல்லை, இல்லை, நானாகவா அவனை என் மனத்தினுள் நிறுத்த எண்ணினேன்? அவன்தான் அந்த நினைவையும் கொடுத்தான்.

**யானொட்டி என்னுள் * இருத்துவம் என்றிலன் *
தானொட்டி வந்து * என் தனிநெஞ்சை வஞ்சித்து *
ஊனொட்டி நின்று * என் உயிரில் கலந்து * இயல்
வானொட்டுமோ? * இனி என்னை நெகிழ்விக்கவே**
நம்மாழ்வார், திருவாய்மொழி 1-7-7

நானா இந்த எம்பெருமானனை என் இதயத்துள் கொண்டு வைத்தேன்? என்னுடைய சம்மதம் இல்லாமலே, தானே வந்து, தன் திருக்கல்யாண குணங்களைக் காட்டி, நான் அறியாமல் இருக்கும்போதே என் உயிரிலும் கலந்து விட்டான். இப்படி ஒன்றாய் கலந்திருப்பவனை விட்டு நான் தள்ளிப் போக முடியுமா? இல்லை அதற்கு அவன்தான் சம்மதிப்பானா?

**நமக்கு ஆர் துணை என, நாம் என்று அருள் தரும் நாரணனார் *
உமக்கு ஆறு இவை என்று அடியிணைக் காட்ட, உணர்ந்து அடையும்*
எமக்கோர் பரம் இனி இல்லாது, இருவினை மாற்றுதலில் *
தமக்கே பரம் என்று, தாம் முயலும் தரம் சாற்றுவோமே**
ஸ்வாமி தேசிகன் பரமத பங்கம் 45

என்று ஸ்வாமி தேசிகன் பரமதபங்கத்தில், “ஸம்ஸார ஸாகரத்தில் அழுந்தி கிடக்கும் நமக்கு ஒரு துணை யார் என்று துக்கித்து கிடக்க, ஸ்ரீமந் நாராயணன் தன் திருவடிகளை காட்டி உமக்கு உபாயம் இவை,” என்று அருளினதை சொல்கிறார்.

## 8-21 திருவடிகள் மூலம் திருமேனி சொல்லிற்று

ஆக இப்பாசுரத்தில் பகவானின் திருவடிகளை நேராகச் சொல்லி அதன் மூலம் அவனுடைய திருமேனியை சொல்லிற்று

prapatti.com

**திவ்ய ஆத்ம ஸ்வரூபம் (எம்பெருமானின் ஆத்ம ஸ்வரூபம்) ஶுபமே (பாபத்தை போக்குவது) ஆகிலும் ஆலம்பிக்க (மனத்தால் என்ணி தியானிக்க) அரிதாகையாலே, சுபாஶ்ரயமாய் (பாபத்தை விலக்கி தியானிப்பதற்கு) நின்ற திவ்ய மங்கள விக்ரஹத்தில் ஸேஷனை ஸேஷி சேர்த்துக் கொள்ளும் துறையை காட்டுகிறது சரண சப்தம்.**

"தவத் பாத கமலா அந்யத்"
"உன் சரண் அல்லால் சரண் இல்லை",
"நின்னிலங்கு பாதம் அன்றி மற்று ஓர் பற்று இலேன்",
"நாகணைமிசை நம்பிரான் சரணே சரண்",
**இத்யாதிகளிற்படியே அவதாரணம் (திருவடிகளே என்னும் வரையறை) இங்கே விவக்ஷிதம் (கருத்து ஆகியது).**

**ஔசித்ய (பொருந்திய) க்ருபோத்தம்பகத்வ (கருணையை வளர்க்கும்) போக்யத்வ அதிசயங்களாலே தவதாநவர்களுக்குப் (தேவ அசுரர்களுக்கு) பொதுவாய் நின்ற துயரறு சுடரடிகளைக் துவக்கி அமலனாதி பிரான்படியே திருமேனியை முழுக்க அநுஸந்திக்கிறான்**

**இவ்விக்ரஹ விஸிஷ்டனான நாராயணன் பரவ்யூஹாதி ஸர்வாவஸ்தையிலும் ஶ்ரீமானாய் இருக்குமாப்போலே ஶுபாஶ்ரயமாய் இருக்கும்.**

**இவற்றில் அர்ச்யாவதார பர்யந்தமாக உத்தரோத்தரம் (முன்னதை விட பின்னது) ஸௌலப்யம் அதிகம்**
ஸ்வாமி தேசிகன், ஸார ஸாரம்

என்று ஸ்வாமி தேசிகன் ஸார ஸாரத்தில் ஸாதிக்கிறார்

(Don't get carried away. Bhagawan's lotus feet is extremely important but only along with his wonderful body. Feet is like a handle on a box. It helps you to carry the box easily. Without it would be very hard to carry the box. But noone thinks handle itself is enough without the box itself.)

prapatti.com

**வெறி உடை துளவ மலர் வீறுக்கு அமர்ந்தன**
**விழுகரி ஓர் குமரன் என மேவி சிறந்தன**
**விறல் அசுரர் படை அடைய வீய துடர்ந்தன**
**விடல் அரிய பெரிய பெருமாள் மெய்ப் பதங்களே**
ஸ்வாமி தேசிகன், அதிகார ஸங்க்ரஹம் 51

ஸ்வாமி தேசிகன் அதிகார ஸங்கிரஹத்தில் ஸாதிக்கிறார். எம்பெருமானான ஸ்ரீமந் நாராயணனே சக்கரவர்த்தி திருமாகனாகவும், கிருஷ்ணனாகவும் அவதாரம் செய்து அவனே ஸ்ரீரங்கத்தில் பள்ளி கொண்டிருக்கிறான். அவன் திருவடிகள் பக்தர்களுக்குக் வேண்டியதைக் கொடுத்து விரோதிகளை நாசம் செய்தன. அப்படியே நாமும் அவைகளை அடைந்தால் நமக்கும் இஷ்டங்களைக் கொடுத்து அநிஷ்டங்களைப் போக்கும் என்று காட்டுகிறார்

**வான் அமர் மன் உருவாய் வகையால் அதில் நால் உருவாய்**
**மீனமது ஆமை கேழல் முதலாம் விபவங்களுமாய்**
**ஊன் அமர் உள்ளுருவாய் ஒளியாத அருச்சையுமாய்**
**தேன் அமர் செங்கழலான் சேர்த்தனன் கழல் எம் மனத்தே**
ஸ்வாமி தேசிகன், துவயச் சுருக்கு 5

ஸ்வாமி தேசிகன் துவயச் சுருக்கில் சரணௌ சப்தத்திற்கு பாசுரம் ஸதிக்கிறார் ஸ்ரீவைகுண்டத்தில் எம்பெருமான் நித்யமான ரூபத்துடன் பர வாசுதேவவனாய் அமர்ந்துள்ளான். அதிலிருந்து உண்டானது நான்கு வகையான வ்யூகங்களையும் உடையவனே. விபவமாகிய மத்ஸ்ய, கூர்ம, வராக ஆகியவையும் ஆனவனே. உடம்பில் மறைந்து அந்தர்யாமி நிலையில் இருப்பவனே தேன் பெருகி வழியும் சிவந்த திருவடித்தாமரையை உடைய ஸ்ரீ மந்நாராயணனது திருவடிகளை எம்முடைய மனதில் வைத்து அருளினான்

## 8-22 இரண்டு விதமாய் கூறுவது

**ஸ்ரீமந் நாராயண சரணௌ** என்று இது வரைக்கும் த்வயத்தின் முதல் பகுதியைப் (first segment) பார்த்தோம்.

ஸ்ரீமந் நாராயண ஸ்வாமிந்
கமல நயந வாஸுதேவ (விஷ்ணு புராணம்)
அலர்மேல் மங்கை உறை மார்பா (திருவாய்மொழி)

**இத்யாதி ப்ரயோகங்களையும், கத்யங்களையும் பார்த்து, ஸ்ரீமத் ஶப்தத்தையும், நாராயண ஶப்தத்தையும் ஸம்புத் (விளி) அந்தமாக்கி, ஶரண்யனை அபிமுகீகரித்து (ப்ரத்யக்ஷமாக்கி, முன்னிலையாக்கி), "தவ" என்று ஒரு பதத்தை அத்யாஹரித்து (வரவழைத்துக் கொண்டு) அந்வயித்து நிர்வஹிப்பர்கள் (பொருள் உரைப்பர்). சரண ஶப்தம் அறுதியாக ஒரு ஸமஸ்த பதம் (தொடர் சொல், compound word) என்றும் நிர்வஹிப்பர்கள்.**

ஸ்வாமி தேசிகன், ஸாரஸாரம்

இதில் முற்பகுதியை ஸ்ரீமந் நாராயண, சரணௌ இரண்டு பதமாக பிரித்து சொல்லலாம். இங்கே **ஸ்ரீமந்! நாராயண!,** என்பவை விளி வேற்றுமை. அதாவது கூப்பிடுவது (imperative statement used as a command or request). பிராட்டியை பிரியாதவனே, நாராயணனே என்று (directly addressing).

அதற்கு பிறகு, **"தவ"** என்று உம்முடைய என்கிற பதத்தை ஶரணௌ என்பதற்கு முன் வரவழைத்துக் கொண்டால், உம்முடைய இரண்டு திருவடிகளை (அடைக்கலமாய் அடைகிறேன்) என்று பொருள். சில மந்திரங்கள், எம்பெருமானாரின் கத்யம் போன்றவை இப்படி சொல்கின்றன.

ஒரே பதமாக எடுத்தால் ஸமஸ்த பதம் (compound phrase) என்பது "பெரிய பிராட்டியாரை பிரியாத நாராயணனின் திருவடிகளை (ஶரணமாக அடைகிறேன்)" என்று பொருள் தரும். ப்ரமாணத்தில் இப்படியும் விளக்குவது உண்டு.

இப்படி இரண்டு விதமாகவும் சொல்லலாம் என்று ப்ரமாண ஸித்தமாக ஸ்வாமி தேசிகன் ஸாதிக்கிறார்.

prapatti.com

prapatti dot com

# 9 - ஶரணம்

**உன்னித்து மற்றொரு தெய்வம் தொழும் ***
**தொல்வினை தீர்க்கும் என் இறையே ***
**மன்னித்து அருளும் சீமாதவன் மலரடிகள்**
**மருவ * மற்றொன்று இன்றி நிறைவே.**

| | |
|---|---|
| **மற்றொரு தெய்வம்** | = வேறு தெய்வங்களை |
| **தொழும்** | = வணங்கும் |
| **தொல்வினை** | = அநாதியான கர்மாக்களை |
| **உன்னித்து** | = ஒரே மனதாய் |
| **தீர்க்கும்** | = களைந்து எடுக்கும் |
| **என் இறையே** | = என்னுடைய ரக்ஷகன் நீயே! |
| **மன்னித்து** | = என்னுடைய பாபங்களை எல்லாம் மன்னித்து |
| **அருளும்** | = எனக்கு அனுக்ரஹம் செய்யும் |
| **சீமாதவன் மலரடிகள்** | = ஸ்ரீமந் நாராயணனுடைய திருவடிகளை |
| **மருவ** | = நான் பற்ற, அடைய |
| **மற்றொன்று இன்றி** | = [அதுவே] வேறு ஒன்றையும் எதிர்பாராது |
| **நிறைவே** | = [எல்லாப் பலன்களுக்கும்] பூர்த்தியாக ஆனது. |

## 9-1 முன்னுரை

த்வயத்தில் அடுத்து வரும் பதம் **ஶரணம்**. ஶரணம் என்ற பதம் பொதுவாக பல அர்த்தங்களை கொடுத்தாலும், உபாயம் என்ற பொருளையே இங்கே முக்யமாக காட்டும். குறிப்பாக, எம்பெருமான் உபாயமாக நிற்பதே ஶரண பதம். அதுவே ப்ரபத்தியின் விசேஷம்.

இப்பாசுரத்தில் முதல் பதம் **உன்னித்து**. அதாவது ஒரே மனதாய், வேறு விஷயங்களில் ஈடுபடாது. இங்கே சொல்ல வந்தது எம்பெருமானை

ஶரணமாக புகுவது. அப்படி செய்யுங்கால், வேறு ஒரு யோகத்தையோ, துணையோ நாடாது என்று (unflinching concentration).

**நிறைவே** என்பது அப்படி செய்யும் அடைக்கலம் ஒன்றே நிறைந்து இருக்கும். வேறு ஒன்று அவசியமில்லை என்பதை காட்டும்.

## 9-2 ஸ்வாமி தேசிகனின் சுருக்கமான விளக்கம்

> "கழல்கள் அவையே சரணாக, நாகணைமிசை நம்பிரான் சரணே சரண், நின்னிலங்கு பாதம் அன்றி மற்றோர் பற்று இலேன்" **என்கிறபடியே அகிஞ்சனான** (பக்தி யோகம் முதலிய கைம்முதல் அற்ற) **ஶேஷபூதனுக்கு அவலம்பநமான** (பிடிப்பு) **திருவடிகள் உபாய ஸ்தாநத்திலே நிற்கிற நிலையைக் காட்டுகிறது. துயரறு சுடரடிகள்** (அடைக்கலம் அடைந்தவரின் துக்கத்தை நீக்க வல்ல ஒளி மிகுந்த திருவடிகள்) **ஆகையாலே அநிஷ்ட நிவ்ருத்திக்கும்** (தீயவை நீக்கல்) **இஷ்ட ப்ராப்திக்கும்** (விரும்பியவை அளித்தல்) **அவன் திருவடிகளே உபாயம் என்கிறபடி"**
>
> ஸ்வாமி தேசிகன், ஸ்ரீரஹஸ்யத்ரய சுளகம்

ஶரணம் என்பது உபாயமாக. சேதனன் கைம்முதல் அற்றவன். வேறு பக்தி யோகங்கள் போன்றவற்றை செய்ய அருகதை அற்றவன். இந்த எண்ணத்துடன் தன் இழிந்த நிலையை எண்ணி தவிக்கும் சேதனன் வேறு உபாயம் இன்றி எம்பெருமானுடைய திருவடிகளே கதி என பற்ற முனைகிறான்.

அவன் பற்றுவதற்கு ஒரு பற்றுக்கோடான இவை அவன் விஷயத்தில் உபாயமாய் நின்று அவனை ரக்ஷிக்கும். எல்லா இன்னல்களையும் அறுத்து தள்ளும் ஒளி மிகுந்த இந்த திருவடிகள் அவனுக்கு எல்லா இன்பங்களையும் அளிக்கும்.

## 9-3 ஶரணம் என்பது உபாயம்

**உபாயே க்$_3$ருஹ ரக்ஷித்ரோ: ஶப்$_3$த$_2$: ஶரண மித்யயம் ।**
**வர்த்ததே ஸாம்ப்ரதம் சைஷ உபாயார்த்தை$_2$க வாசக: ।।**
அஹிர்புத்ந்ய ஸம்ஹிதை

அஹிர்புத்ந்ய ஸம்ஹிதை ஶரணம் என்னும் பதத்திற்கு மூன்று பொருள். **உபாயம், க்ருஹம் (வீடு), ரக்ஷகன்** என்கிறது. இருந்தாலும் இங்கு **உபாயம்** என்ற அர்த்தத்தையே சொல்லுகிறது என்றனர் பூர்வாசாரியர்கள்.

**அஹமஸ்ய அபராத$_4$நாம் ஆலயோஅகிஞ்சநோSக$_3$தி: ।**
**த்வம் ஏவ உபாய பூ$_4$தோ மே ப$_4$வேதி ப்ராத்த$_2$நா மதி: ।।**
**ஶரணாக$_3$திரித்யுக்தா ஸா தே$_3$வேஸ்மிந் ப்ரயுஜ்யதாம் ।।**
அஹிர்புத்ந்ய ஸம்ஹிதை 36-38

அஹிர்புத்ந்ய ஸம்ஹிதை பாஞ்சராத்ரம் இந்த உபாயத்தை சொல்லுகிறது.

“நான் குற்றங்களின் இருப்பிடம். என்னை காத்துக் கொள்ள ஒரு வழியும் இல்லாதவன். உன்னைத் தவிர வேறு கதி இல்லை. நீயே எனக்கு உபாயம் ஆவாயாக என்று பிராத்திக்கும் அறிவே ஶரணாகதி எனப்படும். அது இந்த எம்பெருமான் விஷயத்தில் செய்யப்படும்” என்றது.

## 9-4 ஶரணம், பிள்ளைலோகாசாரியார் விளக்கம்

**ஶரணம் இஷ்ட ப்ராப்திக்கும் அநிஷ்ட நிவாரணத்திற்கும் தப்பாத உபாயமாக. இத்தால் ப்ராப்யம் தானே ப்ராபகம் என்பது**
பிள்ளைலோகாசாரியார், முமுக்ஷுப்படி 149-150

என்று உபாயமே பலன் ஆயிற்று என்றார்.

**ஶரணம் - உபாயமாக.**

prapatti.com

**உபாயமாகிறது. அநிஷ்டத்தைப் போக்கி இஷ்டத்தைப் பண்ணித்தரும் அது.**

**அநிஷ்டமாகிறது, அவித்யையும், அவித்யா கார்யமான ராக த்வேஷங்களும், புண்ய பாபரூபமான கர்மங்களும், தேவாதி சதுர்வித ஶரீரங்களும், ஆத்யாத்மிகாதி துக்க பரம்பரைகளும்;**

**இஷ்டமாகிறது, புண்ய பாப நிவ்ருத்தியும், ஶரீர விஶ்லேஷமும், அர்ச்சிராதி மார்க கமநமும், பரமபத ப்ராப்தியும், ப்ரமாத்ம தர்ஶநமும், குணாநுபவ கைங்கர்யங்களும்.**

பிள்ளைலோகாசாரியார், ஶ்ரிய:பதிப்படி

என்று விளக்கினார்.

**கீழ்ச்சொன்ன மூன்றும் (ஶ்ரீமந், நாராயண, சரணௌ) ப்ராப்யமிறே. இவன் செயலறுதியாலே** (செயல் அற்று போகையாலே) **உபாயம் ஆக்குகிறான் இத்தனை.**

பிள்ளைலோகாசாரியார், முமுக்ஷுப்படி 151-152

அகிஞ்சன், அநந்யகதியான சேதனன் போக்யத்தையே உபாயமாக்குகிறான்.

## 9-5 திருவடிகளுக்கு திருவடிகளே உபாயம்

**உபாயே க்ருஹ ரக்ஷித்ரோ: இத்யாதிகளிலே "ஶரண ஸப்தம் உபாயார்த்தைகவாசகம்" என்று நிஷ்கர்ஷிக்கை சேருமோ? என்னில் கோப்தாவானவன் தன்னையே அத்யந்த அகிஞ்சநனான அதிகாரி தன்னுடைய நிர்ப்பரத்வத்திற்கு உறுப்பாக பரந்யாஸத்தாலே உபாயந்தர ஸ்தாநத்திலே நிவேஸிக்கிற வாசி தோற்றுகைக்காக இங்கு "உபாயார்த்தைகவாசக:" என்று நிஷ்கர்ஷிக்கப்படுகிறது.**

ஸ்வாமி தேசிகன், விரோதி பரிகாரம் 86

ஸ்வாமி தேசிகன், விரோதி பரிஹாரத்தில் கீழே சொன்ன அஹிர்புத்ந்ய ஸம்ஹிதை ஸ்லோகத்தை எடுத்து விளக்குகிறார்.

prapatti.com

- ரக்ஷகத்வ மாத்ரத்தைச் சொன்னால் மற்ற அதிகாரிக்கும் பொதுவாகையாலும்
- க்ருஹத்தைச் சொன்னால் இங்கு அந்வயமில்லாமையாலும்
- ப்ராப்யத்தை விவேக்ஷித்தால் உபாயம் சொல்லிற்றாகாமையும், உத்தர கண்டத்தோடு புநருக்தி வருகையாலும்
- இங்கே ஶரணம் என்கிற ஶப்தம் உபாயர்த்த வாசகமாக நிஷ்கரிக்கப் பட்டது
  ஸ்வாமி தேசிகன், ஸார ஸாரம்

என்று ஸ்வாமி தேசிகன் ஸாதித்தார்.

ஶரண பதத்திற்கு ரக்ஷகன், காத்தருள்பவன் என்ற பொருளை இங்கு கொள்ள முடியாது. பகவான் பொதுவாக எல்லோரையும் காப்பவன். ஶரணகதி பண்ணியவனை மட்டும் காப்பது என்று விசேஷித்து சொல்வதில்லை அதனால் ஶரணம் என்றால் காத்தல் என்ற பொருள், என்பது இங்கே சரி வராது.

ஶரண பதத்திற்கு, வீடு என்ற பொருளையும் கூறவும் முடியாது. வழியைச் சொல்ல வந்த முதல் வரியில் பலனை சொல்வது பொருந்தாது. மேலும், பின் வரி பலனையே சொல்வதால், அதை இங்கு மற்றும் ஒரு முறை திருப்பிக் கூறுவது ஒவ்வாது (redundant).

அதனால் ஶரண பதத்திற்கு, உபாயம் என்கிற பொருளே இங்கே சரியானது என்று ஆசாரியர்கள் ஸாதித்தனர்.

## 9-6 ப்ரபத்யே இருக்கும்போது ஶரணம் பதம் அவசியமா?

இங்கு ஒரு கேள்வி எழும். ப்ரபத்யே என்று அடுத்து வரும் பதம், பகவானை ஶரணம் அடைவதை நன்கு காட்டுகிறது. சாஸ்திரங்கள் பகவானை உபாயம் என்று சொல்கிறது. அது எல்லோருக்கும் பொதுவாய் இருப்பது. அப்படி

இருக்க, இங்கே ஶரணம் என்ற பதம் உபயோகித்து உபாயம் என்று தெரிவிப்பது மிகையாகாதா? (superfluous, extraneous).

ப்ரபத்தி ஒரு நூதமான முறை (Novel procedure). எம்பெருமான் ஸாத்யோபாயமாய் நிற்கிறான். சேதனன் ஶரணாகதி என்று ஸித்தோபாயமாய் அவன் திருவடிகளில் விழுந்து ஆகிஞ்சன்ய, அநந்யக்திவத்தை முன்னிட்டு தன்னால் பக்தி யோகம் செய்ய சக்தி இல்லை என்றும். அந்த பக்தி ஸ்தானத்தில் எம்பெருமானே நின்று பலனை அருள வேண்டும் என்ற விவரணத்தை காட்டுவதற்காகவே மிகுதியாக ஶரணம் என்ற பதம் கையாளப் பட்டது.

இந்த பதில் இன்னும் வேறு கேள்விகளை உண்டாக்குகிறதே? (Wait a second), ப்ரபத்தி என்பது பக்தி போன்ற யோகங்களை செய்து முடிக்க முடியாதவர்களுக்கு என்று விதிக்கப் பட்டுள்ளது. அப்படி இருக்கும்போது தன்னால் இயலாத பக்தி ஸ்தானத்தில் பகவானை போய் நிறுத்துவதாவது?

ப்ரபத்தி செய்யும் சேதனன் தன் ஆகிஞ்சன்யத்தை உணர்கிறான். அநந்யக்திவத்தை முன்னிட்டு எம்பெருமானே! கைம்முதல் அற்ற எனக்கு இந்த அல்பமான, வியாஜமான ப்ரபத்தி என்ற காரியத்திற்கு நீ மனது இரங்கி, செய்வதற்கு அரிய பக்தி யோகம் செய்தால் என்ன பலன் கிடைக்குமோ அதை தந்து அருள வேண்டும் என பிராத்திக்கிறான். பலனை கொடுப்பவன் பகவானே. ஆகவே பகவான் பக்தி யோக ஸதானத்தில் இருப்பதாக சொல்லப்பட்டது.

## 9-7 மற்று ஒரு தெய்வம் தொழும்

ஓடியோடிப் பல பிறப்பும் பிறந்து * மற்றோர் தெய்வம் *
பாடியாடிப் பணிந்து * பல் படிகால் வழியேறிக் கண்டீர் *
கூடி வானவர் ஏத்த நின்ற * திருக்குருகூர் அதனுள் *
ஆடு புட்கொடி ஆதிமூர்த்திக்கு * அடிமைப் புகுவதுவே
நம்மாழ்வார் திருவாய்மொழியில் 4-10-7

நம்மாழ்வார் திருவாய்மொழியில் நின்ற இடத்தில் இல்லாமல், ஒடித்திரிந்து பல பிறப்பும் பிறந்து மீதி தெய்வங்களைப் பாடி பணிந்து என்ன பயன்? அந்த தெய்வங்களே பிறவி என்னும் நோய்க்கு மருந்தை மருத்துவனாய் நின்ற மாமணி வண்ணணின் அடி வணங்கிதான் பெறுகிறார்கள். அதனால் பரம ப்ராப்யம் என்பது அவனடி சேர்வதுதான் என்றார்.

**தேவும் எப்பொருளும் படைக்க ***
**பூவில் நான் முகனைப் படைக்க ***
**தேவன் எப்பெருமானுக்கு அல்லால் ***
**பூவும் பூசனையும் தகுமே?**
நம்மாழ்வார் திருவாய்மொழியில் 2-2-4

நம்மாழ்வார் திருவாய்மொழியில் ஸாதித்தார். இந்த பாசுரமும் ராமானுஜரின் சிஷ்யரும், பட்டருடைய ஆசாரியருமான எம்பாரை ஸம்ப்ரதாயத்திற்கு திருப்பிய கதை மிகவும் பிரபலமானது.

**முதல் ஆவார் மூவரே * அம் மூவருள்ளும் ***
**முதலாவான் * மூரிநீர் வண்ணன் * - முதலாய**
**நல்லான் அருள் அல்லால் * நாமநீர் வையகத்துப் ***
**பல்லார் அருளும் பழுது**
பொய்கையாழ்வார் முதல் திருவந்தாதி 15

என்று பொய்கையாழ்வார் முதல் திருவந்தாதியில் மற்ற தேவர்கள் செய்யும் தயையான செயல்கள் எல்லாம் வீண். நீர்மை நிறத்தவனான திருமாலின் அருள் மட்டும்தான் நம்மை உய்விக்கும் என்றார்.

**அறியார் சமணர் * அயர்த்தார் பவுத்தர் ***
**சிறியார் சிவப்பட்டார் செப்பில் * - வெறியாய**
**மாயவனை மால் அவனை * மாதவனை ஏத்தாதார் ***
**ஈனவரே ஆதலால் இன்று**
திருமழிசையாழ்வார், நான்முகன் திருவந்தாதி 6

திருமழிசை ஆழ்வார் நான்முகன் திருவந்தாதியில் சொல்கிறார், "நான் பல சமயங்களுக்கு போனேன் பரம் பொருள் என்ன என்று அறிய வேண்டி.

ஆராய்ந்து எல்லாம் அறிந்தபின் பரத்தை அளிப்பவன் திருமால் ஒருத்தனே என்று தெரிந்தது" என்றார்.

## 9-8 யமனும் விலகும்

**ஸ்வ புருஷம் அபி₄வீச்ஷ்ய பாசஹஸ்தம்**
**வத₃தி யம: கில தஸ்ய கர்ணமூலே ।**
**பரிஹர மது₄ஸூதந பரபந்நாந்**
**ப்ரபு₄: அஹம் அந்ய ந்ருணாம் ந வைஷ்ணவாநாம் ॥**
பராசர மஹரிஷி, ஸ்ரீவிஷ்ணு புராணம் 3-7-14

விஷ்ணு புராணத்தில் சொல்கிறார். யமன் கையில் பாசக் கயிற்றுடன் கிளம்பிய தன் ஸேவகனிடம் சொல்கிறான், அருகில் அழைத்து காதில் ரகசியமாக, மதுஸீதனை ஸரணம் அடைந்தவர்களை விட்டுவிடு. வைஷ்ணவர்கள் தவிர மீதி இருப்பவருக்கு நான் தலைவன் (I have no jurisdiction over vaishanavas) என்று.

நான்முகன் திருவந்தாதியில், திருமழிசைப்பிரான் இந்த புராண ஸ்லோகத்தையே எடுத்துக் காட்டுகிறார்.

**திறம்பேன்மின் கண்டீர் திருவடி தன் நாமம்**
**மறந்தும் புறந்தொழா மாந்தர் - இறைஞ்சியும்**
**சாதுவராய்ப் போது மின்கள் என்றான் நமனும் தன்**
**தூதுவரைக் கூவிச் செவிக்கு**
திருமழிசைப்பிரான், நான்முகன் திருவந்தாதி 68

"நான் சொல்லும் இந்த வார்த்தைகளை மீறி விடாதீர்கள். எம்பெருமானிடம் உள்ள பயத்தால், யமனும் தன் ஸேவகர்களிடம் ரகசியமாக கூறுகிறான், எம்பெருமான் திருநாமத்தை மறந்தவர்களாக இருந்தாலும் சரி ஆனால், மற்ற தேவதைகளை ஸேவிக்காதவர்களைக் கண்டால், நீங்கள் அஞ்சி வணங்குங்கள் என்று கட்டளையிட்டான்" என்றார்.

ஒருவனுடைய உயிரை கொண்டு வரும்படி யமனே ஒலை எழுதி அனுப்பினாலும், அவன் வைஷ்ணவன் ஆகில் யம தூதன் அதை மறுக்கலாம் என்று பொருள்.

பரபிரம்மாகிய எம்பெருமானை ஶரணம் பற்றியவர்கள், ஒரு வேளை அந்த ஸ்ரீமந் நாராயணனை மறந்தாலும் பரவாயில்லை. மற்றும் ஓர் தெய்வங்களை தொழாமல் இருந்தால் போதுமானது.

திருமணம் ஆனபிறகு, மனைவி ஒருத்தி, தன் கணவனிடத்தில் அன்பு இல்லாமல் இருந்தாலும் சரி, பாதகம் இல்லை. நாளடைவில் மெதுவாய் அன்பு பிறக்க வழி உண்டு. அவளுடைய கணவன் - மனைவி எனும் உறவிற்கு அழிவு இல்லை. ஆனால் அவள் இவனை விட்டு வேறு ஒருவனை பிடித்துக் கொண்டால் தன் கணவனால் இழக்கப்படுகிறாள் அல்லாவோ!

**அவன் தமர் * எவ்வினையர் ஆகிலும் * எங்கோன்**
**அவன் தமரே * என்று ஒழிவது அல்லால் * - நமன் தமரால்**
**ஆராய பட்டு * அறியார் கண்டீர் * அரவணை மேல்**
**பேராயற்கு ஆள் பட்டார் பேர்**

பொய்கையாழ்வார், முதல் திருவந்தாதி 55

என்று பொய்கையாழ்வார் "அவனுடைய அடியவர்கள் எத்தனை பாபங்கள் செய்திருப்பினும், அவர்கள் பகவத் பாகதர்கள் ஆயிற்றே என்று யம படர்கள் விலகிப் போவார்கள் அதுவே தவிர, அந்த யம படர்கள் இவர்களின் பேரை ஆராயவும் வாய்ப்பில்லை. பிராட்டியே ஆராயும்போது பகவான் என் அடியார் அது செய்யார்" என்று ஆராய மறுத்து உள்ளானே!

இங்கே ஒரு நிகழ்ச்சியை சொல்வார்கள். பராஸர பட்டரிடம் கேட்டார்களாம் "நீர் இவ்வளவு ஆசாரம் அனுஷ்டானமாய் இருக்கிறீரே, வெளியே செல்லும்போது ரிஷப வாகனமாய் மழு ஏந்தி சடையில் சந்திரனுடன் விளங்கும் சிவபிரான் எதிரே எழுந்தருளினால் நீங்கள் செய்யும் ஆசாரம் யாது?" என்று வினவினார்கள்.

அவரும் “கேள்வியே சரியில்லையே? நான் செய்யும் ஆசாரம் யாது என்று வினவாமல், அந்த தேவதைகள் ஸ்ரீமந் நாராயணனின் திருவடிகளை ஆஸ்ரயித்து பரமைகாந்திகளாய் இருக்கும் அடியவர்களைக் கண்டு அவைகள் என்ன செய்யும் என்று கேள்” என்றார்.

## 9-9 தொல்வினை உன்னித்து தீர்க்கும்

**உன்னித்து மற்றொரு தெய்வம் தொழாள் * அவனை அல்லால் ***
**நும்மிச்சை சொல்லி * நும் தோள் குலைக்கப்படும் அன்னைமீர் ***
நம்மாழ்வார் திருவாய்மொழியில் 4-6-10

என்று நம்மாழ்வார், திருவாய்மொழியில் ஸீதையின் பதிவ்ரதா தர்மத்தை காட்டுகிறார்.

**மயி ச அநந்ய யோகே₃ந ப₄க்தி: அவ்யபி₄ சாரிணீ ।**
பகவத் கீதை 13-10

பகவத் கிதையில் கிருஷ்ணன் சொல்கிறான். **(மயி ச)** பரமாத்வான என்னிடத்தில் **(அநந்ய யோகே₃ந)** வேறு வேறு தெய்வங்களை நினைக்காமல், வேறு ஒரு விதமான யோகத்தை நினக்காமல் என்னிடமே **(அவ்யபி₄ சாரிணீ ப₄க்தி)** பிறழாத பக்தி பண்ண வேண்டும் என்றான்.

பகவான்தான் பரம், உயர்ந்த பொருள். அவர்தான் தாய், தந்தை, மற்றைய உறவி எல்லாம். நமக்கு எல்லாவிதமான நன்மை செய்பவர் அவரே. அவரே நமக்கு புகலிடம். ஶரணாகதி செய்ய தகுதி உடையவர் அவர் ஒருவரே. இந்த நினைவுடன், பகவானுக்கும் நமக்கும் உள்ள உறவை எண்ணி அவனிடம் வேறு ஒரு பலனும் கருதாது அன்பு, பக்தி, காதல் செய்வதே அநந்ய யோகம் என்றான்.

prapatti.com

இப்படி பக்தி செய்பவன் தான் தனது என்ற அகங்கராங்கள் இன்றி எல்லாம் பகவானுடையவை என்று ச்ரத்தையுடன் நிஷ்காமமாக பகவானுக்கே எல்லாவற்றையும் அர்பணிப்பான்.

**மாம் ச ய: அவ்யபி₄சாரேண ப₄க்தி யோகே₃ந ஸேவதே ।**
பகவத் கீதை 14-26

என்று பகவத் கீதையில், கிருஷ்ணன் மேலும், "எவன் வேறு எதிலும் நாட்டமில்லாத பக்தி யோகத்தினால் என்னை இடைவிடாது பக்தி செலுத்துகிறானோ" என்றான்.

**ஆவியை - அரங்கமாலை * அழுக்குடம்பு எச்சில் வாயிலில் ***
**தூய்மையில் தொண்டனேன் நான் * சொல்லினேன் தொல்லை நாமம்**
**பாவியேன் பிழைத்தவாறு என்று * அஞ்சினேன் அஞ்சல் என்று**
**காவிபோல் வண்ணர் வந்து என் * கண்ணுளே தோன்றினாரே**
திருமங்கையாழ்வார் திருக்குறுந்தாண்டகம் 12

திருக்குறுந்தாண்டகத்தில், திருமங்கையாழ்வார், "என்னுடைய அழுக்கு உடம்பாலும், எச்சில் வாயாலும், பகவானின் அற்புதமான திருநாமங்களைச் சொல்லி அதை அசுத்தமாக்கிவிட்டேன். என்ன அபசாரம் பண்ணிவிட்டேன்", என்கிறார்.

என் உடம்பு அழுக்கானது என்கிறார். மஹான்களுக்குகூட பிரகிருதி ஸம்பந்தந்தமான, அழியக்கூடிய சரீரம்தானே. இரண்டு நாள் குளிக்காமல் இருந்தால் அழுக்கு ஆகாதா? என்று கேட்கலாம். ஆனால் இந்த உடம்பில் வந்த அழுக்கு அதுவல்ல. பாபங்களான அழுக்கு. அநாதி காலமாய் சேர்த்து வைத்த அழுக்கு. எச்சில் வாய் என்பது காணக்கூடாதவர், ஒதுக்கப்பட்டவர் காலிலே விழுந்து, துதிக்க கூடாதவர்களை ஸ்தோத்ரம் செய்தலால் வந்தத்தது.

**ஒன்றெனப் பலவென * அறிவரும் வடிவினுள் நின்ற ***
**நன்றெழில் நாரணன் * நான்முகன் அரன் என்னும் இவரை ***
**ஒன்ற நும் மனது வைத்து * உள்ளிநும் பசை அறுத்து ***

**நன்றென நலம் செய்வது * அவனிடை நம்முடை நாளே.**
நம்மாழ்வார், திருவாய்மொழி 1-3-7

என்று நம்மாழ்வார் கூறுகிறார், “ஹே மக்களே! நீங்கள் பிரமன், விஷ்ணு, சிவன் என்ற மூன்று மூர்த்திகள் தனித்தனியா? இல்லை இவர்கள் எல்லாம் ஒரே ஆத்மாவா? என்று அறிய முற்படுகிறீர்கள். இதை அறிவது கஷ்டம்.”

“நாராயணன், எண்ணற்ற குணங்களுடன், பல ரூபங்களில் பிரகாசமாய், அழகாய் உள்ளான். நீங்கள் என்ன பண்ணுகிறீர்கள்? மற்ற தெய்வங்களை அந்த நாராயணனோடு சேர்த்து ஒட்டி உங்கள் மனத்தில் வைத்துள்ளீர்கள். அந்த பசையை வேரோடு பிடுங்கி எறிந்து பரதத்வமான நாராயணனிடம் பக்தி செலுத்துங்கள்,” என்றார்.

இதை உடனே செய்யுங்கள். ஏன் என்றால் வாழ்க்கை மிகக் குறுகியது.

## 9-10 தீர்க்கும் இறையே

பகவான் தன் திருவடிகளைக் காட்டியதும், அவனுடைய பெருமையை அறிந்து கொண்டேன். பொருளில்லாத என்னை பொருளாக்கினாய்

**த்வதேக3 ஶேஷோ஽ஹ மநாத்மந தந்த்ர:**
**த்வத் பாத3 லிப்ஸாம் தி3ஶதா த்வயைவ ।**
**அஸத் ஸமோ஽ப் யஷ்டபு4ஜாஸ்பதே3ஶ**
**ஸத்தாம் இத3ாநீம் உபலம்பி4தோ஽ஸ்மி ।।**
ஸ்வாமி தேசிகன், அஷ்டபுஜாஷ்டகம் 6

என்று ஸ்வாமி தேசிகன் அஷ்டபுஜாஷ்டகத்தில் ஸாதிக்கிறார் “திரு அட்டபுயகரத்து எம்பெருமானே. நான் உனக்கு ஒருவனுக்கே அடிமையானவன், எனக்கு சுதந்திரம் என்பதே இல்லாதவன். (பரதந்த்ரன்) நான் இல்லாத வஸ்துவைப்போல் (like nonexistent substance) உள்ளேன். உன் திருவடிகளை பெற ஆசையை உண்டாக்குகிற உன்னாலேயே இருக்கும்

தன்மையை (existent substance ஆக) இப்பொழுது அடையப் பெற்றவனாக இருக்கிறேன்” என்றார்.

**மற்றோர் தெய்வம் எண்ணேன் *
உன்னை என் மனத்துவைத்துப் பெற்றேன்*
பெற்றதுவும் * பிறவாமை எம்பெருமான் ***
திருமங்கையாழ்வார், பெரிய திருமொழி 6-3-5

என்று “வேறு தேவதைகளை மனத்தினால் கூட நினைக்க மாட்டேன். உன்னையே நினைத்து மகிழ்வேன். அதனால் எம்பெருமானே எனக்கு ஸம்ஸாரத்திலிருந்து விடுதலை கிடைத்தது,” என்றார்.

**நெஞ்சில் உய்யும்வகை உணர்ந்தேன் * உண்மையால் இனி *
யாதும் மற்றோர் தெய்வம் பிறிது அறியேன் * திருவிண்ணகரானே**
திருமங்கையாழ்வார், பெரிய திருமொழி 6-3-5

“ஆத்ம உஜ்ஜீவனத்திற்கு வழி அறிந்து கொண்டேன். அந்த உண்மை என்ன என்றால், வேறோர் தெய்வத்தை துளிக்கூட நினைத்துப் பாராமை என்ற மெய்ப்பொருளை புரிந்து கொண்டேன்,” என்றார்.

**உனக்குப் பணிசெய்திருக்கும் தவம் உடையேன் *
இனிப்போய் ஒருவன் தனக்குப் பணிந்து *
கடைத்தலைநிற்கை *
நின் சாயை அழிவு கண்டாய் ***
பெரியாழ்வார், பெரியாழ்வார் திருமொழி 5-3-3

என்று பெரியாழ்வார்,

**சார்ந்த இரு வல்வினைகளும் * சரித்து மாயப் பற்று அறுத்து *
தீர்ந்து தன்பால் மனம் வைக்கத் * திருத்தி வீடு திருத்துவான் ***
நம்மாழ்வார், திருவாய்மொழி 1-3-7

என்று நம்மாழ்வார் கூறுகிறார், “என்னுடைய புண்ய, பாபங்கள் என்ற அநாதி காலமாய் தொடர்ந்து கொண்டு இருக்கும் கர்மாவை ஒழிக்கிறான்.

prapatti.com

மயக்கத்தினால் உலகத்து பொருள்கள், வேறு அல்ப தேவதைகளை வேண்டுதல் இவற்றை எல்லாம் பிடுங்கி எறிகிறான்".

தான் பர தத்துவம் என்ற உண்மையை தெளிய வைத்து, அந்த நிஷ்டையிலேயே என் மனதை நில நாட்டி, போதாக்குறைக்கும் மோக்ஷத்தையும் அளிக்கிறான்," என்றார்.

## 9-11 மன்னித்து அருளும்

**ரகு₄வர! யத₃பூ₄ஸ்த்வம் தாத்₃ருஸோ வாயஸஸ்ய**
**ப்ரணத இதி தயாளுர் யச்ச சைத்யஸ்ய க்ருஷ்ண!**
**ப்ரதிப₄வ மபராத்₃து₄ர் முக்₃த₄ ! ஸாயுஜ்யதோ பூ₄:**
**வத₃ கிம பத₃மாகஸ்தஸ்ய தேSஸ்தி க்ஷமாயா:**

ஆளவந்தார் ஸ்தோத்ர ரத்னம் 63

ஆளவந்தார் ஸ்தோத்ர ரத்னத்தில் "பகவானே, நீ ராமனாக அவதரித்து கடுமையான பாபம் செய்த காகாசுரனுக்கு ஶரணாகதன் என்று அருளினாய். தோஷங்களை அறியாத கிருஷ்ணனாய் அவதரித்து ஜனந்மந்தோறும் அபராதம் செய்த சேதி குலத்தவனான ஸிஶுபாலனுக்கு மோக்ஷம் கொடுத்தாய் அப்படிப்பட்ட உன்னுடைய பொறுமை.ம எனும் திருக்க்ல்யாண குணத்தால் பொறுக்க முடியாத பாபம் என்ன இருக்கிறது? நீ அருள வேண்டும்," என்றார்.

**அருளாது ஒழிவாய் * அருள் செய்து * அடியேனைப்**
**பொருளாக்கி * உன் பொன்னடிக்கீழ்ப் புக வைப்பாய் ***
**மருளே இன்றி * உன்னை என் நெஞ்சத் திருத்தும் ***
**தெருளே தரு * தென்திருநாவாய் என் தேவே!**

நம்மாழ்வார், திருவாய்மொழி 9-8-8

என்று திருவாய்மொழியில் நம்மாழ்வார் சொல்கிறார். திருநாவாய்ப்பிரானே நீ அருள் செய்து என்னை ஒரு பொருளாக ஏற்று உன் திருவடித்தாமரையின்கீழ் பணி செய்ய ஆக்கி வைத்தாலும் சரி, அருள் செய்யாமல் இருந்தாலும் சரி,

என்னுடைய அஞ்ஞானத்தை நீக்கி என் மனத்தில் உன்னை வைத்து போற்றும்படி செய், அது ஒன்னே போதும் எனறார்.

**வந்து உன்னை ***
**எய்தலாகும் என்பர் * ஆதலால் * எம்மாய நாயினேன்**
**செய்த குற்றம் நற்றமாகவே * கொள் ஞால நாதனே**
திருமழிசையாழ்வார், திருச்சந்தவிருத்தம் 111

என்று திருமழிசையாழ்வார் "பகவானே! எத்தனை அபராதங்கள் செய்து இருந்தாலும் அதை அறிந்து வருந்தி, உன் பாதங்கள் பற்றி திருந்தினால் உன் அருள் நிச்சயம் என்று ப்ரமாணங்கள் சொல்கின்றனவே, அதனால், உன் திருவடிகளை பற்றினேன். ஆச்சரியமான செயல்களை நடத்துபவனே!, நான் செய்த குற்றங்கள் எல்லாம் காணாது என்னை மன்னித்து அருள்வாய், திருவின் நாயகனே!, என்றார்.

## 9-12 சீமாதவன் மலரடிகள் மருவ

**மாற்பால் மனம் சுழிப்ப * மங்கையர்தோள் கைவிட்டு ***
**நூற்பால் மனம் வைக்க நொய்விதாம் * - நாற்பால**
**வேதத்தான் வேங்கடத்தான் * விண்ணோர் முடிதோயும் ***
**பாதத்தான் பாதம் பணிந்து**
பேயாழ்வார் மூன்றாம் திருவந்தாதி 14

என்றார் பேயாழ்வார். திருவேங்கட மலையில் எழுந்தருளியிருக்கும் எம்பெருமான் நான் வேதத்தாலும் சிறப்பு பெற்றவன். நித்யஸூரிகள் எல்லோரும் தங்கள் தலையில் இருக்கும் கிரீடத்துடன் அவன் திருவடியில் வைத்து வணங்குகின்றனர்.

"அந்த திருமாலிடத்து மனம் ஈடுபட்டு, அது ஒரு சுழல் போல என்னை கவர்ந்து இழுக்க, சாஸ்திரங்களில் என் ஊக்கம் மிகுந்து நிற்க, மீதி அல்ப விஷயங்களான பெண்களின் தோள்களை அணைக்க வேண்டும் என்னும்

ஆசை எல்லாம் பறந்து போய்விட்டன. இதற்கு எல்லாம் காரணம், எம்பெருமானே உன் திருவடிகளை அடைந்ததனால்," என்றார்.

**க்ருஷ்ண த்வதீ₃ய பத₃ பங்கஜ பஞ்ஜராந்தம்**
**அத்₃யைவ மே விஶது மாநஸ ராஜஹம்ஸ: ।**
**ப்ராண ப்ரயாண ஸமயே கப₂வாத பித்தை:**
**கண்ட₂ாவரோத₄ந விதௌ ஸ்மரணம் குதஸ்தே ॥**

"என்னுடைய மனம் என்கிற உயர்ந்த அன்னப் பறவை உன்னுடையதான திருவடித் தாமரைகளாகிய கூட்டினுள் இன்றே நுழையட்டும்," என்றார்.

**உன்ன பாதம் என்ன சிந்தை மன்ன வைத்து நல்கினாய் ***
**பொன்னி சூழ அரங்க மேய புண்டரீகன் அல்லையே**
திருமழிசையாழ்வார், திருச்சந்தவிருத்தம் 55

என்று திருமழிசையாழ்வார், "நித்ய, முக்தர்கள் அனுபவிக்கும் உம் திருவடிகளை, பிறப்பு/இறப்பு சுழலில் விழுந்து தவிக்கும் என் மனத்திலே ஒரு க்ஷணமும் பிரியாதபடி வைத்து அருளினாய். உன் வாத்ஸல்யம் என்னே?" என்றார்.

## 9-13 மற்று ஒன்று இன்றி நிறைவே.

**கருமாமுகில் உருவா! கனலுருவா! புனலுருவா!**
**பெருமால்வரையுருவா! பிறவுருவா! நினதுருவா!**
**திருமாமகள் மருவும் சிறுபுலியூர்ச் சலசயனத்து**
**அருமா கடலமுதே! உனதடியே சரணாமே**
திருமங்கையாழ்வார், பெரிய திருமொழி 7-9-9

என்று திருமங்கையாழ்வார், "மேகத்தை ஒத்த நிறத்தை உடைய பெரிய பெருமானே, பிராட்டியுடன் கூடி நிற்கும் உன் திருவடிகளை நான் சரண் அடைகிறேன்" என்றார்.

**இத்தால் சேர்த்தியழகையும், உபாயபூர்த்தியையும் சொல்லுகிறது.**
**பிராட்டியும் அவனும் விடிலும் திருவடிகள் விடாது; திண்கழலாயிருக்கும்**
பிள்ளைலோகாசாரியார், முமுக்ஷுப்படி 145-146

என்று பிள்ளைலோகாசரியரும் முமுக்ஷுப்படியில் ஸாதிக்கும்போது இந்த (சேர்த்தியழகையும்) இரண்டு திருவடிகளையும் விட மற்ற ஒன்றிற்கும் உபாய பூர்த்தி இல்லை என்றார். சேர்த்தி = சரணௌ, உபாய பூர்த்தி = ஶரணம்

**தொழுது ஆடி தூமணி வண்ணனுக்கு * ஆட் செய்து நோய் திர்ந்த ***
**வழுவாத தொல் புகழ் * வண் குருகூர்ச் சடகோபன் ***
நம்மாழ்வார், திருவாய்மொழி 4-6-11

என்று "எம்பெருமான் மணீ வன்னன், மாதவன் திருவடிகளை பனிந்து, அவன் தோத்திரங்களை சொல்லி, ஆடிப் பாடி, மனம் கரைந்து அவன் ஒருவனையே மனத்தில் கொண்டதால், தொல்வினை என்னும் கர்ம பந்தம் நீங்கப் பெற்றேன் நான்," என்றார் நம்மாழ்வார்.

**வேறு ஒரு அணங்கு தொழும் வினை தீர்த்து எமை ஆண்டிடுவான்**
**ஆறும் அதன் பயனும் தந்து அளிக்கும் அருளுடையான்**
**மாறு இலதாய் இலகும் மது மெல் அடிப்போது இரண்டால்**
**நாறு துழாய் முடியான் நமக்கு சரண் ஆயினனே**
ஸ்வாமி தேசிகன், துவயச்சுருக்கு 6

என்று ஸ்வாமி தேசிகன் த்வயச் சுருக்கில் ஶரண பததிற்கு பாசுரம் ஸாதிக்கிறார்.

மற்ற **(அணங்கு)** தெய்வங்களை பூஜித்தல், வணங்குதல் போன்ற காரியங்களை எல்லாம் விட்டு எம்மை **(ஆறும் அதன் பயனும்)** ஆட் கொள்ளும் உபாயத்தையும், அதன் பலனையும் கொடுக்க வல்லவ அவன் கருணா மூர்த்தி. வாசனை பெருகும் துளஸீ மாலையை சாத்திக்கொண்டுள்ள அந்த ஸ்ரீமந் நாராயணன், **(மாறு இலதாய் இலகும்)** அழிவற்றதாய், ஒளிவிட்டு ப்ரகாசிக்கும், **(மது மெல் அடிப்போது இரண்டால்)** அம்ருத்தை பெருக்குகின்ற மெல்லிய தன் இரண்டு திருவடித்தாமரைகளால் நமக்கு உபாயமாக ஆனான்.

prapatti.com

**ஹே கே$_3$ாபாலக ஹே க்ருபாஜலநிதே$_4$ ஹே ஸிந்து$_4$கந்யாபதே**
**ஹே கம்ஸாந்தக ஹே க$_3$ ஜேந்த்$_3$ ர கருணாபாரீண ஹே மாத$_4$வ ।**
**ஹே ராமாநுஜ ஹே ஜக$_3$ த்த்ரயகு$_3$ ரோ ஹே புண்ட$_3$ ரீகாக்ஷ மாம்**
**ஹே கோபீஜநநாத$_2$ பாலய பரம் ஜாநாமி ந த்வாம் விநா ॥**
குலசேகராழ்வார், முகுந்தமாலை 21

என்று குலசேகராழ்வார் சொல்கிறார். "மாடு மேய்ப்பவனே, கருணைக்கடலே, கடலிருந்து தோன்றிய லக்ஷ்மிக்கு நாதனே, கம்ஸனை கொன்றவனே, கஜேந்திரனை கருணையால் காத்தவனே, மாதவா, பலராமனின் தம்பியே, மூன்று லோகங்களுக்கும் ஆசாரியனே, கமலக் கன்னனே, கோபிகைகளின் அன்பனே, என்னை ரக்ஷிப்பாய். உன்னைத் தவிர வேறு ஒருவனையும் நான் அறியேன்.

## 9-14 ஶரண பதத்திற்கு ஸார ஸாரத்தில் அர்த்தம்

ஸ்வாமி தேசிகன் ஸார ஸாரத்தில் ஶரண பத்திற்கு அர்த்தம் ஸாதிக்கையில், ஐந்து ப்ரமாணங்களை காட்டி பகவான் ஒருத்தனே உபாயம் என்கிறார்.

1. **அம்ருதம் ஸாதநம் ஸாத்யம்.** விஷ்ணு தர்மத்தில் வரும் ஸ்லோகம். மோக்ஷமும், உபாயமும், ப்ரயோஜனமும் பகவானே.
2. **ராமோ விக்ரஹவாந் தர்ம:** ராமாயணம் ஆரண்ய காண்டம். ராமன் தர்மமே வடிவு எடுத்தவன்
3. **க்ருஷ்ணம் தர்மம் ஸநாதநம்** மஹாபாரதம் ஸ்லோகம் கிருஷ்ணனை நித்யமான தர்மமாக எல்லோரும் சொல்லுகிறர்.
4. **"ததே கோ பாயதா யாசநா"** பரத முனி லக்ஷண வாக்யம். பகவான் ஒருவனையே உபாயமாக இருக்க வேண்டும் என்று ப்ராத்திப்பது.
5. **த்வம் மே உபாய பூதோ மே"** அஹிர்புத்ய ஸம்ஹிதை வாசகம். நீயே எனக்கு உபாயமாக இருக்க வேண்டும் என்ற வேண்டுகோள்.

"இத்யாதிற்களிற்படியே ரக்ஷணோபயுக்த (காப்பதற்கு பயன்படும்) ஸர்வாகார விசிஷ்டனாய்க் (எல்லா அம்சங்களுடன் கூடியவன்) கொண்டு, பூர்வ ஸித்தனாய் (ஏற்கனவே அமைந்த ஸித்தோபாயமாய்), அவஸர ப்ரதீக்ஷனாய் (சந்தர்ப்பத்தை எதிர் பார்த்தவனாய்), வ்யாஜ மாத்ர ப்ரஸாதநீயனாய் (அல்ப செயலிலே மகிழ்பவனாய்) நிற்கிற ஸ்ரீயப்பதியே ஸித்தோபாயம். இது பக்தி ப்ரபத்திகளைப்போல் ஒன்றால் ஸாத்யமன்று.

அங்க ப்ரபத்தி பண்ணினவனுக்குப் போலே வேறோரு சுமை எடுக்காதே அகிஞ்சனுக்கு (கைம்முதல் அற்றவனுக்கு) உபாயந்த்ர ஸ்தானத்திலே (பக்தி யோக ஸ்தானத்திலே) நிற்கிறது. தத் ப்ரஸாத மாத்ரமே (அவன் திருவருள் மட்டுமே) ஸாத்யம்.

ஆகையால் அடைக்கலம் அடைந்தேன் என்கிற ஸாங்க ப்ரந்யாஸம் அதிகாரிக்ருத்யம் (ப்ரபத்தி செய்பவன் செயல்). ஸமர்ப்பித பரஸ்வீகாரம் (ஸமர்பித்த பொருளை ஏற்றுக் கொள்ளல்) ஸித்தோபாயமான ஈச்வரக்ருத்யம்.

"தவபரோஹ காரிஷி தார்மிகை" என்று ரங்கராஜஸ்தவத்தில் (2-102) பட்டர் ஸாதித்த முறையில் (தார்மிகை: தவ பர: அகாரிஷி அதாவது தார்மிகர்களான ஆச்சாரியர்களாலே உம்முடைய பரமாக என்னை ரக்ஷிக்கும் பொறுப்பு உன்னுடையதாக இருக்கும்படி செய்யப்பட்டேன் என்கிறது).

நிபுணனுக்குப் (ஆசாரியன் மூலமாகவே நிறைவேற்றிக் கொள்ளும் சாமர்த்யம் உடையவன்) பர ஸ்மர்ப்பணமும் ஆசார்ய க்ருத்யம். இவ்விரண்டு விஷயத்திலும் ஸ்வரூபானுரூபமான கைங்கர்யம் ஸ்வக்ருத்யம் (தன் கடமை).

இப்படி ஸித்தோபாயமான ஶரண சப்தத்தோடே அந்விதமான (தொடர்பு கொண்ட) "ப்ரபத்யே" என்கிற பதம் ஸாங்க பரஸமர்ப்பணத்தைக் காட்டுகிறது

ஸ்வாமி தேசிகன், ஸார ஸாரம்

என்று ஸார ஸாரத்தில் ஸ்வாமி தேசிகன் ஸாதித்தார்.

இங்கு என்ன சொல்கிறார் என்றால் ஸித்தோபாயம் என்பது இறைவன் இயல்பாக உயிர்களை காக்க கூடியவன் என்ற கருத்து. ஸாத்யோபாயம் என்பது சேதனர்கள் பக்தி ப்ரபத்தி போன்ற நெறிகளை கடைபிடிப்பது

**ரக்ஷா பேக்ஷாம் ப்ரதீக்ஷதே**

என்கிறபடி, என்னை நீ காத்து அருள வேண்டும் என்று சேதனனின் பிராத்தனையை எம்பெருமான் எதிர் பார்க்கிறான்.

## 9-15 பிள்ளை தந்தையிடம் கேட்கவும் வேண்டுமோ?

> **இது தன்னைப் பார்த்தால் பிதாவுக்குப் புத்திரன் எழுத்து வாங்குமாப்போலே இருப்பதொன்று**
> பிள்லைலோகாசாரியார், ஸ்ரீவசந பூஷணம் 55

என்று பிள்ளைலோகாசாரியரும் ஸ்ரீவசன பூஷணத்தில், அப்பா என்பவன் பிள்ளையை உண்டாக்கினவன். அவன் பிள்ளைக்கு எப்போதுமே நல்லதை நினைப்பவன். பிள்ளைக்கு புரியாத காலத்திலும், தெரியாத காலத்திலும், தகப்பனே முன் வந்து அவனை காப்பாத்துகிறான். இப்படி இருக்க பிள்ளை தனக்கு தெரியும் என்று எண்ணி, தகப்பனிடம் என்னை காப்பாத்த வேண்டும் என்று எழுத்து வாங்கினால் (contract signature) இருவரது உறவுக்கும் அது குற்றமாகும் என்றார்.

இங்கு பிள்ளைலோகாசாரியர் சரியாகாது என்று வாதம், ப்ரபத்தி ஸித்தோபாயம் ஆகாது என்பதை காட்டுகிறது. பகவான்தான் ரக்ஷகன். அவனை வசப்படுத்துவதற்கு சாஸ்திரங்களில் ப்ரபத்தியை சாதானமாய் சொல்லப்படுள்ளது. அதனால் ப்ரபத்தி என்பது ஸாத்யோபாயமே தவிர, சேதனன் செய்யும் ப்ரபத்தி ஒருக்காலும் ஸித்தோபாயமாகாது.

## 9-16 ப்ரபத்தி என்ற காரியம் அவசியம்தானா?

prapatti.com

தத்துவ ஞானம் அடைந்தவர்கள், அதாவது சேதனனுக்கும் எம்பெருமானுக்கும் உள்ள உறவை அறிந்தாலே போதுமே, அதுவே ஸாத்யோபாயமாக ஆகாதா? ப்ரபத்தி எதற்கு? என்று கேட்பவர்களும் உண்டு.

சாஸ்திரங்கள் வெளிப்படையாக (explicit) ப்ரபத்தியும் அதன் அங்கங்களையும் மோக்ஷத்திற்கு உபாயம் என்று விதித்துள்ளது.

## 9-17 ப்ரபத்யே இருக்கும்போது ஶரணம் அவசியமா?

மற்றொரு கேள்வி. ப்ரபத்யே என்று அடுத்த வார்த்தை. அது அடைக்கலமாய் பகவானைப் பற்றுகிறேன் என்று சொல்லும்போது ஶரணம் என்று ஒரு பதத்தை சொல்லி அதற்கு உபாயம் என்ற பொருளையும் தருவாவானேன்?

ப்ரபத்தி செய்யும் சேதனன் பக்தி போன்ற மற்ற யோகங்களைச் செய்ய சக்தி, ஞானம், பொறுமை அற்றவன். அதனால் ப்ரபத்தி செய்யும்போது "எம்பெருமானே நீயே பத்தி யோகத்தின் ஸதானத்தில் நின்று அது தரும் பலனை எனக்குத் தருவாயாக" என்று வேண்டி நிற்பது. அதை உறுதிப்படுத்தவே (empahsize) இங்கு ஶரணம் என்று உபயோகித்தது.

## 9-18 பக்தி யோக ஸ்தானத்தில் பகவானை வைப்பதாவது?

பக்தியோகம் செய்ய அருகதை அற்றவன்தான் ப்ரபத்தி செய்கிறான் என்றபோது, எதற்கு பக்தியோக ஸ்தானத்தில் எம்பெருமானை வைப்பது எப்படி சரியாகும்? என்று கேட்கலாம்.

பக்தியோகம் செய்ய தகுதியில்லாத சேதனன் வருந்தி பகவானிடம் தன் கீழ்மையான நிலையை சொல்லி வேண்டுகிறான். "பொன் வைக்கும் இடத்தில் பூ வைத்தாற்ப்போல்" தன் கைம்முதல் இல்லாத தன்மையை

வின்னப்பிக்கிறான். அதனால் பகவான் மகிழ்ந்து தானே பக்தி யோகத்தின் ஸதானத்திலிருந்து அருள் செய்கிறான் என்பது ப்ரபத்தியின் விசேஷம்.

> **பக்தி ஸ்தாநத்திலே ப்ரபத்தியை விதியா நிற்க உபாயந்தர ஸ்தாநத்திலே** (பக்தி யோக ஸ்தாநத்திலே) **ஈஶ்வரன் நிற்கிறான் என்பது அகிஞ்சநன்** (கைம்முதல் அற்றவன்) **திறத்தில் க்ருபாதி ஶயமுடைய ஈஶ்வரன் பக்தி அனுஷ்டித்தால் அதற்குத் தரக்கடவல்ல பலத்தை அல்ப வ்யாஜத்தாலே** (ப்ரபத்தி என்னும் சிறிய காரியத்தில்) **தரும் என்றபடி. இப்படிப்பட்ட உபாயத்வம் இவ்வித்யைக்கு** (ப்ரபத்திக்கு) **விசேஷித்து வேத்யாகாரம்** (சிறப்பாய் அறிந்து கொள்ள வேண்டியது).
>
> **ஸ்வாமி தேசிகன், ஸார ஸாரம்.**

என்று ஸாரஸாரத்தில் ஸ்வாமி தேசிகன் ஸாதித்தார்.

prapatti dot com

# 10 - ப்ரபத்

**உறுமதியில் உத்தமனையே உகந்தாரும்**
**மறுகதியின்றி மாவீரனைத் தொழுதாரும்**
**அரியென சக்கரத்தானை சார்ந்தாரும்**
**நெறியென ஒன்றே இன்றே பற்றினரே.**

**உறுமதியில்** = திடமான மனதுடன்
**உத்தமனையே** = புருஷோத்தமனான மந் நாரயணனை
**உகந்தாரும்** = பற்றி அடைந்தாரும்
**மறுகதியின்றி** = மறு பிறப்பை விலக்க
**மாவீரனைத்** மஹாவீரனான ராமனை
**தொழுதாரும்** = வணங்கியவரும்
**அரியென** = [பாபங்களை] அறுத்து தள்ளுபவன்
**சக்கரத்தானை** = என சக்கராயுதத்தை கையில் ஏந்தியவனை
**சார்ந்தாரும்** = அடைந்தவரும்
**ஒன்றே நெறியென** = [இந்த ப்ரபத்தி] ஒன்றே உபாயம் என
**இன்றே** = இப்பொழுதே
**பற்றினரே** = அடைக்கலமாய் அடைந்தனர்.

## 10-1 முன்னுரை

த்வயத்தில் **சரண** பதம் எம்பெருமானின் இரண்டு திருவடிகளை காட்டுகிறது. அது என்றும் ஸித்தமாக நமக்கு அருளக் கூடிய உபாயம், **ஸித்தோபாயம்.**

இங்கே **ப்ரபத்யே** என்றால் அடைகின்றேன் என்று பொருள். த்வயத்தில் **ஶரணம் ப்ரபத்யே** என்று சொல்லும்போது பரந்யாஸத்தை அதற்கு உரிய அங்கங்களுடன் செய்கிறேன் என்று பொருள்.

prapatti dot com

## 10-2 பாசுரத்தின் ஸாரார்த்தம்

பாசுரத்தின் முதல் சொல் **உறுமதியில்**. அதாவது திடமான மனத்துடன், அசைக்க முடியாத நம்பிக்கையுடன், மஹா விச்வாஸத்துடன் என்று பொருள். **பற்றினரே** என்பது கடைசி சொல். பகவனின் திருவடிகளை ஶரணமாக பற்றினர், ப்ரபத்தி செய்தனர்.

பரபத்தி ஒன்றுதான் நம்மைபோல் மந்த மதி படைத்தவர்கள் செய்ய கூடியது. அதுவோ மிக அல்பமான காரியம். மற்ற ஒன்றிற்கும் நாம் அருகதை அற்றவர்கள், அந்த எம்பெருமானின் திருவடிகள் தவிர வேறு கதி இல்லை என்று ஆகிஞ்சன்ய, அநந்யகதிவத்தை முன்னிட்டுக் கொண்டு செய்யும் பர ஸமர்ப்பணத்தை காட்டுகிறது.

## 10-3 ஸ்வாமி தேசிகனின் சுருக்கமான விளக்கம்

**ப்ரபத்யே என்ற இடத்தில் தாது (பத் எனும் வினைப்பகுதி) அத்யவஸாயத்தைக் (பொதுவாக அறிவு. இங்கே நம்பிக்கை) காட்டுகிறது. "ப்ர" என்ற உபஸர்கத்தாலே (உரிச் சொல் - adjective) இதின் மஹத்துவத்தை (மிகுதியை) சொல்லப் படுகிறது.**

**அடைக்கலம் புகுந்த என்னை அஞ்சல் என்ன வேண்டுமே,"**
திருமழிசையாழ்வார், திருச்சந்த விருத்தம் 92

**அடிக்கீழ் அமர்ந்து புகுந்தேன்**
நம்மாழ்வார், திருவாய்மொழி 6-10-10

**என்கிறபடியே மஹாவிச்வாஸாதிகளுடனே கூடின பரஸமர்ப்பணம் பண்ணுகிறேன் என்றதாயிற்று.**

**ஸக்ருத் தேவ ப்ரபந்நாய**

prapatti.com

வால்மீகி ராமாயணம் யுத்த 18-33

**ஸ்த்திதே மநஸி**

வராஹ சரம ஸ்லோகம்

**இத்யாதிகளிற்படியே ஸாங்க பர ஸமர்ப்பணம் (அங்கங்களுடன் செய்யும் ப்ரபத்தி) ஸக்ருத் கர்த்தவ்யம் (ஒரே முறை செய்ய வேண்டியது).**

**புகல் ஒன்றில்லா அடியேன்**

நம்மாழ்வார், திருவாய்மொழி 6-10-10

**என்கிறபடியே அதிகாரமும் (eligibility) ஸ்வரூபமும் தெளிந்த அநுஷ்டாதாவைக் (ப்ரபத்தி செய்பவனைக்) காட்டுகிறது.**

ஸ்வாமி தேசிகன், ஸ்ரீரஹஸ்யத்ரய சுளகம்

## 10-4 ப்ரபத்தி என்றால் என்ன?

ப்ரபத்தி என்பது **ஶரணாகதி, ந்யாஸம், அடைக்கலம், தஞ்சம், ப்ரந்யாஸம், பர ஸமர்ப்பணம்** என்று அழைக்கப்படும். ப்ரபத்யே என்பது உபாயமாக அடைகிறேன் என்று பொருள்.

இதில் **"பத்"** என்பது (தாது - root word) வினைப்பகுதி. இதில் கிடைக்கும் பொருள் **அடைதல், அறிதல். அறிவு, ஞானம்** என்றால் இது எந்த ஞானத்தை சொல்கிறது என்றால், எம்பெருமான் ஒருவனே தஞ்சம் என்று அடைக்கலம் புகுந்தால், அவன் நிச்சயம் நம்மை ரக்ஷிப்பான் என்ற திட நம்பிக்கை என்ற ஞானத்தை காட்டுகிறது.

**"ப்ர"** என்பது (உப ஸர்க்கம்) உரிச்சொல் (adjective) **சிறந்த முறை**யில் என்பதை காண்பிக்கிறது. எம்பெருமானின் ரஷகத்துவத்தின் மேல் உள்ள விசுவாஸத்தின் மிகுதியை காட்டுகிறது. இந்த மாஹாவிசுவாசமே ப்ரபத்திக்கு அங்கங்களான ஐந்திலும் இதுதான் மிக முக்யமானது என முன்னோர்கள் உரைத்தனர்.



prapatti dot com

ஆக ப்ரபத்யே என்றால் மஹா விச்வாசத்துடன் கூடிய ப்ரபத்தியை செய்கிறேன் என்று பொருள் ஆயிற்று.

## 10-5 ஶரணாகதி என்றால் என்ன?

**ஶரணாகதி ஶப்தேன ப்ரபத்திஸ்து விசேஷிதா**
நடாதூர் அம்மாள், பிர்பன்ன பாரிஜாதம் 26

என்று பிரபன்ன பாரிஜாதத்தில் ஸ்வரூப பத்ததியில் நடாதூர் அம்மாள் ஸாதித்தார். "பரத முனிவர், பிரபத்தி என்பதை ஶரணாகதி என்கிற சொல் நன்றாக விளக்குகிறது," என்கிறார்

**ப்ரபத்தி (ஒரே சொல்) அடைதல் என்று பொருள்.**
**ஶரணாகதி (இரண்டு சொற்கள்) = ஶரணம் + ஆகதி**
**= உபாயம் + வரவு.**

வேறு ஒரு உபாயத்திலும் பலனில்லை என்று அறிந்து எம்பெருமானிடமே வந்து அவனயே உபாயமாக கொள்வது.

உபாயத்திடம் வருவது என்பது அவனே உபாயம் என்ற முடிவுக்கு வருகை எல்லா நெறிகளிலும் இந்த ஶரணாகதிதான் உயர்ந்தது என்ற முடிவுக்கு வருவது. இதுதான் உயர்ந்த ஸத்யம் என்று அறிந்து செயல்படுவது

**தஸ்மாத் ந்யாஸமேஷாம் தபஸா மதிரிக்த மாஹு: ||**
தைத்ரிய நாராயண உபனிஷத்

தைத்ரிய நாராயண உபநிஷத் சொல்கிறது ஆகையால், இந்த ஶரணாகதியை, ஸத்யம் முதலிய ஸாத$_4$நங்களுள் மேலானதாக சொல்லுகிறார்கள்

## 10-6 த்வயத்தில் ஶரணாகதி

இப்படி உயர்ந்ததாய் இருக்கும் ஶரணாகதியை, ப்ரபத்தி என்ற சொல்லால் த்வயம் குறிக்கிறது ப்ரபத்யே என்ற பதத்தில், “பத்” என்கிற வினைப்பகுதி ஞானத்தைக் குறிக்கிறது. இங்கு அவசியமான ஞானம் என்ன? பகவான் நம்மை காப்பான் என்கிற நம்பிக்கைதான். “ப்ர” என்னும் உபஸர்க்கம் (adjective) அது மிகுந்து இருப்பதை காண்பிக்கிறது (extreme case of bhakthi).

ஆக “ப்ரபத்” என்பது மஹாவிசுவாஸத்தை சொல்கிறது நம்மிடம் குறை எந்த விதமாகவும், எவ்வளவு இருந்தாலும், நாம் அனுஷ்டித்த ப்ரபத்தியில் வசப்பட்ட எம்பெருமான் நம்மை நிச்சயம் காத்து அருள்வான் என்ற நம்பிக்கை (Unshakeable Faith).

இது எந்த இடத்தில் சொல்லியிருக்கிறது? பகவான் நிச்சயம் நம்மை காப்பான். நமக்கு அருள் புரிவான் என்று? என்று கேட்டால்

**உக்த்யா த$_4$நஞ்சய விபீ$_4$ஷண லக்ஷ்ய யா தே**
**ப்ரத்யாய்ய லக்ஷ்மண முநேர் ப$_4$வதா விதீர்ணம் |**
**ஶ்ருத்வா வரம் தத$_3$நுப$_3$ந்த$_4$ மதா$_3$வலிப்தே**
**நித்யம் ப்ரஸீத$_3$ ப$_4$க$_3$வந் மயி ரங்க$_3$நாத$_2$ ||**

ஸ்வாமி தேசிகன் ஸ்ரீந்யாஸதிலகம் 22

என்று ஸ்வாமி தேசிகன் ஸ்ரீந்யாஸதிலகத்தில் ஸாதிக்கிறார். “ஹே ஸ்ரீரங்கநாதா! **(தே உக்த்யா)** நீ உன் வார்த்தையால் கிருஷ்ணாவதாரத்தில் அருச்சுனனையும், ராமாவதாரத்தில் விபீஷணனையும், லக்ஷியமாக கொண்டு எல்லோருக்கும் **(ப்ரத்யாய்ய)** நம்பிக்கை ஏற்படுத்தினாய், எம்பெருமானாருக்கு நீயே அளித்த **(வரம் ஶ்ருத்வா)** வரத்தை நாங்கள் எல்லோரும் அவர் திருவாக்கால் கேட்டறிந்தோம். **(தத்$_3$ அநுப$_3$ந்த$_4$ம்)** அந்த உயர்ந்த ஜகதாசாரியருடைய திருவடி ஸம்பந்தம் உடையவன் என்ற **(மத அவலிப்தே)** கர்வம் நிறைந்துள்ள எனக்கு, நீ எப்பொழுதும் அருள் புரிந்திடு” என்றார்.

அந்த வரம் என்ன என்றால் - எம்பெருமானார், அவருடைய சிஷ்ய பரம்பரைகளில் வந்த ஆசாரியர்களிடம், உயர்ந்த ப்ரபத்தி என்னும் ந்யாஸ

வித்யை செய்தவர்கள் எல்லோருக்கும் எம்பெருமான் மோஷத்தை அளிக்கிறான் என்பதே.

இப்படி உலகத்தில் உள்ள ஸம்ஸாரிகள் அனைவரும் உஜ்ஜீவிக்க வேண்டும் என்று சாஸ்திரங்களின் ஸத்தாய், பரம ரஹஸ்யமாய் விளங்குவது ப்ரபத்தி. இதை ராமவதாரத்திலும், கிருஷ்ணாவதாரத்திலும் நிலை நாட்டி, பின் ஸ்ரீரங்கநாதனாய், ஸ்ரீபாஷ்யகாரருடன் ஸம்பாஷிக்கும்போது, பகவானே நீயே அகமகிழ்ந்து அருளினாய் என்கிறார்.

இங்கு ப்ரபன்னர்களின் செருக்கு என்பது உலக விஷயங்களை நோக்கி சொன்னது. அல்ப அஸ்திர பலன்களை விலக்குவதைக் காட்ட உதவும் பெருமையே தவிர மற்றவர்களை நோக்கி கர்வம் என்று கொள்ளக் கூடாது.

## 10-7 உறுமதியில் உத்தமனையே உகந்தாரும்

**ஸ்த்ரீப் ப்ராயம் இதரம் ஜகத்**

என்பது ப்ரபலமான வசனம் இது. பகவானைத் தவிர மீதி ஆண்களும், பெண்களுக்கு சமம் என்கிறது.

ஆத்மாவிற்கு ஜாதி, நிறம், ஆண், பெண் என்று எல்லாம் கிடையாதே என்று சொல்லும்போது எல்லா ஜீவராசிகளும் பெண்பால், பகவான் ஒருவன்தான் ஆண் என்று சொல்வது எப்படி பொருந்தும் என்றால் எ பகவான் ஒருவன்தான் ஸ்வதந்திரன். மற்ற எல்லாப் பொருள்களும் அவனைச் சார்ந்து பர தந்திரர்களாய் இருப்பதை பெண் என்றால் சுதந்திரம் அற்றவள் என்ற பொருள்பட காட்டியது.

எப்படி பதிவ்ரதையான பெண், தன் கணவனை பூஜிக்கிறாளோ, அதைப்போல் சேதனர்கள் எல்லோரும் பகவானை வணங்கி அவனுடைய கைங்கர்ய ப்ராப்த்திக்கு காத்து கொண்டு இருக்கவேண்டும்.

**நோற்ற நோன்பிலேன் நுண்ணறிவிலேன்**
**நம்மாழ்வார், திருவாய்மொழி 5-7-1**

என்ற நம்மாழ்வார் வாக்கின்படி, பகவானின் தயையில் பெரு நம்பிக்கை கொண்டு, தம்முடைய உபாய சூன்யத்தையை வெளியிட வேண்டும் என்கிறார்

**சிறப்பில் வீடு * சுவர்க்கம் நரகம் ***
**இறப்பில் எய்துக * எய்தற்கே * யானும்**
**பிறப்பில் * பல்பிறவிப் பெருமானை ***
**மறப்பொன்றின்றி * என்றும் மகிழ்வினே**
**நம்மாழ்வார் திருவாய்மொழி 2-9-5**

நம்மாழ்வார் திருவாய்மொழியில் சொல்கிறார். "ஒரே ஜ்ஞானம்தான் வேண்டும். நான் அவனுக்கு ஸேஷபூதன், அடிமை என்ற எண்ணம். அவனுக்கு பரதந்த்ரன். அவனுக்கேயாக என ஞானம்தான்"

"நான் ஸுவர்க்கம், நரகம், இல்லை திரும்பி இங்கு வந்து பிறந்தாலும் சரி. நான் யாராக இருந்தாலும் துயரம் இல்லை. பகவானை நினத்து நினைத்து உள்ளத்தில் ஆனந்திப்பேன்," என்றார்.

**பேரானைக் * குறுங்குடி எம்பெருமானை *, திருத்தண்கால்**
**ஊரானைக் * கரம்பனூர் உத்தமனை ***
**திருமங்கை ஆழ்வார் பெரிய திருமொழி 5-6-2**

திருமங்கை ஆழ்வார் பெரிய திருமொழியில் சொல்கிறார். ஊர் பெயரே உத்தமர் கோவில். ஸ்ரீரங்கத்துக்கு அடுத்த ஊர் திருக்கரம்பனூர், பிக்ஷாண்டார் கோவில் என்றும் சொல்வார்கள்.

சிவன் பிரம்மாவிற்கு தன்னைப்போல் தலைகள் இருப்பதை பார்த்து சகிக்க முடியவில்லை. அதனால், ப்ரம்மவின் தலை ஒன்றை கிள்ளி எறிந்தான். அந்த



prapatti.dot.com

தலை கபாலமாக கையில் ஒட்டிக் கொண்டது. ப்ரம்ஹஹத்தி தோச்ஷம் போக ஸ்ரீமந் நாராயணனிடம் பிச்சை கேட்கிறான் அந்த புருஷோத்தமன் இருக்கும் ஸ்தலம் இது.

மனிதர்கள் மூன்று வகை என்று சொல்லலாம்.

1. அதமன் பிறருக்கு தீமை செய்தே வாழ்பவன். இன்னொருத்தன் நன்றாக இருக்கக்கூடாது என்று எப்பொழுதும் நினைப்பவன்.
2. மத்யமன் பிறரும் ஜீவிக்கட்டுமே என்று நினைப்பவன் போனால் போகிறது, நம்மை மாதிரி தானே அவனும். அவனும் பிழைத்து போகட்டும் என்று நினைப்பவன்
3. உத்தமன் தனக்கு என்று இல்லாமல் பிறருக்கே கொடுப்பவன். தனக்கு கஷ்டம் வந்தாலும் மற்றவர்க்கு எப்பொழுதும் நல்லதை நினைப்பவன்

## 10-8 உத்தமன் வாமனன்

வாமனாவதாராத்தில், தேவர்களின் வேண்டுகோளுக்காக தன்னுடைய ஸ்வரூபத்தை மறைத்துக் கொண்டு யாசகனாக போன வாமனனை உத்தமன் என்கிறார்கள்

**மரணாந்தாநி வைராணி பிரஸவாந்தஞ்ச யௌவனம்**
**குபிதம் ப்ரணயாந்தஞ்ச யாசநாந் தஞ்ச கௌரவம்**

என்று பிரபலமான வசனம். மரணத்துடன் முடிவது பகைமை. பெண்களுக்கு இளமை என்பது ஒரு பிரஸவம் ஆகும் வரை. கூடலுடன் முடிவது கோபம். கௌரவம் என்றால் யாசகம் என்று அண்டாத வரை என்று.

**உத்தமன் பாதங்களில் தத்துவம் சொல்லியே**
**மத்தவை எல்லாம் சுத்தமிலை என தள்ளியே**
**வித்தகன் வியக்கும் தத்துவம் எத்தனை ஆனாலும்**
**அத்தனையுள் கண்டேன் காவலன் வாமனனே**

மங்கள ஸ்லோகம் 2, தேசத்தின் வாஸம்

வாமனவதாரம் என்பது மிக உயர்ந்த அவதாரம். சுத்தமான அவதாரம். கறை படாத அவதாரம். மூன்று காரணத்தாலே சிறந்தது. 1. ஸம்ஹாரம் இல்லை. 2. தன் அடியவருக்காக ஸகல லோகத்திற்கும் அதிபதி ஆனவன், யாசகம் செய்தல் 3. பகைவனின் பகைப்புத் தன்மையை (enemisim) அற்றேி அவனை உயர்த்தல்.

ஸ்வாமி தேசிகன் அதனால் ரக்ஷா வாமன (காவலன் வாமனன்) என்றார் தஶாவதார ஸ்தோத்திரத்தில்.

ஓங்கி உலகளந்த உத்தமன் பேர் பாடி *
நாங்கள் நம்பாவைக்கு சாற்று நீராடினால் *
ஆண்டாள், திருப்பாவை 3

என்று திருப்பாவையில் ஆண்டாள் வாமன/திருவிக்கிரம அவதாரத்தை உத்தமன் என்கிறாள்.

வாமன அவதாரம் ஒரு சுழல் மாதிரி. இதில் மயங்காத ரிஷிகள், அழ்வார்கள், ஆசாரியர்கள் இல்லை

பதிவ்ரதையான வால்மீகியும் பாடினான்

என்று வியாக்கியானத்தில் ஆசாரியர்கள் ஸாதிக்கிறார்கள். வால்மீகி பதிவ்ரதை மாதிரி. ராமனைத் தவிர வேறு எந்த பெருமாளையும் பாடுவதில்லை. அவரே வாமனனை எழுதி இருக்கிறார்.

விசுவாமித்திரர் யாகத்திற்கு ஸகாயம் வேண்டும் என்று ராம லக்ஷ்மணனை அழைத்து போகும் போது சற்று உட்கார்ந்தார். ராமனிடம், வாமனனால் அளக்கப்பட்ட மண், பூமி இது என்று சொல்வதாக ராமாயண ஸ்லோகம்

ஓங்கி உலகளந்த உத்தமன் பேர் பாடி (3ம் பாசுரம்)
அம்பறு மூடறுத்து ஓங்கி உலகளந்த ( 17, பாசுரம்)

**அன்றி இவ்வுலகம் அளந்தாய் அடி போற்றி ( 23ம் பாசுரம்)**

என்று ஆண்டாளுக்கு வாமனிடத்தில் அதிக ப்ரீதி. மூன்று அடி கேட்டு இந்த ப்ரபஞ்சத்தை அளந்ததால், மூன்று இடங்களில் திருப்பாவையில் பாடுகிறாள்

**வானிடை வாழும் அவ் வானவர்க்கு ***
**மறையவர் வேள்வியில் வகுத்த அவி ***
**கானிடைத் திரிவதோர் நரி புகுந்து ***
**கடப்பதும் மோப்பதும் செய்வதொப்ப ***
**உனிடை ஆழி சங்கு உத்தமர்க்கு என்று ***
**உன்னித்தழுந்த என் தட முலைகள் ***
**மானிடவர்க்கு என்று பேச்சுப்படில் ***
**வாழகில்லேன் கண்டாய் மன்மதனே.**
ஆண்டாள், நாச்சியார் திருமொழி

நாச்சியார் திருமொழியில், அந்த உத்தமனுக்கே தன்னுடைய சரீரம், ஆத்மா எல்லாம் என்று பாடுகிறாள்

**ஊரான் குடந்தை உத்தமன் * ஒருகால் இருகால் சிலை வளைய ***
**தேரா அரக்கர் தேர் வெள்ளம் செற்றான் * வற்றாவருபுனல் சூழ் ***
திருமங்கை ஆழ்வார், பெரிய திருமொழியில் 1-5-4

பெரிய திருமொழியில், திருமங்கை ஆழ்வார் உத்தமன் வாமனனைப் புகழ்கிறார்.

## 10-9 உத்தமன் கிருஷ்ணனே

இங்கு உத்தமன் என்பதை கிருஷ்ணன் என்றும் சொல்லாம்.

திரௌபதிக்கு துரியோதனன் ஸபையில் மான பங்கம் ஏற்படும்போது துச்சாசனன் பாஞ்சாலியின் புடவையை பிடித்து இழுக்கிறான் மான பங்கம் செய்ய. திரௌபதியின் ஐந்து கணவர்களும் உட்கார்ந்து இருக்கிறார்கள் ராஜ

prapatti dot com

சபையில் பல வீரர்கள், ஆசாரியர்கள் உட்கார்ந்து இருக்கிறார்கள் ஒருத்தரும் அதை தீர்க்க முன் வரவில்லை. சரீரம்தான் அவர்களுக்கு அங்கு இருக்கு. தடுக்கக் கூடிய செயலுக்கு மனஸ்ஸோ இல்லை தைரியமோ ஒருத்தருக்கும் இல்லை.

இப்பொழுதுதான் சொன்னோம் ஸ்த்ரீ ப்ராயம் இதரம் ஜகத் என்று. அதை நிருபிக்கிறார்கள். அநீதியை பார்க்கறார்களே தவிர, ஒரு ஆண் பிள்ளை மாதிரி தடுக்கா எவனாவது வந்தானோ?

கிருஷ்ணன், சரீரத்தில் அங்கு இல்லாவிட்டாலும், செயலில் அவன்தான் முன் வந்தான். ஆகவே அவன்தான் உத்தமன்

**ஹா க்ருஷ்ண த்$_4$வாரகா வாஸிந் க்வாஸி யாத$_3$வ நந்த$_3$ந**
**இமாம் அவஸ்தாம் ஸம்ப்ராப்தாம் அநாதா$_2$ம் கிமுபேக்ஷஸே**
**ஶங்க$_2$ சக்ர க$_3$தாபாணே த்$_3$வாரகா நிலயாச்யுத**
**கோ$_3$விந்த புண்ட$_3$ரீகாக்ஷ ரக்ஷ மாம் ஶரணாக$_3$தாம்**
வியாஸ பகவான், மஹா பாரததம் ஸாந்தி பர் 90-42, 43

மஹா பாரதத்தில் வரும் ஸ்லோகம். த்ரௌபதி, துச்சாதனன் துயில் உரியும்போது பொறுக்க முடியாமல், தன்னால் ஒன்றும் செய்ய முடியாத நிலையில், கதறுகிறாள்.

“ஹே கிருஷ்ணா!, த்வாரகையில் வசிப்பவனே, யாதவ குலத்தில் தோன்றிய நந்தனே, நீ எங்கே இருக்கிறாய்? இந்த கதியுடன் அநாதையாய் இருக்கும் என்னை ஏன் துன்புறுத்துகிறாய். சங்கு சக்கரங்களை ஏந்தியவனே, த்வாரகையில் நிலையாக நிற்பவனே.

**“ஆஶ்ரிதாந் நஶ்யாவயதி** என்கிறபடி, அச்சுதன் என்று தன் அடியாரை நழுவ விடாதவன் என்ற பெயர் உடையவனே. கோவிந்தா, சிவந்த தாமரை போன்ற கண்கள் உடையவனே. உன்னை ஶரணம் என்று அடைந்த என்னை காத்து அருள்வாய்” என்றாள் திரௌபதி.

prapatti.com

த்ரௌபதி வாக்யத்தில் **அநாதை என்பதால் ஆகிஞ்சன்யமும், புண்டரீகாக்ஷ ரக்ஷமாம் என்பதால் அநந்யக்தித்வமும், ஶரணாகதாம் என்பதால் ப்ரபத்தி ஆகிற அங்கியும்** காட்டடப்பட்டது.

## 10-10 உத்தமன் ராமன்

மனிதனுக்கு உபகாரம் யாராலும் இல்லை என்பதை பல இடங்களிலிருந்து தெரிந்து கொள்ளலாம்.

- அப்பா, அம்மாவால் பிரயோஜனம் இல்லை என்பதை காகசுரன் மூலமாய்,
- அப்பாவால் முடியாது என்பதை ப்ரஹ்லாதன் கதையில்,
- கூடப் பிறந்த சகோதரனால் முடியாது என்பதை விபீஷணனிடத்தில்
- கணவனால் காக்க முடியாது என்பதை திரௌபதியிடம்,
- உற்றார், உறவினர் என்று சொல்லக்கூடிய பந்துக்கள் யாரும் ஒன்றும் செய்ய முடியாது என்பதை கஜேந்தரனிடத்தில் அறியலாம்.

வேறு கதி ஒன்றும் இல்லை என்று வீபிஷணன் ஶரணாகதி பண்ணிணான் மாவீரன் என்று

**ஜய ஜய மஹாவீரா! மஹா தீர தௌ4ளரேய**
**தே3வாஸுர ஸமர ஸமய ஸமுதி3த நிகி2ல நிர்ஜர நிர்த்த4ரித**
**நிரவதி4க மஹாத்ம்யா!**
**........**
**அஸஹாய ஶூர! அநபாய ஸாஹஸ!**
**மஹித மஹாம்ருத2 த3ர்ஶந முதி3த மைதி2லீ த்3ருட4தர**
**பரிரம்ப4ண விப4வ விரோபித விகட வீரவ்ரண!**

**ஸ்வாமி தேசிகன், மஹாவீர வைபவம்**

என்று ஸ்வாமி தேசிகன் மஹாவீர வைபவத்தில் ஸாதித்த மாதிரி அப்படி பட்ட மஹாவீரன். அவன்தான் வீரன். தோல்வி என்பதே அறியாதாவன் - தோலாத தனி வீரன்

prapatti.com

**ஆராத அருள் அமுதம் பொதிந்த கோயில் *
அம்புயத்தோன் அயோத்தி மன்னர்க்கு அளித்த கோயில் *
தோலாத தனிவீரன் தொழுத கோயில் *
துணையான வீடர்க்குத் துணையாம் கோயில் ***
ஸ்வாமி தேசிகன் அதிகார ஸங்க்ரஹம் 42

என்றார் ஸ்வாமி தேசிகன் அதிகார ஸங்க்ரஹத்தில். தோல்வியையே அடையாத நிகரற்ற வீரனான ராமன் என்று போற்றினார்.

பரித்யக்தா மயா லங்கா மித்ராணி ச த$_4$நாநி ச:
ப$_4$வத்$_3$ க$_3$தம் மே ராஜ்யஞ்ச ஜீவிதஞ்ச ஸுகா$_2$நி வை
வால்மீகி, ராமாயணம்

ராமாயணத்தில் அப்படிப்பட்ட மஹாவீரனை விபீஷணன் ශரணாகதி அடைந்தான். என்னாலே இலங்கை ராஜ்யமும் கைவிடப்பட்டது நண்பர்களும் செல்வங்களும் கைவிடப்பட்டது என்னுடைய ராஜ்யம், சுகம், உயிர் எல்லாம் ராமனே உன்னிடம் அடங்கி உள்ளது என்கிறான்

**ஸர்வலோக ஸ்ரண்யாய ராகவாய மஹாத்மனே**
வால்மீகி, ராமாயணம்

என்று ශரணம் அடைந்த விபீஷணன் எப்படிப் பட்டவன்?

**விபீஷணஸ்து தர்மாத்மா ந து ராக்ஷஸ சேஷ்டித:**
வால்மீகி, ராமாயணம் ஆரண் 17-24

ராமாயணம் ஆரண்ய காண்டம் என்று ராமாயணத்தில், விபீஷணன உத்தமியான சூர்ப்பனகையால் கொண்டாடப்பட்டவன்

**ஸீதாம் ச ராமாய நிவேத்ய தேவீம் வஸமே ராஜந்நிஹ வீத ශோகா:**
வால்மீகி, ராமாயணம் யுத் 15-14

ராமாயணம் யுத்த காண்டத்தில் "ஓ! அரசனாகிய ராவணனே, ராமன் பொருட்டு தேவியாகிய ஸீதையை (ரத்னம் முதலியவைகளுடன்) ஸமர்ப்பித்துவிட்டு மனக்கவலை ஒழிந்தவர்களாக வஸிப்போமாக" என்றான்.

> **என்று ராவணனுக்குக் கூட பரமஹிதம் சொல்லும்படிக்கு ஈடான ப்ரக்ருஷ்ட ஜ்ஞானமுடையவன். கைங்கர்யமாகிற பரம புருஷார்த்தம் பெறுகைக்கு ஸக்ருத் கர்த்தவ்யமான ஸாத்யோபாயத்தாலே வஶீக்ருதராய்"**

ஸ்வாமி தேசிகன் அபய ப்ரதாந ஸாரத்தில், இதை எடுக்கிறார். மூலத்தில், ஸவாமியே இப்படி ஸாதித்தது.

> **ஶரணாக$_3$த ரக்ஷண வ்ரதீ மாம்**
> **ந விஹாதும் ரண புங்க$_3$வ ஆர்ஹஸி த்வம்**
> **விதி$_3$தம் பு$_4$வநே விபீ$_4$ஷணோ வா**
> **யதி$_3$ வா ராவண இத்யுதீ$_3$ரிதம் தே**
> **ஸ்வாமி தேசிகன் பரமார்த்த ஸ்துதி 8**

ஸ்வாமி தேசிகன் பரமார்த்த ஸ்துதியில் சொல்கிறார். திருப்புட்குழி விஜயராகவனப் பற்றி பத்து ஸ்லோகங்கள் ஜடாயுவை குழியிலிட்ட ஸ்தலம் போரி வல்லவனே. **"ஸர்வ லோக ஶரண்யாய ராகவாய மாஹாத்மனே**" என்று சொன்ன விபிஷணனாகிலும் சரி, அந்த இராவணனாகவே இருந்தாலும் சரி அழைத்து வா அபயம் அளிக்கிறேன் என்ற நீ சொன்னது எல்லோருக்கும் தெரிந்ததே ஶரணமடைந்தவர்களைக் காப்பதில் விரதம் கொண்ட நீ, பாபி என்பதற்காக ஶரணமடைந்த என்னை கைவிடலாமா? என்றார்.

> **ஸக்ருத் ப்ரபந்ந ஜந ஸம்ரக்ஷண தீ$_3$க்ஷித!**
> **வீர! ஸ்த்ய வ்ரத!**
> **ஸ்வாமி தேசிகன், மஹாவீர வைபவம்**

என்று மஹாவீர வைபவத்தில் ஸ்வாமி தேசிகன் ஸாதிக்கிறார். ஒருமுறை ஶரணம் என்று அடைந்த ஜீவன்களை காப்பதில் விரதம் கொண்டவனே மிக்க வீரமுடையவனே வ்ரதத்தை தவறாமல் நிறைவேற்றுபவனே ஒருமுறை ஸரணம் என்று அடைந்த ஜீவன்களை காப்பதையே விரதம் என்று சொல்லி

அதன் மாதிரியே ஶரணம் அடிந்த விபீஷணனை, முதலில் தடுத்த சுக்ரீவனைக் கொண்டே அழைத்து வரச் சொன்னாய் ஸமுத்ர கரையிலேயே அபயம் கொடுத்து ரக்ஷித்தாய் லக்ஷ்மணனைக் கொண்டு முடி சூட்டினாய்

## 10-11 மறுகதியின்றி மாவீரனைத் தொழுதாரும்

ஶரணாகதி என்பது எதற்கு வேண்டுமானாலும் பண்ணலாம். த்ரௌபதி தன் மானத்தை காக்க ஶரணாகதி செய்தாள். காகாசுரன் உயிருக்காக செய்தான். விபீஷணனோ ராஜ்யத்திற்காக செய்தான்.

ஆனால் ஶரணாகதி என்பது இங்கு மறுகதி இல்லாமைக்கு செய்வது. ஸம்ஸார பந்தத்திலிருந்து நம்மை வெளியேற்ற வேண்டுவது.

உயிர் பிரியும் போகும் காலத்தில் பகவான் நினவு வருமோ இல்லையோ தெரியாது.

**வாயொரு பக்கம் வாங்கி வலிப்ப ***
**வார்ந்த நீர்க்குமிழிக் கண்கள் மிழற்ற ***
**தாயொரு பக்கம் தந்தை ஒரு பக்கம் ***
**தாரமும் ஒரு பக்கம் அலற்ற ***
**தீயொரு பக்கம் சேர்வதன் முன்னம் ***
**செங்கண் மாலொடும் சிக்கெனச் சுற்றமாய் ***
**ஒரு பக்கம் நிற்க வல்லார்க்கு ***
**அரவ தண்டத்தில் உய்யுலுமாமே**

பெரியாழ்வார், பெரியாழ்வார் திருமொழி 4-5-9

என்று பெரியாழ்வார் திருமொழியிலும்

**வாளால் அறுத்துச் சுடினும் * மருத்துவன்பால் ***
**மாளாத காதல் * நோயாளன் போல் மாயத்தால் ***
**மீளாத் துயர்தரினும் * வித்துவக்கோட்டம்மா! * நீ**
**ஆளா உனதருளே * பார்ப்பேன் அடியேனே**

குலசேகராழ்வார், பெருமாள் திருமொழி (5-4)

குலசேகராழ்வார், வித்துவக்கோட்டுப் பதிகத்தில் எப்படிபட்ட புகழ் வாய்ந்த மருத்துவர் (famous doctor ஆனாலும் சரி. என்ன பண்ண முடியும்? இந்த உயிரை இன்னும் கொஞ்ச நாழிகை - அரை மணி, ஒரு மணி என்று போவதை தள்ளி போட முடியுமே தவிர, இன்னொரு ஜன்மம் இல்லாமல் செய்ய முடியுமோ?

**எருத்துக் கொடி உடையானும் * பிரனனும் இந்திரனும் * மற்றும்**
**ஒருத்தரும் இப்பிறவி என்னும் நோய்க்கு * மருந்து அறிவாருமில்லை**
**மருத்துவனாய் நின்ற மாமணிவண்ணா! * மறுபிறவி தவிரத் -**
**திருத்தி * உன் கோயில் கடைப்புகப் பெய் * திருமாலிருங்சோலை எந்தாய்**
பெரியாழ்வார், பெரியாழ்வார் திருமொழி 5-3-6

பெரியாழ்வார் திருமொழியில் எருது கொடியுள்ள ருத்திரனும், பிரமனும் இந்த பிறவி என்னும் நோய்க்கு மருந்து அறியாதார் என்றார்.

**மற்றுமோர் தெய்வம் உளது என்று * இருப்பாரோடு-**
**உற்றிலேன் * உற்றதும் * உன் அடியார்க்கடிமை ***
**மற்றெல்லாம் பேசிலும் * நின் திருவெட்டெழுத்தும்-**
**கற்று * நான் கண்ணபுரத்துறை அம்மானே**
திருமங்கையாழ்வார், பெரிய திருமொழி 8-10-3

திருமங்கையாழ்வார், பெரிய திருமொழியில் ஸாதிக்கிறார் அந்த அஷ்டாக்ஷர மந்தரத்தைக் கற்றபின், உனக்கு அடிமை செய்வதைவிட சிறந்தது ஒன்றுமில்லை அவர்கள்தான் மறுகதியின்றி வாழ்ச்சி வறுத்தவர்கள்

**காணிலும் உருப்பொலார் * செவிக்கினிதான கீர்த்தியார் ***
**பேணிலும் வரந்தரும் * மிடுக்கிலாத தேவரை ***
**ஆணம் என்று அடைந்து வாழும் * ஆதர்காள்! எம் ஆதியால் ***
**பேணிநும் பிறப்பெனும் * பிணக்கு அறுக்க கிற்றிரே**
திருமழிசை ஆழ்வார், திருச்சந்த விருத்தத்தில் 69

திருமழிசை ஆழ்வார், திருச்சந்த விருத்தத்தில், தேவதாந்தரங்களுடைய செயல்களை நன்றாக எடுத்துக்காட்டி இப்படிப்ட்ட தேவதாந்தரங்களை

உதறிவிட்டு உலக காரணபூதனான எம்பெருமானை அடி பணிந்து முக்தர்களாகச் சிறப்பு பெறுங்கள் என்கிறார்

சரணமாகும் * தனதாள் அடைந்தார்க்கெல்லாம் *
மரணமானால் * வைகுந்தம் கொடுக்கும் பிரான் *
அரண் அமைந்த மதிள் சூழ் * திருக் கண்ணபுரம்
தரணியாளன்* தனது அன்பர்க்கு அன்பாகுமே.
நம்மாழ்வார், திருவாய்மொழி 9-10-5

திருவாய்மொழியில் நம்மாழ்வாரும்

சாதலும் பிறத்தலும் என்று இவற்றைக் *
காதல் செய்யாது உன கழலடைந்தேன் *
ஓதல் செய் நான்மறையாகி *
உம்பர் ஆதல்செய் மூவுரு வானவனே! *
ஆண்டாய்! உனைக் காண்பதோர் *
அருளெனக்கு அருளுதியேல் *
வேண்டேன் மனை வாழ்க்கையை *
விண்ணகர் மேயவனே
திருமங்கையாழ்வார், பெரிய திருமொழி 6-1-9

என்று திருமங்கையாழ்வார், பெரியதிருமொழியில் திருவிண்ணகரப் பெருமானை (உப்பிலியப்பன்) வேண்டுகிறார்.

அதனால், நினைவு இருக்கும்போதே, மோக்ஷத்தில் ஆசை உள்ளபோதே, ஸம்ஸார பயம் கவ்வி பிடித்துக் கொள்ளும்போதே ஶரணாகதி செய்து விட வேண்டும்.

## 10-12 உத்தமன் ஹரி

கஜேந்ர மோக்ஷம் என்பது பாகவத்திலே ஸப்தம ஸ்கந்ததிலே வருகிறது. இந்தரத்யும்னன் என்ற ராஜா. அக்ஸ்தியர் வந்த போது கவனிக்காமல் இருந்ததால், யானையாக போ என்கிற சாபம் அடைந்தான்.

prapatti dot com

அஹா, உஹூ என்கிற கந்தர்வர்கள். ஊஹூ ஜலத்தில் தன் பத்தினிமார்களுடன் விளையாடும்போது, தண்ணிர் அடியிலிருந்து தேவலனின் காலைப் பித்து இழுத்ததால் முதலை ஆக கடவது என்ற சாபம் அடைந்தான்.

கஜேந்தரன் பட்ட பகலில் தண்ணிர் குடிக்க எல்லோருடன் வருகிறது காலை முதலை கவ்வியது மற்ற காலில் மீன் குத்தி சீ, இரத்தம். யாரும் அத்றகு உபகாரம் பண்ணவில்லை ஆயிரம் வருஷங்கள் யானையும், முதலையும் சண்டை முதல் ஐந்நூறு வருஷம் எ யானை இறுமாந்திருந்தது (அகங்காரம்) அடுத்த ஐந்நூறு வருஷம், தனக்கு சொந்தமானவர்கள் உதவி பண்ணுவார்கள் என்ற நினைவு (மமகாரம்).

நாராயண பட்டத்ரி பத்து ஸ்லோகங்களில் கஜேந்த்ர சரித்திரத்ஹை ஒரு துளிக்கூட விடாமல், முழுவதையும் எழுதி இருக்கிறார் நாராயணீயம் பத்து ஸ்லோகங்கள் கொண்ட தஸகமாக நூறு தஸகங்கள் எழுதியிருக்கிறார். கஜேந்த்ர மோக்ஷம் என்பது இருபத்தி ஆறாம் தஸகம்.

நாராயண பட்டத்ரி குருவாயூரப்பனைக் கேட்கிறார். நீ எதற்கு தாமரைப் பூ இன்று கையில் வைத்துக் கொண்டு இருக்கிறாய். யார் உனக்கு கொடுத்தார்கள் கஜேந்த்ரன் பகவானை பூஜிக்க வேண்டும் என்று கைபிடித்த பூவோடு முதலையிடம் அகப்பட்டுக் கொண்டது. அதன் துரத்தை போக்க பகவான் அரைகுலைய, தலை குலைய ஒடி வந்தான். விரோதியை போக்கி அந்த தாமரையை தன் திருவடிகளில் சேர்த்து கொண்டான்

**த்வத ஸேவாயா வைபவாத் துர்நிரோதம்**
**யுத் த்யந்தம் தம் வத்ஸராணம் ஸஹஸ்ரம்**
**ப்ராப்தே காலே தவத் பதைகா க்ர்ய ஸித்தயை:**
**நக்ரா க்ராந்தம் ஹஸ்தி வர்யம் வ்யதா ஸ்த்வம்**
**நாராயண பட்டத்ரீ, நாரயணீயம் 26-6**

அந்த சிறந்த யானை உனக்கு செய்த கைங்க்ர்யத்தின் பெருமையால் ஆயிரம் வருஷம் விடாமல் போராடிக் கொண்டு இருந்த்து நீ உன் திருவடிகளை

அடைவதற்கு சரியான காலம் வந்த போது முதலையின் பிடியில் சிக்கிக் கொள்ள செய்தாய். மாற்றி சொல்ல வேண்டும். முதலில் நீ காலத்தை தேர்ந்து எடுத்தாய். பிறகு முதலையின் வாயில் அக்ப்பட வைத்தாய். அதன் பிறகு 1000 வருஷம் சண்டை.

ஒரு முதலை கவ்வியதற்கே ஆயிரம் வருஷம் என்றால், நம்மை எல்லாம் எவ்வளவு முதலைகள் கவ்வுகின்றன?

**க3ஜேந்த்3ர ரக்ஷா த்வரிதம் ப4வந்தம்**
**க்3ராஹை ரிவாஹம் விஷயைர் விக்ருஷ்ட:**
**அபாரா விஜ்ஞாந த3யாநு பா4வம்**
**ஆப்தம் ஸதாம் அஷ்டபு4ஜம் ப்ரபத்3யே**
**ஸ்வாமி தேசிகன் அஷ்டபுஜாஷ்டகம் 1**

ஸ்வாமி தேசிகன் அஷ்டபுஜாஷ்டகத்தில் கஜேந்தராழ்வானை காப்பதற்கு விரைந்தவனான உன்னை முதலைகள் போன்ற என்னுடைய இந்த்ரிய விஷயங்களால் கவரப்பட்டு அளவிட முடியாத ஜ்ஞாநம், கருணை, பெருமை உடையவனான அநுகூலனாய் ஸாதுக்களுக்கு எட்டு திருக்கரங்களை உடைய உன்னை ஶரணமடைகிறேன்

**நக்ரா க்ராந்தே கரீந்த்3ரே முகுளித நயநே**
**மூல மூலேதிகி2ந்நே**
**நாஹம் நாஹம் நசாஹம் ந ச ப4வதி புந-**
**ஸ்தாத்3ருஶோ மாத்3ருஶேஷீ ।**
**ஸ்லோகத்வயம் 2**

அப்படி கஜேந்தரனை முதலையின் வாயிலிருந்து காப்பாற்றி, அதை பரமபத்திற்கு அழைத்து சென்றார், பகவான்.

**ப்ராத: ஸ்மராமி பவபீதி மஹார்த்தி சாந்த்யை**
**நாராயணம் கருட வாஹந மஞ்சநாபம்**
**க்ராஹாபிபூத மதவாரண முக்தி ஹேதும்**
**சக்ராயுதம் தருண வாரிஜபத்ர நேத்ரம்**
**ஸ்லோகத்ரயம்**

காலையில் இந்த ஸ்லோகத்தை தியானிப்பவர்களுக்கு மங்களம் உண்டாகும் என்பது பகவான் வாக்கு.

**துப்புடையாரை அடைவதல்லாம் ***
**சோர்விடத்துத் துணையாவர் என்றே ***
**ஒப்பிலேன் ஆகிலும் நின்னை அடைந்தேன் ***
**ஆனைக்கு நீ அருள் செய்தமையால் ***
**ஏய்ப்புஎன்னை வந்து நலியும்போ து ***
**அங்கு ஏதும் உன்னை நினக்க மாட்டேன் ***
**அப்போதைக்கு இப்போதே சொல்லி வைத்தேன் ***
**அரங்கத்து அரவணைப் பள்ளியானே**
பெரியாழ்வார் பெரியாழ்வார் திருமொழி 4-10-1

பெரியாழ்வார் திருமொழியில் பெரியாழ்வார் அன்றைக்காக, இன்றே சொல்லி வைத்தேன் என்கிறார்.

## 10-13 அரியென சக்கரத்தானை சார்ந்தாரும்

**ஹரிர் ஹரதி பாபாநி து₃ஷ்ட சித்தைரபி ஸ்ம்ருத:**
**அநிச்ச₂யாபி ஸம்ஸ்ப்ருஷ்டோ த₃ஹத்யேவ ஹி பாவக:**
ஹரி அஷ்டகம்

என்கிறது ஹரி அஷ்டகம். ஹரியானவன் பாபங்களைப் போக்கடிக்கிறான் பாபங்களை அரிப்பவன். பொசுக்கி சாம்பலாக ஆக்குகிறவன் கெட்ட மனமானவர்கள் ஆனாலும், விருப்பமில்லாதவர்கள் ஆனாலும், ஹரியை நினைத்த மாத்திரத்திலேயே பாபங்கள் விலகுகின்றன விருப்பமில்லாமல் தொட்டபோதிலும் நெருப்பு சுட்டே திரும். அது போல.

அரி என்பது ஹரி அவதாரம். கஜேந்த்ரன் ஆதி மூலமே என்று அழைத்து த்வரையுடன் ஓடி வந்து ரக்ஷித்த அவதாரம்.

**தொட்ட படை எட்டும் * தோலாத வென்றியான் ***

**அட்ட புயகரத்தான் அஞ்ஞான்று * - குட்டத்துக்**
**கோள் முதலை துஞ்சக் * குறித்தெறிந்த சக்கரத்தான் ***
**தாள் முதலே நங்கட்குச் சார்வு**
**பேயாழ்வார் மூன்றாம் திருவந்தாதி 99**

என்று பேயாழ்வாரும் மூன்றாம் திருவந்தாதியில் எட்டு திவ்யமான ஆயுதங்களாலும் தோல்வியே அறியாமல் எப்பொழுதும் வெற்றி உடையவன் அட்டபுயகரத்தான் முன்பு பழைய காலத்தில், பொய்கை ஒன்றில் பலமுள்ள முதலை முடியும்படியாக குறை தவறாமல் எறிந்த சுதர்சனத்தை உடையவனே அவனுடைய பாதங்களே நமக்கு உகந்தது என்று அட்டபுயகரனை ஶரணாகதி பண்ணியபடி.

அடுத்த பாசுரத்திலேயே

**சார்வு நமக்கென்றும் சக்கரத்தான் * தண் துழாய்த்**
**தார்வாழ் * வரை மார்பன் தான் முயங்கும் * காரார்ந்த**
**வான் அமரும் மின் இமைக்கும் * வண்தாமரை நெடுங்கண் ***
**தேன் அமரும் பூமேல் திரு**
**பேயாழ்வார் மூன்றாம் திருவந்தாதி 100**

பேயாழ்வாரும் மூன்றாம் திருவந்தாதியில் சார்வு நமக்கு என்றும் திரு என்று முதல் கடைசி பதங்களாலேயே விளக்கினார்.

என்றைக்கும் நமக்கு **அபாஶ்ரயம்** (புகலிடம்) பெரிய பிராட்டியார் தத்வ ஸூக்ஷமங்களை அறிந்த எமக்கு, எக்காலத்திலேயும் **(புருஷகார, உபாய, உபேய தசைகளிலும்**) பிராட்டியின் ஆகாரத்ரயத்தையும் போற்றி திருவுடன் சேர்த்தியை அநுபவித்து மகிழும் பிரபந்தம் இது மற்ற ஆழ்வார்களுக்கு இல்லாத தனிப் பெருமை இந்த ஆழ்வாருக்கு

## 10-14 உத்தமன் ந்ருஸிம்ஹன்

prapatti.com

**ஆகம் சேர் * நரசிங்கமதாகி * ஓர்**
**ஆகம் வள் உகிரால் பிளந்தான் உறை ***
**மாகம் வைகுந்தம் காண்பதற்கு * என் மனம்**
**ஏகம் எண்ணும் இராப் பகல் இன்றியே**
**நம்மாழ்வார், திருவாய்மொழி 9-3-7**

இங்கே ஆகம் (முதல் வரியில்) = உடல், ஆகம் (இரண்டாம் வரியில்) = மார்பு; உகிர் = நகம்; மாகம் = பெரிய ஆகாயம்.

பகவான் ஹிரண்ய வதம் செய்ய, நரம் கலந்த சிங்க உருவைக் கொண்டான். ராக்ஷஸனுடைய மார்பை தன் வளைந்த, நன்கு வளர்ந்த நகங்களால் பிளந்து அவனைக் கொன்றான். அந்த நரசிம்மன் நித்ய வாஸம் செய்யும் இடம் ஸ்ரீவைகுந்தம். அந்த வைகுந்தத்தையே நான் ஆசைப்படுகிறேன் என்றார்.

ஆகம் சேர் என்பது ப்ரஹ்லாதனுடைய மனத்தில் குடி கொண்டவன் என்று ஸ்வாமி தேசிகன் திருவுள்ளம், தாத்பர்ய ரத்னாவளியில்.

**ஸத்யம் விதாதும் நிஜ ப்ருத்ய பாஷிதம்**

என்ற வியாஸ பகவனின் வாக்கின்படி, ஹரிஸ்மரணமே கொண்ட ப்ரஹ்லாதனின் சொல்லை உண்மையாக்க தோன்றியதால் உத்தமன்.

**ப$_4$க்தஸ்ய த$_3$ாநவ ஶிஶோ: பரிபாலநாய**
**ப$_4$த்$_3$ராம் ந்ருஸிம்ஹ குஹநாம் அதி$_4$ஜக்$_3$முஷஸ்தே ।**
**ஸ்தம்பை$_4$க வர்ஜ மது$_4$நாZபி கரீஶ நூநம்**
**த்ரைலோக்யம் ஏதத் அகிலம் நரஸிம்ம க$_3$ர்ப$_4$ம் ||**
**ஸ்வாமி தேசிகன், வரதராஜ பஞ்ஜாஶத் 23**

“பக்தனான அசுர சிறுவனை (**ப$_4$க்தஸ்ய த$_3$ாநவ ஶிஶோ:**) காப்பதற்கு (**பரிபாலநாய**), நீ அழகிய (**ப$_4$த்$_3$ராம்**) நரஸிம்ம அவதாரத்தை கபடமாக (**குஹநாம்**) அடைந்தாய். அந்த தூண் ஒன்றைத் தவிர (**ஸ்தம்ப$_4$ ஏக வர்ஜ ம்**) இப்பொழுதும் கூட(**அது$_4$நா அபி**), அத்திகிரியானே, நிச்சயம் (**கரீஶ நூநம்**) இந்த மூன்று உலகங்களும் நரசிம்ம வடிவத்தை கர்பத்தில் கொண்டுள்ளன” என்றார்.

கபட அவதாரம் என்றார் ஸ்வாமி தேசிகன். ஆஸ்ரித பக்ஷபாத்ததால், தன் அடியவரை காக்க வேண்டும் என்ற ஒரே நினைவுடன், தன் நிலை குலைந்தாலும் சரி என்று உடனே அந்த க்ஷணமே அவதாரம் செய்த ந்ருஸிம்மன் உத்தமன்.

எந்த நேரத்தில், எந்த கோலத்தில், எந்த பக்தன் கூப்பிடுவானோ, அவர்களுக்கு உடனே அருள வேண்டும் என்பதற்காகவே, மூவுலகிலும் பரந்து, முன்பே தயாராய் நிற்கும் ந்ருஸிம்மன் உத்தமன்.

## 10-15 நெறி ஒன்றே என

மற்றைய கர்ம, ஞான, பக்தி யோகங்கள் பின்பற்றுவதற்கு மிகவும் கடினமானது. தவிர பலன் கிட்டுவதற்கு எத்தனை ஜன்மங்கள் ஆகும் என்று தெரியாது. அதனால் ப்ரபத்தி என்னும் மிகச் சிறந்த நெறியை ஆசாரியர்கள் நமக்கு உபதேசித்துள்ளாகள்.

**ஶரணம் த்வாம் ப்ரபந்நாயே த்$_4$யாந யோக$_2$ விவர்ஜிதா:**
**தேபி ம்ருத்யு மதி க்ரம்ய யாந்தி தத்$_3$ வைஷ்ணவம் பத$_3$ம்**
**பிரம்ம புராணம்**

ப்ரஹ்ம புராணத்தில் வரும் ஸ்லோகம் இது த்யான யோகம் என்கிற பக்தியை உபாயமாக செய்ய முடியாதவர்கள், உன்னை ஶரணம் என்று அடைகிறார்களோ அவர்களும் ஸம்ஸாரத்தை கடந்து விஷ்ணுவின் அந்த பரம பதத்தை அடைகிறார்கள் என்கிறது.

**அஹம் பீதோZஸ்மி தேவேஶ ! ஸம்ஸாரேஸ்மிந் பயாவஹே ।**
**பாஹி மாம் புண்டரீகாக்ஷ ! ந ஜாதே ஶரணம் பரம் ।।**
**ஜிதந்தே ஸ்தோத்திரம் 1-8**

பரமபதநாதனே! பயத்தை விளைவிக்கும் இந்த ஸம்ஸாரத்தைக் கண்டு நான் மிகவும் அச்சப்படுகிறேன்.

அஞ்ஞானம், கர்மா, வாஸனை, ருசி, தேஹ ஸம்பந்தம் என்ற ஸம்ஸார சுழலில் சிக்கி தவிக்கும் என்னை கமலக்கண்ணனே! நீ ரக்ஷிப்பாய். உன்னைத் தவிர வேறு ஒரு உபாயத்தை நான் அறிவேன் இல்லை.

**வாழி அருளாளர் வாழி அணி அத்திகிரி ***
**வாழி எதிராசர் வாசகத்தோர்* - வாழி**
**சரணாகதி என்னும் சார்வுடன் * மற்றொன்றை**
**அரணாகக் கொள்ளாதார் அன்பு**
**மெய் விரதான்மியம் 1**

என்று ஸ்வாமி தேசிகன் "ப்ரபத்தியாகிற உபாயமும் அதை மஹாவிஸ்வாஸாத்துடன் பற்றி மற்ற ஒரு உபாயத்தையும் நாடாதவர்கள்" என்றார்

## 10-16 ந்யாஸ வித்தை உயர்ந்தது

**ந்யாஸ இதி ப்3ரஹ்ம(ா)**
**ப்3ரஹ்மா ஹி பரோ:**
**பரோ ஹி ப்3ரஹ்மா:**
**தாநி வா ஏதாந்ய ப்ராணி**
**தபாம்ஸி ந்யாஸ ஏவாத்யரேசயத்**

**ஸத்யம் தபோ த3மஶ் ஶமோ த3ாநம் த4ர்ம: |**
**ப்ரஜநநம் அக்3நயோZக்3நிஹோத்ரம் யஜ்ஞோ மாநஸம் ||**
தைத்ரீய நாராயண உபனிஷத் - 49

ஶரணாகதி உயர்ந்த உபாயம் என ப்ரம்மா சொன்னார். ப்ரம்மா உயர்ந்தவர் அல்லவா? அதனால் ஸத்யம், தவம் இந்த உபாயங்களை விட ஶரணாகதியே சிறந்தது.

பன்னிரண்டு உபாயங்களில் ஒன்றைவிட ஒன்று படிப்படியாக உயர்ந்தது.

prapatti dot com

1. **ஸத்யம்** - எல்லா ஜீவனுக்கும் நன்மை எண்ணுவது
2. **தபஸ்** - உடலை வருத்தி செய்வது
3. **தமம்** - வெளி இந்திரியங்களின் வைராக்யம்
4. **ஶமம்** - மனத்தில் ஶாந்தி
5. **தாநம்** - நல்ல விஷயத்திற்கு வழங்குதல்
6. **தர்மம்** - புண்யமான காரியங்கள்
7. **ப்ரஜநநம்** - ஸத்தான குழந்தைகளை பெறுதல்
8. **அக்நி** - ஹோமத்திற்கான அக்நிகள்
9. **அக்நிஹோத்ரம்** - தினமும் செய்யும் ஹோமங்கள்
10. **யஜ்ஞம்** - ஹோமம்
11. **மாநஸம்** - ஆத்ம ஞானம்
12. **ந்யாஸம்** - ப்ரபத்தி

## 10-17 ந்யாஸ வித்தையில் எம்பெருமானே உபாயம், பலன்

**பக்தியில் அசக்தனுக்கு ப்ரபத்தி**

பிள்ளைலோகாசாரியார், ஸ்ரீவசநபூஷணம் 465

பக்தி யோகத்தை ஸாதிக்க முடியாதவர்களுக்கு ப்ரபத்தி சுலபமான உபாயம் என்று ஸ்ரீவசநபூஷணத்தில் பிள்ளைலோகாசாரியர் அருளியுள்ளார்.

**திருமால் அடியிணையே * திண் சரணாக் கொண்டு ***
**திருமால் அடியிணையே சேர்வார் *- ஒரு மால்**
**அருளால் அருளாத * வானோர்கள் வாழ்ச்சி ***
**அருளால் நமக்கு அளித்தார் ஆய்ந்து**

ஸ்வாமி தேசிகன், அமிருதரஞ்சனி 33

என்று ஸ்வாமி தேசிகன், "ஒரு மால் - உயர்ந்ததாய், ஒப்பார், மிக்கார் இல்லாத அந்த திருமால், தன்னுடைய கருணையால் நமக்கு மோக்ஷானந்தத்தை இதுவரை அளிக்கவில்லை.

ஆனால், நம்முடைய ஆசாரியர்களோ ஸ்ரீமந்நாராயணனின் திருவடிகளே உபாயமாகவும், பலனாகவும் கொண்டதை நன்கு ஆராய்ந்து அறிந்தவர்கள். நம்மேல் உள்ள கருணையால் அந்த உபாய, பலனை (த்வயத்தை) நமக்கு ஒரு நாள் உபதேசித்து நித்யஸூரிகளின் வாழ்க்கையை நமக்கு அநுக்ரஹீத்தனர்" என்றார்.

இந்த பாசுரம் ரஹஸ்யத்ரய சுளகத்தில் த்வயாதிகாரத்தில் காணப்படுகிறது. இதில் முதல் இரண்டு வரிகள் த்வயத்தை சொல்கிறது என்று ஆசாரியர்கள் பணிப்பர். தவிர, ஸாத்யோபாய்மான எம்பெருமான் மட்டுமே நம்க்கு மோக்ஷத்தை அளிக்காதலால், ஸித்தோபாயமான ஶரணாகதியை நம்முடைய ஆசாரியர்கள் இதுவும் அவசியம் என்று ஆராய்ந்து நமக்கு உபதேசித்தனர் என்றார். இது ஒரு கருத்து.

சில இடங்களில் பாசுர மூலம் **"ஒரு மால் அருளால் உருளாத வானோர் வாழ்ச்சி"** என்று காணப்படுகிறது. உருளாத என்பது உருண்டு வராத, மீண்டும் ஸம்ஸாரத்திற்கு திரும்பி வராத பரமபதத்தை என்றும் சொல்லுவர்.

எம்பெருமானுடைய திருவடிகளே உபாயம், பலன் என்று நன்கு ஆராய்ந்து அறிந்து பின்பற்றிய ஆசாரியர்கள், தன் ஸங்கல்பத்தை எவராலும் மாற்ற முடியாதவரான அந்த எம்பெருமானுக்கே கைங்கர்யம் செய்யும், மீண்டு வராத மோஷானுபவத்தை நமக்கு க்ருணையால் அருளினர் என்பது கருத்து.

**தவத்₃ ப₄க்தி போதம் அவலம்பி₃தும் அக்ஷமாணாம்**
**பாரம் பரம் வரத₃ க₃ந்தும் அநீஶ்வராணம்**
**ஸ்வைரம் லிலங்க₄யிஷதாம் ப₄வ வாரி ராஶிம்**
**த்வாம் ஏவ க₃ந்தும் அஸி ஸேது: அப₄ங்கு₃ரஸ்த்வம்**

ஸ்வாமி தேசிகன் வ்ரதராஜ பஞ்ஶாத் 31

ஸ்வாமி தேசிகன் வரதராஜ பஞ்ஶாத்தில் ஸாதிக்கிறார்.

(வரத₃) அருளாளனே!

**(தவத்₃ ப₄க்தி போதம்)** உன்னிடம் செய்யும் பக்தி யோகம் என்னும் படகை
**(அவலம்பி₃தும் அசஷமாணாம்)** கொள்ள முடியாதவர்களும்
**(ப₄வ வாரி ராஶிம்)** பிறவிக் கடலை
**(ஸ்வைரம் லிலங்க₄யிஷதாம்)** தம் விருப்பப்படி கடக்க ஆசைப்படுபவர்களும்
**(த்வாம் ஏவ க₃ந்தும்)** நீயே உன்னை அடைதற்கு
**(அப₄ங்கு₃ரஸ்த்வம் ஸேது: அஸி)** மாசில்லாத அணையாக ஆகிறாய்," என்றார்.

ஆழும் கடலில் சிக்கியவனுக்கு தோணி போல் விளங்கும் பக்தி யோகத்தை செய்ய சக்தி இல்லாதவர்கள் உள்ளனர். அதனால் ஸம்ஸாரக் கடலின் கரையாய் விளங்கும் உன்னிடம் வந்து சேராதவர்கள். பக்தி யோகம் சுலபமானது அல்ல. அதற்கு அதிகாரம் இருந்தாலும், கால தாழ்வை பொறுக்காதவர்களுக்கு அது பயன்படாது. ப்ரபத்தி ஒன்றே எளிதான உபாயம்.

ஸ்வாமி தேசிகன் இங்கே பக்தி யோகத்தை செய்ய ஸாத்யமில்லாத தன்மையையும், அதற்கு மாறாக ப்ரபத்தியின் மேன்மை, எளிமையையும் சுட்டிக் காட்டுகிறார். ப்ரபத்தியில் பகவானே உபாயம், பகவானே பலன்.

பக்தி யோகம் என்பது மூன்று வர்ணத்தாரே **(வேதியன் வேந்தன், வணிகன்)** செய்யக் கூடியது. நாலாம் வர்ணத்தாரும் **(வேளாளர்),** பெண்களும் செய்ய அனுமதி இல்லை என்கிறது சாஸ்திரம்.

பக்தி யோகம் செய்ய பொறுமை, ஞானம், வர்ணம், சக்தி (TICE - Time, intelligence, Caste, Energy) என்ற நாலும் அவசியம். இதில் ஏதாவது ஒன்றோ, இரண்டோ, மூன்றோ இல்லை நான்குமோ இல்லாதவர்கள் ப்ரபத்திக்கு தகுதி உடையவர்கள். ஆக பக்தி யோகம் என்பதற்கு தகுதி அற்றவர்கள், ப்ரபத்திக்கு தகுதி நிறைந்தவர்கள் ஆயினர்.

அந்த ப்ரபன்னர்கள் தம் தகுதி குறைவால் பக்திக்கு அருகதை அற்றவர் ஆயினர். அவர்கள் உம்முடைய திருவடிகளை ஶரணம் அடைந்தனர். இப்படி ப்ரபத்தி செய்தவரிடத்து நீயே பக்தி யோக ஸதானத்தில் நின்று பலன் அளிக்கிறாய்.

சாதாரணமாக, தண்ணீர் போய் சேர வேண்டிய இடமும், அதை அணையாக தடுத்து நிறுத்திய இடமும் வெவ்வேறாக இருக்கும் (Final desitnation and temporarily holding spot are different). ஆனால் உன் விஷயத்தில் இரண்டும் ஒன்றே. அணையும் நீயே. சேரும் இடமும் நீயே. தவிர சில சமயம் அந்த அணை பழுதாகும் (breaks down). நீயோ பழுதில்லாத அணையாக உள்ளாய்.

**ஶரணமுபக3தோ த்வாம் ஶார்ங்கி3ண: பாத3ரக்ஷே!**
**ஸக்ருதி விதி4 ஸித்3த4ம் த்யக்து காமே விமோ ஹாத் ।**
**ப்ரசலித மணி ஜால வ்யஞ்சிதை: ஶிஞ்ஜிதை: ஸ்வை:**
**அல மல மிதி நூநம் வாரயஸ் யாத 3ரேண ।।**

ஸ்வாமி தேசிகன், ஸ்ரீரங்கநாத பாதுகா ஸஹஸ்ரம் (14-86 / 465)

ஸ்வாமி தேசிகன், பாதுகா ஸஹஸ்ரத்தில், பாதுகையே, ஶரணாகதி ஒரு முறையே, ஒரு பயனுக்காகவே செய்வது மறுபடியும் செய்வதில்லை என்ற சாஸ்த்ர வரம்பை மீறி உன்னை சரண் அடைந்தவர் மீண்டும் ஶரணாகதி செய்யும் முன்னே முன் செய்த Sரணாகதியே போதும் என்று தடுத்து நிறுத்துவது போல் உள்ளது என்றார்.

**தோளார் சுடர்த் திகிரி சங்குடைய சுந்தரனுக்கு ***
**ஆளானார் * மற்றொன்றில் அன்பு செய்யார் ***

அருளாளப் பெருமாள் எம்பெருமானார், ஞானஸாரம் 7

என்று திருத்தோள்களிலே சங்கு சக்கரம் ஏந்தியிருக்கும் அழகை உடையவனிடத்து அடிமையானவர்கள், அந்த அடிமைத்தனத்திற்கு மாறாக பிரக்ருதி ஸம்பந்தமான பொருள் எதுவிலும் மனம் செலுத்த மாட்டார்கள்.

## 10-18 ப்ரபத்தியின் எளிமை

**பொருப்பிடையே நின்று * புனல் குளித்தும் * ஐந்து**
**நெருப்பிடையே நிற்கவும் நீர் வேண்டா * -**

பேயாழ்வார், மூன்றாம் திருவந்தாதி 76

என்று பேயாழ்வார், "மீதி யோகங்களை செய்வது எத்தனை கஷ்டம். அநந்ய ப்ரயோஜனராய் எம்பெருமானின் திருவடிகள் பற்றி ப்ரபத்தி செய்வது எவ்வளவு சுலபம்," என்றார்.

யோக நிஷ்டை என்பது எப்படி செய்ய வேண்டும்? எ பனி மூடிக் கிடக்கும் மலைச் சிகரங்களுக்கு மத்தியில் நின்று, குளிந்திருக்கும் குளங்களில் குடைந்து நீராடி, குளிர் காலத்தில் நாற்புறமும் தீயை எரிய விட்டு, மேலே ஐந்தாவதாக சூரியனுடன் சேர்த்து பஞ்சாக்னியாய் நின்று தவம் செய்ய வேண்டும்.

**ஊன்வாட உண்ணாது உயிர்க் காவல் இட்டு ***
**உடலிற் பிரியாப் புலன் ஐந்தும் நொந்து ***
**தாம் வாட வாடத் தவம் செய்ய வேண்டா ***
**தமதா இமையோர் உலகு ஆளகிற்பீர்**
திருமங்கையாழ்வார், பெரிய திருமொழி 3-2-2

என்று உடலை வருத்தி, உண்ணா விரதம் இருந்து, இந்திரியங்களை அடக்கி, வாடி, வாடி வருந்தி தவம் செய்ய வேண்டாம்.

இது எல்லோராலும் முடியமா? அதனால்தான் ப்ரபத்தி மிக எளிது, செய்யக் கூடியது என்றார்கள் முன்னோர்கள். அப்படி ஒரு தடவை செய்யும் ப்ரபத்தியின் சௌகரியத்தை ஸ்வாமி தேசிகன் ஸாதிக்கிறார்

**எல்லார்க்கும் எளிதான ஏற்றத்தாலும் ***
**இனி உரைக்கை மிகையான இரக்கத்தாலும் ***
**சொல் ஆர்க்கும் அளவாலும் அமைதலாலும் ***
**துணிவு அரிதாய் துணை துறக்கும் சுகரத்தாலும் ***
**கல்லார்க்கும் கற்றார் சொல் கவர்தலாலும் ***
**கண்ணன் உரை முடிசூடி முடித்தாலும் ***
**நல்லார்க்கும் தீயார்க்கும் இதுவே நன்றாம் ***
**நாரணற்கே அடைக்கலமாய் நணுகுவீரே**
ஸ்வாமி தேசிகன் பரமத பங்கம் 47

ஸ்வாமி தேசிகன் பரமத பங்கத்தில் ப்ரபத்தியில் உள்ள சௌகரியத்தையும் சிறப்பையும் சொல்கிறார்

1. எல்லாச் சேதனர்களும் பின்பற்றுவதற்கு சுலபமாய் இருக்கும் பெருமை.
2. பகவான் நம்மேல் கருணை கொண்டு ஒரு முறை சொன்னால் போதுமானது என்று இதை கொடுத்துள்ளான்
3. ஒரு முறை ப்ரபத்தி வாக்யத்தை பூர்ணமாக உச்சரித்த மாத்திரத்திலே அதற்கு மேல் வேறு ஒன்றும் தேவையில்லை என்று பலனைத் தரக் கூடியது
4. ப்ரபத்தியின் அங்கமான மஹாவிஶ்வாஸம் என்பது அனுஷ்டிப்பது கஷ்டம்தான். ஆனாலும், ப்ரபத்தி யோகம் மற்றயை யோகங்களை போல் மீதி ஒரு துணையும் இல்லாமல் தனித்தே பலனைத் தருவதால் மற்ற யோகங்களை எல்லாம் விட்டு விடலாம்.
5. அறிவில்லாதவருக்கும், ஜ்ஞானமுடைய ஆசாரியர்கள் முலமாய் ப்ரபத்தி வாக்கியம் பலனைத் தருகிறது.
6. கீதா சரம ஸ்லோகத்தில் இதுவே சிகரமாக (crown jewel) விவரிக்கப் பட்டுள்ளது.
7. புண்யம், பாபம் (for both merits and sins) செய்த இருவருக்குமே இதுவே சிறந்த உபாயம்.
8. அதனால் ஸ்ரீமந் நாராயணனுக்கே ரக்ஷிக்கப்படும் வஸ்துவாய் இருந்து அவனை ஶரணமாக அடையுங்கள்

என்று ஸ்வாமி ப்ரபத்தியைப் பற்றி குழந்தையை கைபிடித்து அழைத்துச் செல்லும் தகப்பன்போல் நமக்கு படிப்படியாய் (step by step) உபதேசிக்கிறார்.

**ப்ரபத்தி (ஶரணாகதி) என்பது ஒரு வித்யை. இது நிரபேக்ஷ - உபாயத்வம். மற்றொன்றை அபேக்ஷிக்காமல் (எதிர்பாராமல்) உபாயமாகக் கூடிய தன்மை, பலன் கொடுக்கக்கூடிய தன்மை இதற்கு உண்டு.**

**பக்தி யோகம் தனக்கு அங்கமாக ப்ரபத்தியை அபேக்ஷிக்கிறது**

**கர்ம யோகம் போன்றவைகளையும் அபேக்ஷிக்கிறது. ப்ரபத்தி அப்படி இல்லாமல் நேராகவே எம்பெருமான் அநுக்ரஹத்தை உண்டு பண்ணி மோக்ஷத்திற்கு காரணமாக அமைகிறது**

45ம் பட்டம் ஸ்ரீமத் அழகியஸிங்கர் ஸ்ரீமத் ரஹஸ்யத்ரயஸார விவரணம்

என்று ப்ராக்ருதம் ஸ்ரீமத் அழகியஸிங்கர் ஸ்ரீமத் ரஹஸ்யத்ரயஸார விவரணத்தில் ப்ரபத்தியின் ஸாரத்தை அற்புதமாக ஸாதித்துள்ளார்.

## 10-19 இன்றே பற்றினரே

**உமது அடிகள் அடைகின்றேன் என்று * ஒரு கால் உரைத்தவரை ***

**ஸ்வாமி தேசிகன், அடைக்கலப்பத்து 7**

என்று அடைக்கலம் கொள்வதை நிகழ் காலத்தில் கூறினார், ஸ்வாமி தேசிகன். எப்போது ப்ரபத்தி செய்ய வேண்டும் என்ற எண்ணம் தோன்றியதோ, உடனேயே செய்ய வேண்டும் என்பதற்காக.

ஸம்ஸாரம் கோரமானது. அதில் சிக்கி கரையேறும் வழி தெரியாமல் தவிக்கின்றனர் என்றோம். சரி, இருந்தாலும் ஸம்ஸாரம் சிலருக்கு சுகமானது என்று ஒரு பேச்சுக்கு வைத்துக் கொள்வோம். அவர்கள் வாழ்க்கையில் அனுபவம் ஆனந்தமாக இருக்கிறது என்றால் அது எத்தனை விநாடி? அது முடிந்தவுடன் கஷ்டம், வருத்தம், வேதனைதான்.

**வாழ்ந்தார்கள் வாழ்ந்தது * மாமழை மொக்குகளின் மாய்ந்து மாய்ந்து *
ஆழ்ந்தார் என்று அல்லால் * அன்று முதல் இன்று அறுதியா *
வாழ்ந்தார்கள் வாழ்ந்தே நிற்பர் * என்பது இல்லை நிற்குறில் *
ஆழ்ந்தார் கடல் பள்ளி * அண்ணல் அடியவர் ஆமினோ.**

**நம்மாழ்வார், திருவாய்மொழி 4-1-6**

“வாழ்க்கை என்பது மழைநீரில் தேன்றும் குமிழி போல் (bubble ready to busrt) தோன்றி மடிவதே தவிர, நிலையாக அன்று பிறந்து இன்று வரையும்

ஒரே தன்மையாய் வாழ்ந்தவர் என்பது இல்லை. நிலையான இன்பம் வேண்டுமானால் எம்பெருமானின் திருவடிகளை அடைவீர்," என்றார்.

ஸ்வாமி தேசிகனும் இதையே மும்மணிக்கோவையில் ஸாதிக்கிறார்

**மழையில் எழுந்த மொக்குள் போல் வையம்**
**அழிய ஒன்று அழியா அடியவர் மெய்ய**
**ஸ்வாமி தேசிகன், மும்மணிக்கோவை**

"அத்திகிரியில் வாசம் செய்யும் அடியவர்களுக்கு மெய்யன் என்னும் தெய்வ நாயகனே! மழை பெய்யும்போது தோன்றி ஒரு நொடியில் அழியும் நீர்க்குமிழி (water bubble) போல் நிலையில்லாதது இந்த உலகமும் அதில் உள்ள பொருள்களும்," என்றார்.

**கொன்றேன் பல்லுயிரைக் * குறிக்கோள் ஒன்று இலாமையினால் ***
**என்றேனும் இரந்தார்க்கு * இனிதாக உரைத்தறியேன் ***
**குன்றேய் மேகமதிர் * குளிர்மாமலை வேங்கடவா! ***
**அன்றே வந்து அடைந்தேன் * அடியேனை ஆட்கொண்டருளே**
**திருமங்கையாழ்வார், பெரிய திருமொழி 1-9-3**

**"அன்றே வந்து அடைந்தேன்,"** என்றார் ஆழ்வார். "என்றைக்கு தன் ஸ்வரூப ஞானம் (innate nature) வந்ததோ, தான் யார் என்று விவேகம் (discriminative knowledge) பிறந்ததோ, தன்னுடைய ஆற்றல் (abilities), தகுதி (eligibility), செய்த பாவங்கள் எல்லாம் நினைத்து பார்க்கையில் உடனே ஒரு க்ஷணம் பொறுக்காது, அப்பா! உன் திருவடி வந்து பற்றினேன்," என்று ப்ரபத்தி செய்யுங்கள் என்றார்.

## 10-20 பற்றின க்ஷணமே பலன்

ப்ரபத்தி என்னும் உபாயம் அனுஸந்தித்தவுடன் பலன் கொடுக்கத் தொடங்கக் கூடியது. ஆவி பிரிந்த பின், மோக்ஷம் சென்றுதான் அனுபவம் என்பதில்லை.

prapatti.com

எம்பெருமான் ஆனுஷங்கிக பலனாய் பலவற்றை சேதனனுக்கு வாரி வழங்குகிறான்.

**பூவியல் பொழிலும் தடமும் அவன் கோயிலும் கண்டு ***
**ஆவி குளிர எங்கனே உகக்கும் கொல் இன்றே!"**
நம்மாழ்வார், திருவாய்மொழி 6-7-5

"பூக்கள் மலர்ந்து மணம் கமிழும் சோலையும், நீர் நிரம்பிய குளங்களும், எம்பெருமானுடைய கோயிலும் கண்டு ஆத்மா குளிர்ந்து மகிழ்வது என்னும் ப்ராப்தம் இன்றே கிட்டாதா," என்று தலைவி வருந்துவதாக ஆழ்வார் ஸாதிக்கிறார்.

அதனால், ஸ்வரூப ஞானம் பிறந்த உடனேயே எம்பெருமானை அனுபவிக்க ஏற்படும் ஆசை, ஆர்வம் பெரிதாகி உடனேயே ப்ரபத்தி செய்யத் தூண்டும். அப்படி செய்தவர்கள், மோக்ஷானந்ததத்தை பூலோகத்திலேயே பெறுவார்கள்.

## 10-21 த்வயத்தில் ப்ரபத்தி

இங்கே இதுவரை சொன்ன த்வய விவரணத்தில் ஶரணாகதி அடங்கி உள்ளதை பார்ப்போம்.

**ஸ்ரீமந் நாராயண** என்ற சொற்றொடரில் (phrase) நமக்கு தாய் தகப்பனான லக்ஷ்மீ, நாராயணன் இருவரையும் நோக்கி கூறுகிறோம். எதை சொல்கிறோம், **ஶரணம் ப்ரபத்யே** என்று. அதாவது உம்மை உபாயமாக பற்றுகிறோம் என்று. அவர்கள் மாதா, பிதா ஆனதால், அவர்கள் மனதிற்கு உகந்தவற்றை செய்வதும், உகக்காததை விலக்குவதும் இதிலே உள்ளடங்கி உள்ளது. அது ப்ரபத்தியின் முதல் இரண்டு அங்கங்களாணா ஆநுகூல்ய ஸங்கல்பம், ப்ராதிகூல்ய வர்ஜனத்தை காட்டுகிறது.

இங்கே ப்ரபத்யே என்று சொல்லும்போது மஹாவிஶ்வாசத்தை காட்டுகிறது என்று கீழே பார்த்தோம். தவிர மற்ற கர்ம, ஞான, பத்தி யோகங்களை செய்ய

அருகதை அற்றவன் என்று கார்ப்பண்யத்தால் ப்ரபத்திக்கு வந்து சேருகிறான் (சரணம் + ஆகதி) என்று பார்த்தோம்.

பகவானே உன்னிடம் எல்லா பொறுப்புகளையும் ஸமர்பித்துவிட்டேன். நீயே இந்த ஆத்மாவையும், உடலையும் காத்து அருள வேண்டும் என்று செய்யும் ப்ராத்தனை கோப்த்ருத்வ வரணம் ஆயிற்று.

இந்த ப்ரபத்திக்கு பின் வேறு ஒன்றும் தேவை இல்லை என்பதால், எல்லா பொறுப்புகளையும் எம்பெருமானிடம் ஸமர்பித்து விட்டோம். அது பரந்யாஸம் (சுமை ஒப்படைத்தல்) ஆகிற அங்கியை காட்டியது

prapatti dot com

# 11 - யே

**முயலாத மூன்றில் இனம் மயங்க**
**இயலாத நிலையுள் மனம் ததும்ப**
**முத்திக்கு வழி சரண் ஒன்றெயென**
**தித்திக்கும் முகுந்தன் திண்கழலே.**

**முயலாத** = ஸாதிக்க முடியாத
**மூன்றில்** = கர்ம, ஞான, பக்தி யோகங்களில்
**இனம்** = மக்கள், சேதனர்கள்
**மயங்க** = பற்றி ப்ரமையுடன் நிற்க
**இயலாத** = கைம்முதல் அற்று, செய்ய முடியாத
**நிலையுள்** = நிலைமையை குறித்து
**மனம் ததும்ப** = மனம் பரிதவிக்க
**முத்திக்கு வழி** = மோக்ஷத்திற்கு உபாயம்
**சரண் ஒன்றே என** = ப்ரபத்தி ஒன்றே என்று
**தித்திக்கும்** = இனிமையாய்
**முகுந்தன்** = மோக்ஷத்தை அருளும் எம்பெருமான்
**கழலே** = திருவடிகளை
**திண்** = கெட்டியாக (பற்றுதலே)

## 11-1 பாசுரத்தின் ஸாரார்த்தம்

பாசுரத்தில் முதல் பதம் **முயலாத.** கடைசி பதம் **திண்கழலே.** இரண்டு பதங்களையும் சேர்க்கும் போது **முயலாத திண்கழலே** அதாவது வேறு ஒன்றும் செய்ய சக்தியில்லாமல் பகவானுடைய திருவடிகளை கெட்டியாக பிடித்து ശரணாகதி செய்வது. பாசுரத்தில் மீதி எல்லாம் விவரணம்.

## 11-2 யே என்றால் என்ன?

prapatti dot com

**"யே"** என்பது தன்மை ஒருமை. அது **உத்தம புருஷ ஏக வசனத்தை** காட்டுகிறது. அதாவது உபாயத்தை அனுஷ்டிபவனை கர்த்தாவாக (Performer) காட்டும். உண்மையில், இந்த **"யே"** உபாயத்தை **அனுஷ்டிப்பவனின் தகுதி**யை காட்டுவதாக கொள்ள வேண்டும்.

ப்ரபத்தி என்னும் செயலைச் செய்யும் சேதனனுக்கு தகுதி இருந்தால்தானே அதைச் செய்ய முடியும்? அந்த தகுதி என்ன என்றால் மற்றைய கர்ம, ஞான, பக்தி யோகங்கள் போல் இல்லை. **ஆகிஞ்சன்யம்** (வேறு ஒரு உபாயத்திற்கும் அருகதை அற்றவன் - இயலாமை), **அநந்யகதித்வம்** (வேறு ஒரு தெய்வமோ அல்லது பலனையோ நினைக்காமை).

ப்ரபன்னன் எத்தகைய கர்த்தா என்றால் **ஆகிஞ்சன்யத்தை முன்னிட்ட ஶரணாகதிக்கு கர்த்தா எ**ன்று தேறும்.

"என்னால் உபாயமாக ஒன்றும் செய்ய முடியவில்லையே" என்று தன் இழிந்த நிலையை எண்ணி கதறுவது (utterly helpless and hopeless nature). இதை கார்ப்பண்யம் என்பர். அதனால் ஶ்ரீமந் நாராயணனின் திருவடிகளில் பரந்யாஸம் செய்வதைத் தவிர வேறு உபாயம் இல்லை என்று எம்பெருமானையே அடைவது.

ஆக, இந்த **யே** என்பது எதை குறிக்கும் என்றால் சேதனனின்

1. **தகுதி** - ப்ரபத்திக்கு தகுதியாவது மற்ற யோகங்களில் தகுதி அற்ற நிலைமை

2. **ஸ்வரூபம்** - ஸேஷத்வ பாரதந்த்ரிய ஸ்வரூபம் (தான் எம்பெருமான் ஒருவனுக்கே அடங்கிய அவனை விட்டு பிரிக்க முடியாத அடிமை)

3. **அறிவு** - எம்பெருமானே எல்லாவற்றையும் நடத்தி வைக்கிறான் (எம்பெருமான் ஸங்கல்பமே ஸர்வமும்) என்பதை காட்டுவது.



prapatti dot com

## 11-3 ப்ரபத்திக்கு தகுதி

ப்ரபத்திக்கு செய்வதற்கு முக்கியமாய் இரண்டு அதிகாரங்கள் (eligibility criteria, qualification) வேண்டும். ஆகிஞ்சன்யம், அநந்யகதித்வம் என்பவை. **ந கிஞ்சின அஸ்தி இதி அகிஞ்சன: தஸ்ய பாவா:** என்று ஆகிஞ்சன்யத்திற்கு விளக்கம் (definition).

ஒரு தகுதி (eligibility), வசதி (facility), ஒரு புகல் (refuge) என்று இல்லாத பரிதாபகரமான தன்மை (pathetic state). இதை கார்ப்பண்யம் என்றும் சொல்லுவர்.

- **ஆகிஞ்சன்யம்** என்பது இங்கே வேறு உபாயங்களை அனுஷ்டிக்க சக்தி, திறமை பொறுமை, ஜாதி நியமம் இல்லாமை.
- **அநந்யகதித்வம்** என்பது எம்பெருமானைத் தவிர வேறு கதியில்லாமை. தான் வேண்டும் பொருளைத் தர அவன் ஒருவனாலேயே முடியும். அவனை ஶரணாகதி அடைவதைவிட வேறு வழியில்லை என்ற முடிவு.

**நிஷ்கிஞ்சநத்வ த₄நிநா விபு₃தே₄ஶ யேந**
**ந்யஸ்த: ஸ்வரக்ஷண ப₄ரஸ்தவ பாத₃ பத்₃மே ।**
**தேவநாயக பஞ்சாஶத் 47**

**(விபு₃தே₄ஶ)** ஹே தேவர்களின் நாயகனே,
**(நிஷ்கிஞ்சநத்வ த₄நிநா)** இல்லாமல் இருப்பதையே தனமாகக் கொண்டு,
**(யேந ஸ்வரக்ஷண ப₄ர)** எவனால் தன்னை காப்பாற்றிக் கொள்கிற சுமை,
**(தவ பாத₃ பத்₃மே)** உம்முடைய திருவடித் தாமரையில்
**(ந்யஸ்த;)** ஸமர்ப்பிக்கப்படதோ”

கைம்முதல் ஒன்றும் இல்லாத தன்மையே தகுதியாகக் கொண்டு ஆத்ம ஸமர்ப்பணத்தை செய்யும் ப்ரபன்னனை சொல்கிறார், ஸ்வாமி தேசிகன்.

ஜனகர், “என்னிடம் எதுவும் இல்லாமல் இருக்கும்போது கணக்கற்ற செல்வம் குவிந்துள்ளது போல் இருக்கிறது” என்றார்.

பகவான் கிருஷ்ணன், பிராட்டி ருக்மிணியிடம் சொல்கிறான், "நிஷ்கிஞ்சநாவயம் ஶஶ்வத்" என்று இல்லாத தன்மையே நிரந்தரம் என்கிறபடி.

In English, we say "The less is more", "Smaller the better", "Keep it simple".

Yet do much less, so much less, Someone says, (I know his name, no matter) -- so much less! Well, less is more, Lucrezia: I am judged, There burns a truer light of God in them - Robert Browning

## 11-4 ப்ரபத்தி ஸக்ருத் காரியம்

ப்ரபத்தி என்பது ஒரு முறைதான் செய்வது. திருப்பி திருப்பி பண்ணினால் மஹாவிஶ்வாஸம் இல்லை என்று போய்விடும்.

சாதாரணமாக ஒருத்தரிடம் ஒன்று வேண்டினோம். கவலைப் பட்டு திருப்பி திருப்பி அதை கேட்கிறோம். உடனே அவனுக்கு கோபம் வந்துவிட்டது. "ஒரு தடவை சொன்னால் தெரியாதா. சும்மா எதற்கு திருப்பி சொல்கிறாய்? என்மேல் நம்பிக்கை இல்லாயா?" என்று கேட்பான்.

சாதாரண மனிதர்களிடம், சாதாரண காரணத்திற்கு இப்படி சந்தேகம் என்றால், ப்ரபத்தி எப்படிப் பட்டது? எத்தனை கோடிக்கணக்கான பிறவிகள் கடந்து ஸம்ஸார ஸாகரத்தில் மூழ்கி கிடக்கும் நமக்கு, ப்ரபத்தி என்னும் ஒரு அல்பமான காரியம், எல்லா பாவங்களையும் விலக்கி, நித்யமான ஆனந்தத்தை அளிக்கும் என்று சாஸ்திரங்கள் சொல்லுகின்றன. அதில் சுலமாக நம்பிக்கை வந்து விடுமா?

அது உண்மையா? நம்பும்படி இல்லையே! கடைக்கு போனால் காசுக்கு தகுந்த பொருள்தானே தருகிறார்கள். உலக வழக்கு அப்படி இருக்க, மிகச் சிறிய காரியத்திற்கு, அதுவும் ஒரு தடவை வாய் விட்டு ஶரணாகதி என்று

செய்தற்கு, மிகப் பெரிய ஆனந்தம் கிடைப்பது முறையாக இல்லையே (Not logical). இதில் என்ன புதைந்து இருக்கிறது (What is the catch?) என்று கேட்பார்கள்.

## 11-5 ஸக்ருத் காரியத்தில் ஸர்வ நம்பிக்கை

அந்த ப்ரபத்தி எம்பெருமானிடம் ஒரு தடவை செய்தால் போதும், என்று சொன்னால், ஸர்வ வல்லமை படைத்தவன் அவன், மோக்ஷத்தை அளிக்கக்கூடியவன் அவன் ஒருவனே என்றால் நாம் பண்ணிய ஶரணாகதி சரிதானா? ஏதாவது அரைகுறையாக பண்ணிவிட்டு, திருப்பி மறுபடியும் பண்ண முடியாதே (You get only one chance and better be right).

நமக்கு நிச்சயம் மோக்ஷம் தானா என்று ஒரு வேகம் (impatience, anxiety), மனக் கலக்கம் (mental agitation), துடிப்பு (restlessness) ஏற்படலாம்.

இதை அறிந்துதான், லக்ஷ்மீ தந்த்ரத்தில்

**ஶரணம் ப$_4$வ தே$_3$வேஶ ஸ்ரீநாத$_2$! லக்ஷ்மீபதே! மம**
**ஸக்ருத் தே$_2$வ ப்ரபந்நஸ்ய க்ருத்யம் ந ஏவ அந்யதி$_3$ஷ்யதே**
**லக்ஷ்மீ தந்த்ரம் 28-16**

தேவர் தலைவனே, திருவின் நாயகனே எனக்கு உபாயமாவாய். ஒரு தடவை ஶரணம் அடைந்த ப்ரபன்னன் பேற்றுக்கு வேறு செய்ய வேண்டியது ஏதும் இல்லை" என்றது.

**ப்ராய: ப்ரபத$_3$நே பும்ஸாம் பௌந: புந்யம் நிவாரயந் ।**
**ஹஸ்த: ஸ்ரீரங்க$_3$ப$_4$ர்து: மாம் அவ்யாத்$_3$ அப$_4$யமுத்$_3$ரித: ।।**
**ஸ்வாமி தேசிகன் , ஸ்ரீந்யாஸ திலகம் 2**

**(ப்ரபத$_3$நே பும்ஸாம்)** ப்ரபத்தியில் சேதனர்களுக்கு,
**(பௌந: புந்யம் )** பல தடவை செய்வதை
**(ப்ராய: நிவாரயந்)** மறுப்பது போல்

**(ஸ்ரீரங்கக$_3$ப$_4$ர்து: ஹஸ்து)** ஸ்ரீரங்கநாதனுடைய (வலது) திருக்கையானது **(அப$_4$யமுத்$_3$ரித: மாம் அவ்யாத்$_3$)** அபய முத்திரை உடையது, (அது) என்னை காத்தருள வேண்டும்," என்று, ஸ்வாமி தேசிகன் ஸாதிக்கிறார்.

எல்லோரும் போய் ஸ்ரீரங்கநாதனை ஸேவிக்கிறோம். ஆனால், ஸ்வாமி தேசிகனுக்கு இருக்கும் அனுபவம் மீதி யாருக்கும் கிடையாது. ஸ்ரீரங்கநாதனுடைய அபய ஹஸ்தம் கொஞ்சம் திரும்பி இருப்பது நாம் பண்ணுகிற ஶரணாகதியை போது போதும். மேலே திருப்பி, திருப்பி செய்ய வேண்டாம் என்று ஒரு தடவையுடன் தடுத்து நிறுத்துவது போல் இருக்கிறது.

"ஒரு தடவை செய்த ப்ரபத்திக்கே நீ கோரிய பலன்களை எல்லாம் அளிக்கிறேன் என்ற விரதம் நான் கொண்டுள்ளேன். மேலே மேலே ஶரணாகதி செய்து, கொடுக்க முடியாதபடி என்னை கடனாளியாக ஆக்காதே (don't burden me with more debt)," என்று சொல்வது போல் ரங்கநாதனுடைய கரம் உள்ளது என்று தேசிகன் குமாரர் நயினாசாரியார் வியாக்கியானம்.

## 11-6 அஞ்சலி வைபவம்

த்வத$_3$ங்க்$_4$ரி முத்$_3$தி$_3$ஶ்ய கதாபி கேநசித்
யத$_2$ா தத$_2$ா வாபி ஸக்ருத் க்ருதோஞ்ஜலி:
ததை$_3$வ முஷ்ணாத்ய ஶுப$_4$ாந்ய ஸேஷதஶ்
ஶுப$_4$ாநி புஷ்ணாதி ந ஜாது ஹீயதே
ஆளவந்தார் ஸ்தோத்ர ரத்னம் 28

**(த்வத$_3$ங்க்$_4$ரிம் உத்$_3$தி$_3$ஶ்ய)** பகவானே, உன்னுடைய திருவடியைக் குறித்து,
**(கதாபி கேநசித்)** எப்போதாவது எவனாவது,
**(யத$_2$ா தத$_2$ா வாபி)** ஏதோ ஒரு விதத்தில்,
**(ஸக்ருத் க்ருதோஞ்ஜலி)** ஒரே முறை செய்த கை கூப்புதலானது
**(ததை$_3$வ)** அப்போதே,
**(அஸேஷத அஶுப$_4$ாநி முஷ்ணாதி)** ஒன்று விடாமல் பாபங்களை ஒழிக்கிறது.
**(ஶுப$_4$ாநி புஷ்ணாதி)** நன்மைகளை வளரச் செய்கிறது. அவை

(ந ஜாது ஹீயதே) ஒரு காலத்திலும் குறைவதில்லை,
என்று ஆளவந்தார் ஸ்தோத்ர ரத்னத்தில் சொல்லுகிறார்.

ஸ்வாமி தேசிகன் இந்த ஸ்லோகத்திற்கு என்றே **“அஞ்சலி வைபவம்”** என்ற ரஹஸ்யத்தை ஸாதித்திருக்கிறார், சில்லரை ரஹஸ்யங்களில் இந்த ஸ்லோகத்தை பதம் பதமாக வியாக்கியானம் செய்து இருக்கிறார்.

உலகத்தில் என்ன பார்க்கிறோம்? யாராவது நமக்கு கெடுதல் பண்ணினால் “அவனை சும்மா விடுகிறேனா இல்லையா பார்? அவனை துவம்ஸம் பண்ணுகிறேன் பார் என்று கையிலே இருக்கிற சாமானாலேயே அவனை அடித்து உதைக்க பார்க்கிறோம்.”

அப்படியிருக்க, நாம் பண்ணிய குற்றம் கொஞ்சம் நஞ்சமா? எத்தனை நாள், வருஷம், ஜன்மங்கள் பூராகவும் பாபம் செய்து இருக்கிறோம். பகவானுக்கும் கோபம் வருகிறதாம். பகவானுக்கு ஆக்ஞாதிலங்கனம் நம் பேரில். சாஸ்திர விரோதமாய் நடந்ததால் வருகிற கோவம்.

**ஹஸ்தீஶ து3::க விஷ தி3க்3த4 பலாநுப3ந்தி4நி**
**ஆப்ர3ஹ்ம கீடம் அபராஹத ஸம்ப்ரயோகே3**
**துஷ்3கர்ம ஸஞ்சய வஶாத்3 து3ரதிக்ரமே ந:**
**ப்ரத்யஸ்த்ரம் அஞ்சலிரஸௌ தவ நிக்3ரஹ அஸ்த்ரே**

ஸ்வாமி தேசிகன், வரதராஜ பஞ்சாஸத் 30

வரதராஜ பஞ்சாஸத்தில் ஸ்வாமி தேசிகன் இதையே ரொம்ப அழகான உதாரணத்துடன் (example) காண்பிக்கிறார்.

(ஹஸ்தீஶ) பேரருளானே!
ந துஷ்3கர்ம ஸஞ்சய வஶாத்3) எங்களுடைய பாப மலைக் குவியல்கள்,
(து3ரதிக்ரமே ) தவிர்க்கமுடியாதவை .
(தவ நிக்3ரஹ அஸ்த்ரே) உன்னுடைய நிக்ரஹம் எனும் அம்பு
(து3::க விஷ தி3க்3த4) துன்பம் என்னும் விஷம் பூசி
(பல அநுப3ந்தி4நி) பலனைத் தரக் கூடியது.
(ஆப்ர3ஹ்ம கீடம்) ப்ரம்மா முதல் புழு வரை,

(அபராஹத ஸம்ப்ரயோகே₃) அதன் குறியை தடுக்க முடியாது.
(பரத்யஸ்த்ரம் ந: ஆஸௌ அஞ்சலி) ஆனால், அதற்கு எதிர் அம்பாகிறது இந்த கை கூப்புதல்," என்றார்.

சண்டையில், பகைவர்களைக் கொல்ல அம்பில் விஷத்தை தடவி அதை எய்துவார்கள். அதுபோல பகவான் நமக்கு நரக தண்டனை கொடுக்கும்போது அவனுடைய ஸங்கல்பம் என்னும் அம்பில் துன்பம் என்ற விஷத்தை பூசி பகைவர்கள் ஆகிற நம்போல் விடுகிறான்.

நாம் செய்த பாப குவியல்களின் மலைகளில் ஒரு கடுகு போன்ற துளிக்கு தண்டனை பகவான் கொடுக்க நினைத்தால், அவனுடைய நிக்ரஹ ஸங்கல்பத்தை யாரால் தடுக்க முடியும்? ப்ரம்மா முதல் புழு வரை இதை தடுக்க முடியாது.

ஆனால் அதை கீழே தள்ளி சக்தியில்லாமல் செய்ய ஒரு எதிர் அம்பு இருக்கிறது, நான் சொல்கிறேன்," என்கிறார் தேசிகன் இந்த கை கூப்புதலால், உன் தண்டிக்கும் எண்ணம் ஒழிந்து படிப் படியாய் எங்களுக்கு நல்ல சிந்தனை வந்து உன் அருளுக்கு பாத்திரம் ஆகிறோம்.

## 11-7 காகாசுரன் ஶரணாகதி

இந்த அஞ்சலி என்பதை தேசிகன் ப்ரபத்தி என்று காண்பிக்கிறார், அஞ்சலி வைபவத்தில். எத்தனை தடவை செய்வது இந்த ப்ரபத்தியை என்றால்? ஒரு தடவைதான். திருப்பி திருப்பி செய்தால் விசுவாஸம் இல்லை என்து போய்விடும்.

கேள்வி வரும். நிஜமாகவே எம்பெருமான் அஸ்த்ரத்தை நம் மேல் விடுவாரா என்று. இல்லை இந்த அஸ்த்ரம் என்பது ஒரு உதாரணமா (example)? நம்மை எல்லாம் பயமுறுத்துவதற்காகவா? உண்மையிலேயே பகவான் அஸ்த்ரம் எங்கேயாவது எய்திருக்கிறாரா?

ஸீதை ஹனுமானிடம் சொல்கிறாள் “சித்ரகூடத்தில் இருக்கும்போது ராமன் என் மடியில் ஸயனித்து இருந்தார் அப்பொழுது இந்த்ரன் மகன் ஜயந்தன் ஒரு காகத்தின் வேஷத்தில் வந்து என்னுடைய திருமார்பை புண்படுத்தி நானும் தாங்க முடியாமல் எம்பெருமானை உறக்கத்திலிருந்து எழுப்பி விட்டேன். பகவானும் நடந்ததை அரிந்து கோவம் கொண்டு அருகில் உள்ள ஒரு புல்லை பிடுங்கி ப்ரம்மாஸ்திரமாக ப்ரயோகித்தார்.”

அந்த காகாசுரன் செய்த அபசாரத்தையும் ராமன் ப்ரம்மாஸ்த்ரத்தை ப்ரயோகித்தையும் ஆஞ்சனேயர் கேட்டுக் கொண்டு இருந்தார் அவருடைய பார்வை பார்த்தவுடன் ஸீதை புரிந்து கொண்டாள் “ஒரு காக்கா, சின்ன பறவை. அதற்கு இந்த அஸ்த்ரமா? சாதராண தோலும் எலும்புமாக தளர்ந்து இருக்கும் மனிதன் கூட ஒரு குச்சியை வீசினால் காக்கா பொத்தென்று கீழே விழுகிறது. இந்த ராமன் பெரிய மஹாவீரன் இவன் ப்ரம்மாஸ்திரத்தை விடணுமா? எதற்கு எது என்று இவனுக்கு தெரியாது போல் இருக்கிறது” என்று நினைத்த மாதிரி ஒரு பார்வை.

ஸீதை சொன்னாள், “அப்பா, இது அபசாரத்திற்கு இல்லை. அபசாரம் பட்ட இடத்தின் கௌரவத்திற்கு.” என்று.

**சோகம் தவிர்க்கும் * சுருதிப்பொருள் ஒன்று சொல்லுகின்றோம் *
நாகம் தனக்கும் இராக்கதற்கும் * நமக்கும் சரணாம் *
ஆகண்டலன் மகனாகிய * ஆவலிப்பேறிய * ஓர்
காகம் பிழைத்திடக் * கண் அழிவே செய்த காகுத்தனே
ஸ்வாமி தேசிகன், அமிருத ஸ்வாதினி 15**

**(சோகம் தவிர்க்கும்)** எல்லாவிதமான துன்பங்களையும் துடைக்கும்
**(சுருதிப்பொருள்)** வேதத்தின் ஸாரார்த்தம்
**(ஒன்று சொல்லுகின்றோம்)** ஒன்று நான் சொல்லுகிறேன், நீ கேட்பாயாக.
**(ஆகண்டலன் மகனாகிய)** இந்திரனுடைய மகனாகிய
**(ஆவலிப்பேறிய காகம்)** அஹங்காரம் ஏறியதுமான ஒரு காக்கை
**(கண் அழிவே செய்த)** ஒரு கண்ணை மாத்திரம் அழித்து

(பிழைத்திட) உயிருடன் விட்ட
(காகுத்தனே) ககுத்ஸ்த்த வம்ஸத்தில் பிறந்த ராமன், அவனே
(நாகம் தனக்கும்) சுவர்க்கத்தில் வசிக்கும் தேவர்களுக்கும்
இராக்கதற்கும்), ராக்ஷஸர்களுக்கும்,
(நமக்கும் சரணாம்) மோக்ஷத்தை அடைய விருப்பம் உள்ள நமக்கும் உபாயம் ஆகிறான்," என்றார்.

ஸ ராமாய நமஸ்க்ருத்வா ராஜ்நே த₃ஶரத₂ா ச
விஸ்ருஷ்ட ஸ்தேந வீரேண ஜக₃ாம ஸ்வகம் ஆலயம்
வால்மீகி, ராமாயணம் சுந்

ராமாயணத்தில், சுந்தர காண்டத்தில் அந்த காகாசுரன் ராமனுக்கும் (அவன் தந்தையான) தசரத மஹாராஜாவுக்கும் நமஸ்காரம் செய்கிறான் பிறகு வீரரான ராமபிரானிடம் விடை பெற்று தன் இருப்பிடம் சேர்ந்தான் என்றார் வால்மீகி.

எம்பெருமான் கருணாமூர்த்தி. எத்தகைய குற்றம் செய்து இருந்தாலும், என்னை மன்னித்து அருள் என்று அவன் திருவடியை பற்றினால் எவருக்கும் இரங்கக் கூடியவன் என்பது புலனாகிறது, இந்த நிகழ்ச்சியிலிருந்து.

## 11-8 ராம சரம ஸ்லோகம் தமிழாக்கம்

ஸ்வாமி தேசிகன், ஸமிஸ்கிருத்தத்தில் உள்ள ராம சரஸ்லோகத்தை அற்புதமாக அப்படியே தமிழாக்கித் தந்துள்ளார்.

ஸக்ருதே₃வ ப்ரபந்நாய தவாஸ்மீதி ச யாசதே |
அப₄யம் ஸர்வ பூ₄தேப்₄யோ த₃த₃ாம்யேதத்₃ வ்ரதம் மம ||
வால்மீகி ராமாயணம் யுத்த 18-33

இது ஸமிஸ்கிருத ஸ்லோகம். கீழே தேசிகனின் தமிழாக்கம்.

prapatti.com

**ஒருக்காலே சரணாக அடைகின்றாற்கும் ***
**உனக்கடிமை ஆகின்றேன் என்கின்றாற்கும் ***
**அருக்காதே அனைவர்க்கும் அனைவராலும் ***
**அஞ்சேல் என்று அருள் கொடுப்பன் - இதுதான் ஓதும் ***
**இருக்காலும் எழில் முனிவர் நினைவினாலும் ***
**இவை அறிவார் செயலுடன் என் இசைவினாலும் ***
**நெருக்காத நீள் விரதம் எனக்கு ஒன்று என்னும் ***
**நெறி உரைத்தார் நிலை உணர்ந்து நிலை பெற்றோமே**
ஸ்வாமி தேசிகன், அமிருத ஸ்வாதினி 16

வரி முறைப்படி தேசிகனின் பாசுரத்தின் விளக்கம் -

- ஒரு முறை என்னைஅடைக்கலம் என அடைந்தவனுக்கும்
- நான் உனக்கு தாஸன் என்று சொன்னவனுக்கும்
- குறை சிறிதும் இன்றி ஸகல ஜீவராசிகளுக்கும் மற்றவைகளால்
- பயம் தவிர்க்கும்படி நான் அநுக்ரஹீப்பேன் எ இதுதான்
- ஒதும் வேதத்தினாலும், நினைவில் கொண்ட ஸ்மிருதியினாலும்
- அவற்றை அறிந்த மஹன்களின் செய்கைகளாலும், என் சம்மதத்துடன்
- நீக்கமுடியாத ஒரு பெரிய விரதம் எனக்கு ஒன்று உண்டு
- உபாயத்தை உபதேசித்த ராமனுடைய உறுதியால் அமைதி பெற்றோம்

**உமதடிகள் அடைகின்றேன் என்று * ஒருகால் உரைத்தவரை**
ஸ்வாமி தேசிகன், அடைக்கலப்பத்து 7

என்று அடைக்கலப்பத்தில் ஸ்வாமி தேசிகன் ஶரணம் என்று பகவானிடம் ப்ரபத்தி செய்தல் ஒரு தடவை, ஸக்ருத் காரியம்தான் என்பதைக் காண்பிக்கிறார்.

## 11-9 முயலாத மூன்றில் இனம் மயங்க

முயலாத மூன்று என்பது **கர்ம, ஞான, பக்தி** யோகங்களைச் சொல்லும். சாதரண மக்களால் அவற்றை செய்வது கடுமையானது. ஆகையால் இங்கே ஆகிஞ்சன்யம் சொல்லப்பட்டது.

> **பத்தி முதலாம் அவற்றில் * பதி எனக்கு கூடாமல்**
> **ஸ்வாமி தேசிகன், அடைக்கலப்பத்து 1**

ஸ்வாமி தேசிகன் அடைக்கலப்பத்தை ஆரம்பிக்கும்போதே பக்தி யோகங்கள் போன்ற உபாயங்களில் பகவானை அடைவது என்பது கை கூடாமல் போகவே, கடைசியாக அத்திகிரி பெருமானிடம் சரண் புகுவதாய் ஸாதித்தார். அதனால்தான் **சரணாகதி (சரணம் + ஆகதி)** என்பது, மற்ற நெறிகள் எல்லாம் கைவிடவே, கடைசியாக இந்த நெறிக்கு வருகை.

> **மூண்டாலும் அரியதலின் முயல வேண்டா ***
> **முன்னம் அதில் ஆசைதனை விடுகை திண்மை ***
> **ஸ்வாமி தேசிகன், அதிகார ஸங்க்ரஹம் 47**

என்று ஸ்வாமி தேசிகன் இந்த கருத்தையே சரம ஸ்லோகத்தை விளக்கும்போது சொன்னார்.

ஸாதிக்க முடியாத உபாயத்தை, ஆரம்பித்து விட்டாலும் இனிமேலாவது அதை தொடர வேண்டாம். ஆரம்பித்த வழி தப்பானது. அது போய்ச் சேர வேண்டிய இடத்திற்கு கொண்டு செல்லாது என்றால் அந்த வழியில் எவனாவது மேலே தொடர்வானா? (Why would anyone wants to continue, when he knows the exit he took was wrong?)

தப்பான வழி என்று தெரிந்தால் அதை முதலிலேயே மொத்தமாக ஒழித்து விடுவதுதான் சிறந்தது. இல்லாவிட்டால், கொஞ்சம், நஞ்சம் என்று நப்பசை வந்து சரியான வழியையும் கெடுத்து விடும்.

"போகாத ஊருக்கு வழி கேட்டானாம்" என்கிறபடி, அவன் கேட்ட வழி ஊருக்கு கொண்டுபோய் சேர்க்காது. இங்கே மீதி யோகங்கள் எல்லாம் மோக்ஷத்தில் கொண்டு சேர்க்காது. முக்யமான மூன்று - கர்ம, ஞான, பக்தி யோகங்கள்.

prapatti dot com

கஜேந்திர மோக்ஷம், த்ரௌபதி ரக்ஷகம், காகாசுரன் ஶரணாகதி இந்த எல்லாவற்றிலும் இது கண்கூடு (obvious). தன்னால் ஜயிக்க முடியும், சமாளிக்க முடியும் என்ற அகங்காரத்துடனோ, இல்லை நம்மை சேர்ந்தவர்கள் காப்பாற்றுவார்கள் என்ற நினைவோ ஒழியும் வரை பகவானிடம் சரணாகதி என்ற மனப்பான்மை வராது.

**"தான், தனது"** என்கிற **அகங்கார, மமகாரங்கள்** இரண்டும் ஒழிவதுதான் உயர்ந்த உபாயம் என்று திருமந்திரம் (அஷ்டாக்ஷரம்) சொல்லும். இவையில் பற்று ஒழிந்தால் ஶரணாகதி புத்தி தானாகவே வந்தடையும்.

## 11-10 கர்ம யோகம்

கர்மாக்கள் வேறு, கர்ம யோகம் வேறு என்பதை தெரிந்து கொள்ள வேண்டும். மனிதன் செய்யும் கர்மங்கள் அவனை ஸம்ஸாரத்தில் ஆழ்த்துகின்றன. பலனைக் கருதி செய்யும் காரியங்கள் பிறவிக் கடலில் அழுத்துகின்றன. ஆனால் பலனைத் துறந்த கர்ம யோகமோ, ஸம்ஸாரத்திலிருந்து விடுதலை செய்யும்.

ஜீவர்கள் செய்யும் காரியங்களை மூன்றாக பிரிக்கலாம்

1. **நித்யம்**
   என்பது தொடர்ந்து விடாமல் கட்டாயம் செய்யவேண்டியவை இவைகளை **செய்யாவிட்டால் பாபம்** வரும். உண்மை பேசுதல், நல்ல வழி நடத்தல், ஸந்தியா வந்தனம் போன்றவை
2. **நைமித்யம்**
   குறிப்பிட்ட காலங்களில் செய்ய வேண்டியவை அப்படி **செய்யாவிட்டால் பாபம்.** அமாவாசை, சூரிய, சந்திர க்ரஹண தர்ப்பணம் போன்றவை
3. **காம்யம்**
   ஆசைப்பட்டதை நிறைவேற்ற வேதத்தில் விதித்த காரியத்தை செய்தல். இது **ஆசையினால் செய்வது**. செய்யாவிட்டால் பாபம் இல்லை. மழை

விரும்புவன் **காரீரி,** புத்திரன் வேண்டுபவன் **புத்திர காமேஷ்டி**, ஸ்வர்கம் வேண்டுபவர் **ஜோதிஷ்டோமம்** போன்ற யாகங்களை செய்தல்

ஜீவர்கள் செய்யும் காரியங்களை வேறு விதமாகவும் பிரிக்கலாம்

1. **ஆஜ்ஞா கைங்கர்யம்**
   பகவானுடைய **கட்டளை**களாகச் சொல்லப்பட்ட காரியங்கள் சுருதி, ஸ்மிருதி இவற்றில் சொன்னவை **செய்வதால் புண்ணியம் ஒன்றும் இல்லை. செய்யாவிட்டால் பாபம்**
2. **அநுஜ்ஞா கைங்கர்யம்**
   **செய்தால் புண்ணியம். செய்யாவிட்டால் பாபம் வராது**. கோவில் போவது. பெருமாளுக்கு பூ சாத்துவது போன்றவை.

**ஶ்ருதி: ஸ்ம்ருதிர் மமைவாஜ்ஞா**
**யஸ்தாமுல்லங்க்₄ய வர்த்ததே**
**ஆஜ்ஞாச்சே₂தீ₃ மம த்₃ரோஹீ**
**மத் பக்தோऽபி ந வைஷ்ணவ:**
**பகவான், விஷ்ணு தர்மம் 6-31**

விஷ்ணு தர்மத்தில் பகவானே சொல்லி இருக்கிறார், "வேதமும், ஸ்மிருதியும் என்னுடைய ஆணை. அதை மீறி நடப்பவன் எவனாக இருந்தாலும் என் கட்டளையை மீறியவன். எனக்கு த்ரோஹம் செய்தவன். என்னுடைய பக்தனாக இருந்தாலும் அவன் வைஷ்ணவன் இல்லை."

பகவத் கீதை பல இடங்களில் இதைப் பற்றி சொன்னாலும் மூன்றாவது அத்தியாயம் கர்ம யோகத்தை விவரமாக சொல்லுகிறது.

நிஷ்காம்ய கர்மம் என்று கர்ம யோகத்தில் ஈடுபட்டவன், அதன் பலனை (rewards) சிந்திக்க மாட்டான். இந்த சிறந்த உபாயத்தை ஞான யோகத்துடன் கூடிய கர்ம யோகம் என்றும் ஸம்ஸாரத்தை அழித்து மோக்ஷத்தை கொடுக்கும் என்றார் எம்பெருமானார், கீதா பாஷ்யத்தில்.

பகவத் கீதை முழுவதும் பலனில் விருப்பு இன்றி கர்மயோகம் செய்தை வலியுறுத்துகிறது. இன்பம் (pleasure), துக்கம் (sorrow), ஆசை (desire), வெறுப்பு (hatred), வெப்பம் (heat), குளிர் (cold), வெற்றி (victory), தோல்வி (defeat) இவற்றை பொருட்படுத்தாமல் செயல் படுவான், ஸ்தித ப்ரஞ்ஞன்.

வேதங்கள் பலருக்கும் பொதுவானவை. அவற்றில் காம்யமாக பல கர்மாக்கள் விதித்திருப்பினும் அவை எல்லோருக்கும் அல்ல. போகங்களை அனுபவிப்பனுக்கு அவை.

- **கர்த்ருத்வ த்யாகம்** (தானே செயல்களை செய்கிறேன் என்ற எண்ணம் விடுகை)
- **மமதா த்யாகம்** (செய்யும் செயல் தன்னைச் சேர்ந்தது என்ற எண்ணம் விடுகை)
- **பல த்யாகம்** (செய்யும் செயலின் பலன் நம்மைச் சேர்ந்தது என்ற எண்ணம் விடுகை)

என்று மூன்று தியாகங்களை கொண்டு செயல் புரிகிறான், கர்ம யோகி.

## 11-11 ஞான யோகம்

ஞானம் என்பது ஜீவன் வேறு. சரீரம் வேறு. ஜீவாத்மா என்பது இந்த்ரியங்கள், மனம், ப்ராணன் இவற்றைவிட வேறானது.

இந்த ஜீவாத்மாவும், ப்ரக்ருதியும் அதிலிருந்து உண்டான பொருள்களும் பகவானுக்கு சரீரம். பகவான் அந்தர் ஆத்மாவாக எல்லாவற்றிலும் உள் இருந்து நடத்துகிறான் எம்பெருமான் ஶேஷி. ஜீவர்கள் ஶேஷன் என்ற அறிவே ஆரம்பம். இதில் பரமாத்ம ஞானம் என்று எம்பெருமானை அனுபவிப்பது உயர்ந்தது.

prapatti dot com

மனஸ்ஸை ஜயித்தவர்கள், சுத்தமான ஆத்மாவையே ஸ்திரமாக பற்றி நிற்பவர்களின் நிலையே ஞான யோகம் என்றார் ஆளவந்தார் கீதார்த்த ஸங்க்ரஹத்தில்.

மனத்தில் சாந்தியுடன், சுபாச்ரயனான புருஷோத்தமனிடம் சலியாத, நிலையான மனத்துடன் இருப்பதாலே பாபங்கள் தீர்ந்து எல்லா ஆத்மாக்களையும் ஒன்றாய் காண்கிறான். அப்படி செய்வதால் எம்பெருமானுக்கு சாம்யமான நிலை அடைகிறான்.

இந்த ஆத்ம ஞானி எம்பெருமானுக்கே கைங்கர்யம் செய்து பேரின்பம் அடைய விரும்புவான்.

## 11-12 பக்தி யோகம்

பக்தி என்பது வேறு. பக்தி யோகம் என்பது வேறு. சாதாரணமாக ஒருவன் பகவானிடம் பக்தி செய்கிறான் என்பது பக்தி யோகம் அல்ல. இது தனிப்பட்ட **விசேஷமான யோகம். வேதனம் (ஞானம், அறிதல்), த்யானம், உபாஸனம், பக்தியோகம், பரபக்தி** என்பவை எல்லாம் ஒன்றையே சொல்லுகின்றன (synonyms).

இது தியான வடிவானது. உள்ளத்தால் செய்ய வேண்டியது. முதலில் மனது தூய்மையாக இருக்க கர்ம, ஞான யோகங்களை அடிப்படையாக கொண்டுள்ளது. எட்டு அங்கங்களை உடையதாய் **அஷ்டாங்க யோகம்** (ஏழு அங்கங்களும் எட்டாவதான அங்கியும் சேர்த்து) என்ற பெயர் பெற்றது.

எட்டு அங்கங்கள் - **யமம், நியமம், ஆஸநம், ப்ராணாயாமம், ப்ரத்யாஹாரம், தாரணம், த்யாநம், ஸமாதி** என்பன.

வேதங்கள் ப்ரம்மத்தை அடைவதற்கு பல வித்யைகளை சொல்லுகிறது உபநிஷத் 32 வித்யை சொல்லுகிறது. **ஸத், தஹர, சாண்டில்ய, புருஷ, ப்ராண**



prapatti dot com

**வைஸ்வாநர, ப்ரஜாபதி, பாலாகி, பர்யங்க வித்யை** என்று பல. இந்த வித்யையில் ஒன்றை பின்பற்றி பலன் கிட்டும் வரை உபாஸிக்க வேண்டும்.

ஜீவன்கள் மனம் மயங்கி இதை பற்றினாலும் மோக்ஷம் அவர்களுக்கு உண்டா? இல்லையா? என நிச்சயம் இல்லாமல், அப்படி மோக்ஷம் இருந்தாலும் எப்பொழுது என்று அறியாமலும் எத்தனை பிறவிகள் வருந்தி, பாடுபட்டு, கழிக்க வேண்டும் என தெரியாமலும் போகும்.

**கர்ம யோகமும், ஞான யோகமும் நேராக மோக்ஷம் தராது. அவை பக்தி யோகத்திற்கு அழைத்து செல்லும். பக்தி, ப்ரபத்தி இந்த இரண்டும் மட்டும்தான் மோக்ஷத்திற்கான வழிகள்**

**சதுர்வித$_4$ா: பஜந்தே மாம் ஜநா: ஸுக்ருதிநோர்ஜுன ।**
**ஆர்த்த: ஜிஜ்ஞாஸு: அர்த$_2$ார்த்தீ$_2$ ஜ்ஞாநீ ச ப்$_4$ரதர்ஷப$_4$ ।।**
**பகவத் கீதை 7-1**

பகவத் கீதையில் புண்யம் செய்தவர்கள் நாலு வகை. அதை உபாஸிக்கிறவர்களும் நாலு வகை என்றான் கிருஷ்ணன்.

1. **அர்த்தர்கள்** - இழந்த செல்வத்தை திரும்பிப் பெற
2. **அர்த்தார்த்தீ** - புதிய ஐஸ்வர்யம் பெற விரும்புவர்கள்
3. **ஜிஜ்ஞாஸுக்கள்** ப்ரகிருதி ஸம்பந்தம் இல்லாமல் ஜீவாத்ம ஸ்வரூபத்தை அனுபவிக்க ஆசைப்படுவர்கள்
4. **ஜ்ஞாநீ** - எம்பெருமானையே அனுபவிக்க ஆசைப்படுவர்கள்

பக்தி யோகம் என்பதும் நாலு வகை பலன்களில் எதை விரும்பிகிறார்களோ அதற்கு ஸாதனமாகிறது தொலைந்த ஐஸ்வர்யம், நூதனமான ஐஸ்வர்யம், ஆத்ம ஸ்வரூபத்தின் அநுபவம், பகவத் அநுபவம் (பகவத் ப்ராப்தி)

**தாவத் ஆர்த்தி: ததா வாஞ்சா தாவந்மோஹ: ததா**
**அஸுகம் யாவந் ந யாதி ஸரணம் த்வாம் அஸேஷ அக விநாஸநம்**
**பராஶர மஹரிஷி, விஷ்ணு புராணம்**

விஷ்ணு புராணத்தில் எம்பெருமானே நீர் எல்லா பாபங்களையும் போக்க வல்லவர். உம்மை ஶரணாக அடையாதவர்கள் அடையும் வருத்தம் நாலு வகை என்றார், பராஶர ரிஷி.

1. இருந்த செல்வம் தொலைந்த வருத்தம்
2. புதிய செல்வம் கிடைக்கவில்லையே என்று வருத்தம்
3. தன் ஆத்ம ஸ்வரூபத்தை அனுபவிக்க முடியாத வருத்தம்
4. மோக்ஷம் அடைய விரும்புவனுக்கு அது கிடைக்கப் பெறாத வருத்தம்

## 11-13 ப்ரபத்தி யோகம்

பகவானை ஒரு பலனுக்காக எந்த காலத்தில் பலன் ஸித்திக வேண்டும் என்று ஶரணாகதி பண்ணினால் போதும் அந்த காலத்திலேயே, அப்பலனைத் தடுக்கும் பாபங்களை போக்கி பலனைத் தர வல்லது ப்ரபத்தி. அது வரைக்கும்தான் துன்பம், அஜ்ஞானம் எல்லாம்.

அதனால் ப்ரபத்தி யோகம் **கால தாமதமின்றி (without any delay)** கொடுக்கக் கூடியது. பக்தி யோகம் அப்படி இல்லை

> **ஸத்கர்ம நிரதாஶ்ஶூத்₃த₃ா: ஸாங்க்₂ய யோக ₃வித₃ஸ் ததா ।**
> **நார்ஹந்தி ஶரணஸ் த₃ஸ்ய கலாம் கோடிதமீம் அபி ।।**
> லக்ஷ்மீ தந்த்ரம் 17-62

**(ஸத்கர்ம நிரதா:)** நல்ல கர்மங்களில் நிஷ்டையானவர்களும்
**(ஶூத்₃த₃ா:)** அதன் பலனாய் மனசுத்தி அடைந்தவர்களும்
**(ததா ஸாங்க்₂ய யோக ₃வித₃)** அப்படியே பக்தி, ஞான பக்தி யோகிகளும்
**(ஶரணஸ் த₃ஸ்ய)** ப்ரபத்தி நிஷ்டை உடையவனுடைய (பெருமையில்)
**(கோடிதமீம் கலாம் அபி நார்ஹந்தி)** கோடியில் ஒரு பங்கு பெற மாட்டார்கள்

லக்ஷ்மி தந்த்ரத்தில் மோக்ஷம் தவிர மற்ற எதிலும் ஆசையில்லாது பரிசுத்தராய் கர்ம, ஜ்ஞான, பக்தி யோகம் செய்பவர்கள் இந்த ஶரணாகதி

செய்தவனுடைய பெருமையில் கோடியில் ஒரு பங்கையும் பெற மாட்டார்கள், என்றது.

தேசிகனும் இந்த கருத்தையே,

**நாத$_2$ த்வதீ$_3$ய சரணௌ ஶரணம் க$_3$தாநாம்**
**நைவா யுதாயுத கலாஶப்ய அபரை ரவாப்யா ||**

ஸ்வாமி தேசிகன் ஶரணாகதி தீபிகை 29

(நாத$_2$) ஸ்வாமி,
(த்வதீ$_3$ய சரணௌ) உம்முடைய இரண்டு திருவடிகளையும்,
(ஶரணம் க$_3$தாநாம்) அடைக்கலமாக அடைந்தவர்களுடைய (பெருமையில்),
(அயுத அயுத கலா அபி:) கோடியில் ஒரு பங்குகூட
(அபரை: ந ஏவ அவாப்யா) மற்ற ஒருவராலும் அடையவே முடியாது" என்றார்.

ஸ்வாமி தேசிகன் பாதுகா ஸஹஸ்ரத்தில்

**அநந்யஶரண: ஸீத$_3$ந் அநந்த க்லேஶ ஸாக$_3$ரே**
**ஶரணம் சரணத்ராணம் ரங்க$_3$நாத$_2$ஸ்ய ஸம்ஶ்ரயே**

ஸ்வாமி தேசிகன் பாதுகா ஸஹஸ்ரம் 30-5 / 915

"நான் வேறு கதி இல்லாதவன் முடிவில்லாத துக்கக் கடலில் அமிழ்ந்து வருந்துகிறேன் அதனால் ரங்கநாதபாதுகையை ஶரணமாக அடைகிறேன்," என்றார்.

## 11-14 நம்மாழ்வார் காட்டும் ப்ரபத்திக்கு அதிகாரி

**நோற்ற நோன்பிலேன் நுண்ணறிவு இலேன் ***
**ஆகிலும் இனி உன்னை விட்டு ஒன்றும்**
**ஆற்றகிற்கு இன்றிலேன் அரவிணைணை எம்மானே**

நம்மாழ்வார், திருவாய்மொழி 5-7-1

prapatti.com

“ஆதிஸேஷனில் பள்ளி கொண்ட எம்பெருமானே! நான் கர்ம யோகம் செய்தவன் இல்லை. ஞான யோகமும் செய்தவனில்லை. ஆக, இந்த இரண்டாலும் உண்டாகும் பக்தியோகமும் செய்தவன் இல்லை.”

“இந்த மூன்று உபாயங்களை செய்யாவிட்டாலும், உன்னை ஒரு க்ஷணமும் பிரிந்து இருக்க சம்மதிக்க மாட்டேன். உன் பிரிவை, உனக்கு செய்யும் கைங்கர்யத்தை இழக்க என்னால் முடியாது,” என்றார்.

நோன்பு என சொல்லாது நோற்ற நோன்பு என்பதால் பலனை வேண்டி செய்த கர்ம யோக நிஷ்டையை சொல்லும். அறிவு என்று சொல்லாது நுண் அறிவு என்பாதால் ஆத்ம ஞானத்தை அறிந்து அதற்கு மேலான ஈச்வர ஞானத்தை வேண்டி செய்யும் ஞான யோகம் என்பதை காட்டும்.

பகவானே எனக்கு தகுதி எதுவும் கிடையாது. நான் இரு கர்மாவை - உபாயம் என்று அனுஷ்டிக்க - அது நிறைவு பெற, அதுவரை எனக்கு எந்த தகுதியும் கிடையாது. ஸ்வஸ்வரூப ஞானம் வந்த பிறகே பரஸ்வரூப ஞானம் கிட்டும். தான் யார் என்று அறிந்தால்தான், பகவான் யார் என்று புரியும். அப்போதுதான் எம்பெருமானின் ஸாக்ஷத்கரம் கிட்டும். பக்தியும் நிலைக்கும்.

நான் பக்தி என்று இங்கே சொல்ல வேண்டியதே இல்லை. கர்ம, ஞான யோகங்கள் இல்லை என்றால் பக்திக்கு ப்ரஸக்தியே இல்லை. (Karma, njaana uyogas are the principal. Bhkathi yoga is the interest).

எனக்கு பக்தி இருக்கிறது. அது அவனது இன்னருள். எம்பெருமானை அநுபவிப்பதே, அவன் மேல் காதல், ஆற்றாமை எல்லாம். ஆனால் அது வெறும் பக்தி. அது ஸாத்ய பக்தி. பலனாக ஆநந்திப்பது. அதை உபாயமாகக் கொண்டு மோக்ஷத்தை அடைய முடியும் என்ற ஸாதன பக்தியோ என்று பிரமிக்க வேண்டாம் என்றார்.

உண்மையில் ஆழ்வார் ப்ரபன்னர். பக்தி அவருக்கு உபேயம். உபாயமில்லை.

- பல விதமான அனுஷ்டான உதாரணங்களை முன்னோர் காட்டுவது - ஜனகர் - கர்ம யோகம், ஞான பக்தி கலந்தது

prapatti.com

ஜடபரதர் - ஞான யோகம், கர்ம பக்தி கலந்தது
ப்ரஹ்லாதன் எ பக்தி யோகம், கர்ம ஞானம் கலந்தது.

## 11-15 ஆளவந்தார் காட்டும் ப்ரபத்திக்கு அதிகாரி

**ந தர்மநிஷ்டே₂ாஸ்மி ந சாத்மவேதீ₃**
**ந பக்திமாம் ஸ்த்வத் சரணாரவிந்தே₃ ।**
**அகிஞ்சநோநந்யகதிஶ் ஶரண்ய!**
**த்வத் பாத₃மூலம் ஶரணம் ப்ரபத்₃யே ।।**
ஸ்வாமி ஆளவந்தார், ஸ்தோத்ர ரத்னம் 22

ஸ்வாமி ஆளவந்தார், ஸ்தோத்ர ரத்னத்தில் ப்ரபத்தி செய்ய தனக்கு உள்ள அதிகாரத்தை காண்பிக்கிறார்.

"எம்பெருமானே, நான்
(தர்மநிஷ்ட₂: ந அஸ்மி) கர்ம யோகத்தை செய்தவன் இல்லை.
(ஆத்மவேதீ₃ ச ந அஸ்மி ) ஆத்ம ஞானமும் உடையவன் இல்லை.
(த்வத் சரணாரவிந்தே₃ ) உம்முடைய திருவடித் தாமரைகளில்
(பக்திமாந் ந அஸ்மி) பக்தி உடையவனும் இல்லை.
(அகிஞ்சந: அநந்யகதி: ) கைம்முதலோ, வேறு புகலோ அற்றவன்.
(த்வத் பாத₃மூலம்) உம் திருவடித்தாமரைகளை,
(யே) இப்படி கதியற்ற நான் செய்வது
(ஶரணம் ப்ரபத்₃ ) உபாயமாக பற்றுகை ஒன்றே," என்றார்.

எனக்கு தர்ம சிந்தனை கிடையாது. அதற்காக என்னை நாஸ்திகன் என்று நினைக்க வேண்டாம். அதாவது உன் திருவடிகளை வேண்டி செய்யும் தர்ம நிஷ்டை கிடையாது. கர்ம யோகமே சரி இல்லை என்றால் ஞான யோகத்திற்கு எங்கே போவேன் நான்? போகட்டும், ஏதாவது ஒரு ஜன்மத்திலே பண்ணிய புண்யத்தாலே "பஹூநாம் ஜந்மநாமந்தே" என்கிறபடி அந்த ஸுக்ருதம் உண்டா என்றால் அதுவும் இல்லை.

இந்த ஆத்மாவிறகு ஆத்மாவாய் உள்ள உன்னிடம் என்றும் (நிரதிஶய) போக்யமாய் விளங்கும் திருவடிகளிடம் அறுபடாத (அநவரதம்) பக்தி உடையவனும் இல்லை. பக்தி யோகத்திற்கு அங்கங்களான கா்ம, ஞான யோகங்களே என்னிடம் இல்லாது போக, இது எப்படி ஸாத்யமாகும்?

## 11-16 ஸ்வாமி தேசிகன் காட்டும் ப்ரபத்திக்கு அதிகாரி

**வேண்டும் பெரும்பயன் * வீடு என்று அறிந்து விதி வகையால் *
நீண்டும் குறுகியும் நிற்கும் * நிலைகளுக்கு ஏற்கும் அன்பர் /
மூண்டு ஒன்றின் மூல வினை மாற்றுதலின் * முகுந்தன் அடி
பூண்டு அன்றி * மற்றோர் புகல் ஒன்று இலை என நின்றனரே.**
ஸ்வாமி தேசிகன் அதிகார ஸங்கிரஹம் 15

**(வேண்டும் பெரும்பயன் வீடு என்று அறிந்து)** தாங்கள் விரும்பி அடையும் உயர்ந்த பேறு, மோக்ஷம் என தெளிந்து **(விதி வகையால் நீண்டும் குறுகியும் நிற்கும்)** கா்மவினையால் பல காலங்கள் செய்யும்படியும், ஒரே க்ஷணத்தில் செய்யும்படி இருக்கும் **(நிலைகளுக்கு ஏற்கும் அன்பா்)** பக்தி, ப்ரபத்தி என்ற உபாயங்களில் பாகவதா்கள் பற்றுகிறாா்கள்.

இருந்தாலும், அந்த இரண்டிலும் **(ஒன்றில் மூண்டு)** ஒரு உபாயத்தில் முயற்சித்து **(மூல வினை மாற்றுதலின்)** பிறவிக்கு காரணமான அநாதியான கா்மா ஒழிக்க வேண்டுமானால் **(முகுந்தன் அடி பூண்டன்றி)** எம்பெருமானுடைய திருவடிகளைப் பற்றி ப்ரபத்தி செய்வதைத் தவிர **(மற்றோர் புகல் ஒன்று இலை என நின்றனரே)** வேறு அடைக்கலம் ஒன்றும் இல்லை என்று நின்றாா்கள்.

என்று பாகவதா்கள் அவரவா் புண்யத்தின் பலனாய் பக்தி, ப்ரபத்தி இவற்றை ஏற்றுக் கொள்கின்றனா். இதில் ப்ரபத்தி என்பது எதையும் வேண்டாது தானே ஸாதிக்கும் தன்மை உடையது. பக்தி யோகி மோக்ஷத்திற்காக ப்ரபத்தியை

பின்பற்றவில்லை. இருந்தாலும், உபாயத்திற்கு இதுவரை தடையாக இருந்த கர்மாவை ஒழிக்கும் அம்சத்திற்காக ப்ரபத்தியை செய்தே தீர வேண்டும்.

## 11-17 கூரத்தாழ்வான் காட்டும் ப்ரபத்திக்கு அதிகாரி

**கற்பார் ராமபிரானை அல்லால் * மற்றும் கற்பரோ *
புற்பா முதலாப் * புல் எறும்பு ஆதி ஒன்று இன்றியே *
நற்பால் அயோத்தியில் வாழும் * சராசரம் முற்றவும் *
நற்பாலுக்கு உய்த்தனன் * நான்முகனார் பெற்ற நாட்டுளே.**
நம்மாழ்வார், திருவாய்மொழி 7-5-1

திருவாய்மொழியில் நம்மாழ்வார் ராமபிரானை நன்கு கற்றவர்கள், அவனே சரண் என்று அடைந்தவர்கள் நல்ல கதியை அடைந்தனர் என்றார்.

**த்வாம் ஆமநந்தி கவய: கருணா ம்ருதாப்$_3$தே$_4$!
ஜ்ஞாந க்ரியா ப$_4$ஜந லப்$_4$யம் அலப்$_4$யம் அந்யை: ।
ஏதேஷு கேந? வரத$_3$! உத்தர கோஸல ஸ்த$_2$ா:
பூர்வம் ஸதூா$_3$ர்வம் அப$_4$ஜந்த ஹி ஜந்தவஸ் த்வாம் ।।**
கூரத்தாழ்வான் வரதராஜ ஸ்தவம் 69

கூரத்தாழ்வான் வரதராஜஸ்த்வத்தில் சொல்கிறார்.

“(கருணா ம்ருதாப்$_3$தே$_4$ வரத$_3$) கருணை என்னும் கடலான பகவானே, (த்வாம் கவய ஆமநந்தி) உம்மை நன்கு அறிந்தவர்கள் நன்றாக விளக்கினார்கள், எதை என்றால், நீ (ஜ்ஞாந க்ரியா ப$_4$ஜந லப்$_4$யம்) ஜ்ஞாந, கர்ம, பக்தி யோகத்தால் அடையப்படுபவன், (அந்யை: அலப்$_4$யம்) மற்ற உபாயங்களால் அடையமுடியாதவன் என்று.

அது சரி, (பூர்வம் உத்தர கோஸல ஸ்த$_2$ா:) முன்பு வடக்கு அயோத்தியில், (ஸதூா$_3$ர்வம் ஜந்தவ) புல் உள்பட ஜந்துக்கள் எல்லாம். (த்வாம் அப$_4$ஜந்த ஹி) உம்மை அடைந்தார்களே (ஜந்தவ: அப$_4$ஜந்த) அந்த ஜந்துக்கள் எல்லாம், (ஏதேஷு கேந? த்வாம்) கீழே சொன்ன எந்த வழியில் உம்மை அடைந்தனர்? இதற்கு ப்பதி ல்சொல் பார்க்கலாம்,” என்றார்.

ல், எறும்பு போன்றவை எந்த பக்தி யோகம் செய்தது? என வினவினார். ஸ்வாமி தேசிகன் அபயப்ரதாந ஸாரத்தில் இந்த திருவாய்மொழியும், கூரத்தாழ்வார் ஸ்லோகத்தையும் எடுக்கிறார்.

## 11-18 பிள்ளைலோகாசாரியார் காட்டும் ப்ரபத்திக்கு அதிகாரி

**முமுக்ஷுவாய், மோக்ஷார்த்தமாக ஸர்வேஶ்வரனைப் பற்றியிருக்கும் அவனுக்கு அநந்யகதித்வமும் ஆகிஞ்சன்யமும் வேணும்.**

**அநந்யகதித்வமாவது** "களைவாய் துன்பம் களையாது ஒழிவாய் களைகண் மற்றிலேன்" **என்கிறபடியே ஸர்வேஶ்வரனை ஒழிய வேறொரு ரக்ஷகர் இல்லை என்றிருக்கை.**

**ஆகிஞ்சன்யமாவது கர்ம ஞான பக்திகளிலும் அவற்றுக்கு ஹேதுவான ஆத்ம குணங்களிலும் அந்வயமின்றிக்கே, அவற்றுக்கு விபரீதங்களானவற்றாலே தான் பரிபூர்ணனாயிருக்கிற இருப்பையும் அநுசந்தித்து நம் கார்யத்திற்கு நாம் கடவோம் அல்லோம் என்றிருக்கை.**

**இவை இரண்டையும் உடையவனாய் ஈஶ்வரனையே உபாயமாகப் பற்றுகையாலே நிர்பரனாயிருக்கும் அவனுக்கு ஶரீராவஸநா காலத்திலே ப்ராப்தியணித்தானவாறே "நயாமி" என்று அருளிச் செய்தபடியே ஈஶ்வரன் தானே சரக்காளாய் வந்து, அர்ச்சிராதி மார்க்கத்தாலே பரமபதத்து ஏறக் கொண்டுபோய், நித்ய முக்தரோடே ஒரு கோவையாக்கி, நித்ய கைங்கர்யத்தை கொடுத்து அருளும்**

பிள்ளைலோகாசாரியார், ப்ரபந்ந பரித்த்ராணம்

சுருக்கமாக் சொன்னால், **ஆகிஞ்சன்யம் என்பது கைையிலாகாத தன்மை. அநந்யகதிவம் என்பது எம்பெருமானே கதி என்று கிடக்கை.** இப்படி இருக்கும் பாகவதனுக்கு உயிர் பிரியும் காலம் வரும்போது, எம்பெருமான் தானே நேரில் வந்து அர்ச்சிராதி மர்க்கம் வழியாய் மோக்ஷத்திற்கு அழைத்து செல்கிறான்.

prapatti.com

## 11-19 இயலாத நிலையுள் மனம் ததும்ப

இந்த வரியில் அநந்யகதித்வம் சொல்லப்பட்டது. வேறு ஒரு வழியும் இல்லாமல் கூண்டில் அடைந்த பறவையைப்போல இந்த ஸம்ஸார கடலில் மூழ்கி தவிக்கும் சேதனர்கள் மனம் தவிக்க

**குலந்தான் எத்தனையும் * பிறந்தே இறந்து எய்த்து ஒழிந்தேன் ***
**நலந்தான் ஒன்றுமிலேன் * நல்லதோர் அறம் செய்துமிலேன் ***
**நிலம்தோய் நீள்முகில்சேர் * நெறியார் திருவேங்கடவா ***
**அலந்தேன் வந்தடைந்தேன் * அடியேனை ஆட்கொண்டருளே.**
**திருமங்கையாழ்வார், பெரிய திருமொழி 1-9-4**

திருமங்கையாழ்வார், பெரிய திருமொழியில். தான் செய்த பாபங்களையும் அதனால் எத்தனை விதமான பிறவிகளும் பிறந்து மடிந்து போனேன். ஏதாவது ஒரு பிறவியிலாவது நல்லது என்று ஒன்று கூடச் செய்தவனில்லை. "திருவேங்கடமுடையானே! நீயே கதி என்று வந்து உன் திருவடிகளை அடைந்தேன். என்னை அடைக்கலமாய் கொண்டு அருள வேண்டும்," என்றார்.

**தெரியேன் பாலகனாய்ப் * பல தீமைகள் செய்துமிட்டேன் ***
**பெரியேன் ஆயினபின் * பிறர்க்கே உழைத்து ஏழையானேன் ***
**கரிசேர் பூம்பொழில்சூழ் * கனமாமலை வேங்கடவா! ***
**அரியே! வந்தடைந்தேன் * அடியேனை ஆட்கொண்டருளே**
**திருமங்கையாழ்வார், பெரிய திருமொழி 1-9-7**

திருமங்கையாழ்வார், பெரிய திருமொழியில் மறுபடியும் கூறுகிறார். அறியாத குழந்தை போல் பல குற்றங்கள் செய்து விட்டேன். பிறர் என்று சொல்லும்படியான ஆத்மாவை வேறுபடுத்தி சொல்லும் சரீர ஸம்பந்தம் ஆனவைகளுக்கே வேலை செய்து (அதாவது தன் கண், மூக்கு வாய், குழந்தைகள், மனைவி இவர்களுக்கு) பாபங்களையே வளர்த்தேன். இன்று அறிந்தேன். மனம் மாறினேன். என்னைக் காத்தருள்வாய் என்றார்.

இங்கே இயலாத நிலையுள் மனம் ததும்ப என்பதை ஸ்வாமி தேசிகன் ஸாதித்த முறைப்படி

**அந்தணர் அந்தியர் * எல்லையில் நின்ற அனைத்து உலகும் *
நொந்தவரே முதலாக * நுடங்கி அநந்நியராய் *
வந்து அடையும் வகை * வன் தகவு ஏந்தி வருந்திய *
நம் அந்தமிலா ஆதியை * அன்பர் அறிந்து அறிவித்தனரே**
**ஸ்வாமி தேசிகன், அதிகார சங்கிரகம் 17**

"ப்ராம்மணன் முதல் சண்டாளன் வரை, இந்த எல்லையில் அடங்கிய அனைத்து உலகிலும் பிறவிக்கடலில் மூழ்கி தவிக்கும் ஜீவன்களே முதல் அதிகாரிகளாய், வேறு உபாயத்தை அனுஷ்டிக்க முடியாது மனம் உடைந்து, துவண்டு போய், வேறு பலனையோ, ரக்ஷகனையோ கொள்ளாது வந்து ශரணம் அடைபவர்கள்," என்றார்.

## 11-20 அநிஷ்ட நிவ்ருத்தி, இஷ்ட ப்ராப்தி

**அநந்ய ஸாத்₄யே ஸ்வாபீ₄ஷ்டே மஹாவிஶ்வாஸ பூர்வகம் |
ததே₃க கோபாயதா யாச்ஞா ப்ரபத்தி ஶரணாக₃தி: ||**
**பரத முநி, விஷ்வக்ஸேந ஸம்ஹிதை**

தனக்கு இஷ்டமானது வேறு எதாலும் கிடைக்காத போது, உறுதியான மனத்துடன், எம்பெருமானே நீ ஒருவனே உபாயமாய் இருக்க வேண்டும் என்று யாசித்து வேண்டுவது ப்ரபத்தி. அதுவே ශரணாகதி ஆகும் என்றார்.

**என் நான் செய்கேன் யாரே களைகண்?*
என்னை என் என் செய்கின்றாய் *
உன்னால் அல்லால் யாவராலும் *
ஒன்றும் குறை வேண்டேன் ***
**நம்மாழ்வார், திருவாய்மொழி 5-8-3**

**திருமாலை அல்லது தெய்வம் என்று ஏத்தேன்**
பொய்கையாழ்வார், முதல் திருவந்தாதி 64

**திருநாரணன் தாள் காலம் பெறச் சிந்தித்து உய்ம்மினோ**
நம்மாழ்வார், திருவாய்மொழி 4-1-1

**கோலத் திருமாமகளோடு உன்னை**
நம்மாழ்வார், திருவாய்மொழி 6-9-3

என்று எல்லாம் ஆழ்வார்கள் அந்த ஸ்ரீய:பதியையே வேண்டினர். “பகவானே நீ ஒருவனே என் குறைகளை தீர்க்கும் ஸாமர்த்யம் உடையவன். அதனால், உன்னைத்தவிர வேறு ஒருவரையும் நான் அண்ட மாட்டேன்” என்று அநிஷ்ட நிவ்ருத்தி பிராத்தனை செய்தார்.

**நின்னாலன்றி மன்னார் இன்பம்**
**நின் பொருட்டு நீ என் பொருட்டிலை**
ஸ்வாமி தேசிகன், மும்மணிக்கோவவை 10

உன்னால் அன்றி வேறு யாராலும் சுகம் பெற மாட்டார்கள் என்று அநந்தமான ஆனந்த மோக்ஷ ஸாம்ராஜ்யத்தை அளிப்பவன் அவன் ஒருவனே என்று இஷ்ட ப்ராப்தியை காண்பித்தார்.

## 11-21 முத்திக்கு வழி

மோஷத்திற்கு உபாயம் கர்ம, ஞான, பக்தி யோகங்கள் இருந்தாலும், அவற்றை ஸாதிக்க கேவலம், சாதாரண சேதனனால் ஆவதில்லை.

**அநந்தபாரம் ப$_3$ ஹுவேதி$_3$தவ்யம்**
**அல்பஶ்ச காலோ ப$_3$ ஹவஶ்ச விக்$_4$நா: ।**
**யத்ஸாரபூ$_4$ தம் தது$_3$பாத$_3$தீ$_3$த**
**ஹம்ஸோ யத$_2$ா க்ஷீரமி வாம்பு$_3$மிஶ்ரம் ।।**
உத்தர கீதா 3-10

**(அநந்தபாரம் ப$_3$ ஹு வேதி$_3$தவ்யம்)** நிச்சயம் செய்ய முடியாத, முடிவில்லாத நிறைய சாஸ்திரங்கள் அறிய வேண்டி உள்ளன. **(கால: ச அல்ப: விக்$_4$நா: ச ப$_3$ ஹுவ)** காலமும் மிகக் குறுகியது. தடைகளோ மிக அதிகம். **(யத் ஸாரபூ$_4$ தம்)** எந்த ஸாரமாகிய அர்த்தம் **(அம்பு$_3$மிச்ரம் க்ஷீரமிவ)** நீர் கலந்த பாலைப்போல் உள்ளதோ **(தத்$_3$ ஹம்ஸோ யத$_2$ா)** அதை அன்னப் பறவை (போன்ற மனிதர்கள்) **(உபாத$_3$தீ$_3$த)** உறிஞ்ச, க்ரஹிக்க வேண்டும்.

இது பிரபலமான ஸ்லோகம். கற்க வேண்டிய சாஸ்திரங்களோ கணக்கில்லாதவை. அதற்கு கிடைக்கும் காலமோ, மிக மிகக் குறைவு. நடுவில் அதற்கு வரும் தடைகளோ பல. அதனால், எப்படி நீரும் பாலும் கலந்த திரவத்தில், பால் மட்டுமே உறிஞ்சும் அன்னம் போலே ஸாரத்தை மட்டும் கிரஹிக்க வேணும்.

இந்த கருத்தையே மஹாபாரதமும், “வண்டு எப்படி பூக்களில் உள்ள தேனை மட்டும் பருகுமோ, அதைப் போல புத்திமான்கள் விரிந்த சாஸ்திரங்களில் ஸாரத்தையே எடுத்துக் கொள்ள வேண்டும்,” என்றது.

**வேதத்திரளின் விதி உணர்ந்தோர்கள் * விரித்துரைத்த *
காதல் கதியையும் * ஞானத்தையும் கருமங்களையும் *
சாதிக்கவல்ல சரணாகதி * தனி நின்ற நிலை *
ஓதத் தொடங்கும் எழுத்தின் திறத்தில் * உணர்மின்களே.**
**ஸ்வாமி தேசிகன் அமிருதஸ்வாதினி 18**

ஸ்வாமி தேசிகன் அமிருதஸ்வாதினியில் ஸாதிக்கிறார்.
**(வேதத்திரளின்)** வேதங்கள் பல உள்ளன. **(விதி உணர்ந்தோர்கள் விரித்து உரைத்த)** அதில் விதிக்கப்படவைகளை அறிந்தவர்கள் நன்கு உபதேசித்தார்கள். அவர்கள் எதை உபதேசித்தார்கள் என்றால், **(காதல் கதியையும் ஞானத்தையும் கருமங்களையும்)** பக்தி யோகத்தையும் ஞான யோகத்தையும், கர்ம யோகத்தையும் **(சாதிக்கவல்ல சரணாகதி தனி நின்ற நிலை)** அவற்றினால் உண்டாகும் பலனை எல்லாம் தான் ஒன்றே கொடுக்க வல்ல ப்ரபத்தி என்னும் உபாயம் ஒப்பற்றது என்னும் கருத்தை. இதை வேதம் ஆரம்பிக்கும் ப்ரணவத்திலிருந்தே அறியலாம் என்றார்.

## 11-22 முத்திக்கு வழி சரண்

வேறு எத்தனை உபாயங்கள் இருந்தாலும், மோஷத்தை அடைவதற்கான, பொறுமையோ, ஞானமோ, குடிப்பிறப்போ, ஶக்தியோ (TICE - Time, Intelligence, Caste, Energy) இல்லாவிடில், ஶரணாகதி ஒன்று மட்டுமே உபாயம் ஆகிறது.

**அர்த$_2$ாந்த ரேஷு விமுக$_2$ாந் அதி$_4$கார ஹாநே:**
**ஶ்ரத்$_3$த$_4$ா த$_4$நாந் த்வத$_3$ நுபூ$_4$தி விளம்ப$_3$ பீ$_4$தாந் ।**
**தீ$_3$ப ப்ரகாஶ லப$_4$ஸே ஸூசிராத் க்ருதீவ**
**நயஸ்தாத் மநஸ் தவ பதே$_3$ நிப்$_4$ருதாந் ப்ரபந்நாந் ।।**
**ஸ்வாமி தேசிகன், ஶரணாகதி தீபிகை 28**

ஹே தீபப்ரகாஶ! **(அர்த$_2$ாந்தரேஷு அதி$_4$காரஹாநே: விமுக$_2$ாந்)** வேறு உபாயங்களில் தகுதி அற்றதால் அவற்றை கண்டு எடுத்தும் பாராது **(ஶ்ரத்$_3$த$_4$ா த$_4$நாந்)** மன உறுதி ஒன்றையே பெரும் செல்வமாகக் கொண்டு **(த்வத்$_3$ அநுபூ$_4$தி விளம்ப$_3$ பீ$_4$தாந்)** உன்னை அனுபவிப்பதில் ஏற்படும் தாமதத்திற்கு பயப்படுகிறார்கள் அடியவர்கள் (scared of the delay).

**(ப்ரபந்நாந்)** அந்த அடியவர்கள் என்ன செய்கிறார்கள்? என்றால், **(தவ பதே$_3$ ந்யஸ்த ஆத்மந நிப்$_4$ருதாந்)** உம் திருவடிகளில் தம் ஆத்மாவை ஸமர்பித்து அமைதி அடைந்தார்கள்.

நீ என்ன செய்கிறாய்? என்றால் அந்த ப்ரபந்நர்களை **(ஸூசிராத் க்ருதீ இவ லப$_4$ஸே)** காலம் கடந்து அதிர்ஷ்டம் செய்தவனைப்போல் பெற்றுக் கொள்கிறாய்," என்றார்.

இதில் முக்யமாய், வேறு உபாயங்களில் தகுதி இல்லாதலால் - ஞானம், ஶக்தி, ஜாதி முறை, தவிர உனக்கு நித்ய கைங்கர்யம் செய்ய வேண்டும் என்ற துடிப்பினாலே பொறுமை இல்லதவர்களாய், பரந்யாஸம் செய்தனர் என்றார்.



prapatti.com

**நின்ற நிலைக்கு உற நிற்கும் கருமமும் * நேர்மதியால்**
**நன்று என நாடிய ஞானமும் * நல்கும் உள் கண்ணுடையார் ***
**ஒன்றிய பத்தியும் * ஒன்றும் இலா விரைவார்க்கு அருளால் ***
**அன்று பயன் தரும் ஆறும் * அறிந்தவர் அந்தணரே**
**ஸ்வாமி தேசிகன், அதிகார ஸங்கரஹம் 16**

**(நின்ற நிலைக்கு உற நிற்கும் கருமமும்)** உபாயத்தில் நிலையாக நின்று முயற்சிக்கு தகுந்ததாய் கர்ம யோகத்தையும் **(நேர்மதியால் நன்று என நாடிய ஞானமும்)** கூர்மையான புத்தியால் ஆத்மாவிற்கு இனிமையானது என்று கொண்ட ஞான யோகமும் **(உள் கண்ணுடையார் நல்கும் ஒன்றிய பத்தியும்)** ஞானமாகிய அகக் கண்ணைப் பெற்றவர் பின்பற்றிய பக்தி யோகமும்

**(ஒன்றும் இலா)** இவை எதுவும் செய்யாது **(விரைவார்க்கு அன்று)** ஆசைப்படும் அன்றைக்கே **(அருளால் பயன் தரும் ஆறும்)** பகவத் க்ருபையால் பலனைத் தரும் ப்ரபத்தி ஆகிற உபாயமும் **(அறிந்தவர் அந்தணரே)** அறிந்தவர்கள் வேதாத்யனம் செய்த ப்ராம்மணர்களெ ஆவார்கள்.

"பக்தி யோகம் செய்ய மனதை ஒரு நிலைப்படுத்த வேண்டும். அதற்கு இன்றிமையாத ஸாதனம் கர்ம யோகம். அத்துடன் ஆத்ம ஸாக்ஷாத்காரமான ஞான யோகம் (தன் ஆத்மாவைப் பற்றிய அறிவு கொண்டு அதைக் கண்டவர்). இவை கொண்டு செய்வது பக்தி யோகம்."

"இவை எல்லாம் செய்ய சக்தி, ஞானம், ஜாதி வரைமுறை, பொறுமை இவற்றில் ஒன்றாவது இல்லாது அப்போதே மோக்ஷம் வேண்டும் என விரும்புவர்களுக்கு அந்த பலனைத் தரக் கூடிய உபாயம் ப்ரபத்தி என்று தெளிவாக அறிந்தவர்கள், வேதம் ஒதிய ப்ராம்மணர்கள் ஆவார்கள்," என்றார்.

## 11-23 சரண் என்பது என்ன?



prapatti.com

இந்த பரந்யாஸத்தை எப்படி செய்ய வேண்டும் என்பதை

> **அஹமஸ்ய அபராத$_4$நாம் ஆலயோஅகிஞ்சநோஶக$_3$தி: ।**
> **த்வம் ஏவ உபாய பூ$_4$தோ மே ப$_4$வேதி ப்ராத்த$_2$நா மதி: ॥**
> **ஶரணாக$_3$திரித்யுக்தா ஸா தே$_3$வேஸ்மிந் ப்ரயுஜ்யதாம் ।**
> **தஸ்யானுபந்தா: பாப்மாந: ஸர்வே நஶ்யந்தி தத்க்ஷணாத் ।**
> **அஹிர்புத்ந்ய ஸம்ஹிதை 36-38**

என்று அஹிர்புத்ந்ய ஸம்ஹிதை (பாஞ்சராத்ரம்), ஆகிஞ்சன்ய, அநந்யகதித்வத்தையும் விளக்குகிறது.

**(அஹம் அபராத$_4$நாம் ஆலய)** நான் குற்றங்களின் இருப்பிடம், **(அகிஞ்சந)** வேறு உபாயம் அறியாதவன், **(அக$_3$தி: அஸ்மி )** காத்துக் கொள்ள முடியாதவன் ஆகிறேன்.

**(த்வம் ஏவ மம உபாய பூ$_4$த: ப$_4$வ)** நீயே எனக்கு உபாயமாக ஆக வேண்டும், **(இதி ப்ராத்த$_2$நா மதி:)** என்று இப்படி ப்ராத்தனை செய்யும் புத்தியானது **(ஶரணாக$_3$தி இதி உக்தா)** ஶரணாகதி என்று அழைக்கப்படும்.

**(ஸ அஸ்மிந் தே$_3$வ ப்ரயுஜ்யதாம்)** அது இந்த தேவனிடம் ஆகட்டும். (தஸ்ய அநுபந்தா) இப்படி செய்தால் தடையான **(பாப்மாந: ஸர்வே தத்க்ஷணாத் நஶ்யந்தி)** பாபங்கள் எல்லாம், அந்த க்ஷணத்திலேயே நசித்து போகும்.

ஏன் என்றால்,

> **தை$_3$வீ ஹ்யேஷா கு$_3$ணமயீ மம மாயா து$_3$ரத்யயா**
> **மாமேவ யே ப்ரபத்$_3$யந்தே மாயாமேதாம் தரந்தி தே**
> **பகவத் கீதை 7-14**

என்று பகவத்கீதையில் பகவான் கிருஷ்ணன் "**மம மாயா து$_3$ரத்யயா**" என்றான். ஏன் என்றால், இந்த மாயை மூன்று குணங்களுடையது, தெய்வத் தன்மையுடையது கடப்பதற்கு அரியது. ஆனால் என்னையே எப்பொழுதும் ஶரணாக கொள்பவர்கள் இந்த மாயையைக் கடக்கிறார்கள், என்று ஶரணாகதி ஒன்துதான் நமக்கு உபாயம் என்று காட்டினான்.

## 11-24 சரண் ஒன்றே என

இந்த ப்ரபத்தி தவிர வேறு உபாயம் கிடையாது என்பதை லக்ஷ்மீ தந்திரம் காட்டுகிறது.

**இத₃ம் ஶரணம் அஜ்ஞாநாம் இத₃மேவ விஜாநதாம் |**
**இதம் திதீர்ஷதாம் பாரம் இதம் ஆநந்த்ய மிச்ச₂தாம் ||**
**லக்ஷ்மீதந்த்ரம் 17-100**

என்றது. **(இத₃ம் ஶரணம் அஜ்ஞாநாம்)** இந்த ப்ரபத்தியே அறிவற்றவருக்கு உபாயம். **(இத₃ம் ஏவ விஜாநதாம்)** இதுவே அறிவுடையவருக்கும் உபாயம். **(இதம் திதீர்ஷதாம் பாரம்)** இதுவே பிறவிக் கடலை கடக்க விரும்பும் கைவல்ய ஆர்த்திகளுக்கும் உபாயம். **(இதம் ஆநந்த்ய மிச்ச₂தாம்)** இதுவே அளவிட முடியாத ப்ரம்மானந்தத்தை அனுபவிக்க முடியாவிடில் உயிர் தரிக்காது என்பவருக்கும் உபாயம்.

**ஸர்வ த₄ர்மாந் பரித்யஜ்ய மாம் ஏகம் ஶரணம் வ்ரஜ: |**
**அஹம் த்வா ஸர்வ பாபேப்₄யோ மோக்ஷயிஷ்யாமி மா ஶுச: ||**
**பகவத் கீதை 18-66**

"மோஷத்திற்கு உபாயமான எல்லாவிதமான தர்மங்களையும், அதன் பலன்களையும் விட்டு, என்னை ஒருவனைனயே ஶரணாகதி என்று உபாயமாக பற்றுவாய். நான் உன்னை எல்லா பாபங்களிலிருந்தும் விடுவித்து மோக்ஷத்தை அளிக்கிறேன்," என்றான் கண்ணன்.

**இப்படி உபாயம் ஸித்தமாயிருக்க, அநாதிகாலம் பலியாது ஒழிந்தது இவனுடைய ப்ரபத்தி இல்லாமையிறே. அந்த ப்ரபத்தியைச் சொல்கிறது ப்ரபத்யே என்கையாலே.**
**பிள்ளைலோகாசாரியார், தனித்வய ரஹஸ்யம்**

prapatti dot com

என்று பிள்ளைலோகாசாரியாரும் எம்பெருமான் ஸித்தோபாயமாக நின்றாலும், மோக்ஷ ப்ராப்திக்கு, இவனுடைய ஸாத்யோபாயமன ப்ரபத்தி என்கிற சாக்கின் அவசியத்தை ஸாதித்தார். ப்ரபத்தி ஒன்றே மோக்ஷத்தை தேடித் தரக்கூடியது.

**திருமால் தனித்து தானே பரம்பொருளாய்**
**அவன் அருளால் நிறையும் அடியன்**
**பெருநிலை என செய்யும் பக்தி**
**மற்று இயலாதார் கொள்ளும் ப்ரபத்தி**
**உயர்ந்த குற்றேவலும் நெடும்பயனாய்**
**அதற்குத்தடை இருளாம் இவையைந்தும்**
**அறிவாய் பேதையின் போதைக்கு**
**மருந்தென * முன்னோர் மறையும் உறையும்**
**அடியேன், நெஞ்சில் அஞ்சு 11**

என்று அர்த்த பஞ்சக விளக்கமான பாசுரத்தில் சொன்னோம். பக்தி யோகம் செய்ய அருகதை அற்றவர்களுக்கு ப்ரபத்தி ஒன்றே ஸாத்யமானது.

## 11-25 “சரண் ஒன்றே என” - தேசிகனின் திருவுள்ளம்

**இப்படி அபராத அநுரூபமாகத் தண்டதரனாய்ப் போருகின்ற ஶரண்யனுடைய வசீகரணங்களில் ப்ரதாநம் ஸர்வ அகிஞ்சந அதிகாரமான ஆத்ம ரக்ஷா பர ஸமர்ப்பணம்.**
**ஸ்வாமி தேசிகன், ரஹஸ்ய ரத்நாவளி 7**

என்று ஸ்வாமி ப்ரபத்தி ஒன்றே உபாயம் என ஸாதித்தார்.

**(அபராத அநுரூபமாக)** அவரவர் செய்த வினைப் பயன்களுக்கு தகுந்தவாறு **(தண்டதரனாய்ப் போருகின்ற)** சேதனர்களுக்கு தண்டனை அளிக்கும் **(ஶரண்யனுடைய வசீகரணங்களில்)** அடைக்கலம் என்று அடையப்படும் அந்த பகவானின் கோவத்தை மாற்றி அவனை வசீகரிக்க ஸாத்யமான பக்தி, ப்ரபத்தி என்ற இரண்டு உபாயங்களிலும் (ப்ரதாநம்) முதன்மையானது.

(ஸர்வ அகிஞ்சந அதிகாரமான) எல்லோரும் பின்பற்றும்படி, சுலபமாய், ஒரு முறையே செய்ய வேண்டி, வேண்டும்போதே பலன் அளித்து, பலன் கொடுக்கத் தொடங்கிய பாவக்குவியல்களையும் ஒழிக்கும்படி, ஐந்து அங்கங்களைத் தவிர வேறு ஒன்றையும் கொள்ளாது உயர்ந்த உபாயம் ப்ரபத்தி. பக்தி யோகம் செய்பவர்கூட இதனை அங்கமாக கொள்ளலாம்.

இந்த ப்ரபத்தியின் உயிர் நிலை (ஆத்ம ரக்ஷா பர ஸமர்ப்பணம்). தன்னை காக்கும் பொறுப்பை எம்பெருமானிடம் ஸமர்பித்தலே. அப்படி செய்யும்போது தான், தனது என்கிற அகங்கார மமகாரங்கள் இன்றி, எல்லாம் பகவான் தன் விருப்பதிற்கே என் மூலமாய் நடத்திக் கொள்கிறான் என்ற நினைவுடன் செய்ய வேண்டும்.

## 11-26 சரண் ஒன்றே என - தேசிகனின் விளக்கம், மேலும்

ஸ்வாமி தேசிகன் ரஹஸ்ய ரத்நாவளி ஹ்ருதயத்தில் இந்த ப்ரபத்தியைப் பற்றி மேலும் விவரிக்கிறார்.

**வர்ண விசேஷாதி ரஹிதமாய்** (ஜாதி பற்றிய வரைமுறையின்றி), **அத்யந்தாகிஞ்சநருக்கும்** (கைம்முதல் சிறிதும் இல்லாதவருக்கும்) **அதிகரிக்கையாலும்** (செய்வதற்கு உகந்ததாகிலும்),

**உபாயந்தர பர்யந்த ஸகல ஸாதகமாகையாலும்** (பக்தி யோகத்தை முடித்தால் வரும் பலன்கள் வரை எல்லாவற்றிக்கும் ஸாதனமாய்), **ஆர்த்தியில் தாரதம்யத்திற்கு அநுகுணமான** (மோக்ஷம் பெற இருக்கும் துடிப்பில், ஏற்றத் தாழ்விற்கு தகுந்தவாறு) **ப்ராரப்த கர்மத்தையும் கழிக்க வற்றாகையாலும்** (பலன் கொடுக்க தொடங்கிய கர்மத்தையும் ஒழிக்கும்படியாய்),

**ஸௌகரம் ஆகையாலும்** (செய்வதற்கு சுலபமாய்) **துஷ்கர பரிகர நிரபேஷமாய்** (கடினமான அங்கங்களை எதிர்பாராது) **ஸக்ருத் கர்த்தவ்யம் ஆகையாலும்** (ஒரே முறை செய்ய வேண்டியதாய்),

ஸர்வருக்கும் ஸ்வாபிமத (எல்லோருக்கும் அவரவர் விருப்படி) அவிளம்பித பல ஸித்திக்கு (தாமதமின்றி பலனை அளிக்க) இதுவே ப்ரதாநம் (இதுவே முக்யம் என்று ) என்றபடி.

இதில் சொன்ன ப்ரபத்தி ரூபமான (இப்படி ப்ரபத்தி மூலமாய்) ஸ்வரக்ஷா பரஸமர்ப்பணமாவது (தன்னை ரக்ஷிக்கும் பொறுப்பை பகவானிடம் ஸமர்பித்தல் என்பது).

ஸ்வரக்ஷணார்த்த (தன்னைக் காக்க) ஸ்வப்ரவ்ருத்தி அபிமாந நிவ்ருத்தியோடும் (தானே சுதந்திரமாய் முயலுதல் என்ற கெட்ட காரியத்ததை விடுதலும்), பிராத்தனையோடும் கூடின (வேண்டுதலுடன் கூடிய),

ஶரண்யைக ஸாத்ய (எம்பெருமான் ஒருவனாலேயே முடியும் என்கிற) ஸ்வரக்ஷணத்வ (தன்னை காக்கும் பொறுப்பு) அத்யவஸாய விஶேஷம் (உறுதியான அறிவு மிகுந்து இருத்தல்).

ஸ்வாமி தேசிகன், ரஹஸ்ய ரத்நாவளி ஹ்ருதயம் 7

ஒன்றே புகல் என்று * உணர்ந்தவர் காட்டத் திருவருளால் *
அன்றே அடைக்கலம் கொண்ட * நம் அத்திகிரித் திருமால் *
இன்றே இசையின் இணையடி சேர்ப்பர் * இனிப் பிறவோம் *
நன்றே வருவது எல்லாம் * நமக்கு பரம் ஒன்று இலதே

ஸ்வாமி தேசிகன் அமிர்த ரஞ்சனி 18

(உணர்ந்தவர் ஒன்றே புகல் என்று காட்ட) ஆசாரியர்கள் அடையக்கூடிய உபாயம் ஸ்ரீமந் நாராயணனே என்று நமக்கு உபதேசிக்க (அன்றே திருவருளால் அடைக்கலம் கொண்ட நம் அத்திகிரித் திருமால்) ப்ரபத்தி செய்த க்ஷணமே பிராட்டியின் புருஷகாரத்தால் அதை ஏற்றுக் கொண்ட பேரருளான். (இன்றே இசையின் இணையடி சேர்ப்பர்) அவன், இன்றைக்கே மோக்ஷம் வேண்டும் என விரும்பினால் அதை தந்து தம் திருவடியில் சேர்த்துக் கொள்வார்.

prapatti.com

**(இனிப் பிறவோம் வருவது எல்லாம் நன்றே)** இனிமேல் நமக்கு ஸம்ஸாரம் கிடையாது. சாகிறவரை நடப்பது எல்லாம் நல்லதிற்கே. **(பரம் ஒன்று நமக்கு இலதே)** மேலும் மோக்ஷத்திற்காக நாம் செய்ய வேண்டிய உபாயம் வேறு எதுவும் இல்லை. என்று ஒரு முறை ப்ரபத்தி செய்தபின், ப்ரபன்னனுக்கு பொறுப்பு நீங்கியதை சொல்கிறார். இந்த பாசுரத்திற்கு ஸ்வாமியே விளக்கம் எழுதியுள்ளார்.

## 11-27 சரண் என்பதில் ஸாத்விக த்யாகம்

எம்பெருமானிடம் பரிபூர்ணமாய் சரண் என்று அடையும்போது தன்னால் ஆவது ஒன்றுமில்லை என்ற நினைவு அவசியம்.

அதாவது ப்ரபத்தி செய்யும்போது இதுவும் அவன் திருவருளே என்ற மனப்பான்மை வேண்டும். ஆசாரியர்களின் அருளால் தத்வங்களை அறிந்தவன், ஹிதமான ப்ரபத்தி என்னும் உபாயத்தை, நித்ய கைங்கர்யம் என்ற புருஷார்த்ததிற்காக அனுஸந்திப்பான். அவன் கர்மாக்களை செய்யும்போது தான், தனது என்ற நினைவு இன்றி, பலனில் நோக்கம் கொள்ளாமல் செய்கிறான். பலனில் பற்று அற்றவன் அவன். தான் சுதந்திரமாய் எல்லாவற்றையும் செய்கிறேன் என்ற நினைவு துளிக்கூட இருக்காது.

> **என்னதியான் செய்கின்றேன் என்னாதாருக்கு**
> **இன்னடிமை தந்து அளிப்பான் இமையோர் வாழும்**
> **பொன்னுலகில் திருவுடனே அமர்ந்த நாதன்**
> ஸ்வாமி தேசிகன் அமிர்த ரஞ்சனி 18

"**(என்னது யான் செய்கின்றேன்)** இது என்னுடையது என்கிற மமகாரம், நான் செய்கிறேன் என்கிற அகங்காரம் **(என்னாதாருக்கு)** இல்லாதவர்களுக்கு **(இமையோர் வாழும் பொன்னுலகில் இன்னடிமை தந்து அளிப்பான்)** நித்யர்கள் வாழும் பரமபதத்தில், இனிமையான நித்ய கைங்கர்யம் கொடுத்து

அருள்வான் **(திருவுடனே அமர்ந்த நாதன்)** பிராட்டியுடன் வீற்றிருக்கும் ஸ்ரீமந் நாராயணன்."

என்று ஸ்வாமி தேசிகன் அகங்கார மமகாரங்கள் இல்லாமல் செய்யும் காரியம் என்பதைக் காட்டினார்.

ஸம்ஸாரத்தில் போகத்திற்காக செய்யும் தர்மங்கள் ப்ரவ்ருத்தி தர்மங்கள். **(ப்ரேயஸ்) (Attachment)** மோஷத்திற்காக செய்யப்படும் தர்மங்கள் நிவ்ருத்தி தர்மங்கள் **(ஶ்ரேயஸ்) (Detachment).** ப்ரபன்னன் செய்யும் ப்ரபத்தி என்பது நிவ்ருத்தி தர்மம். பலனிலும், செயலிலும் தன் உரிமையை தியாகம் செய்கிறான்.

## 11-28 ப்ரபத்திக்குபின் எல்லாம் அனுபவமே

ப்ரபன்னன், ப்ரபத்திக்கு பின் செய்யும் நல்ல காரியங்கள் எல்லாம் ப்ரபத்திக்கு அங்கம் அல்ல. ப்ரபத்தி என்னும் காரியம் முடிவு அடைந்து விட்டது. அதற்கு அங்கங்கள் என்பவை ஆநுகூல்ய ஸங்கல்பம் போன்ற ஐந்தும் உய்யும் ஆறு எண்ணி என்று ஏற்கனவே சொன்னோம். எண்ணி என்று சொன்னாலே போதும், பகவான் மோக்ஷத்தை அளிக்கிறான்.

உதாரணமாக, ப்ரபத்திக்கு பின் எம்பெருமானுக்கு பிடித்தாக செய்யும் காரியம், ஆநுகூல்ய ஸங்கல்பம் என்பது கூட அனுபவமே தவிர உபாயம் இல்லை. அங்கம் இல்லை.

ப்ரபன்னனின் பிற்காலத்தில் சாஸ்திர விஹிதமாக நடத்தும் வாழ்க்கையில் குறை ஏதாவது ஏற்பட்டாலும், எம்பெருமான், நல்ல அறிவு கொடுத்து, அவனை திருத்தி, ப்ரப்த்தியை பூர்ணமக்கி பலனைத் தருகின்றான். மோக்ஷம் நிச்சயம், அதி சந்தேகம் வேண்டாம்.

## 11-29 தித்திக்கும் முகுந்தன் திண்கழலே.

எம்பெருமானே! அடியவர்கள் அனைவரும் கெட்டியாக பற்றும் உன் செந்தாமரை பாதங்கள் அமுதம் போல் இனிக்கும்.

**உருக்ரமஸ்ய ஸ ஹி ப$_3$ந்து$_4$ரித்த$_2$ா**
**விஷ்ணோ: பதே$_3$ பரமே மத்$_4$வ உத்ஸ: ||**
விஷ்ணு ஸூக்தம்

திரிவிக்கிராமாவதாரம் செய்த அந்த எம்பெருமான்தான் எல்லாவிதமான உறவினனும் நமக்கு. அவனுடைய திருவடிகளிலிருந்து பெருகும் தேன் வெள்ளத்தை அடியவர்கள் அனைவரும் பருகி ஆனந்தம் அடைவோம் என்றது.

**வானார் சோதி மணி வண்ணா * மதுசூதா நீ அருளாய் * உன்**
**தேனே மலரும் திருப்பாதம் * சேருமாறு வினையேனே !**
**நம்மாழ்வார், திருவாய்மொழி 1-5-5**

என்று ஸ்வாமி நம்மாழ்வார், “வானத்தில் நீல மேக ஸ்யாமளனாய், மது என்னும் அரக்கனை அழித்த எம்பெருமானே, தேன் பெருகும் உன் திருவடிகளை, பாபமே செய்த நான் அடையுமாறு அருள்வாய்” என்றார்.

**தவாம்ருதஸ்யந்தி$_3$நி பாத$_3$ பங்கஜே**
**நிவேசிதாத்மா கத$_2$மந்யதி$_3$ச்ச$_2$தி |**
**ஸ்தி$_2$தேZரவிந்த$_3$ மகரந்த$_3$ நிர்ப$_4$ரே**
**மது$_4$வ்ரதோ நேக்ஷுரகம் ஹி வீக்ஷதே ||**
ஆளவந்தார், ஸ்தோத்ர ரத்நம் 27

ஆளவந்தார் பகவானிடம் ப்ராத்திக்கிறார். “எம்பெருமானே
**(நிவேசித ஆத்மா)** உன் அருளாலே வைக்கப்பட்ட என் மனதானது
**(அம்ருதஸ்யந்தி$_3$நி** தேன் பெருகும்
**(தவ பாத$_3$ பங்கஜே)**, உம்முடைய திருவடித்தாமரைகளில் (தவிர)
**(அந்யத் கத$_2$ம்$_3$ இச்ச$_2$தி)** வேறொன்றை எப்படி ஆசைப்படும்?

**(மது$_4$வ்ரதோ)** வண்டானது,
**(மகரந்த$_3$ நிர்ப$_4$ரே அரவிந்த ஸ்தி$_2$தே ஸதி)** தேன் பெருகி இருக்கும் செந்தாமரை இருக்கும்போது,
**(இஷுரகம் ந வீக்ஷதே ஹி)** முள்ளிப்பூவை காணாது அன்றோ," என்று வினவினார்.

**அண்ணிக்கும் அமுதூறும் * என் நாவுக்கே**
**மதுரகவியாழ்வார், கண்ணிநுண் சிறுத்தாம்பு 2**

என்றார், மதுரகவியழ்வார் தன் ஆசாரியனது திருவடிகளைப் புகழ்ந்து.

**அடியவர் அனைவரும் புகலின்றி *
சரணாக தாளில் அடைக்கலமாகி *
கடுவினை காய்ந்து அப்பொழுதே *
அங்கு அவருக்கு அருள்விளக்காகி *
பெருந்துணையாய் அவள் வழியே *
பரிவுரையால் தருவான் அவன் *
அரும்பேறு அதுவே என பொழியும் *
பெருந்தேவிப் பிரியா பேரருளான்**
**அடியேன், நெஞ்சில் அஞ்சு 8**

என்று அர்த்த பஞ்சக விளக்கமான பாசுரத்தில் சொன்னோம். அடியவர்கள் எல்லோரும் உபாயம் வேறு இல்லை என்று எம்பெருமானே உன்னுடைய பாதங்களையே பற்றுகின்றன

## 11-30 தித்திப்பது திருமேனியே

எம்பெருமானை ஆராத அமுதம் என்றனர், ஆழ்வார்கள். அநுபவிக்க அநுபவிக்க, தெவிட்டாமல், இன்னமும் வேண்டும் என்ற ஆசை பிறந்து கொண்டே இருக்குமாம்.

**தனிநாயகன் மூவுலகுக்கு உரிய ***

prapatti.dot.com

**கட்டியைத் தேனை அமுதை ***
**நன்பாலைக் கனியை கரும்புதன்னை ***
**மட்டவிழ் தண்ணந்துழாய் முடியானை ***
நம்மாழ்வார், திருவாய்மொழி 3-10-3

ஆழ்வார்கள் பல இடங்களில், தேனே, பாலே, தித்திக்கும் அமுதே, கருப்பஞ்சாறே, நன்கு கனிந்த பழமே, என்று பல இடங்களில் உவமைப் படுத்தி (analogy) உள்ளனர். இங்கே நம்மாழ்வார் பகவானை வெல்லக்கட்டி, தேன், அமுதம், பால், பழம், கரும்பு ஆகியவற்றின் சுவையாக இருப்பவன் என்றார்.

**ஸர்வ கந்த: ஸர்வ ரஸ:**

என்று வேதமும் எம்பெருமானை எல்லாவிதமான சுவையுடன் தித்திப்பவன் என்றது.

**நன்கு ஓதும் நால் வேதத்துள் உள்ளான் * நறவு இரியும்**
**பொங்கு ஓதம் அருவி புனல் வண்ணன்***
பேயாழ்வார், மூன்றாம் திருவந்தாதி 11

என்று பேயாழ்வார் **"(நன்கு ஓதும் நால் வேதத்துள் உள்ளான்)** சிறப்பாக அத்யனம் செய்யும் வேதத்தில் உள்ளவன், **(நறவு இரியும்)** தேன் தோற்கும்படியான இனிமையை உடையதாய், **(பொங்கு ஓதம் அருவி புனல்)** கடல், அருவி போல் **(வண்ணன்)** நிறமும், தன்மையையும் உடையவன் எம்பெருமான்," என்று எம்பெருமானின் திருமேனியை வர்ணிக்கிறார்.

**மிக்கானை * மறையாய் விரிந்த விளக்கை * என்னுள்**
**புக்கானைப் * புகழ்சேர் பொலிகின்ற பொன்மலையை ***
**தக்கானைக் * கடிகைத் தடங்குன்றின் மிசையிருந்த ***
**அக்காரக் கனியை * அடைந்து உய்ந்து போனேனே**
திருமங்கையாழ்வார், பெரிய திருமொழி 8-9-4

பெரிய திருமொழியில் திருமங்கையாழ்வார் அடையமுடியாத, விவிரிக்க முடியாத பெரும்சுவை என்று ஒன்று இருக்குமானால் அதுவே ஒரு பழமாய் இருந்தால் எப்படி இருக்குமோ அதுபோல் உள்ளவன் இந்த அக்காரக்கனியான திருக்கடிகை, சோளிங்கபுர யோக நரசிம்மனை புகழ்கிறார்.

**களங்கனி வண்ணா! கண்ணனே! என்தன் ***
**கார்முகிலே! என நினைந்திட்டு ***
**உளங்கனிந்திருக்கும் அடியவர் தங்கள் ***
**உள்ளத்துள் ஊறிய தேனை ***
திருமங்கையாழ்வார் பெரிய திருமொழி 4-3-9

பெரிய திருமொழியில் திருமங்கையாழ்வார் செம்பொன்செய் கோவிலில் எழுந்தருளியிருக்கும் எம்பெருமான் “அடியவர் உள்ளத்தில் ஊறும் தேன்” என்கிறார்

## 11-31 முகுந்தன் திண்கழலே

மோக்ஷத்தை அளிப்பதால் அவன் முகுந்தன். மு என்பது முக்தியையும், கு என்பது பூமியையும் குறிக்கும் என்று பெரியோர் பணிப்பர். முகும் - முக்தி பூ$_4$மிம் த$_3$த$_3$ாதி இதி முகுந்த$_3$: என்கிற வ்யத்பத்தியாலே முக்தி பூமியை அளிப்பவர் என்ற பொருள்.

அந்த முகுந்தனின் திருவடிகளை கெட்டியாக பற்றினால் மோஷம் நிச்சயம்.

**நித்யாலஸார்ஹ மப$_4$யம் நிரபேக்ஷமந்யை:**
**விஶ்வாதி$_4$கார மகி$_2$லாபி$_4$மத ப்ரஸூதிம் |**
**ஶிக்ஷா விஶேஷ ஸூபகம் வ்யவஸாய ஸித்தா:**
**ஸத்குர்வதே த்வயி முகுந்த$_3$ ஷட$_3$ங்க$_3$ யோக$_3$ம் ||**
ஸ்வாமி தேசிகன் ஶரணாகதி தீபிகை 26

(முகுந்த$_3$) மோக்ஷத்தை அளிப்பவனே!
(ஸித்தா: வ்யவஸாய) உறுதியான மனம் உடையவர்கள்

**(ஸத்குர்வதே)** சிறந்ததாக மதிப்பது எது என்றால்,
**(நித்ய அலஸ அர்ஹம்)** எப்போதும் சோம்பேறிகளுக்கும் உகந்ததாய்,
**(அப$_4$யம்)** பயமின்றி
**(அந்யை: நிரபேக்ஷம்)** வேறு துணை நாடாது,
**(விஶ்வ அதி$_4$காரம்)** உலகத்தவர் எல்லோரும் அனுஷ்டிக்கும்படியாய்,
**(அகி$_2$ல அபி$_4$மத ப்ரஸூதிம்)** வேண்டியவற்றை வாரி வழங்கும்படி
**(ஶிக்ஷா விஶேஷ ஸூபகம்)** நல்ல பயிற்சியால் செய்வதற்கு சுலபமாய் இருக்கும்
**(த்வயி ஷட்$_3$ அங்க$_3$ யோக$_3$ம்)** உன்னிடம் செய்யப்படும் ஆறு அங்கங்களை உடைய ப்ரபத்தியை, என்றார்.

“ஹே தீபப்பிரகாச!, திடமான மனம் உள்ளவர்கள் பக்தியோகத்திற்கு இல்லாத பெருமை ப்ரபத்திக்கு இருப்பதை நன்கு அறிந்து அதையே பின்பற்றி மிகுந்த உயர்வை அடைகின்றனர். பக்தி யோகம் நிறைவேற பல இன்னல்கள். சோம்பேறிகள் அதைச் செய்ய முடியாது. மற்ற கர்ம ஞான யோகங்களை அங்கமாக செய்ய வேண்டும், அவை நன்கு செய்தோமோ, செய்கின்றோமோ என்ற பீதி எப்போதும். சில வர்ணத்தார் மட்டுமே செய்ய முடியும்.”

“ஆனால் ப்ரத்தியோ ரொம்ப சுலபம். ஆசாரியன் அருளால் ஒரு க்ஷண காலத்தில் நிறைவேறக் கூடியது. ஜாதி வரம்பு கிடையாது. ஒரு தடவை செய்தாலே போதும். எல்லா பலன்களையும் தரக் கூடியது. ஐந்து அங்கங்களைத் தவிர வேறு ஒன்றையும் வேண்டாது. சோம்பேறிகளும் ப்ரபத்தி செய்து பலனை பெற முடியும். அதனால் ப்ரபந்நர்கள் மிக மதிப்பு பெறுகிறார்கள்,” என்றார் ஸ்வாமி தேசிகன்.

**அத்தனாகி அன்னையாகி * ஆளும் எம்பிரானுமாய் *
ஒத்தொவ்வாத பல் பிறப்பு ஒழித்து * நம்மை ஆட் கொள்வான் *
முத்தனார் முகுந்தனார் * புகுந்து நம்முள் மேவினார் *
எத்தினால் இடர்க் கடல் கிடத்தி * ஏழை நெஞ்சமே!**
திருமழிசையாழ்வார், திருச்சந்த விருத்தம் 115

தாய் செய்யும் காரியம் தந்தை செய்ய முடியாது. தந்தை செய்வதை தாய் செய்ய முடியாது. ஆனால் அந்த முகுந்தனோ தாய் தந்தையர் இருவரும் செய்வதையும், அதைவிட உயர்ந்ததாய் செய்பவன். அவன் ஒருவனே நம் பிறவித் துன்பங்களை நீக்கி மோஷத்தை அளிக்கிறான்.

**ப்ரபந்நாத்₃ அந்யேஷாம் ந தி₃ஶதி முகுந்தே₃ா நிஜ பத₃ம்**

ஸ்வாமி தேசிகன் ஸ்ரீமத் ரஹஸ்யத்ரய ஸாரம்

**(முகுந்த₃;)** மோக்ஷம் அருளும் எம்பெருமானே,

**(ப்ரபந்நாத்₃ அந்யேஷாம்)** ப்ரபன்னர்களைத் தவிர மற்றவர்களுக்கு நீ

**(நிஜ பத₃ம் ந தி₃ஶதி)** உன் திருவடிகளில் நித்ய கைங்கர்யம் செய்யும் பரமபதத்தை கொடுப்பதில்லையே!

என்று ஸ்வாமி தேசிகன் அதிகாரி விபாகாதிகாரம், ஸ்ரீமத் ரஹஸ்யத்ரய ஸாரத்தில் ஸாதித்தார்.

## 11-32 ப்ரபத்யே என்று நிகழ் காலம்

ப்ரபத்யே என்று நிகழ் காலத்தில் (present tense) சொல்வானேன்? பக்தி யோகத்தில் எப்பொழுதும், மோக்ஷம் கிட்டும் வரை செய்து கொண்டே இருக்க வேண்டும். இங்கு அது மாதிரியாக எப்பொழுதும் செய்து கொண்டு இருக்க வேண்டுமா? இல்லை. பரபத்தி ஒரு தடவை செய்வது தான் காகன், விபீஷணன், த்ரௌபதி ப்ரபத்தியை பற்றி சொல்லும்போது ஒரே க்ஷணத்தில் ப்ரபத்தி செய்ததாக சொல்லுகிறார்கள்.

இங்கு ப்ரபத்யே என்று நிகழ் காலத்தை சொல்லுவது ஒவ்வொருவரும் ப்ரபத்தியை செய்யும் காலத்தை சொல்லுவது வேதத்தில் பல மந்தரங்கள் அவரவர் செய்யும் காரியத்தை விளக்குவதாக இருப்பதால் அந்த மந்தரங்களை சொல்லிக்கொண்டே செய்ய வேண்டி உள்ளது.

"நான் தர்ப்பத்தை பறிக்கிறேன்" என்று சொல்லி பறிக்கிறான். அது அந்த காரியம் செய்யும்போது நிகழ் காலத்தை குறிக்கிறது அத்துடன் அது முடிந்தது.

நிகழ் காலத்தைக் (present tense) கொண்டு பறித்துக் கொண்டே இருக்கவேண்டும் என்று சொல்வார்களோ?

அது போல, இங்கு ப்ரபத்தி செய்பவன் கார்யத்தை செய்யும் காலத்தை குறிக்கிறது

**முன் செய்த முழுவினையால் * திருவடிக்கீழ்க் குற்றேவல் ***
**முன் செய்ய முயலாதேன் * அகல்வதுவோ? விதியினமே.**
நம்மாழ்வார், திருவாய்மொழி 1-4-2

என்று நம்மாழ்வார் முன் பிறவிகளில் செய்த பாவங்களால் எம்பெருமானின் திருவடிகளில் ஸேவை செய்யும் பாக்யம் கிட்டாது போயிற்று. முன் ஜன்மத்திலேயே கைங்கர்யத்திற்கு முயலாத நான் இன்னமும் நகர்ந்து போகலாமா? இது முறையா," என வினவுகிறார்.

அப்படி என்றால் என்ன? காலம் தாழ்த்தாது உடனேயே, இப்போதே, நிகழ் காலத்தில் நித்ய கைங்கர்யத்திற்கு உபாயமான ப்ரபத்தியை செய் என்று பொருள்.

**ப்ரபத்யே ශப்தார்த்தம்.**
**வர்த்தமான நிர்த்தேශம் - ஸத்வம் தலை எடுத்து அஞ்சினபோது அநுஸந்திக்கைக்காக. உபாயந்தரங்களிலே நெஞ்சு செல்லாமைக்கும், காலக்ஷேபத்துக்கும் இனிமையாலே விடவொண்ணாமையாலும் நடக்கும்.**
பிள்ளைலோகாசாரியார், முமுக்ஷுப்படி 157, 158

**இப்பதத்திலே வர்த்தமான நிர்த்தேශத்தாலே - காலக்ஷேப ஹேதுவாகவும், போக ஹேதுவாகவும் ஈශ்வர ப்ரீதி ஹேதுவாகவும் யாவத்சரீர பாதம் இந்த புத்தி விஶேஷம் அநுவர்த்திக்கும்**
பிள்ளைலோகாசாரியார், ச்ரிய:பதிப்படி

தான் உணர்ந்திருந்தபோது அவனே உபாயம் என்று இருக்கும் நினைவு மாறாதிருக்க, என்று ஸாதித்தார்.

## 11-33 ராமாயணத்தில் ப்ரபத்தி

ராமாயணம் என்பது வேதத்தின் ஸாரம் அதற்கு ஶரணாகதி சாஸ்த்ரம் என்றே பெயர்

**புண்யம் வேதைஶ்ச ஸம்மிதம்**
வால்மீகி, ராமாயணம் பால 1-97

புண்யம் கொடுப்பதாயும் மேலும் வேதங்களோடு ஸமமாயிருக்கும் ராம சரித்ரம் என்றது ராமாயணம்

**புண்யம் வேதைஶ்ச ஸம்மிதம் என்கிறபடியே நாலு வேதங்களும் ஒரு தட்டிலும் தான் ஒரு தட்டிலுமாக நிற்கிற ராமாயணமாகிற ப்ரபந்தத்தை அருளிச் செய்து**
ஸ்வாமி தேசிகன், அபயப்ரதாந ஸாரம்

என்று ஸ்வாமி தேசிகன், அபய ப்ரதாந ஸாரத்தில் ஸாதித்தார்

**ஸப்₄ராதுஶ் சரணௌ க₃ாட₄ம் நிபீட்₃ய ரகு₄நந்த₃ந: ।**
**ஸீதாம் உவாசாதியஶா: ராக ₄வம் ச மஹா வ்ரதம் ।।**
வால்மீகி, ராமாயணம் அயோத்யா காண்டம் 31-2

என்று உபாயபர்க்ரஹத்தை ராமாயணம் அயோத்யா காண்டத்தில் காண்பிக்கிறது. அந்த லக்ஷ்மணன் சகோதரருடைய இரண்டு திருவடிகளையும் கெட்டியாக பிடித்துக் கொண்டு, ரகு வம்ஸத்திற்கு ஆனந்தத்தை கொடுக்க கூடியவருமான ஸீதையிடத்திலும், சொன்னார் மிகுந்த புகழ் உடையவரும் ராமனிடத்திலும் (ஶரணாகதர்களை காப்பாற்றுவதையே தனக்கு) பெரிய விரதமாக

**யோ ப்₃ரஹ்மாணம் வித₃த₄ாதி பூர்வம்**
**யோ வை வேத₃ாம்ஶ்ச ப்ரஹிணோதி தஸ்மை ।**
**தம் ஹ தே₃வம் ஆத்மபு₃த்தி₄ ப்ரஸாத₃ம்**

prapatti.com

**முமுக்ஷுர் வை ஶரணமஹம் ப்ரபத்3யே ||**
ஸ்வேதாஸ்வர உபநிஷத்

**(யோ ப்3ரஹ்மாணம் விதத3த4ாதி பூர்வம்)** எவன் முதலில் ப்ரம்மாவை படைத்தானோ,
**(யோ வை வேத3ாம்ஶ்ச ப்ரஹிணோதி தஸ்மை)** எவன் வேதங்களை அவனுக்கு உபதேசித்தனோ,
**(தம் ஹ தே3வம் ஆத்மபு3த்தி4 ப்ரஸாத3ம்)** அறிவுள்ள, ஒளிமிக்க அந்த தேவனை,
**(முமுக்ஷுர் வை ஶரணமஹம் ப்ரபத்3யே)** மோக்ஷத்தில் ஆசையுடைய நான் அந்த பரமாத்வாவை ஶரணம் அடைகிறேன்,"
என்றது ஸ்வேதாஸ்வர உபநிஷத்.

**ஸர்வ கர்ம ஸமாராத்4ய!**
**ஸநாதந த4ர்ம!**
ஸ்வாமி தேசிகன், மஹாவீர வைபவம்

ஸ்வாமி தேசிகனும், இந்த கருத்தை, மஹாவீர வைபவத்தில் விவ்ரிக்கிறார். எல்லா கர்மங்களாலும் நன்றாக ஆராதிக்கப்படுபவனே உலகத்தில் யார் எந்த தெய்வத்திற்கும் எந்த விதமான யாகமோ, பக்தியோ, கர்மமோ செய்தாலும், உண்மையில் நீயே ஆராதிக்கப்படுகிறாய் அந்த்ர்யாமியாய் நீ உள்ளே நின்று அதை பெற்றுக் கொள்கிறாய் ஸாச்வதமான தர்ம வடிவம் கொண்டவனே என்று சொல்லி

**ப4வ தபந தாபித ப4க்த ஜந ப4த்3ரா ராம**
**ராம ப4த்3ர**
**நமஸ்தே புநஸ்தே நம:**
ஸ்வாமி தேசிகன், மஹாவீர வைபவம்

முடிக்கிறார்.

## 11-34 பக்தி யோகமும், ப்ரபத்தி யோகமும்



prapatti dot com

பக்தி யோகமும், ப்ரபத்தி யோகமும் ஒரே பலனை, அதாவது மோக்ஷானந்தத்தை தருபவை. அவை ப்ரஹ்ம வித்தை எனப்படும். ஆனால் அவற்றை செய்யும் முறையில் நிறைய வேறுபாடுகள் உண்டு.

1. **அடிப்படை.** பக்தியோகத்திற்கு கர்ம, ஞான யோகம் அடிப்படை. ப்ரபத்திக்கு மீதி எந்த யோகமும் அவசியமில்லை.

2. **சாஸ்திர ஞானம்.** பக்தி யோகி சாஸ்திரங்கள் நன்கு அறிந்து உபனிஷத்தில் சொல்லப் பட்ட வித்தைகளை பின்பற்ற வேண்டும். ப்ரபத்தியில், எம்பெருமானுக்கும் நமக்கும் உள்ள உறவை அறிந்தாலே போதும். சாஸ்திர ஞானம் அவசியம் இல்லை.

3. **தகுதி.** பக்தியோகம் செய்ய ஜாதி வரை முறை உண்டு. ப்ராம்மண, க்ஷத்ரிய, வைசியருக்கே (வேதியர், வேந்தர், வணிகர்) இவற்றை செய்ய அதிகாரம் உண்டு. ப்ரபத்தி எல்லோருக்கும் பொதுவானது.

4. **கடமை.** பக்தியோகத்தில் சாஸ்திரத்தில் விதிக்கப்பட்ட கர்மாக்கள அனைத்தும் செய்தே தீர வேண்டும். பக்தி யோகம் செய்ய திறமை அற்றவர் எவரானாலும் ப்ரபத்திக்கு அதிகாரி.

5. **எளிமை.** சாதரண மக்களால் பக்தி யோகம் செய்வது என்பது அறிது. ப்ரபத்தியோ எல்லோருக்கும் எளிதானது.

6. **செய்யும் முறை.** பக்தி யோகம் பலன் கிட்டும் வரை திரும்பி திரும்பி செய்து கொண்டே இருக்க வேண்டும். ப்ரபத்தியோ ஒரு பலனுக்காக ஒரு முறை செய்தாலே போதும்.

7. **காலம்.** காலத்தில் நீண்டு நிற்கும் பக்தி யோகம். ப்ரபத்தியோ வேண்டும்போது (உடனேயோ அல்லது இப்பிறவி முடியும்போதோ) மோக்ஷத்தை அளிக்க வல்லது.

8. **ஆத்ம ஸாக்ஷாத்காரம்.** கர்ம, ஞான யோகம் முற்றும் பெற்று, ஆத்மாவின் ஸாக்ஷாத்காரம் பெற்றவரே பக்தியோகம் செய்ய அருகதை உடையவர். ப்ரபத்திக்கு வேறு அங்கங்கள் அவசியமில்லை. பரபக்தி ஸ்தானத்தில் இதுவே இருந்து பர ஞான, பரம பக்தியை கொடுக்கும்.

9. **ப்ராரப்த கர்மா.** பக்தி யோகம் ப்ராரப்த கர்மாவை போக்காது. அதை அனுபவித்தே தீர்க்க வேண்டும். அதற்காக வெகு காலம் காத்திருக்க வேண்டும். ப்ரபத்தி ப்ராரப்த கர்மாவை போக்கி வேண்டும் போது மோக்ஷத்தை அளிக்கும்.

10. **அங்கங்கள்.** எட்டு அங்கங்களை உடைய அஷ்டாங்க யோகம் பத்தி யோகம். ப்ரபத்தி ஆனுகூல்ய ஸங்கல்பம் ஆகிய ஐந்து தவிர, வேறு அங்கங்களை பொறுக்காது. பிரம்மாஸ்திரம் போல் விலகும்.

11. **நினைவு.** பக்தி யோகி தன் பாவங்கள் நீங்குவது, அர்ச்சிராதி மார்கமாய் மோஷம் அடைந்து ஆனந்திப்பத்தையும் சிந்தித்து கொண்டே இருக்க வேண்டும். இது அவனுக்கு உபாயம். ப்ரபன்னனுக்கு இந்த சிந்தனை அவசியமில்லை. அப்படி சிந்திப்பானாகில் அது ஆனந்தமான பொழுது போக்கு மட்டுமே தவிர உபாயம் இல்லை.

12. **அந்திம ஸ்ம்ருதி.** பக்தியோகத்திற்கு மிகவும் அவசியம். ப்ரபன்னனுக்கு அவசியமில்லை.

13. **மரண வேளை.** பக்தி யோகிக்கு மரணம் நேரும் காலம், இடம் போன்றவை பலன் தருவதற்கு அவசியமானவை. உத்தராயண புண்யகாலம், பகல், சுக்ல பக்ஷம் போன்றவை. ப்ரபன்னனுக்கு இவை எதுவும் அவசியமில்லை, இறந்தால் மோஷம்.

## 11-35 த்வயத்தின் பூர்வ வாக்யம் - முடிவுரை

“ஸ்ரீமந் நாராயண சரணௌ ஶரணம் ப்ரபத்யே” என்ற த்வயத்தின் பூர்வ கண்டத்தின் அனுஸந்தானத்தில் நாம் அறிவது என்ன என்றால் -

1. அடையப்படும் ப்ரம்மம்

- ஸ்ரீமந் நாராயணனே.
- அவன் எப்போதும் பிராட்டியை ஒரு க்ஷணமும் பிரியாதவன்
- எல்லா மக்களும் சரண் அடையும்படி ஸித்தோபாயமாக உள்ளான்.
- லீலாவிபூதி, நித்ய விபூதி எல்லாவற்றிக்கும் நாதன்
- மோக்ஷத்தை அளிக்க வல்லவன், அவன் ஒருவனே
- சரண் அடைபவர்களின் குற்றங்களை புறக்கணித்து அருள்பவன்
- திவ்யமான திருமேனியும், திருக்கல்யாண குணங்களையும் உடையவன்

2. அடையும் ஜீவன்

- உடல், இந்திரியங்களை விட வேறான அழியாத, அணுவான ஆத்மா.
- எம்பெருமான் ஒருவனுக்கே அடிமை. இது இயற்கை.
- வேறு ஒருவருக்கும் அடிமை இல்லை.
- அல்பனான ஜீவன், கர்ம, ஞான, பக்தி யோகங்கள் செய்ய அருகதை அற்றவன்.
- பிராட்டியுடன் கூடிய அந்த எம்பெருமானின் திருவடிகளில் அடைக்கலம் அடைவதைத் தவிர வேறு கதி எனக்கு இல்லை.
- அப்படி அடைந்தால் எம்பெருமான் நித்ய கைங்கர்யத்தை அருளுவான் என்ற மிக உறுதியுடன் அவன் திருவடிகளைப் பற்றுகிறேன்

3. அடையப்படும் பலன்

- உயர்ந்த புருஷார்த்தம் என்பது மோக்ஷம். அது எம்பெருமானுக்கும், பிராட்டிக்கும் நித்யமான கைங்கர்யம் செய்வதே.
- ஸம்ஸாரத்தில் உள்ள அல்ப ஆசைகள் கழிந்து மிக உயர்ந்த போக்யமான எம்பெருமானை அடைய வேண்டும். அதுதான் உயர்ந்த புருஷார்த்தம்.

4. ப்ரம்மத்தின் உறவு

- ஶேஷத்வம் - எம்பெருமான்னுக்காகவே எற்பட்டவை
- கிங்கரத்வம் - அவனுக்கு கைங்கர்யம் செய்யும் தன்மை
- ரக்ஷயத்வம் - அவனால் காக்கப்பட வேண்டியவனாய் இருத்தல்
- அப்ருதக்ஸித்தவம் - அவனை விட்டு பிரியாமை
- ஆதேய, விதேயத்வம் - எம்பெருமானால்தான் சேதனனுடைய ஸ்வரூப, ஸ்திதி, ப்ரவருத்திகள்

5. அடைவதற்கான உபாயம்

- ஸம்ஸாரத்தை கடக்க பக்தி, ப்ரபத்தி இந்த இரண்டு மட்டுமே உபாயம். இதில் பக்தியோகம் என்பது மிகவும் அரிது.
- எம்பெருமான் ஏற்கனவே விளங்கும் ஸித்தோபாயமாய் சேதனனுக்கு அருள காத்துக் கொண்டிருகிறான்.
- சேதனன் ஏற்கனவே செய்து குவிந்துள்ள பாவக்குவியலை நீக்க அவன் ஒரு சிறு காரணத்தை எதிர்பார்க்கிறான்.
- ஸம்ஸாரத்தை கடந்து பேரின்பமாகிய மோக்ஷத்தை அடைய எல்லோராலும் எளிதாய் செய்யக் கூடிய உபாயம் ப்ரபத்தி. இது ஸாத்யோபாயம்
- அந்த எம்பெருமானை அடைய அவனே உபாயமாகிறான்.
- அருகததை அற்ற என்னுடைய கீழ்த்தரமான நிலைமை எண்ணி அவன் கருணையை வேண்டி, பக்தி யோக ஸ்தானத்தில் நின்று பலன் தர வேண்டும் என்னும் என் ப்ராத்தனையை நிறைவேற்றுகிறான்.
- என்னை காத்துக் கொள்ளும் பொறுப்பும் அவனுடையதே என்கிற சுமை நீங்கலான பரந்யாஸத்தை அவன் திருவடிகளில் அவனே என் மூலம் செய்து வைத்துக் கொள்கிறான். இந்த செயலில் நான், எனது என்பதற்கு இடமே இல்லை என்பதை அறிகிறேன். ஸர்வமும் அவன் ஸங்கல்பமே என்பதை உணருகிறேன்.

## 11-36 த்வயத்தின் பூர்வ வாக்ய பதங்களின் ஸாரம்

prapatti dot com

இதுவரை த்வயத்தின் முதல் வரிக்கு விவரணமான பாசுரங்களை பார்த்தோம். இதன் ஸாரம் என்ன என்பதை ஸ்வாமி தேசிகன் அருளிய ரஹஸ்ய மாத்ருகை என்னும் சில்லரை ரஹஸ்யத்தில் விவரித்ததை, இங்கே சுருக்கமாக சொல்கிறோம்.

ஸ்ரீ இது முதல் எழுத்து.

- எம்பெருமானின் பத்நியான பெரிய பிராட்டியை குறிக்கும்
- அந்த எம்பெருமானை அடைய அவனே உபாயமாகிறான்.
- இவள் சேதனர்களுக்காக எம்பெருமானிடம் பரிந்து பேசும் புருஷகாரபூதை.
- ஸ்ரீ என்றால் முக்யமாக அழிப்பவள் என்று பொருள்.
- சேதனர்களை எம்பெருமானிடத்து சேர ஒட்டாது, மோக்ஷ பலனை தடுக்கும் அநாதியான பாபங்களை ஒழிக்கிறாள்.

மத் என்பது அடுத்து வருவது

- இது ப்ரத்யயம் என்னும் விகுதி
- எப்போதும் சேர்ந்தே இருக்கும் தன்மையை காட்டுகிறது
- நித்ய யோகே மதுப்பு என்கிறபடி பிராட்டி எம்பெருமானுடன் எப்போதும் சேர்ந்தே இருக்கிறாள்.
- அநந்யகதியராய் அடைக்கலம் புகும் அடியவரிடம் கருணை கொண்டவன் எம்பெருமான்.
- அவனுடைய திருமார்பை விட்டு ஒரு க்ஷணமும் அகலாதவள்.

நாராயண பதம்

- இது எம்பெருமானின் பலவிதமான கல்யாண குணங்களை காட்டுகிறது
- முக்யமாக, அடைக்கலம் அடைபவன் மனத்தை தேற்ற உயர்ந்ததான ஸ்வாமித்வம், ஸௌஸீல்யம், ஸௌலப்யம், வாத்ஸல்யம் என்கிற ஸ்வாபாவிக குணங்களை சிறப்பாக சொல்கிறது

சரணௌ

- இது பிராட்டியைப் பிரியாத எம்பெருமானின் இரண்டு திருவடிகளைச் சொல்லும்

- இப்படி திருவடிகளை சொல்ளி அதன் மூலமாய் எம்பெருமானின் திவ்ய மங்களகரமான திருமேனியைச் காட்டுகிறது.
- திருமேனி இல்லாமல் திருவடிகள் மட்டும் இல்லையே!
- எம்பெருமான் உபாயம், பலன் ஆகும்போது அவன் திருமேனியுடன் நிற்கிறான் என்று ஆகிறது

ஶரணம்

- அந்த இரண்டு திருவடிகளே உபாயம். மற்ற எதுவும் இல்லை.
- ஶரணம் என்பதற்கு வீடு, ரக்ஷகன் என்ற பொருள் இருந்தாலும் இங்கே உபாயத்தையே சொல்லும்.

ப்ரபத்

- ப்ர என்றால் நல்ல முறையில். பத் என்றால் நடத்தல்.
- பத் அறிதல் என்ற பொருளும் உண்டு. அது ப்ரபத்திக்கு அங்கமான மஹாவிச்வாசத்தை சொல்கிறது.
- மஹாவிச்வாசம் என்றால் நம்பிக்கை. அது அறிவினால் வரக் கூடியதுதானே
- மஹாவிச்வாசம் மூலமாக இதர அங்கங்களையும். அங்கியையும் காட்டி, எம்பெருமான் திருவடிகளில் பரந்யாஸம் செய்த நிலையை காட்டுகிறது.

யே

- இது ப்ரபத்தி விகுதியின் தன்மை ஒருமை
- அதாவது நிகழ் காலமாய் காரியம் செய்யும் ஒருவனைச் சொல்லும்.
- இங்கே ப்ரபத்தி செய்யும் சேதனனைச் சொல்லும்.
- அவன் எப்படிப்பட்டவன் - அகிஞ்சனன். அநந்யகதியன்.
- வேறு உபாயம் அற்று, வேறு கதியற்று பரிதாபகரமன நிலையில் உள்ள சேதனன் செய்யும் ஶரணாகதியை ப்ரபத்யே பதம் சொல்கிறது.

-

prapatti dot com

# 12 - ஸ்ரீமதே நாராயண

**ஒட்டாது மாசில் உயிராய் தரிக்கும் ***
**தட்டாது கோதில கோவிந்தனளிக்கும் ***
**தகவாது கழிந்த காலமும் தகர்க்கும் * இனிப்**
**பிரியாது கேசவன் பணியில் கிடக்கும்**

**ஒட்டாது** = சேராது (doesn't stick)
**மாசில்** = மாசு இல்லாதது (மாசு = அழுக்கு, களங்கம்) (flawless)
**உயிராய்** = (சேதனர்களின்) அந்தர் ஆத்மாவாய் (உள் இருந்து)
**தரிக்கும்** = (அவர்களைத்) தாங்கும்
**கோவிந்தன்** = எளிமையான எம்பெருமான் கோவிந்தன்
**தட்டாது** = தவறாமல்
**கோதில** = கோது இல = குற்றம், குறை இல்லாமல் (error-free, faultless)
**அளிக்கும்** = அருள் செய்பவன்
**தகவாது** = (எம்பெருமானின் குணாதிசயங்களில்) ஈடுபடாது
**கழிந்த காலமும்** = வீணாக்கிய காலங்களும்
**தகர்க்கும்** = அழிந்து போகும்
**இனிப் பிரியாது** = இனிமேல் ஒரு க்ஷணமும் பிரியாது
**கேசவன்** = ஸர்வ ஸ்வாமியான ஸ்ரீமந் நாராயணனின்
**கிடக்கும்** = கைங்கர்யத்தில் அசேதனம் போல் இருக்கும் (என் ஆத்மா).

## 12.1 முன்னுரை - த்வயத்தின் இரண்டாம் வரி

த்வயத்தின் முதல் வரி ப்ரபத்தி என்னும் உபாயத்தை சொல்லுகிறது என்று பார்த்தோம். இது ஸித்தோபாயமான எம்பெருமானையும் **(ஸ்ரீமந் நாராயண சரணௌ),** ஸாத்யோபாயமாய் சேதனன் செய்யும் ப்ரபத்தியை **(ஶரணம் ப்ரபத்யே)** காட்டுகிறது.

prapatti.com

த்வயத்தின் இரண்டாம் வரி (*உத்தர கண்ட*) வியாக்கியானம் பலனைத் தெரிவிக்கிறது.

ஒரு பைத்தியக்காரன்கூட பலனுக்குதான் எந்த காரியமும் செய்கிறான் என்று வேதமே சொல்வதால், இந்த த்வயத்தின், முக்யமாக ப்ரபத்தி செய்வதின் பலன் என்ன என்பதை மேலே காண்போம்.

முதலில் ஒரு கேள்வி. இந்த த்வயம் எந்த பலனுக்கு உபாயமாய் அமைகிறது? பூலோகத்தில் காணும் அழிவுள்ள, அற்பமான பலன்களா? என்றால் இல்லை. இவற்றை எல்லாம் தள்ளி, நிரந்தரமான மோக்ஷ ஸம்ராஜ்யத்தில் எம்பெருமானுக்கும் பிராட்டிக்கும் செய்யும் நித்ய கைங்கர்ய பலனைத் தெரிவிக்கிறது.

## 12.2 பாசுரத்தின் முக்யமான பொருள்

முதல் பதம் **"ஒட்டாது.** என்பது எம்பெருமானுக்கு கர்ம பந்தம் என்பது கிடையாது. மற்றைய அனைத்து பொருள்களையும் அவரவர் வினைப்பயனுக்கு ஏற்ப எம்பெருமான் படைக்கிறான். படைத்த பொருள் அனைத்திலும் தானே உள் இருந்து இயக்குகிறான்.

அவ்வாறு சேதான சேதனங்களுக்கு ஆத்மாவாய் உள் இருந்தாலும் அவர்களின் குறை இவனுக்கு ஒட்டாது. அவனுக்கு ஒரு குறையும் கிடையாது. இத்தால் இவன்தான் ஸர்வ ஸ்வாமி என்பது தெளிவாகிறது.

கடைசி பதம் **கிடக்கும்.** இது சேதனா சேதனங்களில் உள்ளுருவி உறைந்து இருக்கும் எம்பெருமான், அவற்றின் கர்ம பலனில் பங்கு கொள்ளாமல் இருக்கிறான், ஸ்ருஷ்டி காலத்தில்.

தவிர, ப்ரளய காலத்தில் பெயர், வடிவம் இல்லாமல் **(நாம ரூபமில்லாமல்)** (no identity on name or shape) அனைத்து பொருள்களையும் தன்னுள் அடக்கி தானே யோக நித்ரையில் கிடக்கிறான். இது சாரீரக சாஸ்திரத்தை காட்டுகிறது.

ஆக, **ஒட்டாது கிடக்கும்** என்பதில் ஸர்வ ஸேஷியான எம்பெருமான், அனைத்து பொருள்களுக்கும் பிரிக்க முடியாத உறவாய் நின்று, அவற்றின் கைங்கர்யங்களை மட்டும் ஏற்றுக் கொள்கிறான், கர்ம பலனில் பங்கு கொள்பவன் அல்ல என்பது தெளிவாகிறது.

## 12.3 த்வயம் இரண்டாம் வரியின் திரண்ட பொருள் - தேசிகன்

> **இப்பூர்வ கண்டத்தில் சொல்லுகிற உபாயத்தைப் புருஷார்த்தாந்தரங்களிலே** (மோக்ஷமின்றி மற்ற பலன்களில்) **மடை மாறாதபடி** (ஒரு வழியில் செல்லும் நீரை தடுத்து வேறு வழி மாற்றாது போல மோக்ஷதிற்கான ப்ரபத்தியை மற்றவைகளில் செலுத்தாது). **"கண்டு கேட்டு உற்று மோந்து உழலும் ஐங்கருவி கண்ட இன்பம்" இத்யாதிகளில் சொல்லுகிற பரம புருஷார்த்தத்தை** (பரமபதத்தில் ஸேவை) **சொல்லுகிறது உத்தர கண்டம்.**
>
> ஸ்வாமி தேசிகன், ஸ்ரீரஹஸ்யத்ரய சுளகம்

என்று ஸ்வாமி தேசிகன் ஸாதித்தார். "நேராக செல்லும் நீரை தடுத்து வேண்டாத வழியில் பாயச் செய்வது சரியில்லை போலே, இந்த ப்ரபத்தி என்னும் உபாயத்தை நேரான மோக்ஷ ஸாதனமாய் செலுத்துவதைவிட வேறு அற்ப பலன்களில் பயன் படுத்துவாறோ," என்கிறார்.

ஶரணாகதி என்பது எதற்கு வேண்டுமானாலும் செய்யலாம். இழிந்த, நிலையில்லாத பலன்களை வேண்டாது, பரிபூர்ண ப்ரம்மாநுபவம் என்கிற உயர்ந்த புருஷார்த்தமாகிற நித்ய கைங்கர்யத்தை வேண்டுவதுதான் ஸாமர்த்யம் என புரிகிறது.

## 12.4 உத்தர கண்டம் - பிள்ளைலோகாசாரியார்

> **உத்தர வாக்யத்தாலே ப்ராப்யம் சொல்லுகிறது. ப்ராப்யாந்தரத்துக்கு அன்றென்கை.**

**உபாயந்தரங்களைவிட்டுச் சரமோபாயத்தை பற்றினாற்போலே, உபேயந்தரமான ஐஶ்வர்ய கைவல்யாதிகளைவிட்டு எல்லையான ப்ராப்யத்தை அர்த்திக்கிறது.**

பிள்ளைலோகாசாரியார், முமுக்ஷுப்படி 160-162

என்று எம்பெருமானுக்கு செய்யும் கைங்கர்யமே உயர்ந்த புருஷார்த்தம். அதைச் சொல்கிறது த்வயத்தின் இரண்டாம் வரி. மற்ற பலன்களை அல்ல.

பூர்வ வாக்யத்திலே மற்ற உபாயங்களை விட்டு ப்ரபத்தியை சொன்னது போலே இங்கே உத்திர வாக்யத்திலே, மற்ற அல்பமான ஐச்வர்யம், கைவல்யம் ஆகிய பலன்களை விட்டு, கைங்கர்ய ப்ராப்தியை கோறுகிறது, என்றார்.

## 12.5 ஶ்ரீமதே நாராயண என்றால் என்ன?

**நாராயண** பதம் த்வயத்தின் பூர்வ வாக்கியத்திலும் வருகிறது. உத்தர வாக்கியத்திலும் வருகிறது.

பூர்வ வாக்கியத்தில், **நாராயண** பதத்திற்கு திருக் கல்யாண குணங்கள் என்று பொருள். இங்கு உத்தர வாக்யத்தில் **நாராயண** பதத்திற்கு ஒரே பொருள் - கைங்கர்யத்தை ஏற்று கொள்பவன். அதாவது **கைங்கர்ய பிரதி ஸம்பந்தி** என்பது.

ஸ்வாமி தேசிகன் அருளும்போது உத்தர வாக்கியத்தை மூன்றாக பிரித்தார். **ஶ்ரீமதே நாராயண, ஆய, நம:** என்று. பராசர பட்டர் நான்காக. பிரித்தார் - **ஶ்ரீமதே, நாராயண, ஆய, நம:**

ஸ்வாமி தேசிகன் பூர்வ வாக்கியத்தில், ப்ரபத் என்றும், யே என்றும் தனியாக பிரித்தார்.

## 12.6 நாராயண பதம் இருக்க ஸ்ரீமதே என்றது எதற்கு?

**ஸ்ரீமதே நாரயண ஆய** என்றால் பிராட்டியுடன் கூடிய எம்பெருமானின் பொருட்டே. அவர்களுக்கே என்று பொருள்.

இங்கே, த்வயத்தின் இரண்டாம் வரியில் உள்ள **நாராயணாய** என்பது நாம் செய்யும் கைங்கர்யங்களை ஏற்றுக் கொள்ளும் எம்பெருமானின் உயர்வைச் **(பரத்வத்தை)** சொல்கிறது. சேதனன் அநுவிக்கப்படும் பலனாக ஆவதற்கு வேண்டிய ஒப்பில்லாத இனிமையை **(பரம போக்யத்வத்தை)** சொல்கிறது.

சரி, எம்பெருமான் உயர்ந்தவன். அநுவிக்க இனிமையானவன் என்று இருக்க, நாராயண பதம் மட்டுமே போதுமே? இங்கே ஸ்ரீமதே என்ற சப்தம் எதற்கு என்று கேள்வி?

சேதனன் ஸமர்பிக்கும் ஆத்மா எனும் ஹவிஸ்ஸை ஏற்றுக் கொள்பவர்களாய், சேதனனின் ஶேஷத்வ பாரதந்த்ரியத்திற்கு ஏற்ற ஶேஷியாய், ஶேஷனான சேதனன் செய்யும் கைங்கர்யங்களுக்கு எல்லாம் இலக்காய் (target), முக்யமான பலனாய் அடையப்படுவர்கள் மிதுனமாகிய திவ்ய தம்பதிகளே.

த்வயத்தின் உத்தர கண்டத்தில் உள்ள ஸ்ரீ, பூர்வ கண்டத்தை போல ஆறு வித்பத்திகளை உடையதாய் இருந்தாலும், **ச்ரி என்றால் ஸேவித்தல்** என்ற பொருளையே மிகைப்படுத்திக் காட்டும்.

**ஸ்ரீ என்றால் சேதனர்களால் ஸேவிக்கப்படுபவள்** என்ற அர்த்தம்.

## 12.7 ஸ்ரீமதே என்ற பதம் இருக்க நாராயண எதற்கு?

சரி **ஸ்ரீமதே** என்ற பதம் பிராட்டியுடன் என்றும் கூடி, அவளை ஒரு க்ஷணமும் பிரியாமல் இருக்கும் பகவானை சொல்லும் என்றால் அது மட்டுமே போதுமே? இங்கே **நாராயண** பதம் மிகைதானே (superfluous) என்று ஒரு கேள்வி.

எம்பெருமானுக்கே நித்ய கைங்கர்யம் செய்ய மனம் ஆசைப்படுகிறது. அது மகிழ்ச்சியால் விளைவது. அந்த மகிழ்ச்சி என்பது பகவத் அநுபவம் என்பர்.

இந்த பகவத் அநுபவம், எம்பெருமானின் ஸ்வரூப, ரூப, குண, விபூதிகளைக் கொண்டு அடையப்படும் பலன். எம்பெருமானுக்கும் நமக்கும் உள்ள நித்யமான உறவை அறிந்து ஆனந்திப்பதானல் விளைவது. அந்த ஸம்பந்த்தை வலியுறுத்த நாராயண பதம்.

ஸ்ரீவைகுண்டத்தில் எழுந்தருளியிருக்கும் எம்பெருமான் பரமபதநாதன். அவனுடைய திருமேனி உகந்தது. நித்யர்களும் முக்தர்களும் சிறந்த கைங்கர்யங்களை அங்கே செய்கின்றனர். அந்த கைங்கர்யத்திற்கு இலக்கான திருமேனியை (targeted towards the service of) இங்கு நாராயண ஶப்தம் சொல்கிறது.

## 12.8 ஸ்ரீமதே நாராயண - ஸ்வாமி தேசிகனின் விளக்கம்

> **ஸ்ரீமதே என்கிறது "கோலத்ததிருமாமகளோடு உன்னை" இத்யாதிகளிற்படியே ஸர்வ ஸேஷி ஸர்வாவஸ்தையிலும் ஸபத்னீகனாய்க் கொண்டு கைங்கர்ய ப்ரதிஸம்பந்தியாயிருக்கிற** (ஏற்றுக் கொள்பவன்) **நிலையைக் காட்டுகிறது.**
>
> **இங்குற்ற நாரயண ஶப்தத்தாலே ப்ராப்யனான** (அடையும் பலன்) **ஸ்ரீரிய:பதியினுடைய ஸ்வாமித்வமும் ஸர்வ ப்ராகர நிரதிஶய போக்யத்வமும்** (எல்லா வகையிலும் இனியவன்) **ப்ரதாநமாக அநுஸந்தேயம்.**
>
> ஸ்வாமி தேசிகன், ஸ்ரீ ரஹஸ்யத்ரய சுளகம்

பிராட்டி எம்பெருமானை விட்டு அகலாமள் நிற்கிறாள். ஆகவே ப்ரபத்தி செய்யும்போது இருவரிடமும் செய்ய வேண்டும். நித்யமான கைங்கர்யத்தையும் இருவருக்குமே செய்ய வேண்டும்.

**நாராயண** பதம் எல்லா திருக்கல்யாண குணங்களை காட்டினாலும், இங்கே பலனைச் சொல்லும்போது இரண்டு குணங்களை மிகைப்படுத்தி காண்பிக்கிறது.

1. **ஸர்வ ஸ்வாமித்வம்** - எல்லோருக்கும் தலைவன் அவன் ஒருவனே.
2. **பரம போக்யத்வம்** - அவனைவிட போக்யமான, அனுபவிக்க அனுபவிக்க தெவிட்டாத வஸ்து வேறு ஒன்று இல்லை என்கிற தத்துவம்.

## 12.9 ஸ்ரீமதே நாராயண - பிள்ளைலோகாசாரியார் விளக்கம்

> **இதில் ப்ரதம பதம் (ஸ்ரீமதே) கைங்கர்ய ப்ரதி ஸம்பந்தி மிதுனம் என்னுமிடத்தைச் சொல்லுகிறது. ஶேஷத்வ ப்ரதிஸம்பந்தி மிதுனமானால் கைங்கர்ய ப்ரதிஸம்பந்தியும் மிதுனமாயிருப்பது.**
>
> **இரண்டாம் பதம் (நாரயண) கைங்கர்யவர்த்தமாக அநுபாவ்யமாய் இருந்துள்ள குண விக்ரஹவிபூதி யோகத்தைச் சொல்லுகிறது. கீழ் உபாய பரிக்ரஹத்துக்கு ஏகாந்தமாகச் சொன்ன குணங்களும் இங்கே ப்ராப்யத்வேந அநுஸந்தேயங்கள்.**
>
> **கீழில், மற்றை குணங்களைக் காட்டில் ஸௌலப்யம் ப்ரதாநமாய் இருக்கும். இங்கு ஸ்வாமித்வம் ப்ரதாநமாய் இருக்கும்.**
>
> பிள்ளைலோகாசாரியார், ச்ரிய:பதிப்படி

பகவான், பிராட்டி இருவருக்குமே எல்லோரும் ஶேஷர்கள், அடிமைப் பட்டவர்கள் என்றால் நாம் செய்யும் கைங்கர்யத்தை இருவருமே ஏற்கின்றனர்.

இதில் நாராயண என்பது கைங்கர்யத்தை ஏற்பவனின் திருக்கல்யாண குணக் கடலைச் சொன்னாலும், இங்கே அவன் ஸர்வ ஸ்வாமி என்பதே முக்யமான கருத்து.

## 12.10 நம்மாழ்வார் ஸாதித்த த்வயத்தின் அர்த்தம் - முன் வரி

நம்மாழ்வார் த்வயத்திற்கு அர்த்தம் ஸாதிக்கையில், பூர்வ வாக்கியத்திற்கு **"அகலகில்லேன்"** பாசுரத்தில் ஸாதித்தார்.

த்வயம், ஶரணாகதியின் பெருமையை காட்டுகிறது. ஆழ்வாரின் பாசுரம் அற்புதமாக, பதம் பதமாக த்வய வாக்யத்துடன் பொருந்துகிறது என்று எடுத்து காட்டுவர் பூர்வாசாரியர்கள்

**அகல கில்லேன் இறையும் என்று * அலர்மேல் மங்கை உறை மார்பா *
நிகரில் புகழாய்! உலகமூன்று உடையாய் * என்னை ஆள்வானே *
நிகரில் அமரர் முனிக்கணங்கள் விரும்பும் * திருவேங்கடத்தானே *
புகல் ஒன்றில்லா அடியேன் * உன் அடிக்கீழ் அமர்ந்து புகுந்தேனே**
நம்மாழ்வார் திருவாய்மொழி 6-10-10

**ஶ்ரீ** - அலர்மேல் மங்கை
**மத்** - *அகலகில்லேன் இறையும்*
**நாரயண** - நிகரில் புகழாய் (வாத்ஸல்யம்), உலகம் மூன்று உடையாய் (ஸ்வாமித்வம்), என்னை ஆள்வானே (ஸௌஸீல்யம்), திருவேங்கடத்தானே (ஸௌலப்யம்), நிகரில் அமரர் முனிக்கணங்கள் விரும்பும் (ஞானம், சக்தி)
**சரணௌ** - உன் அடிக்கீழ்
**ஶரணம்** - புகுந்தேன்
**ப்ரபத்யே** - புகல் ஒன்று இல்லா, அமர்ந்து புகுந்தேனே

**தீண்டிய வினைகள் அனைத்தும் தீர்ந்திட *
வேண்டினேன் வேங்கடவா உன் திருவடி /
நீண்டிய நெறிகள் முற்றும் நசித்திட *
கண்டிலேன் நீ கொண்டபின் மறுபிறவி**

என்று இன்னொரு இடத்தில் சொன்னோம். அநாதி காலமாய் என் ஆத்மாவைப் பற்றி வாட்டுகின்ற பாபக் குவியல்களை எல்லாம் ஒரு நொடியில் பொசுக்கிட வேண்டும் என்பதால் திருவேங்கடமுடையானே! உன் திருவடிகளையே எனக்கு உபாயமாக தந்தருள்வாய் என வேண்டினேன்.

அது மட்டும் இன்றி உன் திருவடிகளையே பற்றுகிற ப்ரபத்தி யோகம் ஒன்றைத் தவிர, மற்ற கர்ம ஞான, பக்தி யோகங்களை பற்றிய சிந்தனை கூட, என் மனத்தில் தோன்றாதவாறு, மாஹாவிச்வாசத்தில் நிலை நிறுத்தி என்னை நீ அடைக்கலமாய் கொண்ட பின் எனக்கு ஏது மறு பிறவி?

இதில் உள்ள 4 வரிகளும் சரம ஸ்லோகத்திற்கு பொருளாக அமைகிறது.

**நீண்டிய நெறிகள் முற்றும் நசித்திட** = ஸர்வ தர்மாந் பரித்யஜ்ய
**வேண்டினேன் வேங்கடவா உன் திருவடி** = மாம் ஏகம் ஸரண வ்ரஜா
**தீண்டிய வினைகள் அனத்தும் தீர்ந்திட** = அஹம் த்வா ஸர்வ பாபேப்யோ
**கண்டிலேன் நீ கொண்டபின் மறுபிறவி** = மோக்ஷயிஷ்யாமி மாசுச:

என்ற முறையில் சொல்லப்பட்டுள்ளது.

## 12.11 நம்மாழ்வார் ஸாதித்த த்வயத்தின் அர்த்தம் - பின் வரி

நம்மாழ்வார் ஸாதித்த அகல்கில்லேன் என்ற பாசுரத்தில், த்வயத்தின் பின் வரியும் இதில் சொல்லப்பட்டுள்ளது என்பர் சிலர்.

**அமர்ந்து புகுந்தேனே** என்பதுதான் புருஷார்த்தம், ஶரணாகதியின் பலன் என்பது அந்த மிதுனத்திற்கு செய்யும் கைங்கர்யமே. வேறு ஒரு பலனையும் கேட்கவில்லை. இந்த அர்த்தம் வெளிப்படையாக ஆழ்வார் சொல்லவில்லை. ஆனால் புதைந்து இருப்பதாய் முன்னோர் கூறுகின்றனர்.

த்வயத்தின் உத்தர வாக்கியத்திற்கு மூன்றாம் திருவாய் மொழியில் மூன்றாம் பத்தில் **ஒழிவில் காலமெல்லாம்** என்று முதல் பாசுரத்திலேயே அர்த்தம் ஸாதிக்கிறார் என்றும் சொல்லுவர் சிலர்.

**ஒழிவில் காலமெல்லாம் * உடனாய் மன்னி ***
**வழுவிலா * அடிமை செய்ய வேண்டும் நாம் ***

**தெழிகுரல் அருவித் * திருவேங்கடத்து ***
**எழில்கொள் சோதி * எந்தை தந்தை தந்தைக்கே**
நம்மாழ்வார், திருவாய்மொழி 3-3-1

திருவாய்மொழியில் பகவானும், தாயாரும் கலந்த அந்த மிதுனத்திற்கே கைங்கர்யம் செய்யவேண்டியதை காட்டுகிறார்.
**ஸர்வ கால** என்பதை **ஒழிவில் காலமெல்லாம்** (Time)
**ஸர்வ தேச** என்பதை **உடனாய்** (Space)
**ஸர்வாவஸ்தைகள்** என்னும் எல்லா நிலைகளிலும் என்பதை **மன்னி** (and matter) என்ற பதத்தாலும் ஸாதித்தார்.

**ஸர்வேஶ்வரன் தாளிணைக் கீழ் ஒழிவில் காலமெல்லாம் உடனாய் மன்னி வழுவிலா அடிமை செய்ய வேண்டும் நாம் என்ற மனோ ரதத்தின் படியே ஸர்வதேஶ, ஸர்வகால, ஸர்வாவஸ்தோசித - ஸர்வவித கைங்கர்யங்களையும் பெற்று வாழ்வார்கள்"**
**ஸ்வாமி தேசிகன், ஸ்ரீமத் ரஹஸ்யத்ரய ஸாரம், நிகமநாதிகாரம்**

ஸ்வாமி தேசிகன், ஸ்ரீமத் ரஹஸ்யத்ரய ஸாரத்தை முடிக்கும்போது, நிகமநாதிகாரத்தில், நிகமந (கடைசி) வாக்கியத்திற்கு முன் சொன்னது

## 12.12 நம்மாழ்வாரும் எம்பெருமானாரும்

நம்மாழ்வார் த்வயத்தின் அர்த்தம் ஸாதிக்கையிலே பூர்வ கண்டத்தை பின்னால் சொல்லி (6,ம் பத்து 10ம் திருவாய்மொழி), உத்தர வாக்கியத்திற்கு முதலில் சொன்னார் (3ம் பத்து 3,ம் திருவாய்மொழி). கிரமம் மாறி இருக்கிறதே என்று கேட்கலாம்.

இது ஏன் என்றால் உபதேசம் செய்யும்போது (explaining the fundamentals) முதலில் பலனை சொல்லி சேதனர்களை வசீகரிக்க வேண்டும். (to attract the auidence).



prapatti.com

எம்பெருமானார் கத்யத்தில், கிரமாக செய்திருக்கிறார். ஏனென்றால் அவர் செய்யும் முறையைக் (demonstrating the procedure) காண்பிக்கிறார். அதனால்தான், இங்கு "உகத்தின் சுகத்திலே" மூன்றாம் பாசுரத்தில் வள்ளல் வழியில் என்றோம்.

## 12.13 ஸ்வாமி ஆளவந்தார் காட்டும் ஶரணாகதி

**அபராத$_4$ ஸஹஸ்ர ப$_4$ாஜநம்**
**பதிதம் பீ$_4$ம ப$_4$வார்ணவோதரே |**
**அக$_3$திம் ஶரணாக$_3$தம் ஹரே**
**க்ருபயா கேவலமாத்மஸாத் குரு ||**

ஆளவந்தார் ஸ்தோத்ர ரத்னம் 48

**(ஹரே!)** இன்னல்களை ஒழிக்கும் எம்பெருமானே,
**(அபராத$_4$ ஸஹஸ்ர ப$_4$ாஜநம்)** நான் எண்ணில்லாத குற்றங்களை செய்தவன்.
**(பீ$_4$ம ப$_4$வ அர்ணவ உதரே பதிதம்)** கோரமான பிறவிக் கடலில் விழுந்தவன்.
**(அக$_3$திம்** உன்னைத்தவிர வேறு கதி இல்லாது
**(ஶரணாக$_3$தம்)** அடைக்கலம் அடைந்தேன்.
**(கேவலம் க்ருபயா)** கேவலம், உன் அருள் ஒன்றினால் மட்டுமே
**ஆத்மஸாத் குரு)** என்னை உன்னுடையவனாக ஆக்கிக் கொள்வாய் என்றார்.

மேலும், ஆளவந்தார் ஸ்தோத்ர ரத்னத்தில் கூறுகிறார்.

**கதா$_3$ புநஶ் ஶங்க$_2$ ரத$_2$ாங்க கல்பக**
**த்$_4$வஜாரவிந்த$_3$ாங்குஶ வஜ்ரலாஞ்ச$_2$நம் |**
**த்ரிவிக்ரம! த்வத்சரணாம் பு$_3$ஜத்$_3$வயம்**
**மதீ$_3$ய மூர்த்த$_4$ா நமலங்கரிஷ்யதி ||**

ஆளவந்தார் ஸ்தோத்ர ரத்னம் 31

**(த்ரிவிக்ரம)** திரிவிக்கிரமாவதாரம் செய்த எம்பெருமானே, **(ஶங்க$_2$ ரத$_2$ாங்க கல்பக த்$_4$வஜ அரவிந்த$_3$ அங்குஶ வஜ்ர லாஞ்ச$_2$நம்)** சங்கு, சக்கரம், கல்பக



prapatti.dot.com

வ்ருக்ஷம், கொடி, தாமரை, அங்குஶம், வஜ்ராயுதம் இவைகளை அடையாளமாக உடையவனே.

**(த்வத் சரண அம்பு₃ஜ த்₃வயம்)** உன் தாமரை போன்ற இரண்டு திருவடிகள் (மதீ₃ய மூர்த்த₄நம்) என் தலையை **(கதா₃ புந: அலங்கரிஷ்யதி)** எப்போதுதான் அலங்கரிக்கப் போகிறது? என ஏங்கினார்.

## 12.14 கத்யத்தில் த்வய மந்திரமும் ஶரணாகதியும்

பகவத் ராமாநுஜர் திருவரங்க பெருமாளிடம் கத்யம் விண்ணப்பம் செய்யுங்கால், த்வய மந்திரத்தின் ஸாரத்தை பொழிந்து உள்ளார். உதாரணத்திற்கு சில பதங்களை காண்போம்.

**ஸ்ரீ** - ஸ்ரீயம், தேவீம்
**மத்** - நித்ய அநபாயிநீ
**நாராயண** - அபார கருண்ய வாத்ஸல்ய ஜலதே, கல்யாண குணகணாம்
**சரணௌ** - த்வத் பாதாரவிந்தயுகளம்
**ஶரணம்** - மத் கைங்கர்ய ப்ராப்தி உபாயதயா, அகிஞ்சன அநந்யகதி ஶரண்ய
**ப்ரபத்** - ஶரணம் அஹம் ப்ரபத்யே
**யே** - அகிஞ்சன அநந்யகதி ஶரண்ய
**ஸ்ரீமதே நாராயண** - அகில ஜகத் ஸ்வாமிந், அஸ்மத் ஸ்வாமிந்
**ஆய** - மத் தாஸ்யைக ப்ரிய, நித்ய கிங்கரோ பவ
**நம:** - நித்ய விஶுததம, அநந்யப்ரயோஜன

## 12.15 மாசில் ஒட்டாது உயிராய் தரிக்கும்

பகவான் ஸர்வ வஸ்துக்களிலும் வியாபித்து இருந்தாலும், அந்த சேதன அசேதன வஸ்துக்களுக்கு உடைய குறைகள் இவனிடம் ஒட்டாது. நம்முடைய



prapatti dot com

வைஷ்ணவ ஸித்தாந்தத்தில் "பிராதன பிரதி தந்த்ரம்" என்று சொல்லக் கூடிய, ஸரீர ஆத்ம பாவத்தை நினைவு கூற வேண்டும்.

**அவிகாராய ஶுத்₃த₄ாய நித்யாய பரமாத்மநே |**
**ஸதை₃கரூபரூபாய விஷ்ணவே ஸர்வ ஜிஷ்ணவே ||**
ஸ்ரீவிஷ்ணு ஸஹஸ்ரநாமம்

என்று விஷ்ணு ஸஹஸ்ரநாமத்தில்

- **அவிகாராய** - அசேதனங்கள் விகாரம் அடையும். இவன் **அவிகாரன்.** மாற்றம் காணாதவன்.
- **ஶுத்₃த₄ாய** - பத்தர்களுக்கு ஸத்வ, தாமஸ, ரஜோ குணங்களால் அசுத்தி உண்டு. இவன் ஸத்வ குணமே நிறைந்ததால் **ஶுத்தன்.**
- **நித்யாய** - முக்தர்கள் ஒரு நாள் பூமியிலிருந்து வைகுந்தம் சேர்ந்தவர்கள். இவன் **நித்யனாய்** வைகுந்தத்திலேயே இருப்பவன்.
- **பரமாத்மநே** - நித்யர்கள் நிலையாக மோக்ஷத்தில் எப்போதும் இருந்தாலும் அவர்கள் ஜீவர்களே. இவன் தனக்கு ஒப்பார், மிக்கார் இல்லாமல் விளங்கும் **பரமாத்மா.**

எப்போதும் திவ்யமங்கள விக்ரஹத்தை உடையவனும் ஸர்வ வியாபியாய் எல்லாவற்றையும் ஜயிப்பவனாகவும் உள்ள பகவானுக்கு நமஸ்காரம்

**க்லேஶ கர்மாத்₃ய ஶேஷ தோ₃ஷா ஸம்ஸ்ப்ருஷ்டம்**
பகவத் ராமானுஜர், ஸ்ரீரங்ககத்யம்

என்று பகவத் ராமானுஜரும், ஸ்ரீரங்ககத்யத்தில் ஸாதிக்கிறார். எம்பெருமான் சேதனா சேதனங்களை தன் உடலாய் கொண்டு அவற்றில் மறைந்து நின்றாலும் அந்த சேதனா சேதனங்களின் குறை, கரை, அழுக்கு இவனை ஒட்டாது என்றார் (teflon மாதிரி).

சர்க்கரை பொங்கல் கையில் வாங்கி சாப்பிடுகிறோம். சாப்பிட்டவுடன் கையை சோப் இல்லை சீயக்காய் பொடி போட்டு அலம்புகிறோம், நெய் ஒட்டாமல்

இருக்க. வாயை சோப் போட்டு அலம்புகிறோமா? என்ற உதாரணத்திலிருந்து புரிந்து கொள்ளலாம்.

**நாகாரணாத் காரணாத்3 வா காரணா காரணாந்ந ச**
**ஶரீர க்3ரஹணம் வ்யாபித் த4ர்மத்ராணாய கேவலம்**
பராசர மஹரிஷி, ஸ்ரீவிஷ்ணுபுராணம் (5-1-50)

என்று ஸ்ரீவிஷ்ணுபுராணம் கூறுகிறது. (ஶரீர க்3ரஹணம் வ்யாபித்) பகவான் எங்கும் வியாபித்து இருக்கிறான். (ந அகாரணாத் காரணாத்3 வா காரணா காரணாந்ந ச) அவன் உடம்புடன் பிறப்பது சுகத்தினாலோ, துக்கத்தினாலோ, இல்லை சுக துக்க சேர்க்கையினாலோ கிடையாது. (த4ர்மத்ராணாய கேவலம்) தர்மத்தை நிலைநாட்டவே அவன் பிறப்பு ஏற்படுகிறது

**நெறியாய் அடையும் குறியாய் * அடியுரை கூற்றில் ஆதாரமாய் ***
**நிலையாய் உட்புகுந்தாய் அமலானாய் * அலகிலா அருங்குணத்தாய்**
அடியேன், எட்டின் கட்டு 8

என்று எம்பெருமான் (நெறியாய் அடையும் குறியாய்) உபாயமாய், பலனாய், (அடியுரை கூற்றில் ஆதாரமாய்) வேத வாக்கில் எல்லாப் பொருட்களையும் தாங்குபவனாய், (நிலையாய் உட் புகுந்தாய்) எப்போது இருக்கும்படியாக சேதனனின் உடலில் புகுந்தான். அப்படி புகுந்தாலும், அவன் (அமலனாய் அலகிலா அருங்குணத்தாய்) தோஷம் அற்றவனாய், எண்ணில்லாத திருக்கல்யாண குணங்களை உடையவன்.

சேதனனின் தோஷங்கள் இவனை ஒட்டாது. இவன் எங்கும் எப்போதும் கல்யாண குணங்களே நிறைந்தவன் என்று சொன்னோம்.

## 12.16 கோதில கோவிந்தன்

ஏன் நம்மாழ்வார் திருவாய்மொழியில் அர்ச்யாவதாரத்தில் ஶரணாகதி செய்தார்? அதுவும் மீதி நூற்று ஏழு திவ்ய தேஶங்கள் இருக்க, ஏன் திருவேங்கடமுடையானிடம் த்வயத்தை ஸாதித்தார்?

வேதம் அனைத்துக்கும் வித்தாம் ஆண்டாள் இதை நுணுக்கமாக (intiracte, subtle) அழகாக காட்டுகிறாள்.

திருப்பாவை ஆரம்பத்தில், **"நாராயணனே பறை தருவான்"** என்றாள், பர வாசுதேவனை நோக்கி. பகவானிடமிருந்து பதில் ஒன்றும் இல்லை. **"பாற்கடலில் பரமன்", "ஓங்கி உலகளந்த உத்தமன்", "ஆழி மழைக் கண்ணா"** என்று வியூஹ, விபவ அவதாரங்களை சொன்னாள். அப்போதும் பகவானிடமிருந்து பதில் இல்லை.

கடைசியில், புரிந்து கொண்டு, **உன்தன்னை சிறுபேர் அழைத்தனம் சீறியருளாதே"** என்று சொல்லி, அர்ச்யாவதாரத்திலே பரம ஸௌலப்யமாய் இருக்கும், எல்லோருக்கும் எளிமையாய் இருக்கும் கோவிந்தனைக் கூப்பிடுகிறாள் மூன்று தடவை,

> **கூடாரை வெல்லும் சீர் கோவிந்தா.**
> **குறை ஒன்றும் இல்லாத கோவிந்தா**
> **இற்றைப் பறை கொள்வான் இன்று காண் கோவிந்தா**
> ஆண்டாள், திருப்பாவை 27

அதனால்தான் என்னவோ, கோவிந்தா!, கோவிந்தா!, கோவிந்தா! என்று மூன்று தடவை, பக்தர்கள் எல்லோரும் அந்த திருவேங்கடமுடையானை அழைக்கின்றனர்.

திருமந்திரத்திற்கு ஒரு கோவிந்தா, த்வயதிற்கு ஒரு கோவிந்தா, சரம ஸ்லோகத்திற்கு ஒரு கோவிந்தா என்று வைத்துக் கொள்ளலாம்.

> **பவித்ராணாம் ஹி கோ₃விந்த₃: பவித்ரம் பரம் உச்யதே**
> **புண்யா நாமபி புண்யோஸௌ மங்க₃ளாநாஞ்ச மங்க₃ளம்**
> **வியாஸர், பாரதம்**

மஹாபாரத்தில் **(கோ₃விந்த₃: பவித்ராணாம்)** கோவிந்தனையே பரிசுத்தமானவன். அது மட்டுமல்ல, **(பவித்ரம் பரம் உச்யதே)** பரிசுத்தமான பொருள்களுக்குள் மிகவும் பரிசுத்தமானவன்.

**(புண்யாநாம் அபி புண்யோஸௌ)** புண்ணியங்களுக்குள் மிக புண்ணியமானவன் இவனே (superlative degree). **(மங்க₃ளாநாஞ்ச மங்க₃ளம்)** மங்களங்களுக்குள் மிக மங்களமானவன் இவனே என்று கோவிந்த நாமாவையே புகழ்கிறது, மீதி ஆயிரக்கணக்கான நாமாக்கள் இருக்கும்போது.

பகவானுக்கு ஆயிரக்கணக்கான நாமங்கள் இருந்தாலும், இந்த கோவிந்த நாமாதான் ஞானமில்லாத, சக்தியில்லாத, சுத்தம் இல்லாத சேதனர்களாகிய நமக்கு எளிமையாய் இருக்கிறது. அதுவே போக்யமாய் இருக்கிறது. அதுவே பரம ப்ராப்யமாய் இருக்கிறது.

## 12.17 தட்டாது அளிக்கும் கோவிந்தன்

பலனைத் தருபவன் கோவிந்தன், அதுவும் சிறப்பாக கலி யுகத்திலே

> **அச்யுதாநந்த கே₃ாவிந்த₃ நாமோச்சாரணபே₄ஷஜாத் ।**
> **நஶ்யந்தி ஸகலா ரோக₃ாஸ்ஸத்யம் ஸத்யம் வத₃ாம்யஹம் ।।**
> வியாஸர், விஷ்ணு ஸஹஸ்ரநாம த்வாதஶநாமபஞ்ஜரஸ்தோத்ரம் 7

வியாஸர் விஷ்ணு ஸஹஸ்ரநாம த்வாதஶநாமபஞ்ஜர ஸ்தோத்ரத்தில் சொல்லுகிறார், **(அச்யுதா அநந்த கே₃ாவிந்த₃ நாம் உச்சாரண பே₄ஷஜாத்)** அச்யுத, அனந்த, கோவிந்த என்ற நாமாக்களை உச்சரிப்பதான மருந்தின் காரணமாக **(ஸகலா ரோக₃ா நஶ்யந்தி)** எல்லாவித வியாதிகளும் அழியும். ஸந்தேஹம் கிடையாது. நான் **(ஸத்யம் ஸத்யம்)** ஸத்யமாக சொல்கிறேன்.

> **அதஶீ புஷ்ப ஸங்காஶம் பீதவா வாஸ ஸமச்யுதம் ।**
> **யே நமஸ்யந்தி கோ₃விந்த₃ம் ந தேஷாம் வித்₃யதே ப₄யம் ।।**
> வியாஸர், பாரதம் ஸாந் பர்

பாரதத்தில் ஸாந்தி பர்வத்தில் வருகிற ஸ்லோகம் இது அடியவர்களை நழுவ விடாதவன். காயம்பூ போன்றவன். பீதாம்பரத்தை உடையவனான கோவிந்தனை எவர்கள் நமஸ்கரிக்கிறார்களோ அவர்களுக்கு பயமில்லை.

கோவிந்த நாமம் பக்தர்கள் வேண்டுவதை தரக் கூடியது த்ரௌபதி கதறும்போது அவனுடைய நாமம் பலனைத் தந்து விட்டது அவன் வருவதற்கு முன்பே

இதைத்தான் கிருஷ்ணனும்,

**கே₃ாவிந்தே₃தி யத₃ாக்ரந்த₃த் க்ருஷ்ணா மாம் தூ₃ரவாஸிநம்**
**ருணம் ப்ர வ்ருத்₃த₄ம் ஏவ மே ஹ்ருதயாந் நாபஸர்ப்பதி**

வியாஸர், பாரதம் உத்யோ பர் 47-22

என்று மஹாபாரதத்தில் கிருஷ்ணன் சொல்கிறான். "திரௌபதி, அதிக துரத்திலிருந்து **"கோவிந்தா"** என்று என்னை கூக்குரலிட்டு கதறினாள். அது வட்டியினால் பெரிதாய் வளர்ந்த கடனைப்போல் என்னுடைய இதயத்தை விட்டு அகலவில்லை."

**எழுவார் விடை கொள்வார் * ஈன்துழாயானை ***
**வழுவா வகைநினைந்து வைகல் தொழுவார் ***
**வினைச்சுடரை நந்துவிக்கும் * வேங்கடமே * வானோர்**
**மனச்சுடரைத் தூண்டும் மலை**

பொய்கை ஆழ்வார், முதல் திருவந்தாதி (26)

பொய்கை ஆழ்வார், முதல் திருவந்தாதியில் திருவேங்கட மலையை புகழ்கிறார்.

**(எழுவார்)** முதல் வகையை சேர்ந்தவர்கள் பெருமாளிடம் ஐச்வர்யம் வேண்டி கிடைத்தவுடன் எழுந்து போய் விடுவார்கள்.



prapatti dot com

**(விடை கொள்வார்)** இரண்டாமவர் கைவல்யம் வேண்டி அது கிடைத்தவுடன் பகவானிடம் விடை பெற்று கொள்வார்கள். அதற்கு மேல் யார் பகவானை நினைக்கிறார்கள்?

**(ஈன்துழாயானை வழுவா வகைநினைந்து வைகல் தொழுவார்)** மூன்றாமவரோ எப்போதும் துளஸீ மாலையை அணிந்திருக்கும் எம்பெருமானையே மனதினால் எப்பொழுதும், கொஞ்சம் கூட பிரியாமல் அனுபவிப்பர்.

இந்த எல்லா வகையானவர்களுக்கும் பாபங்கள் நிறைய உள்ளன. **(வினைச்சுடரை நந்துவிக்கும்)** மோக்ஷ பலனுக்கு தடையான பாபங்கள் என்னும் தீயை பொசுக்கும் திருவேங்கடமே, **(வானோர் மனச்சுடரைத் தூண்டும் மலை)** நித்யஸூரிகளின் உள்ளம் என்னும் தீபத்தை தூண்டி எரியவிடும் மலை" என்றார்.

அதாவது எந்த பலனை வேண்டினாலும் சேதனர்கள் வேண்டுவது திருவேங்கடமுடையானே. இருந்தாலும் மோக்ஷதிற்கான பாவக் குவியல்களை விலக்க, அநாதியான கர்மாக்கள் எல்லாம் ஒழிய ஸஞ்சிதம், ப்ராரப்தம் எல்லாம் பொசுங்க வேண்டும் என்றால் அந்த திருவேங்கடமுடையனையே அடைக்கலாமய் அடைய வேண்டும் என்கிறார்.

அதாவது ப்ரபத்திக்கு உகந்த பெருமான் ஸ்ரீநிவாஸன். இதை கோடிட்டு (cursory look) காட்டினர் பொய்கையார். வெளிப்படையாய் ஸாதித்தார் (explicit declaration) நம்மாழ்வார். ஆசாரியர்கள் அனுஷ்டான க்ரந்தங்களில் அநுபவித்தார்கள்.

மேலும் ஆழ்வார் சொல்கிறார், வைகுந்தத்தில் இருக்கும் நித்யஸூரிகளின் ஆசையை தூண்டிவிடும் மலை என்றார். வைகுந்தத்தில் இருப்பவருக்கு என்ன ஆசை?

> **மாண்டு பிறப்பு ஒழிந்து வைகுண்டம் புக்கவரும்**
> **மீண்டு தொழ காதலிக்கும் வேங்கடமே**

என்று ஒரு கவி சொன்னது, ஸ்ரீவைகுந்தம் அடைந்தவரும் கைங்கர்யத்திற்கு ஆசைப்படுவது இந்த திருவேங்கடமுடையானிடம் தான். அதனால்தான் நம்மாழ்வார் ஶரணாகதி இங்கே செய்தார்

## 12.18 கோதில அளிப்பது கோவிந்தன்

அந்த கோவிந்தன் மஹாஸௌலப்யன். அடியவர்கள் எங்கேயாவது தம்முடைய பகவத் பாகவத கைங்கர்யத்தில் தவறு வந்து விடுமோ என பயப்பட வேண்டாம்.

**தீர்ந்த அடியவர் தம்மைத் * திருத்திப் பணி கொள்ளவல்ல *
ஆர்ந்த புகழ் அச்சுதனை * அமரர் பிரானை எம்மானை ***
நம்மாழ்வார், திருவாய்மொழி 3-5-11

**(தீர்ந்த அடியவர் தம்மைத் )** எம்பெருமானே உபாயம், அவனே கதி என்று உறுதியுடன் கிடக்கும் அடியவர் **(திருத்திப் பணி கொள்ளவல்ல)** அவர்கள் பணியில் தவறு ஏற்படினும் அதை திருத்தி, உகந்ததாக ஏற்றுக் கொள்வான். **(ஆர்ந்த புகழ் அச்சுதனை)** ஆற்றல் மிகுந்த, புகழுடைய எப்பொழுதும் நழுவ விடாதவன் அச்சுதன் என்றார்.

**மணிமானம் குறைவில்லா * மலர்மாதர் உறைமார்பன் *
அணிமானத் தடவரைத் தோள் * அடல் ஆழித் தடக்கையன் *
பணிமானம் பிழையாமே * அடியேனைப் பணி கொண்ட *
மணிமாயன் கவராத * மட நெஞ்சால் குறை இலமே.**
நம்மாழ்வார், திருவாய்மொழி 4-8-2

என்றார் நம்மாழ்வார். **(மணிமானம் குறைவில்லா)** மணி போல் ஒளிமிகுந்து, அழகிலே குறையில்லாத **(மலர்மாதர் உறைமார்பன்)** பெரிய பிராட்டியார் நித்ய வாஸம் செய்யும் திருமார்பை உடையவன் எம்பெருமான்.

**(அணிமானத் தடவரைத் தோள்)** ஆபரணங்கள் எல்லாம் அலங்கரிக்கத் தக்க மலை போல் விசாலமான தோள்களை உடைய அவன் **(அடல் ஆழித் தடக்கையன்)** தன் கையில் ஆற்றல் மிகுந்த சக்கரத்தை கொண்டுள்ளான்.

**(அடியேனைப் பணி கொண்ட)** அடியேனைப் பணி கொண்ட இந்த சரீரத்தை எம்பெருமானுக்கே உரிமையாக இருக்க **(பணிமானம் பிழையாமே)** அவனுக்கும் செய்யும் கைங்கர்யத்தின் அளவில், நீட்சியில் தவறு நேராதபடி அவன் என்னை ஆட்கொண்டுள்ளான்.

இங்கே வரலாற்று கதை ஒன்று ரஸிக்கத் தக்கது. எம்பெருமானார் கோஷ்டியிலே ததீயாரதனையின்போது கிடாம்பி ஆச்சான் தீர்த்தம் ஸாதிக்கும்போது ஒரு ஓரமாக சாய்ந்து பரிமாறினாராம்.

அதைக்கண்ட எம்பெருமானார், வேகமாக அங்கே வந்து ஆச்சான் முதுகிலே ஒரு தட்டு தட்டி, பாகவதர்களுக்கு பரிமாறும்போது நேரே நின்று பரிமாறும்படி ஸாதித்தார்.

ஆச்சானும் உடனே "பணி மானம் பிழையாமே அடியேன் பணி கொண்டது" என்று உடையவர் திருவடியில் விழுந்து வணங்கி மகிந்தார் என்று வரலாறு. ஆசார்ய ஸ்பர்ஶம் கிடைத்ததே என்று உகந்தார்.

## 12.19 கழிந்த காலமும்

பகவானுடைய அருள் இல்லாமல், அவனைப் பற்றி ஸ்மரிக்காமல், வீணாகப் போன காலங்கள் எல்லாம் ஒழியட்டும். இனிமேலாவது நல்ல முறையில் இருப்போம்.

> **பழுதே பலபகலும் போயின என்று * அஞ்சி**
> **அழுதேன் அரவணை மேற்கண்டு - தொழுதேன்**
> பொய்கை ஆழ்வார், முதல் திருவந்தாதி 16

பொய்கையாழ்வார் காட்டுகிறார். “ஐயோ!, பகவானின் திருவடிகளை ஸேவிக்காமல் எத்தனை நாள் இந்த அரிய பேற்றை இழந்து நின்றேன்,” என அழுகிறார். “எத்தனை நாளா? இது இந்த பிறவி மட்டுமா? எத்தனை கோடானு கோடி பிறவிகள் வீணாய் கழித்து விட்டேனே” என்கிறார்.

**வாடினேன் வாடி வருந்தினேன் மனத்தால்**
**பெருந்துயர் இடும்பையில் பிறந்து**
**கூடினேன் கூடி இளையவர் தம்மோ(டு)**
**அவர் தரும் கலவியே கருதி ஓடினேன்**
திருமங்கை மன்னன் பெரிய திருமொழி 1-1

திருமங்கை மன்னன் பெரிய திருமொழியில் சொல்கிறார். “இத்தனை நாட்கள் பகவானை நினையாது என் காலங்கள் ஒழிந்தன. ஏன் என்றால் வினைப் பயனால். **(பெருந்துயர் இடும்பையில் பிறந்து)** துன்பத்தையே தரும் இந்த உடம்பில் பிறந்தேன். சரீரத்தையே ஆத்மா என எண்ணி மகிழ்ந்தேன்.

**(இளையவர் தம்மோடு கூடினேன்)** இளமையான பெண்களோடு சேர்ந்தேன். **(கூடி அவர் தரும் கலவியே கருதி ஓடினேன்)** அவர்களிடம் சிற்றின்பமே வேண்டி அந்த வழியிலேயே தொடர்ந்து ஓடினேன்.

இன்று, அவை அல்ப, அஸ்திர சுகங்கள் என்று அறிந்தேன். **(வாடினேன் வாடி மனத்தால் வருந்தினேன்)** கொம்பை பிரிந்த கொடி போலே, நீரைப் பிரிந்த செடி போலே, தளர்ந்து மனவருத்தம் அடைந்தேன்,” என்றார்.

மேலும்,

**ஆவியே! அமுதே! என நினைந்துருகி ***
**அவரவர் பணைமுலை துணையா ***
**பாவியேன் உணராது எத்தனை பகலும் ***
**பழுதுபோய் ஒழிந்தன நாள்கள் ***
திருமங்கை மன்னன் பெரிய திருமொழி 1-2

“என் உயிரே, எனக்கு அமுதம் போன்றவளே, என்று அந்த இளம் பெண்களின் அணைப்பையே பெரும் ரக்ஷகமாக நினைத்து எத்தனை காலங்களை வீணாக்கி விட்டேன்.

நான் பெரும் பாவம் செய்தவன். **“ஆவியே அமுதே அலை கடல் கடைந்த அப்பனே”** என்று எம்பெருமானை நினையாது, அல்பமான ஶப்தாதி விஷயங்களில் ஈடுபட்டேனே” என்கிறார்.

**சேமமே வேண்டித் தீவினை பெருக்கித் ***
**தெரிவை மார் உருவமே மருவி ***
**ஊமனார் கண்ட கனவிலும் பழுதாய்**
**ஒழிந்தன கழிந்த அந் நாள்கள்**

திருமங்கை மன்னன் பெரிய திருமொழி 1-1-3

“**(கழிந்த அந்நாள்கள் ஒழிந்தன)** கீழே எத்தனை நாட்களை எப்படி கழித்து ஒழித்தேன் என்றால் **(சேமமே வேண்டித் தீவினை பெருக்கி)** இன்பத்தையே நாடி, பாபங்களை அதிகமாய் செய்து **(தெரிவை மார் உருவமே மருவி)** பெண்களின் உடலையே அணைத்து நான் அனுபவித்த இன்பம் என்பது **(ஊமனார் கண்ட கனவிலும் பழுதாய்)** ஊமை கண்ட சொப்பனத்தை விட மட்டமானது,” என்றார்.

ஊமை, பிறரிடம் வாய் விட்டு சொல்லி அனுபவிக்க முடியாதபடி இருப்பது அவன் கனவு. அந்த உமையாவது கனவை எண்ணி மனத்தில் அனுபவிக்கலாம். நானோ என் பாவங்களை நெஞ்சத்தால் நினைக்கையிலேயே நடுக்கமாய் இருக்கிறது,” என்றார்.

**தெரிந்துணர்வு ஒன்றின்மையால் * தீவினையேன் * வாளா**
**இருந்தொழிந்தேன் * கீழ்நாள்கள் எல்லாம் / கரந்துருவில்**
**அம்மானை * அந்நான்று பின்தொடர்ந்த * ஆழியங்கை**
**அம்மானை ஏத்தாது * அயர்த்து**

நம்மாழ்வார், பெரிய திருவந்தாதி 82

பெரிய திருவந்தாதியில் நம்மாழ்வார் சொல்கிறார்.

வேறு விஷயங்களில் எனக்கு நிறைய அறிவு இருக்கிறது. ஆனால், **(தெரிந்து உணர்வு ஒன்று இன்மையால்)** பகவத் விஷயத்தில் நல்ல ஞானம் இல்லையே! **(தீவினையேன் கீழ்நாள்கள் எல்லாம் வாளா இருந்து ஒழிந்தேன்)** அதனால் மகா பாபியானேன். கீழ் காலமெல்லாம் வீணாகக் கழித்து போக்கிவிட்டேன்.

**(அந்நான்று கரந்த உருவில் )** அன்றைக்கு மறைந்த உருவத்துடன் வந்த மாரீச மானை **(பின்தொடர்ந்த ஆழி அம்கை அம்மானை)** பின் தொடர்ந்து ஒடிய மோதிரம் அணிந்த அந்த ராமபிரானை **(ஏத்தாது அயர்த்து)** தோத்திரம் செய்யாமல், அறிவு கெட்டு, மயங்கி இருந்தேன். ஐயோ, வாழ்க்கையை வீணாக்கிவிட்டேனே!

இங்கே ஆழ்வார் **தெரிந்து உணர்வு ஒன்று இன்மை** இதை மூன்று படிகளாக (levels) சொல்லாம் என்றார் ஸ்ரீவசன பூஷணத்தில் பிள்ளைலோகாசாரியார்.

1. தேஹ ஆத்ம விவேகம் இல்லாமை
2. ஆத்மா பகவத் சேஷ பூதன் என்ற அறிவு இல்லாமை
3. பகவத் சேஷத்வத்திற்கு எல்லையான பாகவத் சேஷத்வம் இல்லாமை

கைகேயி வரத்தின்படி அரசனுக்குரிய எல்லா ஆபரணங்களையும் துறந்தாலும், ராமன் கையில் கணையாழியுடன் காட்டிற்கு சென்றான். அந்த கணையாழிதான் அனுமன் மூலமாய் பிராட்டி மூலமாய் எம்பெருமான் யார் என்று நமக்கு அறிவித்தது.

பெரியாழ்வாரும் திருமொழியில்

**எத்தனை காலமும் எத்தனை ஊழியும் ***
**இன்றோடு நாளை என்றே ***
**இத்தனைக் காலும் போய்க் கீறிப் பட்டேன் ***
**இனி உன்னைப் போகலொட்டேன் ***

பெரியாழ்வார், பெரியாழ்வார் திருமொழி 5-3-8

"**(எத்தனை காலமும்)** இந்த ஜன்மத்திற்கு முன் எவ்வளவு யுகங்கள்,
**(எத்தனை ஊழியும்)** அதற்கு முன் எத்தனை கல்பங்கள்
**(இன்றோடு நாளை)** இன்று, நாளை என்று
**(இத்தனைக் காலுமும் போய்)** இத்தனை காலமும் வீணாய் போய்விட்டன.
**(இனி உன்னைப் போகலொட்டேன்)** உன்னை ஒரு க்ஷணமும் பிரிய மாட்டேன்
**(கீறிப் பட்டேன்)** உன்னை வழிபட்டேன், இனிமேல்" என கதறினார்.

## 12.20 தகர்க்கும்

தகர்க்கும் என்பது ஒழியும் என்று பொருள் உன் அருள் இல்லாமல், உன்னை நினைக்காமல் கழிந்த காலங்கள் எல்லாம் ஒழியட்டும். துன்பம் என்பது எம்பெருமானை நினயாத காலங்களே.

> **களைவாய் துன்பம் களையாது ஒழிவாய்***
> **களைகண் மற்றிலேன்***
> நம்மாழ்வார் திருவாய்மொழி 5-8-8

**(துன்பம் களைவாய்)** பகவானே! நீ என் துன்பத்தை துடைப்பதோ
**(களையாது ஒழிவாய்)** போக்காமல் விடுவதோ உன் ஸங்கல்பம்.
**(களைகண் மற்றிலேன்)** ஆனால் எனக்கு ரக்ஷகன் உன்னைத் தவிர வேறு யாருமில்லை" என்றார், நம்மாழ்வாரும் திருவாய்மொழியில்.

> **முன் செய்த தீவினையால் * திருவடிக்கீழ் குற்றேவல் ***
> **முன் செய்ய முயலாதே * அகல்வதுவோ விதியினமே**
> நம்மாழ்வார் திருவாய்மொழி 1-4-2

**(முன் செய்த தீவினையால்)** பல ஜன்மங்களாக செய்த பாவங்கள்
**(திருவடிக்கீழ் குற்றேவல்)** எம்பெருமான் திருவடி ஸேவையை
**(முன் செய்ய முயலாதே)** பல ஜன்மங்களாக என்னை தடுத்து விட்டன
**(அகல்வதுவோ)** இன்று எம்பெருமானை தெரிந்து கொண்ட பின்னும் அதை செய்யாமல் விலகிப் போகலாமா? இது சரியா?" என வினவுகிறார்.

எம்பெருமானை அறிந்து அவனிடம் மனதை செலுத்தி, ப்ரபத்தி செய்து விட்டால், கழிந்த காலங்களும் நல்லாதாக அமைகின்றன.

## 12.21 ப்ரபத்தி தகர்க்கும்

எம்பெருமானே உபாயம், உபேயம் எனப் பற்றி, ப்ரபத்தி செய்தவன் ப்ரபன்னன். இன்று அறிவு வந்து நான் ப்ரபத்தி செய்து விட்டேன்.

அதனால் சென்ற காலங்கள் எல்லாம் இன்றோடு முடிந்தன (The past ended today). அந்த பாபங்கள் எல்லாம் பொசுங்கி விட்டதால் அவை எல்லாம் நல்ல நாட்களே. மேலே இடைவெளி இல்லாமல் வருங்கால நாட்களும் (Today is the beginning of the rest of the days) நல்லதாகவே முடியும்.

**சென்ற நாள் செல்லாத * செங்கண்மால் எங்கள்மால் *
என்ற நாள் எந்நாளும் நாளாகும் * என்றும்
இறவாத எந்தை * இணையடிக்கே ஆளாய் *
மறவாது வாழ்த்துக என்வாய்**

பேயாழ்வார், மூன்றாம் திருவந்தாதி 17

“**(செங்கண்மால் எங்கள்மால்)** செந்தாமரைக் கண்ணன், நம்முடைய ரக்ஷகன், பர தத்துவம். நம்மேல் அன்பும், கருணையும் பொழிகிறான்.
**(என்ற நாள்)** இந்த அறிவு ஒரு நாள் பிறந்து விட்டால் போதும். உடனே அவனிடம் ப்ரபத்தி செய்யத் தூண்டும்.
**(என்றும் இறவாத எந்தை இணையடிக்கே ஆளாய்)** அழிவற்ற எம்பெருமானின் திருவடிகளிடம் அடைக்கலம் புகுந்து விட்டால் பின்பு,
**(சென்ற நாள் செல்லாத)** கீழே கழிந்த நாட்களும், மேலே வரும் நாட்களும் **(எந்நாளும் நாளாகும்)** எல்லா நாட்களும் பயனுடைய நாட்களாய் மாறும். **(என்வாய் மறவாது வாழ்த்து)** அவனைப் போற்றி என் மனம் மகிழும்”, என்கிறார்.

அப்படி அடைக்கலம் அடையும் நிகழ் காலம் நல்ல காலம். எம்பெருமான் கருணையால், எதிர் காலம் நல்ல காலமாக மாறும். ஆனால் சென்ற காலம் எப்படி நல்ல காலம்?

எம்பெருமானிடம் சேர்ப்பிப்பதற்கு காரணமான கழிந்த காலங்களும் நல்லவையே ஏன் என்றால் ப்ரபத்தியால் அந்த பாபங்கள் கழிந்தன என்பதால் - என்று முன்னோர் விளக்கம்.

## 12.22 கோவிந்தனிடம் செய்த ப்ரபத்தி பாபங்களை தகர்க்கும்

**கோவிந்தன் குடக்கூத்தன் கோவலன் என்றென்றே குனித்து***
**தேவும் தன்னையும் பாடியாடத் திருத்தி * என்னைக் கொண்டு என்**
**பாவந்தனையும் பாறக்கைத்து எமர் ஏழ்பிறப்பும் ***
**மேவும் தன்மைய மாக்கினான். வல்லன் எம்பிரான் விட்டுவே**

நம்மாழ்வார், திருவாய்மொழி 2-7-4

**(தேவும், தன்னையும் திருத்தி)** பரத்வத்தையும், ஸௌலப்யத்தையும் [மேன்மையும், நீர்மையும்] காட்டி, என்னை திருத்தினான்.

**(கோவிந்தன் குடக்கூத்தன் கோவலன் என்றென்றே குனித்து பாடியாட)** கோவிந்தா! குடக்கூத்தா! கோபாலா! என்று மனமார வாழ்த்தும்படி, திருநாம ஸ்மரணம் செய்ய வைத்தான். அவன் புகழைப் பாடி, ஆடி அகம் மகிழும்படி செய்தான்.

**(என்னைக் கொண்டு என் பாவந்தனையும் பாறக்கைத்து)** என்னை ப்ரபத்தி செய்ய வைத்து என் பாவங்கள் அனைத்தும் சிதறி அழியும்படி என்னை அடிமை கொண்டான்.

**(வல்லன் எம்பிரான் விட்டுவே)** அவன் வேறு யாரும் அல்ல, எல்லாம் வல்லவன் எம்பெருமான் விஷ்ணு.

prapatti.com

**(எமர் ஏழ்பிறப்பும் மேவும் தன்மைய மாக்கினான்)** அது மட்டுமா? என் உற்றார், உறவினர் இவர்களை கூட ஏழ் ஏழ் பிறப்பும் அவனையே அடையும்படி அருள் செய்தான்.

**வ்யாப்தியை நினைத்தால் அவன் விஷ்ணு. எளிமையை நினைத்தால் அவன் கோவிந்தன்.**

நம்மாழ்வார் இங்கே அற்புதமான கருத்தை காட்டுகிறார். ஒரு குடும்பத்தில் எவனாவது ஒருவன் ஶரணாகதி செய்தால் போதும். அவனுக்கு மோஷத்தை அளிப்பது மட்டும் அல்லாது, அவனைச் சார்ந்தவர்கள் அனைவரையுமே திருத்தி ப்ரபத்தியில் ஊக்குவிக்கிறான். (Snow ball effect, success breed success என்கிறாற்போலே)

## 12.23 இனிப் பிரியாது

**நேசமிலாதவர்க்கும் * நினையாதவர்க்கும் அரியான் *
வாசமலர்ப் பொழில்சூழ் * வட மாமதுரைப் பிறந்தான் *
தேசமெல்லாம் வணங்கும் * திருமாலிருஞ்சோலை நின்ற *
கேசவ நம்பிதன்னைக் * கெண்டை யொண் கண்ணி காணுங்கலோ**
திருமங்கையாழ்வார் பெரியதிருமொழி 9-9-6

திருமங்கையாழ்வார் பெரியதிருமொழியில் உன்னை நான் அறிந்து கொண்டேன், இனி உன் பணிதான் எனக்கு

**தம்மையே நாளும் * வணங்கித் தொழுவார்க்கு *
தம்மையே ஒக்க * அருள் செய்வர் ஆதலால் *
தம்மையே நாளும் * வணங்கித் தொழுது இறைஞ்சி *
தம்மையே பற்றா * மனத்து என்றும் வைத்தோமே**
திருமங்கையாழ்வார் பெரியதிருமொழி 11-3-5

prapatti dot com

என்று திருமங்கையாழ்வார் தன்னை வணங்குபவரை தன்னைபோலே ஆக்கும் அருள் மிக்கவன் எம்பெருமான். அவனையே ஸாதா ஸர்வ காலமும் நினைத்து மகிழ வேண்டும் என்றார்.

**நித்ய கைங்கர்ய ப்ராப்தபேக்ஷயா**

என்று பகவத் ராமானுஜரும் அடியேனுக்கு உயர்ந்த புருஷார்த்தமாகிற நித்ய கைங்கர்ய ப்ராப்த்தைய் அருள வேண்டும் என வேண்டினார்.

**கரீஶ! வர்தேயே ஸதா த்வதந்திகே ||**

கூரத்தாழ்வாம் , வ்ரதராஜ ஸ்தவம் 98

என்று கூரத்தாழ்வானும்
**(கரீஶ!)** யானை மலைத் தலைவனே, ஹஸ்திகிரி ராஜனே,
**(த்வத் அந்திகே)** உம்முடைய அருகிலேயே
**(ஸதா வர்தேயே)** எப்பொழுதும் இருக்கக் கடவேன் என பிரார்த்தித்தார்.

**ப்ராப்தாபி$_4$லாஷம் த்வத$_3$நுக்ரஹாந்மாம்**
**ப$_3$த்மா நிஷேவ்யே தவ பாத$_3$ பத்மே |**
**ஆதே$_3$ஹபாதாத் அபராத$_4$ தூர$_3$ம்**
**ஆத்மாந்த கைங்கர்ய ரஸம் விதே$_4$யா: ||**

ஸ்வாமி தேசிகன் அஷ்டபுஜாஷ்டகம் (8)

பகவானே, நீ, என் சராணகதியை உகந்து மோஷத்தை இந்த பிறவி முடியும்போது அளிக்கிறேன் என்பது உறுதியானது
**(த்வத$_3$நுக்ரஹாந்)** உன் திருவருளால்
**(ப்ராப்த அபி$_4$லாஷம்)** இஷ்டம் நிறைவேறியது என மகிழ்கிறேன். மேலும்,
**(ஆதே$_3$ஹ பாதாத்)** இச் சரீரம் முடியும் வரை
**(அபராத$_4$ தூர$_3$ம்)** அபசாரம் இல்லாத
**(ப$_3$த்மா நிஷேவ்யே)** பிராட்டி பணி செய்வதற்குரிய
**(தவ பாத$_3$பத்மே)** உன் திருவடிகளில்
**(மாம் ஆத்மாந்த கைங்கர்ய)** என்னை நித்யமான கைங்கர்யத்தில்
**(ரஸம் விதே$_3$யா:)** சுவையுடையவனாக ஆக்க வேண்டும்.

இந்த நிலையை நீயே அருள வேண்டும் என வேண்டினார்.

**கங்கையில் புனிதமாய * காவிரி நடுவு பாட்டு *
பொங்குநீர் பரந்து பாயும் * பூம்பொழில் அரங்கம் தன்னுள் *
எங்கள் மால் இறைவன் ஈசன் * கிடந்ததோர் கிடக்கை கண்டும் *
எங்கனம் மறந்து வாழ்கேன் * ஏழையேன் ஏழையேனே**
தொண்டரப்பொடி ஆழ்வார் திருமாலை 23

தொண்டரப்பொடி ஆழ்வார் திருமாலையில் பகவானை பிரிந்து, மறந்து எப்படி வாழ முடியும்? என்று கதறுகிறார்.

## 12.24 கேசவன் பணியே போக்யம்

பகவானுக்கு கைங்கர்யம் செய்வதுதான் மிகவும் உயர்ந்த புருஷார்த்தம் என்பதை அறிந்தவர்கள் ஜ்ஞானிகள். பகவான் கிருஷ்ணனும், பகவத் கீதையில் சொல்கிறான், என்னை விரும்பி பூஜிப்பவர்கள் நான்கு வகையானவர்கள்.

**(ஆர்த்த:)** இழந்த செல்வத்தை விரும்புவன்,
**(அர்த்தார்த்தி)** புதிய செல்வத்தை விரும்புவன்,
**(ஜிஜ்ஞாஸு)** கைவல்யத்தை அனுஷ்டிப்பவன்,
**(ஞாநி)** பகவானையே விரும்புவன் என்ற நாலு வகையானவர்கள்.

**தேஷாம் ஜ்ஞாநீ நித்ய யுக்த ஏக ப$_4$க்திர் விஸிஷ்யதே
ப்ரியோ ஹி ஜ்ஞாநிநோத்யர்த்த$_2$ம் அஹம் ஸ மம ப்ரிய:**
பகவத் கீதை 7-17

**(நித்ய யுக்த:)** எப்பொழுதும் என்னிடமே ஒன்றி
**(ஏக ப$_4$க்தி:)** வேறு ஒன்றை நினைக்காமல் பக்தி செய்யும்,
**(ஜ்ஞாநீ விஸிஷ்யதே)** ஞானியான பக்தன் மிகவும் சிறந்தவன்.



sadagopan.org

**(ஹி ஜ்ஞாநிந:)** ஏன் எனில் என்னை பரதத்வமாக அறிகின்ற அந்த ஞானிக்கு
**(அஹம் அத்யர்தம்)** நான் மிகவும் இனியவன்.
**(ஸ ச மம ப்ரிய)** அவனும் எனக்கு இனியவன்.

எந்த காரணத்தால் ஞானிக்கு நான் இனிமையானவனோ, அதனாலேயே எனக்கும் ஞானி இனியவன். அது என்ன காரணம் என்றால்,

> **உத$_3$ாராஸ் ஸர்வ ஏவைதே ஜ்ஞாநி து ஆத்மைவ மே மதம்**
> **ஆஸ்தி$_2$த: ஸ ஹி யுக்தாத்மா மாம் ஏவ அநுத்தமாம் கதிம்**
> பகவத் கீதை 7-18

என்று பகவத் கீதையில் கிருஷ்ணன தொடர்கிறான்

**(ஏதே ஸர்வ)** இவர்கள் எல்லோருமே,
**(உத$_3$ாரா: ஏவ)** சிறந்த கொடையாளிகள்தாம்.
**(து ஜ்ஞாநி)** இருந்தாலும், ஞானி என்பவன்
**(ஆத்ம ஏவ மே மதம்)** என்னுடைய ஆத்மா. இது என்னுடைய கருத்து.
**(ஹி யுக்தாத்மா ஸ:)** ஏன் என்றால், என்னிடம் ஒன்றிய மனமும் புத்தியும் கொண்ட ஞானியாகிய பக்தன்
**(அநுத்தமாம் கதிம் மாம் ஏவ ஆஸ்தி$_2$த:)** மிகவும் உயர்ந்த கதியான என்னையே உறுதியாக பற்றுகிறான்.

மற்ற மனுஷ்யர்களையும், தேவதைகளையும் விரும்பாமல், என்னையே நினைப்பவர்கள் உதாரர்கள். அந்த ஞானியானவன் எனக்கு ஆத்மா, தாரகன் என்றபடி

> **ப$_3$ஹூநாம் ஜந்மநாமந்தே ஜ்ஞாந்வாந் மாம் ப்ரபத்$_3$யதே**
> **வாஸூதே$_3$வ ஸர்வமிதி ஸ மஹாத்மா ஸூதுர்லப$_4$:**
> பகவத் கீதை 7-19

என்று பகவத் கீதையில் கிருஷ்ணன் மேலும் தொடர்கிறான்.

**(ப$_3$ஹூநாம் ஜந்மநாம் அந்தே)** அதாவது பல பிறவிகளுக்கு பிறகு கடைசியாக
**(ஜ்ஞாந்வாந்)** தத்வ ஜ்ஞானம் அடைந்து

prapatti.com

**(மாம் ப்ரபத்₃யதே)** என்னிடம் ப்ரபத்தி செய்கிறான்
**(ஸர்வம் வாஸுதே₃வ இதி)** பிறகு, அனைத்தும் வாசுதேவனே என்று இருக்கும்
**(ஸ மஹாத்மா)** அப்படிப்பட்ட உத்தமமான ஆத்மா
**(ஸுதுர்லப₄:)** மிகவும் கிடைப்பதற்கு அரியவன்.

அதாவது உண்ணும் சேறு, தின்னும் வெற்றிலை, பருகு நீரும் எல்லாம் கண்ணனே என்று ஆழ்வார் வாக்கின்படி தாரக, போஷக, போக்யங்கள் எல்லாம் தனக்கு கண்ணன் என்று இருக்கும் ப்ரபன்னாகிய ஞானியை இந்த உலகத்தில் காண்பது மிக அரிது.

## 12.25 பணிகள் பலவிதம்

பூக்கள் எடுத்து, தொடுத்து மாதவனுக்கு மலர் சாத்தி மகிழ்வது ஒரு கைங்கர்யம் எம்பெருமானை அர்ச்சிக்க பல வகை பூக்கள் இருந்தாலும் ஆசாரிய, ஆழ்வார்களால் சில புஷ்பங்களே விசேஷமாய் சொல்லப்பட்டிருக்கிறது

**ஆநிரை மேய்க்க நீ போதி * அருமருந்தாவதறிவாய் *
தேனில் இனிய பிரானே! * செண்பகப்பூச்சூட்ட வாராய் *
மருவி மணங் கமழ்கின்ற * மல்லிகைப் பூச்சூட்ட வாராய் *
பச்சைத் தமகனத்தோடு * பாதிரிப் பூச்சூட்ட வாராய் *
தெள்ளிய நீரில் எழுந்த * செங்கெழுநீர் சூட்ட வாராய் *
பொருதுவருகின்ற பொன்னே * புன்னைப்பூச்சூட்ட வாராய் *
குடந்தைகிடந்த எங்காவே * குருக்கத்தி பூச்சூட்ட வாராய் *
ஏமாற்றம் என்னைத் தவிர்த்தாய் * இருவாட்சி ப்பூச்சூட்ட வாராய் *
கண்டுநான் உன்னை உகக்கக் * கருமுகைப்பூச் சூட்ட வாராய்**
பெரியாழ்வார், பெரியாழ்வார் திருமொழி 2-7-10

பெரியாழ்வார் பூச்சூடலில் செங்கழுநீர், செண்பகம், இருவாட்சி, பாதிரி, புன்னை, குருக்கத்தி, க்ருமுகை, தாமரை என்ற எட்டு பூக்களை பற்றி.

**அஹிம்ஸா ப்ரத$_2$மம் புஷ்பம் புஷ்பம் இந்த்$_3$ரிய நிக்$_3$ரஹ:**
**ஸர்வ பூ$_4$த த$_3$யா புஷ்பம் க்ஷமா புஷ்பம் விசேஷத: ।**
**ஜ்ஞாநம் புஷ்பம் தப: புஷ்பம் த்யாநம் புஷ்பம் ததை$_2$:வ ச**
**ஸத்யம் அஷ்டவித$_4$ம் புஷ்பம் விஷ்ணோ: ப்ரீதிகரம் ப$_4$வேத் ।।**

என்று எட்டு வகை புஷ்பங்கள் என்பது எட்டு வகை ஆத்ம குணங்களைச் சொன்னது பாகவதம்.

1. **அஹிம்ஸா** - எந்த உயிருக்கும் தீங்கு இழைக்காமை;
2. **இந்த்ரிய நிக்ரஹம்** - புலன்களை அடக்குவது;
3. **ஸர்வபூத தயா** - எல்லோரிடத்திலும் இரக்கம் கொள்ளுதல்;
4. **க்ஷமா** - பொறுமை;
5. **ஜ்ஞானம்** - நல்லறிவு
6. **தபஸ்** - ஜப, தபங்கள்
7. **த்யானம்** - இந்த்ரியங்களை அடக்கி வஸப்படுத்துதல்;
8. **ஸத்யம்** - உண்மையே நினைத்து, பேசி, நடத்தல்

இப்படி எட்டு விதமான புஷ்பங்களை கண்ணனுக்கு சாற்றி, தான் அழகு பார்க்கிறார்

## 12.26 பணியில் கிடக்கும் அசேதனம்

பகவானுக்கு கைங்கர்யம் செய்வதை, அசேதன வஸ்துக்கள் போல செய்ய வேண்டும். அதனால்தான் “கிடக்கும்” என்று அஃறிணையில் சொன்னது, இந்த பாசுரத்தில்.

**ஊன் ஏறு செல்வத்து * உடற்பிறவி யான் வேண்டேன் ***
**ஆன் ஏறு ஏழ் வென்றான் * அடிமைத் திறமல்லால் ***
**கூனேறு சங்க மிடந்தான் * தன் திருவேங்கடத்து ***
**கோனேரி வாழும் * குருகாய்ப் பிறப்பேனே**
குலசேகராழ்வார், பெருமாள் திருமொழி 4-1

குலசேகராழ்வார், பெருமாள் திருமொழியில் பகவானுக்கு பணி செய்வது பல விதத்தில் என்றார்.

**(ஆன் ஏறு ஏழ் வென்றான்)** நப்பின்னையை திருமணம் செய்து கொள்ள வேண்டி, பலமான ஏழு எருதுகளை வென்ற எம்பெருமானுக்கு **(அடிமைத் திறமல்லால்)** அடிமை செய்வதை விரும்பாமல் **(ஊன் ஏறு செல்வத்து)** கொழுப்பை அதிமாக்கும் செல்வத்தை உடைய **(உடற்பிறவி யான் வேண்டேன்)** இந்த மனுஷப் பிறவியை நான் விரும்ப மாட்டேன், என்றார்.

இந்த புத்தி வந்தால், பகவானிடம் அசேதன வஸ்து மாதிரி கிடக்க வேண்டும் என்று தோன்றும்

**செடியாய வல்வினைகள் தீர்க்கும் திருமாலே ***
**நெடியானே! வேங்கடவா! நின் கோயிலின் வாசல் ***
**அடியாரும் வானவரும் அரம்பையரும் கிடந்து இயங்கும் ***
**படியாய் கிடந்து உன் பவள வாய் காண்பேனே**
குலசேகராழ்வார், பெருமாள் திருமொழி 1-5-9

குலசேகராழ்வார், பெருமாள் திருமொழியில் ஊனேறு செல்வத்து என்கிற பதிகத்தில், திருமலையில் ஏதேனுமாய் பிறப்பேனே என்று கதறுகிறார்.

- **குருகாய் (நாரையாக)** பிறப்பேனே
- **மீனாய்ப்** பிறக்கும் விதி உடையவன் ஆவேனே,
- **செண்பகமாய்** நிற்கும் திரு உடையவன் ஆவேனே,
- **தம்பகமாய்** (ஒன்றுக்கும் உதவாத தம்பக மரம்) நிற்கும் தவம் உடையவன் ஆவேனே,
- **கான் ஆறாய் (காட்டாறு)** பாயும் கருத்து உடையவன் ஆவேனே,
- **நெறியாய் கிடக்கும்** (வைஷ்ணவர்கள் பாததூளி படும்படி வழியாய் கிடக்கும்) நிலையுடையவன் ஆவேனே,
- எம்பெருமான் மலையில் **ஏதேனும்** ஆவேனே

என்றெல்லாம் கதறுகிறார், குலசேகராழ்வார்.

## 12.27 பணியில் இன்பம் இங்கேயே

க்ருபணா: ஸுதி$_4$ய: க்ருபா ஸஹாயம்
ஶரணம் த்வாம் ரண புங்க$_3$வ ப்ரபந்நா: ।
அபவர்க$_3$ நயாத்$_3$ அநந்ய ப$_4$ாவா:
வ்ரிவஸ்யா ரஸம் ஏகம் ஆத்$_3$ரியந்தே ।।

ஸ்வாமி தேசிகன் பரமார்த்த ஸ்துதி 6

(ரண புங்க$_3$வ) ஹே திருப்புட்குழி எம்பெருமானே!
(க்ருபணா ஸுதி$_4$ய:) கைம்முதல் இல்லாத இவர்கள், புத்திசாலியான அடியவர்கள். ஏன் என்றால், நீ கருணைக் கடல். உன்
(க்ருபா ஸஹாயம்) கருணை ஒன்றையே துணை கொண்டு
(த்வாம் ஶரணம் ப்ரபந்நா:) உன்னை ஶரணம் அடைகிறார்கள்.
(அநந்ய ப$_4$ாவா:) அவர்கள் வேறு ஒன்றிலும் மனது வைப்பதில்லை.
(அபவர்க$_3$ நயாத்$_3$) மோஷத்தைப் போல்
(வ்ரிவஸ்யா ரஸம்) கைங்கர்ய ஆனந்தம்
(ஏகம் ஆத்$_3$ரியந்தே) ஒன்றையே விரும்புகின்றனர்.

குடதிசை முடியை வைத்துக் * குண திசை பாதம் நீட்டி *
வடதிசை பின்பு காட்டித் * தென்திசை இலங்கை நோக்கி *
கடல் நிறக் கடவுள் எந்தை * அரவணை துயிலுமா கண்டு *
உடல் எனக்கு உருகுமாலோ * என் செய்கேன் உலகத்தீரே!

தொண்டரப்பொடி ஆழ்வார் திருமாலை 19

தொண்டரப்பொடி ஆழ்வார் திருமாலையில் பகவானைக் ஸேவித்த பின்னும் உடம்பு எல்லாம் கல்லுகுண்டு மாதிரி நிற்கிறீர்களே என் உடம்பு உருகுதே என்கிறார்.

ஒன்றுண்டு செங்கண்மால் * யான் உரைப்பது * உன்னடியார்க்கு
என் செய்வன் என்றே இருத்தி நீ * நின் புகழில்
வைகும் * தம் சிந்தையிலும் மற்றினிதோ * நீயவர்க்கு
வைகுந்தம் என்று அருளும் வான்

prapatti.com

நம்மாழ்வார், பெரிய திருவந்தாதி 53

நம்மாழ்வார் சொல்கிறார். "பகவானே உன் திருக்கல்யாண குணங்களை நினைத்து, மகிழ்ந்து ஈடுபடும் அடியவர்கள் மனத்தைவிட, நீ வைகுந்தம் என்று பெரியதாய் சொல்லித் தருகிறாயே, அது இனிமையாக இருக்குமோ?," என வினவினார்.

## 12.28 இன்பம் பழுதிலாப் பணியிலே

எம்பெருமானை அடைக்கலம் அடைந்தபின், பகவத், பாகவத, ஆசாரிய கைங்கர்யங்களில் ஈடுபட்டு, சாஸ்திரத்திற்கு உட்பட்டு எல்லாவிதமான பணிகளையும் பிழை இன்றி செய்து இந்த பூலோகத்திலேயே மகிழ்கிறான், ப்ரபன்னன்.

**உறுவது உனக்கு உரைத்தேன் இங்கிருக்கும் காலம் ***
**ஒரு பிழையும் புகுதாத உணர்த்தி வேண்டிப் ***
**பெருவது எலாம் இங்கே நாம் பெற்று வாழப் ***
**பேரடிமையால் ஏதென்று இகழேல் நீயே**

ஸ்வாமி தேசிகன், அமிருத ரஞ்சனி 19

**(இங்கிருக்கும் காலம் உறுவது உனக்கு உரைத்தேன்)** ப்ரபன்னாகிய நீ இந்த பூமியில் இருக்கும் காலம் வரையில் தகுந்தது உனக்கு ஒன்று சொல்கிறேன், கேள்.
**(பெருவது எலாம் இங்கே நாம் பெற்று வாழ)** பரமபதத்தில் பெறக்கூடிய கைங்கர்யங்கள் இந்த கர்ம பூமியிலே நாம் பெற்று மகிழ்வதற்கு நீ என்ன செய்ய வேண்டும் என்றால்
**(ஒரு பிழையும் புகுதாத உணர்த்தி வேண்டிப்)** பகவத் பாகவத கைங்கர்யங்களில் குற்றங்கள் நேராதவாறு தத்துவ ஞானத்தை அறிந்து
**(பேரடிமையால் ஏதென்று இகழேல் நீயே)** இந்த பூலோக கைங்கர்யத்தால் என்ன பயன் என்று நினைக்காமல் இருக்க வேண்டும்.

prapatti.com

என்று ப்ரபன்னன் தன் மனதிற்கு அறிவுரை கூறுவது போலே எழுதி உள்ளார்.

> **இப்படி க்ருதக்ருத்யனான** (செய்வன செய்தவன்) **ப்ரபந்நனுக்கு வர்ணாச்ரமாதி தர்மங்கள் ஸ்வதந்த்ர - அஜ்ஞா ஸித்தங்களான கைங்கர்ய விசேஷங்கள். இவனுக்கு ஆஜ்ஞா** (செய்ய வேண்டும் என விதிக்கப்பட்ட) **அநுஜ்ஞா** (செய்தால் பயன் உண்டு என்று அநுமதித்தல்) **ஸித்தங்களான கைங்கர்யங்கள் எல்லாம் ஸ்வயம் ப்ரயோஜனங்கள்**
>
> ஸ்வாமி தேசிகன், ரஹஸ்ய ரத்நாவளி 11-12

என்று தேசிகன் ஸாதித்தார்.

ப்ரபத்தியை செய்தவன் ப்ரபன்னன். அவன் செய்ய வேண்டிய காரியங்களை செய்து முடித்ததால் க்ருத க்ருத்யன் எனப்படுகிறான். அவனுக்கு தேஹம் விடும்போது மோக்ஷம் நிச்சயம். இதில் துளிக்கூட கவலை வேண்டாம்.

ஆனால், மோக்ஷம் ஸித்திக்கும் வரை, பூமியில் இருக்கும் எஞ்சிய நாட்களில், சாஸ்திர வரம்பிற்கு உட்பட்டு, அவரவர் வர்ண, ஆஸ்ரம தர்மங்களின் நியதிப்படி தம் சக்திக்கு தகுந்தவாறு அனுஸந்தித்தே ஆக வேண்டும்.

நமக்கு ப்ரபத்தி ஆகி விட்டதே, மோக்ஷம் நிச்சயம்தானே, நாம் இன்றே முக்தி அடைந்து விட்டோமே, நமக்கு எதற்கு இந்த சாஸ்திரங்கள்? ஸந்தியா வந்தனம், தர்ப்பணங்கள் போன்றவை? என ஒரு போதும் நினைக்கக் கூடாது.

**ஆஜ்ஞா கர்மாக்கள்** என்பவை பகவானின் ஆணையால் உண்டானவை. அவற்றை ஒருவன் உயிர் உள்ளவரை செய்தே தீர வேண்டும். பரந்யாஸம் அவற்றை விலக்காது. இவற்றை செய்வதால் தனிப்பட்ட பலன் இல்லை. செய்யாவிடில் பகவானின் கோவம் என்கிற பாவம் சேரும்.

**அநுஜ்ஞா கைங்கர்யம்** என்பது, கோவிலில் போய் எம்பெருமானை ஸேவிப்பது, பூ தொடுப்பது, மாலை சாத்துவது, அடியவர்க்கு அமுது படைப்பது போன்றவை. இவை செய்ய வேண்டும் என்ற கட்டாயம் இல்லை. செய்யா விட்டால் பாபம் சேராது. செய்தால் பகவான் ப்ரீதி அடைகிறார்.

ப்ரபன்னன் இந்த கைங்கர்யங்களை வேறு பலன் கருதாது, பகவானின் உகப்பிற்கே செய்து மகிழ்கிறான்.

## 12.29 ஸ்ரீமதே நாராயண - உத்தர வாக்யம்

பிராட்டியை ஒரு க்ஷணமும் பிரியாதவன் எம்பெருமான். அவன் ஸர்வ ஸ்வாமியாய், ஸர்வ ஸேஷியாய், உயர்ந்த உபாயமாய், பலனாய் ஆகும்போது, எல்லா நிலைகளிலும் பிராட்டி அகலாது அவளும் கைங்கர்யங்களை ஏற்றுக் கொள்கிறாள்.

பகவான், பிராட்டி இருவரிடமும் ப்ரபத்தி செய்யப்பட வேண்டும். இருவருமே உபாயம், இருவருமே பலன் என்பது ஸ்வாமி தேசிகன் திருவுள்ளம். அதுவே நம் ஸித்தாந்தம்.

த்வயத்தின், பின் பகுதியில், நாராயணா என்ற பதம், எல்லாவிதமான திருக்கல்யாண குணங்களை சொன்னாலும் முக்யமாக அவன் பலனாய் விளங்குவதற்கு அநுஸந்திக்க வேண்டிய

- **ஸ்வாமித்வம் (தலைமை)**
- **போக்யத்வம் (இனிமை)**

என்கிற இரண்டையும் வலியுறுத்துகிறது.

prapatti dot com

prapatti dot com

# 13 - ஆய

**ஆவேன் என அறிந்தாரும் * மாளா**
**அடிமை என புகுந்தாரும் * ஆவி**
**அரிமுகனுக்கே தந்து இருந்தாரும் ***
**தேடி அடைவது உகத்தின் சுகமே.**

**ஆவேன்** = பகவானுக்கு கைங்கர்யம் செய்யும்படி ஆவேன்
**என அறிந்தாரும்** = என்று அறிவு வந்த பத்தரும்
**மாளா** = எல்லையில்லாத
**அடிமை என** = பாரதந்திரிய ஸேஷத்வ கைங்கர்யம் செய்ய வேண்டி
**புகுந்தாரும்** = ப்ரபத்தி செய்ய ஆசாரியனை அணுகியவரும்
**அரிமுகனுக்கே** = பரம கருணாமூர்த்தியான ந்ருஸிம்மனிடம்
**ஆவி தந்து** = பரஸமர்ப்பணம் செய்து
**இருந்தாரும்** = மீதி வாழ்நாட்கள் பூமியில் இருப்பவரும்
**தேடி அடைவது** = சாஸ்திரத்தின் ஸாரமாக கடைசியில் பெறுவது
**உகத்தின் சுகமே** = த்வயயாநுஸந்தானத்தில் உள்ள மகிழ்ச்சியே

## 13-1 பாசுரத்தின் ஸாரார்த்தம்

**ஆவேன்** என்பது பாசுரத்தின் முதல் சொல். இது பகவானே உமக்கும், உம்மை என்றும் பிரியாமல் இருக்கும் பிராட்டிக்கும் ஸர்வ தேஶ, ஸர்வ கால, ஸர்வ அவஸ்தைகளிலும் **கைங்கர்யம் செய்யும்படி ஆகக் கடவேன்** என்பதைக் காட்டுகிறது.

**சுகமே** என்ற கடைசி சொல், அந்த கைங்கர்யமே பரிபூர்ண ப்ரம்மானந்தம் என்கிற புருஷார்த்த பலனைச் சொல்கிறது.

**ஆவேன் என அறிந்தவர்** = **பத்தர்**
**மாளா அடிமை என புகுந்தவர்** = **முக்தர்,**

ஆவி அரிமுகனுக்கே தந்து இருந்தவர் = நித்யர்.
தேடி அடைவது உகத்தின் சுகமே = இன்பம் அடைவது த்வய அநுஸந்தானத்திலே என்றும் பொருள் கூறலாம்.

கைங்கர்யமே உயர்ந்த புருஷார்த்தம். எம்பெருமானே!, நீ அதை எனக்கு அருள்வாய் என்கிற ப்ரார்த்தனையை காட்டுகிறது, இந்த ஆய சப்தம்.

## 13-2 ஆய விளக்கம்

த்வயத்தின் உத்தர கண்டத்தில் உள்ள ஸ்ரீமதே நாரயண என்கிற ஶப்தம் பகவான் ஶேஷியாய் இருப்பதைக் காண்பிக்கிறது. பிராட்டியுடன் கூடிய பகவான் நாம் செய்யும் கைங்கர்யங்களை ஏற்றுக் கொள்ளும் ப்ரதி ஸம்பந்தியாய் இருக்கிறான்.

அதற்கு மேல் உள்ள ஆய பதம் தாதர்த்தி சதுர்த்தி எனப்படும் நான்காம் வேற்றுமையுபைக் காட்டுகிறது.

தாத$_3$ர்த்$_2$யே சதுர்த்தீ
இலக்கண விதி

என்று நாலாம் வேற்றுமை உருபு “அதற்காக’ என்னும் பொருளைத் தரும் என்றது இலக்கணம்.

அதன் ஸாரமான கருத்து கைங்கர்யத்துக்கு சதுர்த்தி. நாம் நமக்காக இல்லை; நாராயணனின் பொருட்டே. அவன் திருவடிகளில் தொண்டு செய்யவே உள்ளோம். பிராட்டியுடன் கூடிய எம்பெருமானுக்கு கைங்கர்யம் செய்வதே உயர்ந்த புருஷார்த்தம்.

இது மேல் எழுந்தவாரியான விளக்கம். இந்த இடத்தில் ஆய என்பதற்கு அவனுக்காகவே என்பதை மட்டும் கூறாமல் உபாயத்தின் மூலமாக

ஏற்படும் பலனாகிய **கைங்கர்யத்தை வேண்டி நிற்கும் பிராத்தனையை** கூறுகிறது என்பது மிகவும் பொருந்தும்.

## 13-3 ஸ்வாமி தேசிகனின் சுருக்கமான விளக்கம்

> **இதில் சதுர்த்தீ** (ஆய எனும் நாலாம் வேற்றுமை உருபு) **நித்ய ஸித்தமான** (எப்போதும் உள்ள) **தாதர்த்த்யம்** (அடிமைத்தனம்) **ப்ராத்தநீயம்** (வேண்டிப் பெறுதல்) **அன்றாகையால் "வழுவிலா அடிமை செய்ய வேண்டும்" என்று தாதர்த்த்ய பலமாய்** (அடியவனாகும் தன்மைக்கு பலனாய்) **ப்ராத்தநீயமான கைங்கர்யத்தை** (வேண்டிப் பெறும் பணியைக்) **காட்டுகிறது.**
>
> ஸ்வாமி தேசிகன், ஸ்ரீரஹஸ்யத்ரய சுளகம்

**ஆய** என்கிற வேற்றுமை உருபு இங்கே, **"அவன் பொருட்டு"** என்கிற பொருளைத் தரும். இந்த சேதனன் பகவானுக்கு ஸேஷன், அவனுக்கு அடிமை, அவனுக்கு கைங்கர்யம் செய்யவே உள்ளான் என்பதை காட்டுகிறது.

அதைவிட, **பவேயம்** என்கிற சொல்லை இங்கே நடுவில் சேர்த்துக் கொண்டால், அது **"ஆவேன்"** என்ற பொருளைத் தரும். அல்லது **ஸ்யாம்** எனற சொல்லை வரவழைத்துக் கொண்டால், அது **"நான் ஆக வேண்டும்"** என்பதைச் சொல்லும். நான் அந்த எம்பெருமானுக்கு அடியவனாக ஆக வேணும் என்று பிரார்த்திப்பதை காட்டுகிறது.

மறைந்த **"ஆவேன்", "பவேயம்"** என்கிற வின முற்றுடன் ஆரம்பிக்கிறது இங்கே பாசுரம்.

## 13-4 ஆய - பிராத்தனை அவசியமா?

இந்த ஶேஷனாகும் தன்மையை ஏன் பிரார்த்திக்க வேண்டும்?



prapatti.com

ஜீவன் எம்பெருமானுக்கு (ஶேஷத்வம்) ஶேஷனாய் உள்ள தன்மை என்பது அநாதியானது. இயற்கையானது. மாற முடியாதது. அப்படியிருக்க, அதை இங்கே வெளிப்படையாக சொல்வானேன்?

ஶேஷத்துவத்வதை பிராத்திக்க வேண்டிய அவசியமில்லை. ஆனால் அந்த ஶேஷத்துவத்தின் பலனே கைங்கர்யம்தானே. அந்த கைங்கர்யத்தால் விளைவது பரிபூர்ண பகவத் அநுபவம்தானே. அந்த **பகவத் அநுபவத்தை முன்னிட்டுக் கொண்டு வருவதான கைங்கர்யத்தை அருளுமாறு** எம்பெருமானை பிரார்த்திப்பதை சொல்கிறது.

சுருக்கமாக இங்கே **"பவேயம்"** என்ற பத்தை சேர்த்துக் கொண்டால் ஸ்ரீமந் நாராயணனுக்கு கைங்கர்யம் செய்பவனாக ஆவேன் என்ற பிராத்தனையைச் சொல்கிறது. எம்பெருமானின் திருமுக மலர்ச்சிக்காக செய்யும் செயல்கள்.

பாசுரத்தில் அதை முதல் பதத்தால் **"ஆவேன்"** என்று காட்டியது.

## 13-5 பிள்ளைலோகாசாரியாரின் விளக்கம்

**இதில் சதுர்த்தி கைங்கர்ய ப்ராத்தனையைச் சொல்லுகிறது.**

**ஒழிவில் காலமெல்லாம் உடனாய் மன்னி வழிவிலா அடிமை செய்ய வேண்டும் நாம் என்கிறபடியே இச்சேதனன் அபிநிவேஶ அதியசத்தாலே தேஶ கால அவஸ்தா ப்ரகார நியம விதுரமாக ப்ரார்த்திக்க கடவனாய் இருக்கையாலே, ஸர்வதேஶ ஸர்வ கால ஸர்வ அவஸ்தைகளிலும் ஸர்வ ப்ரகாரத்தாலும் பண்ணும் வ்ருத்தி விஶேஷத்தைச் சொல்லுகிறது.**

**ஶேஷத்வ ஜ்ஞாந கார்யமான உபாய பரிக்ரஹத்துக்கு அநந்தரம் ப்ராப்தமாய் இருக்கையாலே, இச்சதுர்த்திக்கு தாதர்த்யம் அர்த்தமாக மாட்டாது.**

**உத்துங்க தத்வத்தைக் குறித்துப் பர தந்த்ரனான சேதனன் பண்ணுகிற வ்ருத்தி விஶேஷமாகையாலே. விஷய ஸ்வபாவத்தாலும் ஆஶ்ரயஸ்வபாவத்தாலும் ப்ராத்தனையே அர்த்தமாகக் கடவது.**

பிள்ளைலோகாசாரியார், தத்வஶேகரம்

என்று ஸாதித்தார். சுருக்கமாக, **ஆய** என்றால் **அவனுக்காகவே** என்ற பொருள். அவனுக்காகவே என்றால் அவனுடைய **ஸேஷன்** என்று ஆகிறது. அந்த ஸேஷத்வத்தை வேண்டிப் பெறுவதால், **இங்கே அந்த வேண்டுதலைச் சொல்கிறது.**

**இச்சதுர்த்தி, கைங்கர்யத்தை ப்ரகாசிப்பிக்கிறது.**
**கைங்கர்யம்தான் நித்யம்.**
**நித்யமாக ப்ராத்தித்தே பெற வேணும்.**
**ஶேஷிக்கு அதிஶயத்தை விளைவிக்கை ஶேஷ பூதனுக்கு ஸ்வரூப லாபமும், ப்ராப்யமும்**

பிள்ளைலோகாசாரியார், முமுக்ஷுப்படி 174 - 177

என்று இங்கே இச்சதுர்த்திக்கு தாதர்த்யம் அர்த்தமாகாது. பரதந்திரனான சேதனன் ஸர்வ தேஶ, ஸர்வ கால, ஸர்வாவஸ்தைகளிலும் பண்ணும் வ்ருத்தி விசேஷத்தையே சொல்கிறதால், அந்த பிராத்தனையை சொல்கிறது.

**(நாகிஞ்சித் குர்வத: ஸேஷத்வம்) எதுவும் செய்யவில்லை என்றால் அடிமைத்தனம் இல்லை.** கைங்கர்யத்தை ஏற்றுக் கொள்ளும் எம்பெருமான் உயர்ந்த வஸ்து. ஜீவன் அவனிடம் மஹாவிச்வாசத்துடன் உள்ளான். **வேண்டுதல் இல்லாமல் கைங்கர்யம் கைகூடாது** என்ற காரணங்களால் கைங்கர்யத்தை வேண்டி அடைய வேண்டும்.

எம்பெருமானை மகிழ்விப்பதே ஜீவனுடைய ஸ்வரூபம் ஸித்திப்பதற்கு உபாயம். எம்பெருமானின் மகிழ்ச்சியை அனுபவிப்பதே ஜீவனின் லக்ஷியமாக இருப்பதால் அந்த கைங்கர்யத்ததை வேண்டிப் பெற வேண்டும்.

## 13-6 கைங்கர்யம் என்றால் என்ன?

**கிம் குர்வ இதி கைங்கர்யம்**

என்ற வசனத்தின்படி, **பகவத் அநுபவ ப்ரீதியாலே தடுமாறி என் செய்வோம் என்றிருக்கை** என்று வங்கிபுரத்து நம்பி பணித்தார்.

**ஸாயுஜ்யம் ப்ரதிபந்நா யே தீவ்ர பக்தாஸ் தபஸ்விந: |**
**கிங்கரா மம தே நித்யம் பவந்தி நிருபத்ரவா: ||**
விஷ்ணு தத்வம்

ஸாயுஜ்யம் என்னும் முக்தி நிலையில் என்னை ஒத்த நிலையை அடைகின்றனர் யார் என்றால், பக்தி யோகத்தை பூர்ணமாக முடித்தவர்களும், ப்ரபத்தி அனுஷ்டித்தவர்களும். அவர்கள், ஸம்ஸாரத் துன்பத்தை தாண்டி, எப்போதும் எமக்கே கைங்கர்யம் செய்யும் ப்ராப்தி அடைகின்றனர்.

**கைங்கர்யமாவது - ஸ்வாமி உகந்த ஏவல் தொழில் செய்கை ஆகையாலே இது யதாசாஸ்த்ரம் பண்ணினால் உகப்பாம்**
ஸ்வாமி தேசிகன், ரஹஸ்ய ரத்நாவளி 20

என்று ஸ்வாமி தேசிகன் அருளினார். கைங்கர்யம் என்பது எஜமானனின் மனதிற்கு உகந்த அடிமைத் தொழிலை செய்வதே. இந்த கைங்கர்யத்தை ப்ரபந்நன் சாஸ்திர முறைப்படி செய்தால்தான் எம்பெருமான் திருவுள்ளம் உகக்கும்.

## 13-7 கைங்கர்ய பிராத்தனை

வினைப் பயன்கள் நீங்கி, தான், தனது என்னும் அகங்கார, மமகாரங்கள் விலகி ஸ்ரீவைகுண்டத்தில் எம்பெருமானுக்கும் பிராட்டிக்கும் நித்ய கைங்கர்யம் செய்யப் புகுகிறான் சேதனன். மோக்ஷத்தில் இயற்கையாய் எம்பெருமானை அனுபவித்தல் என்னும் ஆனந்த வெள்ளத்திற்கு ஒரு போக்குவீடாக கைங்கர்யங்களைச் செய்கிறான்.

prapatti.com

சுத்த தத்வமான பரமபதமே தூய்மை நிறைந்தது. அங்கு எங்கு வேண்டுமானாலும், தன் விருப்பத்திற்கு தகுந்தபடி கைங்கர்யம் செய்கிறான். இப்படிப்பட்ட கைங்கர்யத்தைக் காட்டுவதுதான் **“ஆய”** என்ற பதம்.

அந்த கைங்கர்யத்தை இங்கே பூலோகத்தில் இருந்தபடியே வேண்டுகிறான் சேதனன். அதனால் **“பவேயம்”** என்ற வினைமுற்றை ஆக்கிக்கொண்டு இங்கு பொருள் கூற வேண்டும். பிராட்டியுடன் கூடிய எம்பெருமானுக்கு நான் கைங்கர்யம் செய்பவனாக ஆக வேண்டும் என்று பிராத்தித்தல்.

**வானுயர் இன்பம் மன்னி வீற்றிருந்தாய் ***
**அருள நின் தாள்களை எனக்கே.**
நம்மாழ்வார், திருவாய்மொழி 8-1-9

**(வானுயர் இன்பம் மன்னி வீற்றிருந்தாய்)** உயர்ந்த பரமபதத்திலே நிலையான இன்ப வடிவாய் அமர்ந்திருக்கும் எம்பெருமானே! **(எனக்கே நின் தாள்களை அருள)** எனக்கு உம் திருவடிகளைக் காட்டி அருள் செய்ய வேண்டும், என வேண்டினார், நம்மாழ்வார்.

**தாழ்ச்சி மற்று எங்கும் தவிர்ந்து *நின் தாளிணைக் கீழ்**
**வாழ்ச்சி * யான் சேரும் வகை * அருளாய் வந்தே**
நம்மாழ்வார், திருவாய்மொழி 3-2-4

மேலும் நம்மாழ்வார் ஸாதிக்கிறார். **(தாழ்ச்சி மற்று எங்கும் தவிர்ந்து)** உலக விஷயங்கள் எல்லாம் அல்பமானது, அஸ்திரமானது என்று அவைகளை விலக்கி **(வாழ்ச்சி நின் தாளிணைக் கீழ்)** ஆத்ம உஜ்ஜீவனம் என்பது எம்பெருமானே நின் திருவடிக்கீழ் சேர்ந்து செய்யும் கைங்கர்யத்தை **(அருளாய் வந்தே)** எனக்கு அருள்வாய் என்று வேண்டினார்.

## நாகிஞ்சித் குர்வதச்சேஷத்வம்

கைங்கர்யம் செய்யாதவனுக்கு அடிமைத்தனம் இல்லை. என்று கூறுவது போலே.

கைங்கர்யம் செய்வது என்பது எம்பெருமானுக்கு ஜீவன் (சேஷத்வமாய்) அடிமையாக இருப்பது, என்பதைக் காட்டுகிறது. கைங்கர்யம் காரணமாக எம்பெருமானை உகப்பிப்பதே ஜீவனின் ஸ்வரூபம் (இயல்பு). அந்த எம்பிரானின் மகிழ்ச்சியை அனுபவித்ததே ஜீவனுக்கு பரம ப்ராப்யம். ஆகவே கைங்கர்யத்தை எப்போதும் வேண்டிப் பெற வேண்டும் என ஆயிற்று.

## 13-8 பணிக்கு உரியவன் ஆவேன்

பிராட்டியுடன் கூடிய எம்பெருமானுக்கு கைங்கர்யம் செய்யக் கடவேன். இதை அறிந்தவன் யார்?

> **மந ஏவ மநுஷ்யாணாம் காரணம் பந்த மோக்ஷயோ:**
> **பந்தாய விஷயாஸங்கி முக்த்யை நிர்விஷயம் மந:**
> பராசர ரிஷி, விஷ்ணு புராணம் 6-7-28

**(பந்த மோக்ஷயோ: காரணம்)** ஸம்ஸாரத்திற்கும், மோஷத்திற்கும் காரணம்
**(மநுஷ்யாணாம் மந ஏவ)** மனுதனின் மனதுதான் காரணம்.
**(மந: விஷயாஸங்கி பந்தாய)** உலக விஷயங்களில் மனம் போனால், அது ஸம்ஸாரத்தை கொடுக்கிறது.
**(மந: நிர்விஷயம் முக்த;)** அந்த விஷயங்களை அடியோடு நீக்கியவனுக்கு அந்த மனமே மோக்ஷத்திற்கு காரணம் ஆகிறது," என்றார் பராசர மஹரிஷி.

> **விடுமின் முற்றவும் * வீடு செய்து ***
> **உம்முயிர்வீடுடையானிடை * வீடு செய்மினே**
> நம்மாழ்வார், திருவாய்மொழி 1-2-1

**(விடுமின் முற்றவும்)** விட்டு விடுங்கள், முழுக்கவும். எதை விடுவது என்றால் நான், எனது என்று சொல்லக்கூடிய அகங்கார மமகாரங்கள். அவை விளைவிக்கும் சப்தாதி வாஸனை, ருசி போன்றவை.

**(விடு செய்து)** அப்படி செய்து விட்டு உங்கள் ஆத்மாவை

**(வீடு உடையானிடை)** அந்த பெரிய வீடு உடையவனிடம்
**(வீடு செய்மினே)** ஸமர்ப்பிக்க சம்மதிக்கவும்" என்றார் நம்மாழ்வார்.

> **அறிவினால் குறைவில்லா * அகல் ஞாலத்து அவர் அறிய ***
> **நெறியெல்லாம் எடுத்துரைத்த * நிறைஞானத்து ஒரு மூர்த்தி ***
> நம்மாழ்வார், திருவாய்மொழி 4-8-6

நம்மாழ்வார் ஸாதிக்கிறார் இது எப்படி தெரிகிறது என்றால் எம்பெருமானே பூலோகத்தில் தோன்றி, கீதை சொல்லி, என்னை ஒருவனையே ஶரணாக அடை என்பதிலிருந்து.

**(அறிவினால் குறைவில்லா)** எல்லோருக்கும் நிறைய ஞானம் இருக்கிறது. சப்தாதி விஷயன்களில் பரிபூர்ண ஞானம் உண்டு. ஆனால் எந்த ஞானம் இல்லை என்றால், பகவானைப் பற்றிய ஞானம். அவனே உபாயம் அவனே பலன் என்ற அறிவு இல்லை.

**(அகல் ஞாலத்து அவர் அறிய)** அந்த உலக மக்கள் எல்லோரும் அறியும்படி **(நெறியெல்லாம் எடுத்துரைத்த)** எல்லாவிதமான உபாயங்களையும் எடுத்துச் சொன்னான் **(நிறைஞானத்து ஒரு மூர்த்தி)** ஞானம் மிகுந்த பரம்பொருளான கண்ணன் என்றார்.

## 13-9 என அறிந்தாரும்

> **ஒன்றும் மறந்து அறியேன் * ஓத நீர் வண்ணனை நான் ***
> **இன்று மறப்பேனோ ஏழைகள் * - அன்று**
> **கருவரங்கத்துள் கிடந்து * கை தொழுதேன் கண்டேன் ***
> **திருவரங்க மேயான் திசை**
> பொய்கையாழ்வார், முதல் திருவந்தாதி 6

**(ஓத நீர் வண்ணனை)** நீர்மையான பகவானே உன்னுடைய அருள் எனும் நிர்ஹேதுக க்ருபையால் **(அன்று கருவரங்கத்துள் கிடந்து கை தொழுதேன்)**

எனக்கு அறியாத காலம் என்னும்படியான தாயாரின் வயிற்றில் கர்பத்தில் கிடக்கும்போதே **(ஜாயமாந கடாக்ஷம்)** உன் நினைவு வந்து விட்டது.

அன்றைக்கே **(கண்டேன் திருவரங்க மேயான் திசை)** உன்னை மனத்தினால் ஸாக்ஷாத்காரம் செய்தேன். ஸ்ரீரங்கம் திசை நோக்கி நான் கை கூப்பி உன்னை வணங்கினேன். **(ஒன்றும் மறந்து அறியேன்)** ஒரு க்ஷண காலமும் உன்னை மறந்ததில்லை.

**(ஏழைகாள் நான் இன்று மறப்பேனோ)** அறிவில்லாத மக்களே, எம்பெருமானிடம் ப்ரபத்தி செய்து அவனை அறிந்து கொண்டபின், இன்று தேஹ யாத்ரையாய் அநுபவத்திற்கு எல்லை நிலையான அர்ச்சயாவதார அழகை, பகவத் அநுபவத்தில் இருக்கும் நான் எம்பெருமான மறப்பதாவது?" என்கிறார்.

எம்பெருமானுக்கும், பிராட்டிக்கும் கைங்கர்யம் செய்வதற்காகவே உள்ள இந்த ஜீவன் என்பதை உணர வேண்டும். அந்த ஞானம் சுலபமாக வராது.

**அநாதி கால ப்ரவ்ருத்தம் விபரீதஜ்ஞாநம்**

ராமனுஜரும் கத்யத்தில் அறிவு சரியான முறையில் இருக்க வேண்டும் என்றார்.

**நின் பொருட்டு நீ என் பொருட்டிலை**
ஸ்வாமி தேசிகன், மும்மணிக்கோவை 10

பகவானே நீயே எல்லா காரியங்களையும் நடத்தி வைக்கிறாய். அந்த காரியங்களை செய்யும் துரும்பாகத்தான் நான் உள்ளேன். அவற்றின் எல்லா பலன்களும் உன்னையேச் சேருகின்றன.

## 13-10 அடிமை என்பதில் ஆனந்தமா?

prapatti.com

சரி மோக்ஷம் அவ்வளவு ஆனந்தமானது, பரிபூர்ணமானது என்று சொல்லும்போது, இன்னொருத்தனுக்கு, அது பகவானாகவே இருக்கட்டும், அவனுக்கு ஸேவை செய்வது பரமானந்தம் என்கிறார்களே அது எப்படி? அடிமைத் தொழிலில் ஆனந்தமா? என்று கேள்வி வரும்.

**ஸர்வம் பரவஶம் துக்கம்**
மநுஸ்மிருதி

என்றது மநுஸ்மிருதி. அயலானுக்கு அடிமையாய் இருப்பது கஷ்டமானது.

**ஸேவா ஶ்வ வ்ருத்திராக்$_2$யாதா**
**தஸ்மாத் தாம் பரிவர்ஜயேத்**
மநுஸ்மிருதி 4-6

என்றது மநுஸ்மிருதி, மேலும். அயலானுக்கு அடிமையாய் இருப்பது நாய்ப்பிழைப்பு என்று சொல்லப்பட்டது. அதனால் அந்த ஸேவையை விட்டு விட வேண்டும், என்றது. அத்வைதிகள் ஆகவே, இந்த ஸேவையை ஒப்பு கொள்வதில்லை. தானே ப்ரம்மம் என்றால் யாருக்கு யார் ஸேவை செய்வது?

- **கைங்கர்யம் புருஷார்த்தம் என்று சொல்லுகிறபடி எங்கனே? என்னில் ஆத்ம அபிமாந அநுகுணமாகப் புருஷார்த்த வ்யவஸ்தை (வரையறை) காண்கையாலே.**
- **ஸ்வதந்த்ராத்ம அபிமாநிக்குக் கர்மக்ருதமான (கர்மாவினால் ஏற்ப்பட்ட) பராவஶ்யம் துக்க காரணமாம்.**
- **பகவதீநமாகத் தன் ஸ்வரூபத்தை ஶிக்ஷித்தவனுக்குப் (அறிந்து கொண்டவனுக்கு) பாரதந்திரியம் தானே ப்ரீதி விஷயமாம்.**

ஸ்வாமி தேசிகன், விரோத பரிஹாரம்

தான் சுதந்திரமானவன் என்ற அகம்பாவம் கொண்டவனுக்கு கைங்கர்யம் கசக்கும். ஆனால், தன் பாரதந்த்ரிய ஸ்வரூபத்தை அறிந்து கொண்டவனுக்கு ஶேஷத்வம் இயற்கையில் மகிழ்ச்சி அளிக்கும் என்றார்.

**“ஶேஷத்வம் துக்கரூபமாகவன்றோ நாட்டிற் காண்கிறது,” என்னில் அந்த நியமம் இல்லை.; உகந்த விஷயத்திற்கு சேஷமாய் இருக்கும் இருப்பு ஸுகமாகக் காண்கையாலே**

பிள்ளைலோகாசாரியர், முமுக்ஷுப்படி (52-53)

என்று முமுக்ஷுப்படியில் பிள்ளைலோகாசாரியர் ஸாதித்தார். அடிமைத் தொழில் என்பது துன்பத்தைக் கொடுக்கக் கூடியது என்பார்கள். ஆனால் ஆசை மிகுந்த இடத்தில் அந்த அடிமைத் தொழிலே இன்பமாய் இருக்கும்.

இதை துஷ்யந்த மாஹராஜா, சகுந்தலையின் காலைப் பிடித்துக் கொண்டு பணிவிடை செய்கிற இடத்தில் காணலாம்.

பகவானிடம் திருக்கல்யாண குணங்கள் இருப்பதால் உகப்பு வந்தது

**கடியன் கொடியன் * நெடிய மால் உலகங் கொண்ட**
**அடியன் * அறிவரு மேனி மாயத்தன் * ஆகிலும்**
**கொடிய என் நெஞ்சம் * அவனென்றே கிடக்கும் எல்லே ***

நம்மாழ்வார், திருவாய்மொழி 5-3-5

என்று திருவாய்மொழியில், நம்மாழ்வார் பராங்குஸ நாயகி பாவத்தில், தன் தோழியிடம் சொல்கிறாள்.

**(நெடிய மால் உலகங் கொண்ட அடியன்)** உலகத்தை எல்லாம் தன் திருவடிகளால் தாவி அளந்த திருமாலாகிற அந்த கண்ணபிரான் **(கடியன் கொடியன்)** அப்படி பொல்லாதவன், ஹிம்ஸை செய்கிறவன் என்றாலும்

**(அறிவரு மேனி மாயத்தன்)** அறிய முடியாதபடி திருமேனி உள்ள அந்த மாயப்பிரானை விட்டுக் தொலையேன்? என்றாலும் முடியவில்லை **(கொடிய என் நெஞ்சம் அவனென்றே கிடக்கும்)** என் நெஞ்சம் அவனை ஒரு பொழுதும் மறக்காது **(எல்லே)** என்ன ஆச்சரியம்" என்கிறாள்.

**கண்டார் இகழ்வனவே * காதலன் தான் செய்திடினும் ***
**கொண்டானை அல்லால் * அறியாக் குலமகள் போல் ***
**விண்தோய் மதிள்புடைசூழ் * விற்றுவக்கோட்டம்மா * நீ**
**கொண்டாளா யாகிலும் * உன் குரைகழலே கூறுவனே.**

குலசேகராழ்வார், பெருமாள் திருமொழி 5-2

என்று குலசேகராழ்வார், திருவித்துவக்கோட்டுப் பதிகம், பெருமாள் திருமொழியில்.

பார்ப்பவர்கள் ஏளனமாக சிரிக்கும்படி காரியங்களையே கணவன் செய்தாலும் திருமணம் செய்து கொண்ட கணவனைத் தவிர வேறு ஒருவரையும் மனதால்கூட நினைக்காத மேலான குலத்தில் உள்ள கற்புக்கரசி போல் பகவானைப் பற்றி கைங்கர்யம் செய்ய வேண்டும் என்றார்.

பகவானுக்கு செய்யும் கைங்கர்யத்தை அசேதன வஸ்துக்கள் போல நின்று செய்ய வேண்டும்.

**சீரார் செந்நெல் கவரி வீசும் * செழுநீர் திருக்குடந்தை *
எரார் கோலம் திகழக் கிடந்தாய்! * கண்டேன் எம்மானே ***
நம்மாழ்வார் திருவாய்மொழி 5-8-1

நம்மாழ்வார் திருவாய்மொழியில், கழனியில் (வயலில்) வளரும் நெல் பயிர் கூட பகவானுக்கு ஸாமரம் வீசுகிறதாம் என்று அசேதனங்களுக்கு கூட பகவானுக்கு கைங்கர்யம் செய்ய அவ்வளவு ஆசை என்றார்.

## 13-11 மாளா அடிமை என புகுந்தாரும்

**எந்நாள் எம்பெருமான் * உன் தனக்கு
அடியோம் என்று எழுத்துப்பட்ட
அந்நாளே * அடியோங்கள் அடிக்குடில் *
வீடு பெற்று உய்ந்ததுகாண் ***
பெரியாழ்வார், பெரியாழ்வார் திருமொழி 1-1-10

பெரியாழ்வார் திருப்பல்லாண்டிலே சொல்லுகிறார்.

**(எம்பெருமான்)** பகவானே!, **(எந்நாள் உன் தனக்கு அடியோம் என்று எழுத்துப் பட்ட அந்நாளே)** எப்பொழுதும் உனக்கு அடியவர்களாகிறோம் என்று உடன்படிக்கை ஏற்பட்டதோ அந்த நாளில் இருந்து **(அடியோங்கள் அடிக்குடில்)**

தாஸர்களாகிய எங்கள் குடிசை (வீடு பெற்று உய்ந்ததுகாண்) மோக்ஷம் பெற்று உய்வித்துவிட்டதே, என்றார்.

நித்ய தாஸ்யம் என்பதால் மோக்ஷப் பிராப்தி ஸித்தித்தது. மாளா என்பது காலத்தினாலும் எந்த அளவினாலும் முடியாத, நித்யம் என்கிறது (never ending). நம்மாழ்வார் ஸாதித்தபடி **"அடிக்கீழ் அமர்ந்து புகுந்தேனே"**

**நாளேல் அறியேன் * எனக்குள்ளன * நானும்**
**மீளா அடிமைப் * பணி செய்யப் புகுந்தேன் ***
நம்மாழ்வார், திருவாய்மொழி 9-8-4

**"(நானும் மீளா அடிமைப் பணி செய்யப் புகுந்தேன்)** உனக்கு அடிமை செய்யவே பிறந்த நான் உன்னைவிட்டு பிரியாது நித்ய கைங்கர்யம் செய்ய வந்தேன். **(எனக்குள்ளன)** என் ஆத்மா இருக்கும்வரை அதைச் செய்ய வேண்டும்.

**(நாளேல் அறியேன்)** நீ எனக்கு மோக்ஷ ப்ராப்த்தி தந்து அந்தமிலா பேரின்ப கைங்கர்யத்தை அருளும் நாள் எது என்று எனக்கு தெரியாது, கண்ணா எவ்வளவு காலம் நான் காத்திருப்பேன் அந்த ப்ராப்திக்கு" என்றார் நம்மாழ்வார்.

**தான் அமுதாம் அவன் தன் * சரணே சரண் என்று அடைந்தேன் ***
**மானமிலா அடிமைப் * பணி பூண்ட மனத்தினனே**
**ஸ்வாமி தேசிகன், அமிருத ரஞ்சனி 14**

**(தான் அமுதாம் அவன் தன்)** தன்னை அநுபவிக்க அநுபவிக்க இன்பமாய் உள்ள அந்த எம்பெருமானின் **(சரணே சரண் என்று அடைந்தேன்)** திருவடிகளையே உபாயமாய் அடைந்து **(மானமிலா அடிமைப் பணி பூண்ட மனத்தினனே)** அளவில்லாத கைங்கர்ய ஸாம்ராஜ்யத்தை கெட்டியாய் பற்றிய மனம் உடையவனான ஆனேன்" என்றார்.

காலத்தினால் முடிவில்லாத ஆனந்தத்தினால் அளவில்லாத, அநுபவத்தில் குறைவில்லாத பணியை (no end in time, no limitation or decrement in eternal bliss), இதைத்தான் ஜீவன் விரும்புகிறது.

## 13-12 ஒரே உறவு - ஒரே பணி

எம்பெருமான் ஒருவன்தான் நமக்கு உண்மையான தஞ்சம். பகவான்தான் நமக்கு எல்லாவிதமான உறவுகளும் இதை ஸம்ஸ்கிருத வேதங்களும் சரி, திராவிட வேதங்களும் சரி ஒரே மாதிரி நிருபிக்கிறது

**திவ்யோ தேவ ஏகோநாராயண:**
**மாதா பிதா ப்ராதா நிவாஸஶ் ஶரணம் ஸுஹ்ருத் கதிர் நாராயண:**
ஸுபால உபனிஷத் 6

என்று ஸுபால உபனிஷத் இதைத்தான் சொல்லுகிறது திவ்யமான பரமபத நாதன் அந்த நாராயணன் தனக்கு நிகரில்லாதவன். அவனே எல்லோருக்கும் மாதா, பிதா, சகோதரன், இருக்கும் இடம், தஞ்சம், நண்பன், நற்கதி ஆவான்

**பிதா அஹம் அஸ்ய ஜகதே மாதா தாதா பிதாமஹ: ।**
**வேத்யேம் பவித்ரம் ஓங்கார ருக் ஸாம யஜு: ஏவ ச ।।**
பகவத்கீதை 9-17

என்றான் கிருஷ்ணன், பகவத்கீதையில் ஒன்பதாம் அத்யாயத்தில். இந்த அத்யாயத்திற்கு ராஜ வித்யா ராஜ குஹ்ய யோகம் என்று பெயர் தாம் செய்த உபதேசங்களில் எல்லாம் தலை சிறந்தது, மறைத்து ரஹஸ்யங்கள் மாதிரி போற்றப்பட வேண்டியது.

"நான் ஒருவனே உலகத்திற்கு பிதா, மாதா, எல்லா பிறப்புக்களுக்கும் காரணம் நான் தாத்தாவாக இருப்பவனும் நானே. ஓங்காரமாகிய ப்ரணவமும் நானே. ரிக், யஜூர், ஸாமம் என்னும் மூன்று வேதங்களும் நானே". இதில் "ச" என்கிற பதம் அனைத்தையும் என்கிறது ஏவ சப்தம் பகவானத்தவிர வேறு ஒரு பொருளுக்கு இடம் இல்லை அனைத்தும் பகவத் ஸ்வருபம்தான். பகவானத்தவிர வேறு ஒரு பொருள் இல்லை.

வேத்யம் என்றால் எல்லா வேதங்களிலும் அறியத்தக்க மிக உயர்ந்த தத்துவம். கிருஷ்ணன் தான் அது என்று கூறிக்கொள்கிறான். **வேதைஃச ஸர்வம் அஹமேவ வேத்யோ"** என்று மற்றொரு இடத்தில் கூறியதை பார்க்க வேண்டும்.

**பெற்றத்தாய் நீயே பிறப்பித்த தந்தை நீ மற்றையார் ஆவாரும் நீ**
நம்மாழ்வார், பெரிய திருவந்தாதி 5

பெரிய திருவந்தாதியில் நம்மாழ்வாரும் இதையே ஸாதித்தார்.

**ஒத்தாய் எப்பொருட்கும் உயிராய் * என்னைப் பெற்ற -**
**அத்தாயாய் தந்தையாய் * அறியாதன அறிவித்த ***
**அத்தா, நீ செய்தன * அடியேன் அறியேனே**
நம்மாழ்வார், திருவாய்மொழியில் 2-3-2

திருவாய்மொழியில், நம்மாழ்வார்,

**சேலேய் கண்ணியரும் * பெரும் செல்வமும் நன் மக்களும் ***
**மேலாத் தாய் தந்தையும் * அவரே இனி யாவாரே**
நம்மாழ்வார், திருவாய்மொழியில் 5-1-8

திருவாய்மொழியில், நம்மாழ்வார்,

**பிதா த்வம் மாதா த்வம் தயிதநயஸ்த்வம் ப்ரியஸுஹ்ருத்**
**த்வமேவ த்வம் மித்ரம் குருரஸி கதிஃசாஸி ஜகதாம் ।**
**த்வதீயஸ் த்வத்ப்ருத்யஸ் தவ பரிஜநஸ் த்வத்கதிரஹம்**
**பரப்ந்நஃசைவம் ஸத்யஹமபி தவைவாஸ்மி ஹி பர: ।।**
ஆளவந்தார், ஸ்தோத்ர ரத்னம் 60

என்று ஸ்தோத்ர ரத்னத்தில் ஆளவந்தார் ஸாதிக்கிறார். "பகவானே! எல்லா உலகங்களுக்கு தந்தை நீயே. தாயும் நீயே. அன்பான மகனும் நீயே. நல் எண்ணம் கொண்ட நண்பனும் நீயே. ரஹஸ்யங்களை பகிர்ந்து கொள்ளத் தக்க நண்பனும் நீயே. குருவு நீயே. வழியும் நீயே. பலனும் நீயே. நான் உன்னுடையவன். உன்னுடைய அடிமை. உன்னுடைய தாஸன் உன்னயே

பரம ப்ராப்யமாக கொண்டவன். உன்னையே உபாயமாக பற்றினவன். ஆகையால் ல் காக்கப்படும் பொருளாய் உள்ளேன்" என்றார்.

**த்வம் ஏவ மாதா ச பிதாத்வம் ஏவ**
**த்வம் ஏவ ப₃ந்து₄ஶ்ச கு₃ருஸ்த்வம் ஏவ ।**
**த்வம் ஏவ வித்₃யா த்₃ரவிணம் த்வமேவ**
**த்வம் ஏவ ஸர்வம் மம தே₃வதே₃வ ॥**
ராமாநுஜர், ஸ்ரீஶரணாகதிகத்யம்

என்று ஸ்ரீபாஷ்யகாரரும் தம்முடைய ஸ்ரீஶரணாகதிகத்யத்தில் இதையேத்தான் காண்பிக்கிறார் தாய், தந்தை, உறவினர், குரு, கல்வி, செல்வம் எல்லாம் நீயே.

**ஒரு ஜீவனுக்கு ஒரு ஜீவன் தஞ்சன் அல்லன்.**
**ஸ்ரீமானான நாராயணன் ஒருவனே ஸர்வ ஜீவர்களுக்கும் தஞ்சம்**
ஸ்வாமி தேசிகன், ரஹஸ்ய ரத்னாவளி 1-2

என்று ஸ்வாமி தேசிகன் சில்லரை ரஹஸ்யமான ரஹஸ்ய ரத்னாவளியில் ஸாதிக்கிறார்

**அறியாக் காலத்துக்குள்ளே * அடிமைக்கண் அன்பு செய்வித்து ***
**அறியா மாமாயத்து * அடியேனை வைத்தாயால் ***
நம்மாழ்வார், திருவாய்மொழி 2-3-3

என்று திருவாய்மொழியில் நம்மாழ்வார் ஸாதித்தார் பகவான் அவரை ஜன்ம ஸித்தி வைஷ்ணவராக செய்தார். எல்லோரும் அப்படி இல்லை.

**முந்தை மறை மொய்யவழி மொழி நீ என்று**
**முகுந்தன் அருள் தந்த பயன் பெற்றேன் நானே**
ஸ்வாமி தேசிகன், நவமணிமாலை 10

என்று ஸ்வாமி தேசிகன் நவமணி மாலையில் ஸாதிக்கிறார். என்னுடைய முந்தையாரான ஆழ்வார்கள், ஆசாரியர்கள் வேதத்தின் பல இடங்களிலும்

prapatti.com

தெளிவுற சொன்னபடி அதே வழியில் நீ செல் என்று அடியவர்க்கு மெய்யன் எனக்கு நியமித்த பலனை - கைங்கர்யம் செய்வதை - பெற்றவன் ஆனேன்

## 13-13 ஆவி அரிமுகனுக்கே தந்து இருந்தாரும்

**அவனாம் இவனாம் உவனாம் * மற்று உம்பர்**
**அவனாம் அவன் என்று இராதே * - அவனாம்**
**அவனே எனத் தெளிந்து கண்ணனுக்கே தீர்ந்தால் ***
**அவனே எவனேலும் ஆம்"**

நம்மாழ்வார், பெரிய திருவந்தாதி 36

**(அவன்)** அந்த பெருமாள்
**(அவனாம்)** தூரத்தில் உள்ள துர்லபனோ,
**(இவனாம்)** அருகில் உள்ள ஸுலபனோ,
**(உவனாம்)** நடுவில் இரண்டு விதமாகவும் இருப்பானோ
**(மற்று உம்பர் அவனாம்)** நித்யர்கள் வணக்கும் பரமபத நாதனே, கலங்காதே!
**(அவன் அவனே ஆம்)** அவன் ஆச்ரித பாரதந்திர்யத்தை உடையவனே
**(எனத் தெளிந்து)** என அறிந்து கொண்டு
**(கண்ணனுக்கே தீர்ந்தால்)** கண்ணனுடைய ஸௌலப்யத்தில் இழிந்தால்,
**(அவனே எவனேலும் ஆம்)** அவனே ஸகல விதத்திலும் ரக்ஷகன் ஆவான்.

ஆவியை அவனுக்கு கொடுத்தால், மீதியை கவனிப்பது யார்? என்று கலங்காதே. அவனே எல்லாவற்றையும் பார்த்து கொள்வான்

## 13-14 யாருக்கு யார் எதைத் தருவது?

**எனதாவியுள் கலந்த * பெருநல் உதவிக் கைம்மாறு ***
**எனதாவி தந்து ஒழிந்தேன் * இனி மீள்வது என்பது உண்டோ? ***
**எனதாவி ஆவியும் நீ * பொழில் ஏழும் உண்ட எந்தாய் ***
**எனதாவி யார்? யான் ஆர்? * தந்த நீ கொண்டாக்கினையே.**

நம்மாழ்வார் திருவாய்மொழி 2-3-4

“பகவானே, **(பொழில் ஏழும் உண்ட எந்தாய்)** இப்படி ஏழு உலகங்களையும் உன் திருவயிற்றில் வைத்துக் காத்த நீ **(எனதாவியுள் கலந்த பெருநல் உதவிக் கைம்மாறு)** என் ஆத்மாவுடன் கலந்து கொடுத்த அனுபவம் பெரிய உபகாரம் பண்ணினாய்.

அதற்கு நான் திருப்பி என்ன செய்வேன்?” **(எனதாவி தந்து ஒழிந்தேன்)** சரி, என்னுடைய ஆத்மாவைக் கொடுக்கிறேன். **(இனி மீள்வது என்பது உண்டோ?)** அதற்கு பிறகு நான் தனியாக திருப்பி வருவது என்பது முடியுமா?

**(எனதாவி ஆவியும் நீ)** நீ அல்லவா என் என் உயிருக்குள்ளும் உயிராய் இருப்பவன். ஐயோ! ஆத்ம அபஹாரம் பண்ணினேே? இத்தனை நாள் என்னுடையது என்று எண்ணி இருந்து, அதை உனக்கு ஸமர்ப்பிக்க முற்பட்டேனே? **(எனதாவி யார்? யான் ஆர்?)** யாருக்கு கொடுத்தேன், யாருடையதைக் கொடுத்தேன்?

நான் யார்? என் உயிர் யார்? இரண்டுமே உன்னுடையவை. நான் என்னும் அசேதனமான இந்த உடம்பும், என் உயிர் என்று சொல்கிற ஆத்மாவும் உன்னைச் சேர்ந்தவை. நீயே கொடுத்த பொருளை உனக்கு நீயே உரிமை ஆக்கிக் கொள்கிறாய்.

இதே கருத்தை ஸ்வாமி ஆளவந்தார் ஸ்தோத்ர ரத்னத்தில் அருளுகிறார்.

**வபுராதி$_4$ஷு யோபி கோபிவா**
**கு$_3$ணதோ ஸாநி யத$_2$ா தத$_2$ா வித$_4$:|**
**தத$_3$யம் தவ பாத$_3$ பத்$_3$மயோ:**
**அஹ மத்$_4$யைவ மயா ஸமர்ப்பித: ||**

ஆளவந்தார், ஸ்தோத்ர ரத்னம் 52

**(வபுராதி$_4$ஷு ய அபி: க: அபி: வா)** சரீரம் போன்றவற்றில் ஏதாவது ஒன்றாக **(கு$_3$ணத: யத$_2$ா தத$_2$ா வித$_4$)** குணத்தில் ஏதாவது ஒரு விதத்தில் **(அஸாநி)** இருக்கக் கடவேன். அதை பற்றி கவலை இல்லை.

prapatti.com

**(தத்$_3$ அயம் அஹம்)** எனவே இந்த ஆத்மா ஆகிற என்னை
**(தவ பாத$_3$ பத்$_3$மயோ:)** உன்னுடைய திருவடித் தாமரையில்
**(மயா ஸமர்ப்பித:)** என்னால் ஸமர்பிக்கப் பட்டேன்
**(அத்யைவ)** இந்த க்ஷணத்திலேயே.

பகவானே! இந்த ஸ்வரூப, ஸ்வபாவங்கள் எப்படியானாலும் எனக்கு கவலை இலை. இதை பற்றை எல்லாம் யார் கவலைப் பட்டார்கள்? அதில் எனக்கு ஒரு நிர்பந்தம் இல்லை. இந்த ஆத்மாவை உன்னிடம் ஸமர்பிக்கிறேன். அதில்தான் என் நோக்கு என்றார்.

> **மமநாத$_2$ யத$_3$ஸ்தி யோஸ்ம்யஹும்**
> **ஸகலம் தத்$_3$தி$_4$ தவைவ மாத$_4$வ ।**
> **நியத ஸ்வ மிதி ப்ரபு$_3$த்$_3$த$_4$ தீ$_4$**
> **அத$_2$வா கிந்நு ஸம்ர்ப்பயாமி தே ।।**
>
> ஆளவந்தார், ஸ்தோத்ர ரத்னம் 53

**(மாத$_4$வ நாத$_2$)** பிராட்டியுடன் கூடி இருக்கும் ஸர்வ ஸ்வாமியே,
**(ய அஹம் அஸ்மி)** எந்த நான் என்று ஒருவன் இருக்கிறேனோ,
**(மம யத்$_3$ அஸ்தி )** எது எல்லாம் எனக்கு சொந்தமாக இருக்கிறதோ,
**(தத் ஸகலம்$_3$)** அவை எல்லாம்
**(தவ ஏவ நியத ஸ்வம்)** உனக்கே எப்போதும் உரிமையானது.
**(இதி ப்ரபு$_3$த்$_3$த$_4$ தீ$_4$)** இந்த அறிவை உடைய அடியேன்
**(தே கிம் நு ஸமர்ப்பயாமி)** உனக்கு எதைத்தான் ஸமர்பிப்பேன்?

“ஸர்வஸ்வாமியாக இருக்கும் லக்ஷ்மிநாதனே, எனக்கு எது சொந்தம் என்று இருக்கிறதோ, நான் யாராக இருக்கிறேனோ, அவை எல்லாம் உனக்கு என்றைக்கும் சொந்தம் அல்லவா? இந்த புத்தி வந்த நான், உனக்கு ஸமர்ப்பிக்க என்னிடம் என்ன இருக்கிறது?” என்றார்.

## 13-15 ஆத்ம ஸமர்ப்பணம்

prapatti dot com

**பொன்னை இகழ்ந்து விருகங்கள் * புல்லிய புல் உகந்தால் *
மன்னர் எடுப்பது அப் பொன் அலதே * மன்னுலகனத்தும் *
தன்னை அடைந்திடத் * தானருள் செய்யும் தனிச்சிலையோன் *
பொன்னடி நாமடைந்தோம் * புறம் ஆர் என் கொல் செய்திடினே**
ஸ்வாமி தேசிகன் அமிருத ஸ்வாதினி 17

**(விருகங்கள் பொன்னை இகழ்ந்து)** மிருகங்கள், தங்கத்தை தள்ளி
**(புல்லிய புல் உகந்தால்)** அல்பமான புல்லை மகிழ்ச்சியுடன் எடுத்தாலும் [வியாக்கியானத்தில் தங்கத்தை விற்று தவிட்டு வாங்கினாற்போலே என்கிறார்கள். **"அகலவனை அலக்கி அகல் விளக்கு இட்டார்போல்".**]

**(மன்னர் எடுப்பது அப்பொன்)** அரசர்கள் எடுப்பது அந்த தங்கத்தைத்
**(அலதே)** தவிர வேறு ஒன்று உண்டோ? அதைப்போல,
**(மன்னுலகனத்தும்)** உலகம் எல்லாம்
**(தன்னை அடைந்திடத்)** தன்னை ஆஸ்ரயிக்க
**(தான் அருள் செய்யும்)** அருள் செய்யும்
**(தனிச்சிலையோன்)** ஒப்பற்ற வில்லாளியான பகவானுடைய
**(பொன்னடி)** தங்கம் போல் இருக்கும் திருவடிகளை
**(நாமடைந்தோம்)** நாம் அடைந்தோம்.
**(புறம் ஆர்)** மீதி யார்
**(என் கொல் செய்திடினே)** என்ன செய்தால் நமக்கு என்ன?
(who cares what the other people do?)

**பவித்ராணாம் பவித்ரம் யோ மங்க3ளாநாம் ச மங்க3ளம் |
தை3வதம் தே3வதாநாம் ச பூ4தநாம் யோவ்யய: பிதா**
ஸ்ரீவிஷ்ணு ஸஹஸ்ரநாமம் 10

எந்த பகவான் தூய்மையில் தூய்மையாக இருக்கிறானோ, மங்களங்களுக்குள் மங்களமாக இருக்கிறானோ, தேவதைகளுக்குள் தேவதையாக இருக்கிறானோ எவன் ஒருவன் எல்லா ஜீவராசிகளுக்கெல்லாம் அழிவற்ற தந்தையாக இருக்கிறானோ - அந்த பகவானுக்கு தன் ஆத்மாவை ஸமர்ப்பணம் செய்தவன், உடம்பைப் பற்றி கவலைப்படுவானா?

ஒரு கவி சொல்லுகிறான் எப்படி உடம்பை புஷ்டியாக, வைதுக் கொண்டு பார்த்து பார்த்து உடம்பை வளர்க்கிறானோ அவனை யம தர்ம ராஜா தெற்கு திசையிலிருந்து பார்த்து சிரிக்கிறான் இந்த உடம்பை பக்ஷிக்கோ, அக்னிக்கோ, இல்லை மண்ணுக்கோ கொடுக்கப் போகிறாய் என்று

## 13-16 தேடி அடைவது உகத்தின் சுகமே.

**வெந்நாகத்து உன்னை ***
**தெரித்து எழுதி வாசித்தும் கேட்டும் * வணங்கி வழிபட்டும் ***
**பூசித்தும் போக்கினேன் போது**

திருமழிசையாழ்வார், நான்முகன் திருவந்தாதி 63

திருமழிசையாழ்வார், சொல்கிறார். பகவானே, "அந்தராத்மாவாகிய உன்னை
(தெரித்து எழுதி) அறிந்தும், பாசுரங்கள் எழுதியும்,
(வாசித்தும் கேட்டும்) படித்தும், பல பாகவதர்களிடம் காது கொடுத்து கேட்டும்
(வணங்கி வழிபட்டும்) நமஸ்காரங்கள் பண்ணியும்,
(பூசித்தும்) பூஜை போன்ற பல கைங்கர்யங்கள் செய்தும்
(போது போக்கினேன்) காலத்தைக் கழித்துக் கொண்டு இருக்கிறேன்".
[That's how I spend my life. I am still alive just because of these activities]

**கருமமும் கரும பலனும் ஆகிய * காரணன் தன்னை ***
**திருமணி வண்ணனைச் செங்கண் மாலினைத் * தேவபிரானை ***
**ஒருமை மனத்தினுள் வைத்து * உள்ளங் குழைந்து ஆடி ***
**பெருமையும் நாணும் தவிர்ந்து * பிதற்றுமின் பேதமை தீர்ந்தே**

நம்மாழ்வார், திருவாய்மொழி 3-5-10

என்று காரணமும், காரியமும் ஆகிய எம்பெருமானை ஒரே மனத்துடன் உள் நினைந்து, உள்ளம் உருகி, ஆடிப்பாடி மகிழ்ந்து உங்களுடைய அறியாமையை போக்கிக் கொள்வீர்கள் என்றார்.

எல்லோருக்கும் முன்னே பக்தி பரவசத்தால் ஆடி பாடுவது சரியா? என்ற வெட்க உணர்ச்சியை விட்டு விடுங்கள். எம்பெருமான் பரோபகாரன். அவனை எல்லாவிதமாகவும் போற்றுங்கள். அதுதான் பொழுது போக்கு. அதுதான் பரம புருஷார்த்தம்.

## 13-17 உகத்தின் சுகம், விபவாவதாரத்திலே

சுகம் என்பது இன்பம், ஆனந்தம், மகிழ்ச்சி. அந்த இன்பத்தின் எல்லை, அதாவது இதுதான் maximum, இதற்கு மேலே போக முடியாது என்ற ஒரு எல்லை இருக்குமே, அது எப்படி இருக்கும்? என்று கேட்டால் யசோதை அனுபவித்தது போல் இருக்கும் என்றார் குலசேகராழ்வார்.

முழுதும் வெண்ணெய் அளைந்து தொட்டு உண்ணும் *
முகிழ் இளஞ் சிறுத் தாமரைக் கையும் *
எழில்கொள் தாம்பு கொண்டு அடிப்பதற்கு எள்கும்
நிலையும் * வெண்தயிர் தோய்ந்த செவ்வாயும் *
அழுகையும் அஞ்சி நோக்கும் அந்நோக்கும் *
அணிகொள் செஞ்சிறு வாய் நெளிப்பதுவும் *
தொழுகையும் இவை கண்ட அசோதை *
தொல்லை இன்பத்து இறுதி கண்டாளே
குலசேகராழ்வார் பெருமாள் திருமொழி 7-8

குலசேகராழ்வார் யசோதையின் இன்பத்தை வர்ணிக்கிறார். ஏரார்ந்த கண்ணியாயிற்றே. பகவான் லீலைகளை எல்லாம் தம் கண்ணால் கண்டு மகிழ்ந்தவள்.

## 13-18 உகத்தின் சுகம், பாகவத கைங்கர்யத்தில்

திருவாய் மொழி எட்டாம் திருவாய்மொழி, நெடுமாற்கடிமை என்ற ஒன்பதாம் பதிகம் பூராகவும் பாகவத ஸேஷத்வத்தை சொல்லுகிறது

**ஒன்றுண்டு செங்கண்மால்! * யான் உரைப்பது * உன்னடியார்க்கு**
**என் செய்வனே என்றே இருத்தி நீ * நின் புகழில்**
**வைகும் தம் சிந்தையிலும் மற்றினிதோ? * நீ அவர்க்கு**
**வைகுந்தம் என்று அருளும் வான்.**
நம்மாழ்வார், பெரிய திருவந்தாதி 53

பெரிய திருவந்தாதியில் நம்மாழ்வார், பகவானைக் கேட்கிறார். “செந்தாமரைக் கண்ணனே! உனக்கு நான் ஒன்று சொல்கிறேன். நன்றாக கவனித்து கேள். நீ உன் அடியவர்களுக்கு எல்லாம் வாரி வழங்கி, அது போதாது இன்னும் என்ன தருவது என்று கலங்கிக் கிடக்கிறாய்.

உயர்ந்த புருஷார்த்தம் என்று எல்லோரும் சொல்வது பரமபதம். அந்த நித்ய விபூதியை தொண்டர்களுக்கு நீ அருள ஆசைப்படுகிறாய். சரி, அந்த இடம் உன்னுடைய திருக்கல்யாண குணங்களில் ஊறி இங்கேயே அனுபவிக்கும் மகிழ்ச்சியைவிட சிறந்ததாக இருக்குமா? யோசித்து சொல்” என்றார்.

இதைப் பார்த்து, சரி நமக்கும் மோக்ஷம் வேண்டாம், இங்கேயே இருந்து விடலாம் என நினைக்க கூடாது. இப்படி சொல்வது ந ஹி நிந்த்யா ஜ்ஞாயம் என்று அழைப்பர். ஒன்றை உயர்த்தி சொல்லும்போது மற்றதை சிறிது தாழ்த்துவது ஒரு ரஸனைக்கே அன்றி உண்மையில் இல்லை.

ஆழ்வார் நமக்கு இப்பூமியில் கிடைக்கும் பகவத் அனுபவமும் வைகுண்டத்திற்கு ஒப்பே தவிர குறை ஒன்றுமில்லை என்றார்.

**தூராத மனக்காதல்தொண்டர் தங்கள் ***
**குழாம் குழுமித் திருப்புகழ்கள் பலவும் பாடி ***
**ஆராத மனக் களிப்போடு அழுத கண்ணீர் ***
**மழை சோர நினைந்து உருகி ஏத்தி நாளும்***
குலசேகராழ்வார், பெருமாள் திருமொழி

prapatti.com

என்று குலசேகரன் வர்ணித்த அடியார் கூட்டங்களுடன் சேர்ந்து இருப்பதே, அவர்களின் ஆனந்த கண்ணீர் பெருக்கெடுத்து, பூமி பூராகவும் சேறாகி, அந்த சேறை எடுத்து நம் தலையில் பூசிக் கொள்வதே சுகம்.

**பேராளன் பேர் ஓதும் பெரியோரை**
**ஒரு காலமும் பிரிகிலேன்**
திருமங்கையாழ்வார், பெரிய திருமொழி 11-6-7

என்று அவர்களை விட்டு ஒரு கணமும் பிரிய முடியுமோ? அதுவே உகத்தின் சுகம்.

**இன்றோ திருவாடிப்பூரம் * எமக்காக**
**அன்றோ * இங்கு ஆண்டாள் அவதரித்தாள் * குன்றாத**
**வாழ்வான * வைகுந்த வான் போகம் தன்னை இகழ்ந்து ***
**ஆழ்வார் திருமகளாய் வந்து**
மணவாள மாமுனிகள், உபதேசரத்னமாலை 22

என்று மணவாள மாமுனிகள் ஆழ்வார்களில் பெண்ணாக அவதரித்த ஆண்டாளை புகழும்போது, பரமபதத்தை வேண்டாம் என்று இகழ்ந்து பூமியில் இங்கே எமக்காக பிறந்தார் என்கிறார். பாகவத குழாங்களுடன் அர்ச்சாவதார எம்பெருமானை அனுபவிப்பதே மேலான சுகம்.

**"பகவத் கைங்கர்யமும், பாகவத கைங்கர்யமும் சேர அநுஷ்டிக்க அரிதானபோது பரம புருஷார்த்த காஷ்டையான பாகவத கைங்கர்யமே உபாதேயதமம்" என்றது.**
ஸ்வாமி தேசிகன், ரஹஸ்ய ரத்நாவளி 21

என்று ஸ்வாமி தேசிகன் ஸாதித்தார்.

## 13-19 உகத்தின் சுகம், பகவத் ஸ்மரணையில்

**ஸ்நேஹோ மே பரமோ த்வயி நித்யம் ப்ரதிஷ்டித:**



prapatti.com

**பக்திஸ்ச நியதா வீர பாவோ நாந்யத்ர கச்சதி**
ராமாயணம், உத்தர காண்டத்தில் 40-15

ராமாயணம், உத்தர காண்டத்தில் வரும் ஸ்லோகம். ராமன் தன்னுடைய பரஞ்சோதிக்கு எழுந்தருள நினைத்த போது அனுமனையும் அழைக்கிறார். அதற்கு ஆஞ்சநேயர் பதிலளிக்கிறார். பகவானே! உம்மிடத்தில் எனக்கும் மிகுந்த அன்பு எப்பொழுதும் நிலைத்து நிற்கிறது வீரரே, உம்மிடத்தில், பக்தியும் நித்யமாய் நிற்கிறது அதனால் என் நினைவு வைகுண்ட நாதனிடமும் செல்வதில்லை என்றார். அதாவது ராமனிடல் உள்ள பக்தி, இன்பம் பரம்பததிலேயும் கிடையாது என்கிறாற்போல்.

**மாயோனை மணத்தூணே பற்றி நின்று * என்**
**வாயார என்றுகொலோ வாழ்த்து(ம்) நாளே?**
குலசேகராழ்வார், பெருமாள் திருமொழி 1-2

**ஆமோத ஸ்தம்ப த்வயம்**
பராசர பட்டர், ரங்கராஜஸ்த்வம்

ஸ்ரீரங்கம் கோவிலில், பெரிய பெருமாள் கர்ப்பக்ருஹத்திற்கு முன்னே உள்ள இரண்டு வாசனை மிக்க திருமணத்தூண்களை பற்றி நிற்பார்களாம் அடியவர்கள். பெரிய பெருமாளுடைய அழகு என்னும் வெள்ளத்தில் சிக்குண்டு, பேரானந்த வெள்ளம் அடித்து தள்ளாமல் இருக்க இதை பற்றி நிற்பர் என்றார். அதுவே உகத்தின் சுகம்.

**பேயரே * எனக்கு யாவரும் * யானும் ஓர்**
**பேயனே * எவர்க்கும் இது பேசி என் ***
**ஆயனே! * அரங்கா! என்று அழைக்கின்றேன் ***
**பேயனாய் ஒழிந்தேன் * எம் பிரானுக்கே**
குலசேகராழ்வார், பெருமாள் திருமொழி 3-8

மற்றவர்கள் எல்லாம் உலகத்து சுகங்களில் மயங்கி கிடக்கிறார்கள். நானோ எம்பெருமானே பரம ப்ராப்யம் என்று வாழ்கிறேன். அவர்கள் என்னை ஒரு பைத்தியக்காரன் என்கிறார்கள். நான் அவர்களை பைத்தியக்காரர்கள் என்கிறேன். இது எல்லாம் பேசி என்ன பயன்? கிருஷ்ணனாக அவதரித்தவந்தான் ஸ்ரீரங்கத்தில் ஸயனித்து உள்ளான். அந்த

எம்பெருமானிடம் நான் பைத்தியக்காரன் ஆனேன் என்கிறார். அதுதான் உகத்தின் சுகம்.

## 13-20 உகத்தின் சுகம், அர்ச்யாவதாரத்திலே

**இச்சுவை தவிர யான் போய் * இந்திர லோகம் ஆளும் ***
**அச்சுவை பெறினும் வேண்டேன் * அரங்கமா நகர் உளானே! ***
தொண்டரடிப்பொடி ஆழ்வார் திருமாலை 2

தொண்டரடிப்பொடி ஆழ்வார் திருமாலையில் தன்னுடைய அநுபவத்தை சொல்கிறார்

**ஏரார் முயல் விட்டு காக்கைப் பின் போவதேன்**
திருமங்கையாழ்வார், சிறிய திருமடல்

திருமங்கையாழ்வார் சொல்கிறார், தரையில் ஒடும் முயலை விட பறந்து போகும் காக்கையின் மாமிசத்தை ஒருவன் தேடுவானோ? அது போல கண் கண்ட தெய்வமாய் அர்ச்யாவதார மூர்த்திகள் இருக்க, மோக்ஷத்தை ஒருவன் விரும்புவானோ? என்ற நோக்கில் சொன்னதாக முன்னோர் விளக்கம்.

**நிரந்தரம் நிர் விஶதஸ் த்வதீ$_{3}$யம்**
**அஸ்ப்ருஷ்ட சிந்தாபத$_{3}$ மாபி$_{4}$ருப்யம் ।**
**ஸத்யம் ஶபே வாரண ஶைலநாத$_{2}$**
**வைகுண்ட$_{2}$ வாஸேபி ந மேஶபி$_{4}$லாஷ: ।।**
ஸ்வாமி தேசிகன், வரதராஜ பஞ்சாத் 49

**(வாரண ஶைலநாத$_{2}$)** ஹே ஹஸ்திசைலனே!
**(அஸ்ப்ருஷ்ட சிந்தாபத$_{3}$ம்)** மனதால் எண்ண முடியாத
**(த்வதீ$_{3}$யம் ஆபி$_{4}$ருப்யம்)** உன் திருமேனி அழகை
**(நிரந்தரம் நிர் விஶத: மே)** எப்போதும் நான் அனுபவிக்கிறேன்.

(ஸத்யம் ஶபே) உண்மையாக ஆணையிட்டு சொல்கிறேன். [இதை துறந்து]
(வைகுண்ட$_2$ வாஸேபி) மோக்ஷத்தில் வசிப்பதில்கூட
(ந அபி$_4$லாஷ:) எனக்கு ஆசையில்லை
என்று வரதராஜ பஞ்சாஶத்தில் இதையே ஸ்வாமி தேசிகன் ஸாதிக்கிறார்.

உன்னை இந்த அல்பமான கண்களால் அனுபவிக்கும் சுகம் கிடைத்தது எனக்கு. இத்தகைய இன்பத்தில் மூழ்கியுள்ள எனக்கு அந்த பரமபத வாஸம் கூட ரஸிக்கவில்லை என்பது ஸத்யம். இது ஆணையிட்டு சொல்கிறேன்.
"கண் எதிரே உள்ள இந்த ஆனந்தத்தை விட்டு எப்பொழுதோ எங்கோ கிடைக்கப்போகும் பரமபத்தை இந்த மனது விரும்பவில்லை," என்றார்.

மாயப் பெருவிறல் உலகம் *
மூன்றினொடு நல்வீடு பெறினும் *
கொள்வது எண்ணுமோ தெள்ளியார் குறிப்பே
நம்மாழ்வார், திருவாசிரியம்

என்று "மஹா வீரம், மூன்று உலகங்களுக்கும் அதிபதி, உயர்ந்த மோக்ஷ ஸாம்ராஜ்யம், இவற்றை ஒன்றாய் சேர்த்து பெற்றாலும், அறிவாளிகள் தம் ஆழ்ந்த அறிவைக் கொண்டு அலசிப் பார்க்கும்போது இவற்றை எல்லாம் பெற்றுக் கொள்ள ஆசைப்படுவாரோ?," என நம்மாழ்வாரும் அருளினார்.

## 13-21 உகத்தின் சுகம், ஸ்ரீவைகுண்டத்திலே

சுகம் என்பது ஆனந்தம். தைத்ரிய உபநிஷத் ஆனந்தவல்லி ஆனந்தத்தை பற்றி சொல்வதன் ஸாரம்

பூமி முழுவதும் ஒரு மனிதனுக்கு சொந்தம் என்றால் அவனுடைய ஆனந்தம் ஒரு மனுஷ ஆனந்தம் (ruler = king of the entire earth)
அதைப்போல் 100 பங்கு (100 times) மனித கந்தர்வருடைய ஆனந்தம்
அதைப்போல் 100 பங்கு தேவ கந்தர்வருடைய ஆனந்தம்
அதைப்போல் 100 பங்கு நீண்ட ஆயுளையுடைய பித்ருக்களுடையது
அதைப்போல் 100 பங்கு பிறவியால் தேவனாய் இருப்பவனின் ஆனந்தம்

**அதைப்போல் 100 பங்கு கர்மாவில் தேவன் ஆனவனின் ஆனந்தம்**
**அதைப்போல் 100 பங்கு முக்ய தேவர்களுடைய ஆனந்தம்**
**அதைப்போல் 100 பங்கு தேவேந்திரனுடைய ஆனந்தம்**
**அதைப்போல் 100 பங்கு பிரஹஸ்பதியின் ஆனந்தம்**
**அதைப்போல் 100 பங்கு பிரஜாபதியின் ஆனந்தம்**
**அதைப்போல் 100 பங்கு பிரம்மாவின்ஆனந்தம்**
**அதைப்போல் 100 பங்கு ப்ரஹ்மத்தின்ஆனந்தம் = ப்ரஹ்மானந்தம்**
( 10 power 22)

## 13-22 எங்கும் உகத்தின் சுகமே

இப்படி பகவத் ஸ்வரூப ரூப குண விபூதியின் அநுபவம் என்று எல்லாவற்றிலும் திளைத்து மகிழ்வதே சுகம். இதை விட்டு, ப்ரம்ம நிர்க்குணம், அதற்கு ரூபம் இல்லை, ஜீவனும் ப்ரம்மமும் ஐக்யம் என்று எல்லாம் சொல்லி அதை புருஷார்த்தமாக எண்ணி அலைவது நம்முடைய ஸம்பிரதாயமன்று..

ஸம்ஸாரிகளைப்போல் போல் ஏதோ ஒரு பொருளுக்கோ, அல்ப ஆசைக்கோ அலைவதை விட்டு, தான், தனது என்பதை மறந்து, பகவத் பாகவத் கைங்கர்யங்களில் ஈடுபடுபவர்கள் பெறுவது என்றும் உகத்தின் சுகமே.

**எம்பெருமானார் - கண்ணழிவற்றானொரு வைஷ்ணவனைக் கண்டால் அவனுக்கு ப்ரீதிக்கு போக்குவீடாக ஒரு த்வயத்தை அருளிச் செய்வர். பிறருடைய துர்க்கதியைக் கண்டால் திருவுள்ளத்தால் இரங்கி அருளிச் செய்வதும் த்வயத்தை.**

**“பாலகன் ஆகையாலே உனக்கு ஒரு ப்ரமாணங்களால் ஸ்தாபிக்கப் போகாது; நான் ஸகலவேத சாஸ்திரங்ககளையும் ஆராய்ந்து பார்த்தவிடத்தில் இவ்வாத்மாவுக்கு தஞ்சம் த்வயத்துக்கு அவ்வருகு கண்டிலேன். நீயும் அத்தை விஶ்வஸித்திரு” என்றார்.**
பிள்ளைலோகாசாரியார், தனித்வயரஹஸ்யம்

என்று எம்பெருமானருடைய உபதேஸம் த்வயார்த்தாநுஸந்தானமே.

prapatti dot com

# 14 - நம:

**ஒழிந்தது யான் எனது எனக்கே ***
**மகிழ்ந்தது மனம் அதுவும் உமக்கே.**

| | |
|---|---|
| **யான்** | = அகங்காரம் (I) |
| **எனது** | = மமகாரம் (mine) |
| **எனக்கே** | = அதற்கு மேல் உண்டாகும் சுயநலம் (only for me) |
| **ஒழிந்தது** | = அறவே மறைந்தது |
| **மனம்** | = (அத்தால்) என்னுடைய மனம் |
| **மகிழ்ந்தது** | = சந்தோஷப்பட்டது |
| **அதுவும்** | = (உடனே ஞாபகம் வந்து) அந்த இன்பமும் |
| **உமக்கே** | = எம்பெருமானே! ஸர்வமும் உமக்கே என்ற அறிவு வந்தது. |

## 14-1 முன்னுரை

பாசுரத்தின் முதல் பதம் **ஒழிந்தது.** அதாவது சேதனனுக்கு உள்ள அகங்கார மமகாரங்கள் எல்லாம், தான், தனது என்று இறுமாந்திருக்கும் விபரீத எண்ணங்கள். அவை எல்லாம் ஆசார்ய ஸம்பந்தத்தினால், பாகவத ஸம்வர்கத்தினால், உயர்ந்த விஷயங்களை கேட்டு, நினைத்து, ஸ்மரித்து தன்னை உணர்ந்ததால் நீங்கக் கூடியது.

அப்படி என்றால் நாம் எதற்கு ஒரு காரியம் செய்கிறோம். அதற்கு பலன் என்ன? நான்தானே காரியம் செய்கிறேன் என்றால் இல்லை. ***ஸ்வஸ்மை, ஸ்வப்ரீதியே ஸ்வயம் ஏவ காரயதி*** என்கிறாற்போல், பகவானுக்கே எல்லாம்,. அதை நடத்துபவனும் அவனே. அதன் பலனும் அவனுக்கே. இதைக் காட்டுகிறது கடைசி பதம் **“உமக்கே”**

## 14-2 நம: என்றால் என்ன?

த்வயத்தில் கடைசி பதம் நம: இந்த பதம் திருமந்த்ரத்திலும் வருகிறது. ஓம் நமோ நாரயணாய: என்கிற அஷ்டாக்ஷரத்தின் நடுவில் மத்ய பதமாய் உள்ளது.

திருமந்த்ரத்தில் வரும் நம: என்பதற்கு ஸ்வாமி தேசிகன் அர்த்தம் ஸாதிக்கும்போது அநிஷ்டம் என்ற சொல்லால் விவரித்தார் ந, ம என்று இரண்டு சொற்கள். அதன் பொருள் (ம) = எனக்கு ; (அநிஷ்டம்) = இஷ்டமில்லாத தீமை; (ந) = வர வேண்டாம்.

ஆனால் த்வயத்தில் வரும் நம: வின் பொருள் விசேஷமாக, வேறு விதமாக கூறப்படுகிறது இங்கு களையறுப்பதை சொன்னது மோக்ஷத்தில் கைங்கர்ய பலனைப் பெறுகிறோம் பூலோகத்தில் பகவத் அநுபவத்திலும் ஈடுபடுகிறோம் அப்பொழுது இயற்கையாய் வரக்கூடிய தகாத எண்ணங்களைத் தவிர்க்க வேண்டும்

## 14-3 ஸ்வாமி தேசிகனின் விளக்கம்

> **இங்குற்ற நமஸ்ஸூ திருமந்திரம் போலே இரண்டக்ஷரமும் இரண்டு பதமுமாய் ஒரு வாக்யமுமாய் எனக்காகவே அல்லன் என்றதாயிற்று. இத்தால் அவித்யா கர்மாதிகளான அநிஷ்டவர்கத்தை எல்லாம் கழியா நிற்கச் செய்தே இக்கைங்கர்யமும் மற்றுள்ள புருஷார்த்தங்களில் வரும் ஸ்வாதீந ஸ்வார்த்த கர்த்ருத்வ போக்த்ருத்வ ப்ரம ரூபமான களையற்று நின்ற நிலை ப்ரதாநமாக அநுஸந்தேயம்**
>
> ஸ்வாமி தேசிகன், ஸ்ரீரஹஸ்யத்ரய சுளகம்

கீழே திருமந்திரத்தில் உள்ள நம: என்ற பதத்திற்கு விவரணம் செய்தாற்போல் இங்கேயும் இரண்டு எழுத்துக்களையும், இரண்டு பதமாக வைத்துக் கொண்டு, ஒரு வரியாக ஆக்கி பொருள் சொல்ல வேண்டும்.

ந = இல்லை
ம = எனக்கு

ஸ்யாம் = (பதத்தை வரவழைத்துக் கொண்டால்) அது சேஷன்.
நான் எனக்கு ஸேஷனில்லை. இது அகங்காரத்தை ஒழிப்பதைக் காட்டும்.

ந = இல்லை
ம = எனக்கு
கிஞ்சித் ஸ்யாத் = (பதத்தை வரவழைத்துக் கொண்டால்) துளிக்கூட இல்லை.
அதாவது எந்த பொருளும் எனக்கு இருக்க வேண்டாம். இது மமகாரத்தை ஒழிப்பதைக் காட்டுகிறது.

என்று ஸ்யாம் என்ற சொல்லை வரவழைத்துக் கொண்டு பொருள் சொல்ல வேண்டும்.

இப்படித் தடையாய் உள்ள மமகாரத்தை ஒழிப்பதால் நமக்கு தீமை விளைவிக்கும் எல்லா அநிஷ்டங்களும் போக வேண்டும் என்று வேண்டுவதாக கொள்ளலாம்.

அநிஷ்டங்கள் என்றால் அவை என்ன? **அஜ்ஞாநம், கர்மா, வாசனை, ருசி, தேஹ ஸம்பந்தம்** என்ற சுழல். இவற்றிலிருந்து விடு பட வேண்டும் என்கிற பிராத்தனை. ஸம்ஸாரம் நீங்க வேண்டும் என்பதாய் கொள்ள வேண்டும்.

## 14-4 விலக்க வேண்டிய விபரீத எண்ணங்கள்

விபரீதமான எண்ணங்கள் நான்கு. இதை தோஷ சதுஷ்டயம் என்பர்.

1. **ஸ்வாதீந கர்த்ருத்வம்** - காரியங்களை நானே சுதந்திரமாய் செய்கிறேன் (I act independently)
2. **ஸ்வாதீந போக்யத்வம்** - என்னுடைய பயனுக்காகவே செய்கிறேன் (for my personal gain)

3. **ஸ்வார்த்த கர்த்ருத்வம்** - பலனை நானே சுதந்திரமாக அனுபவிக்கிறேன் (enjoys independently )
4. **ஸ்வார்த்த போக்யத்வம்** - எனக்காகவே அனுபவிக்கிறேன் (For my own pleasure)

இந்த தவறான எண்ணங்கள் கழிய வேண்டும் என்று பிரார்த்திப்பதில் நோக்கு **"பறை நோக்க"** என்று இங்கே உகத்தின் சுகத்தில் ஐந்தாம் பாசுரத்தில் விளக்கியதை ஞாபகம் செய்து பார்க்க வேண்டும்.

மோக்ஷத்தில் இந்த குற்றங்கள் எல்லாம் தவிர்த்து பணி புரியும் கைங்கர்யம் என்பத காட்டுவதே நம: பதத்தின் ஸாரார்த்தம்.

## 14-5 பிள்ளைலோகாசாரியார் விளக்கம்

**நம: கைங்கர்யத்தில் களை அறுக்கிறது.**
**களையாவது தனக்கு எனப் பண்ணும் அது.**
**இதிலே அவித்யாதிகளும் கழியுண்ணும்**

பிள்ளைலோகாசாரியார், முமுக்ஷுப்படி 178-180

என்றும்

**நிரதிஶய போக்யமான பகவத்விஷயத்தை விஷயீகரித்து இருக்கையாலும் நிரஸ்த ஸமஸ்த ப்ரதிபந்தகமான ஸ்வரூபத்தை ஆஶ்ரயமாக உடைத்ததாயிருக்கையாலும், அத்யர்த்த ப்ரிய ரூபமான கைங்கர்யத்தில் பாரதந்த்ர்ய விரோதியான ஸ்வ ப்ரயோஜனத்வ புத்தியை நிவர்த்திப்பிக்கிறது - நமஸ்ஸு**

பிள்ளைலோகாசாரியார், ச்ரிய:பதிப்படி

என்றும்

**இதுக்கு (கைங்கர்யத்திற்கு) வரும் விரோதி நிவ்ருத்தியைச் சொல்கிறது - நமஸ்ஸு. நமஸ் என்பது - கைங்கர்யத்தில் நானே என்கிற விரோதியைப் போக்கித் தந்தருள வேணும் என்கிறது.**

**அஹங்கார கர்ப்பமான கைங்கர்யம் புருஷார்த்தம் அன்றே. ஆகையாலே அவ்வளவும் செல்லவுள்ள அஹங்கார மமகாரங்களைப் போக்கித் தந்தருள வேணும் என்கிறது. அஹங்காரங்களை நிஷேதிக்கையாலே அத்தால் வந்த மமகாரமும் இந்நமஸ்ஸிலே நிஷேத்யமாய்த்து. அஹங்கார மமகாரங்களாகிற சேற்றிலே அநாதி காலம் புதையுண்டு கிடந்த சேதநனை நமஸ்ஸாகிற நீரிலே கழுவுகையாலே**

பிள்ளைலோகாசாரியார், தனித்வய ரஹஸ்யம்

என்றார்.

## 14-6 முக்தியில் தகாத எண்ணங்களா?

இங்கு ஒரு கேள்வி எழும். இந்த குறைகள் பூவுலகில் வருவது இயற்கை. ஆனால் முக்தியில், ஞானம் முழுவதும் பரிமித்து, ஸகலத்தையும் பகவான் போல் காணும் சேதனனுக்கு இந்த களைகளும் இருக்குமா? என்று.

எம்பெருமான் ஸங்கல்பத்தாலே எல்லாம் நடப்பதையும், பகவானே முக்கியமான பலன் என்று அதைப் பெறுவதையும், தன்னைப் பற்றிய இந்த விபரீத எண்ணங்கள் வருமா மோக்ஷத்தில் என்ற சந்தேகம் வரக் கூடும்.

**மருந்தே நங்கள் போக மகிழ்ச்சிக்கு என்று ***
**பெருந்தேவர் குழாங்கள் பிதற்றும் பிரான் ***

நம்மாழ்வார், திருவாய்மொழி 9-3-4

பெரும் வெள்ளத்தில் சிக்காமல் இருக்க கூட்டத்தில் இருப்பவர் ஒருவர் கையை மற்றொருவர் என்று வரிசையாக பிடித்துக் கொள்வர். அது போல் எம்பெருமானின் ஆனந்த வெள்ளத்தில் மூழ்கிய பெருந்தேவர் என்னும் நித்ய ஸூரிகள், கூட்டம் கூட்டமாக, ஒருவரை ஒருவர் பிடித்துக் கொண்டு ஜீரம் வந்து உளறுவது போல் பகவான் நாமாவை சொல்லுகின்றனர்.

அந்த பகவந்நாமா அவர்களின் போகத்திற்கு மருந்து போல் விபரீத எண்ணங்களை வரவிடாமல் தடுக்கிறது. இது ஒரு வியாக்கியானம்.

இன்னொரு வியாக்கியானத்தில், மோக்ஷம் என்னும் வைகுண்டட்டம், முழுவதுமே ஸத்வ குணம் நிரம்பியது. அதில் தகாத எண்ணக்கள் வருவதற்கு ப்ரஸக்தியே (prospect) இல்லை. இங்கே மருந்து என்றது நோய்க்கு மருந்து அல்ல. குணமாக உள்ளவனுக்கு புஷ்டியை வளர்ப்பது. (Tonic, vitamin) என்றனர்.

## 14-7 முக்தியில் நல் எண்ணங்களே!

முக்தியில் அந்த குற்றங்கள் கிடையாது என்பது உண்மை அனாலும், முக்தியில் இந்த குறைகள் இல்லை என்பதை இங்கேயே நினைத்து பார்க்கிறான். அதனால் விருப்பப் பட்டு அதற்கு வேண்டிய உபாயத்தை செய்து தகுதி பெறுவான் ஆனால் அந்த பலனை தவறான முறையில் சிந்தித்து உபாயம் செய்தால் எம்பெருமான் மோக்ஷத்தை நேர் பலனாகத் தர மாட்டான்.

சேதனன், மோக்ஷ பலனில் உள்ளதை உள்ளபடியே நினைத்து பார்த்து அதை கேட்காவிடில் எம்பெருமான் எப்படி அந்த பலனைக் கொடுப்பான்? அதனால் ஸகல விதமான விபரீத ஜ்ஞானமும் இல்லாத பெரும் பலனான மோக்ஷத்தை தர வேண்டும் என்பதை இங்கு இருந்து கொண்டே பிரார்த்திப்பதில் தவறு ஒன்றும் இல்லை.

**ந மம** என்று சொல்லும்போது இங்கு எனது என்று தேஹ ஸம்பந்தமான வஸ்துக்கள் எதுவும் இல்லை என்ற பொருள். எனது என்று ஆத்ம ஸம்பந்தமான வஸ்துக்கள் எதுவும் இல்லை. அப்படி என்றால் நான் என்று சொல்லும்போது மீதி என்ன இருக்கிறது? தேகம் எரியக் கூடியது. ஆத்மா அவனுக்கு சொந்தம் நடுவில் நான் என்றால் யாரைச் சொல்கிறோம்?

**யானே என்னை அறியகிலாதே ***
**யானே என் தனதே என்று இருந்தேன் ***
**யானே நீ என் உடைமையும் நீயே ***

**வானே ஏத்தும் என் வானவர் ஏறேறே**
நம்மாழ்வார், திருவாய்மொழி 1-9-9

“நானும் என் உடைமைகளும் உனக்கு சேஷம் என்ற உண்மை இருக்க, அதை அறியாது உனக்கு அடிமை என்பதை உணராது நான் என்றும், என்னுடையது என்றும் விபரீத ஞானத்துடன் இருந்து விட்டேன். நானும் உனது உறுப்பே; என்னுடைய பொருள் எல்லாம் உனது உறுப்பே” என்பதை அறிந்து கொண்டேன் என்கிறார் நம்மாழ்வார்.

## 14-8 ஒழிந்தது யான் எனது எனக்கே

**த்$_3$வயக்ஷரஸ்து ப$_4$வேந் ம்ருத்யுஸ் த்ர்யக்ஷரம் ப்$_3$ரஹ்மண: பத$_3$ம்**
**மமேதி த்$_3$வ்யக்ஷரோ ம்ருத்யுர் ந மமேதி ச ஶாஸ்வதம்**
மஹா பாரதம் ஸாந்தி பர்வம்

மஹா பாரதம் ஸாந்தி பர்வத்தில் சொல்லும் ஸ்லோகம் இது. **(த்$_3$வயக்ஷரஸ்து ப$_4$வேந் ம்ருத்யு:)** இரண்டு அக்ஷரத்தை உடையது ஸம்ஸாரத்திற்கு காரணமாகிறது **(த்ர்யக்ஷரம் ப்$_3$ரஹ்மண: பத$_3$ம்)** மூன்று அக்ஷரங்களை உடையது ப்$_4$ரஹ்மத்தை அடைய காரணமகிறது.

**(மம ஏதி த்$_3$வ்யக்ஷரோ ம்ருத்யு:)** இரண்டு எழுத்து சொல்லான மம என்பது ஸம்ஸாரத்திற்கு காரணம். **(ந மமேதி ச ஶாஸ்வதம்)** மூன்று எழுத்து சொல்லானந மம என்பது மோக்ஷத்திற்கு காரணம் என்றது மறை முகமாக.

**நீர் நுமது என்று இவை * வேர் முதல் மாய்த்து * இறை**
**சேர்மின் உயிர்க்கு * அதன் நேர் நிறை யில்லே**
நம்மாழ்வார், திருவாய்மொழி 1-2-3

என்று திருவாய்மொழியில் நம்மாழ்வார் ஸாதித்தார். **(நீர் நுமது என்று இவை)** நீர், உமது என்ற கேடையே விளைவிக்கும் எண்ணங்களை **(வேர் முதல் மாய்த்து)** வேரோடு பிடுங்கி எறியுங்கள் என்றார். ஆழ்வார் பாட்டில் நான், எனது என்று சொல்லக்கூட நா கூசுகிறார்

**அடிசில் பானைபோல் பாரதந்திரராயிருக்கும் நிலை.**
**பானை அடிசிலை சுவைக்குமோ?”**

என்று வியாக்கியானத்தில் பூர்வர்கள் அருளி உள்ளார்கள்

**இல்லதும் உள்ளதும் * அல்லது அவன் உரு ***
**எல்லையில் அந்நலம் * புல்கு பற்று அற்றே"**
நம்மாழ்வார், திருவாய்மொழி 1-2-4

என்ற திருவாய்மொழியில் நம்மாழ்வார் பற்று அற்று புல்கு என்றார். அதாவது, பகவானை பகவானுக்காகவே அடை. அவனிடம் வேறு ஒன்று கேட்டு பெறுவதற்காக அவனை வேண்டாதே என்றார்.

அந்த ரீதியில் இங்கு மகிழ்ந்த மனம் பகவானை பெறுவதற்காக என்று.

## 14-9 ஈச்வரனுக்கும் ஜீவனுக்கும் உரையாடல்

**த்வம்மேஶஹம் மே குதஸ்தத்**
**தத$_3$பி குத இத$_3$ம் வேத$_3$மூல-ப்ரமாணாத்**
**ஏதச்ச அநாதி$_3$ ஸித்$_3$த$_4$ாந் அநுப$_4$வ-விப$_4$வாத்**
**ஸோபி ஸாக்ரோஶ ஏவ |**
**க்வாக்ரோஶ: கஸ்ய கீ$_3$தாதி$_3$ஷு மம விதி$_3$த:**
**கோத்ர ஸாக்ஷி ஸுதீ$_4$: ஸ்யாத்**
**ஹந்த! தவத் பக்ஷபாதீ ஸ இதி**
**ந்ரு கலஹே ம்ருக்$_3$ய மத்$_4$யஸ்த$_2$வத் த்வம் ||**
பராசர பட்டர் முத்தகம்

பராஸர பட்டர் எம்பெருமானுக்கும், ஜீவனுக்கும் நடக்கும் விவாதத்தை (argument) வெகு அற்புதமாய் ஸாதிக்கிறார். நீதிபதி மன்றத்தில் நடக்கும் வீவாதம் போல் (court proceedings).

**ஈச்வரன்: நீ எனக்கு (ஸேஷபூதன்)”.**

prapatti dot com

**ஜீவன்:** “ நான் எனக்கு” [“இல்லை. நான் ஒருவனுக்கும் அடிமை அல்ல. எனக்கு நானே சொந்தம்].

**ஈச்வரன்:** அது எப்படி?

**ஜீவன்:** நீர் சொல்லியது எப்படி? [நீ எதற்கு உனக்கு அடிமை என்று நினைக்கிறாய்? அதற்கு ப்ரமாணம் என்ன?” (where is the proof)]

**ஈச்வரன்:** நான் சொல்வது வேத மூலமான ஒங்காரத்தாலே [“வேதங்கள் சொல்கிறது. எல்லா சித்தும், அசித்தும் எனக்கே உரிமையானவை], ஆமாம். நீ உனக்கே உரியவன் என்கிறாயே அதற்கு என்ன ப்ரமாணம்?”

**ஜீவன்:** நான் சொல்வதும் அநாதியான அநுபவத்தால் தேறுகிறது. [“என்னுடைய அனுபவம்தான். நான் வேண்டும்போது சாப்பிடுகிறேன். தூங்குகிறேன். இன்னும் சொல்லப்போனால், நானே மற்ற ஜீவன்களை ஆட்டி படைக்கிறேன்”]

**ஈச்வரன்:** அந்த அநுபவம் மறுக்கப் பட்டிருக்கிறது. [“ஹா! அந்த அனுபத்தை எல்லா இடங்களிலும் மறுத்து சொல்லி இருக்கிறது. ஏதோ இரண்டு பேரை வேலை வாங்குவதால் பெரிய எஜமானன் என்று உனக்கு நினைப்போ? நீ சொல்கிற அந்த அனுபவங்களை எல்லாம் ஸம்ப்ரதாயத்தில் மறுத்து சொல்லப்பட்டு இருக்கிறது.]

**ஜீவன்:** யார் எங்கே மறுத்தனர்?

**ஈச்வரன்:** கீதை போன்ற சாஸ்திரங்களில் என் மறுப்பு பிரசித்தமானது [கீதை போன்ற நூலகளில் என் ஆசேஷபம் ஸுப்ரஸித்தம்]

**ஜீவன்:** இதற்கு ஸாக்ஷி யார்? [“ஸம்ப்ரதாயம்? யார் சொன்னது? இதற்கு யார் ஸாக்ஷி?” (witness)]

**ஈச்வரன்:** ஞானியே ஸாக்ஷி ஆகிறான். [“மஹா ஜ்ஞானிகளான பராஸரர், வியாஸர் முதலிய ஆசாரியர்கள்.]

prapatti.com

ஜீவன்; பக்ஷபாதம் உள்ள அவர்கள் எப்படி ஸாக்ஷி ஆக முடியும்? ("ம்ம்ம், அவர்கள் எல்லாம் பக்ஷ பாதம் உடையவர்கள்" (They are not neutral party. They are siding with you).

இப்படி வாக்கு வாதம் முடியாமல் நடக்கிறது. பகவான் கடைசியாக தன் திருத்துழாய் மாலையுடன் ஸேவை தர, தானே ஈஸ்வர தத்வம் என்று ஸத்யம் செய்து ஸ்தாபித்து கொள்வது போல் இருக்கிறது என்கிறார்.

**அஸந்நேவ ஸ ப₄வதி । அஸத் ப்ரஹ்மேதி வேத₃ சேத் ।**
**அஸ்தி ப்₃ரஹ்மேதி சேத் வேத₃ ஸந்தமேநம் ததோ விது₃:**

தைத்ரீயம் ஆனந்தவல்லீ 6

என்று தைத்ரீயம் ஆனந்தவல்லீ கூறுகிறது. ப்ரஹ்மம் இல்லை என்று அறிந்தால் அவன் இல்லாதவனாக ஆகிறான் ப்ரஹ்மம் இருக்கிறது என்று அறிந்தால் அந்த காரணத்திலாலேயே இவனை இருக்கிறவனாக அறிகிறார்கள் என்கிறது.

## 14-10 ஆசைக்கு அளவில்லை

**ஹதே பீஷ்மே ஹதே த்ரோணே ஹதே கர்ணே மஹரதே**
**ஆசா பலவதி ராஜந் சல்யோ ஜேஷ்யதி பாண்டவாத்**

என்று மஹாபாரதம் சொல்கிறது பீஷ்மர் போய்விட்டார். துரோணர் போய்விட்டார். கர்ணன் கூட மடிந்தான் சல்யன் பாண்டவர்களை ஜயிக்கப் போகின்றானாம்! இந்த துரியோதனன் ஆசை மிகப் பலமானது.

வியாஸ பகவான் லக்ஷ கணக்காக ஸ்லோகங்கள் எழுதியிருக்கிறார். தன் சிஷ்யரான வைசம்பாயனருக்கு சொல்லிக் கொடுக்கிறார்

**புருஷார்த்த அயமேவ: ஏக: யத் கதா ஸ்ரவணம் ஹரே:**

என்று அந்த சிஷ்யர் கேட்டார். இவ்வளவு ஸ்லோகத்தையும் யார் புரிந்து கொள்ள முடியும்? இதில் முக்கியமானது என்ன? (Which is very important?) என்கிறார்.

மிக உயர்ந்த புருஷார்த்தம் என்பது பகவத் குணங்களைக் கேட்பதுதான் அதனால்தான் ஆண்டாளும் வையத்து வாழ்வீர்காள் என்ற பாசுரத்தில் "கேளீரோ" என்றாள். கேளீரோ என்றால் கேட்பது மட்டும் இன்றி, கேட்டபடி நடப்பது.

ஸம்ஸ்கிருத்திலும், தமிழிலும், சில தாதுக்களுக்கு (verb) ஒரே அர்த்தம்தான் என்று கிடையாது. இடத்தைப் பொறுத்து அதற்கு அர்த்தம் (context dependent).

கேளீரோ என்றால் கேட்டு என்று மட்டும் அல்ல கீதாசாரியன், அருச்சுனனுக்கு சொல்கிறான்

**அத₂ சேத்த்வ மஹங்காராத் ந ஶ்ரோஷ்யஸி விநங்க்ஷ்யஸி**
பகவத் கீதை 18-58

என்று கிருஷ்ணன் அருச்சுனனிடம் சொல்கிறான். "மேலும் உன் அஹங்காரத்தால் என்னுடைய பேச்சை ஒரு வேளை கேட்காமல் போனால் நாசமாகப் போவாய்," என்றான்.

இங்கு **"சேத்"** என்கிற பதம், ஒரு கால், (**In case**, if you don't listen to my words) கேட்டு என்பது இங்கே, காதால் கேட்டு அதன்பின் அப்படியே நடப்பது (hearing and also doing accordingly)

## 14-11 ஆசை அவசியமே

prapatti dot com

எந்த ஆசை உண்மையில் இருக்க வேண்டும் என்றால் பகவத் பாகவத கைங்கர்யத்தில். அதுவும் தான், தனது என்ற அகங்கார மமகாரங்கள் கழிந்து இருப்பது.

**நின்னையே தான்வேண்டி * நீள்செல்வம் வேண்டாதான் ***
**தன்னையே தான் வேண்டும் * செல்வம் போல் மாயத்தால் ***
குலசேகராழ்வார், பெருமாள் திருமொழி 5-9

என்று குலசேகராழ்வார் பெருமாள் திருமொழியில் பகவானைத் தவிர வேறு எந்த செல்வமும் வேண்டடம் என்றார்.

**பழுதின்றிப் பாற்கடல் வண்ணனுக்கே**
**பணிசெய்து வாழப் பெறாவிடில் நான்**
ஆண்டாள், நாச்சியார் திருமொழி 1-1-9

என்று ஆண்டாளும் எம்பெருமானுக்கே கைங்கர்ய செய்து வாழ வேண்டும். அந்த ப்ராப்தம், பலன் கிடைக்காவிடில் இந்த ஆத்மா உஜ்ஜீவிக்க முடியாது என்றாள். இந்த உடல் இனிமேல் தரிக்காது என்று வெறுத்து, பகவத் கைங்கர்யம் இல்லாத வாழ்க்கை ஒரு வாழ்க்கையா? என்கிறாள்.

**ப$_4$வந்தமேவா நுசரந் நிரந்தரம்**
**ப்ரஶாந்த நிஶ்ஶேஷ மநோ ரதா$_2$ந்தர:**
**கத$_3$ாஹ மைகாந்திக நித்யகிங்கர:**
**ப்ரஹர்ஷ யிஷ்யாமி ஸநாத$_2$ ஜீவித:**
ஆளவந்தார் ஸ்தோத்ரரத்னம் 46

**(ப$_4$வந்தம் ஏவ)** உன்னையே
**(நிரந்தரம் அநுசரந்)** இடைவிடாமல் அனுஸரித்து கொண்டு
**(ப்ரஶாந்த நிஶ்ஶேஷ)** உம்மைத் தவிர மற்றவைகளில்
**(மநோ ரதா$_2$ந்தர)** எல்லா ஆசைகளும் வாஸனையும் நீங்கப் பெற்று
**(ஐகாந்திக நித்யகிங்கர:)** ஒரு முகமாய், நித்யமான கைங்கர்யத்தை உடையவனாய்
**(ஸநாத$_2$ ஜீவித:)** பலனுள்ள உள்ள வாழ்வுடன்

**(ப்ரஹர்ஷயிஷ்யாமி)** உன்னையே சந்தோஷிப்பிக்க போகிறேன்
**(கதா₃ அஹம்)** என்றைக்கு நான்? என்றைக்கு நான்? என்றார்.

> **இன்பம் பயக்க எழில் மலர் மாதரும் தானும் இவ்வேழுலகை**
> **இன்பம் பயக்க இனிதுடன் வீற்றிருந்து ஆள்கின்ற எங்கள் பிரான்**
> நம்மாழ்வார், திருவாய்மொழி 7-10-1

என்று பகவான் எங்கள் ரக்ஷகன். அவன் அழகான தாமரையில் அமரும் பெரிய பிராட்டியாரோடு சேர்ந்து மகிழ்ச்சி உண்டாகும்படி ஏழு உலகங்களையும் காப்பாற்றுகிறான். அவன் அளிப்பது எல்லாம் இன்பமே, என்றார்.

## 14-12 உனக்காகவே மகிழ்ச்சி

சேதனன், எம்பெருமானை சந்தோஷிப்பது ஒன்றுதான் காரணம். அதுதான் தன் ஸ்வரூபத்திற்கு பாங்கானது, இயற்கையானது. மற்ற ஆனந்தம் முக்யம் இல்லை என்பதை உணர வேண்டும்.

> **எனக்கே ஆட் செய் * எக்காலத்தும் என்று * என்**
> **மனத்தே வந்து * இடைவீடின்றி மன்னி ***
> **தனக்கேயாக * எனைக் கொள்ளும் ஈதே ***
> **எனக்கே கண்ணனை * யான் கொள் சிறப்பே**
> நம்மாழ்வார், திருவாய்மொழி 2-9-4

திருவாய்மொழியில் நம்மாழ்வார் சொல்கிறார், சேதனர்கள் மூவகையாவவர்கள் - **நித்யர், முக்தர், பக்தர்.** முதல் இருவரும், பகவானை மகிழ்வித்து, தானும் மகிழ்வர்கள். பக்தரோ அசேதனம் போல் தமக்கு எவ்வித உணர்ச்சியின்றி கைங்கர்யம் செய்வர், மலர் மாலை, சந்தனம் தென்றல் போலே.

பிராட்டி என்றாவது பகவனின் திருமார்பை விட்டு ஒரு க்ஷணமாவது அகன்றிருக்கிறாளா? எனக்கு பலனில் நிறைய ஆசை. அதனால் கேட்கிறேன். "நீ எனக்கே அடிமை செய்" என்று சொல்ல வேணும். சொல்லி என் மனத்தில் வந்து புக வேண்டும். வந்து என்றும் நிலையாக இருக்கவேண்டும்.

பகவான் தனக்கேயாக, என்னைக் கொண்டு, அவனுடைய ஆனந்தத்திற்கு என்னை ஆக்கிக் கொள்ளவேண்டும். அசேதனத்தைப் போல் எனக்கு ஆனந்தம் கிடையாது என்று சொல்லக் கூடாது. ஆனால் என்னுடைய மகிழ்ச்சி எனப்து அவனை சந்தோஷிக்கும்படி நான் அடிமையாக நின்று அவனுக்கு தொண்டு செய்வது என்பதுதான்," என்றார்.

> **நம: கைங்கர்யத்தில் களையறுக்கிறது**
> **களையாவது தனக்கென்னப் பண்ணுவது**
> பிள்ளைலோகாசாரியார், முமுக்ஷுப்படி 178-179

என்று முமுக்ஷுப்படியில் பிள்ளைலோகாசாரியார் ஸாதித்தார். களை என்பது தன்னுடைய ஆனந்தத்திற்காக கைங்கர்யம் பண்ணுவது, அதை களைவது என்பது பகவானுடைய முக மலர்ச்சிக்காக செய்வதே தவிர தனக்காக அல்ல என்கிற எண்ணம்.

> **படியாய் கிடந்து உன் பவள வாய் காண்பேனே"**

என்று பெருமாள் திருமொழியில் (குலசேகராழ்வாரும் அசேதன வஸ்து மாதிரி கிடக்க வேண்டும். ஆனால் உன் அடியவர்களுடைய திருப்பாதங்களை என் தலையில் தாங்கி உன் திருமுகத்தை நோக்கிக் கொண்டு கிடக்க வேண்டும் என்றார்.

> **உனக்கே நாம் ஆட் செய்வோம்"**

ஆண்டாள் திருப்பாவையில் **"பகவானே உனக்கே அடிமை செய்யும்படி எங்களை மாற்று"** என்று ஸாதித்துள்ளார். ஆக கைங்கர்யம் செய்வதும் அவனுடைய முக மலர்ச்சிக்காகவே.

த்வய மந்திரத்தில் முதல் வரி உபாயத்தைக் காட்டுகிறது. பின் வரி, **"நான் ஸ்ரீமந் நாராயணனின் பொருட்டே இருக்கிறேன். எனக்காகவோ, மற்றவருக்காகவோ இல்லை. நான் செய்யும் கைங்கர்யமும் அவன் உகப்பிற்கே அன்றி எனக்கு எதோ ஒரு பலன், ஆனந்தம் ஏற்படுகிறது என்பதற்கு இல்லை"** என்ற மனோபாவத்தைக் காட்டுகிறது.

**முக்தன் எம்பெருமான் திருவுள்ளத்திற்கு எது உகந்ததோ, அதையே தானும் விரும்புகிறான். (No separate intention).**
**முக்தன் மகிழ்ச்சி எல்லோருக்கும் ஸ்வாமியாக இருப்பவனின் உகப்புக்கு சேஷமாய் நிற்கும்.**
**சேதனனின் மகிழ்ச்சி பிரதானமில்லை (Not primary)**

ஸ்வாமி தேசிகன், விரோத பரிஹாரம்

என்று ஸ்வாமி தேசிகன் விரோத பரிஹாரத்தில் ஸாதித்தார்.

## 14-13 மகிழ்ந்தது

**மந்மநா ப₄வ மத்₃ப₄க்தோ மத்₃யாஜீ மாம் நமஸ்குரு**
**மாமேவ ஏஷ்யஸி யுக்த்வா ஏவமாத்மாநம் மத்பராயண:**

பகவத் கீதை 9-34

பகவத் கீதையில் ஒன்பதாம் அத்யாயத்தில், கடைசி ஸ்லோகம் [ராஜ வித்யா ராஜ குஹ்ய யோகம்] கிருஷ்ணன் சொல்கிறான்.
(மந்மநா ப₄வ) என்னிடமே மனம் நிலை பெற்றவனாய்
(மத்₃ப₄க்தோ ப₄வ) என்னிடம் பக்தி உடையவனாய்.
(மத்₃யாஜீ ப₄வ) என்னை ஆனந்தமாக பூஜிப்பவனாய்
(மாம் நமஸ்குரு) என்னையே பலவிதமாய் வணங்கி
(ஏவம் ஆத்மாநம் யுக்த்வ) இப்படி ஆத்மாவை ஈடுபடுத்தி
(மத்பராயண:) என்னை முழுப் பலனாய்
(மாம் ஏவ ஏஷ்யஸி) என்னையே அடையப் போகிறாய்.

தைல தாரை போலே இடைவெளி இல்லாமல் பகவத் ஸ்மரணையில் ஈடுபட வேண்டும். எல்லை இல்லாத ப்ரீதியுடன், அவனுக்கு பரதந்திரன் என்ற நினைவுடன், மனோ வாக் காயை என்ற இந்திரியங்களால் அவனை வணங்க வேண்டும். அவன் நினைவை விட்டு பிரிந்தால் ஒரு க்ஷணம் உயிர் தரிக்காது என்ர நிலையுடன் பக்தி செய்ய வேண்டும்.



prapatti dot com

இது எல்லாம் பக்தி யோகத்திற்கு சொன்னவை. ஆனால் ப்ரபந்நனுக்கு இவை போக்யமாய் தானே வந்து அடைகிறது. எப்படி ஒரு பெண்ணிடம் ஆசை உள்ளவன், அவளைப் பற்றி நினைக்கும்போதே மகிழ்ச்சியில் திளைக்கிறானோ, அது போல இவனுக்கு பகவத் அநுபவம்.

இப்படி பகவத் அநுபவத்தில் திளைத்தவனுக்கு துன்பம் என்பது என்ன என்று தெரியுமா?

**இருபத்து நாலாயிரம் ஸ்லோகம் எழுதிய வால்மீகி பகவான்**
**பிராட்டி அசோக வனத்திலே அனுபவித்ததை**
**ராமனிடத்தில் சொல்லவல்லாள் அல்லீரே**

என்று வியாக்கியானத்தில் பூர்வாசாரியர்கள் அருளியுள்ளார்கள் வியாஸர் எத்தனயோ வேண்டாத ஸ்லோகங்கள் எல்லாம் சொல்லியிருக்கிறார் பிராட்டி கஷ்டப்பட்டதை ஒரு ஸ்லோகம் இல்லை அரை ஸ்லோகம் சொன்னாரா? இல்லையே தான் கஷ்டப்பட்டதை சொல்வதில்லை. பதிவ்ரதைக்கு அழகு.

**தீக்குறளை சென்று ஓதோம்**
**ஆண்டாள், திருப்பாவை 2**

என்று ஆண்டாள் திருப்பாவை, வையத்து வாழ்வீர்காள் என்பதில் வலியுறுத்துகிறாள் குறளை என்பது noun. அதனால் குறள் + ஐ, இரண்டாம் வேற்றுமை உருபாய் என்று பிரிக்க கூடாது. தீக்குறளை சென்று ஒதோம் (ச் கிடையாது) குறள் என்றால் - கோள் சொல்லுதல், தனக்கு வேண்டும் என்று கேட்பது.

**மஹான சக்கரவர்த்தி திருமகனைக் கேட்டு**
**மானைப் பிடித்து தா என்று சொல்லவே**
**மானுக்காக மஹானைப் பிரிந்தாள்**

வியாக்கியானத்தில் பூர்வாசாரியர்கள் அருளியுள்ளார்கள் மஹான் என்று உள்ளதில் “ஹ”ாவை விட்டு மான் என்றாள். அதனால் ஹா என்று கூக்குரல்

இடும்படி ஆனது ஹா ராம ஹா லக்ஷ்மணஹே சுமித்ரா என்று கூக்குரல் செய்யும்படி ஆயிற்று.

## 14-14 பகவத் கைங்கர்யமே உணவு

**பாலைக் குடித்தபின் வேப்பங்காயைத் தின்பார் உண்டோ?**

என்று வியாக்கியானத்தில் சொல்கிறார்கள் பகவத் குணத்தில் ஆழ்ந்து இருப்பவர்களுக்கு தன்னைப் பற்றி நினைவும் வருமோ?

**கண்ணா! நான்முகனைப் படைத்தானே! ***
**காரணா! கரியாய்! அடியேன் நான் ***
**உண்ணாநாள் பசி ஆவது ஒன்றில்லை ***
**ஓவாதே நமோ நாரணா என்று ***
**எண்ணா நாளும் இருக் எசுச் சாம வேத ***
**நாண்மலர் கொண்டு உன பாதம்**
**நண்ணாநாள் * அவை தத்துறு மாகில் ***
**அன்று எனக்கு அவை பட்டினி நாளே**

பெரியாழ்வார், பெரியாழ்வார் திருமொழி 5-1-6

என்று பெரியாழ்வார் திருமொழியில் சொல்கிறார். "கிருஷ்ணனே நீதான் ஆதி. நீ படைத்தாய் அந்த சதுர்முக ப்ரம்மாவை. நீதான் எல்லாவற்றிற்கும் காரண பூதம் என்று சாட்சியாய் நிற்கிறாய். என்றைக்கு ரிக், யஜுர், சாம அதர்வண வேதம் என்கிற நான்கு மலர்களுடன், நமோ நாராயணா என்று, உன்னை துதிக்க அதிர்ஷ்டம் இல்லையோ அன்றுதான் எனக்கு பட்டினி நாள்" என்றார்.

உடம்பிற்கு எப்படி உணவு அவசியமோ, அதுபோல ஆத்மாவிற்கு பகவந் நாம ஸங்கீர்த்தனம். இதையே

**க$_{3}$ச்ச$_{2}$தாம் தூர$_{3}$ரமத்$_{4}$வாநம் த்ருஷ்ணாமூர்ச்சி$_{2}$த சேதஸாம்**
**பாதே$_{2}$யம் புண்ட$_{3}$ரீகாக்ஷ நாமஸங்கீர்த்தநாம்ருதம்**

கருட புராணம்

என்று க₃ருட₃ புராணம் சொல்கிறது அந்த காலத்தில் எல்லோரும் ஒரு இடத்திலிருந்து இன்னொரு இடம் செல்ல வேண்டுமானால் நடந்தே போவார்கள். அப்படி வெகு தூரம் நடந்து போய் பசியால் வாடினவர்களுக்கு, இளைப்பாற கையில் எடுத்துச் கொண்டு சென்ற கட்டுச் சோறு எப்படி பலத்தையும், ஆனந்தத்தையும் அளிக்குமோ அதுபோல ஸம்ஸார தாபத்தில் கருகி, காந்தலான மனத்தை உடையவர்களுக்கு புண்டரிகாக்ஷனுடைய திருநாமஸங்கீர்த்தனம் என்ற அம்ருதமே கட்டுச்சோறு ஆகிறது

**அபி₄ஷிச்ய ச லங்காயாம் ராக்ஷஸேந்த்₃ரம் விபீ₄ஷணம் ।**
**க்ருத க்ருத்யஸ தத₃ா ராமோ விஜ்வர: ப்ரமுமோத₃ ஹ ।।**
ராமாயணம் பால 1-85

விபீஷணனுக்கு பட்டாபிஷேகம் செய்யும்போது ராமன் மகிந்து போனான். முடிசூடிக்கொண்ட விபீஷணனோ பகவான் உகப்பிற்கு செய்கிறோம் என்பது ஒன்றைத்தவிர தனக்கு என்று இல்லாமல் இருந்தான்.

## 14-15 கைங்கர்யமே உயர்ந்த புருஷார்த்தம்

த்வயத்தின் உத்தர வாக்யத்தில் விவரிக்கப்படும் பரம புருஷார்த்தம் எனும் கைங்கர்யத்தின் சிறப்பை அறிந்து உலக விஷயங்களில் உள்ள பற்றற்ற நிலை உடைய நிஷ்டர்களை போற்றி உகக்க வேண்டும். லக்ஷ்மணன் அந்த அடியவர்களுல் தலை சிறந்து விளங்குகிறான்.

**ஸர்வ ப்ரியகரஸ் தஸ்ய ராமஸ்யாபி ஶரீரத: ।**
**லச்க்ஷமணோ லச்க்ஷமீஸம்பந்ந: ப₃ஹி: ப்ராண இவாபர: ।।**
ராமாயணம், பால 18-30

லக்ஷ்மணன் எப்படி ராமனுக்கு கைங்கர்யம் செய்கிறான்? ராமனுக்கு அவனுடைய உடலை விட அதிக ப்ரீதியாய், வெளியே உள்ள ஒரு உயிர்



prapatti.com

போலே. அதனால்தான் **லச்ஷ்மணோ லச்ஷ்மீஸம்பந்ந:,** லக்ஷ்மணன் திருத்தொண்டு செல்வத்தை (கைங்கர்ய லக்ஷ்மீயை) உடையவன் என்றது.

**மற்று ஒன்றை எண்ணாதே மாதவனுக்கு ஆட்செயலே ***
**உற்ற நிலை எனத் தெளிந்து * - பெற்ற**
**பெரும் பேற்றின் மேல் உளதோ பேறு என்று இருப்பார் ***
**அரும்பேறு வானத்தவருக்கு**

அருளாளப் பெருமாள் எம்பெருமானார், ஞான ஸாரம் 4

மற்று என்பது மற்றைய சுகங்கள் - பூலோக ஆனந்தம், பரமபத ஆனந்தம், கைவல்ய ஆனந்தம். இவை எல்லாம் அந்ய புருஷார்த்தம். மற்று ஒன்று என்று பொதுவாக ஏன் சொன்னார்? மீதி சுகங்களின் பேரைச் சொன்னால்கூட தோஷம். அவற்றை மனத்தால்கூட நினைக்காதே என்றார்.

**லச்ஷ்மீபதிக்கே கைங்கர்யம் செய்வதை என்றதாலே கைங்கர்ய ப்ரதி ஸம்பந்தி ஒரு மிதுனம், கைங்கர்யமே உயர்ந்த புருஷார்த்தம்** என்று த்வயத்தின் பின் வரியைக் காட்டுகிறது.

இப்பப்பட்ட கைங்கர்ய பேறை பெற்றவர்கள், இதற்கு மேலும் ஒரு புருஷார்த்தம் இல்லை என்ற நினைவோடு இருப்பார்கள்.

**ந ச புநராவர்த்ததே।**
**ந ச புநராவர்த்ததே।**

சாந்தோக்ய உபனிஷத் 8-15-1

என்றது உபனிஷத். இந்த முக்தன் (இனி கர்ம வசத்தால்) திரும்பி வருவதில்லை; திரும்பி வருவதில்லை. என்று நித்யமான பேற்றை அடைகிறான்.

## 14-16 பதங்களின் பொருள் - ஸ்வாமி தேசிகன்

இப்படி



prapatti.dos.com

- ஸஹ தர்மசாரிணீ ஸம்பந்தமும், (ஶ்ரீ)
- இதனுடைய நித்யதையும், (மத்)
- ரக்ஷண உபயுக்த குணாதிகளும், (நாராயண)
- சுபாஶ்ரய விக்ரஹமும், (சரணௌ)
- இவற்றாலே விஶிஷ்டனுடைய உபாய பாவமும், (ஶரணம்)
- இவனுடைய வஶீகரணமும் (வசப்படுத்தும் உபாயமும்), (ப்ரபத்)
- இது ஸக்ருத் கர்த்தவ்யமானபடியும் (ஒரே முறை செய்வதாயும்),
- இதின் அதிகாரி விஶேஷமும் (யே)
- ஸர்வ ஶேஷி ஸபத்னீகனாய்க் கொண்டு கைங்கர்ய ப்ரதிஸம்பந்தியான படியும் (ஏற்றுக் கொள்பவன்), (ஶ்ரீமதே நாராயண)
- ஸர்வ விஶிஷ்டனுடைய நிரதிஶய போக்யதையும்,
- அவன் திறத்தில் ஸ்வரூபாநு ரூபமான ஸ்வச்சந்த கைங்கர்யமும் (விருப்பப்படி செய்யும் பணி),
- இது அஹங்காராதி ரூபமான களையற்று நிற்கிற நிலையும், (நம:)
- இப்படிப் பரிஶுத்தமான கைங்கர்யத்தினுடைய ப்ராத்தனையும் (ஆய)

  அடைவே ப்ரகாசிக்கின்றன.

  ஸ்வாமி தேசிகன், ஸார ஸாரம்

என்று ஸாதித்தார்.

## 14-17 பதங்களின் பொருள் - பிள்ளைலோகாசாரியார்

ஆக

1. புருஷகாரம் சொல்லி (ஶ்ரீ)
2. அதனுடைய நித்யத்வம் சொல்லி (மத்)
3. அப்புருஷகாரம் மிகை என்னும்படியான வாத்ஸல்ய குணயோகம் சொல்லி (நாராயண)
4. விக்ரஹ வைலக்ஷண்யம் சொல்லி (சரணௌ)

5. இஷ்ட ப்ராப்திக்கும் அநிஷ்ட நிவாரணத்துக்கும் நிரபேக்ஷமான உபாயம் சொல்லி (ஶரணம்)
6. தத்ஸ்வீகாரம் சொல்லி (ப்ரபத்யே)
7. ஸ்வாமித்வ பூர்த்தி சொல்லி (ஸ்ரீமதே நாராயண)
8. கைங்கர்ய பிரார்த்தனை சொல்லி (ஆய)
9. கைங்கர்ய விரோதி போனபடி சொல்லி (நம:)

தலை கட்டுகிறது என்றார் பிள்ளைலோகாச்சரியார் தனித்வய ரஸ்யத்தில்.

**பூர்வ வாக்யத்திற்கு அர்த்தமாக "அகலகில்லேன்" என்ற பாட்டை அநுஸந்திப்பது; உத்தர வாக்யத்துக்கு அர்த்தமாக 'சிற்றஞ் சிறுகாலே' என்ற பாட்டை அநுஸந்திப்பது.**

**பிள்ளைலோகாசாரியார், தத்வ ஶேகரம்**

prapatti dot com

prapatti dot com

# 15 - ப்ரபத்தி முறை

**நல்வழியேற்று அல்வழி துறந்து**
**துணிவில் நிலைத்து காவலில் வரித்து**
**அழியா உறவில் புகலின்றி தாளில்**
**தஞ்சமிறைஞ்சும் எந்தன் நெஞ்சமே**

**எந்தன் நெஞ்சமே** = என்னுடைய மனமே!
**நல்வழியேற்று** = சாஸ்திர வழியில் சென்று
**அல்வழி துறந்து** = சாஸ்திரத்திற்கு புறம்பானவற்றை விலக்கி
**துணிவில் நிலைத்து** = மஹாவிச்வாத்துடன்
**காவலில் வரித்து** = எம்பெருமானின் ரக்ஷகத்வத்தை பிரார்த்தித்து
**அழியா உறவில்** = எம்பெருமானிடம் உள்ள நிலையான உறவை அறிந்து
**புகலின்றி தாளில்** = வேறு கதியின்றி (எம்பெருமானின்) திருவடிகளில்
**தஞ்சம்** = அடைக்கலம் (என்று)
**இறைஞ்சும்** = ப்ரபத்தி செய்கிறேன்.

## 15-1 இரண்டு வகையான உபாயங்கள்

உபாயம் என்பது இரண்டு வகை. முதல் வகை நேர் சாதனமாய் அமைவது. மற்றொன்று, ஏற்கனவே இருக்கக்கூடிய வகை.

**ஸித்தோபாயம்** என்பது ஏற்கனவே இருக்கும் வழி. உதாரணமாக வெளியே போக கார், பெட்ரோல், ரோடு எல்லாம் ஸித்தோபாயம். சமையல் அறையில் உள்ள அடுப்பு, கரி, பாத்திரம், காய் எல்லாம் ஸித்தோபாயம். (Things that are available already without any effort from you).

**ஸாத்யோபாயம்** என்பது செய்யத் தகுந்த உபாயம். அந்த காரை ஒட்டி, போக வேண்டிய இடத்திற்கு போவது சாத்தியோபயம் சமைப்பதான செயல்

ஸாத்தியோபாயம். ப்ரபத்தியும் அதே மாதிரி ஸாத்யோபாயம். (**Things that invariably need your efforts to accomplish the objective**).

## 15-2 மூன்று ஸமர்ப்பணங்கள்

தத்துவ, ஹித, புருஷார்த்தங்களை நன்கு அறிந்த விவேகி, ஆத்மாவை பகவானிடம் ஸமர்ப்பிக்கவேண்டும்

1. **ஆத்ம ஸமர்ப்பணம்** இந்த அத்ம ஸ்வரூபம் எனக்கில்லை. நான் ஸ்ரீய:பதிக்கே உரியவன். (This soul is not mine).
2. **பர ஸமர்ப்பணம்** என்னை ரக்ஷித்து கொள்ளும் பரம் எனக்கு இல்லை. அது அவனுடையது (I don't have the ability to protect myself)
3. **பல ஸமர்ப்பணம்** அவன் என்னை ரக்ஷித்து, நான் நற்கதி பெற்று, வைகுந்த நாதனுடைய கைங்கர்யம் கிடைக்கிறது. அதன் பலன் எனக்கில்லை. அதுவும் ஸ்ரீய:பதிக்கே. (The benefits are not mine)

**அஹம் மத்$_3$ரக்ஷணப$_4$ரோ மத்$_3$ரக்ஷண ப$_2$லம் ததா$_2$**
**ந மம ஸ்ரீபதேரேவேத் யாத்மாநாம் நிக்ஷிபேத் பு$_3$த$_4$:**
**ஸ்வாமி தேசிகன் ந்யாஸ தசகம் 1**

ஸ்வாமி தேசிகன் ந்யாஸ தசகத்தில் ஸாதிக்கிறார்.
**(அஹம்)** நான் என்னும் ஆத்ம ஸ்வரூபமும்,
**(மத்$_3$ரக்ஷணப$_4$ரோ)** என்னைக் காக்கும் பொறுப்பும்
**(ததா மத்$_3$ரக்ஷண ப$_2$லம்)** அப்படியே என்னைக் காப்பதால் வரும் பலனையும்,
**(ந மம)** என்னுடையது அல்ல
**(ஸ்ரீபதே: ஏவ)** ஸ்ரீமந் நாராயணனுடையதே
**(இதி பு$_3$த$_4$:)** என்று இப்படி தத்வ ஜ்ஞானத்தை அடைந்து
**(ஆத்மாநாம் நிக்ஷிபேத்)** ஆத்மாவை ஸமர்ப்பிக்க வேண்டும்

**எனக்கு உரியன் எனது பரம் என் பேறு என்னாது ***
**இவை அனைத்தும் இறை இல்லா இறைக்கு அடைத்தோம் ***

**ஸ்வாமி தேசிகன், அமிருத ரஞ்சனி 8**

என்று இதையே தமிழில் ஆக்கித் தந்திருக்கிறார்.

**(எனக்கு உரியன்)** நானே எனக்கு ஸ்வாமி
**(பரம் எனது)** என்னை ரக்ஷிக்கும் கடமையும் என்னுடையதே.
**(என் பேறு)** அத்தால் வரும் பலனும் என்னுடையதே
**(என்னாது)** என்று இப்படி எல்லாம் விபரீதமாக எண்ணாமல்,
**(இவை அனைத்தும்)** ஸ்வரூபம், பரம், பலன் எல்லாவற்றையும்
**(இறை இல்லா இறைக்கு)** தனக்கு ஒரு இறைவன் என்று இல்லாத பகவானிடம்
**(அடைத்தோம்)** ஸமர்பித்தோம்.

ப்ரபத்தி என்பது இந்த மூன்று அநுஸந்தானங்களுடன் எம்பெருமானிடம் தன் ஆத்மாவை ஸமர்ப்பிப்பது, மோக்ஷத்திற்காக.

**ஆத்மாத்மீய பரந்யாஸோ ஹ்யாத்ம நிக்ஷேப உச்யதே**
**லக்ஷ்மீ தந்த்ரம் 17-73**

லக்ஷ்மீ தந்த்ரம், இந்த ஸ்லோகத்தை ஸ்வாமி தேசிகன் ப்ரதாந சதகத்தில் எடுக்கிருக்கிறார். தான் தன்னைச் சேர்ந்த வஸ்துக்கள் இவைகளின் ரக்ஷண பரத்தைப் பகவானிடத்தில் ஸமர்ப்பிப்பது ஆத்ம நிக்ஷேபம் என்று சொல்லப்படுகிறது என்று விவரித்தார்.

## 15-3 புருஷகார ப்ரபத்தி

முதலில் பிராட்டியிடம் புருஷகார ப்ரப்த்தி செய்வது நம் ஆசாரியர்கள் காட்டி கொடுத்த வழி

**சந்த்3ராம் ப்ரப4ாஸாம் யஶஸா ஜ்வலந்தீம்**
**ஶ்ரியம் லோகே தே3வ ஜுஷ்டாமுத3ாராம் ।**
**தாம் ப3த்மநேமீம் ஶரணமஹம் ப்ரபத்3யே**
**அலக்ஷ்மீர் மே நஶ்யதாம் த்வாம் வ்ருணே ।**

ஸ்ரீஸூக்தம்

என்று ஸ்ரீஸூக்தம் சொல்கிறது. புருஷகார ப்ரபத்தி. ஆனந்தமாகவும், சிறந்து விளங்குபவளும், கீர்த்தியில் பிரகாசிப்பவளும், எம்பெருமானுடன் எப்பொழுதும் கூடியிருந்து அவனை ஸேவிப்பவளும் தாமரையில் இருப்பவளும் ஆகிய அந்த ஸ்ரீதேவியை ஸரணமடைகிறேன் என்னுடைய அலக்ஷ்மியானது நஸிக்கட்டும்

பகவந் நாராயணாபி மதாநுரூப
ஸ்வரூபரூப குணை விபவ ஐஶ்வர்ய
ஶிலாத் அநவதிகாதிஶய
அஸங்க்யேய கல்யாண குணகணாம்
பத்ம வநாலயாம் பகவதீம்
ஶ்ரியம் தேவீம் நித்யாநபாயிநீம் நிரவத்யாம்
தேவதேவ திவ்ய மஹிஷீம் அகில ஜகந்மாதரம்
அஸ்மந்,மாதரம் அஶரண்ய ஶரண்யாம் அநந்ய ஶரண:
ஶரணமஹம் ப்ரபத்யே

ராமாநுஜர், ஶரணாகதி கத்யம்

எம்பெருமானரும் தம்முடைய ஶரணாகதி கத்யத்தில் அருளினார்.

## 15-4 பகவான் ஒருவனே உபாயம்

நாம் செய்யும் ப்ரபத்தி நேராகவே மோக்ஷம் கொடுப்பதில்லை அதனால் மகிழ்ந்த பகவான் தன் கருணையால் நமக்கு மோக்ஷ ப்ராப்த்தியை தருகிறான்

ஆத்மாபஹார ரஸிகேந மயைவ தத்தம்
அந்யை ரதார்ய மதுநா விபுதைகநாத
ஸ்வீக்ருத்ய தாரயிது மர்ஹஸி மாம் த்வதீயம்
சோரோ பநீத நிஜ நூபுர வத் ஸ்வபாதே

ஸ்வாமி தேசிகன், தேவநாயக பஞ்சாஸத் 48

(விபுதைக நாத) தேவர்களுக்கு எல்லாம் ஒரே தலைவனே,
(ஆத்ம அபஹார) ஜீவாத்மாவாகிய என்னை திருடுவதில்

(ரஸிகேந மயா ஏவ) சுவை உடைய என்னாலேயே
(அநுநா த3த்தம்) இப்போது ஸமர்பிக்கப்பட்டதாய்
(அந்யை: அத4ார்யம்) வேறு ஒருவரால் ரக்ஷிக்க முடியாத
(த்வதீ3யம் மாம்) உன்னுடையவனான நான்
(சோர உபநீத) திருடன் திருப்பித் தந்த
(நிஜ நூபுர வத்) காலில் அணியும் அற்புத சிலம்பைப்போல்
(ஸ்வீக்ருத்ய) ஏற்றுக் கொண்டு
(ஸ்வபாதே3 த4ாரயிதும்) தன் திருவடியில் அணிய தகுதியுடன்
(அர்ஹஸி) இருக்கிறாய்.

ஸ்வாமி தேசிகன், ஆத்ம ஸமர்ப்பணத்தை சொல்லுகிறார் உனக்கு அடியவன் இந்த ஜீவாத்மா. அதை அறியாமல் தன்னை சுதந்திரமாக நினைக்கிறான். அது உன்னுடைய பொருளைத் திருடுவதாகும். திருடனாகவே இருந்து திருடிய பொருளை சுவைத்து அனுபவித்து கொண்டு இருக்கிறேன்.

இப்பொழுது அறிந்தேன். இந்த ஜீவன் என்னுடையது இல்லை. இதை உன்னைத்தவிர யாராலும் ரக்ஷிக்க முடியாது என்று உன்னிடம் திருடிய பொருளை உன்னிடமே ஸமர்ப்பிக்கிறேன். நீ இந்த ஜீவாத்மாவை அடைக்கலமாக ஏற்றுக் கொள்ள வேண்டும்.

**இரந்துரைப்ப துண்டு வாழி ஏமநீர் நிறத்தமாவரர்**
**தரும் திருக்குறிப்பில் வைத்ததாகில் மன்னுசீர்**
**பரந்த சிந்தை யொன்றி நின்று நின்ன பாத பங்கயம்**
**நிரந்தரம் நினப்பதாக நீ நினக்க வேண்டுமே**
திருமழிசையாழ்வார், திருச்சந்த விருத்தத்தம் 101

திருமழிசையாழ்வார், திருச்சந்த விருத்தத்தில் “உன் பாத தாமரையை நான் என்றும் நினைக்க வேண்டும். அது உன் திருவருளால்தான் முடியும்,” என்றார்.

## 15-5 ப்ரபத்தி ஸக்ருத் காரியம்

**இது ஸபரிகரமான ஸக்ருத் கர்தவ்யம்**

ஸ்வாமி தேசிகன், ரஹஸ்ய ரத்நாவளி 8

இந்த ப்ரபத்தியை அதற்கு உரிய ஐந்து அங்கங்களுடன் ஒரு தடவைதான் செய்ய வேண்டும். ஒரு பலனுக்காக சாஸ்திரத்தில் விதித்த கர்மாவை ஒரு தடவை தான் செய்ய வேண்டும்.

பக்தி யோகம் அப்படி கிடையாது. பலன் அடையும் வரை செய்து கொண்டே இருக்க வேண்டும். ஆனால் ப்ரபத்தி அப்படி இல்லை. இரண்டாம் தடவவை என்று யோசித்தால் கூட அதற்கு பலன் இல்லாமல் போய்விடும்.

**சரணாகதி என்று ஓர் சாதனத்தைப் பற்றில்**
**அரணாகா * அஞ்சனை தன் சேயை - முரண் அழியக் ***
**கட்டியது * வேறு ஓர் கயிறு கொண்டு ஆர்ப்பதன் முன் ***
**விட்ட படை போல் விடும்**

அருளாளப் பெருமாள் எம்பெருமானார், ஞான ஸாரம் 27

என்று ஞான ஸாரத்தில் இது ஸ்பஷ்டமாக தெரிவிக்கப்பட்டது. **(சரணாகதி என்று ஓர் சாதனத்தைப் பற்றில்)** சேதனன் தான் அகிஞ்சனன் என்று அறிந்து மஹாவிச்வாசத்துடன் அனுஷ்டிக்கிறான் இந்த ப்ரபத்தியை. அதற்கு பிறகு எதற்கும் இருக்கட்டும் (as a backup or supplementary) என இன்னொரு உபாயத்தை அதே மோக்ஷ பலனுக்காக செய்தால்,

**(அஞ்சனை தன் சேயை)** அஞ்சனையின் மகனான அனுமானை, **(முரண் அழியக் கட்டியது)** அவர் பலம் அழியும்படி பிரம்மாஸ்திரம் கட்டியிருந்தது. அந்த ராக்ஷஸர்கள் அதன் மேல் நம்பிக்கை இல்லாது **(வேறு ஓர் கயிறு கொண்டு ஆர்ப்பதன் முன்)** வேறு ஒரு சணல் கயிறால் கட்ட, **(விட்ட படை போல் விடும்)** அந்த பிரம்மாஸ்திரம் தானே விலகிப் போனது போல, சேதனன் செய்த ப்ரபத்தி நழுவிப்போகும் (slips away).

**வேண்டாது சரண் நெறி வேறு ஓர் கூட்டு ***
**வேண்டில் அயன் அத்திரம் போல் வெள்கி நிற்கும்**

ஸ்வாமி தேசிகன், அதிகார சங்கிரகம் 47

என்று தேசிகனும் இதே கருத்தை - ப்ரபத்திக்கு வேறு ஒரு கூட்டு, உதவி வேண்டும் என்பது இல்லை. தனித்து நின்று அது ஒன்றே பலனை கொடுக்கக் கூடியது. உண்மையில், வேறு ஓர் உபாயம் தேடினால், இது பிரம்மாஸ்திரம் போல் விலகிப் போகும், என்றார்.

## 15-6 ப்ரபத்தியின் அங்கங்கள்

ஷோட$_3$ா ஹி வேத$_3$விதுஷோ வத$_3$ந்த்யேநம் மஹாமுநே |
ஆநுகூல்யஸ்ய ஸங்கல்ப: ப்ராதிகூல்யஸ்ய வர்ஜநம் ||
ரக்ஷிக்ஷ்யதீதி விஸ்வாஸோ கே$_3$ாப்த்ருத்வ வரணம் தத$_2$ா |
ஆத்ம நிக்ஷேப கார்ப்பண்யே ஷட்$_3$வித$_4$ா ஶரணாக$_3$தி: ||

மஹரிஷியே! வேதம் அறிந்தவர்கள் இந்த ஶரணாகதியை ஆறு வகையாய் அநுஸந்திக்கின்றனர். அவை, பகவத், பாகவத விஷயத்தில்

1. அநுகூலனாய் இருப்பேன் என்னும் திடமான எண்ணம் கொள்வது
2. அவர்களிடம் ப்ரதிகூலனாய் இருப்பதை கைவிடுவது
3. உடமையை காப்பது உடையவன் பொறுப்பு எனும் பெரும் நம்பிக்கை
4. என்னை காத்து அருள வேண்டும் என பகவானிடத்து பிராத்தனை
5. எம்பெருமானைை அடைய தன்னிடத்து ஒரு கைம்முதல் இல்லாத தன்மையைக் கண்டு வருந்தி தன் இழிந்த, பரிதாபகரமான நிலைமையை உணர்வது
6. தன் ஆத்மாவை எம்பெருமானிடத்து அடைக்கலமாய் வைப்பது

## 15-7 ப்ரபத்தியின் அங்கங்கள் - தேசிகன் வாக்கு

**ந்யஸ்யாம்யகிஞ்சந: ஶ்ரீமந் அநுகூலோந்யவர்ஜித:**
**விஶ்வாஸப்ராத$_2$ நா பூர்வம் ஆத்மரக்ஷாப$_4$ரம் த்வயி**
**ஸ்வாமி தேசிகன் ந்யாஸ தஸகம் 2**

ஸ்வாமி தேசிகன் ந்யாஸ தஸகத்தில் ப்ரபத்திக்கு ஐந்து அங்கங்கள் என்று ஸாதிக்கிறார்.

ஸ்ரீமந் - பிராட்டியுடன் கூடிய எம்பெருமானே!

1. **அநுகூல** - உனக்கு அநுகூலனாய்
2. **அந்ய வர்ஜித** - ப்ரதிகூலத்தை விட்டவனாய் என்ற எண்ணம் கொண்டு
3. **அகிஞ்சன** - வேறு உபாயத்திற்கு தகுதியும், சக்தியும் இல்லாமல் இழிந்த நிலையில் உள்ள நான்
4. **விஶ்வாஸ** - நீ எப்போதும் என்னைக் காத்து அருள்வாய் என்ற மிகுந்த நம்பிக்கையுடன்
5. **ப்ராத்தநா** - நீயே எனக்கு ரக்ஷகன், நீயே எனக்கு உபாயம் என்று கெஞ்சிக் கேட்கும் பிராத்தனையும் முன்னிட்டு
6. **ஆத்ம ரக்ஷா பரம்** - இத்தனை பூர்வ அங்கங்களுடன், அடியேனைக் காக்கும் பொறுப்பையும் உன்னிடம் ஸமர்ப்பிக்கின்றேன் என்றார்.

## 15-8 அங்கங்களின் பொருள்

1. ஆநுகூல்ய ஸங்கல்பம் நல் வழி ஏற்று -- பகவானுக்கு விரும்பிய காரியங்களை செய்வது

2. ப்ராதிகூல்ய வர்ஜனம் அல் வழி துறந்து -- பகவானுக்கு உகப்பில்லாத காரியங்களை அறவே தவிர்ப்பது

3. மஹா விஶ்வாசம்(Trust) துணிவில் நிலைத்து -- எம்பெருமான் நம்மைக் காப்பான் என்ற அசையாத நம்பிக்கை

4. கோப்த்ருத்வ வர்ணம்(Inability) காவலில் வரித்து -- எம்பெருமானை சரணமாகப் பற்றுதல் = வரித்து தர்ம ஜ்ஞான பக்தி யோக உபாயங்களில் அனுஷ்டிக்க சக்தியற்ற தம் விஷயத்தில் அருள் புரிந்து அவ்வுபாயங்களின் ஸ்தானத்தில் நின்று பலன் கொடுக்குமாறு அவனை

வேண்டல் நீ என்னைக் காகக வேண்டும் என்று பிராத்திக்கிறேன்

5. கார்ப்பண்யம் (Incapable) புகலின்றி தாளில் -- ஆகிஞ்சன்யம் (வேறு உபாயங்களை செய்ய தகுதி அற்றவன்)ஆணவம், செருக்கு இவைகளை போக்கிக் கொள்ளல் மற்ற யோகங்களில் தமக்கு ஆதிகாரமின்மையும், எம்பெருமானைத் தவிர வேறு தெய்வங்களை நாடாமல் மோக்ஷத்தைத் தவிர வேறு பலனில் பற்றில்லாமை

6. ஆறாவது அங்கியாக தஞ்சம் இறைஞ்சும் -- தன்னை எம்பெருமானுக்கு அர்ப்பணம் செய்தல் ந்யாஸம், பிரபத்தி (ஆத்ம நிக்ஷேபம்)

## 15-9 ப்ரபத்தியின் அங்கங்கள் - உதாரணம்

ப்ரபத்தி என்று மோக்ஷத்திற்காக ஒரு தடவை செய்யும் காரியத்திற்கு, நடைமுறையில், தினசரி செய்யும் காரியங்களிலிருந்தே உதாரணம் சொல்லலாம். (practical example from day-to-day affairs). துணி தோய்க்கும் வேலைக்காரியிடம் வீட்டுக்கார அம்மாள் (எஜமானி அம்மாள்) சொல்வதாக

1. ஆநுகூல்ய ஸங்கல்பம் “அம்மா உனக்கு வேண்டியதை செய்கிறேன் தீபாவளிக்கு புடவை, அப்பப்ப கையில் காசு (bonus மாதிரி) காபி, டிபன் காலையில் தினமும் தருகிறேன். பழைய துணி எல்லாம் அப்பப்ப கொடுக்கிறேன்”.

2. ப்ராதிகூல்ய வர்ஜனம் “நான் நிறைய துணி போடுவதில்லலை மடியாக இருப்பதை நானே துவைக்கிறேன். உனக்கு அதிகமாக துணி விழுவதில்லை. நீ வந்தவுடன் உடனே சூடாக காப்பி தருகிறேன். தாமதிப்பதில்லை.”

3. மஹா விச்வாசம் உன்னை நம்பித்தான் இருக்கிறேன் லீவுக்கு குழந்தைகள் எல்லாம் வந்திருக்கிறார்கள். மாப்பிள்ள, பெண் எல்லாம்

prapatti dot com

ஊரிலிருந்து வந்திருக்கிறார்கள்.

4. கோப்த்ருத்வ வர்ணம் = இயலாமை. எனக்கு வயதாகி விட்டது. முன் மாதிரி இருந்தால் நானே பாதி துணிகளை தோய்த்து விடுவேன் குழந்தைகளோ நிறய வேலை இருக்கிறது. துணி தோய்க்க time இல்லை. என்னால் பண்ண முடியாது என்று தானே உன்னைக் கேட்கிறேன்.

5. கார்ப்பண்யம் = ஆகிஞ்சன்யம் (வேறு உபாயங்களை செய்ய தகுதி அற்றவன்)10 வருஷமாகிறது. உன்னைத் தவிர வேறு யாரையும் நான் வேலைக்கு வைத்துக் கொள்வதில்லை Dry cleaning கொடுத்தால், உனக்கு வருகிற காசும் போய் விடும் என்று அதையும் நிறுத்தி விட்டேன். உன்னை நம்பி வெறு ஒரு வேலைக்காரியைப் பார்ப்பதும் நிறுத்தி விட்டேன் உன்னைத் தவிர்த்து துணி தோய்க்க வேறு வழியில்லை.

6. 6வது அங்கியாக = தஞ்சம் இறைஞ்சும். இப்படி சிறிய காரியங்களுக்கு, பலனுக்காக ஶரணாகதி பண்ணுகிறோம்

## 15-10 நல்வழியேற்று அல்வழி துறந்து

**கண்ணார் கடல்போல் திருமேனி கரியாய் ***
**நண்ணார்முனை வென்றிகொள் வார்மன்னு நாங்கூர் ***
**திண்ணார் மதிள்சூழ் திருவெள்ளக் குளத்துள்**
**அண்ணா * அடியேன் இடரைக் களையாயே**

திருமங்கையாழ்வார் பெரிய திருமொழி 4-7-1

திருமங்கையாழ்வார் அண்ணன் கோயிலில் எழுந்தருளியிருக்கும் ஸ்ரீநிவாஸனைப் பாடும்போது தன்னுடைய இன்னல்களை போக்குமாறு வேண்டினார். பகவத் பக்திக்கு தடையான எதுவாகயிருந்தாலும் அதை இன்னல் என்றார்.

ப்ரபன்னனின் பக்திக்கு தடை பலவிதமாய் ஏற்படலாம்.

**பண்டே உயிர் அனைத்தும் பங்கயத்தான் நாயகற்கே**
**தொண்டாம் என தெளிந்த தூமனத்தார்க்கு - உண்டோ**
**பல கற்றும் தம் உடம்பைப் பார்த்து அபிமானிக்கும்**
**உலகத்தவரோடு உறவு**

அருளாளப் பெருமாள் எம்பெருமானார், ஞான ஸாரம் 13

ஆத்மா அநாதியானது. அதற்கு பிறப்பு, இறப்பு இல்லை.

இப்படி ஸகல விதமான சரீரங்களை உடைய ஆத்மாக்கள் எல்லாம், லக்ஷ்மீபதிக்கே கைங்கர்யம் செய்யும் ஸேஷத்வ பாரதந்திரர்கள். பல சாஸ்திரங்கள் கற்றும் தங்கள் தேஹத்தை பார்த்து தன் ஜாதி, தன் செல்வம் எனத் தங்களை உயர்த்தியாய் எண்ணும் உலகத்தவரோடு இந்த உண்மையை தெளிந்த தூய மனோ நிலை உடையவர்கள், ஒட்ட மாட்டார்கள்.

## 15-11 துணிவில் நிலைத்து காவலில் வரித்து

**அணியார் பொழில்சூழ் * அரங்க நகரப்பா ***
**துணியேன் இனி * நின் அருளல்லது எனக்கு ***
**மணியே! மணிமாணிக்கமே! மதுசூதா ***
**பணியாய் எனக்கு உய்யும்வகை * பரஞ்சோதீ!**

திருமங்கையாழ்வார், பெரிய திருமொழி 11-8-8

திருமங்கையாழ்வார், பெரிய திருமொழியில் ஸாதிக்கிறார். உன்னுடைய அருள் தவிர வேறு ஒன்றும் எனக்கு உய்யும் வகையாய் அமைவதில்லை. இதை துணிந்து நான் கூறுகிறேன் என்றார்.

**பழுது ஒன்றும்**
**வாராத வண்ணமே * விண் கொடுக்கும் * மண் அளந்த -**
**சீரான் திருவேங்கடம்**

பொய்கையாழ்வார், முதல் திருவந்தாதி 76

prapatti.com

என்று எம்பெருமான் திருவேங்கடமுடையானிடம் உறுதியான மனத்தை வைத்து அடைக்கலம் அடைந்தவர்களுக்கு அவன் குறையின்றி, நிச்சயம் பரமபத ப்ராப்தி கொடுத்து அருள்வான் என்றார்.

**கரண அகரண ரூபங்களான அபசாரங்கள் புகுந்தாலும் ப்ரபந்நனுக்கு நரகாதிகள் இல்லை.**
ஸ்வாமி தேசிகன், ரஹஸ்ய ரத்நாவளி 13

என்று மோக்ஷம் நிச்சயம் என்பதைக் காட்டினார்.

எம்பெருமானே கதி என்று மற்றோரு தெய்வத்தை மனத்தால் கூட நினைக்காது எம்பெருமானின் உகப்பே தனக்கு உகப்பு என்று இருக்கும் பிரபன்னர்கள் பரமைகாந்தி ஆவார்கள். அவர்களும் பலன் கொடுக்கத் தொடங்கிய கர்மாவினால், தெரிந்தே சில தவறுகைகளைச் செய்ய நேரிடும். பெரிய மஹரிஷிகல் கூட இப்படி சாஸ்திர விரோதமான காரியங்களில் ஈடு பட நேரிடும். அவர்களின் உயர்வினால் அவர்களை ஒரு தீங்கும் அண்ட முடியாமல் இருக்கும்.

மிகத் தாழ்ந்த நிலையில் உள்ள நாம் அக்குறைகளை தண்டோரா போடமுடியுமா? அல்லது அது போல் நாமும் குற்றங்களைச் செய்ய முடியுமா? முடியாது. அவர்களின் சேர்த்து வைத்த புண்யம் கரைவதாக இருக்கலாம்.

இருப்பினும் இக்குறைகளால் அவர்களின் மோக்ஷம் தடைபடாது. அவர்களுக்கு நரகம் கிடையாது.

## 15-12 அழியா உறவில் புகலின்றி தாளில்

**உன்தன்னோடு உறவேல் இங்கு ஒழிக்க ஒழியாது**
ஆண்டாள், திருப்பாவை 28

prapatti dot com

திருப்பாவையில் ஆண்டாள் பகவானுக்கும் நமக்கும் உள்ள உறவு சாஸ்வதமானது, அனாதியானது என்கிறாள்

**அரணாம் நமக்கு என்றும் * ஆழி வலவன் *
முரன் நாள் வலம் சுழிந்த மொய்ம்பன் * - சரண் ஆம் மேல்
ஏது கதி ஏது நிலை * ஏது பிறப்பு என்னாதே *
ஓது கதி மாயனையே ஓர்த்து**
பேயாழ்வார், மூன்றாம் திருவந்தாதி 76

பேயாழ்வார், மூன்றாம் திருவந்தாதியில் “நமக்கு ரக்ஷகனாக எக்காலத்திலேயும் இருக்கும் திருவாழியை வலக்கையில் உடையவன் முரன் என்கிற அசுரனின் ஆயுள், வலிமை இரண்டையும் போக்கிய மிடுக்கை உடையவன் (முரன் நரகாசுரனின் மந்திரி) நமக்கு அவன் ரக்ஷகணாக அமையும்போது நற்கதி ஏது? ஜ்ஞான-அநுஷ்டான நிலை ஏது? ஜன்மமேது? என்று நம்முடைய தாழ்வை எல்லாம் எண்ணாதே அவன் திருநாமங்களை ஒதி அந்த ஆச்சரியமான எம்பெருமானை உபாயம் என்று ஆராய்ந்து உறுதி கொள்,” என்றார்.

## 15-13 தஞ்சம் இறைஞ்சும் எந்தன் நெஞ்சமே

**மாம் ஹி பார்த$_2$ வ்யபாஶ்ரித்ய யேSபி ஸ்யு: பாபயோநய:
ஸ்த்ரியோ வைஸ்யாஸ் தத$_2$ா ஶூத்ராஸ்தேபி யாந்தி பராம் கதிம்**
பகவத் கீதை 9-32

பகவத் கீதையில் “ஏன் என்றால், அர்ஜூனனே, பெண்கள், வைசியர்கள், நான்காம் வர்ணத்தவர்கள், அவ்வாறே சண்டாளர் முதலிய இழிந்த பிறவி அடைந்தவர்கள் எவர்களாக இருந்தாலும் அவர்களும் என்னையே தஞ்சம் அடைந்து மேலான மோக்ஷத்தை அடைகிறார்கள்” என்றான் கிருஷ்ணன்

**உகக்கும் அவை உகந்து * உகவா அனத்தும் ஒழிந்து * உறவுகுணம்-
மிகத் துணிவு பெற உணர்ந்து * வியன் காவல் என வரித்துச் *
சகத்தில் ஒரு புகல் இல்லாத் * தவம் அறியேன் மதிட்கச்சி ***

**நகர்க் கருணை நாதனை * நல்லடைக்கலாய் அடைந்தேனே.**

ஸ்வாமி தேசிகன் அடைக்கலப்பத்து 5

ஸ்வாமி தேசிகன் அடைக்கலப்பத்தில் சராணகதியின் அங்கங்களை எளிதாய் விவரிக்கிறார்.

**உகக்கும் அவை உகந்து** = ஆநுகூல்ய ஸங்கல்பம்
**உகவாத அனைத்தும் ஒழிந்து** = ப்ராதிகூல்ய வர்ஜனம்
**மிகத்துணிவு பெற உணர்ந்து** = மஹா விஶ்வாசம்
**காவல் என வரித்து** = கோப்த்ருத்வ வர்ணம்
**புகலில்லாத் தவமறியேன்** = கார்ப்பண்யம்
**அடைக்கலமாய் அடைந்தேனே** = ஆத்ம ஸம்ர்ப்பணம்

**தவ ப4ரோ ஶஹ்மகாரிஷி த4ார்மிகை:**
**ஶரண மித்யபி வாசமுதை3ரிரம்**
**இதி ஸஸாக்ஷிகயந்நித2 மத்3யமாம்**
**குரு ப4ரம் தவ ரங்க3 து4ரந்த4ர**

பராஸர பட்டர், ஸ்ரீரங்கராஜ ஸ்தவம் 2-102

ஸ்ரீங்கராஜ ஸ்தவத்தில் பராஸர பட்டர், ஸாதிக்கிறார். ஹே ரங்கநாதா! அடியேன் தர்மத்தின் வழியே உகந்து பின்பற்றும் உயர்ந்த ஆசாரியர்களால் உம்முடைய பொறுப்பாக ஒப்படைக்கப் பட்டேன் நீதான் எனக்கு அடைக்கலம் என்றும் சொன்னேன் இதையே ப்ரமாணமாகக் கொண்டு இன்று என்னை உன்னுடைய பொறுப்பாக செய்து கொள்ள வேண்டும் என்றார்.

**நின் அருளாம் கதி இன்றி மற்று ஒன்றும் இலேன் (கார்ப்பண்யம்)**
**நெடுங் காலம் பிழை செய்த நிலை கழிந்தேன் (ப்ராதிகூல்ய வர்ஜனம்)**
**உன் அருளுக்கு இனிதான நிலை உகந்தேன் (ஆநுகூல்ய ஸங்கல்பம்)**
**உன் சரணே சரண் என்னும் துணிவு பூண்டேன் (மஹாவிஶ்வாசம்)**
**மன் இருளாய் நின்ற நிலை எனக்குத் தீர்த்து (மஹாவிஶ்வாசம்)**
**வானவர்தம் வாழ்ச்சிதர வரித்தேன் உன்னை (கோப்த்ருத்வ வரணம்)**
**இன்னருளால் இனி எனக்கு ஓர் பரம் ஏற்றாமல் (கோப்த்ருத்வ வரணம்)**
**என் திருமால் அடைக்கலம் கொள் என்னை நீயே. (ஆத்ம ஸமர்ப்பணம்)**

ஸ்வாமி தேசிகன் அமிருதஸ்வாதினி 31

என்று ஸ்வாமி தேசிகன் அமிருதஸ்வாதினியில் எளிதாக காண்பித்தார்.

**த்வத் பராதிகூல்ய விமுக₂ா: ஸ்பு₂ரத₃ாநுகூல்ய:**
**க்ருத்வா புந: க்ருபணதாம் விக₃ததி ஶங்கா:**
**ஸ்வாமிந் ப₄வ ஸ்வய முபாய இதீரயந்த:**
**த்வய் யர்ப்பயந்தி நிஜப₄ார மபார ஶக்தௌ**

ஸ்வாமி தேசிகன் ஶரணாகதி தீபிகை 27

ஸ்வாமி தேசிகன் ஶரணாகதி தீபிகாவில் தீபப் பிரகாசன் என்ற விளக்கொளி எம்பெருமானிடம் பரபத்தியை செய்ய விரும்பும் அறிஞர்கள்

1. உன் மனத்திற்கு பிடிக்காத செயல்களை செய்வதில்லை என்று உறுதி கொள்கிறார்கள் **(ப்ராதிகூல்ய வர்ஜனம்)**
2. வெளிப்படுத்தும் அனுகூலமான செயல்களை செய்வதாக **(ஆநுகூல்ய ஸங்கல்பம்)**
3. மேலும், தம்முடைய தாழ்ந்த நிலயை (கர்வம் நீங்கிய) சொல்லி **(கார்ப்பண்யம்)**
4. சந்தேகம் நீங்கியவர்களாய் **(மஹாவிஶ்வாஸம்)**
5. நீ தானே உபாயமாக ஆக வேண்டும் என்று **(கோப்த்ருத்வ வர்ணம்)**
6. பிராத்திக்கின்றவர்களாய், அபாரமா சக்தி உடையவனே உன்னிடத்தில் தன் பொறுப்பை ஸமர்ப்பிக்கின்றனர் (அங்கி). இதுவே ஆறாவது அங்கி என்றார். **(பர ஸமர்ப்பணம்)**

**வேதமாகிற கண்ணைக் கொண்டு அறிபவர்களுக்கு பிராட்டியுடன் கூடிய எம்பெருமான் ஸ்வரூபம்-பரம்-பலன் இவற்றை ஸமர்ப்பிக்கும்போது ஸ்வாமியாகவும், உபாயமாகவும், பலனாகவும் இருந்துகொண்டு புகழ் அடைகிறான்”**

ஸ்வாமி தேசிகன், ரஹஸ்யத்ரய ஸாரம்

என்று ஸ்வாமி தேசிகன், ரஹஸ்யத்ரய ஸாரத்தில், த்வயாதிகாரத்தில் ஸாதித்தார்.

**அக்ருத்யாநாம் ச கரணம் க்ருத்யாந்நம் வர்ஜநம் ச மே ।**

**க்ஷம்ஸ்வ நிகி₂லம் தே₃வ ப்ரணதார்த்திஹர ப்ரபே₄ா ||**
ஸ்வாமி தேசிகன் ந்யாஸ தஸகம் 9

ஸ்வாமி தேசிகன் ந்யாஸ தஸகத்தில் அடியவர்களின் துன்பங்களை ஒழிப்பவனான அனைத்திலும் வல்லாவனே, பேரருளாளப் பெருமானே என்னுடைய செய்யக்கூடாதவைகளை செய்த குற்றத்தையும் செய்ய வேண்டியதை செய்யாமல் விட்ட குற்றத்தையும் எல்லாவற்றையும் பொறுத்து அருள்வாயாக

**ஶ்ரீமாந் நியத பஞ்சாங்க₃ம் மத்₃ரக்ஷண ப₃ரார்ப்பணம் |**
**அசீகரத் ஸ்வயம் ஸ்வஸ்மிந் அதோஹமிஹ நிர்ப்ப₄ர: ||**
ஸ்வாமி தேசிகன் ந்யாஸ தஸகம் 10

தேசிகன் ந்யாஸ தஸகத்தில் முடிக்கும்போது கடைசி ஸ்லோகம்
**(ஶ்ரீமாந்)** பிராட்டியைப் பிரியாத பேரருளானானே,
**(நியத பஞ்சாங்க₃ம்)** இன்றிமையாத ஐந்து அங்கங்களுடன் கூடியதாய்
**(மத்₃ரக்ஷண ப₃ர அர்ப்பணம்)** அடியேனைக் காக்கும் பொறுப்பை ஸமர்ப்பித்தலான பரந்யாஸத்தை
**(ஸ்வயம் ஸ்வஸ்மிந் அசீகரத்)** தானே தன்னிடத்தில் செய்வித்தான்
**(அத: அஹம் இஹ நிர்ப்ப₄ர:)** ஆதாலால், அடியேன் இதில் சுமை, பொறுப்பு நீங்கியவனாக ஆகிறேன்
[So, I am removed of any responsibility in this matter]

## 15-14 ப்ரபத்தி முறை

**உகந்தவை கொண்டு * உகவாவை கண்டு மருண்டு ***
**தகுந்தவை தனக்கு * தாழ்ச்சியே எனும் தனிநினைவில் ***
**மிகுந்த மன உறுதியில் * மாதவனையே காவல் வேண்டி ***
**வெகுந்த உயிரை வைப்பார் அடி * சேர்வது வைகுந்தமே.**

என்று இன்னொரு இடத்தில் இதையே சொன்னோம்.

1. **உகந்தவை கொண்டு** - எம்பெருமானின் விருப்பத்திற்கு தகுந்தவற்றை செய்யும் **ஆநுகூல்ய ஸங்கல்பம்**
2. **உகவாவை கண்டு மருண்டு** - எம்பெருமான் விரும்பாதவை என்பதை நினைக்கையிலே பயந்து நடுங்கும் **ப்ராதி கூல்ய வர்ஜனம்**
3. **தகுந்தவை தனக்கு தாழ்ச்சியே எனும் தனிநினைவில்** - தன்னுடைய ஸ்வரூபமே எம்பெருமானுக்கு அடி பணிந்து நிற்கும் ஸேஷத்வ பாரதந்திரியமே என அறிந்து, தன்னால் உபாயம் எதையும் கை பற்ற முடிய வில்லையே என வருந்தி நிற்கும் **கார்ப்பண்யம்**
4. **மிகுந்த மன உறுதியில்** - எம்பெருமான் நம்மை என்றும் ரக்ஷிப்பான். அவனே உபாயம், அவனே பலன் என்ற **மஹா விச்வாஸத்துடன்**
5. **மாதவனையே காவல் வேண்டி** - ஸ்ரீயப்பதியான திரு நாராயணனையே ரக்ஷிக்க வேண்டும் என்ற பிராத்தனை ஆகிற **கோப்த்ருத்வ வரணம்**
6. **வெகுந்த உயிரை அடி வைப்பார்** - ஆத்மாவை எம்பெருமானின் திருவடிகளில் ஸமர்பிக்கும் **ஆத்ம ஸமர்ப்பணம்**

இப்படி செய்தவர்கள் **சேர்வது வைகுந்தமே** என்று மோக்ஷம் நிச்சயம் அடைவார்கள் என்றது.

## 15-15 பூர்வாசாரியர்கள் வழியாய் அமைந்தது

ஸ்வாமி தேசிகன், ரஹஸ்யார்த்தங்களை அருளிச் செய்ய தமக்கே உள்ள ஓராண் படியாய் வந்த ஜ்ஞானத்தை ஸாதிக்கிறார்.

**இதி யதி ராஜ மஹாநஸ பரிமள**
**பரிவாஹ வாஸிதாம் பிப$_3$த ।**
**விபு$_3$த$_4$ பரிஷந் நிஷேவ்யாம்**
**வேத$_3$ாந்தோத$_3$யந ஸம்ப்ரத$_3$ாய ஸுதாம் ॥**

ஸ்வாமி தேசிகன் ஸ்ரீமத் ரஹஸ்யத்ரயஸாரம் 74

என்று ஆசார்ய ஸார்வபௌமனான ஸ்வாமி தேசிகன் ஸ்ரீமத் ரஹஸ்யத்ரய ஸாரத்தில் அருளினார். கடாம்பி ஆச்சானுக்கு வேதாந்தோதயனர் என்று பெயர் இருந்ததைச் சுட்டிக் காட்டுகிறார். தர்க்க ஸாஸ்திரத்திற்கு உதயனர்

எப்படியோ அப்படி வேதந்த சாஸ்த்திரத்திற்கு கடாம்பி ஆச்சான் இருந்தார் ஸீக்ஷமமான வேதாந்த அர்த்தங்களை எல்லோரும் சுலபமாய் அறிந்து கொள்ள ப்ரவசனம் பண்ணியவர் கிடாம்பி அப்புள்ளார் இவருடைய பரம்பரை

**பாராசர்ய வசஸ்ஸுதா முபநிஷத் துக்தாப்தி மத்யோத் த்ருதாம்**
**ஸம்ஸாராக்னி விதீபன வ்யபகத ப்ராணாத்ம ஸஞ்ஜீவநீம்**
**பூர்வாசார்ய ஸுரக்ஷிதாம் பஹுமதி வ்யகாத தூரஸ்திதாம்**
**ஆநீதாம்து நிஜாக்ஷரைஸ்ஸுமநஸோ பௌமா: பிபந் த்வந்வஹம்**
எம்பெருமானார் ஸ்ரீபாஷ்ய மங்கள ஸ்லோகம்

எம்பெருமானார் ஸ்ரீபாஷ்ய இரண்டாவது மங்கள ஸ்லோகத்தில் உபநிஷத்களாகிய பாற்கடலில் தோன்றியதும் ஸம்ஸாரமாகிய பெருந்தீயில் விழுந்து தவிப்பவர்களின் ப்ராணன்களை காப்பாற்றும் ஸஞ்சீவநீ போன்றதும் ஆசார்ய ஸார்வபௌமர்களால் நன்கு ரக்ஷிக்கப்பட்டதும், இடையூறுகள் அற்றதும், ஆதிசேஷ அம்சரான பாஷ்யகாரரால் பாஷ்ய ரூபமாகக் கொண்டு வரப் பட்டதுமான வ்யாஸரின் திருப்பவள வாயிலிருந்து ஸூத்ர ரூபமாக வெளிவந்த அம்ருதத்தை தூய்மையான மனமுடையவர்கள் ஸேவித்து நித்யமான வீடு பேற்றைப் பெருவார்கள்.

எம்பெருமானார் **பௌமா: பிபந்து அந்வஹம்** என்று ஸாதித்த முறையிலே ஸ்வாமி தேசிகனும் இங்கு **வாஸிதாம் பிபத** என்றார்.

**பக்தியில் அசக்தனுக்குப் பிரபத்தி,**
**பிரபத்தியில் அசக்தனுக்கு இது**
பிள்ளைலோகாசாரியார், ஸ்ரீவசன பூஷணம்

என்று ஆசாரிய அபிமானத்தை கூறுகிறார், பிள்ளைலோகாசாரியார், ஸ்ரீவசன பூஷணத்தில்

## 15-16 த்வயம் முழுப்பொருள்

கருத்தில் பார்க்கும்போது த்வயம் மூன்று வரிகளாய் அமைந்துள்ளது

1. ஸ்ரீ மந் நாராயண சரணௌ ஶரணம் ப்ரபத்யே
2. ஸ்ரீ மதே நாராயணாய
3. நம:

**இந்த அவாந்தர** (உள் அடங்கிய) **வாக்கியங்கள் மூன்றையும் சேர்த்தால் அநந்யார்ஹ சேஷ பூதனாய்** (மற்று ஒருவருக்கும் இல்லாது எம்பெருமானுக்கு மட்டுமே ஸேஷன்), **அகிஞ்சனான** (கைம்முதல் அற்ற) **நான், ஸ்ரீமானான நாராயணன் திருவடிகளில், ஸர்வவித தோஷ ரஹிதமாய்** (குற்றமில்லாத), **ஸ்வாமிமதமான** (தன் மனதிற்கு உகந்த), **ஸர்வவித கைங்கர்ய வர்க்கத்தையும்** (கைங்கர்யங்களின் தொகையை) **பெருகைக்கு, ஸ்ரீமந் நாராயணன் திருவடிகளையே உபாயமாகக் கொண்டு, யதோக்தமான** (சாஸ்திர முறைப்படியான), **ஆத்ம ரக்ஷாபர ஸமர்ப்பணம்** (தன்னை காக்கும் பொறுப்பை ஸமர்ப்பித்தல்) **பண்ணுகிறேன்," என்று ஒரு வாக்ய அர்த்தமாகிறது.**

ஸ்வாமி தேசிகன், ஸாரஸாரம்

என்று ஸாரசாரத்தில் ஸ்வாமி தேசிகன் ஸாதித்தார்.

## 15-17 த்வயம் முழுப்பொருள்

**இதிலே ஶாரீரக க்ரமத்தாலே (ஸ்ரீபாஷ்யத்தில் உள்ள முறைப்படி) தோற்றின பர தத்துவத்தையும் (பரம புருஷன்), பரம ஹிதத்தையும் (சிறந்த உபாயம் - ப்ரபத்தி), பரம புருஷார்த்தத்தையும் (மோக்ஷத்தில் பெறும் கைங்கர்யம்) ஸ்வரூப அநுரூப விஶேஷண விஶிஷ்டமாக வெளியிடுகிற ஶரணாகதி மந்த்ரத்தில் (த்வயத்தில்) மூன்று வாக்யங்களில் அடைவே உபாய விஶேஷமும், புருஷார்த்த விஶேஷமும், விரோதி நிவ்ருத்தி விஶேஷமும் ஸித்த ஸாத்ய ரூபத்தாலே இரு வகையாக சேர்ந்து நிற்கும்படி அநுஸந்தேயம். எங்ஙனே என்னில் -**

உபாய விசேஷமாவது -

ஸ்ரீமானான நாராயணன் அபிமத ஸித்திக்கு (ஆசைப்படும் பலனை அடைதல்) வ்யாஜமாத்ர ஸாபேக்ஷமுமாய் (சிறிய உபாயத்தை எதிர்பார்ப்பதாய்) தத்ப்ரவர்த்தகமுமாய் வ்யவதானம் அற்று (நடுவே வேறு ஒன்றில்லாமல்) ப்ரதானமுமான ஸித்தோபாயம் (ஏற்கனவே அமைந்த உபாயம்).

அகலகில்லேன் இத்யாதிகளிற் சொல்லுகிற சரணாகதி அவனுடைய வசீகரணமான ஸாத்யோபாயம் (சேதனன் செய்ய வேண்டிய உபாயம்).

புருஷார்த்த விசேஷமாவது -

தனக்கேயாக எனக்கொள்ளும் ஈதே என்கிறபடியே தன்னோடும் தான் பண்ணுகிற கைங்கர்யத்தோடும் துவக்கற்று கண்டு கேட்டு உற்று இத்யாதிகளிற்படியே நிரதிசய போக்யமான (இதற்கு மேல் ஒரு இனிமையும் இல்லை என்கிறபடி) நித்ய ஸித்த ப்ராப்யமும் (எப்போதும் உள்ள பலன் = ப்ரம்மம்) அதனுடைய பரிபூர்ண அநுபவ வரீவாஹமாய்க் கொண்டு ஸாத்யமான சேஷி உகந்த கைங்கர்யமும்.

விரோதி நிவ்ருத்தி விசேஷமாவது

தனக்கேயாக எனக்கொள்ளும் ஈதே என்கிறபடியே தன்னோடும் தான் பண்ணுகிற கைங்கர்யத்தோடும் துவக்கற்று ஸர்வ அவித்யா நிவ்ருத்தி பிறக்கை. இப்படிப்பட்ட ஸித்த ஸாத்யங்களான புருஷார்த்த ஹேதுக்களையும் (பலனுக்கு காரணமான உபாயமும்), ஸித்த ஸாத்யங்களான புருஷார்த்தங்களையும் சேர்த்து ஸாத்ய புருஷார்த்தத்தில் (செய்ய வேண்டிய பலனாகிய கைங்கர்யத்தில்) இரு வகையான (நான், என் பலனுக்காக செய்கிறேன்) களையற்ற படியையும் காட்டுகிறது த்வயம்.

இதில் பூர்வோத்ர கண்டங்களுக்கு (முன், பின் பகுதி) "ஸ ப்ராதுச்சரணௌ காடம்", " பவாம்ஸ்து ஸஹ வைதேஹ்யா" என்ற இரண்டு ச்லோகங்களும் சேர்த்தியாகிறன.

ஸ்வாமி தேசிகன், ரஹஸ்ய நவநீதம்

என்று ஸ்வாமி தேசிகன் ரஹஸ்ய நவநீதத்தில் ஸாதித்தார்.

ஆக, த்வயத்தில் தெளிவானது --

1. ஸ்ரீ மந் நாராயண சரணௌ ஶரணம் ப்ரபத்யே - முதல் பகுதி - ஸித்த ஸாத்ய உபாயங்கள்

2. ஸ்ரீ மதே நாராயணாய - இரண்டாம் பகுதி - ஸித்த (போக்யமான எம்பிரான்) ஸாத்ய (எல்லாவகியிலும் வழுவிலா அடிமை) புருஷார்த்தங்கள்

3. நம: - மூன்றாம் பகுதி - இரண்டு வகையான அஞ்ஞானம் (நான் செய்கிறேன், என் பலனுக்காகவே செய்கிறேன்)

## 15-18 லக்ஷ்மண ஶரணாகதி

ஸ ப்₄ராதுஶ் சரணௌ கா₃ட₄ம் நிபீட்₃ய ரகு₄நந்த₃ந: |
ஸீதாமுவாசாதியஶா ராக₄வஞ்ச மஹாவ்ரதம் ||
வால்மீகி, ராமாயணம் அயோ 31-2

ரகுநந்தனனாய் பெரும் கீர்த்தி உடையவனான ராமபிரானின் திருவடிகளை கெட்டியாகப் பிடித்துக் கொண்டு பிராட்டியுடன் கூடிய அடியவரை காக்கும் பெரிய விரதத்தை உடைய பெருமாளைப் பார்த்து லக்ஷ்மணன் சொன்னான் என்பது த்வயத்தின் முன் வரிக்கு பொருத்தமானது என்பர்.

- (ஸ்ரீமத்) ஸீதா ஸஹிதமாய் இருக்கும் ராமபிரானிடம் லக்ஷ்மணன் சொன்னதால்
- (நாராயண) ராக₄வஞ்ச மஹாவ்ரதம் என்று Sரணாகத வரதம் பூண்ட எம்பிரானை சொன்னது திருக்கல்யாண குணங்களை காட்டியது
- (சரணௌ) சரணௌ திருவடிகளை பற்றிக் கொண்டு என்று ஶ்லோகத்திலேயே ஸ்பஷ்டம்

ப₄வாம்ஸ்து ஸஹ வைதேஹ்யா கி₃ரிஸாநுஷு ரம்ஸ்யதே |
அஹம் ஸர்வம் கரிஷ்யாமி ஜாக்₃ரதஸ் ஸ்வபதஶ்ச தே ||
வால்மீகி, ராமாயணம் அயோ 31-27

“நீர் வைதேஹியுடன் கூடி மலையின் அடிவாரங்களில் விளையாடுங்கள். நான் நீங்கள் விழித்துக் கொண்டு இருக்கும்போதும், தூங்கும்போதும் உங்களுக்கு எல்லாவிதமான அடிமைக் காரியங்களையும் செய்வேன்,” என்று லக்ஷ்மணன் சொன்னது த்வயத்தின் இரண்டாம் வரிக்கு பொஉருத்தமானது என்பர் முன்னோர்.

- (ஸ்ரீ மதே) ஸஹ வைதேஹ்யா என்பதால் ஸீதையுடன் சேர்ந்த எம்பிரானே என்று ஆகிறது.
- (நாரயண) பவாம்ஸ்து என்பது நாரயண சப்தத்தை காட்டுகிறது.
- (ஆய) ஜாக்ரத என்பதால் ஸர்வ கால, ஸர்வ தேS, ஸர்வ அவஸ்தைகளிலும் என்று சதுர்த்தியின் அர்த்தம் புலனாகிறது

## 15-19 த்வய நிஷ்டம்

- இவ்வர்த்தாநுஸந்தாநம் உபாய தசையில் ஸக்ருத்தாய் (ஒரு முறை அநுஸந்திப்பது) க்ருதக்ருத்யதா (செய்ய வேண்டியவைகளைச் செய்து முடித்த சேதனன்) ஹேதுவாய் இருக்கும்.
- ஸ்வயம் ப்ரயோஜனமான (வேறு பலன் ஒன்றுமில்லாமல்) உத்தர க்ருத்யத்தில் (ப்ரபத்திக்கு பின் செய்யும் செயலில்) ஸதாவாய் (எப்பொழுதும் உள்ளதாய்) க்ருதார்த்ததா ஹேதுவாய் இருக்கும்.
- இதில் பூர்வ கண்டத்தில் அநந்ய உபாயத்வத்வமும் (வேறு வழியின்றி)
- உத்தர கண்டத்தில் அநந்யப்ரயோஜநத்வமும் (வேறு பலனின்றி)
- இரண்டிடத்திலும் அநந்யார்ஹ ஸேஷத்வமும் ஸித்திக்கிறது (வேறு ஒருவர்க்கும் அடிமையன்றி தேறுகின்றது).
- இப்படி இங்கும் அங்கும் (உபாயம், பலன் என்ற இரு நிலைகளிலும்) திருமாலன்றியின்மை கண்டவன் த்வயநிஷ்டன் (த்வயத்தில் கூறிய நிஷ்டையை அடையப் பெற்றவன்).

ஸ்வாமி தேசிகன், ஸாரஸாரம்

என்று ஸாரசாரத்தில் த்வயாதிகாரத்தை முடிக்கிறார் ஸ்வாமி தேசிகன்.
மேலே கூறியதின் சுருக்கம்

1. த்வயத்தின் பொருளை ப்ரபத்தி செய்யும்போது இவ்வாறு அநுஸந்திக்க வேண்டும்
2. இப்படி செய்தால் சேதனன் செய்ய வேண்டிய காரியங்களை செய்து முடித்தவனாகிறான்.
3. ப்ரபத்திக்கு பின் செய்ய வேண்டிய கடமைகளுல் ஒன்றாய், வேறு பயன் ஒன்றையும் உத்தேசிக்காமல் இந்த பொருளை எப்பொழுதும் அநுஸந்திதுக் கொண்டே இருக்கலாம்
4. இதற்கு பலன் இதுவே
5. இவ்வாறு இந்த பொருளை உணர்ந்து எப்பொழுதும் அநுஸந்திப்பவன் இங்கேயே பலனைப் பெற்றவன் ஆகிறான்.
6. த்வயத்தில் முதல் வரி திருவுடன் கூடிய நாராயணனிடத்தில் ப்ரபத்தி செய்வதால், அந்த பகவானைத்தவிர வேறு உபாயம் கொள்ளாதவன் என ஆகிறது
7. த்வயத்தில் இரண்டாம் வரி திருவுடன் கூடிய நாராயணனிடத்தில் கைங்கர்யம் செய்வதை சொல்லுவதால் அந்த கைங்கர்யத்தையன்றி வேறு பலன் கொள்ளாதவன் என ஆகிறது
8. இந்த இரண்டு வரிகளையும் சேர்த்து பார்க்கும்போது பிராட்டியுடன் சேர்ந்த எம்பெருமான் ஒருவனுக்கே இந்த சேதனன் அடிமையாகிறான் என்று புலப்படுகிறது.
9. இவ்வாறு உபாயத்திலும், பலனிலும் திருவுடன் கூடிய நாராயணனைத் தவிர வேறு ஒன்றும் இல்லை என்று அறிந்தவன் த்வய மஹாமந்திர நிஷ்டை பெற்றவன் ஆகிறான்.

prapatti.com

prapatti dot com

# 16 - மொழி பெயர்ப்பு

**திருமகள் தனியா நாரணன்**
**இணையடிகள்* ஶரணென பற்றவே/**
**திருமால் சேவை தமக்கின்றியென ***
**நல்வாழ்ச்சி நவிலப் பெற்றனரே.**

| | |
|---|---|
| **திருமகள்** | = ஸ்ரீ மஹா லக்ஷ்மி (யை) |
| **தனியா** | = விட்டு ஒருக் காலும் பிரியாத |
| **நாரணன்** | = நாராயண(னின்) |
| **இணையடிகள்** | = இரண்டு திருவடிகளையும் |
| **ஶரணென** | = உபாயம் என்று |
| **பற்றவே** | = ப்ரபத்தி செய்யவே |
| **திருமால் சேவை** | = அந்த ஸ்ரீமந் நாராயணுக்கு |
| **நல்வாழ்ச்சி நவிலப்** | = எல்லா ஸேவையையும் பிரார்த்தித்து |
| **தமக்கின்றியென** | = செருக்கு இல்லாத |
| **பெற்றனரே** | = பகவத் அநுபவத்தை அடைந்தனர். |

## 16.1 பதங்களின் பொருள்

| | |
|---|---|
| **திருமகள்** | = ஸ்ரீ |
| **தனியா** | = மத் |
| **நாரணன்** | = நாராயணன் |
| **இணையடிகள்** | = சரணௌ |
| **ஶரணென** | = ஶரணம் |
| **பற்றவே** | = ப்ரபத்யே |
| **திருமால் சேவை** | = ஸ்ரீமதே நாராயண |
| **நல்வாழ்ச்சி நவில** | = ஆய |
| **தமக்கின்றியென** *பெற்றனரே* | = நம: |

## 16.2 திருமகளும் திருவடியும்

**அடியேனை அலையாத வண்ணம் எண்ணித் *
தருமம் உடையார் உரைக்க யான் அறிந்து *
தனக்கென்னா அடிமைக்காம் வாழ்ச்சி வேண்டித் *
திருமகளோடு ஒரு காலும் பிரியாத நாதன் *
திண்கழலே சேதுவெனச் சேர்கின்றேனே**

ஸ்வாமி தேசிகன், அமிருத ஸ்வாதினி 7

ஸ்வாமி தேசிகனும் அமிருதஸ்வாதினியில் த்வயம் ஶரணாகதியைப் பற்றுதலைக் காட்டினார்.

**(தருமம் உடையார்)** எல்லா தர்மங்களையும் அறிந்து அனுஷ்டிக்கும் பெரியோர்கள் **(அடியேனை அலையாத வண்ணம்)** எனக்கு மற்ற உபாயங்களில் முனைந்து செய்து கஷ்டத்தை அனுபவிக்காது **(உரைக்க யான் அறிந்து)** இந்த ஶரணாகதியை உபதேசித்தனர் என்று த்வயத்தை சொல்கிறார்.

அதை அறிந்த அடியேன், **(தனக்கென்னா அடிமைக்காம் வாழ்ச்சி வேண்டி)** பரமபதத்தில் அஹங்கார மமகாரங்கள் இல்லாத அநந்த, ஆனந்தமான கைங்கர்யத்தை வேண்டினேன். **(திண்கழலே சேதுவெனச் சேர்கின்றேனே)** எம்பெருமானுடைய திருவடிகளே இந்த ஸம்ஸாரத்தை அடைக்கும் அணை, **"சேது"** எனத் துணிந்து அதையே உபாயமாகப் பற்றினேன். என்றார்.

## 16.3 ஶரணென பற்றவே

**திருமால் அடி இணையே * திண் சரணாகக் கொண்டு *
திருமால் அடி இணையே சேர்வார் * - ஒரு மால்
அருளால் அருளாத * வானோர்கள் வாழ்ச்சி *
அருளால் நமக்கு அளித்தார் * ஆய்ந்து**

ஸ்வாமி தேசிகன், அமிருத ரஞ்சினி 33

ஸ்வாமி தேசிகன் அமிருதரஞ்சனியில் சொல்கிறார். ஸ்ரீமந் நாராயணனுடைய திருவடிகளையே உபாயமாகவும், பலனாகவும் கொண்டவர்கள் நம் ஆசாரியர்கள்.

**பரிபூர்ண ப்ரம்மாநுபவம்** எனும் மோக்ஷ ப்ராப்தியை அநாதி காலமாய் பெறாத நமக்கு, அதைப் பெற்று மகிழ்வதற்கான சிறந்த உபாயத்தை தேடிக் காட்டித் தந்தனர் நம் ஆசாரியர்கள் என்றார். இங்கே முதல் இரண்டு வரிகள் த்வய மந்திரத்தை காட்டுகின்றன.

**தனக்கு இணை ஒன்று இல்லாத திருமால் பாதம் ***
**சாதனமும் பயனும் என சலங்கள் தீர்ந்தோம் ***
**ஸ்வாமி தேசிகன், அமிருத ரஞ்சனி 8**

தனக்கு நிகர் ஒருவருமில்லை என்ற ஸ்ரீமந் நாராயணனுடைய திருவடியே உபாயம், பலன் என்று தீய வழிகளை ஒழித்தோம், என்றார்.

## 16.4 ஸேவை தமக்கின்றி

**படி கொண்ட கீர்த்தி இராமயணமென்னும் பக்தி வெள்ளம் ***
**குடி கொண்ட கோயில் இராமாநுஜன் குணங்கூறும் ***
**திருவரங்கத்தமுதனார், இராமநுச நூற்றந்தாதி 37**

என்றார் திருவரங்கத்தமுதனார், ராமானுஜ நூற்றந்தாதியில். எம்பெருமானார் எத்தனையோ காலக்ஷேபம் பண்ணியிருக்கிறார். திருவாய்மொழி கேட்டார், பிரம்மஸூத்ரம் கேட்டார் என்று சொல்லாமல் இராமாயணத்தை உற்சாகத்துடன் கேட்டார் என்றால் அந்த இதிஹாசத்தினுடைய பெருமை விளங்கும்.

ராமாயணத்தில் ராமன் இளைய பெருமாளிடம், நான் தான் காட்டிற்கு போகிறேன் நீ எதற்கு வருகிறாய்? என்றதற்கு, லக்ஷ்மணன் பதில் அளிக்கிறார்

**பவாம்ஸ்து ஸஹ வைதேஹ்யா கிரிஸாநுஷு ரம்ஸ்யதே**

**அஹம் ஸர்வம் கரிஷ்யாமி ஜாக்ரதஸ் ஸ்வபதஸ் சதே**

*வால்மீகி, ராமாயணம்*

நீர் காட்டில் வைதேஹியுடன் மலைத்தாழ்வாரங்களில் விளையாடுவீர். அடியேன் நீர் உறங்கும்போதும், விழித்துக்கொண்டிருக்கும்போதும் உமக்கு எல்லா பணிவிடைகளும் செய்வேன்.

உமக்கு அடிமை செய்வதற்கே நான் இருக்கிறேன் என்றான், லக்ஷமணன், ஆதி ஸேஷனின் அவதாரம்.

**சென்றால் குடையாம் * இருந்தால் சிங்காஸனமாம் *
நின்றால் மரவடியாம் நீள்கடலுள் * - என்றும்
புணையாம் மணிவிளக்காம் * பூம்பட்டாம் புல்கும்
அணையாம் * திருமாற்க்கு அரவு.**

பொய்கையாழ்வார், முதல் திருவந்தாதி 53

என்று முதல் திருவந்தாதியில் பொய்கையாழ்வார், ஆதிசேஷன் கைங்கர்யத்தை பற்றி சொல்லுங்கால் பெருமாள் உலாவும்போது குடையாய், வீற்றிருக்கும்போது ஸிங்காஸனமாய், நிற்கும்போது பாதுகையாய், பரந்த திருபாற்கடலில் சயனத்திற்கேற்ப எப்போதும் படுக்கையாய், நித்யமாய் எரிந்து கொண்டு இருக்கும் மங்கள தீபமாய், அழகிய வஸ்த்ரமாய், தழுவக் கொள்ளும் தலையணையாய் இருப்பான்.

**நிவாஸ ஶய்யா ஸந பாது$_3$காம் ஶுக
உபத$_4$ாந வர்ஷாதப வாரணாதி$_3$பி$_4$: ।
ஶரீர பே$_4$தை$_3$ ஸ்தவ ஶேஷதாம் க$_3$தை:
யதே$_2$ா சிதம் ஶேஷ இதீரிதே ஜநை: ।।**

ஆளவந்தார், ஸ்தோத்ர ரத்நம் 40

**(நிவாஸ) வசிக்கும் இடம் அதாவது எழுந்தருளி இருக்கும் திருமாளிகை, (ஶய்யா பாது$_3$கா) தூங்கும் இடம் (கண் வளருகைக்கு படுக்கை), பாதுகை; (அம்ஶுக உபத$_4$ாந) திருப்பரி வட்டம், அணையாய் தாங்க (சாய்ந்து கொள்ள) (வர்ஷ ஆதப வாரண) பொழியும் (மழை), காயும் (வெய்யிலுக்கு) குடையாகவும், (ஆதி$_3$பி$_4$ ) மற்றும் பலவாகவும்**

**(தவ ஶேஷதாம் க₃தை) உனக்கு அடிமையான**
**(ஶரீர பே₄தை₃) பலவிதமான தேஹத்தால்**
**(யதே₂ா சிதம்) அந்தந்த காலத்திற்கு தகுந்தாவாறு**
**(ஶேஷ இதி:) ஸேஷன் இப்படி என்று**
**(ஜநை: ஈரிதே) மக்களால் சொல்லப்படுவன் (திருவனந்தாழ்வான்)**

இதையே ஆளவந்தாரும் ஸ்தோத்ர ரத்னத்தில் ஶேஷியான உனக்கு எழுந்தருளியிருக்கும் திருமாளிகையாகவும். கண் வளந்தருளும் படுக்கையாகவும். ஸிம்மாசனமாகவும், பாதுகையாகவும், திருப் பரிவட்டமாகவும் அணையாகவும், மழைக்கும் வெய்யிலுக்கும் குடையாகவும் உள்ள ஆதி ஸேஷன் என்றார்.

**காந்தஸ்தே புருஷோத்த: ப₂ணிபதிஶ் ஶய்யா ஆஸநம் வாகனம்**
ஆளவந்தார், சதுஸ்லோகி

ஆளவந்தாரும் சதுஸ்லோகி ஆரம்பத்திலேயே

**த₃தநுப₄வ ஜநித அநவதி₄காதிஸய ப்ரீதிகாரித**
**அஸேஷா வஸ்தே₂ாசித அஸேஷ ஸேஷ தைகரதிருப**
**நித்ய கிங்கரோ ப₄வாநி**
ராமாநுஜர், ஶரணாகதி கத்யம்

என்று பகவத் ராமானுஜரும், கத்யத்தில் அவன் பகவான், அவள் பகவதி, இந்த இருவருக்கும் பணி செய்வதே ஜீவனின் லக்ஷணம் என ஸாதித்தனர்.

## 16.5 நல் வாழ்ச்சி இங்கே

**தாழ்ச்சி மற்றெங்கும் தவிர்ந்து *நின் தாளிணைக் கீழ்**
**வாழ்ச்சி * யான் சேரும் * வகை அருளாய் வந்தே**
நம்மாழ்வார், திருவாய்மொழி 3-2-4

நம்மாழ்வார், திருவாய்மொழியில் “நான் வேறு தாழ்ந்ததான விஷயங்களில் ஈடுபட்டு அழிந்து போகமல் உன் திருவடிகளுக்கு கீழ் நல்வாழ்வு பெறும் வழியை நீ சொல்லு” என்று வேண்டுகிறார்.

**அருள்பெறுவார் அடியார்தம் * அடியேனற்கு *ஆழியான்**
**அருள் தருவான் அமைகின்றான் * அது நமது விதிவகையே ***
**இருள் தருமா ஞாலத்துள் * இனிப்பிறவி யான் வேண்டேன் ***
**மருளொழி நீ மடநெஞ்சே! * வாட்டாற்றான் அடி வணங்கே**
நம்மாழ்வார், திருவாய்மொழி 10-6-1

என்றார் திருவாய்மொழியில். பகவானுடைய க்ருபைக்கு பாத்திரமான அடியவர்களுக்கு நான் அடியவன் ஆனேன். அதனால் பகவான் எனக்கு அருள் புரிவதற்காக ஒடி வருகிறான். பகவானுடைய அருள் நாம் செய்த புண்ய பாபங்களை பொறுத்து வரக்கூடியது என்றனர், பூர்வாசாரியர்கள். எம்பெருமானார், இங்கே விதி என்பது புண்ய பாபங்கள் இல்லை. அது நாம் சொல்லுகிற சொல்லுக்கு பயந்து கடமை என பகவான் ஆஶ்ரித பாரதந்த்ரியனாய் ஒடி வருகிறான் என்றார்.

இங்கே விஷ்வக்சேனரை உதாரணமாய் காட்டுவர். பகவான் சேனை முதலியாரின் விண்ணப்பம் செய்ய, அவர் சொல்லின்படி அந்த காரியத்தை நடத்த அருளுவான், பகவான்.

**த்வதீ3ய பு4க்தோஜ்ஜி2த ஶேஷ பே4ாஜிநா**
**த்வயா நிஸ்ருஷ்டாத்ம ப4ரேண யத்3 யத2ா ।**
**ப்ரியேண ஸேநாபதிநா ந்யவேதி3 தத்**
**தத2ாநுஜாநந்த முத3ார வீக்ஷணை: ।।**
ஆளவந்தார், ஸ்தோத்ர ரத்னம் 42

**த்வதீ3ய பு4க்த உஜ்ஜி2த** - உன்னுடைய சாப்பிட்டு மிகுந்த
**ஶேஷ பே4ாஜிநா** - மீதியை உண்பவனும்
**த்வயா நிஸ்ருஷ்ட** - உன்னாலே வைக்கப்பட்ட
**ஆத்ம ப4ரேண** - உன்னுடைய உபயவிபூதி பாரத்தையும்
**ப்ரியேண ஸேநாபதிநா** - அன்பனான விஷ்வக்ஸேநரும்
**யத்3 யத2ா ந்யவேதி3** - எந்த காரியம் எப்படி விண்ணப்பம் செய்யப்படடதோ

| | |
|---|---|
| **தத் தத2ா** | - அந்த காரியத்தை அவ்விதமே |
| **அநுஜாநந்தம்** | - செய்ய நியமித்து அருளுகிறான் |
| **உத3ார வீக்ஷணை:** | - (எம்பெருமான்) தன்னுடைய க்ருபாகடாக்ஷத்தாலே |

இந்த பூலோகத்து வாழ்க்கை அஞ்ஞானம் உடையது. பகவத் பக்திக்கும் பாகவத பக்திக்கும் பெரும் தடையானது. அதனால் இந்த ஸம்ஸார பந்தமே வேண்டாம் என்கிறார் ஆழ்வார்.

**மற்றொன்றில்லை சுருங்கச் சொன்னோம் மாநிலத்து எவ்வுயிர்க்கும்**
**சிற்ற வேண்டா சிந்திப்பே அமையும் கண்டீர்கள் அந்தோ!**
**குற்றம் அன்று எங்கள் பெற்றத்தாயன் வட மதுரை பிறந்தான்**
**குற்றமில் சீர்கற்று வைகல் வாழ்தல் கண்டீர் குணமே**
நம்மாழ்வார் திருவாய்மொழி 9-1-7

என்றார் திருவாய்மொழியில். வேறு எதுவும் தேவையில்லை. சுருக்கமாக சொல்கிறேன். கலங்கிப்போய் இந்த உபாயம், அந்த உபாயம் என்று எல்லா இடங்களிலும் சிதறிப் போகாதீர்கள். வட மதுரை வந்து பிறந்த ஆயன் கண்ணனின் கல்யாண குணங்களையே அறிந்து, பேசி, சந்தோஷத்தில் திளைப்பதே வாழ்க்கை என்றார்.

எம்பெருமானின் திருவடிகளையே ஶரணம் என்று கொண்டு அடைக்கலம் அடைந்த அடியவர்கள், இங்கும், அங்கும் மட்டற்ற மகிழ்ச்சியுடன் என்றும் வாழ்வார்கள்.

**இனிக்க வரும் அவை கவர * இகந்தோம் சோகம் ***
**இமையவரோட ஒன்று * இனி நாம் இருக்கு நாளே**
ஸ்வாமி தேசிகன், அமிருத ரஞ்சனி 8

பின்னால் வரப் போகும் அர்ச்சிராதி மார்கம், பர்பூர்ண ப்ரம்மாநுபவம் ஆகிய இன்பங்களால் கவரப் பட்டு, அவற்றை நினைத்து வருத்தம் தீர்ந்தோம். இத்தனை உயர்ந்த வாழ்க்கையை நாம் இந்த கர்ம பூமியிலேயே அனுபவிப்பது என்பது நித்ய ஸூரிகளுக்கு சமமானது, என்றார்.

## 16.6 நல் வாழ்ச்சி அங்கே

முக்தர்களின் வாழ்ச்சி எப்படிப்பட்டது? பகவான் தன்னை ஒக்க அருள் செய்கிறான்.

**தஸ்மிந் காம: ஸமாஹிதா:**
**ஏஷ ஆத்மா அபஹத பாப்மா விஜரோ விம்ருத்யு:**
**விஶோகோ விஜிக$_4$த்ஸ: அபிபாஸ: ஸத்யகாம:**
**ஸத்ய ஸங்கல்ப:**

சாந்தோக்ய உபனிஷத் 8-1-5

என்றது உபனிஷத். எம்பெருமானிடம் விரும்பத் தக்க குணங்கள் எல்லாம் அமைந்துள்ளன.

அந்த பரமாத்மாவிற்கு **(அபஹத பாப்மா விஜரோ விம்ருத்யு:)** பாபமின்மை, கிழத்தனம் இல்லாமை, சாவு இல்லாமை, **(விஶோகோ விஜிக$_4$த்ஸ: அபிபாஸ:)** வருத்தமில்லாமை, பசி இல்லாமை, தாகம் இல்லாமை, **(ஸத்யகாம: ஸத்ய ஸங்கல்ப)** எல்லா விருப்பங்களும் நிறைவேறும் தன்மை, தடைபடாத ஸங்கல்பம் நிறைவேறும் தன்மை இவை எல்லலாம் நிறைந்துள்ளன.

எம்பெருமான் முக்தி நிலையில் இந்த எட்டு குணங்களையும் சேதனனுக்கு அருளுகிறான்.

**ரஸோ வை ஸ: ரஸம் ஹ்யேவாயம்**
**லப்$_3$த்$_4$வா ஆநந்தீ$_3$ ப$_4$வதி ।**

தைத்ரீய - ஆநந்தவல்லீ 7-1

அந்த பரப்ரம்மம் ரஸமாகவே, ஸத்தாகவே, ஆநந்தமாகவே உள்ளது. முக்தன் அந்த பரம புருஷனை அடைந்து தானும் அளவில்லாத ஆனந்தத்தை அடைகிறான்.

prapattidot com

# 17 - பலன்

**பணிந்தே என் உள்ளம் உரை உடலால் ***
**மறைந்தே மறக்கும் பற்பிறவி மறங்கள் ***
**தணிந்தே ஆவியகல மாயனை அத்துன்பம் ***
**விரைந்தே காட்டும் வைகுந்தன் வீட்டின்பம்.**

| | |
|---|---|
| என் | = த்வயத்தின் உள் அர்த்தத்தை அறிந்த என்னுடைய |
| உள்ளம், உரை, உடல் | = மநோ, வாக், காயை (இவற்றால்) |
| பணிந்தே | = எம்பெருமானுக்கு அடிமையாய் (நிற்க) |
| பற்பிறவி | = பல ஜன்மங்களில் |
| மறக்கும் | = (செய்து குவித்துள்ள) மறந்து போன |
| மறங்கள் | = பாபங்கள் (அனைத்தும்) |
| மறைந்தே | = (எம்பெருமானுடைய ஸங்கல்பத்தால்) விலகியது. |
| ஆவி | = (மேலும், எம்பெருமான்) என்னுடைய ஆத்மா |
| அகல மாயனை | = அநாதி காலமாய் எம்பெருமானைவிட்டு பிரிந்ததால் |
| அத்துன்பம் | = உண்டான துன்பம் |
| அகல | = முழுதும் நீங்கும்படி |
| வைகுந்தன் வீடு | = மோக்ஷ ஸாம்ராஜ்யத்தில் |
| இன்பம் | = பரிபூர்ண ப்ரம்மாநுபவத்தை |
| விரைந்தே | = நினைக்க முடியாத வேகத்தில் |
| காட்டும் | = (அர்ச்சிராதி மார்கமாய்) அருளுகிறான். |

## 17-1 முன்னுரை

**உள்ளம் உரை செயல் * உள்ள இம்மூன்றையும் ***
**உள்ளிக் கெடுத்து இறை * உள்ளில் ஒடுங்கே**
நம்மாழ்வார் திருவாய்மொழி 1-2-8

மனம், பேச்சு, செயல் என்ற மூன்று நிலைகளையும் நன்று ஆராய்ந்து பார்த்து, இம்மூன்றையும் எம்பெருமானுக்கே அர்பணித்து விடு. இந்த மூன்று



prapatti.com

இடங்களிலும் உண்டாகும் உலகப் பற்றையும், இந்திரியங்களால் வரும் சுகத்தையும் அடக்கி, எம்பெருமானிடத்தில் அவற்றை வை என்றார். எப்படி என்றால் - இந்த த்வயம் என்னும் மஹா மந்தரத்தை அர்த்தத்துடன் அநுஸந்திப்பதால்.

**தூயோமாய் வந்து நாம் தூமலர்த்தூவித் தொழுது ***
**வாயினால் பாடி மனத்தினால் சிந்திக்கப் ***
**போய பிழையும் புகு தருவான் நின்றனவும் ***
**தீயினில் தூசாகும் செப்பு ஏலோர் எம் பாவாய்**
ஆண்டாள், திருப்பாவை 5

என்று திருப்பாவையில் ஆண்டாளும் கைகளால் பகவானை அர்ச்சித்து, வாயினால் அவன் ஸ்தோத்திரங்களைப் பாடி, மனதினால் அவன் புகழையே ஸ்மரிக்க, எல்லாவிதமான பாபங்களும் அகலும் என்றாள்.

## 17-2 பணிந்தே என் உள்ளம் உரை உடலால்

**மனோ வாக் காயை:** என்கிற கிரமத்தில் எல்லா இந்த்ரியங்களாலும் பகவானைப் பணிந்தே என்கிறபடி.

**சிந்தையாலும் சொல்லாலும் செய்கையினாலும் * தேவபிரானையே ***
**தந்தை தாய் என்று அடைந்த * வண்குருகூர் சடகோபன் சொல் ***
**முந்தை ஆயிரத்துள் இவை * தொலை வில்லி மங்கலத்தைச் சொன்ன ***
**செந்தமிழ்ப் பத்தும் வல்லார் * அடிமை செய்வார் திருமாலுக்கே**
நம்மாழ்வார், திருவாய்மொழி 6-5-11

ஸ்வாமி நம்மாழ்வாரும் திருவாய்மொழியில் சிந்தை, சொல், செய்கை மூன்றினாலும் திருத் தொலைவில்லி மங்கலத்து எம்பெருமானிடம் ஈடுபட்ட நிலை இந்த பதிகத்தின் ஸாரார்த்தமாக வியாக்கியானத்தில், பகவானே நமக்கு எல்லாவிதமான பந்து என்று ஸாதிக்கிறார்.

**பூசும் சாந்து என் நெஞ்சமே * புனையும் கண்ணி எனதுடைய ***

prapatti dot com

**வாசகம் செய் மாலையே * வான் பட்டாடையும் அஃதே *
தேசம் ஆன அணி கலனும் * என்கை கூப்பு செய்கையே *
ஈசன் ஞாலம் உண்டு உமிழ்ந்த * எந்தையேக மூர்த்திக்கே**
நம்மாழ்வார், திருவாய்மொழி 4-3-2

ஸ்வாமி நம்மாழ்வாரும் திருவாய்மொழியில் “என் மனமே உனக்கு பூசுகின்ற சந்தனம். என்னுடைய சொல்லே உனக்கு மாலையும் பட்டு ஆடையும். நான் கைகூப்பி வணங்குவதே உனக்கு நான் அணியும் ஆபரணம்” என்று இவ்வாறு எண்ணம், சொல், செயலால் பகவானிடம் பணிகிறார்.

**உனக்குப் பணி செய்திருக்கும்
தவமுடையேன் * இனிப்போய் ஒருவன்
தனக்குப் பணிந்து * கடைத்தலை
நிற்கை * நின் சாயை அழிவு கண்டாய் *
புனத்தினைக் கிள்ளி அது அவி காட்டி *
உன் பொன்னடி வாழ்க என்று *
இனக்குறவர் புதியது உண்ணும் *
எழில் மாலிருஞ்சோலை எந்தாய்**
பெரியாழ்வார், பெரியாழ்வார் திருமொழி 5-3-3

பெரியாழ்வார் திருமொழியில் “ஸர்வ ஸ்வாமியான உனக்கு கைங்கர்யம் செய்வதை அளிக்கும் உபாயத்தை செய்துள்ள நான் இந்த விவேகம் வந்த பிறகு உன்னைத் தவிர வேறு ஒரு ஜீவனுக்கு பரத்ந்தரனாய் இருந்து அவன் வாசலில் நிற்பது உனது நிறத்திற்கு இழுக்காகும்” என்று அருளினார்.

**வாழ்த்தி அவனடியைப் * பூப்புனைந்து, நின் தலையைத்-
தாழ்த்தி * இருகை கூப்பு என்றால் கூப்பாது பாழ்த்த விதி *
எங்குற்றாய் என்று அவனை * ஏத்தாதென் நெஞ்சமே
தங்கத்தான் ஆம் ஏலும் தங்கு**
நம்மாழ்வார், பெரிய திருவந்தாதி 84

பெரிய திருவந்தாதியில், நம்மாழ்வாருக்கு கோபம் வருகிறது, அவருடைய மனத்தின் பேரிலே.

எம்பெருமானை ஸ்தோத்ரம் செய்து, அவனுடைய திருவடிகளில் பூக்களை அர்ச்சித்து, தலயை அவன் திருவடிகளில் தாழ்த்தி, இரு கைகளையும் கூப்பு என்றால் செய்ய மறுக்கும் என் நெஞ்சமே! செய்தால்தான் நான் உயிருடன்இருக்க முடியும். உடல் நிற்கும் கால் பாவும். மனதே, நீ ஒன்றுமே செய்ய மாட்டேன். இப்படியே வாழ்வேன் என்றால் நீ வாழ்ந்து போ. என்னே என் பாப சுமை' என்றார்.

**ஜிஹ்வே கீர்தய கேஶவம் முரரிபும்**
**சேதா ப$_4$ஜ ஶ்ரீத$_4$ரம்**
**பாணித்$_3$வந்த்$_3$வ ஸமர்ச்ச அச்யுத கதா$_2$:**
**ஶ்ரோத்ரத்$_3$வய த்வம் ஶ்ருணு ।**
குலசேகராழ்வார், முகுந்த மாலா 16

என்று "நாக்கே நீ கேஶவனை துதி செய். மனமே நீ முராரியை பஜனம் செய். இருகைகளே, ஸ்ரீதரனை அர்ச்சனை செய்" என்று முகுந்த மாலையில் குலசேகராழ்வார் இந்த மனோ வாக் காயங்களை பெற்றதன் பயனை காட்டுகிறார்.

## 17-3 மறைந்தே மறக்கும் பற்பிறவி மறங்கள்

பல பல பிறப்புக்களில் செய்த பாபங்கள் நமக்கு ஞாபகம் கிடையாது. ஆனால் அவனுக்குத் தெரியும். அந்த பாபங்களை நீக்குகிறான்.

**தீயினில் தூசாகும் செப்பேலோ ரெம்பாவாய்**
**ஆண்டாள், திருப்பாவை 5**

என்று ஆண்டாள் திருப்பாவையில் பாடியபடி, நம்முடைய தீவினைக் கர்மங்கள் அழியும்.

prapatti dot com

ஸஞ்சிதம், ப்ராரப்தம், ஆகாமி என்ற பாபக் குவியல்களை பஸ்பமாக்கி விடுகிறான் ஸஞ்சிதம் என்பது இன்னமும் அவிழ்க்காத பாபக்குவியல் மூட்டைகள். ப்ராரப்தம் என்பது அவிழ்த்து அனுபவித்துக் கொண்டிருக்கும் மூட்டை. ஆகாமி என்பது இனிமேல் செய்யப் போகும் பாபங்கள்

**குன்றம் ஏந்திக் * குளிர்மழை காத்தவன் *
அன்று ஞாலம் *அளந்த பிரான் * பரன்
சென்று சேர் * திருவேங்கட மாமலை *
ஒன்றுமே தொழ * நம்வினை ஓயுமே**
நம்மாழ்வார், திருவாய்மொழி 3-3-8

என்று நம்மாழ்வாரும் திருவாய்மொழியில் அந்த திருவேங்கட மலையைப் பற்றி ஸாதித்தார்.

வேங்கடம் = **வேம் கடயதி இதி வேங்கடம்** வேம் என்றால் பாபம். நாம் செய்யும் பாபங்களை "**தஹ்யதி**" கொளுத்திவிடுகிறான்.

**கண்ணன் அடி இணை எமக்குக் காட்டும் வெற்பு *
கடுவினையர் இருவினையும் கடியும் வெற்பு *
திண்ணம் இது வீடு என்ன திகழும் வெற்பு *
தெளிந்த பெருந்தீர்த்தங்கள் செறிந்த வெற்பு *
புண்ணியத்தின் புகலிதென புகழும் வெற்பு *
பொன்னுலகிற் போகமெல்லாம் புணர்க்கும் வெற்பு *
விண்ணவரும் மண்ணவரும் விரும்பும் வெற்பு *
வேங்கட வெற்பென விளங்கும் வேதவெற்பே**
ஸ்வாமி தேசிகன், அதிகார ஸங்க்ரஹம் 43

அதனால்தான் ஸ்வாமி தேசிகனும் அதிகார ஸங்க்ரஹத்தில் எம்பெருமான் திருவடிகளைக் காட்டுகிற திருமலை கொடிய பாபங்களை உடையவர்களின் புண்ய பாப கர்மங்களை ஒழிக்கும் திருமலை இங்கு பற்பிறவி என்பது, கடந்த, நிகழ், எதிர் காலங்கள் எல்லாவற்றையும் குறிப்பது.

பாபங்கள் விலகினால், அநிஷ்ட நிவ்ருத்தி ஆனபின், இஷ்ட ப்ராப்த்தி தானே! பகவான் எல்லாவற்றையும் அருளுகிறான்.

**வன்மை உடைய அரக்கர் * அசுரரை மாளப் படை பொருத *
நன்மை உடையவன் சீர் பரவப் பெற்ற * நான் ஓர் குறைவிலனே**
நம்மாழ்வார், திருவாய்மொழி 3-10-1

எம்பெருமானுடைய திருக்கல்யாண குணங்களை பாடி அனுபவிக்கும் எனக்கு என்ன குறை? வைகுந்த இன்பத்தை இங்கேயே எனக்கு அருளுகிறான்", என்றார் நம்மாழ்வார்.

## 17-4 தணிந்தே ஆவி அகல மாயனை அத்துன்பம்

ஜீவாத்மா அந்த பரமாத்மாவை விட்டு பல ஜன்மங்களில் பிரிந்து வேதனையால் துடிக்க

**சன்ம சன்மாந்தரம் காத்து * அடியார்களைக் கொண்டு போய் *
தன்மை பொருத்தித் தன் தாள் இணைக் கீழ்க் * கொள்ளும் அப்பனை**
நம்மாழ்வார், திருவாய்மொழி 3-7-7

என்று நம்மாழ்வார், நமக்கு எல்லாம் தகப்பனாகிற எம்பெருமான், தன் அடியவரின் பிறவித்துன்பத்தை நீக்குகிறான். ஆசாரியன் மூலமாக ப்ரபத்தி செய்த பிரபன்னன் தேஹம் சாயும் போது மறு பிறவி என்பதைக் களைந்து, தன்னுடைய பரமபதத்திற்கு அழைத்துச் செல்கிறான்.

**பிறந்த மாயா! பாரதம் பொருத மாயா! * நீயின்னே *
சிறந்த கால் தீ நீர் வான் * மண் பிறவு மாய பெருமானே *
கறந்த பாலுள் நெய்யே போல் * இவற்றுள் எங்கும் கண்டு கோள் *
இறந்து நின்ற பெருமாயா! * உன்னை எங்கே காண்கேனே**
நம்மாழ்வார், திருவாய்மொழி 8-5-10

என்று நம்மாழ்வார் திருவாய்மொழியிலும்

prapatti.com

**இனியவன் மாயன் * என உரைப்பரேலும் *
இனியவன் காண்பன் அரியனேலும் * - இனியவன்
கள்ளத்தால் மண் கொண்டு * விண்கடந்த பைங்கழலான் *
உள்ளத்தின் உள்ளே உளன்**
பேயாழ்வார், மூன்றாம் திருவந்தாதி 83

மூன்றாம் திருவந்தாதியில், பேயாழ்வார் இனி அவன் பகவானின் மாயை யாராலும் கடக்க முடியாது.

**தைத்வீ ஹ்யேஷா குணமயீ மம மாயா துரத்யயா
மாமேவ யே ப்ரபத்யந்தே மாயாமேதாம் தரந்தி தே**
பகவத் கீதை 7-14

என்று பகவத்கீதையில் பகவான் கிருஷ்ணன் "மம மாயா துரத்யயா" என்றான். ஏன் என்றால், இந்த மாயை மூன்று குணங்களுடையது, தெய்வத் தன்மையுடையது கடப்பதற்கு அரியது. ஆனால் என்னையே எப்பொழுதும் ஶரணாக கொள்பவர்கள் இந்த மாயையைக் கடக்கிறார்கள், என்றான்.

அத்தகைய மாயன் சரி. அவனைக் காணமுடியாது என்பார் சரி. இது எல்லாம் விபவாதரங்களைப் பற்றியது.

அந்த பகவான் என் இதயத்திலேயே இருக்கிறான். மாபலியிடம் தானம் பெற்று மூவுலகும் அளந்த பிரான் என் இதயத்திலேயே இருக்க எனக்கு என்ன குறை

**மாலாய் பிறந்த நம்பியை *
மாலே செய்யும் மணாளனை *
ஏலாப் பொய்கள் உரைப்பானை *
இங்கே போதக் கண்டீரே ***
ஆண்டாள், நாச்சியார் திருமொழி 14-3

ஆண்டாள் நாச்சியார் திருமொழியில் பொய்களை கூசாது கூறுபவன்

**மண்மிசைப் பெரும் பாரம் நீங்க *
ஓர் பாரதம் பெரும் போர்
பண்ணி * மாயங்கள் செய்து சேனையைப்**

**பாழ்பட* நூற்றிட்டுப் போய்***
**விண்மிசைத்தன தாமமேபுக ***
**மேவிய சோதி தன்தாள் ***
**நண்ணிய நான் வணங்கப் பெற்றென் ***
**எனக்கார் பிறர் நாயகரே?**
நம்மாழ்வார், திருவாய்மொழி 6-4-10

நம்மாழ்வார் திருவாய்மொழியில் பூமியின் பாரம் நீங்க, பாரதப் போர் வேண்டி இருந்தது. அதற்காக பல மாயங்கள் செய்தாய் அத்துன்பம் தணிந்ததே எப்படி என்று கேட்டால்? அந்த நலம் அந்தம் இல்லாதோர் நாடு எனப்படும் வீட்டின்பத்தை விரைவில் காட்டும்போது.

**ஏதே வை நிரயா ஸ்தாத! ஸ்த$_2$ாநஸ்ய பரமாத்மந:**
வியாஸ பகவான், மஹா பாரதம் ஸாந்தி 196-6

மஹாபாரதம் ஸாந்திபர்வத்தில் கூறுகிறது, பரமாத்வாவினுடைய மோக்ஷத்தை ஒப்பிடும்போது (comparing) மற்றைய ஸ்வர்க்கம் முதலியவை எல்லாம் நரகங்கள் என்று.

## 17-5 விரைந்தே காட்டும்

**ஆவி திகைக்க * ஐவர் குமைக்கும் சிற்றின்பம் ***
**பாவியேனைப் * பலநீ காட்டிப் படுப்பாயோ ***
**தாவி வையம் கொண்ட * தடம் தாமரைகட்கே ***
**கூவிக் கொள்ளும் காலம் * இன்னும் குறுகாதோ**
நம்மாழ்வார், திருவாய்மொழி 6-9-9

என்று திருவாய்மொழியில் நம்மாழ்வார் வீட்டின்பத்தை விரைந்து காட்ட வேண்டினார்.

**சாய் கொண்ட இம்மையும் சாதித்து வானவர் நாட்டையும் ***

**நீ கண்டு கொள் என்று வீடும் தரும் நின்று நின்றே**
நம்மாழ்வார், திருவாய்மொழி 3-9-9

பகவான் தந்தேன் என்கிறான். எப்படித் தருகிறான், "நின்று நின்றே". வரிசையாக, ஒன்றன்பின் ஒன்றாக. ஒரு தாயார் குழந்தைக்கு எப்படி ஊட்டுவாள்? முதலில் ஒரு வாய் கொடுப்பாள். குழந்தையை கவனித்துக் கொண்டே இருப்பாள். அது வாயில் இருப்பதை விழுங்கியவுடன் அடுத்ததைத் தருவாள். அது போல. பெருமாள் காத்திருந்து ஒன்றொன்றாகத் தருகிறான்.

என்ன தருகிறான்? முதலில் இந்த உலகத்தில் என் மனம் சந்தோஷம் அடையும்படி எல்லாவற்றையும் தருகிறான். ஆழ்வார் பரமைகாந்தி, அவருக்கு வேண்டியது எல்லாம் பகவத் ஸ்மரணை. ஆனால் எல்லா ப்ரபன்னர்களும் அப்படி இருக்க முடியாது. இருந்தாலும் பகவான் சந்தோஷத்துடன் வாரி வழங்குகிறான். நல்ல வாழ்க்கை, உயர்ந்த செல்வம், கிடைக்காத புகழ், அன்பான சுற்றத்தார், அடுக்கிக் கொண்டே போகலாம்.

இத்தனை சுகங்கள் கொடுத்தபின்னும் பகவானுக்கு மனது கொள்ளவில்லை. மோக்ஷானந்தத்தைத் தருகிறேன், வா என்று கை பிடித்து அழைக்கிறான். ஒரு வேளை பிரபன்னன், இந்த லோக போகத்தில் மயங்கி, மோக்ஷத்திற்கு என்ன அவசரம், எல்லாம் அனுபவித்து விட்டு நிதானமாக போனால் போச்சு என்று நினைத்தால், பகவானும், சரி, அவனுக்கு இஷ்டம் வரும் வரை பொறுத்திருப்போம் என காத்திருந்து அளிக்கிறான்.

அப்படி இருக்கம் இங்கே பாசுரம் "விரைந்தே" என்றதே என்றால், சரீரம் கழியும் வரைதான் இந்த லோகம். அது எத்தனை நாட்கள். எத்தனை பல்லாயிரக் கணக்கான ஜன்மாக்கள் தாண்டி இப்போது ப்ரபத்தி செய்து, எத்தனை கோடிக்கணக்கான இனி வர இருக்கும் பிறவிகளை அறுத்துத் தள்ளி இருக்கான் இந்த பிரபன்னன். அதைப் பார்க்கும்போது "விரைவில்" என்பது தெளிவாகும்.

பகவானுக்கும் இப்படி ஒரு பக்தன், பிரபன்னன் தனக்கு கிடைத்தானே என்று ஏகப்பட்ட மகிழ்ச்சி. எப்படி கஜேந்திரனுக்கு வாரி சுருட்டி எடுத்துக் கொண்டு, ஓடி வந்தானோ அதுபோல, பிரபன்னன் வார்த்தைக்கு ஓடி வருகிறான்.

**நண்ணினம் நாரணனை நாமங்கள் பல சொல்லி ***
**மண்ணுலகில் வளம் மிக்க வாட்டாற்றான் வந்து இன்று ***
**விண்ணுலகம் தருவானாய் விரைகின்றான் விதி வகையே ***
**எண்ணினவாறு ஆகா இக்கருமங்கள் என் நெஞ்சே!**
நம்மாழ்வார், திருவாய்மொழி 10-6-3

எம்பெருமானை பற்றிய திருநாம ஸங்கீர்த்தனத்தினால் அவனையே பெற்றோம். இந்த உலகில், திருவட்டாறு என்ற ஸ்தலத்தில் எழுந்தருளி உள்ள எம்பெருமான் நமக்கு வைகுந்தம் கொடுக்க, நம் அநுமதிப்படி, வேகமாய் ஓடி வருகிறான். இது இப்படி நடக்கும் என்று நாம் துளிக்கூட நினைக்கவில்லை.

"பகவான் விடுவதாய் இல்லை. நீ இதை எடுத்துக் கொள், அதை எடுத்துக் கொள் என்று பதறி, ஆர்ப்பாட்டத்துடன் மோஷத்திற்கு அழைத்து போக ஸித்தமாய் உள்ளான். என் அநுமதி, என் ஆசை, என் இருப்பு கொள்ளாமை இவற்றை கொண்டுதான் அவன் நாளை நிர்ணயிக்கிறான்", என்றார் நம்மாழ்வார்.

## 17-6 வைகுந்தம் அடைதல்

அர்ச்சிராதி மார்கம் வழியாய், ஆதி வாஹிகர்கள் துணையுடன் சென்ற முக்தனின் ஆத்மா, விரஜா நதியை ஸங்கல்ப ஞானத்தால் கரையேறி, அக்கரையிலே அமானவன் ஸ்பர்சத்தாலே திவ்யாத்ம சரீரம் பெற்று, ப்ரம்மாலங்காரம் செய்யப் பெற்று, வைகுண்ட மாநகர் நுழைந்து எம்பெருமான் வீற்றிருக்கும் ஆதிஸேஷனாகிற ஸிம்மாஸன மண்டபத்தின் அருகே செல்கிறான்.

**தம் ப்₃ரஹ்மாஹ கோZஸீதி**
கௌஷிகீ உபனிஷத்

என்று பரப்ரம்மம் அந்த முக்தனை நோக்கி “நீ யார்?” என்று கேட்கிறது.

**அஹம் ப்₃ரஹ்மாஸ்மி**
கௌஷீதகீ உபனிஷத்

என்று முக்தன் “நான் ப்ரம்மத்தின் ப்ரகாரமாய், அதனிருந்து பிரிக்க முடியாத சரீரமாய் உள்ளேன்” என்கிறது.

**எந்தாய் உனது அருளே ***
**பிரியா அடிமை என்னைக் கொண்டாய் * குடந்தை திருமாலே ***
**தரியேன் இனி உன் சரணம் தந்து * என் சன்மம் களையாயே**
நம்மாழ்வார் திருவாய்மொழி 5-8-7

என்று நம்மாழ்வார் பகவானின் திருப்பாதங்களை பற்றி, பிறவிக்கடலை தகர்த்து, மோக்ஷ ஸாம்ராஜ்யம் அடைந்து எம்பெருமானை ஒரு க்ஷணமும் பிரியாது கைங்கர்ய ப்ராப்தியை பெறுவதைச் சொன்னார்.

**ஸமஸ்த பரிவாராய ஸ்ரீமதே நாராயணாய நம:**
ராமாநுஜர், ஸ்ரீவைகுண்ட்ட கத்யம்

என்று முக்தன் “எல்லாவிதமான பரிவாரங்களுடனும், பிராட்டியின் நித்ய ஸம்பந்தத்தை உடைய எம்பெருமான் நாராயணனாகிய உனக்கே நான் உரியவன். மற்ற எவருக்கும் அல்ல” என்கிறது.

**அவேஷதாம் பவாந் கோஶம் கோஷ்டாகாரம் புரம்பலம் |**
**பவதஸ் தேஜஸா ஸர்வம் க்ருதம் தஶ குணம் மயா ||**
வால்மீகி, ராமாயணம், யுத் 127-57

இது ராமாயணத்தில் வரும் ஸ்லோகம். பாதுகா பட்டாபிஷேகம் செய்தபின், பதினான்கு வருஷங்கள், பாதுகையின் அரசாட்சி. அது முடிந்தவுடன், அரசாட்சியை ராமனிடம் ஒப்படைக்கும்போது பரதன் சொல்லிய வார்த்தை.

"நாடு, படை, உணவு, செல்வம் எல்லாவற்றையும் அருள் செய்யுங்கள். உங்களுடைய தேஜஸ்ஸால் இவை எல்லாம் பத்து மடங்காய் பெருகி உள்ளது", என்று தன் கடமை முடிந்ததாய் ராமனிடம் ராஜ்யலக்ஷ்மீயை ஒப்படைக்கிறான்.

அது போல மோக்ஷத்திற்கு போன பிறகு பகவான், "இந்தா இந்த ஸாம்ராஜ்யம் உன்னுடையது, வைத்துக் கொள்" என்று மோக்ஷ ஐச்வர்யத்தை முக்தனிடம் அளிப்பது போல் உள்ளது.

**ஆக்4ராய ராமஸ்தம் மூர்த்4நி பரிஷ்வஜ்ய ச ராக4வ: ।**
**அங்கே ப4ரதம் ஆரோப்ய பர்ய ப்ருச்ச2த் ஸமாஹித: ।।**
**வால்மீகி, ராமாயணம் அயோத் 100-3**

இது ராமாயணத்தில் வரும் இன்னொரு ஸ்லோகம். (**ராக4வ:**) "வெங்கதிரோன் குலத்திற்கு ஒர் விளக்காய் தோன்றிய" ராமன், பரதனை (**மூர்த்4நி ஆக்4ராய**) உச்சி முகர்ந்து, (**பரிஷ்வஜ்ய**) மகிழ்ச்சியுடன் அணைத்து, (**ப4ரதம் அங்கே ஆரோப்ய**) பரதனை தன் மடியில் அமர்த்தி (**பர்ய ப்ருச்ச2த் ஸமாஹித**) மனம் ஒன்று சேரக் கேட்டான்.

ராமாயணம் என்பது வேதத்தின் ஸாரத்தை அப்படியே கதை ரூபமாய் தருவது. அதை இங்கே காண்கிறோம். வேதத்தில் முக்தனை எப்படி எம்பெருமான் அணைத்து குதூகலிப்பானோ அதை ராமன் இங்கே காண்பிக்கிறான்.

## 17-7 எம்பெருமான் அனைத்தும் அளித்தல்

**ஏஷ ஸம் ப்ரஸாதோம்ஶ ஸ்மாச் ச2ரீராத் ஸமுத்தாய பரம்**
**ஜ்யோதிருப ஸம்ப3த்ய ஸ்வேந ருபேணாபி4 நிஷ்பத்3யதே**

சாந்தோக்ய உபனிஷ

இந்த ஜீவன் இந்த உடலிருந்து வெளிக் கிளம்பி, பரஞ்சோதியான எம்பெருமானை அடைந்து ஸ்வரூப ப்ராப்தி அடைகிறான் என்றது சாந்தோக்ய உபனிஷத்.

**ப்$_3$ரஹ்ம வேத ப்$_3$ரஹ்மைவ ப$_4$வதி**
முண்டக உபனிஷத்

என்று ப்ரம்மத்தை அறிந்தவன், ப்ரம்மத்தைபோலவே ஆகிறான்.

**தத் த்வமஸி**
சாந்தோக்ய உபனிஷத்

அந்த ப்ரம்மமே நீ ஆகிறாய். அதாவது அந்த ப்ரம்மத்தின் சரீரமாகிறாய் என்றது.

**அயமாத்மா ப்$_3$ரஹ்ம**
ப்ருஹதாரண்ய உபனிஷத்

இந்த ஜீவன் ப்ரம்மமே. அதாவது அந்த ப்ரம்மத்தின் சரீரமாகிறாய் என்றது.

எப்படி முக்தன் எம்பெருமானை ஒத்தாற்போல் ஆகிறான் என்றால் எம்பெருமான் அந்த முக்தனை அவ்விதம் ஆக்குகிறான்.

**தம்மையே நாளும் * வணங்கித் தொழுவார்க்கு *
தம்மையே ஒக்க * அருள் செய்வர் ஆதலால் *
தம்மையே நாளும் * வணங்கித் தொழுது இறைஞ்சி *
தம்மையே பற்றா * மனத்து என்றும் வைத்தோமே**
திருமங்கையாழ்வார் பெரியதிருமொழி 11-3-5

எம்பெருமான் தன்னுடைய அடியவரைத் தன்னைபோலவே ஆக்குகிறான் என்றார்.

**நின் தனக்கு நிகர் நின்னடி அடைவார்**
**நின்பால் அன்றி அன்பால் உய்யார்**
**வாரணம் அழைக்க வந்த காரணனே**
ஸ்வாமி தேசிகன், மும்மணிக்கோவை 10

என்று பகவானின் திருவடிகளை ஶரணம் என்று கொண்டு ப்ரபத்தி செய்தவர்கள், பகவானுக்கு சமமாக ஆகிறார்கள். இங்கே ஸாம்யம் என்பது முக்தனின் ஞானத்திலும், ஆனந்தத்திலும்.

இப்படி பக்தர்களின் உடைமையான எம்பெருமான், ஆஶ்ரித பாரதந்திரய ஸ்வரூப, ரூப, குண விபூதிகளை உடையவனாய் இருந்து ஸர்வலோக சக்ரவர்த்தியாய் எல்லாவற்றையும் அளிக்கிறான்.

## 17-8 வைகுந்தன் வீட்டின்பம்

**ஸோZஶ்நுதே ஸர்வாந் காமாந் ஸஹ ப்₃ரஹ்மணா விபஶ்சிதே**
தைத்ரீய உபனிஷத்

முக்தன் ஸமஸ்த கல்யாண குணங்களையும், எல்லாம் அறிந்த எம்பெருமானுடன் சேர்ந்து அனுபவிக்கிறான், என்றது உபனிஷத்.

**ஏதத் ஸாம காயந்நாஸ்தே**
தைத்ரீய உபனிஷத்

முக்தன் இந்த ஸாமகானத்தைச் செய்து கொண்டிருக்கிறான் என்று ஆனந்த ப்ரவாகத்தை காட்டுகிறது.

வைகுந்த வீட்டின்பம் எப்படி இருக்கும் என்று கேட்டால், நம்மாழ்வார் விளக்குகிறார். வேதம் தமிழ் செய்த மாறன் மோஷம் சென்று திரும்பியவர் அல்லவா?

**கொள்ள மாளா இன்ப வெள்ளம் * கோது இல தந்திடும் * என்**
**வள்ளலேயோ! வையம் கொண்ட * வாமனாவோ! என்று என்று ***
நம்மாழ்வார், திருவாய்மொழி 4-7-2

என்று இந்த உலகத்தை எல்லாம் அளந்து தன்னுடையது என்று பறை சாற்றின வாமனனே! வாரி வழங்கும் வள்ளல் எம்பெருமானே! நீ அளிக்கிற இன்பம், நிரந்தரமானது. குறைகள், குற்றங்கள் (errors and omissions) இல்லாதது. அது மட்டுமல்ல அந்த இன்பம் வெள்ளமாய் கரை புரண்டு ஒடுகிறது. உன்னை அனுபவிக்க அனுபவிக்க, மேலும் மேலும் இன்னும் பெருகுகிறது.

**தத்$_3$ விஷ்ணோ: பரமம் பத$_3$ம் ஸதா பஶ்யந்தி ஸூரய:**
**தி$_3$வீவ சக்ஷூராததம் ||**
**தத் விப்ராஸோ விபந்யவோ ஜாக்ருவாம் ஸஸ் ஸமீந்த$_4$தே |**
**விஷ்ணோர்யத் பரமம் பத$_3$ம்**
**ரிக் வேதம் அஷ்டகம் 1-2-7**

நித்ய ஸூரிகள், விஷ்ணுவினுடைய பரம பதத்தை எப்போதும் பார்த்துக் கொண்டே இருக்கிறார்கள். அந்த பரமபதம் எல்லாப் பொருள்களையும் ப்ரகாசிக்கும், ஆகாயத்தில் உள்ள, உலகின் கண்ணான சூரியன் போல் ஒளிவிடுகிறது. விஷ்ணுவின் எந்த பரமபதம் இருக்கிறதோ, அங்கே அறிஞர்களும், வணங்கியே வாழ்வாரும், கவனமாய் இருக்கும் நித்யர்கள் பிரகாசிக்கின்றனர்.

**மண்ணுலகில் மயல் தீர்ந்து மனம் ததும்பி**
**மன்னாத பயன் இகந்து மாலே அன்றிக்**
**கண் இலது என்று அஞ்சி அவன் கழலே பூண்டு**
**கடும் சிறை போய்க் கரை ஏறும் கதியே சென்று**
**விண்ணுலகில் வியப்பு எல்லாம் விளங்கக் கண்டு**
**விண்ணவர்தம் குழாங்களுடன் வேதம் பாடிப்**
**பண் உலகில் படியாத இசையால் பாடும்**
**பல்லாண்டே பல்லாண்டும் பாடுவமே**
**ஸ்வாமி தேசிகன், பரமபதஸோபானம் 20**

இந்த கர்ம பூமியில் ஒரு நல்ல ஆசாரியனது அருளால் நல்ல விவேகத்தை அடைந்து, கழிந்த காலங்களைக் கண்டு கலங்கி, ஸம்ஸார சுகங்களில் ஆசை

கழன்று, நரக பயத்தால் நடுங்கி, உபாயத்தை அனுஷ்டித்து, சரீரத்திலிருந்து கிளம்பி, அர்ச்சிராதி மார்க்கமாய், பரமபதம் அடைந்து அங்கே உள்ள நித்ய முக்தர்களுடன் வேதத்தை அநுஸந்தித்து, ஸங்கீத உலகில் அமையாத தெய்வீக இசையால் பல்லாண்டு எனத் தொடங்கும் ஆழ்வார் அருளிச்செயலையும் பாடி எம்பெருமானி அநுபவிப்போம், என்றார்.

**மாளாத வினை அனைத்தும் மாள நாம் போய்**
**வான் ஏறி மலர் மகளார் அன்பு பூணும்**
**தோளாத மாமணிக்குத் தொண்டு பூண்டு**
**தொழுது உகந்து தோத்திரங்கள் பாடி ஆடிக்**
**கேளாத பழ மறையின் கீதம் கேட்டுக்**
**கிடையாத பேரின்பம் பெருக நாளும்**
**மீளாத பேரடிமைக்கு அன்பு பெற்றோம்**
**மேதினியில் இருக்கின்றோம் விதியினாலே**

**ஸ்வாமி தேசிகன், பரமபதஸோபானம் 21**

என்று அநாதியான கர்மாக்களை எல்லாம் ஒழித்து, பரமபதம் ஏறி திவ்ய தம்பதிகளுக்கு பிழையில்லா பணி செய்து, மகிழ்ச்சியால் ஆடி, பாடி, வேதங்களின் காநத்தை கேட்டு, எம்பெருமானின் திருவருளாலே, திரும்பி வராத அநுபவத்தை நாம் பெற்றோம், என்றார்.

**தம் திருமாதுடனே தான் தனி அரசாய் உறைகின்ற**
**அந்தமில் பேரின்பத்தில் அடியவரோடு எமை சேர்த்து**
**முந்தி இழந்தன எல்லாம் முகிழ்க்கத் தந்து ஆட்கொள்ளும்**
**அந்தமிலா அருள் ஆழி அத்திகிரித் திருமாலே**

**ஸ்வாமி தேசிகன், அருத்த பஞ்சகம் 10**

மோக்ஷத்தில் ஸர்வ கைங்கர்யங்களும் பெறுவதை சொன்னார். உபாயத்தை அனுஷ்டித்த ஜீவனுக்கு இத்தனை காலம் கர்ம வஸத்தால் நித்ய கைங்கர்ய ப்ராப்திய தடுத்திருந்ததை நீக்கித், தன் திருவடிகளில் நித்ய, முக்தர்களுடன் சேர்ந்து அளவில்லா ஆனந்த ஸேவை செய்யுமாறு அருளினான் என்றார்.

## 17-9 வைகுந்தத்திலிருந்து திரும்புவதில்லை

இப்படி இந்த இன்ப வெள்ளம் கரை புரண்டு ஓடுகிறது. முக்தன் எங்கேயாவது இது முடிந்து விடுமோ, திரும்ப ஸம்ஸாரத்திற்கு தள்ளப்படுவோமே என்று துளிக்கூட கவலைப்பட வேண்டாம்.

**ந ச புநராவர்த்தே ।**
**ந ச புநராவர்த்தே ।**
**சாந்தோக்ய உபநிஷத்**

இந்த முக்தன் மறுபடியும் திரும்பி வருவதில்லை. மறுபடியும் திரும்பி வருவதில்லை.

ஆனால் எம்பெருமான் ஸங்கல்பத்தில், அவனுடைய ஆணையில், முக்தனின் விருப்பத்துடன் அவன் எந்த லோகத்திற்கும் போகலாம்.

**ஸர்வேஷு லோகேஷு காமசாரோ ப₄வதி**
**சாந்தோக்ய உபனிஷத்**

முக்தன் தன் விருப்பத்துடன் எல்லா உலகங்களிலும் ஸஞ்சரிக்க முடிகிறது, எம்பெருமானுக்கே கைங்கர்யம் செய்வதற்காக.

**ஸ ஸ்வராட் ப₄வதி**
**சாந்தோக்ய உபனிஷத் 7-25-2**

முக்தன் கர்மத்திற்கு வசப்படுவதில்லை. அவனுடைய ஸஞ்சாரம் எல்லாம் கர்மாவினால் விளைவது அல்ல. எம்பெருமானின் ப்ரீதியால் உண்டாவது.

## 17-10 த்வயத்தின் பெருமை

த்வயத்தின் பெருமையை யாராலும் சொல்லி முடியாது என்று முன்னமே சொன்னோம்.

- ஒரே வாக்கியமாகவும்
- இரண்டு (த்வயம்) என்ற பெயருடையதாயும்
- மூன்று உட்பிரிவு வாக்கியங்களை உடையதாகவும்
- நான்காவதாகிய மோக்ஷ பலனை எளிதில் பெறுவிப்பத்தாயும்
- ஐந்து அர்த்தங்களை (அர்த்த பஞ்சகத்ததை) தெளிவிக்குமதாயும்
- ஆறு அங்கங்களையுடைய ப்ரபத்தி யோகத்தை நடத்தி தருவதாயும்
- ஏழு கடல்களைப் போல் பெருமையுடையதாயும்
- எட்டு எழுத்து (திருவஷ்டாக்ஷர) மந்த்ரத்தை விவரிப்பாதாயுமுள்ள
- ஒன்பதாவாகிய ஸாந்தி ரஸத்தை இந்த மந்த்ரம் இந்த ஸம்ஸார மண்டலத்தில் திருவரங்கத்தில் உள்ளவர்களுக்கு உண்டாக்குகிறது

ஸ்வாமி தேசிகன், ஸ்ரீமத் ரஹஸ்ய த்ரய ஸாரம்

என்று இப்படி த்வயத்தின் பெருமையை, ஸ்வாமி தேசிகன் ரஹஸ்யத்ரய ஸாரத்தில் ஸாதிக்கிறார்.

**ந வேதா3ந்தாஶ் ஶா2ஸ்த்ரம் ந மது4மத2நாத் தத்த்வமதி4கம்**
**ந தத்3 ப4க்தாத் தீர்த2ம் ந தத3பி4மதாத் ஸாத்த்விகபத3ம்**
**ந ஸத்த்வாத்3 ஆரோக்3யம் ந பு3த்4ப4ஜநாத் போ3த4 ஜநகம்**
**ந முக்தே: ஸௌக்2யம் ந த்3வய வசநத: க்ஷேமகரணம்**

ஸ்வாமி தேசிகன், ஸ்ரீமத் ரஹஸ்யத்ரய் ஸாரம், த்வயாதிகாரம் 65

- வேதாந்தத்தைக் காட்டிலும் உயர்ந்த சாஸ்த்ரம் இல்லை
- மதுவைக் கொன்ற பகவானைக் காட்டிலும் சிறந்த தத்வம் இல்லை
- பாகவதனைக் காட்டிலும் பரிசுத்தம் செய்ய வேறு வஸ்து இல்லை
- பாகவதர்கள் உகந்த இடத்திற்காட்டிலும் ஸத்வ குணம் நிறைந்த, சிறந்த இடம் இல்லை

prapatti dot com

- ஸத்வ குணத்திற்காட்டிலும் ஆரோக்யத்தைத் தரும் சிறந்த வஸ்து இல்லை
- ஸதாசாரியனை அடைவதைக் காட்டிலும் தத்வ ஜ்ஞாநத்தைத் தரச் சிறந்த ஸாதநம் இல்லை
- மோக்ஷத்தைக் காட்டிலும் ஸுகருபமாயிருப்பது ஒன்றுமில்லை.
- இவைபோலவே த்வயத்தை அநுஸந்திப்பதைக் காட்டிலும் க்ஷேமத்தையளிப்பது ஒன்றுமில்லை.

ஸ்வாமி தேசிகன், ஸ்ரீமத் ரஹஸ்யத்ரய் ஸாரம்

என்று ஸ்வாமி தேசிகன், ஸ்ரீமத் ரஹஸ்யத்ரய ஸாரத்தில் த்வயாதிகாரத்தில் முடிவாக சொல்கிறார்

**இதி விவித$_4$ மஜஸ்ய யஸ்ய ரூபம்**
**ப்ரக்ருதி பாரத்மமயம் ஸநாதநஸ்ய |**
**ப்ரதி$_3$ஶது ப$_4$க$_3$வாந் அஶேஷபும்ஸாம்**
**ஹரிரபஜந்ம ஜராதிகாம் ஸ ஸித்$_3$திம் ||**

பராஸர மஹரிஷி, ஸ்ரீவிஷ்ணு புராணம் (6-8-64)

என்று ஸ்ரீவிஷ்ணுபுராணத்தில் பகவான் பராஸர ரிஷி ஸாதிக்கிறார். பகவான் ஸ்ரீமந் நாராயணன் பிறப்பில்லாதவன். மிகவும் பழமையானவன். அவனுக்கு ப்ரகிருதி தத்துவம், திவ்ய மங்கள விக்ரஹம் போன்றவை உடலாய் இருக்கின்றன. அப்படிப்பட்ட பகவான் பிறப்பு, மூப்பு (old age) இவைகளை ஒழிக்கின்ற மோக்ஷ ஸாம்ராஜ்யத்தை எல்லோருக்கும் அருள்வான் என்றார். அதற்கு சிறந்த வழியான ப்ரபத்தியை இங்கு கண்டோம்.

## 17-11 தொண்டரடிபொடியாழ்வார் - த்வய விளக்கம்

ஆழ்வார்கள், ஆசாரியர்கள் த்வயத்தை பல இடங்களில் புகழ்ந்து சுருக்கமாக தெரிவித்துள்ளார்கள்.

**மேம்பொருள் போகவிட்டு * மெய்ம்மையை மிக உணர்ந்து ***



prapatti.com

**ஆம் பரிசு அறிந்து கொண்டு * ஐம்புலன் அகத்து அடக்கி *
காம்பு அற தலை சிரைத்து *உன் கடைத்தலை இருந்து வாழும் *
சோம்பரை உகத்தி போலும் *சூழ் புனல் அரங்கத்தானே**
தொண்டரடிப்பொடியாழ்வார், திருமாலை 38

**புனல் சூழ்** - காவேரி சூழ்ந்த
**அரங்கத்தானே** - திருவரங்கத்தில் கண்வளர்பவனே
**மேம்பொருள் போக விட்டு** - உலக விஷயங்களை முழுவது உதறிவிட்டு
**மெய்ம்மையை மிக உணர்ந்து** - ஆத்ம ஸ்வரூபத்தை நன்றாக உணர்ந்து
**ஆம்பரிசு அறிந்து கொண்டு** - பகவத் கைங்கர்ய ப்ராப்தியை தெரிந்து
**ஐம்புலன் அகத்து அடக்கி** - இந்திரியங்களை அடக்கி
**காம்பு அற** - மற்ற உபாயங்களில் உள்ள பற்று அழிய
**தலை சிரைத்து** - தலைமேல் உள்ள பாரம் நீங்க
**உன் தலைக்கடை இருந்து** - உன் கோவில் திருவாசலிலே
**வாழும்** - உஜ்ஜீவிக்கும்
**சோம்பரை** - தங்கள் நலத்தை நினைக்காத பக்தர்களை
**உகத்தி போலும்** - உகப்பவன் நீ இல்லையா?

என்று தொண்டரடிப்பொடியாழ்வார். த்வயத்தின் இரண்டு வாக்யங்களின் அர்த்தங்களையும் ஒரே பாசுரத்தில் அநுஸந்தித்த ஆழ்வார் இவர் ஒருவரே. முதல் இரண்டு வரி உத்தர கண்டத்தையும், கடைசி இரண்டு வரி பூர்வ கண்டத்தையும் விவரிக்கிறது. இப்பாட்டு த்வயத்தின் அர்த்தம் மட்டும் அல்லாது கீதா சரம ஸ்லோகத்தின் அர்த்தத்தையும் விளக்குகிறது என்பர் பூர்வாசாரியர்கள்.

இந்திரியங்களை அடக்கி, ப்ரமிக்கும்படி உள்ள இந்த உலகத்து இன்பங்கள் எல்லாம் தள்ளி, உபாயந்தரங்களான கர்ம, ஞான, பக்தியோகங்களை நினைத்து கூட பாராது, ஆத்ம ஸப்ரூபத்தை உணர்ந்து **எம்பெருமானின் திருவடிகளே கதி என்று இருக்கும் பாகவதர்கள்** என்று இரண்டாம் பகுதி சொல்கிறது. ப்ரபத்தி என்னும் மிக உயர்ந்த உபாயத்தை செய்த ப்ரபன்னர்கள் இவர்கள். எம்பெருமானே உபாயம் என்பதை பரிபூர்ணமாக அறிந்து அவன் இட்ட வழக்காய் இருப்பவர்கள். இது **த்வயத்தின் முதல் வாக்யத்தின்** அர்த்தம்.

**அல்ப சுகங்களை தவிர்த்து எம்பெருமானுக்கு செய்யும் கைங்கர்யமே உயர்ந்தது** என விரும்பும் என்பதால் பரம புருஷார்த்தாமான, ஜீவனின் ஸ்வரூபமான நித்ய கைங்கர்யத்தை காட்டுவது **த்வயத்தின் இரண்டாம் வரியின்** விளக்கம்.

இந்திரியங்களை எல்லாம் அடக்கி, , மஹா புருஷார்த்தமான கைங்கர்யத்தை, காவேரி சூழ்ந்த திருவரங்க கோயிலிலே கண் வளரும் எம்பெருனே! உனக்கே செய்து மகிழ்வேன்.

மற்ற உபாயங்களை அறவே ஒழித்து, பகவானே உன் கோவில் திருவாசலிலே காவல் செய்து உஜ்ஜீவித்து, தங்கள் சொந்த நலத்தில் சோம்பராய் வாழ்கின்ற பக்தர்களை உகப்பவன் நீ அல்லவா?

என்று **ப்ராப்யத்தை** (பலனை) முன்னும், **ப்ராபகத்தை** (வழியை) பின்னும் வைத்து ஆழ்வார் அருளினார். ஒவ்வொரு பலனுக்கும் **அறிவுரை, அனுஷ்டானம்** என இரண்டு வேளை.

**அறிவுரை** கூறும்போது பலனை முதலில் சொல்லி வசீகரித்து, பின் அதற்கு செய்ய வேண்டிய காரியங்களை கூறுவது (Fist principle and then procedure). **அனுஷ்டானத்தின்போது,** முதலில் செய்ய வேண்டிய காரியங்களை விவரமாக, படிப்படியாக சொல்லி, கடைசியில் பலனைச் சொல்வது (Fist step-by-step procedure and then final result).

ஆழ்வார் இங்கே அறிவுரை மூலமாய் சொன்னார் - முதலில் **பலன்,** பின் **வழி;** எம்பெருமானார் கத்யத்தில் அனுஷ்டான ரீதியாக சொன்னார் முதலில் வழி கடைசியில் பலன்; நம்மாழ்வாரும் முதலில் பலனை **ஒழிவில் காலம் எல்லாம்** என்ற பாசுரத்தில் ஸாதித்து, பின் உபாயத்தை **அகலகில்லேன்** என்று பின் பாசுரத்தில் அருளினார் என்று ஏற்கனவே பார்த்தோம்.

சரம ஶ்லோகத்தில் கண்ணன் கூறியதை **ஸர்வ த₄ர்மாந் பரித்யஜ்ய** என்பதை மேம்பொருள் போகவிட்டு, ஐம்புலன் அகத்து அடக்கி, காம்பு அற தலை சிரைத்து என்றும் **மாம் ஏகம் ஶரணம் வ்ரஜ** என்பதை சோம்பர், உன் கடைத்தலை இருந்து வாழும் என்றும், **அஹம் த்வா ஸர்வ பாபேப்₄யோ** என்பதை

மெய்ம்மையை மிக உணர்ந்து என்றும், மோக்ஷயிஷ்யாமி மாஶுச: என்பதை ஆம் பரிசு என்பதாலும் தெரிவித்தார்.

சரம ஸ்லோகத்தின் விவரணத்தை பிராட்டி ஸஹிதமான எம்பெருமான், ஆழ்வார்கள் ஆசாரியர்கள் அருளால் இறுதியின் சுருதியில் எழுத முனைந்துள்ளேன். அவர்களே முடித்து கொடுக்குமாறு வேண்டுகிறேன்.

## 17-12 முடிவுரை

வாசிகம் மாநஸம் பாபம் காயிகம் தத் த்ரித₄ா க்ருதம் ।
த்₃வய ஸ்மரணமாத்ரேண நாஶம் யாதி ஸீநிஶ்சிதம் ।।

என்று ஒரு பிரபலமான ஸ்லோகம். “உள்ளம், உரை, உடல்” என்ற மநோ வாக் காயங்களாகிற மூன்று கரணங்களாலும் செய்யப்பட்ட பாபங்களும் மஹா மந்த்ர ரத்னமாகிற த்வயத்தை நினைப்பதாலே அழிகின்றன என்பது நிச்சயம்.

இப்படி சிறந்த மந்த்ர ரத்னம் என்று பகவான் ஸ்ரீமந் நாரயணனால் உபதேசிக்கப்பட்டதும் நம்முடைய பூர்வாசாரியர்களால் மிகவும் உயர்ந்த நன்மையை அளிக்கவல்லது என்று அருளியதும் அவரவர் ஆசாரியர்களால் சிறந்த அர்த்தங்களை உபதேசிக்கப்பட்டதாய் இருக்கும் இந்த த்வய மந்த்ரத்தை நாம் எல்லோரும் அநுஸந்தித்து, ஸ்ரீலக்ஷ்மி நாரயணனுடைய க்ருபைக்கு பாத்திரமாவோமாக என்று வேண்டி இத்துடன் முடித்துக் கொள்கிறேன்.

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:
ஸ்ரீமதே நிகமாந்த மஹா தேசிகாய நம:

அழ்வார் திருவடிகளே ஶரணம்
எம்பெருமானார் திருவடிகளே ஶரணம்
சீரொன்று தூப்புல் திருவேங்கடமுடையான் திருவடிகளே ஶரணம்

prapatti dot com

# APPENDIX A

## A-1. ஸ்ரீமத் ரஹஸ்யத்ரய ஸாரத்தில் அடிப்படை தத்துவங்கள்

நாராயணன் ஒருவனே காரணம், ஆதி, முழுமுதற்கடவுள் என்பதை அறிய முதலில் சில அடிப்படை தத்துவங்களை (Basic Principles) தெரிந்து கொள்ள வேண்டும். எப்படி Math tables தெரிந்தால்தான் Calculus differential equation போட முடியும் Chemistry இல் atmoic weight, moles தெரிந்தால்தான் Chemsitry equation solve பண்ண முடியுமோ அது போலே.

ஸ்வாமி தேசிகன் ஸ்ரீமத் ரஹஸ்யத்ரய ஸாரத்தில் இந்த நுட்பமான கருத்துக்களை (complex ideas) 32 அதிகாரங்களில் ஸாதிக்கிறார். தவிர முதலில் குருபரம்பரா ஸாரம் முதலில் உள்ளது. ஆக 33 chapters. முதல் எட்டு அதிகாரங்களில் அடிப்படைகளை விளக்குகிறார்.

- 0. குரு பரம்பரா ஸாரம்
- 1. உபோத் காராம் (Introduction)
- 2. ஸார நிஷ்கர்ஷம்
- 3. ப்ரதாந ப்ரதி தந்த்ரம்
- 4. அர்த்த பஞ்சகம்
- 5. தத்வத்ரய சிந்தநம்
- 6. பரதேவதா பாரமார்த்ய அதிகாரம்
- 7. முமுக்ஷுத்வாதிகாரம்

## A-2. ப்ரமாண, ப்ரமேயங்கள்

உலகத்தில் ப்ரமாணம், பிரமேயம் என்று இரண்டு. பிரமேயம் என்பது எதை நன்கு அறிந்து கொள்ளவேண்டுமோ அது ப்ரமேயம். பகவான் தான் நமக்கு ப்ரமேயம்.

ப்ரமாணம் என்பது ப்ரமேயத்தை உள்ளதை உள்ளபடியே காட்டக்கூடியது. அது மூன்று வகையாக பிரிக்கலாம். **(1) ப்ரத்யக்ஷம், (2) அனுமானம், (3) ஶப்தம்** என்று. ப்ரத்யக்ஷம் என்பது புலன்களால் அறிவது (observe through senses). அனுமானம் என்பது ஊகிப்பது (inference). இவற்றைவிட ஶப்தம் என்கிற வேதம்தான் முக்கியம்.

ஸ்ருதி, ஸ்மிருதி, இதிகாஸ, புராணங்கள் என்ற நான்கும் ப்ரமாணங்கள்.

**மாதா பித்ரு ஸஹஸ்ரேஷு வத்ஸலதரம் ஶாஸ்த்ரம்**

என்ற வாக்கின்படி ஆயிரம் தாயார், தந்தைகளை விட வேதம் எல்லா உயிர்கள் இடத்தும் மிகுந்த வாத்ஸல்யம் உடையது.

## A-3. ஶ்ருதி ஸ்மிருதிகள்

வேதங்களை **ஶ்ருதி, நிகமம், ஆம்நாயனம், ஶப்தம், பரம், சாஸ்த்ரம்** என்றெல்லாம் அழைக்கின்றனர். வேதங்கள் நான்கு - **ரிக், யஜுர், ஸாமம், அதர்வணம்.**

தவிர வேதங்களை வேறு விதமாகவும் பிரிக்கலாம்.

1. **ஸம்ஹிதை.** என்பது மந்தரங்களின் தொகுப்பு
2. **ப்ராம்மணங்கள்.** விதி, அர்த்தாவாதா என்று உரை நடையில் (prose stlye)
3. **ஆரண்யகம்.** அடிக்கடி குருவிடம் கேட்டு பாடங்களை திருப்பித் திருப்பி சொல்வது மனத்தால் சிந்திப்பது (ஆம்னாயம் என்று இதனால் பெயர்)
4. **உபநிஷத்துக்கள்.** வேதங்களின் கருத்துக்களை ஸம்வாதமாகவும் (Dialogue), விளக்கமாகவும் (explanation) கொண்டு உள்ளது வேத சிரஸ் என்று பெயர்

## வேத அங்கங்கள் 6

1. **சீக்ஷா.** வேதத்தில் அக்ஷரங்கள், ஸ்வரங்கள் சொல்வது (Sounds, pronunciation, pitch and frequency)
2. **வ்யாகரணம்** நல்ல சப்தங்கள் எது, அவைகளுக்கு என்ன ஸ்வரங்கள் என்று கண்பிப்பது (Grammar)
3. **சந்தஸ்** அடிகளுக்கு இத்தனனை எழுத்துக்கள், எத்தனை அடிகள் இருக்க வேண்டும் என்று சொல்லும் சாஸ்த்ரம் (rules on meters): அனுஷ்டுப் சந்த:, காயத்ரி சந்த: என்கிறாற்போல்
4. **நிருக்தம்** சொல் கோர்வைகளை சொல்வது (Method to derive the meaning)
5. **ஜோதிஷம்** அத்யனம் செய்ய வேண்டிய காலத்தையும், அதில் சொல்லப்பட்ட செயல்களை செய்ய வேண்டிய காலத்தை சொல்வது (Time for specific performance based on celestial objects)
6. **கல்பம்** வேதத்தில் சொல்லப்பட்ட செயல்களை செய்யும் முறை சொல்கிறது (Rules for the rituals)

உபாங்கங்கள் (peripherals) பல. அவை மீமாம்சா, ந்யாயம், புராணம், தர்ம சாஸ்த்ரம் என்று சொல்லலாம், இவை எட்டு என்று சொல்வர்.

உபநிஷத்துகளில் முக்கியமானவை 10 இவை தஸோ உபநிஷத் எனப்படும். **ஈஸாவாஸ்ய, கேநோ, கடோ, ப்ரஸ்னோ, முண்டகம், மண்டூக்ய, தைத்ரீயோ, சாந்தோக்ய, ப்ரஹதாரண்யக, கௌஷீகி, சுபாலோ, ச்வேதாச்வதர.**

ஶ்ருதி (வேதங்கள்) அபௌருஷம், யாராலும் எழுதப்படவில்லை, அநாதியானது (Anoymous, No origin). அதனால் ப்ரமாணம் ஆகிறது (Non controversial authority).

ஸ்மிருதிகள் ஒருத்தரால் எழுதப்பட்டது. அதனால் அவற்றிற்கு இருள், மயக்கம், பக்ஷபாதம், மறதிகளுக்கு இடமிருக்கிறது ஸர்வேஸ்வரனே எழுதிய ஸ்மிருதியானாலும் சரி. புத்தாவதாரத்தில் அசுரர்களை மயக்க சொன்ன வார்த்தையாக இருக்கவும் கூடும். இவை (ஸ்வத) இயற்கையிலேயே ப்ரமாணமில்லை. பகவத் ஆராதன கர்மங்களையே பேசுகிறது. சில

இடங்களில், பகவத் ஸ்வரூபத்தையும் பேசுகிறது. மனு, பராசர, ஹாரித, சாண்டில்ய, யாக்ஞவல்க்ய ஸ்மிருதிகள் ப்ரமாணமாக கொள்ளப்பட்டுள்ளன.

**இதிகாஸங்கள் இரண்டு.** ராமயணம், மஹாபாரதம்.

**புராணங்கள் பதினெட்டு** ஆகும். அவை ஆறு ஆறாக மூன்று குணங்களின் கீழ் (ஸாத்விக, ராஜஸ, தாமஸ) பிரிக்கப்படுள்ளன. அவற்றுள் **ஸாத்விக புராணங்களான விஷ்ணு, நாரத, பாகவதம், கருட, பாத்ம, வராஹ புராணங்களே சிறந்தவை.**

## A-4. திராவிட வேதங்கள்

ஸம்ஸ்கிருத வேதங்கள் நான்கு. ருக், யஜுர், ஸாம, அதர்வணம் என்றூ சொன்னோம். வேதம் என்றால் தெளிவாக காட்டக்கூடியது என்று பொருள்.

**திராவிட வேதங்கள் மொத்தம் 4000 பாசுரங்கள்,** ஆழ்வார்களால் அருளப்பட்டது. மறை என்றால் மறைத்து பொருள் சொல்லுவது. ஸம்ஸ்க்ருத வேதங்கள் அநாதி. அது போல் இல்லாமல் ஆழ்வார்களால் செய்யப்பட்டதே? என்றால் ஸ்மிருதி, இதிகாசம் பண்ணிய ரிஷிகளுக்கு கூட காம க்ரோதகங்கள் உண்டு. ஆனால் ஆழ்வார்கள் மயர்வற மதிநலம் பெற்றவர்கள் காம க்ரோதங்களை கடந்தவர்கள். ஸ்மிருதிகள் எழுதிய ரிஷிகளை விட உயர்ந்தவர்கள்.

அதனால்தான் அநாதியான ஸம்ஸ்கிருத வேதங்களுக்குக் சமமான இடம், இந்த திராவிட வேதங்களுக்கும் சொல்லியிருக்கிறது

> **வேத சதுஷ்ட்ய அங்கோபாங்கங்கள் பதினாலும் போலே**
> **இந்நாலுக்கும் இருந்தமிழ் நூற்புலவன் பனுவல் ஆறும்**
> **மற்றை எண்மர் நன்மாலைகளும்**
>
> அழகிய மணவாளப் பெருமாள் நாயனார் ஆசார்ய ஹ்ருத்யம் (43)

prapatti dot com

என்று ஆசார்ய ஹ்ருதயத்தில், அழகிய மணவாளப் பெருமாள் நாயனார் சொல்லுகிறார். ஸம்ஸ்கிருத வேதம் நான்கு. அவற்றிற்கு அங்கங்கள் ஆறு. உபாங்கங்கள் எட்டு.

அது போல திராவிட வேதம் என்பது நம்மாழ்வார் அருளிய பிரபந்தங்கள் நான்கு. திருமங்கை ஆழ்வார் ஸாதித்ததது ஆறு பிரபந்தங்களும் அங்கங்கள், மற்றைய எட்டு அழ்வார்கள் சொன்னது உபாங்கங்கள்

**மாறன் பணித்த * தமிழ் மறைக்கு * மங்கையர்கோன்**
**ஆறு அங்கம் கூற அவதரித்த * வீறுடைய**
**கார்த்திகையில் கார்த்திகை நாள்**
மணவாள மாமுனிகள் உபதேச ரத்னமாலை 9

என்று உபதேசரத்னமாலையில் விசதவாக்சிகாமணி மணவாள மாமுனிகள் காட்டியுள்ளார்.

இதனால் ஸம்ஸ்க்ருத வேதமும், திராவிட வேதமும் இரண்டு கண்கள் போல். **உபய வேதாந்தங்கள் இரண்டும் ப்ரமாணங்கள்**

## A-5. தத்துவங்கள்

தத்வம் என்பதை ஸித்தாந்தம் என்று சொல்லலாம் (philosophy) அது மூன்று மெய்ப் பொருள்களை (உண்மைகளை) விளக்கும் (principles)

1. **தத்வம் அதாவது மெய்ப்பொருள், உண்மை.**
2. **ஹிதம் அதாவது ஸாதனம், நெறி, நன்மை.**
3. **புருஷார்த்தம் என்கிற பலன், பேறு.**

நம்முடைய வைஷ்ணவ ஸம்ப்ரதாயத்தில் எல்லாம் மூன்று. ரகசியங்கள் மூன்று என்று முதலில் சொன்னோம். இப்பொழுது தத்வம் என்பது மூன்று வகைப்படும் - சித், அசித், ஈஸ்வரன் **(ACE - Achit, Chit, Eswaran)** . மற்ற மதங்களிலும்கூட இதை God, Man and Nature என்கிறார்கள்.

**சித்** என்பவை அறிவுடையவை (sentinent). ஜீவராசிகள், விலங்குகள், பறவை, மரம் செடி, கொடி என்று ஞானமாய் இருக்கும் ஆத்மா. இந்த ஆத்மாவானது உடம்பு, புலன்கள், மனம், பிராணன், அறிவு எல்லாவற்றையும் விட வேறானது.

**சித்** அணு பரிமானது (atomic structure). ஆனந்தமானது (ever happy). பிறப்பு இறப்பு இல்லாதது (no birth or death). எம்பெருமானுக்கே எப்பொழுதும் அடிமையானது. அது ***பக்தர், முக்தர், நித்யர்*** என்று மூன்று வகை.

**அசித்** என்பது அறிவு இல்லாதவை (non sentinent). இது பிரக்ருதி என்பார்கள் மூன்று வகை. ***நித்ய விபூதி, லீலா விபூதி, காலம்***

- சுத்த ஸத்வம் - ரஜஸ், தமஸ் கலக்காமல் ஸத்வ குணத்திற்கு மட்டும் ஆதாரமாய், ஞான, ஆனந்த மயமாய் இருக்கும் பரமபதம்/நித்ய விபூதி
- மிஸ்ர தத்வம் - ரஜஸ், தமஸ் குணங்களோடு கலந்த ஸத்வ குணங்களுடைய லீலா விபூதி
- ஸத்வ சூன்யம் குணங்கள் இல்லாமல் இருக்கும் நொடி, நாழிகை. நாள், மாதம் என்னும் காலம். தவிர 24 தத்துவங்கள்

**ஈஶ்வரன்** என்பது பரப்ரம்மம், சதுர்முக ப்ரம்மா இல்லை. சித்திற்கு அசித்திற்கும் எஜமானன், அவைகளை நியமிப்பவன். அவைகளுக்கு இறைவன் அது ஸ்ரீமந் நாராயணன் ஆகும்.

அவன் இயல்பாகவே ஞானமும் ஆனந்தமும் உடையவன். இடத்தாலும், காலத்தாலும் அளவிடமுடியாதவன். அளவற்ற கல்யாண குணங்களையுடையவன். பிரகாசிக்கும் திவ்ய மங்கள விக்ரஹம் உடையவன். சித்தையும், அசித்தையும் உடலாக கொண்டவன். தனக்கு மேல் வேறு ஒரு பொருள் இல்லாத பரம் பொருள்.

இந்த பர பிரம்மம் என்பது விஷ்ணு, ஹரி, வாசுதேவன், திருமால், Qமந் நாராயணனே ஆகும்.

**திரு நாரணன் எனும் தெய்வமும் சித்தும் அசித்தும் என்று**
**பெரு நான்மறை முடி பேசிய தத்துவம் மூன்று இவை கேட்டு**
**ஒரு நாள் உணர்ந்தவர் உய்யும் வகை அன்றி ஒன்று உகவார்**
**இரு நாலு எழுத்தின் இதயங்கள் ஒதிய எண் குணரே**
ஸ்வாமி தேசிகன், அமித ரஞ்சனி 11

என்று அமிர்த ரஞ்சனியில் ஸ்வாமி தேசிகன் இந்த மூன்று தத்வங்களையும் சொல்கிறார். வேதாந்தத்தின் தாத்பர்யத்தை அனுஸந்திக்கிறவர்கள் எட்டு ஆத்ம குணங்களை உடைய பெரியோர்கள் (கருணை, பொறுமை, பொறாமையின்மை, பரிசுத்தம், வருந்தாமை, நன்மையை நினைத்தல், லோபமின்மை, ஆசையின்மை) (Compassion, patience, no jealousness, purity, no regrets, positive thinking, no desire)

**சித$_3$சித் பரதத்வாநாம் தத்வயாத$_2$ார்த்$_2$ய வேதி$_3$நே ।**
**ராமாநுஜாய முநயே நமோ நம க$_3$ரீயஸே ।।**

என்று ஸ்ரீரங்க கத்யத்திற்கு தனியன் சொல்கிறோம் சித் அசித் ஈஸ்வரன் என்ற தத்வங்களை வெளிப்படையாக கூறுகிறது.

**தேற இயம்பினர் சித்தும் அசித்தும் இறையும் என**
**வேறுபடும் வியன் தத்துவம் மூன்றும் வினை உடம்பில்**
**கூறுபடும் கொடு மோகமும் தான் இறையாம் குறிப்பும்**
**மாற நினைந்து அருளால் மறை நூல் தந்த ஆதியரே**
ஸ்வாமி தேசிகன், அதிகார ஸன்க்ரஹம் (12)

என்று ஸ்வாமி தேசிகன் அதிகார ஸங்க்ரஹத்தில் தத்துவத்தை விவரிக்கிறார். இது ஸ்ரீமத் ரஹஸ்யத்ரய ஸாரத்தில் 5ம் அதிகாரத்தில், தத்வத்ரய சிந்தநாதிகாரத்தில் வருகிறது.

நம் ஆசாரியர்கள் தெளிவாய் வேதத்தை உபதேசம் செய்தனர். அவர்கள் சேதனனும், அசேதனனும், ஈச்வரனும் என்று மூன்றும் வேறான தத்வங்கள் என்பதை போதித்தனர். ஏன் என்றால் நம் உடல் வினையால் வந்தது.

அதனால் நமக்கு இரண்டு பிரமைகள். அதாவது மயக்க எண்ணங்கள் அவற்றை ஒழிக்க வேண்டும் என்று.

1. **சரீர ஆத்ம பிரமம்** - உடலும் ஆத்மாவும் ஒன்று என்ற நினைப்பு
2. **ஸ்வதந்த்ர ஆத்ம பிரமம்** - எம்பெருமானுக்கு அடிமை என்று கருதாது தானே ஈச்வரன் என்று நினைப்பது

**முத்திக்கு அருள் சூட மூன்றைத் தெளி முன்னம்**
**இத் திக்கால் ஏற்கும் இதம்**
ஸ்வாமி தேசிகன், அமித ரஞ்சனி (3)

என்று ஸ்வாமி தேசிகன் அமிர்தரஞ்சினியில், ஸாதிக்கிறார் மோக்ஷத்திற்கு காரணம் பகவானின் கருணை. அதைப் பெற மூன்று தத்துவம் என்பதை தெளிவாக கற்று அதன் மூலம் நல்வழியை அறிந்து கொள் என்றார்.

**முமுக்ஷுவான சேதனனுக்கு மோக்ஷமுண்டாம்போது**
**தத்வ்த்ரய ஞானம் உண்டாக வேணும்**
**தத்வத்ரயம் என்பது சித்தும், அசித்தும், ஈச்வரனும்**
பிள்ளைலோகாசாரியர், தத்வத்ரயம் (1-2)

என்று பிள்ளைலோகாசாரியர் தத்வத்ரயத்தில் சொல்லுகிறார்.

## A-6. அர்த்த பஞ்சகம்

முதலில் தத்வம். தத்துவம் என்பது உண்மைப் பொருள். அது ஜீவாத்ம தத்துவம், பரமாத்ம தத்துவம், அசேதனம் என்று மூன்று. தத்வத்தை பற்றி ஏற்படும் அனுபவமான புருஷார்த்தம் மூன்று. (1) ஐச்வர்யம், (2) கைவல்யம், (3) பரம மோக்ஷம். இவற்றில் மோக்ஷமே நிலையானது. கடைசியாக ஹிதம். சேதனனுக்கு நன்மை அளிப்பதே ஹிதம். இதுவே உபாயம், ப்ராபகம், ஸாதனம் என்று சொல்லப்படுகிறது

ஆக இந்த மூன்றையும் கொஞ்சம் விரித்து ஐந்தாக்கினர்.

1. நாம் யார் என்று தெரிந்து கொள்ளவேண்டும் (You).
2. பகவான் யார் என்று தெரிந்து கொள்ளவேண்டும் (Him)
3. மிக உயர்ந்ததாக இருக்கக் கூடிய லக்ஷியம் என்ன? (Objective)
4. புருஷார்த்தத்திற்கு வழி/உபாயம் என்ன? (Access) [இஷ்ட ப்ராப்தி]
5. புருஷார்த்தத்தை அடைவதை தடுக்கும் தடை, எதிரி (obstacles) [அநிஷ்ட நிவ்ருத்தி

இந்த ஐந்தும் (You Access Him with the Objective & without any Obstacles (YAHOO) என்று சுலபமாக ஞாபகம் வைத்துக் கொள்ளலாம்.

**பொருள் ஒன்று என நின்ற * பூமகள் நாதன் அவன் அடி சேர்ந்து *
அருள் ஒன்றும் அன்பன் * அவன் கொள் உபாயம் அமைந்த பயன் *
மருள் ஒன்றிய வினைவல் விலங்கு என்று * இவை ஐந்து அறிவார் *
இருள் ஒன்று இலாவகை * என் மனம் தேற இயம்பினரே**
ஸ்வாமி தேசிகன், அதிகார ஸங்க்ரஹம் 11

என்று ஸ்வாமி தேசிகன் அதிகார ஸங்க்ரஹத்தில் அர்த்த பஞ்சகத்தை விவரிக்கிறார். இது ஸ்ரீமத் ரஹஸ்யத்ரய ஸாரத்தில் 4ம் அதிகாரத்தில், அர்த்த பஞ்சக அதிகாரத்தில் வருகிறது

1. நாம் அடைய வேண்டிய வஸ்து என்று சொல்லும்படி இருக்கும் தாமரை மலரில் இருக்கும் திருமகளுடைய நாதன்
2. அவருடைய திருவடிகளை அடைந்து அவனை அனுபவிக்கும் ஜீவன்
3. அந்த ஜீவன் செய்ய வேண்டியு உபாயம்
4. அந்த ஜீவனின் ஸ்வரூபத்திற்கு தகுந்த ப்ரயோஜனத்தையும்
5. கர்மப் பலன்கள் என்னும் விலங்கு

என்ற இந்த ஐந்தையும் ஆறிபவர்கள் என்று அர்த்த பஞ்சகத்தை சொன்னார்.

**மிக்க இறைநிலையும் மெய்யாம் உயிர் நிலையும்
தக்க நெறியும் தடையாகித் - தொக்கியலும்
ஊழ்வினையும் வாழ்வினையும் ஓதும் குருகையர்கோன்**

prapatti.com

**யாழினிசை வேதத்தியல்**

**பராஸர பட்டர், திருவாய்மொழி தனியன்**

பராஸர பட்டர், திருவாய்மொழிக்கு அமைத்த தனியனில் இதை ஸாதிக்கிறார்.

**மிக்க இறைநிலையும்** = பகவத் தத்வம்
**மெய்யாம் உயிர் நிலையும்** = ஜீவாத்ம தத்வம்
**தக்க நெறியும்** = பகவானை அடைய உபாயம்
**தடையாகி** = உபாயத்திற்கு தடையானவை
**ஊழ்வினையும் வாழ்வினையும்** = புருஷார்த்தம்

## A-7. விசிஷ்டாத்துவைதம்

வேதத்தில் சில இடங்களில் பேத ஸ்ருதிகள், சில இடங்களில் அபேத ஸ்ருதிகள். ஒன்றுக்கொன்று முரண்பாடாக தோன்றும் (apparently conflicting ideas).

**அபேத ஸ்ருதிக**ளைப் பார்க்கும்போது ஜீவாத்மாவும் பரமாத்மாவும் ஒன்றே என்று மேலேழுந்தவாரியாக தோன்றும்.

**"ஸர்வம் கலு இதம் ப்ரஹ்ம:"** என்பது வேத வாக்யம். எல்லாமே ப்ரம்மம் என்கிறது. ஜகத்தும், பிரம்மமும் ஒன்று என சொல்வது போல் இருக்கும்

அடுத்தாக **தத் த்வம் அஸீ:** அந்த பிரம்மம் நீ தான் என்கிறது. ஜீவாத்மாவும் பரமத்மாவும் ஒன்று என சொல்வது போல் இருக்கும் **"ப்ரஹ்ம அஹம் அஸ்மி:"** என்பது நான் ப்ரம்மாக இருக்கிறேன் (I jeevatma is the Brammam) **"நேஹ நாநாஸ்தி கிஞ்சன":** - இங்கு வெவ்வேறானவை கிடையாது "ஸதேவ ஸோம்யேதமக்ர ஆஸித் ஏகமேவ அத்விதீயம்" என்று பல.

**பேத ஸ்ருதிகள்** பரமாத்மா, ஜிவாத்மாவைவிட வேறுபட்டவன் என்கிறது. வேதத்தில் சில இடங்களில் சொல்லப்பட்ட இவை ப்ரமாத்மாவிற்கும் ஜீவாத்மாவிற்கும் உள்ள பேதத்தை (வித்யாஸத்தை) சொல்வதால் பேத

ஸ்ருதி ப்ருத காத் மாநம் ப்ரேரி தாரம், த்வா ஸூபர்ணௌ, ஜ்ஞா ஜ்ஞௌ த்வௌ ஈசா நீ சௌ என்று பல.

**கட ஸ்ருதி** என்பது பல வேத வாக்கியங்களைக் கொண்டு ப்ரமாத்மாவிற்கும், ஜீவாத்மாவிற்கும், அசேதன வஸ்துக்களுக்கும் உள்ள ஸம்பந்ததை சொல்லுகின்றன.

சில பண்டிதர்கள் உபநிஷத்தில் உள்ள சில வாக்கியங்களை எடுத்து மஹாவாக்கியம் என்று கூறி அவை கூறுவதையே மதம் என்று ஸ்தாபிக்க நினைத்தார்கள்(Taking conveniently some and discarding the rest).

**த்வைதம்** என்பது ஆனந்த தீர்த்தர், மத்வாசாரியர் விளக்கினார் சித் வேறு. பிரம்மம் வேறு என்னும் பேத ஸ்ருதிகளைக் கொண்டது "த்வ" என்றால் இரண்டு.

**அத்வைதம்** என்பது அ + த்வைதம். இரண்டு அல்ல. ஒன்றேதான் என்பது. ஆதி சங்கரரால், அபேத ஸ்ருதிகளைக் கொண்டது. சித், பிரம்மம் எல்லாம் ஒன்று. உலகம் என்பது மாயை இருட்டில் ஒரு கயிற்றை பார்த்து பாம்பு என்று பயப்படுகின்றான். அதுவே வெளிச்சத்தில் அதன் உண்மை ஸ்வரூபத்தை தெரிந்து கொள்வது போல (மனப் பிரமை). உலகமே மாயை. தை அறிந்தவனுக்கு ஜீவ முக்தி என்ப்து போல் பல.

**விசிஷ்டத்வைதம்** என்பது விசிஷ்டஸ்ய அத்வைதம் அதாவது விசிஷ்டத்துனுடைய அத்வைதம் என்று சொல்லாம் விசிஷ்டம் என்றால் விசேஷம் (சிறப்பு). விசிஷ்டஞ்ச தத் அத்வைதஞ்ச அதாவது விசிஷ்டமாகிய அத்வைதம் என்றும் சொல்லாம். விசிஷ்டம் என்பது இங்கே விசேஷணம்.

அதாவது சித், அசித்துடன் கூடிய பிரம்மம் ஒன்றுதான் என்பது பொருள். பகவத் ராமனுஜரால் ஸ்ரீ பாஷ்யம் செய்யப்பட்டது பேத அபேத ஸ்ருதிகள் இரண்டையும் சேர்த்து (linking). கட ஸ்ருதி என்று இணைத்து தெளிவு படுத்துவது.

ராமனுஜர் தம் வியாக்கியானத்தில் சொல்லும்போது, வேதத்தில் சில பகுதிகளை எடுத்துக் கொண்டு மற்றதை விலக்கமுடியாது. வேதம் முழுவதையும் எடுத்து அதற்கு சரியான விளக்கம் சொல்லவேண்டும் என்றார்.

தலை வாரிக் கொள் என்றால் தலையா வார முடியும்? அதன்மேல் உள்ள முடியைத்தான் சொல்கிறோம். அதுபோல் ஜீவாத்மாவும், அசேதனமும் ப்ரமாத்மாவிற்கு சரீரமாக ஆகின்றது

**உயிரும் உடலும் * உடலாக ஓங்கித்**
**தயிர் வெண்ணெய் * தாரணியோடு உண்டான் * பயிரில்**
**களைபோல் * அசுரரைக் காய்ந்தான் * தன் கையில்**
**வளை போல் * எம் ஆசிரியர் வாக்கு**
**ஸ்வாமி தேசிகன், அமிர்த ரஞ்சனி 5**

ஸ்வாமி தேசிகன் அமிரத ரஞ்சனியில் ஸாதிக்கிறார் சேதனனும், அசேதனனும், தனக்குக் சரீரமாக நிற்க, உயர்ந்து இருக்கும்.

ப்ருஹதாரண்ய உபநிஷத்தில் அந்தர்யாமி ப்ராம்மணம் மற்றும் ஸூபால உபநிஷத்திலும் இருந்து விளக்கப்பட்ட வேத வாக்கியங்கள். அந்தர்யாமி என்றால் உள் இருந்து நடத்துபவன், கட்டுப்படுத்துபவன் என்று பொருள். பேத அபேத ஸ்ருதிகள் மேல் எழுந்தவாறு பார்க்கும்போது உள்ள வித்தியாஸத்தை சரியாக பொருள் கூறி அவற்றை சேர்த்து வைக்கிறது எம்பெருமானார் அருளிய ஸ்ரீ பாஷ்யம்.

அத்வைதிகள் கூறுகிற மாதிரி ப்ரம்மம் ஒன்றுதான் மெய். அனத்தும் பொய் என்று சொல்லாமல், சித், அசித், ஈச்வரன் அனத்தும் மெய் மூன்றும் வேறான தத்வங்கள். உலகம் மாயை அல்ல. உண்மையானது. ஆனால் அழியக்கூடியது என்றெல்லம் எம்பெருமானார் விளக்குகிறார்.

## A-8. ப்ரதாந ப்ரதி தந்த்ரம் (The prime Tenet of Visishtathavatha)

(Every philosophy has a unique concept distinguishes exclusively itself from others.)

இந்த பிரபஞ்சத்தில் எல்லாம் பகவானுடைய சரீரம். அவன் ஆத்மா. சித், அசித் எல்லாம் அவனுக்கு சரீரம் (உடல்) இதைத்தான் சரீர-சரீரி பாவம் அல்லது சரீர-ஆத்ம பாவம் என்கிறார்கள்

ஆதேய-ஆதார பாவம்
நியாம்ய-நியந்தா பாவம்,
சேஷ-சேஷி பாவம்

என்ற மூன்று தொடர்பு உள்ளது. பகவானைத் தவிர மற்றெல்லாம் அவனுடைய சரீரம் அதனால்தான் சாரீரக மீமாம்ஸா என்றார்கள் (Essentially it explains the Body-Soul relation). இந்த உயர்ந்த கருத்தைத்தான் விசிஷ்டாத்வைத ஸித்தாந்தத்தில் ப்ரதான பிரதி தந்த்ரம் என்கிறார்கள், நம்முடைய ஆசாரியர்கள்

திட விசும்பு எரி வளி * நீர் நிலம் இவை மிசை *
படர் பொருள் முழுவதுமாய் * அவை அவை தொறும் *
உடல் மிசை உயிர் எனக் * கரந்து எங்கும் பரந்துளன்
சுடர்மிகு சுருதியுள் * இவை உண்ட சுரனே
நம்மாழ்வார், திருவாய்மொழி 1-1-7

என்று ஸ்வாமி நம்மாழ்வார், திருவாய்மொழியில் இதைக் காட்டுகிறார். பஞ்ச பூதங்கள் (ஆகாசம், தீ, காற்று, நீர், நிலம், Space, fire, air, water, and Earth) இவை உண்டாக்கி அவற்றிலிருந்து மற்ற பொருள்களை எல்லாம் ஆக்கி, தானே அவையுமாகி உடலுக்கு உயிர் போல அவை அனத்திலும் உள்ளும், புறமும், எங்கும் வியாபித்து மறைந்து பரவி இருப்பவன்என்றார்.

அஸேஷசிதசித் ப்ரகராம் ப்ரஹும் ஏகமேவ தத்வம்
ஸ்வாமி தேசிகன், தத்வமுக்த கலாபம்

சித் அசித் விசைஷ்ட ப்ரம்மம் ஒன்றே தத்வம் என்று ஸ்வாமி தேசிகன் ஸாதிக்கிறார்

**நிலை தந்த தாரகனாய் * நியமிக்கும் இறைவனுமாய் ***
**யில தொன்று எனாவகை எல்லாம் * தனது எனும் எந்தையுமாய்த் ***
**துலை ஒன்று இலையென நின்ற * துழாய் முடியான் உடம்பாய் ***
**விலையின்றி நாம் அடியோம் எனும் * வேதியர் மெய்ப்பொருளே**
ஸ்வாமி தேசிகன், அதிகார ஸங்க்ரஹம் 10

ஸ்வாமி தேசிகன் அதிகார ஸங்க்ரஹரத்தில், எம்பெருமானுக்கும், நமக்கும், இந்த உலகத்துக்கும் உள்ள உறவை சொல்கிறார் இது Qமத் ரஹஸ்யத்ரய ஸாரத்தில் 3ம் அதிகாரத்தில், ப்ரதாந பிரதி தந்த்ரம் என்கிற அதிகாரத்தில் வருகிறது.

பகவான்

1. **நிலை தந்த தாரகனாய்** - இருப்பைக் கொடுத்து தூக்குகிறவனாய் (He gives the existence and supports the universe)
2. **நியமிக்கும் இறைவனுமாய்** - ஏவுகிற ஈச்வரனுமாய் (He controls it)
3. **இலது ஒன்று எனாவகை எல்லாம் தனது எனும் எந்தையுமாய்** இல்லை என்றும் இல்லாமல், எல்லாம் அவனுடைய சொத்து என்று சொல்லும்படியான ஸ்வாமியாய் (He owns everything and there isn't anything he doesn't own)

என்று அவனுக்கு சமமானவன் ஒருவன் இல்லை என்று சொல்லும்படி நிற்கின்ற துளஸீ மாலையை சூடிக் கொண்டிருக்கிற எம்பெருமானுடைய உடம்பாய் நாம் அவனுக்கு வேலக்காரர்கள் என்று வேதம் அறிந்தவர்களுடைய உண்மையான் பொருள் என்பதை அற்புதமாக ஸ்வாமி தேசிகன் காட்டினார். (amazingly this stanza is like a lega ldocument)

ஆத்மாவிற்கு சரீரத்திற்கும் மூன்று விதமான உறவு.
ஆத்மா (Supports, Contols Owns)

1. **ஆதாரத்வம்** (Inseaparable eternal support) ஆத்மா சரீரத்தை ஸ்வரூபத்தாலும், ஸங்கல்பத்தாலும் தாங்குகிறது. ஆத்மா தாங்குகிறது. சரீரம் தாங்கப்படுகிறது.

pradtdot.com

2. **நியாம்யத்வம்** ஏவுகிறது (controls, Not a paid service) ஆத்மா ஏவிகிறது. சரீரம் ஏவப்படுகிறது. இதற்கு கூலி கிடையாது
3. **ஸேஷத்வம்** (ownership) - ஆத்மா சொத்தின் உரிமையாளன் **ஸேஷி.** சரீரம் சொத்தான உரிமைப் பொருள். **ஸேஷன்.**

பகவத் ராமானுஜரும், ஸ்ரீபாஷ்யத்தில் இந்த மூன்றைத்தான் சொல்லி இருக்கிறார்

**ப்ருதக் ஸித்தி அநார்ஹ ஆதார ஆதேய பாவா"**
**நியாந்த நியாம்ய பாவா:**
**ஸேஷ ஸேஷி பாவாஞ்ச**
**ராமானுஜர், வேதார்த்த ஸங்கரஹம்**

என்று பகவத் ராமானுஜர் அருளினார் வேதார்த்த ஸங்கரஹத்தில்

prapatti dot com